தமிழ் இலக்கியத்திலே
உன்னதமான காவியம்

கம்ப ராமாயணம்

ஆரணிய காண்டம்
கிஷ்கிந்தா காண்டம்

மலிவுப்
பதிப்பு
வரிசை
13

மூலம் முழுவதும்
வசனத்தில்—கதைச் சுருக்கம்
அரும்பத உரை முதலியன

சக்தி வெளியீடு

ரூ. 2

மெ. மெய்யப்பன்
18-6

கவிச் சக்கரவர்த்தி கம்பர் அருளிய

கம்ப ராமாயணம்

ஆரணிய காண்டம் - கிஷ்கிந்தா காண்டம்

[மூலம் முழுதும், அரும்பத உரை, வசனத்தில் கதைச் சுருக்கம், விளக்கம் ஆகியன]

சக்தி காரியாலயம்
ஆயிரம் விளக்கு :: சென்னை - 6

மலிவுப் பதிப்பு வரிசை 13
முதற் பதிப்பு: ஜனவரி, 1959

சென்னையில் விலை: ரூ. 2·00

வெளியூர்களில் விலை: ரூ. 2·15

இலங்கையில் விலை: ரூ. 2·25

சென்னை - 6. பாரதம் பிரசில் அச்சிடப்பெற்றது.

18-6

பதிப்புரை

கம்ப ராமாயணம், புத்தகம்—2 (ஆரணிய—கிஷ்கிந்தா காண்டங்கள்) உங்கள் கையில் இருக்கிறது.

கம்ப ராமாயணம், புத்தகம்—2-ல் ஆரணிய—கிஷ்கிந்தா—சுந்தர காண்டங்கள் வெளிவருவதாக அறிவித்திருந்தோம். காகிதம் விலை ஏறிவிட்டதால் நாங்கள் அறிவித்தபடி செய்ய முடியவில்லை. இந்த இரண்டாவது புத்தகம் வெளிவருவதில் தாமதம் ஏற்பட்டதும் காகிதம் விலை ஏறிய காரணத்தினுல்தான். ஆதலால் கம்பன் கவிதா ரசிகர்கள் எங்களிடம் குறைப்படமாட்டார்கள்.

இந்த ஆரணிய—கிஷ்கிந்தா காண்டங்களில் முதல் புத்தகத்தைக் (பால - அயோத்தியா காண்டங்களைக்) காட்டிலும் பெரும் அளவில் விளக்கம் அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கப்படியே வசனத்தில் ஆரணிய-கிஷ்கிந்தா காண்டங்களின் கதையும், அரும்பொருள் அகராதியும் தரப்பெற்றிருக்கின்றன.

இலக்கிய நூல்கள் பதிப்பிப்பதில் பெரிதும் தேர்ச்சியடைந்த திரு. கு. அழகிரிசாமி அவர்கள் கம்ப ராமாயணம் முதலாவது புத்தகத்தில் இதுவரை வெளிவந்த கம்ப ராமாயணப் புத்தகங்களில் உள்ள பாடல்களை ஒப்புநோக்கிச் சரியான பாடங்களைத் தீர்மானம் செய்தும், பாடல்களுக்கு விளக்கம் எழுதியும், அரும்பதங்களுக்கு உரை எழுதியும், கம்ப ராமாயண வரலாறு, கம்பர் வரலாறு, பால-அயோத்தியா காண்டங்களின் கதைச் சுருக்கம் ஆகியவற்றை எழுதியும் பதிப்பித்தார். முதலாவது புத்தகத்தைப் போலவே திரு. அழகிரிசாமி இந்தப் புத்தகத்திலும் விளக்கங்கள், அரும்பத உரை அகராதி, ஆரணிய - கிஷ்கிந்தா காண்டங்களின் கதைச்சுருக்கம் ஆகியவற்றை எழுதிப் பதிப்பித்திருக்கிருர்.

மிகவும் கவனம் செலுத்தி இதைப் பதிப்பிக்கும் தொண்டைச் செய்த திரு. அழகிரிசாமியை நாங்கள் பாராட்டுகிறோம். முதற் புத்தகத்தைப் பாராட்டியும், பல அரிய கருத்துக்களைச் சொல்லியும் கம்பன் ரசிகர் பலர் கடித மூலமாகவும் நேரிலும் எங்களை ஊக்குவித்தார்கள். அவர்களுக்கு எங்கள் அன்பு கலந்த நன்றி.

சென்னை-6
30—1—59.

வை. கோவிந்தன்
பதிப்பாளர், சக்தி காரியாலயம்

பொருளடக்கம்

முன்னுரை

கவிச் சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய ராமாயண காவியத்தில் ஆரணிய காண்டமும் கிஷ்கிந்தா காண்டமும் அடங்கிய இரண்டாம் பாகம், சக்தி மலிவுப் பதிப்பு வரிசையில் இப்பொழுது வெளிவருகிறது. சென்ற ஆண்டு ஏப்ரல் மாதத்தில் வெளிவந்த முதல் பாகத்தில் காணப்படும் சிறப்பு - அம்சங்கள் யாவும் இந்தப் பாகத்திலும் அடங்கியுள்ளன. முதல் பாகத்தைப் போலவே, இந்தப் பாகத்தையும் இலக்கிய ரஸிகர்கள் வரவேற்று எம்மை மென்மேலும் ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறேம்.

தமிழில் புலமை பெற்றவர்கள் மட்டுமன்றி, மற்றவர்களும் கம்பருடைய பாடல்களைப் பொருள் தெரிந்து ரஸிக்கவேண்டுமென்ற நோக்கத்துடன், கதைச் சுருக்கம், அரும்பத உரை அகராதி, அடிக்குறிப்புக்கள் முதலியவற்றை எழுதிச் சேர்த்திருக்கிறேம். முதல் பாகத்தைவிட இந்தப் பாகத்தில் அரும்பத உரை விரிவான முறையில் எழுதப்பட்டுள்ளது. அநேகமாகப் பக்கம் தவருமல் அடிக்குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. வழக்கம் போலப் பாடல்களைச் சந்திபிரித்தும், சீர்பிரித்தும் பதிப்பித்திருக்கிறேம். சுவை மிகுந்த பாடல்களுக்கு—கம்பருடைய பாடல்கள் என்று நிச்சயமாகத் தெரியக் கூடிய பாடல்களுக்கு—நட்சத்திரக் குறிகள் இடப்பட்டுள்ளன.

சந்தி பிரித்திருப்பது சம்பந்தமாகச் சில வார்த்தைகள் கூறவிரும்புகிறேம்:

வாசகர்களுக்குப் பாட்டு சுலபமாகப் புரியவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் சந்திகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதனுல், பிரிக்காமலே புரியக்கூடிய இடங்களில் அப்படியே விடப்பட்டுள்ளன. பல சந்தர்ப்பங்களில் சந்திகளைப் பிரிக்கும்போது, சீர்களைப் பிரிப்பது சிரமமாகிவிடும். பிரித்துவிட்டாலும் சீர்களின் அளவு கூடிவிடும். இருந்தாலும், சீர்களைப் பொருட்படுத்தாமல், பாட்டு விளங்குவதற்காகப் பல இடங்களில் சந்திகளைப் பிரித்தே பிரசுரித்திருக்கிறேம். அப்படிப்பட்ட இடங்களில், அன்பர்கள் சிறிது முயற்சி எடுத்துக்கொண்டால், சந்திகளைப் பழையபடியும் இணைத்துச் சந்த நயத்துடன் பாட்டைப் பாடிவிடலாம்.

கால்புள்ளி, அரைப்புள்ளி, கேள்விக்குறி, ஆச்சரியக்குறி போன்றவற்றை இந்தப் பதிப்பில் வேண்டுமென்றே நாம் பயன்படுத்தவில்லை. அந்தக் குறிகளை வைக்கவேண்டுமென்றுல், பாட்டின் சந்திகள் எல்லாவற்றையுமே பிரிக்கும்படி நேரும்; சீர்கள் பிரிப்பது சிரமமாகிவிடும். கடைசியில் கம்பருடைய சந்தநயம் மிக்க அழகான கவிகளை ஒரு விசித்திரமான வசனம் போல வாசிக்கும் நிலை ஏற்படும். அத்துடன் அந்தக் குறிகளை வைப்பதால் அநேகப் பாடல்களுக்குப் பதிப்பாசிரியர் கொண்ட பொருள்தான் சரியான பொருள் என்று

வரையறுக்கப்பட்டு, வேறு சிறந்த பொருள்களை அறிஞர்கள் கண்டு உணருவதற்கும் வழியில்லாமல் போய்விடும்.

இந்த நூலில் அடங்கியுள்ள இரண்டு காண்டங்களிலும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் உள்ளன. ஆனால் நூற்றுக்கணக்கான பாடல்களுக்குத்தான் நட்சத்திரக் குறிகள் இடப்பட்டுள்ளன. இவை மட்டுமே கம்பருடைய பாடல்களாக இருக்க முடியும் என்பது எம் கருத்து. இரண்டு காண்டங்களிலும் இவ்வளவு சுருக்கமான பாடல்களைத்தானா கம்பர் பாடியிருப்பார் என்ற சந்தேகம் ஏற்படுவது இயல்பு. ராமாயணத்தில் இந்தப் பகுதியைக் கம்பர் இந்தமாதிரி இரண்டு காண்டங்களாகவே பாடினார் என்பதுதான் என்ன நிச்சயம்? வால்மீகி ராமாயணத்தை அனுசரித்தே கம்ப ராமாயணத்திலும் காண்டப் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறது. கம்பர் ஏதோ மூன்று காண்டங்களில் பாடிய காவியத்தைப் பிற்காலத்தவர்கள் வால்மீகி ராமாயணத்தைப் போல ஏழு காண்டங்களாக்க நினைத்து, அநேக படலங்களை எழுதிச் செருகியிருக்கவேண்டும்; சில படலங்களை அழித்திருக்கவேண்டும்; வேறு சில படலங்களில் பாதிப் பாடல்களைத் தள்ளிவிட்டு, தங்கள் சொந்தப் பாடல்களை இணைத்திருக்கவேண்டும். இதனால் கம்பர் இயற்றிய காவியத்தின் கதைப்போக்கே பல இடங்களில் மாறியிருக்கக்கூடும். இவ்வாறு கதைப் போக்கை மாற்றுவதும், செருகல்வேலை செய்தவர்களின் நோக்கங்களில் ஒன்றாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது.

அச்சில் வெளிவந்திருக்கும் பல ராமாயணப் புத்தகங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, சிறந்த பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பித்திருக்கிறோம். புத்தகங்களில் காணப்படும் எந்தப் பாடமுமே பொருத்தமாகத் தோன்றாத இரண்டொரு இடங்களில், சொந்தமாக ஒரு பாடத்தை யூகித்து அதை அடிக்குறிப்பில் கொடுத்திருக்கிறோம். உதாரணமாக ஆரணிய காண்டத்திலுள்ள 414-ம் பாட்டின் அடிக்குறிப்பைப் பார்க்கவும். மற்றப்படி பாடல்களில் நாமாக எந்த திருத்தத்தையும் செய்யவில்லை.

இந்த நூலைப் படிக்கும் வாசகர்கள் முதலில் அரும்பத உரை அகராதி முழுவதையும் படித்துவிடவேண்டியது அவசியம். அப்பொழுதுதான் தங்களுக்குச் சாதாரணமாகத் தெரிந்துள்ள பல எளிய வார்த்தைகளுக்கு வேறு பொருளும் உண்டு என்பதை அறிய முடியும். அரும்பொருள் தெரியாவிட்டால், பாட்டைப் புரிந்துகொள்ள முடியாது. உதாரணங்களாகச் சில எளிய வார்த்தைகளையும், அவற்றின் அரும்பொருள்களையும் கீழே கொடுத்திருக்கிறோம்:

அசைதல்-கட்டுதல்	உழவன்-வீரன்
அமைதி-பொருத்தம்	கலப்பை-சாதனம்
ஆதரித்தல்-விரும்புதல்	காம்பு-மூங்கில்
இடம்-சமயம்	சேவகன்-வீரன்
உமிழும்-ஒலிக்கும்	சொல்-புகழ்

அரும்பத உரை அகராதியை முதலில் படிக்கவேண்டியதன் அவசியத்தை இப்போது தெரிந்துகொள்ளலாம். அரும்பதங்களுக்கு உரை காண்பதில் நமக்குப் பெரிதும் உதவியாக இருந்த நூல்களின் விபரம்:

1. ஆரணிய காண்டம்—மூலமும், உடுமலைப்பேட்டை ஸ்ரீ எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் இயற்றிய உரையும் (*1926*)
2. ,, —ஸ்ரீமான் வை. மு. சடகோப ராமாநுஜாசார்யரும், சே. கிருஷ்ணமாசார்யரும் இயற்றிய உரையுடன் ஸ்ரீ வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரால் பதிப்பிக்கப்பட்டது (*1936*)
3. கிஷ்கிந்தா காண்டம்—ஸ்ரீமான்கள் வை. மு. சடகோப ராமாநுஜாசார்யரும், சே. கிருஷ்ணமாசார்யரும், வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யரும் இயற்றிய விரிவுரை (*1931*)
4. ஆரணிய-கிஷ்கிந்தா காண்டங்கள்—ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் உரை விளக்கங்களோடு பதிப்பித்த நூல். (*1953*)
5. சென்னை சர்வகலாசாலை தமிழ்ப் பேரகராதி

மேற்கூறிய உரையாசிரியர்கள் கம்பருடைய பாடல்களின் பொருளும் நயங்களும் புலப்படும்படியாக எவ்வளவு சிரமம் எடுத்து விரிவான முறையில் உரை எழுதித் தமிழ் உலகத்துக்கு உதவியிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய உரை நூல்களைப் படித்தவர்களுக்குத்தான் தெரியும். அந்த உபகாரிகளுக்குக் கம்ப ரஸிகர்கள் அனைவரும் நன்றியும் வணக்கமும் செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

இந்த புத்தகத்தில் நேர்ந்துள்ள இரண்டொரு அச்சுப் பிழைகளைப் பின் வருமாறு திருத்திக்கொள்ளவேண்டும்.

ஆரணிய காண்டம் 777–ம் பாட்டில் நட்சத்திரக்குறி இருக்க வேண்டும்.

கிஷ்கிந்தா காண்டம் 50-ம் பாட்டின் மூன்றாவது வரி, "யாவர் ஒப் பவர்உலகின் யாதிவர்க்கு அரியபொருள்" என்று இருக்க வேண்டும்.

அதே காண்டத்தில் 294-ம் பாட்டின் மூன்றாவது வரி, "கூற்றும் என் பெயர் சொலக்......... "என்று இருக்கவேண்டும்.

கு. அழகிரிசாமி

ஆரணிய காண்டத்தின் கதைச் சுருக்கம்

[ஆரணிய காண்டம், கம்பராமாயணத்தில் மூன்ருவது காண்டமாகும். முதல் இரண்டு காண்டங்களாகிய பாலகாண்டத்திலும், அயோத்தியா காண்டத்திலும் அடங்கியுள்ள கதையின் சுருக்கம் பின்வருமாறு:

கோசலநாட்டில் அயோத்தியைத் தலைநகராகக்கொண்டு அறுபதினுயிரம் ஆண்டுகள் ராஜ்யபரிபாலனம் செய்த தசரதச் சக்கரவர்த்திக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று பட்டத்து மனைவியர் உண்டு. சக்கரவர்த்திக்கு நெடுங்காலமாகப் பிள்ளையில்லாமல் இருந்தபடியால், தன் குலகுருவான வசிட்டனுடைய ஆலோசனையின் பேரில் கலைக்கோட்டு முனிவனை அழைத்து வந்து அசுவமேத யாகம் செய்தான். அதன் பயனுகக் கோசலையின் வயிற்றில் இராமனும், கைகேயியின் வயிற்றில் பரதனும், சுமித்திரையின் வயிற்றில் இலக்குவனும் சத்துருக்கனும் பிறந்தார்கள். திருமாலே இராமனுகவும், திருமாலின் சக்கரம் பரதனுகவும், ஆதிசேஷன் இலக்குவனுகவும், சங்கு சத்துருக்கனுகவும் பிறந்தனர். புதல்வர்கள் நால்வரும் வசிட்டனிடம் கலைப் பயிற்சி பெற்று வளர்ந்து வரும் நாளில், விசுவாமித்திரன் என்னும் கோசிக முனிவன் வந்து, தாடகையை வதம் செய்வதற்காக இராமனைத் தன்னுேடு அனுப்பும்படி கேட்டான். தசரதன் தயங்கினுலும், வசிட்டனுடைய ஆலோசனைப்படி இராமனையும் இலக்குவனையும் அனுப்பிவைத்தான். கோசிகனுடன் சென்ற இராம இலக்குவர்கள் தாடகையைக் கொன்றதுடன் அவளுடைய புதல்வன் ஒருவனையும் கொன்ருர்கள். இராமனுக்குச் சக்தி வாய்ந்த பல ஆயுதங்களைக் கோசிகன் கொடுத்துத் தனது யாகத்தையும் செய்து முடித்தான். அதன்பின் கோசிகன், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் மிதிலை மன்னன் ஜனகனுடைய வேள்வியைக் காண்பதற்காகச் செல்லும் வழியில், இராமனுடைய பாதம் பட்டுக் கல்லாகக் கிடந்த அகலிகை சாபவிமோசனம் பெற்ருள். மூவரும் மிதிலையை அடைந்து அந்நகரத்துத் தெரு வழியாக நடந்து போகும்போது, கன்னிமாடத்திலிருந்த சீதையை இராமன் பார்க்க, இருவரும் காதல் கொண்டு உள்ளத்தைப் பறிகொடுத்தனர். அவர்கள் கன்னிமாடத்தைக் கடந்து சென்று, அரண்மனையில் ஜனக மன்னனைக் கண்டனர். இராம இலக்குவர்களை ஜனகனுக்குக் கோசிகன் அறிமுகம் செய்துவைத்தான். அதன்பின் சிவதனுசை இராமன் வளைத்தான். சீதையை இராமனுக்கு மணம் முடிக்கத் தீர்மானமாகித் தசரதனுக்கும் மற்றும் உள்ள மன்னர்களுக்கும் செய்தி அனுப்பப்பட்டது. வில்லை வளைத்தவன், தனது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட இராமனே என்பதை அறிந்து சீதை

ஆனந்தக் கடலில் ஆழ்ந்தாள். தசரதன் தன் பட்டத்துத் தேவியருடனும் பரிவாரங்களுடனும் புறப்பட்டு மிதிலைக்குப் போய்ச் சேர்ந்தான். சீதைக்கும் இராமனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்குப் பிறகு தம்பதிகளும், தசரதன் முதலியவர்களும் அயோத்தி நகருக்குப் புறப்பட்டு வரும்போது, பரசுராமன் எதிர்ப்பட்டு, தன்னிடம் உள்ள விஷ்ணு தனுசை வளைக்க முடியுமா என்று இராமனைக் கேட்க, இராமன் அதை வாங்கி வளைத்துவிட்டான். அப்போது இராமன் எய்த அம்பு, பரசுராமனின் தவத்தையெல்லாம் வாரிக்கொண்டு மீண்டது. அந்த வில்லை வருணனிடம் கொடுத்துப் பத்திரமாக வைத்திருக்குமாறு சொல்லிவிட்டு, இராமன் தனது தந்தையுடனும் பிறருடனும் அயோத்திக்கு வந்து சேர்ந்தான். சில தினங்களுக்குப் பிறகு, பரதன் தனது பாட்டனின் நாடாகிய கேகய நாட்டுக்குப் போனான்.

அறுபதினாயிரம் ஆண்டுகள் ராஜ்யபரிபாலனம் செய்த தசரதன் வனத்திற்குச் சென்று தவம்புரிய விரும்பி, இராமனுக்கு முடி சூட்டக் கருதினான். இதை மந்திரிகளும், மற்றும் உள்ள பெரியவர்களும் ஆமோதித்தனர். மறுநாளே முடி சூட்ட ஏற்பாடாயிற்று. ஆனால், மந்தரை என்ற கூனி, இந்தச் செய்தியை அறிந்து மனம் துடித்து, கோபமும், வேதனையும் அடைந்தாள். இராமன் சிறுவனாக இருந்தபோது வில்லில் மண் உருண்டையை வைத்துத் தன்மீது தெறித்ததை நினைவுக்குக் கொண்டு வந்து, அவன் முடிசூடுவதற்கு எவ்விதத்திலாவது இடையூறு செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், கைகேயியின் மாளிகைக்குக் கூனி சென்றாள். கைகேயிக்கு அவள் செவிலித்தாயும் ஆவாள். கைகேயியின் நல்ல உள்ளத்தைத் தன் துர்ப்போதனைகளால் கூனி மாற்றிவிட்டாள். அதன் பலனாக, கைகேயி தன் மகன் பரதனுக்கு முடிசூட்டவேண்டுமென்றும், இராமனைக் காட்டுக்கு அனுப்பவேண்டுமென்றும் தசரதனிடம் பிடிவாதமாகச் சொன்னாள். முன்பு தசரதன் கொடுத்த இரண்டு வரங்களைக் கைகேயி அவனுக்கு நினைவூட்டி, அவற்றின்படி இந்த இரண்டு காரியங்களையும் செய்யவேண்டுமென்று சொல்ல, தசரதன் அவளுக்கு நற்புத்தி புகட்ட எவ்வளவோ முயன்றான். கைகேயியின் பிடிவாதம் தளராததைக் கண்டு, தசரதன் மூர்ச்சையடைந்தான். பிறகு, அவள் இராமனை வரவழைத்து, பரதன் முடிசூடவேண்டுமென்பதும், இராமன் காட்டுக்குச் சென்று பதினான்கு வருஷங்கள் வசிக்க வேண்டுமென்பதும் தசரதனின் கட்டளைகள் என்று தெரிவிக்க, இராமன் மனமகிழ்ச்சியோடு அங்கிருந்து புறப்பட்டான். நேரே தன் தாய் கோசலையிடம் சென்று விடைபெற்றுக்கொண்டு சிற்றன்னையாகிய சுமித்திரையிடம் சென்றான். இலக்குவனும் இராமனோடு காட்டுக்குச் செல்ல விரும்பினான். இருவரும் மரவுரி தரித்துக்கொண்டு வெளியே வந்தனர். சீதையின் மாளிகைக்கு இராமன் சென்று செய்தியைத் தெரிவிக்கவே, அவளும் இராமனோடு காட்டுக்குப் புறப்பட்டாள். நகர மக்கள் அனைவரும் அழுது புலம்பினார்கள். இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவருடன் அவர்களும் காட்டுக்குப் புறப்பட்டார்கள். இரண்டு யோசனை தூரம்சென்றபின் ஒரு சோலையில் இராமன் தங்கி

ளுன். சிறிது நேரத்தில் நகர மக்கள் அன்ன ஆகாரம் இன்றி அயர்ந்து தூங்கிவிடவே, இராம இலக்குவர்களும், சீதையும் அதுவே தக்க சமயம் என்று காட்டை நோக்கிச் சென்ளுர்கள். இராமன் வனத்துக்குச் சென்றுவிட்ட செய்தியைச் சுமந்திரன் என்ற தேர்ப்பாகன் வந்து தெரிவித்ததும் தசரதன் உயிர் நீத்தான். கேகய நாட்டிலிருந்து பரதன் வந்து சேரும்வரையில், தசரதனுடைய சடலத்தைத் தைலத்தில் வைத்துப் பாதுகாத்தனர். காட்டை நோக்கிச் சென்ற மூவரும் கங்கைக் கரையை அடைந்தார்கள். அங்கே சிருங்கிபேரம் என்ற ஊரில் வசித்துவந்த குகன் என்ற வேடர் தலைவன் இராமனைக் காண வந்தான். இராமனின் விருப்பப்படி, மறுநாள் இராம இலக்குவர்களையும் சீதையையும் தனது ஓடத்தில் வைத்து கங்கையாற்றின் மறு கரையில் கொண்டுபோய்விட்டான் குகன். குகனைத் தன்னுடைய சகோதரனுக ஏற்றுக்கொண்ட இராமன், அவனுக்கு விடை கொடுத்துவிட்டு தன் தம்பியோடும் மனைவியோடும் வழி நடந்து சென்ளுன். மூவரும் பரத்துவாசனின் ஆஸ்ரமத்தில் விருந்துண்டு, அப்புறம் சித்திரகூட மலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இலக்குவன் அங்கே ஒரு பர்ணசாலையை அமைத்தான். அதில் மூவரும் தங்கியிருந்தனர். பரதனும் சத்துருக்கனும் கேகய நாட்டிலிருந்து அயோத்திக்குப் புறப்பட்டுப் போனுர்கள். தன் தாயான கைகேயியின் வாய்மொழிமூலம், தசரதன் இறந்த செய்தியையும், இராமன் காட்டுக்குச் சென்றதையும், இத்தனைக்கும் கைகேயியே காரணம் என்பதையும் அறிந்த பரதன், அவளைப் பலவாறு திட்டி, அங்கேயிருந்து கோசலையின் மாளிகைக்குச் சென்ளுன். தந்தைக்கு இறுதிக் கடன்களைச் செய்து முடித்தபின் பத்து நாட்களுக்குப்பிறகு பரதன், சகோதரன் சத்துருக்கனேடும், தாய்மார் மூவரோடும், வசிட்டனேடும் இராமனைக் காண்பதற்காகக் காட்டுக்குப் புறப்பட்டான். அவனுடன் பெரும் படையும், நகர மக்களின் கூட்டமும் சென்றன. கங்கைக் கரைக்குப் போய்க் குகனைப் பார்த்தார்கள். பரதனையும் அவனுடன் சென்ற சேனையையும் பார்த்த குகன், இராமனேடு போர் செய்வதற்காகவே அவர்கள் வந்திருப்பதாகத் தவருகக் கருதினுன். ஆனல் பரதனின் தவவேடத்தையும், ஆருத்துயரத்தையும் கண்டதும் அவன் தனது தவருன கருத்தை மாற்றிக்கொண்டான். பரதனிடம் பேரன்பு கொண்டான். மறுநாள் பரதன் முதலியோரை ஓடங்களில் ஏற்றி மறு கரையில் கொண்டுபோய்விட்டான். பரதன், போகும் வழியில் பரத்துவாசனின் ஆஸ்ரமத்தில் ஒருநாள் தங்கியிருந்து, அடுத்த நாள் விடைபெற்றுச் சென்ளுன். சித்திரகூட மலையின் அருகே சென்றதும், தனது சேனையைப் பின்னல் நிறுத்திவிட்டு, சத்துருக்கனைமட்டும் அழைத்துக்கொண்டு, இராமனிடம் சென்ளுன். பரதன் அழுததைக் கண்டு இராமனும் கண்ணீர் சொரிந்தான்; தந்தை இறந்த செய்தியை அறிந்து அழுது புலம்பினுன். அவன் அயோத்திக்குத் திரும்பி ராஜ்ய பாரத்தை ஏற்கவேண்டுமென்று பரதன் எவ்வளவோ கெஞ்சியும், தந்தையின் கட்டளையை மீற முடியாது என்று இராமன் மறுத்துவிட்டான். பதினுன்கு வருஷ காலம் நாட்டை ஆண்டு வரும்படியாகப் பரதனிடம் கூறினுன். பதினுன்கு வருஷங்கள் கழிந்த

தும், இராமன் திரும்பி வராவிட்டால், தான் தீயில் குதித்து உயிரை விடப்போவதாகப் பரதன் கூறினன். பிறகு, இராமனுடைய பாதுகைகளை வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு பரதன் விடைபெற்றுச் சென்றன். அயோத்திக்கு அருகில் உள்ள நந்திக் கிராமத்தில் பரதன் தங்கிவிட்டான். இராமனுடைய பாதுகைகளே செங்கோல் செலுத்தின. சித்திரகூட மலையில் இருந்தால், அன்பு கொண்ட மக்கள் அங்கு வந்து சிரமம் கொடுப்பார்கள் என்று கருதி, இராமன் தன் தம்பியோடும் மனைவியோடும் தென்திசை நோக்கிச் சென்றன்.]

1. விராதன் வதைப் படலம்

இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் தென் திசையை நோக்கிச் செல்லும்போது, அத்திரி முனிவனின் ஆஸ்ரமத்தை அடைந்தனர். முனிவன் அவர்களை வரவேற்றன். அவனுடைய மனைவி அனசூயை, சீதைக்கு அழகான ஆபரணங்களும், ஆடைகளும், சந்தனமும் கொடுத்தாள். அன்று அங்கேயே மூவரும் தங்கி, மறுநாள் தண்டக வனத்துக்குச் சென்றனர்கள். அங்கே விராதன் என்ற அரக்கன் தனது திரிசூலத்தில் பதினறு யானைகளையும், முப்பத்திரண்டு சிங்கங்களையும், பதினறு யாளிகளையும் கோத்துக்கொண்டு, கண்களில் கனல் பொங்க, மலைகளெல்லாம் குலுங்க, பயங்கரமான வடிவத்துடன் கடும்பசியோடு வந்து சீதையை ஒரு கையால் தூக்கிக்கொண்டு ஆகாய மார்க்கத்தில் சென்றன். இராம இலக்குவர்கள் அவனைப் பின்தொடர்ந்து, ''அடா! திரும்பிவா. எங்கே அகன்று போகிறய்?'' என்று சொல்ல, அவன், ''பிரமனிடத்தில் பெற்ற வரத்தினல் நான் என் உயிரை இழக்கமாட்டேன். ஆயுதங்களில்லாமலேயே நான் சாதிக்காத காரியங்கள் இல்லை. உங்களுக்கு நான் உயிர் கொடுத்தேனடா! இந்த மாதை விட்டுவிட்டுப் போய்விடுங்கள்'' என்றன்.

உடனே இராமன் புன்முறுவல் செய்து தனது வில்லில் நாணெலியை எழுப்பினன். அது இடி முழக்கம்போலக் கேட்கவே, விராதன் சீதையைக் கீழே விட்டுவிட்டு, இராமனுக்கு எதிரே வந்து கோபாவேசத்துடன் தனது சூலாயுதத்தை எறிந்தான். உடனே இராமனும் ஓர் அம்பை எய்தான். அந்த அம்பு தாக்கி, சூலாயுதம் இரண்டு துண்டாகி திசைகளின் எல்லையை அடைந்தது. விராதன் கொஞ்சமும் சளைக்காமல் மலைகளைப் பெயர்த்தெடுத்து எறிந்து போரிட்டான். ஆனல் இராமபாணங்கள் பட்டு, அந்த மலைகள் விராதனுடைய உடம்பிலே போய் விழுந்து, காயங்களை உண்டுபண்ணின. அரக்கன் ஒரு மராமரத்தைப் பிடுங்கிக்கொண்டு இராமனை மோத வந்தான். இராமன் அம்புகளைத் தொடுத்துக்கொண்டே இருந்தான். விராதனின் உடம்பில் இரத்தம் பெருகிவழியவே அவன் பலம் இழந்து, மூர்ச்சையடைந்தான். அரக்கனின் கையை வெட்டுவதற்காக அவனுடைய தோளில் இராம இலக்குவர்கள் ஏறினர். அவன் இருவரையும் தூக்கிக்கொண்டு நடந்தான். இதைப் பார்த்த சீதை மனக்கலக்கமுற்றுத் தொடர்ந்து சென்று, தரும மூர்த்திகளான இராம இலக்குவர்களை விட்டுவிட்டுத் தன்னையே உணவாக உட்கொள்ளும்படி

அரக்கனிடம் கேட்டுக்கொண்டாள். சீதை இவ்வாறு துயரத்தினல் தத்தளிக்கும்போது அரக்கனேடு விளையாடுதல் சரியன்று என இராமனிடம் இலக்குவன் கூறியதும், இராமன் புன்னகை செய்துகொண்டு, ''இவனுடைய தோளில் ஏறிக்கொண்டு போகவேண்டிய தூரத்தை விரைவில் கடக்கலாமே என்று நினைத்தேன்'' என்று கூறித் தன் காலால் விராதனைத் தள்ள, அவன் கீழே விழுந்தான். அவனுடைய தோள்களை இராம இலக்குவர்கள் வெட்டி எறிந்துவிட்டு, அப்பால் செல்லத் தொடங்கியதும், அரக்கன் சாகாமல் அவர்களைப் பின் தொடர்ந்தான். உடனே அவனைக் குழி வெட்டிப் புதைக்கத் தீர்மானித்தனர். இலக்குவன் குழி வெட்டினன். இராமன் தனது காலால் விராதனைக் குழியில் தள்ளினன். அப்போது விராதனின் சாபம் நீங்கவே, அவன் பழைய கந்தர்வ வடிவம்பெற்று பிரமனைப் போல ஆகாயத்தில் காட்சியளித்தான். இராமன் இன்னன் என்பதை விராதன் தெரிந்துகொண்டு, அவனைப் பலவாறு தோத்திரம் செய்தான். இராமனின் பெருமைகளையும் எடுத்துரைத்துப் புகழ்ந்தான். ''உன் திருவடிகளால் என் நல்வினை தீவினைகளைத் துடைத்துவிட்டாய். நான் பிறவிக் கடலைத் தாண்டிவிட்டேன். இனி மீண்டும் நான் பிறக்க மாட்டேன்'' என்று விராதன் சொல்லவும், ''நீ அரக்கனுகப் பிறந்த வரலாற்றைக் கூறு'' என்ருன் இராமன். விராதனும் தன் வரலாற்றைப் பின் கண்டவாறு கூறினன்:

''வள்ளலே, கேள். ரம்பை என்ற தெய்வலோக மங்கை பெரிய அரங்கில் நின்று பாடும்போது நான் அவளைப் புணர்ந்ததனல் இந்த மண்ணுலகில் பிறந்து இராக்கத வடிவம் அடைந்தேன். என் பெயர் தும்புரு. குபேரனுடைய உலகில் நான் வாழ்ந்தேன். காம நோயினல் நான் செய்த குற்றத்திற்காக, தேவர்கள் எனக்கு இந்த நிலை வந்தடையும்படியாகச் சபித்தார்கள். நானும் கிலிஞ்சன் என்ற அரக்கனுக்கு மகனுகப் பிறந்தேன். உன் பாதஸ்பரிசம் பட்டு என் சாபம் நீங்கும் என்றும் எனக்குச் சாபம் கொடுத்த தேவர்கள் தெரிவித்தார்கள். அன்று முதல் இன்றுவரை, நல்லது தீயது என்று பார்க்காமல், பிராணிகளைக் கொன்று தின்று தீவினைகளையே தேடிக்கொண்டேன். இன்று உன் பாதம் பட்டு, நான் துயர் தீர்ந்தேன். மூடனுகிய நான் உன்னைக் கஷ்டத்துக்குள்ளாக்கிய குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுவாயாக.''

விராதன் இவ்வாறு கூறிவிட்டுத் தன் பழைய உலகத்துக்குப் போய்விட்டான். விராதன் என்ற அரக்கன் செத்தொழிந்தான் என்று மகிழ்ந்து இராமனும் இலக்குவனும் சீதையோடு அங்கிருந்து புறப்பட்டு, முனிவர்கள் வாழும் ஒரு சோலையை அடைந்தனர்.

2. சரபங்கன் பிறப்புநீங்கு படலம்

மாலைப் பொழுதில் சரபங்க முனிவனின் ஆஸ்ரமத்துக்கு மூவரும் சென்ருர்கள்.

அப்போது அங்கே இந்திரன் வந்திருந்தான். அவனைச் சரபங்க

முனிவன் எதிர்கொண்டு அழைத்து, அவன் அங்கு வந்த காரணத்தைக் கேட்க, ''முனிவனே, உன் தவத்தின் பெருமையை இவ்வளவு என்று சொல்லமுடியாது. பெருந்தவ முனிவனுகிய உனக்கு, பிரமன் பெரும் பதவி கொடுத்திருக்கிருன். அவன் வாழும் உலகத்துக்கு உன்னை அழைத்துவரச் சொன்னுன். நீ அங்கே வந்தால் உன்னை எதிர்கொண்டழைக்கப் பிரமன் வருவான்'' என்று இந்திரன் சொன்னுன். அதற்குச் சரபங்கன், ''புகழ்மிக்கவனே, நான் அற்பத்துக்கு ஆசைப்படுபவனல்லன். நான் பல கற்ப காலங்கள் தவம் செய்திருக்கிறேன். மீளா உலகம் செல்ல விரும்பித்தான் நான் இவ்வளவு காலமும் கடுந்தவம் செய்தேனே ஒழிய, பிரமலோக பதவியை அடைந்து மீண்டும் பிறப்பதற்கல்ல'' என்ருன். அப்போது இராம இலக்குவர்கள் ஆஸ்ரமத்தின் அருகில் சென்ருர்கள். ஒரு தூணில் ஐராவதம் என்ற நான்கு தந்தங்களை உடைய வெள்ளை யானை கட்டப்பட்டிருந்ததைப் பார்த்த இராமன், ஆஸ்ரமத்துக்கு இந்திரன் வந்திருக்கிருன் என்று யூகித்து, ஆஸ்ரமத்தின் சோலைக்கு வெளியே இலக்குவனையும், சீதையையும் நிறுத்திவிட்டு, தான்மட்டும் சோலைக்குள் சென்ருன். இராமனை இந்திரன் தன் ஆயிரம் கண்களாலும் பார்த்து, அவனுடைய பெருமைகளை உள்ளத்தில் நினைந்து வணங்கினுன். இராமன் அங்கே வந்திருப்பதால் ஏதோ ஒரு விசேஷமான காரியம் நடைபெறப் போகிறது என்று நினைத்த இந்திரன், சரபங்கனிடம் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

இராமனைச் சரபங்கன் வரவேற்ருன். முனிவனின் கால்களில் விழுந்து இராமன் வணங்கினுன். இராமன் அழைக்கவே சீதையும் இலக்குவனும் அங்கே வந்தார்கள். மூவரும் முனிவனேடு ஆஸ்ரமத்துக்குச் சென்றனர். முனிவனின் நீதி வாக்கியங்களைக் கேட்டுக் கொண்டு, அவர்கள் அன்றிரவு அங்கே தங்கினுர்கள். மறுநாள் முனிவன் தீயில் புகுந்து உயிர்விடப்போனுன். ''என்ன காரியம் செய்யப் போகிருய்?'' என்று இராமன் கேட்க, ''மோட்சத்தை அடைவதற்காகத் தீயில் பிரவேசிக்கப்போகிறேன். நீ அருள்செய்வாயாக'' என்று சரபங்கன் சொன்னுன்.

''நான் வந்திருக்கும் சமயத்தில் இந்தக் காரியம் செய்வது ஏன்?'' என்று இராமன் கேட்டான்.

''ஆயிரம் வகையான தவங்களைப் புரியும் நான், நீ இங்கே வருவாய் என்ற எண்ணத்துடன் இருந்தேன். நீயும் வந்துவிட்டாய். என் வினை தீர்ந்தது. இனிமேல் எனக்கு இங்கே வேலை இல்லை. இந்திரன் வந்து, பிரமன் தனது சத்தியலோக பதவியை எனக்கு அளித்திருப்பதாகக் கூறினுன். ஆனுல், நான் அழிவற்ற பரமபதத்தை அடைய விரும்பியதால், அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால், நான் பரமபதம் அடைவதற்கு உதவுவாயாக.''

இவ்வாறு சரபங்கன் கூறிவிட்டு, தன் பத்தினியோடு தீயில் மூழ்கிப் பரமபதத்தை அடைந்தான்.

இராமனுடைய ஆயிரம் திருநாமங்களில் ஏதேனும் ஒன்றை அறிந்தவர்களே சிந்தனைக்கு எட்டாத பெரும் பாக்கியத்தை அடைகிருர்கள்

என்ருல், இராமனை நேரில் கண்டவர்கள் அடையும் பதவியை நினைத்துப் பார்ப்பது சுலபமான காரியமா?

3. அகத்தியப் படலம்

இராம இலக்குவர்கள் சீதையோடு மலைகளும், நதிகளும் கடந்து வரும்போது, தண்டகாரணியத்து முனிவர்கள் அவர்களுக்கு எதிரில் வந்தார்கள். இராமனைக் கண்டதும் அவர்களுடைய மனம் களித்தது. இராமனை அவர்கள் ஒரு பர்ணசாலைக்கு அழைத்துக்கொண்டுபோய், அரக்கர்களால் தாங்கள் அடைந்துவரும் கஷ்டங்களையெல்லாம் எடுத்துக் கூறினுர்கள். தவம் செய்வதற்கு இடையூருக இருக்கும் அரக்கர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று முனிவர்கள் கேட்டுக்கொள்ள, இராமன் அபயம் அளித்து, அரக்கர் குலத்தை வேரறுப்பதாக உறுதி கூறினுன். இதைக் கேட்டதும் முனிவர்கள் மகிழ்ச்சியோடு ஆடிப் பாடினுர்கள். பின்னர் அவர்களுடைய விருப்பப்படி இராமன் முதலியோர் தண்டகாரணியத்தில் பத்து ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். அதன்பின் வெகுதூரம் காட்டு வழியே நடந்து சென்று சுதிக்கண முனிவனின் ஆஸ்ரமத்தை அடைந்தார்கள். அவன் தன் தவத்தையெல்லாம் இராமனுக்குத் தட்சிணையாகக் கொடுத்தான். அகத்தியனுடைய ஆஸ்ரமத்துக்குச் செல்ல விரும்புவதாக இராமன் சொல்ல, சுதிக்கணனும், 'அது நல்ல காரியம்' என்று கூறி இராமன் முதலியோரை வழியனுப்பினுன். மூவரும் விரைவில் பொதிகை மலைச் சாரலை அடைந்தார்கள். இராமன் அங்கே வந்திருப்பதை அறிந்து, தமிழால் உலகத்தை அளந்தவனும், தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கக் கடலைக் குடித்து உமிழ்ந்தவனும், வாதவி என்ற அரக்கனை வயிற்றுக்குள் அடக்கிக் கொன்று ஜீரணித்தவனும், கமண்டலத்தில் காவேரி நதியைக் கொண்டுவந்தவனுமான அகத்தியன் மனம் மகிழ்ந்து எதிர்கொண்டழைத்தான். தக்க உபசாரங்கள் செய்தபின் இராமனுக்கு விஷ்ணுதனுசையும், முன்ஞெரு காலத்தில் திரிபுரங்களை எரித்த விஷ்ணு பாணத்தையும் கொடுத்தான். விஷ்ணு தனுசு முன்பு பரசுராமனுல் இராமனுக்குக் கொடுக்கப்பட்டு, இராமனுல் வருணனிடம் கொடுக்கப்பட்டிருந்தது. அதை அகத்தியனிடம் வருணன் கொடுத்திருந்தான். அகத்தியன் கூறிய பிரகாரம் கோதாவரி நதிக்கரையில் உள்ள பஞ்சவடியில் போய் வசிக்க இராமன் முதலியோர் விடைபெற்றுச் சென்றனர்.

4. சடாயுகாண் படலம்

இராம இலக்குவர்கள் சீதையோடு பல காத தூரம் நடந்து சென்று, ஒரு மலையின் உச்சியில் உருக்கிய தங்கம்போலச் சிறகு விரித்திருந்த சடாயு என்ற கழுகரசனைக் கண்டனர். அவன் யாரோ என்று இராம இலக்குவர்களும், அந்த இளைஞர்கள் யாரோ என்று சடாயுவும் சந்தேகித்தனர். 'என் அருமை நண்பன் தசரதனைப் போல இந்த இருவரும் இருக்கிருர்களே' என்று மனத்துக்குள் எண்ணிச் சடாயு திகைத்

தான். அவன் விசாரித்தபோது, தாங்கள் தசரதனுடைய புத்திரர்கள் என்று இருவரும் கூறினர்கள். அவர்களுடைய வாய்மொழி மூலமாகவே தசரதன் இறந்த செய்தியைக் கேட்டு, சடாயு அழுது புலம்பினன். பிறகு சடாயு ஒருவாறு தேறி, தனது வம்சாவளியை விவரித்துக் கூறி, தான் அருணனுடைய புதல்வன் என்றும், சம்பாதி என்பவனின் தம்பி என்றும், தசரதனுடைய உயிர்த் துணைவன் என்றும் தெரிவித்தான். தசரதன் இறந்துவிட்டதால், தான் தீயில் குதித்து உயிர் துறந்தாலொழியத் தன் துயரம் தீராது என்று சடாயு சொன்னன். இராம இலக்குவர்கள் தடுத்தார்கள். அப்பொழுது சடாயு, "நீங்கள் இருவரும் அயோத்திக்குத் திரும்பிய பின், நான் தசரதனிடம் செல்லுகிறேன்" என்று கூறி, அவர்கள் வனத்துக்கு வந்த காரணத்தைக் கேட்டான். இலக்குவன் அந்த வரலாற்றை விபரமாகக் கூறினன். செய்தி அறிந்த சடாயு, "நீங்கள் மூவரும் இந்தக் காட்டில் வசிப்பீர்களாக. உங்களுக்கு நான் காவலாக இருக்கிறேன்" என்றான். பஞ்சவடிக்குப் போய் வசிக்கப் போவதாக இராமன் சொல்லவே, சடாயு, 'மிகவும் நன்று' எனக் கூறி, பஞ்சவடியைக் காட்டுவதாகச் சொல்லி, அவர்களை அழைத்துச் சென்றான்; அந்த இடத்தையும் காட்டினன். இராமன், இலக்குவன், சீதை ஆகிய மூவரும் அங்கே போய் வசிக்கலானர்கள்.

5. சூர்ப்பநகைப் படலம்

இராமன் முதலிய மூவரும் கோதாவரி நதியையும், அதன் வளங்களையும் கண்டார்கள். அங்கு அன்னங்களும், யானையும் உலாவுவதைக் கண்டு இராமனும் சீதையும் புன்முறுவல் பூத்து மனம் களித்தார்கள். அங்கே இலக்குவன் ஒரு சோலையில் பர்ணசாலை அமைத்தான். அதில் அவர்கள் வசிக்கத் தொடங்கினர்கள். அந்தச் சமயத்தில், இராவணனைக் குலத்தோடு அழிக்கப் பிறந்தவளான சூர்ப்பநகை அங்கே வந்து சேர்ந்தாள். இராமனைப் பார்த்ததும், 'இவன் மன்மதனே? மன்மதன் என்றால் உருவம் இராதே! இந்திரனாக இருப்பானே? இந்திரனுக்கு ஆயிரம் கண்கள் இருக்குமே! சிவபெருமான் என்று நினைப்பதற்கும் இல்லை. அவன் மூன்று கண்களை உடையவன். திருமால் என்றால், நான்கு தோள்கள் இருக்கும். மன்மதன் தவம் செய்து இந்த வடிவம் பெற்றிருக்கிறான் போலும்!' என்று பலவிதமாக நினைத்து, அவனுடைய கைகளையும், தோள்களையும், மார்பையும் தனித்தனியே கண்டு அவற்றின் அழகில் ஈடுபட்டு மெய்ம்மறந்தாள். அவளுடையமோகத்துக்கு ஓர் எல்லையில்லாமல் போய்விட்டது. இராமனின் மார்பைக் கட்டித் தழுவ ஆசைகொண்டு, லக்ஷ்மிதேவியின் மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, தன் கோர உருவத்தை மாற்றி அழகிய மங்கையின் வடிவம் கொண்டு அவனுக்கு எதிரே சூர்ப்பநகை மயில் வந்ததுபோல வந்தாள். அவளை இராமன் பார்த்து, "நீ யார்? எந்த ஊர்? உன் உறவினர் யார்?" என்றெல்லாம் விசாரிக்க, அவள் தன் பெயர் காமவல்லி என்றும், தான் ஒரு கன்னிப்பெண் என்றும், இராவணனுக்குத் தங்கை என்றும் சொன்னள். வந்த காரியம் என்ன

என்று இராமன் கேட்டபோது, "பெண்கள் தங்களுடைய காமத்தின் தன்மையை உரைப்பது சரியல்ல. ஆனாலும் சொல்லுகிறேன்: எனக்குத் துணை யாரும் இல்லை. மன்மதன் என்னைத் துன்பப்படுத்துகிறான்" என்றாள் சூர்ப்பநகை. அவள் நல்லவளல்ல என்பதை அறிந்த இராமன், அவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்தான். அதற்கு அவள் எத்தனையோ சமாதானங்களைக் கூறியும், இராமன் இசையவில்லை. அப்போது சீதை அங்கே வரவே, அவளைப் பார்த்த சூர்ப்பநகை, அவளுடைய அழகை வியந்தாலும், இராமனிடம் சீதையை ஓர் அரக்கி என்று பழித்துக் கூறினாள். இராமனோ புன்முறுவல் செய்து வேடிக்கையாகப் பேசினான். சூர்ப்பநகை பயமுறுத்தவே சீதை அஞ்சி, இராமனுடைய தோள்களைக் கட்டிக்கொண்டாள். சூர்ப்பநகையைப் பார்த்து இராமன், "விரைவில் போய்விடு" என்று சொல்லியும் அவள் போகாமல் பேசிக்கொண்டே நின்றாள். இராமன் தன் மனைவியோடு பர்ணசாலைக்குள் போய்விட்டான். அவள் வேதனையடைந்து அப்பால் சென்றாள். சூரியன் அஸ்தமித்ததும் அவளுடைய காமத் தி விஷம் ஏறுவதைப்போல ஏறிக்கொண்டிருந்தது. அவளுடைய உடம்பெல்லாம் கொதித்தது. இராமனை உருவெளித் தோற்றத்தில் கண்டதும் அவளுடைய காமம் ஒரு வரம்பில்லாமல் பெருகியது. வாய்விட்டுப் பலவாறாகப் புலம்பினாள். மறுநாள் சூரியன் உதித்ததும், சீதையை தூக்கிக் கொண்டுபோய் எங்காவது ஒளித்து வைத்துவிட்டு, இராமனோடு சேர்ந்து வாழ நினைத்தாள். அப்போது இராமன் கோதாவரியின் கரையில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். பர்ணசாலைக்குப் புறப்பட்டு வந்தாள். இருண்ட சோலையின் மறைவில் இலக்குவன் காவலாக நிற்பதைப் பார்க்காமல், சீதையைத் தூக்குவதற்காக அவளைப் பின் தொடர்ந்து சென்றாள். இதைப் பார்த்த இலக்குவன், "நில்லடீ!" எனக்குரல் கொடுத்துக்கொண்டு, ஓடிவந்து, அரக்கியின் கூந்தலைப் பற்றி, அவளுடைய வயிற்றில் உதைத்தான். சூர்ப்பநகையோ, "வலிமையோடு இவனைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் செல்லுவேன்" என்று எழுந்தாள். உடனே இலக்குவன் வாளை உருவி அவளுடைய மூக்கையும், காதுகளையும், முலைக்காம்புகளையும் அறுத்துவிட்டான். அப்போது அவள் போட்ட கூக்குரல் எட்டுத் திசைகளிலும் பரவி, தேவர்களுடைய காதுகளிலும் நுழைந்தது. அவளுடைய மூக்கிலிருந்து ஒழுகிய ரத்தத்தில் உலகமே கரைந்தது. சூர்ப்பநகையின் மூக்கையும் முலைகளையும் அறுத்தது, பின்னாளில் இராவணனுடைய தலைகளை அறுப்பதற்கு நல்ல நாள் பார்த்து முன்கூட்டியே காரியத்தைத் தொடங்கி வைத்ததுபோல ஆயிற்று. சூர்ப்பநகை எழுந்து நின்று, தன் அண்ணன் இராவணனையும், மருமகன் இந்திரசித்தையும், கர தூடணர்களையும் கூவி அழைத்து, "என்னுடைய நிலையைப் பார்க்க வரமாட்டீர்களா?" என்று புலம்பினாள். அப்போது இராமன் அங்கே வர, அவனை நோக்கித் தான் அடைந்த நிலையைப் பார்க்கும்படி கூறிக் கீழே விழுந்தாள். அவள் சீதையைத் தூக்கிச் செல்ல ஓடிவந்ததை இலக்குவன் தெரிவித்தான். "நீ இங்கே நிற்கா

மல் ஓடிப்போ'' என்று சூர்ப்பநகையை நோக்கி இராமன் சொன்ஞன். அவள் போகாமல், இராமன் தன்னை மணந்துகொள்ளவேண்டுமென்று திரும்பத்திரும்பக் கெஞ்சினுள். இராம இலக்குவர்கள் அவளை விரட்ட முயன்றும் முடியாமல்போகவே, அவளைக் கொன்றுவிடலாம் என்று பேசிக் கொண்டபோது, ''மூக்கு முதலியன இழந்து வாழ்வதை நான் சகிப்பேஞ? உங்கள் இயல்பை அறிவதற்காகவே நான் திரும்பவும் வந்து உங்களிடம் வஞ்சனையாக நயந்து கெஞ்சினேன். இப்போது உங்கள் இயல்பை அறிந்துகொண்டேன். இப்பொழுதே போய் கரனை அழைத்துவருகிறேன். அவன்தான் உங்களுக்கு எமன்'' என்று சொல்லிக்கொண்டு, கோபத்தோடும், மன வைரத்தோடும் அவ்விடத்தை விட்டுப் போஞள்.

6. கரன் வதைப் படலம்

சூர்ப்பநகை விரித்த கூந்தலோடும் ரத்தம் கொட்டும் மூக்கோடும் வாயோடும் ஓடிச்சென்று கரனுடைய கால்களில் விழுந்து கதறிப் புரண்டாள். ''யார் இந்தச் செயலைச் செய்தவர்கள்?'' என்று கோபத்தோடு கரன் கேட்டான். ''இரண்டு மனிதர்கள்; மன்மதனைப் போன்ற வடிவுடையவர்கள்; தசரதனுடைய புத்திரர்கள்; போரிடுவதற்காக அரக்கர்களைத் தேடிக்கொண்டிருப்பவர்கள்'' என்று சூர்ப்பநகை சொன்ஞள். மேலும், ''அவர்களோடு இருக்கும் ஓர் அழகிய பெண்ணை இராவணனுக்காகத் தூக்கிக்கொண்டு போவதற்கு நான் முயன்றபோது, என் மூக்கை அறுத்துவிட்டார்கள்'' என்ருள். உடனே கரனுக்குக் கோபாவேசம் மிகுந்து, 'வருக தேர்!' என்று கட்டளையிட்டான். பதினன்கு வீரர்கள் இராம இலக்குவர்களுடன் போர் புரியச் சென்ருர்கள். உடன் சென்ற சூர்ப்பநகை, அவர்களுக்கு இராமனைச் சுட்டிக் காட்டினுள். உடனே போர் மூண்டது. இராமன் அவர்களுடைய தலைகளை அறுத்தெறியவே சூர்ப்பநகை கரனிடம் ஓடிவந்து செய்தியைச் சொன்ஞள். கரன் மிகப் பெரிய அரக்கர் சேனையைத் திரட்டிக்கொண்டு இராமன் இருக்கும் இடத்துக்கு விரைந்தான். முன்னே சூர்ப்பநகை வழிகாட்டிக்கொண்டு சென்ருள். இராமன் போர்க்கோலம் கொண்டான். சீதைக்குக் காவலாக இலக்குவனை நிறுத்திவிட்டு, கரனுடைய சேனைக்கு எதிரே வந்தான். சூர்ப்பநகை அவனை அரக்கர்களுக்குச் சுட்டிக் காண்பித்தாள். கரன் தனது படை வீரர்களைப் பார்த்து, ''இந்த மானிடனை நானே வென்று வருகிறேன்'' என்று சொன்ஞன். அப்போது அகம்பன் என்ற ஓர் அரக்கன் வந்து, ''இங்கே பல துர்நிமித்தங்கள் உண்டாகின்றன. அதனுல் மானிடன் ஒருவன்தானே என்று அலட்சியமாக நினைத்துவிட வேண்டாம். இவனை வெல்ல முடியாது. நான் இவ்வாறு கூறுவதை பொறுத்துக் கொள்ளவேண்டும்'' என்ருன். இதைக் கேட்டு உலகமெல்லாம் நடுங்கும்படி கரன் சிரித்து, ''தேவர்களை வென்ற நம் தோள்கள் இந்த மனிதனிடமா தோற்கும்?'' என்ருன். உடனே அரக்கர் படை இராமனைச் சூழ்ந்தது. அவன் அந்த மாபெரும் படையை அழித்துச் சின்னுபின்னமாக்கினுன். அப்போது திரிசிரா என்ற மூன்றுதலை

அரக்கன் ஒருவன் பெரும் படையோடு வந்து இராமனை எதிர்த்துப் போரிட்டான். இராமன் சரமாரி பொழிந்தான். அரக்கர்கள் கண்ட துண்டங்களாகச் சிதறிப்போயினர். திரிசிராவின் கால்களையும், தோள்களையும், மிஞ்சியிருந்த ஒரு தலையையும் இராமன் தன் அம்பு களால் அறுத்தெறிந்தான். அந்த அரக்கன் செத்துவிழவே, மற்ற அரக்கர்கள் பயந்து ஓட்டம் எடுத்தார்கள். தூடணன் தடுத்து நிறுத்தியும் பலன் இல்லாமல் போய்விட்டது. கடைசியில் அவன் தனது சேனை யோடு சென்று இராமனை எதிர்த்தான். அவனுடைய சேனையும் அழிந்தது. அவன் தலையையும் இராமன் துணித்துவிட்டான். தம்பியாகிய தூடணன் தலை இழந்ததை அறிந்து, கரன் போருக்கு வந்தான். அவனோடு அரக்கர்களின் படை கடல்போலத் திரண்டு வந்து இராமனை வளைத்தது. இராமனும் கரனும் நெடுநேரம் உக்கிரமாகப் போர் செய்தார்கள். அகத்தியனிடம்பெற்று, மீண்டும் வருணனிடம் கொடுத்து வைத்திருந்த விஷ்ணு தனுசை இராமன் வாங்கி, நாண் ஏற்றி, அம்பு மழையைப் பொழியத் தொடங்கினான். கரனுடைய கழுத்தும் அறுபட்டது. கரன் இறந்ததும் முனிவர்கள் வந்து இராமனைச் சூழ்ந்தார்கள். அவன் சீதையை நோக்கிச் சென்றான். இலக்குவனும் சீதையும் வந்து தங்கள் ஆனந்தக் கண்ணீரால் இராமனுடைய பாதங்களைக் கழுவினார்கள். சூர்ப்பநகை, கரனுடைய பிணத்தைத் தழுவி, ரத்தத்தில் புரண்டெழுந்து, அதிவேகமாக இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

7. மாரீசன் வதைப் படலம்

இலங்கையில் இராவணன் மிகுந்த சிறப்புக்களுடன் கொலு வீற்றிருந்த சமயத்தில், சூர்ப்பநகை மூக்கில் ரத்தம் ஒழுக மேக முழக்கம் போலக் கதறிக்கொண்டு, அரண்மனையின் வடபுறத்து வாசலில் போய் நின்றாள். அவளைப் பார்த்த அரக்கர்கள் இடி முழக்கம்போலக் கதறினார்கள்; கைகளைக் கொட்டினார்கள்; நெருப்பெழ விழித்தார்கள். சூர்ப்பநகையை இக்கோலம் செய்தவர்கள் இந்திரனோ, பிரமனோ, திருமாலோ, சிவனோ என்று கூறி மனம் கொதித்தார்கள். ''இராவணனுடைய தங்கையாகிய இவளைத் 'தாயே' என்று கூறிக் காலில் விழுந்து வணங்குவதைத் தவிர, வேறு எதுவும் செய்ய நினைக்கவாவது முடியுமா? ஆகவே, இவள் தன்னுடைய மூக்கு முதலியவற்றைத் தானே அறுத்துக்கொண்டு வந்திருக்கவேண்டும்'' என்று சிலர் சொன்னார்கள். இவ்வாறு பலரும் பலவிதமாகத் திகைத்துப் பேசிக்கொண்டனர். இலங்கை நகர் முழுவதிலும் அழுகுரல் பிறந்தது. அரக்கர்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவள் காலில் விழுந்து அழுதார்கள். நகரம் இவ்வாறு துயரப்பட, சூர்ப்பநகை ஓடி வந்து இராவணனுடைய கால்களில் விழுந்து புரண்டாள். அவளுடைய நிலையைக் கண்ட இராவணன் மீசைகள் எரியும்படியாக நெடுமூச்சுவிட்டு, பற்களை நறநற வென்று கடித்துக்கொண்டு, இடி இடித்ததுபோன்ற குரலில், ''இது யார் செய்த வேலை?'' என்று கேட்டான். ''காட்டிலே உள்ள மனிதர்கள் வாளை உருவி இவ்வாறு அறுத்தார்கள்'' என்றாள் சூர்ப்பநகை.

''மனிதர்கள் செய்தார்கள்'' என்றதைக் கேட்டதும் இராவணன் உரக்கச் சிரித்தான். அவன் கண்கள் நெருப்பைச் சிந்தின. ''நீ சொல்வது உண்மைதானா? பொய் சொல்லாதே. பயத்தை ஒழி. நடந்ததைச் சொல்'' என்றான். ''அவர்கள் மனிதர்கள்தான். மரவுரி தரித்திருக்கிறார்கள். மன்மதனைப்போன்ற அழகு படைத்தவர்கள். உன்னைத் தூசி மாத்திரம்கூட மதிக்காதவர்கள். உன் குலத்தையெல்லாம் அழிப்பதாகச் சபதம் செய்துகொண்டிருப்பவர்கள். அந்த இருவரில் ஒவ்வொருவனுமே மும்மூர்த்திகளுக்கு ஒப்பாக இருக்கிறான். அவர்கள் தசரதனுடைய புதல்வர்கள்; இராமன், இலக்குவன் என்ற பெயரை உடையவர்கள்.'' சூர்ப்பநகை இவ்வாறு சொல்லவே, இராவணனுடைய கோபம் மூண்டு எரிந்தது. ''கரன் முதலிய அரக்கர்கள் அந்த இரண்டு மனிதர்களையும் கொல்லவில்லையா?'' என்று கேட்டான். கரன் முதலியவர்கள் இராமனுடைய அம்புகளுக்கு இரையாகிவிட்டார்கள் என்று சூர்ப்பநகை சொன்னாள். இராவணன் தனது கோபாவேசத்தின் இடையே, ''அந்த மனிதர்கள் இவ்வாறு உன் மூக்கை அறுக்கும்படியாக, நீ அவர்களுக்கு என்ன தீங்கு செய்தாய்?'' என்று கேட்டான். உடனே சூர்ப்பநகை, சீதையின் காரணமாகவே தனக்கு இத்தனையும் நேர்ந்தது என்று சொல்லி, அவளுடைய அழகை விரிவாக வர்ணித்து, அவளை அவனுக்காகத் தூக்கிக்கொண்டு வர முயன்றபோது, இலக்குவன் வந்து தனது மூக்கை அறுத்ததாகக் கூறினாள். அவளுடைய வர்ணனையைக் கேட்டு, சீதையிடம் இராவணன் கரைகாணாத மோகம் கொண்டான். கரனையும், சூர்ப்பநகையின் மூக்கை அரிந்தவனையும், அதனால் தனக்கு நேர்ந்த இழிவையும் மறந்து, சீதையைமட்டுமே நினைக்கலானான். அவனுடைய காமநோய் அதிவேகமாக வளர்ந்துகொண்டு வந்தது. உடனே இராவணன் சபையைவிட்டு எழுந்து, தனது அரண்மனைக்குள் சென்றான். காமவெப்பம் தாங்காமல் சோலைக்குள் இருந்த ஒரு மண்டபத்துக்குச் சென்று படுக்கையில் அமர்ந்தான். தனது தாபத்தைத் தணிப்பதற்காக வெவ்வேறு பருவகாலங்களையும், சந்திரனையும் வரவழைத்தான். ஆனால் அவற்றால் யாதொரு பலனும் ஏற்படவில்லை; காமவேதனையே அதிகரித்துக்கொண்டிருந்தது. சீதையை உருவெளித் தோற்றத்தில் அவன் கண்டபின், குளிர்ச்சி மிக்க சந்திரகாந்த மண்டபத்துக்குச் சென்று மலர்ப் படுக்கையில் விழுந்தான். தென்றல் வீசியது. இவை அனைத்துமே அவனை நெருப்பாகச் சுட்டன. அதன்பின் அவன் மந்திரிகளை வரவழைத்து அவர்களோடு கலந்து ஆலோசித்தபின், ஒரு விமானத்தில் ஏறிக்கொண்டு மாரீசன் இருக்கும் இடத்துக்குச் சென்றான். அவன் வந்த காரணத்தை மாரீசன் வினவினான்.

''என்னுடைய மேன்மையும் புகழும் போய்விட்டன. அந்தப் பழியை உனக்கு நான் எப்படிச் சொல்லுவது? உன் மருமகள் சூர்ப்பநகையின் மூக்கை மனிதர்கள் அறுத்துவிட்டார்கள். என் வம்சத்துக்கும் உன் வம்சத்துக்கும் இதைவிட வேறு என்ன கேவலம் வேண்டும்? அதுமட்டுமா? உன் மருமக்களான கரன், தூடணன், திரிசிரா ஆகிய மூவரையும் அவர்கள் கொன்று ஒழித்துவிட்டார்கள். என் மனக்

கொதிப்புத் தணியாமல் வேதனையோடு வந்திருக்கிறேன். கேவலம், மனிதர்களுடனு நான் போர் செய்வது? ஆகவே, அந்த மனிதர்களோடு இருக்கும் அழகிய பெண் கொடியைத் தூக்கிக்கொண்டு வருவதற்கும், அதன்மூலம் எனக்கு நேர்ந்த பழி நீங்குவதற்கும் உன்னுடைய துணையை நாடி வந்தேன்'' என்று இராவணன் சொன்னுன்.

உடனே மாரீசன் 'சீசீ' என்று சொல்லித் தன் இரு காதுகளையும் பொத்தி, அப்படிப்பட்ட காரியம் செய்தால் இராவணனின் வாழ்நாள் முடிவது திண்ணம் என்று சொன்னுன். இராம இலக்குவர்களின் அம்புகளுக்கு ஏற்கெனவே தன் தாய் தாடகையும், தம்பி சுபாகுவும் பலியாகியிருக்கின்றனர் என்றும், அவர்களை நினைத்தாலே தனக்கு நடுக்கம் உண்டாகிறதென்றும் அவன் கூறவே, இராவணன் மிகுந்த கோபாவேசம் கொண்டு மாரீசனை இகழத் தொடங்கினுன். மாரீசன் எவ்வளவோ புத்திமதிகள் சொல்லியும், இராவணன் கேட்காமல், ''நீ உயிரோடு இருக்க விரும்பினுல் என் விருப்பப்படி செய்'' என்று சீறினுன்.

இராவணனுக்கு அழிவுகாலம் வந்துவிட்டது என்று நினைத்துக் கொண்டு, ''நான் இப்போது செய்யவேண்டியது என்ன?'' என்று மாரீசன் கேட்டான். ''நீ பொன் மானுக உருவெடுத்துச் சீதையின் முன்னுல்போய் நின்று அவளுக்கு உன்மீது ஆசையை உண்டுபண்ணுவாயாக'' என்று கூறி அனுப்பினுன். அவ்வண்ணமே மாரீசன் பொன் மானுக மாறி, பஞ்சவடிக்குச் சென்று சீதையின் முன்னுல் நின்ருன். அதன் அழகைக் கண்டாள் சீதை. உடனே இராமனிடம் ஓடிச் சென்று அதனைப் பிடித்துத் தருமாறு கேட்டாள். அது மாயமான் என்று இலக்குவன் சொன்னுன். இராமன் அவனுடைய சொல்லை மறுத்து, தானே நேரில் போய்ப் பார்த்தான். சீதையின் விருப்பத்திற்கு இணங்க அதைப் பிடித்துவரச் சம்மதித்தான். இலக்குவன் திரும்பவும் தடுத்தான். தானே போய் அதைப் பிடித்துவருவதாகவும் சொன்னுன். ஆனுல் சீதை கண்ணீர் சிந்திய வண்ணம் ஒரே பிடிவாதமாக இராமன்தான் அந்த அழகிய மானைப் பிடித்துத் தரவேண்டுமென்று சொல்லவே, இராமன் வில்லும் அம்பும் எடுத்துக்கொண்டு மானைத் தொடர்ந்து சென்ருன். சீதை இருந்த பர்ணசாலைக்குக் காவலாக இலக்குவன் நின்ருன். இராமன் தொடர்ந்து வரவே மான் விரைவாக ஓடியது. மலையிலும், மேகத்திலும் தாவிக் குதித்துக்கொண்டும், இராமன் அருகில் வந்தால் ஓட்டமெடுப்பதும், அவன் சற்று தாமதித்து நின்ருல் கைக்கெட்டிய தூரத்தில் நடைபோடுவதுமாகச் சென்ற மானை மாய மான்தான் என்று இராமன் தீர்மானித்தான். உடனே அதன்மீது ஓர் அம்பை எய்தான். அம்பு போய் மார்பில் தைத்தது. தைத்தமாத்திரத்தில் எட்டுத்திசைகளிலும் ஒலிக்கும்படியாக இராமனுடைய குரலிலேயே கூவி, மான் வடிவத்தைவிட்டு தன் இயற்கையான அரக்க வடிவத்துடன் மாரீசன் விழுந்தான். அவன் மாரீசனே என்பதை இராமனும் கண்டுகொண்டான். மாரீசனின் குரல் கேட்டு, அதைத் தன் குரல் என்று எண்ணிச் சீதை துயர்ப்படுவாளே என்று இராமன் வருந்தினுன். 'மாரீசன் சாகவேண்டுமென்று இங்கே வந்தவனல்ல. இதில் ஏதோ ஒரு தந்திரம் இருக்கவேண்டும். இவனுடைய கூக்குரலால் தீமை பயக்

கும் காரியம் ஒன்று நிகழக்கூடும். அதனுல் நாம் பர்ணசாலைக்குத் திரும்புவதே நல்லது' என்று எண்ணியவனுக இராமன் திரும்பிவந்தான்.

8. சடாயு உயிர்நீத்த படலம்

மாரீசனின் குரலை இராமனின் குரல் என்று கருதிய சீதை, தன் பிடிவாதத்தினுல்தானே கணவனுக்கு அரக்கனின் வஞ்சனையால் இந்த அபாயம் நேர்ந்தது என்று எண்ணி அழுது, இடியுண்ட நாகம்போல உணர்விழந்து கீழே புரண்டாள். "நம் தலைவர் அரக்கனுடைய மாயையால் விழுந்துகிடக்கிருர் என்பதை அறிந்தும் அவருக்குத் தம்பியாகிய நீ இங்கே நின்றுகொண்டிருப்பதா?" என்று இலக்குவனை நோக்கிச் சீதை வெறுப்போடு கூறினுள்.

இராமனுக்கு யாராலும் தீங்கிழைக்கமுடியாது என்று இலக்குவன் எவ்வளவோ எடுத்துக் கூறியும் சீதை கேட்காமல், "நீ இப்படி இருப்பது நியாயமற்றது" என்று கடுங்கோபத்துடன் சொன்னுள். அத்துடன், தான் நெருப்பில் விழப்போவதாகச் சொல்லிக்கொண்டு காட்டுத் தீயைப் பார்த்து ஓடினுள். இலக்குவன் அவளைத் தடுத்து, "விதியை யாரால் வெல்லமுடியும்? அடியேன் போகின்றேன். கேடு பொருந்தி வருகிறது" என்று சொல்லி வேகின்ற சிந்தையோடு விடை பெற்றுச் சென்ருன். அவன் அப்பால் போய்விடவே, தக்க சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு மறைவிடத்தில் காத்திருந்த இராவணன், பந்தபாசங்களை உதறிய முனிவன் போலப் பொய்வேடம் பூண்டு, திரிதண்டம் ஏந்தி, வேதகீதம் பாடிக்கொண்டு, குறுநடை நடந்து சீதை இருந்த பர்ணசாலைக்கு வந்து சேர்ந்தான். வாசல் பக்கத்தில் வந்து நின்றுகொண்டு, "இங்கே இருப்பவர் யார்?" என்று கேட்டான்,

தூயமனம் படைத்த ஒரு தவ சிரேஷ்டனே வந்திருக்கிருன் என்று எண்ணிய சீதை எதிரே வந்து அவனை வரவேற்ருள். அந்தக் கற்பரசியை இராவண சந்நியாசி பார்த்தான். அவனுடைய காம நோய் மிகுதியாகி, 'மூன்று உலகங்களையும் இவள் ஆட்சி செய்ய, நான் இவளுக்கு வேலைக்காரனுக இருந்து வாழ்நாளைக் கழிப்பேன்' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். சீதையின் உபசாரத்தை ஏற்று, பர்ணசாலையில் போய் உட்கார்ந்தான். சீதையிடம் விசாரித்து அவள் யார் மகள், யாருடைய மனைவி என்பன போன்ற விபரங்களையெல்லாம் தெரிந்துகொண்டான். தான் இலங்கையிலிருந்து வருவதாகச் சொல்லி, இராவணனுடைய (தன்னுடைய) அரசையும் செல்வத்தையும் வானளாவப் புகழ்ந்தான். இராவணனிடம் எத்தனையோ அழகிகள் மோகம் கொண்டு உருகும்போது, அவன் தன் மனத்துக்குப் பிடித்த வேருெரு மங்கையைத் தேடிக்கொண்டிருக்கிருன் என்றும் சொன்னுன்.

அரக்கர் குலம் முழுவதும் இராமனுல் அழியப்போகிறதென்றும், அதன் பின் உலகத்துக்குத் துன்பமே இல்லை என்றும் சீதை சொல்ல, 'அரக்கர்களை மானிடரால் வெல்ல முடியாது' என்று இராவணன் கூறினுன். விராதன், கரன் முதலிய அரக்கர்கள் இராமனுல் கொல்

ணப்பட்டதைச் சீதை குறிப்பிடவே, இராவணன் கோபம்கொண்டு, ''பேதைப் பெண்ணே, நீ இராவணனை யாரென்று நினைத்துக்கொண்டு இப்படிப் பேசுகிறாய்?'' என்று முழங்கினான். சீதை அதற்கும் தக்க விதமாக மறுமொழி கொடுக்கவே, இராவணனின் கோபம் எல்லை கடந்துவிட்டது. தன் சந்நியாசி வேஷத்தை விட்டு, உண்மை வடிவத்தைக் காட்டினான். எமனைப் பார்த்து உயிர் நடுங்குவது போல, அவனைப் பார்த்துச் சீதை நடுங்கினாள்.

''அன்னமே! நடுங்க வேண்டாம். ஈரேழு உலகங்களையும் ஆளும் செல்வத்தில் நீ வாழ்வாயாக. உன்னை நான் தலைமேல் வைத்துப் போற்றுகிறேன்'' என்றான் இராவணன்.

சீதை அவனை நோக்கி, 'அரக்கனே! என்ன சொன்னாய்?' என்று எச்சரித்து நிந்தித்துப் பேசத் தொடங்கினாள். பயத்தினாலும் நயத்தினாலும் அவளைத் தன் வசப்படுத்த இராவணன் முயன்றான். சீதையோ, ''என் நாயகனே! இளையவனே!'' என்று கதறினாள். அப்போது இராவணன் அவளைத் தரையோடு பெயர்த்து எடுத்துத் தன் தேரில் வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கத்தில் சென்றான். போகும் வழியில் சீதை மலையையும், மரத்தையும், மயிலையும், குயிலையும், இப்படி ஒவ்வொன்றையுமே பார்த்துப் பார்த்துத் தன் நிலையைச் சொல்லி அழுதாள். இராவணன் அவளைப் பரிகசித்தான். அந்தச் சமயத்தில் சடாயு வந்து, ''எங்கேயடா போகிறாய்? எங்கே?'' என்று சொல்லிக் கொண்டே இராவணனை எதிர்த்தான். சடாயுவின் சிறகுகளிலிருந்து வீசுகிற காற்று ஊழிக்காற்றுமாதிரி மலைகளைப் பெயர்த்துக்கொண்டும், கடல்களைக் கலக்கிக்கொண்டும் வீசியது. சீதையை நோக்கி, ''பயப்படாதே'' என்று தைரியம் சொன்னான். இராவணனைப் பார்த்து, ''நீ என்ன காரியம் செய்யத் துணிந்துவிட்டாய்? உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் அழிவைத் தேடிக்கொண்டாய்'' என்று கோபத்தோடு பேசலானான். அவன் சொல்லை லட்சியம் செய்யாமல், இராவணனும் கோபத்தோடு பேசினான். அவ்வளவில் இருவரும் போரில் இறங்கினர். வெகுநேரம் கடும்போர் செய்தனர். சிவனிடம் பெற்ற சந்திரஹாசம் என்ற வாளை வீசி சடாயுவின் சிறகை இராவணன் அறுத்துவிடவே, சடாயு கீழேவிழுந்தான். இதைக் கண்டு சீதை கதறி அழுதாள். 'துன்பம் அடைந்த என்னை நோக்கி 'பயப்படாதே' என்று அபயம் கொடுத்த நல்லவன் தோற்பதா? பாவியாகிய அரக்கன் வெல்வதா? தருமம் என்பது அழிந்துவிட்டதா?' என்றெல்லாம் சொல்லிப் புலம்பினாள். இராவணன் அவளைத் தரையோடு எடுத்துக்கொண்டு அப்பால் சென்றான். கீழே விழுந்து கிடந்த சடாயு, 'இராம இலக்குவர்கள் உடன் இருந்திருந்தால் சீதைக்கு இந்த நிலை ஏற்பட்டிராது. என்ன நடந்தது என்றே தெரியவில்லை. இராமன் திருமாலின் அவதாரமேயானதால், இராவணனால் அவனை வெல்லமுடியாது. அதனால்தான் திருட்டுத்தனமாக மாயம் புரிந்து சீதையை எடுத்துச் செல்லுகிறான்' என்றெல்லாம் பலவாறாகச் சிந்தனை செய்துகொண்டு வருந்தினான். கடைசியில் சோர்ந்து தூங்கிவிட்டான். இராவணனும்

சீதையை விரைவாகக் கொண்டு சென்று, சிஞ்சுபவனத்தில் (அசோக வனத்தில்) சிறைவைத்தான்.

இங்கே நிலைமை இவ்வாறு இருக்க, இராமனைத் தேடிச் சென்ற இலக்குவனின் நிலையைப்பற்றிப் பார்ப்போம். தெளிந்த கடலில் வேகமாகச் செல்லும் மரக்கலம் போல, தமையனைத் தேடிச் சென்றான் இலக்குவன். அப்போது இராமன் எதிரே வந்துகொண்டிருந்ததைப் பார்த்து மனக்களிப்பு அடைந்தான். இராமனும் அவனைப் பார்த்தான். 'சீதைக்குக் காவலாக இராமல் எதற்காக இலக்குவன் இங்கே வருகிறான்?' என்று திகைத்த இராமன், அவனிடமே காரணத்தைக் கேட்டான். மாரீசனுடைய கூக்குரலைக் கேட்டுச் சீதை தன்னைப் பிடிவாதமாக அனுப்பிவைத்த செய்தியை இலக்குவன் எடுத்துக் கூறினான். நிலைமையை நன்கு சிந்தித்துப் பார்த்த இராமன், யாரோ சீதையை அபகரித்துச் செல்லுவதற்காகச் சூழ்ச்சி செய்து இவ்வாறு அவனைத் தனியே பிரித்துவிட்டார்கள் என்று எண்ணி, இலக்குவனைப் பார்த்து, "உன் சொல்லைக் கேட்காமல், மானைத் தொடர்ந்து சென்று என்னைக் கெடுத்துக்கொண்டேன்" என்று இராமன் மனம் அழிந்து கூறினான். உடனே இருவரும் காலதாமதம் செய்யாமல் பர்ண சாலைக்கு ஓடிவந்தார்கள். அங்கே சீதையைக் காணாமல், பிரிந்து சென்ற உயிர் திரும்பி வந்து உடம்பைக் காணாமல் திகைத்தது போல இராமன் திகைத்தான். அவனுக்குப் பூமியும், மலைகளும், கடல்களும், மற்றுள்ளவையும் சுழல்வதுபோல் இருந்தது. அப்போது இலக்குவன், "தேர் சென்ற சுவடு தெரிகிறது. பிராட்டியைப் பூமியோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு போயிருப்பதையும் பார்த்துக்கொண்டோம். இனி யோசித்துக்கொண்டிருப்பதால் என்ன பயன்? பிராட்டியை எடுத்துச் சென்றவன் வெகுதூரம் போய்விடுவதற்கு முன் நாம் தொடர்ந்து செல்லுவோம்" என்றான். இருவரும் தேர்ச்சுவட்டில் நடந்து நெடுந்தூரம் சென்றார்கள். தென்திசை நோக்கிச் சென்றபோது, வீணையின் உருவம் எழுதிய கொடியொன்று கிடப்பதைப் பார்த்தார்கள். சடாயு போரிட்டிருக்கிறான் என்பதையும் ஊகித்துக்கொண்டார்கள். சிறிது தூரத்தில் ஒரு வில் முறிந்து கிடந்ததையும் கண்டார்கள். இப்படியே ஒவ்வொன்றாகப் பல அடையாளங்களையும் பார்த்துக் கொண்டே போகும்போது, இராவணன்தான் சடாயுவோடு போர் செய்திருக்கிறான் என்று இலக்குவன் சொன்னான். சடாயு விழுந்து கிடந்த இடத்துக்கு இருவரும் வந்து சேர்ந்தார்கள். சடாயுவின் மீது விழுந்து இராமன் பலவாறு புலம்பினான். சடாயு சிறிது மூர்ச்சை தெளிந்து, இராம இலக்குவர்களைக் கண்ட மாத்திரத்தில் மனம் மகிழ்ந்தான். இருவரையும் அவன் உச்சி மோந்து, "பலசாலிகளாகிய நீங்கள் இருவரும் சீதையைப் பிரிந்து சென்றீர்களோ?" என்றான். நடந்த செய்தியையெல்லாம் இலக்குவன் கூறினான். சடாயு அவர்களுடைய துயரத்தைத் தேற்றி, "எல்லாம் விதிவசமே ஒழிய வேறில்லை" என்றான். பிறகு, அரக்கர்களையெல்லாம் பூண்டோடு அறுத்துச் சுகமாக வாழும்படி சொல்லி, தான் இராவணனோடு போரிட்டு வீழ்ந்ததையும் சடாயு கூறினான். உடனே இராமன் மிகுந்த கோபம் கொண்டு,

அப்பொழுதே உலகம் முழுவதையும் அழித்துவிடப் போவதாகச் சொல்ல, சடாயு அவனை நோக்கி, ''கோபப்படாதே. அரக்கர்களை நீ அழிப்பாய் என்று தேவர்களும் முனிவர்களும் நம்பி மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். வேறு எந்தப் பலத்தைக்கொண்டு அரக்கர்களை அவர்கள் அழிக்க முடியும்? சீதையைத் தனியாக விட்டுவிட்டுப்போய் குலத்துக்கே பழி தேடிக்கொண்டீர்கள். யோசித்துப் பார்த்தால், பிழை உங்களுடையதே, உலகத்தினுடையதல்ல'' என்றான். இராமனும் கோபம் தணிந்தான். இராவணன் எங்கே போனான் என்பதைக் கூறும்படி இராமன் கேட்டான். அதற்குப் பதில் சொல்லுவதற்கு முன்பே சடாயு இறந்துவிட்டான். இராம இலக்குவர்கள் அழுது புலம்பி, சடாயுவுக்குச் செய்யவேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தனர். சூரியனும் அஸ்தமித்தது.

9. அயோமுகிப் படலம்

இராமனும் இலக்குவனும் மாலைப் பொழுதில் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, ஒரு மலைக்குச் சென்று அங்கே தங்கினார்கள். அன்று இரவு முழுவதும் இராமன் கண் துயிலாமல் சீதையை எண்ணித் துயரத்தில் துடித்துக் கொண்டிருந்தான். சூரியோதயமானதும் இருவரும் எழுந்து இராவணனுடைய இருப்பிடத்தைத் தேடிக்கொண்டு வெப்பம் நிறைந்த காட்டில் பதினெட்டு யோசனைதூரம் நடந்து சென்றார்கள். சீதையைக் காணாததால் கோபமும் பெருமூச்சுமாக ஒரு குளிர்ச்சி பொருந்திய சோலைக்குள் புகுந்தார்கள். இரவு வந்து எங்கும் இருள் சூழ்ந்தது. அங்கே பளிங்குக் கற்களால் கட்டப்பட்டிருந்த ஓர் அறையைக் கண்டு அதில் இருவரும் தங்கினார்கள். பின்பு, இராமன் தண்ணீர் கொண்டுவருமாறு இலக்குவனிடம் கூற அவனும் புறப்பட்டுச் சென்றான். அவன் தண்ணீரைத் தேடி அலையும்போது அயோமுகி என்னும் அரக்கி அவனைக் கண்டு மோகம் கொண்டாள். ''இவன் என் விருப்பத்துக்கு இசையாவிட்டால், இவனை என் குகைக்கு எடுத்துக்கொண்டு போய்க் கட்டித் தழுவுவேன்'' என்று சொல்லிக்கொண்டு அந்த அரக்கி இலக்குவனை நோக்கி நெருங்கி வந்தாள். ''நீ யாரடீ? சீக்கிரம் சொல்'' என்றான் இலக்குவன். ''உன்னிடம் ஆசைகொண்டு வந்த அயோமுகி நான்'' என்று அவள் சொல்ல, ''இந்த வார்த்தைகளை நீ திரும்பவும் சொன்னால், உன் உடம்பைப் பிளந்து கூறுபோட்டு விடுவேன்'' என்று இலக்குவன் எச்சரித்தான். அவள் மீண்டும் அவனைக் கெஞ்சினாள்; கும்பிட்டாள். ''உன் காதுகளையும் மூக்கையும் நான் அறுப்பதற்கு முன் நீ போய்விடு'' என்று இலக்குவன் பயமுறுத்தினான். அயோமுகியோ இலக்குவனை எடுத்துக்கொண்டு ஆகாய மார்க்கத்தில் சென்று, அவனைத் தழுவினாள். இலக்குவன் திரும்பி வராததைக் கண்டு இராமன் மிகவும் துன்புற்றுத் தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தான். அதே சமயத்தில் இலக்குவன் அயோமுகியின் மூக்கை அறுத்தான். அவள் கூக்குரலிடவே, அந்தக் குரல் கேட்டு, அது அரக்கி ஒருத்தியின் குரலே என்று இராமன் அறிந்து, வில்லும் அம்புமாக இலக்குவனைத் தேடி ஓடிவந்தான். அவனைப் பார்த்த இலக்குவன்,

''வருந்தவேண்டாம்'' என்று கூறிக்கொண்டே வந்தான். தம்பி வந்ததைக் கண்ட இராமன் மகிழ்ச்சி கொண்டு, ''என்ன நடந்தது?'' என்று கேட்டான். அவனும் நடந்ததைக் கூறினன். இராமன் அவனைத் தழுவி உடல் பூரித்தான். இருவரும் தண்ணீர் குடித்தபின் ஒரு மலையில் தங்கினர்கள். அன்று இரவும் இராமன் சீதையைப் பிரிந்ததை நினைத்து வருந்திப் புலம்பினன். இரவு கழிந்ததும், இராமனுடைய துயரைத் தணிப்பவன்போலச் செங்கதிர்ச் செல்வன் உதயம் செய்தான்.

10. கவந்தன் படலம்

விடிந்ததும் சீதையைத் தேடிக்கொண்டு சென்ற இராம இலக்குவர்கள் நடுப்பகலில் கவந்த வனத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே கவந்தன் என்ற ஓர் அரக்கன் தன்னுடைய பிரம்மாண்டமான கைகளை வெகுதூரத்துக்கு நீட்டி, பின்பு அவற்றை வளைத்து நெருக்கிக் கொண்டுவரும்போது, அவற்றின் இடையே எறும்புமுதல் யானைவரை எல்லா உயிர்களும் வலையில் அகப்பட்டதுபோல் அகப்பட்டுக்கொண்டு தத்தளித்தன. மலைகளும் கூட உருண்டுவந்தன. மரங்கள் வேரோடு பெயர்ந்து விழுந்தன. மேகங்களும் சுருண்டு விழுந்தன. இப்படி அனைத்தையும் சேர்த்துச் சுருட்டிக்கொண்டு வரும் கைகளின் இடையே இராம இலக்குவர்கள் அகப்பட்டுக்கொண்டார்கள். கவந்தனுடைய கைகள் தங்களை வளைப்பதைப் பார்த்த அந்த இருவரும், அந்தக் கைகளையே இராவணனுடைய சேனைகள் என்று நினைத்து, போர் வந்துவிட்டது என்று எண்ணி மகிழ்ந்தார்கள். இராவணனுடைய ஊரும் அருகிலேயே இருக்கவேண்டும் என்று இராமன் நினைத்தான். ஆனல் இலக்குவனே, ''இது அரக்கன் சேனையல்ல; ஒரு பெரிய பாம்புதான் நம்மை வளைத்துக்கொண்டிருப்பதுபோலத் தோன்றுகிறது'' என்றுன். இருவரும் இரண்டு யோசனைதூரம் நடந்து கவந்தனுக்கு எதிரே சென்றுர்கள். கவந்தனுடைய பயங்கரமான தோற்றத்தையும் கண்டார்கள். மேருமலையில் இரண்டு சூரியர்களைப் பதித்ததுபோல இருந்தன அவன் கண்கள். பற்களுக்கு இடையே இரண்டு காத தூரத்துக்கு இடைவெளி இருந்தது. அவனுடைய வாயோ வயிற்றில் இருந்தது. மூக்குத் துவாரங்களிலிருந்து நெருப்பும் புகையும் வெளி வந்துகொண்டிருந்தன. பஞ்சமாபாதகங்களெல்லாம் ஒன்று திரண்டது போன்ற தன்மை உடையவனுக அவன் இருந்தான். வளைத்துப் பிடித்த எல்லா உயிர்களையும் விழுங்குகின்ற அவன் வாய், எமனுடைய நகரத்தின் வாசல்போல இருந்தது. அவனை இராம இலக்குவர்கள் பார்த்தார்கள். கவந்தனை ஒரு பூதம் என்று இலக்குவன் நினைத்தான். அதை இராமனிடமும் கூறினன். இராமனும் அதை ஒப்புக்கொண்டு, ''மனைவியை இழந்து பழியைச் சுமந்து அலைய நான் விரும்பவில்லை. ஆகவே இந்தப் பூதத்துக்கு நான் ஆகாரமாகி விடுகிறேன். நீ ஊருக்குத் திரும்பிவிடு'' என்றுன். அதற்கு இலக்குவன், ''துன்பம் ஏற்பட்டபோது உனக்கு முன்னமே உயிர் துறக்காமல், நான் உயிரோடு திரும்பிச் சென்றுல் அது அழகாகத்தான் இருக்-

கும்! துன்பத்தை வெல்வதல்லவா வீரர்களுக்கு அழகு? உலகமெல்லாம் அழியும் ஊழிக்காலத்திலும்கூட அழியாத நீ, இந்தப் பூதத்தினுல் கொல்லப்பட்டு இறப்பாய்போலும்! சீதையை மீட்டுக்கொண்டான் என்ற புகழைத் தேடிக்கொள்ளாமல் இறந்தால் அதைவிட வேறு பழி உண்டா?'' என்றெல்லாம் கூறி, தன் வாளால் கவந்தனுடைய கைகளேயும் வாயையும் வெட்டப்போவதாகச் சொன்ஞன். ஆனுல் இராமனே கவந்தன் வாயில் அகப்பட்டு உயிர் துறப்பதற்காகச் சென்முன் அவனே இலக்குவன் ஓடிச் சென்று தடுத்தான். இவ்வாறு இருவரும் நெருங்கி வருவதைப் பார்த்த கவந்தன், ''தீவினைப் பயனுக என்னிடம் வந்து சேர்ந்த நீங்கள் யார்?'' என்று கேட்டான். இராமனும் இலக்குவனும் ஒரு பதிலும் சொல்லாமல், கோபத்தோடு பார்த்துக்கொண்டு நின்முர்கள். அவர்கள் தன்னே அலட்சியம் செய்வதாக எண்ணிய கவந்தன், அவர்களே எடுத்து விழுங்கப்போனபோது, வீரர்கள் இருவரும் அவனுடைய தோள்களே வெட்டிவிட்டார்கள். இராமனுடைய கை பட்டமாத்திரத்தில் கவந்தனின் சாபம் நீங்கியது. அவனுடைய கோரமான வடிவமும் நீங்கிவிட்டது. தன் அழகிய பழைய வடிவம்பெற்று ஆகாயத்தில் சென்று அங்கே இருந்துகொண்டு, இராமனுடைய குணங்களே எடுத்துக் கூறி வாயாரப் புகழ்ந்தான். அவனேப் பார்த்து, ''நீ யார்?'' என்று இலக்குவன் கேட்க, கவந்தன், ''நான் தனு என்ற பெயருடைய ஒரு கந்தர்வன். சாபத்தினுல் இந்தக் கீழான அரக்கப் பிறப்பை அடைந்தேன். உங்கள் கைபட்டுப் பழைய வடிவம் பெற்றேன். என் தந்தைக்கும் தந்தைபோன்றவர்களாகிய நீங்கள் நான் சொல்லுவதைக் கேளுங்கள்: சீதையை நீங்கள் தேடிக் காண்பதற்குத் துணேவர் வேண்டும். துணேயில்லாமல் பகைவர்களே ஒழிக்க முடியாது. சவரி என்ற ஒருத்தி இருக்கிருள். தாயைக்காட்டிலும் அன்புடையவள். அவள்சொல்லும் வழியில் நீங்கள் சென்று, இருசியமூக மலேயில் ஏறி அங்குள்ள சுக்கிரீவனேடு நட்புக்கொண்டு, அதன்பின் சீதையைத் தேடுவது உத்தமம்'' என்று கூறிவிட்டு ஆகாயமார்க்கத்தில் கிளம்பிப்போய்விட்டான். இராம இலக்குவர்களும் அவனுடைய யோசனேயை ஏற்று, வழி நடக்கலானுர்கள். காடும் மலேயும் தாண்டி, இரவு வந்ததும் மதங்க முனிவனின் ஆசிரமத்தை அடைந்தார்கள்.

11. சவரி பிறப்புநீங்கு படலம்

மதங்க முனிவனின் ஆசிரமத்தில் அளவற்ற நீண்ட காலமாகத் தன்னேயே எண்ணித் தவம் செய்யும் சவரி என்ற தவப்பெண்ணே இராமன் பார்த்து, இனிய மொழிகள் கூறி அவளே க்ஷேமம் விசாரித்தான். அப்போது சவரி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, ''என் உலகப் பற்று ஒழிந்தது. என் தவப்பயன் கிட்டிவிட்டது. என் பிறவிப் பிணியும் அகன்றது'' என்றெல்லாம் சொல்லி, கனிகளேச் சேகரித்துக் கொண்டு வந்து இராமனுக்கு விருந்திட்டாள். அவன் சாப்பிடும்போது, ''என் அப்பனே, சிவபெருமானும், பிரமனும், இந்திரனும், மற்றத் தேவர்களும் இங்கே வந்து, என் தவம் பூரணத்துவம் அடையப்போகிற

தென்றும், உனக்கு உபசாரங்கள் செய்தபிறகு தம்மிடம் வரும்படி யாகவும் என்னிடம் கூறிச் சென்றூர்கள். நீ இங்கே வரப்போகிருய் என்பதை அறிந்து, உனக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். இன்று நீ வந்துவிட்டாய். என் தவம் நிறைவேறிவிட்டது'' என்று சவரி கூறினுள். இராம இலக்குவர்கள், ''அம்மையே, நீ எங்கள் துயரத் தைத் தீர்த்தாய். நீ வாழ்வாயாக'' என்று சவரியை வாழ்த்திஞர்கள். அவ்விருவருக்கும், இருசியமூக மலேக்குச் செல்லும் வழியை விபரமா கச் சவரி எடுத்துரைத்தாள். அதன்பின் அவள் தன் தவத்தின் பயனுக உடம்பைத் துறந்து, முக்தியை அடைந்தாள். அதைக் கண்டு இராம னும் இலக்குவனும் ஆச்சரியப்பட்டார்கள். பிறகு அவள் கூறிய வழி யில் நடந்து சென்று, இறுதியில் பம்பை என்னும் பொய்கையை அடைந்தார்கள்.

கிஷ்கிந்தா காண்டத்தின் கதைச் சுருக்கம்

1. பம்பைப் படலம்

கிஷ்கிந்தா நகரின் பக்கத்திலுள்ள பம்பை என்னும் பொய்கை பளிங்குபோலத் தெளிந்த நீரையும், மலர்களேயும், அன்னங்களேயும் உடையதாய், கடல்போலப் பரந்து விரிந்ததாய், இணையற்ற அழ கோடு விளங்கியது. பொய்கைக் கரையோரம் சென்ற இராமன், அன் னத்தையும், தாமரை முதலியவற்றையும் பார்த்து, சீதையைப் பிரிந்த துயரத்தினுல் பலவாருகப் புலம்பினுன். அப்பொழுது இலக்குவன் அருகில் வந்து, பொய்கையில் நீராடித் திருமாலே வணங்கும்படியாகச் சொல்ல, இராமனும் எழுந்து சென்று நீராடினுன்; திருமாலேத் தொழு தான்; பின்பு முனிவர் கூட்டம் வசிக்கும் ஒரு சோலேயில் வந்து தங்கி ஞன். அப்போது சூரியனும் அஸ்தமித்தான். மாலேப் பொழுது வந்த தும், சீதையின் பிரிவினுல் இராமன் வருந்திச் சோரும் சமயத்தில் வானத்தில் சந்திரன் தோன்றினுன். அவனுடைய கதிர்கள் இராமனேச் சுட்டன. இவ்வாறு இரவு கழிந்து, மறுநாள் பொழுது விடிந்ததும், இராம இலக்குவர்கள் சீதையைத் தேடிப் புறப்பட்டார்கள்.

2. அனுமப் படலம்

சவரி சொல்லியனுப்பிய வழியிலே நடந்து சென்ற இருவரும் இருசியமூக மலேயில் ஏறினுர்கள். இவர்கள் வருவதைக் கண்ட சுக்கிரீ வன், இவ்விருவரும் வாலியின் பக்கம் சேர்ந்தவர்கள் என்றும், ஆகவே தன்னுடைய பகைவர்கள் என்றும் கருதி, தன்னேச் சேர்ந்த

வானர வீரர்களோடு ஒரு குகையினுள் ஓடி ஒளிந்தான். ''வாலியால் ஏவப்பட்டு வரும் இந்த இருவரையும் பார்'' என்று அவன் அனுமானிடம் சொன்னான். அப்போது இராம இலக்குவர்கள் நெருங்கி வந்து கொண்டிருந்தார்கள். அனுமான், பிரம்மச்சாரியின் வடிவத்துடன் இராம இலக்குவர்கள் பக்கமாக வந்து, ஓரிடத்தில் மறைந்து நின்று கொண்டு, அந்த இருவரும் யாராக இருக்கலாம் என்று ஆலோசிக்கலானான்: 'இவர்கள் இருவராக இருப்பதால் மும்மூர்த்திகள் அல்லர். இவர்களுக்கு ஒப்பானவர்கள் யாருமே இல்லை. இவர்களால் சாதிக்க முடியாத காரியமும் கிடையாது. இவர்களின் தன்மையை எப்படிக் கண்டறிவது? இவர்கள் தேவர்களல்லர்; மனிதர்களே. மனம் நொந்து வருகிறார்கள். எதையோ தேடிக்கொண்டும் வருகிறார்கள். இவர்களிடம் கோபம் என்பதே இல்லை. கருணைக்கடலாக இருக்கிறார்கள்......' என்றெல்லாம் எண்ணிய அனுமான், அவ்விருவரையும் நன்றாகக் கவனித்துப் பார்த்தான். ''தருமதேவதைகள் என்பவர்கள் இவர்கள் தானோ? இவர்களைப் பார்த்ததும் என் எலும்புகள் உருகுகின்றன; அன்பு பெருகுகின்றது'' என்று மனத்தினுள் சொல்லிக்கொண்டு, அனுமான் அவர்களுக்கு எதிரே சென்று நல்வரவு கூறினான். ''தீய வழியில் செல்லாதவனே! நீ யார்?'' என்று இராமன் கேட்க, ''நான் வாயுபகவானுக்கும் அஞ்சனைக்கும் புதல்வனாகப் பிறந்தவன்; பெயர், அனுமன் என்பது. இந்த மலையில் வசித்து வரும் சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன். அவன் கட்டளைப்படி உங்களை விசாரிப்பதற்காக நான் வந்தேன்'' என்று அனுமான் மறுமொழி கூறினான். உடனே இராமன் தன் தம்பியைப் பார்த்து, ''இந்தச் சொல்லின் செல்வன் யாரோ? பிரமனோ, இல்லை, சிவபெருமானோ? இவனுடைய உண்மையான வடிவம் இந்தப் பிரம்மச்சாரி வடிவமல்ல. இவன் இந்த உலகத்துக்கெல்லாம் அச்சாணி என்று சொல்லத்தக்கவன். இவனுடைய பெருமையை நான் தெளிவாக உணர்ந்துகொண்டேன். பின்னால், நீயே உண்மையைக் காண்பாய்'' என்றான். பின்பு அனுமானைப் பார்த்து, சுக்கிரீவனுடைய இருப்பிடத்தைக் காட்டுமாறு சொன்னான். ''உங்கள் இருவரையும் யார் என்று எங்கள் தலைவன் சுக்கிரீவனிடம் நான் தெரிவிப்பது?'' என்று அனுமான் கேட்கவும், இலக்குவன், ''இந்த மன்னன் (இராமன்) சூரியகுல வேந்தனாகிய தசரதனுடைய புத்திரன். தனது அரசைத் தம்பிக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்திருக்கிறான். இராமன் என்று பெயர். இந்த வில் வீரனுக்குத் தொண்டு செய்பவன் நான்'' என்றான். பின்பு, இராவணன் சீதையை வஞ்சனையாக அபகரித்துச் சென்ற செய்தியையும் தெரிவித்தான். அதைக் கேட்ட அனுமான் இராமனுடைய காலில் விழுந்து வணங்கினான்; தனது உண்மையான வானரவடிவத்துடன் காட்சியளித்தான்; சுக்கிரீவனை அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றான்.

3. நட்புக்கோள் படலம்

சுக்கிரீவனிடம் சென்ற அனுமான், இராம இலக்குவர்களைப் பற்றியும், அவர்கள் வந்திருக்கும் செய்தியைப் பற்றியும் விவரமாக

எடுத்துக் கூறி, ''அவர்கள் உன்னுடன் நட்புக்கொள்ள வந்திருக்கிறார்கள். ஆகவே உன் பகைவனுகிய வாலிக்கு இன்றே முடிவுகாலம் வந்துவிட்டது. இராமனிடம் நீ புறப்பட்டுவா'' என்று கூறி சுக்கிரீவனை அழைத்துக்கொண்டு வந்தான். இராமனும் சுக்கிரீவனும் சந்தித்தமாத்திரத்தில் பரஸ்பரம் ஒருவனுடைய பெருமையை மற்ருெருவன் உணர்ந்து நட்புக்கொண்டார்கள். சவரி கூறியபிரகாரம் அந்த மலைக்கு வந்ததாகவும், தங்கள் துயரம் அவனால் தீரும் என்று கருதி வந்திருப்பதாகவும் இராமன் சொன்னான். சுக்கிரீவன் அவன் காலில் விழுந்து வணங்கினான். இராமனும் அவனுக்கு அபயம் அளித்து, ''உன் பகைவர்கள் எனக்கும் பகைவர்கள்; உன்னுடைய உறவினர் எனக்கும் உறவினர்; நீ என் உயிர்த் துணைவன்'' என்று சொல்லவே, வானரர்கள் அனைவரும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். சுக்கிரீவனுடைய இருப்பிடத்துக்கு வரும்படியாக இராமனை அனுமான் அழைத்தான். அவ்வண்ணமே இராமனும் சுக்கிரீவனும் மற்றவர்களும் ஒரு பூஞ்சோலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இராமன் நீராடி காய் கனிகளை உண்டான். பிறகு சுக்கிரீவனைப் பார்த்து, ''நீயும் உன் மனைவியைப் பிரிந்திருக்கிருயோ'' என்று இராமன் கேட்டான். உடனே அனுமான் எழுந்து நின்று இராமனைக் கைகூப்பி வணங்கி, வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் உள்ள பகைமைபற்றிப் பின்வருமாறு கூறினான்:

''சிவபெருமானுடைய அருள்பெற்ற வாலி என்ற ஒருவன் இருக்கிருன். அவன் வரம்பில்லாத ஆற்றல் படைத்தவன். இதோ நிற்கும் சுக்கிரீவனுக்கு முன் பிறந்தவன். வாலி எங்களுக்கு அரசனாக இருந்து ஆட்சி புரியும் காலத்தில் குலப்பகைவனான மாயாவி என்பவன் வந்து வாலியை எதிர்த்துப் போரிட்டான். ஆனால் வாலியின் பலத்துக்கு முன் நிற்கமுடியாமல் மாயாவி பயந்து ஓடி ஒரு குகைக்குள் புகுந்தான். வாலியும் தன் தம்பி சுக்கிரீவனைக் குகை வாசலில் காவலாக நிறுத்திவிட்டு, மாயாவியைத் துரத்திக்கொண்டு உள்ளே சென்றான். சென்றவன் இருபத்தெட்டு மாதகாலம் ஆகியும் திரும்பிவராததைக் கண்டு மனம் வருந்தி, தானும் குகைக்குள் சென்று தமையனைத் தேடப்போவதாகவும், தமையனைக் கொன்றவனைத் தன்னால் கொல்ல முடியாவிட்டால் தன் உயிரை விட்டுவிடப் போவதாகவும் சொல்லிக்கொண்டு சுக்கிரீவன் புறப்பட்டான். மந்திரிகள் முதலியவர்கள் இவனைத் தடுத்து, அரசாட்சியை ஏற்கும்படி கேட்டுக்கொள்ளவே இவனும் சம்மதித்தான். மாயாவி குகையின் வழியே திரும்பி வரக்கூடும் என்று கருதிய நாங்கள், பெரிய மலைகளையெல்லாம் எடுத்து அடுக்கிக் குகையின் வாசலை மூடிவிட்டோம். நாங்கள் சுக்கிரீவனை அழைத்துக்கொண்டு கிஷ்கிந்த மலைக்கு வந்து வாழ்ந்து வரும் காலத்தில், குகையினுள் சென்ற வாலி மாயாவியைக் கொன்றுவிட்டுத் திரும்பிவந்து குகை வாசலின் உட்புறத்தில் நின்று சுக்கிரீவனை அழைத்தான். யாதொரு மறுமொழியும் வராதுபோகவே மலைகளைக் காலால் எற்றித் தள்ளிவிட்டு, வெளியே வந்து மலையில் ஏறினான். அவன் வருவதை அறிந்த சுக்கிரீவன் எதிரே சென்று வணங்கி, ''அண்ணனே! உன்னைத் தேடிப் புறப்பட்ட என்னை உன்னுடைய மந்திரி பிரதானிக

ளாகிய வானரர்கள் தடுத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்படி வற்புறுத்தினார்கள். அவர்களுடைய கட்டளையை மறுக்காமல் அரசு செலுத்திவந்த என் குற்றத்தைப் பொறுப்பாயாக'' என்று கூறினான். ஆனால் வாலியோ மிகுந்த கோபத்துடன் சுக்கிரீவனைக் குத்தித் துன்பம் செய்தான். பயந்து ஓடிய சுக்கிரீவனைத் துரத்திக்கொண்டு சென்றான். உலகத்தின் எல்லையையும் கடந்து துரத்திய வாலி, சுக்கிரீவனைக் கையால் தாக்குவதற்காக எடுத்துக்கொண்டு மேலே எழும்பும் சமயத்தில், இவன் தப்பிப் பிழைத்து இந்த மலைக்கு ஓடிவந்து வசிக்கிறான். மதங்க முனிவன் இட்ட ஒரு சாபத்திற்குப் பயந்து வாலி இந்த மலைக்கு வராமல், சுக்கிரீவனுடைய மனைவியாகிய உருமை என்பவளையும் அபகரித்துக்கொண்டு வாழ்கிறான். இளவரசுப் பதவியையும் மனைவியையும் இழந்த சுக்கிரீவன் இங்கே வசிக்கிறான்.''

அனுமான் கூறிய இந்த வரலாற்றைக் கேட்ட இராமனுக்குக் கோபத்தினால் உதடுகள் துடித்தன; கண்கள் சிவந்தன. தம்பியின் மனைவியை வாலி அபகரித்துக்கொண்டான் என்பதை இராமனால் பொறுக்கமுடியவில்லை. ஆகவே, ''பதினான்கு உலகங்களும் வாலிக்கு உதவியாக வந்தாலும் நான் அவனைக் கொன்று, அரசாட்சியையும் உன் மனைவியையும் உனக்குத் தருகிறேன். அவன் இருக்கும் இடத்தைக் காட்டு'' என்று இராமன் சொன்னான். இதைக் கேட்ட சுக்கிரீவன் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தான். பின்பு இராமனைப் பார்த்து, ''வானரர்களாகிய நாங்கள் தனியாகப் போய் ஆலோசிக்கவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது'' என்று சொல்லிவிட்டு, அனுமானோடும் தன்னுடைய மந்திரிகளோடும் சென்று ஒரு தனியிடத்தில் அமர்ந்தான். அப்போது அனுமான், சுக்கிரீவனிடம், ''நீ உள்ளத்தில் எண்ணியிருப்பதை நான் உணர்ந்துகொண்டேன். வாலியைக் கொல்லும் ஆற்றல் இராம இலக்குவர்களுக்கு உண்டோ என்று நீ சந்தேகிக்கிறாய். திருமாலே இராமனாக அவதாரம் செய்திருக்கிறான். அவனுடைய கைகளில் சங்கு சக்கரங்களின் அடையாளங்களும் இருக்கின்றன. இராமனுடைய ஆற்றலை நீ அறிய விரும்பினால் அதற்கு ஓர் உபாயமும் இருக்கிறது. இராமனைப் பிரம்மாண்டமான ஏழு மராமரங்களிலும் அம்பை எய்து துளைக்கும்படி செய்து பார்க்கலாம்'' என்றான். சுக்கிரீவனும் அதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து, இராமனிடம் சென்று, அவனை அழைத்துக்கொண்டு மராமரங்கள் இருக்கும் இடத்துக்குச் சென்று, ''இந்த ஏழு மரங்களிலும் உன்னுடைய அம்பினால் துளைத்தால், என் துயர் நீங்கும்'' என்றான். இதைக் கேட்ட இராமன் புன்முறுவல் செய்து, வில்லில் நாண் ஏற்றிக்கொண்டு, மரங்களின் பக்கம் சென்றான்.

4. மராமரப் படலம்

விண்ணுக்கும் மண்ணுக்குமாக வளர்ந்திருந்த மராமரங்களை நோக்கி, இராமன் ஓர் அம்பை எய்தான். அந்த அம்பு ஏழு மராமரங்களையும், ஏழு கீழ் உலகங்களையும் துளைத்துக்கொண்டு திரும்பி வந்தது. உடனே இராமனுடைய கால்களில் விழுந்து வணங்கிய சுக்கி

ரீவன், ''நாயேனுக்கு வாழ்வளித்த தெய்வமாகிய நீ இருக்கும்போது எனக்கு இனி எதுவுமே அரிய காரியமல்ல'' என்றான். அப்போது வான ரர்கள் அனைவரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். பிறகு இராமன், இருசிய மூகமலையின்மேல் மற்றொரு மலை கிடந்ததுபோலக் காட்சியளித்த துந்துபி என்ற அரக்கனுடைய எலும்புக் குவியலைப் பார்த்தான். ''இது என்ன? எமனுடைய வாகனமாகிய எருமைக்கடாவா? திசையானை களில் ஒன்று செத்துக்கிடக்கிறதா? மிகப் பெரிய கடல் மீன் உலர்ந்து கிடக்கிறதா?'' என்று சுக்கிரீவனைக் கேட்டான்.

5. துந்துபிப் படலம்

சுக்கிரீவன் பின்வருமாறு கூறலானான் :

''எருமைக்கடாவின் வடிவம்கொண்ட துந்துபி என்ற அரக்கன் திருமாலோடு போர் செய்வதற்குப் பாற்கடலுக்குச் சென்றான். 'உன் னுடைய மாபெரும் பலத்துக்கு ஏற்றவன் சிவபெருமான் ஒருவனே. ஆகவே நீ அவனிடம் சென்று போர் செய்வாயாக' என்று திருமால் சொல்ல, அரக்கனும் வேகமாகப் புறப்பட்டுச் சென்று தன் கொம்புக ளால் கயிலை மலையை முட்டினான். 'உன் குறை என்ன?' என்று சிவன் கேட்டான். 'என்னோடு முடிவில்லாத கொடும் போர் செய்ய நீ வர வேண்டும்' என்றான் துந்துபி. அதற்குச் சிவன், 'உன்னோடு போர் செய்ய என்னால் முடியுமோ? நீ தேவர்களிடம் செல்' என்றான். அவ னும் அவர்களிடம் சென்றான். ஆனால் இந்திரன், வாலியிடம் போகு மாறு சொல்லித் துந்துபியை அனுப்பினான். அரக்கனும் மகிழ்ச்சி யோடு வந்து வாலியைப் போருக்கு அழைத்தான். இருவரும் போரில் இறங்கினர். பயங்கரமான அந்தப் போர் பன்னிரண்டு மாதகாலம் நடந்தது. முடிவில் துந்துபியின் கொம்புகளைப் பிடுங்கி, அந்தக் கொம்புகளாலேயே அவனை வாலி அடித்தான். அவன் தலைமேல் இடி இடித்ததுபோலக் குத்தினான். பிறகு, அவனை வாலி கையால் எடுத்து எறிய, அவன் உயிர் மேலே சென்றது; உடம்பு கீழே வந்து விழுந்தது. இந்த மலையில் மதங்கமுனிவனின் ஆஸ்ரமத்தில் துந்துபி யின் பிணம் விழவே, முனிவன் கோபம் கொண்டு, பிணத்தை இவ் வாறு எறிந்த வாலி இங்கே வந்தால் அவன் தலை வெடித்துச் சாகக் கடவான் என்றும், அவனைச் சேர்ந்தவர்கள் வந்தால் கல்லாகக் கட வார்கள் என்றும் சபித்தான். அந்தச் சாபம்தான் இப்போது இங்கே என்னைப் பாதுகாத்து உதவுகிறது.''

இவ்வரலாற்றைக் கேட்ட இராமன், இலக்குவனுடைய அரிய ஆற்றலை சுக்கிரீவன் முதலிய வானர வீரர்களுக்குக் காண்பிப்பதற் காக, துந்துபியின் எலும்புக் குவியலை அப்பால் தள்ளும்படி தம்பி யிடம் சொன்னான். இலக்குவன் கால் விரலால் தள்ளியமாத்திரத்தில், எலும்புக்குவியல் பிரமலோகம்வரை மேலே சென்று திரும்பி வந்து விழுந்தது. இதைக் கண்ட வானரர்கள் இடி முழக்கம்போலச் சந் தோஷ ஆரவாரம் செய்தார்கள். அப்போது சுக்கிரீவன், ''நான்

சொல்லவேண்டிய விஷயம் ஒன்று இருக்கிறது'' என்று இராமனிடம் தெரிவித்துவிட்டுப் பின்வருமாறு கூறினான்:

6. கலன்காண் படலம்

''உன் தேவியை (சீதையை) இராவணன் இவ்வழியாக ஆகாய மார்க்கத்தில் தூக்கிச் சென்றபோது, அவள் துன்பத்தோடு அழுது, தன்னுடைய ஆபரணங்களை ஒரு முடிப்பாகக் கட்டிக் கீழே போட்டாள். தன்னுடைய செய்தியை அந்த ஆபரணங்கள் மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் என்று எண்ணியோ என்னவோ, அந்த முடிப்பை அவள் போட, நாங்கள் அதைக் கைகளில் ஏந்திப்பிடித்துக்கொண்டு, பத்திரமாக வைத்திருக்கிறோம்.''

இவ்வாறு சொல்லிவிட்டுச் சுக்கிரீவன் ஆபரண முடிப்பைக் கொண்டுவந்து இராமன் கையில் கொடுத்தான். சீதையின் ஆபரணங்களைக் கவனித்துப் பார்த்த இராமனுக்கு, அவளுடைய ஒவ்வொரு உறுப்பிலும் அணியும் அணிகலன், அந்தந்த உறுப்பாகவே தோற்றம் அளித்ததுபோல் இருந்தது. அந்தச் சமயத்தில் அவன் கண்களில் வெள்ளமாக நீர் பெருகி வழிந்தது. உடம்பு சிலிர்த்தது; தோள்கள் வேர்த்தன. மனம்வேதனையால் தத்தளித்தது. மூச்சுப்பேச்சற்று அவன் மூர்ச்சித்து விழவே, சுக்கிரீவன் அவனைத் தாங்கிப் பிடித்து உட்கார வைத்து, ''இராவணனுடைய இருபது கைகளும், பத்துத் தலைகளும் உன்னுடைய ஓர் அம்புக்குமுன் எம்மாத்திரம்? நீ இங்கேயே இரு. நான் போய் அந்த அரக்கனின் கழுத்தைத் திருகிச் சீதையை இங்கே கொண்டு வந்து சேர்க்கிறேன்'' என்றெல்லாம் கூறித் தேற்றினான். இராமனும் மூர்ச்சை தெளிந்து, ''என் மனைவியைப் பகைவன் அபகரித்துச் செல்ல, நான் நாணமின்றி வில்லையும் அம்பையும் ஏந்திக்கொண்டிருக்கிறேன்'' என்று சொல்லித் துயரத்தினால் சோர்ந்தான். எனினும் சுக்கிரீவனுடைய வார்த்தைகளால் துன்பக் கடலைக் கடந்து கரை சேர்ந்தான். ''உன் ஆறுதல் மொழிகளால் என் துயரத்தை ஆற்றினேன். எனக்கு ஏற்பட்ட இந்தப் பழி தீர, நான் உயிரைத் துறப்பேன். ஆனால் உன்னுடைய குறையை நிறைவேற்றாமல் நான் மாயமாட்டேன்'' என்று இராமன் சொன்னான். அப்பொழுது அனுமான், ''முதலில் வாலியைக் கொன்று, சுக்கிரீவனை அரசனாக்கி, வானரப்படையைத் திரட்டிக் கொள்ளவேண்டும். அந்தப் படையை அனுப்பாமல் அரக்கர்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது அரிது. எங்களுடைய எழுபது வெள்ளம் சேனையும் உலகம் முழுவதையுமே போர்த்துவிடக்கூடியது'' என்றான். அதுவே சிறந்த யோசனை என்று இராமனும் சொன்னான். உடனே எல்லோரும் வாலியின் இருப்பிடத்தை நோக்கி மலைப்பாதையில் நடந்து சென்றார்கள்.

7. வாலிவதைப் படலம்

வாலி வசிக்கின்ற கிஷ்கிந்த மலைக்கு எல்லோரும் வந்து சேர்ந்ததும், சுக்கிரீவனை நோக்கி, ''நீ வாலியைப் போருக்கு அழைத்து, அவனு

டன் போர் செய்யும்போது, நான் அவன்மீது அம்பு எய்யத் தீர்மானித்திருக்கிறேன்'' என்று இராமன் சொன்னான். அந்த வார்த்தையைக் கேட்டுச் சுக்கிரீவன் சந்தோஷ ஆரவாரம் செய்தான். பின்பு கிஷ்கிந்தா புரிக்குச் சென்று, ''என்னை எதிர்த்துப் போர் செய்ய வந்தால் நான் கொல்வேன்'' என்று கூறித் தோள் தட்டினான். அந்த முழக்கம், தூங்கிக்கொண்டிருந்த வாலியின் காதில் விழுந்தது. சுக்கிரீவனுடைய ஆர்ப்பாட்டத்தைக்கேட்டதும் வாலி சிரித்தான். அந்தச்சிரிப்பொலியே பதினான்கு உலகங்களையும் நிலைகுலையச் செய்தது. மிகுந்த கோபத்துடன் வாலி எழுந்து கண்களில் தீப்பறக்க இரண்டு கைகளையும் தட்டினான். அப்பொழுது அவனை அவனுடைய மனைவி தாரை தடுத்து நிறுத்தி, ''முன்னால் உன்னிடம் தோற்ற சுக்கிரீவன் இன்று போர் செய்ய வந்ததற்குக் காரணம் அவனுக்கு ஆற்றல் மிக்க துணைவர்கள் கிடைத்திருப்பது தான்'' என்றாள். வாலியோ, ''என் பெயரைச் சொன்னமாத்திரத்தில் எமன்கூட நடுங்குவான். அப்படியிருக்க, சுக்கிரீவனுக்காகப் பரிந்து கொண்டு என்னை யார் வந்து எதிர்ப்பார்கள்? நீ துயரத்தை விட்டொழிப்பாயாக'' என்றான். மீண்டும் தாரை, ''சுக்கிரீவனுடன் இராமன் நட்புக்கொண்டு, உன் உயிரைப் பறிப்பதற்காக அவனோடு வந்திருப்பதாக நமக்கு மிகவும் வேண்டியவர்கள் சொன்னார்கள்'' என்று கூறியதைக் கேட்டு, ''உலகத்துக்குத் தரும மார்க்கத்தையெல்லாம் எடுத்துக்காட்டியவனை இராமனைப்பற்றிப் பெண்புத்தியின் காரணமாக நீ இவ்வாறு சொல்லிவிட்டாய். இந்தக் காரியம் செய்வது இராமனுக்கு ஒரு பெருமையா? இதனால் அவனுக்கு ஏதேனும் லாபம் உண்டா? தருமத்தைத் தருமமே ஒழித்துவிடுமா? உலகமே எதிர்த்தாலும் அவன் தனது வில்லால் வெற்றிபெறமுடியும். அவன் கேவலம் சுக்கிரீவனாகிய குரங்குடன் நட்புக்கொள்ளுவானா? மேலும் நானும் என் தம்பியும் எதிர்த்துப் போர் செய்யும்போது அவன் மறைவில் நின்று அம்பு எய்வானா? அவன் கருணைக் கடல் அல்லவா? நீ பேசாமல் இங்கேயே இரு. நான் போய் சுக்கிரீவனுடைய உயிரைப் பருகி, அவனுக்குத் துணையாக வந்தவர்களையும் மனம் கலங்கச் செய்துவிட்டுத் திரும்பி வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வாலி மலையில் ஏறி வந்தான். ஆரவாரம் செய்யும் சுக்கிரீவனைப் பார்த்துத் தானும் ஆரவாரம் செய்தான். அப்போது இலக்குவன், இராமனைப் பார்த்து, ''சுக்கிரீவன் தன் தமையனைக் கொல்வதற்கு உன்னைத் துணையாக அழைத்துக் கொண்டு வந்திருக்கிறான். தர்மநெறிக்கு மாறுபட்டு இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யத் துணிந்தவனுடைய துணையை எப்படி நம்புவது?'' என்று கேட்டான். அதற்கு இராமன் ''குரங்குகளின் ஒழுக்கத்தைப்பற்றி இப்படிப் பேசலாமா? எல்லாத் தாய்மாரிடத்தும் பிறந்த தம்பிமார் எல்லோரும் தமையனிடம் அன்போடு இருந்துவிட்டால், பரதன் உத்தமனாக விளங்க முடியுமா? நமக்குக் கிடைத்தவர்களிடம், அவர்களால் பெறும் பயனைப் பெறுவதே இயல்பான காரியம். மற்றப்படி, குற்றமில்லாதவர்கள் என்று கூறுவதற்கு உரியவர்கள் யார்?'' என்றான். இப்படி இவ்விருவரும் பேசிக்கொண்டிருந்தபோது திசையானைகள் இரண்டு போரிட்டதுபோலவும்,

மலையோடு மலை மோதியதுபோலவும் வாலியும் சுக்கிரீவனும் போரிட்டனர். அப்போது அவர்களுடைய கண்களிலிருந்து புறப்பட்ட தீயினால் மேகங்களும் மலைகளும்கூட எரிந்தன. தேவர்களும் பயந்து ஓடி ஒளிந்தார்கள். யானையைச் சிங்கம் கொல்லுவதைப்போல, வாலி தன் நகங்களாலும் கைகளாலும் இறுகப்பற்றிப் போரிடும்போது, சுக்கிரீவன் இளைத்துப்போய் இராமனிடம் சென்று வாட்டத்துடன் வணங்க, இராமன், ''நீ மன உறுதியை விட்டுவிடவேண்டாம். போரிடும்போது உங்கள் இருவருக்குமிடையே வித்தியாசம் தெரியாமல் இருந்தது. அடையாளத்துக்காக நீ ஒரு பூவைச் சூடிக்கொண்டு போய்ப் போர் செய்'' என்று சொல்லிப் பூவையும் சூட்டி அனுப்பினான். சுக்கிரீவன் திரும்பவும் வந்து போரிட்டான். வாலி கோபத்துடன் அவனைப் பார்த்து இலேசாகச் சிரித்துக்கொண்டு, அவனுடைய உயிர்த்தலங்களில் கையாலும் காலாலும் அடித்து உதைத்தான். சுக்கிரீவனின் காதுகளும் கண்களும் ரத்தம் கக்கின. அப்போது அவன் இராமன் இருக்கும் திசையைத் திரும்பிப் பார்த்தான். வாலியோ அவனைப் தூக்கித் தரையில் மோத நினைத்து, அவனுடைய இடுப்பையும் கழுத்தையும் கைகளால் பிடித்து மேலே எடுத்தபோது, இராமன் வாலிமீது ஓர் அம்பை எய்தான். அது வாலியின் மார்பில் பாயவே, அவன் மேரு மலை சாய்ந்ததைப்போலக் கீழே விழுந்தான். ராமபாணம் தனது உடம்பைத் துளைத்து மறுபுறம் சென்றுவிடாமல் இறுகப் பிடித்துக்கொண்டான். ''இந்த அம்பை எய்தவன் யார்?'' என்று யோசித்தான். மிகுந்த சிரமத்தின்பேரில் அந்த அம்பைப் பிடுங்கிவிட்டான். அப்போது அவன் மார்பிலிருந்து பாய்ந்த ரத்தத்தைக் கண்ட சுக்கிரீவனும், உடன் பிறப்பு என்ற பாசத்தினால் கண்ணீர்விட்டான். அம்பில் யாருடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்று பார்த்தான் வாலி. ''இராமன்'' என்னும் பெயரைக் கண்டான். ''எங்களைப் போன்றவர்களுக்காகத் தருமத்தைக் கைவிட்ட இராமன் பிறந்ததால், சூரிய குலமும் தருமத்தைக் கைவிட்டுவிட்டது'' என்று சொல்லிச் சிரித்தான்; வெட்கினான். 'இப்படி மறைந்து நின்று அம்பு எய்வதும் ஓர் உயர்ந்த தருமமோ?' என்று மனத்தில் எண்ணினான். அப்போது இராமன் எதிரே வந்தான். அவனைப் பார்த்த வாலி, ''என்ன காரியத்தைச் செய்துவிட்டாய்?'' என்று கூறிப் பழித்தான். மேலும் அவன் சொன்னான்: ''உண்மைக்காக உயிர் துறந்த தசரதனின் புத்திரனே! நீ பரதனுக்குத் தமையனாகப் பிறந்தாயே! மற்றவர்கள் தீமை செய்யாதபடி தடுத்து, தான் செய்தால் அது தீமையாகமாட்டாதோ? உன் குலத்தில் பிறந்தவர்களுக்கு ராஜதருமம் என்பது உடைமையாக இருந்துவந்ததல்லவா? சனகனின் மகளைப் பிரிந்ததனால் உன் செய்கை தடுமாறிவிட்டதுபோலும்! அரக்கர்கள் ஓர் அக்கிரமத்தைச் செய்துவிட்டுப் போனால், அதற்காக வானரத் தலைவன் ஒருவனைக் கொல்ல வேண்டுமென்று மனு தர்மம் கூறியிருக்கிறதா? நீ செய்த காரியம் வீரம் அன்று. சத்தியத்தின்பால் பட்டதும் அன்று. நீ வாலியை அழிக்கவில்லை. ராஜ தருமத்தின் வேலியையே அழித்துவிட்டாய்.''

பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டு, கனல் பறக்கும் கண்க

ளோடு வாலி இவ்வாறு கூறினன். அதற்கு இராமன் கூறிய மறுமொழி பின்வருமாறு:

"நீ குகைக்குள்ளே சென்று நெடு நாட்களாகியும் திரும்பி வராததைக் கண்டு, படை வீரர்களும் பெரியவர்களும் சேர்ந்து கேட்டுக் கொண்டதன்பேரில் சுக்கிரீவன் அரச பதவியை ஏற்ருன். நீ திரும்பிவந்ததும், அவன் மகிழ்ச்சியோடு வந்து உன்னை வணங்கினன். அப்படியிருந்தும் நீ அவனைக் கொல்ல முயன்ருய். உன்னிடம் அவன் அடைக்கலம் புகுந்தும்கூட உன் கோபத்தை நீ விடவில்லை. அவனைக் கொல்வதற்காக நீ துரத்திக்கொண்டு சென்ருய். தம்பி என்றுகூட நீ பார்க்கவில்லை. கடைசியில் அவன் இருசியமூக மலைக்குச் சென்றபின், நீ சாபத்துக்குப் பயந்து அங்கே போகவில்லை. அவனுடைய மனைவியை நீ அபகரித்துக்கொண்டாய். இந்தக் காரணங்களாலும், சுக்கிரீவன் எனக்கு ஆருயிர் நண்பன் என்பதனுலும் உன்னை நான் கொல்லத் துணிந்தேன். ஏழை எளியவர்களின் துன்பத்தைத் தீர்ப்பதே என் உள்ளக் கருத்தாகும்."

இதைக் கேட்டு வாலி கூறியதாவது :

"ஐயனே, குரங்குகளாகிய எங்களுக்குக் கல்யாணம் என்ற நியமம் எதையும் பிரமன் உண்டுபண்ணவில்லை. மனம்போன வழியிலெல்லாம் செல்லுவதுதான் எங்கள் ஒழுக்கம். அதனல் (சுக்கிரீவனுடைய மனைவியை நான் சொந்தமாக்கிக் கொண்டதனல்) குற்றம் செய்தவனுக மாட்டேன்."

வாலி சொன்ன இந்த நியாயத்தை இராமன் ஏற்றுக்கொள்ளவில்லை. தகுந்தது இது, தகாதது இது என்று பிரித்து அறியவில்லை என்ருல் மக்களும் மிருகங்களாகிவிடுகிருர்கள் என்றும், பிரித்து அறிந்தால் மிருகங்களும் மனிதர்களாகிவிடுகின்றன என்றும் கூறி, கஜேந்திரனையும், சடாயுவையும் இராமன் உதாரணங்களாக எடுத்துக் காட்டினன். பிறகு, "தான் செய்யும் காரியத்தினுல் உண்டாகும் உயர்வு தாழ்வுகளை அறிந்திருந்தும் நீ மற்ருெருவனுடைய மனைவியை அபகரித்தாய்" என்று இராமன் கூறவே, வாலி, "அப்படியானுல், நீ மறைந்திருந்து என்மீது அம்பு எய்த காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்கு இலக்குவன் கூறியதாவது: "முன்னுல் உன் தம்பி சுக்கிரீவன் வந்து சரண்புகுந்தபோது, உன்னைக் கொல்வதாக இராமன் வாக்குக்கொடுத்துவிட்டான். நீயும் உயிராசை கொண்டு அடைக்கலம் புகுந்துவிடக்கூடும் என்று கருதியே, (சுக்கிரீவனுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பதற்காக) உன்மீது மறைந்து நின்று அம்பு எய்தான்."

இதைக் கேட்ட வாலி, இராமன் ஒருபோதும் தரும நெறியினின்றும் தவறமாட்டான் என்று எண்ணி, அவனை வணங்கி, "நாயைப் போன்ற எங்களிடம் நேர்மையைக் காணமுடியுமோ? என் குற்றங்களைப் பொறுத்தருளுவாயாக" என்று கேட்டுக்கொண்டான். உயிர் போகும் தருணத்தில் தனக்கு அறிவு தந்ததாகக் கூறி இராமனைப் போற்றினன். மேலும் வாலி கூறியதாவது :

"தரும சொரூபியான உன்னைக் கண்ட என் பழவினைகளுக்கு நீ

கொடுத்த தண்டனையே எனக்கு பரமபதத்தைக் கொடுக்கக்கூடிய தாகும். என் தம்பி வெற்றரசை அடைந்து, எனக்கு மோட்ச சாம் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டான். இதைவிட வேறு உதவியை இனிச் செய்யமுடியுமா? உன்னை நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென் ருல், என் தம்பி கள்ளைக் குடித்துப் புத்தி இழந்து இருக்கும்போதும் தீய காரியம் செய்யும்போதும் அவன்மீது அம்பை எய்துவிடாதே. சுக்கிரீவன் வேருெருவனை அழைத்துக்கொண்டுவந்து தன் அண்ணனைக் கொல்வித்தவன் என்று உன் தம்பிமார் இகழ்ந்தால் நீ தடுக்கவேண் டும். இராவணனை வாலில் கட்டிக்கொண்டு வந்து உன்னிடம் ஒப்ப டைக்கும் பாக்கியம் எனக்கு இல்லாமல் போய்விட்டது. அதைப்பற்றி இனிப் பேசிப் பயனில்லை. ஆனுல் அனுமான் இந்தக் காரியத்தையும் சரி, வேறு எந்தக் காரியத்தையும் சரி, செய்து முடிக்கக்கூடிய ஆற்றல் படைத்தவன். அனுமானை உன்னுடைய வில்லுக்குச் சமானமாகவும், சுக்கிரீவனை உன் தம்பியாகவும் நீ நினைக்கவேண்டும். இவர்களைப் போன்ற துணைவர்கள் வேறு யாரும் இல்லை. ஆகவே, சீதையைத் தேடி அடைவாயாக.''

இவ்வாறு வாலி கூறிவிட்டு, சுக்கிரீவனைக் கட்டித் தழுவினுன். இராமனிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறையை அவனுக்கு எடுத்துக் கூறினுன். அவனுக்குப் பற்பல நீதிகளையும் உணர்த்தி, இரா மனிடத்தில் அடைக்கலமாக ஒப்பித்துவிட்டு, அங்கதனை வரவழைத் தான். தந்தையைக் கண்டதும் அவன்மீது விழுந்து அங்கதன் அழு தான். "நீ வருந்தவேண்டாம். யான் செய்த தவத்தின் பயனுக இரா மன் வந்து எனக்கு முக்தியை அளித்தான். போரில் நீ அவனுக்குத் துணையாக இருந்து, அவன் பாதங்களை வணங்கி வாழ்வாயாக'' என்று வாலி உபதேசம் செய்து, தன் மகனையும் இராமனிடம் அடைக்கல மாக ஒப்படைத்தான். இராமன் தன் வாளை எடுத்து அங்கதனுக்குக் கொடுத்தான். வாலியும் உயிர் துறந்து முக்தியை அடைந்தான். அப் போது அவன் கை நெகிழவே, அதுவரையிலும் கையில் பற்றியிருந்த இராமபாணம் அவன் மார்பில் தங்காது மறுபுறம் உருவிச் சென்று புண்ணிய நீர்க்கடல்களில் நீராடி இராமனுடைய அம்பருத்தூணிக் குத் திரும்பவும் வந்து சேர்ந்தது.

8. அரசியல் படலம்

வாலி விண்ணுலகை அடைந்தான். இராமன் சுக்கிரீவனேடும், அங்கதனேடும் அப்பால் செல்லலானுன். வாலி இறந்த செய்தி கேட்டு அவன் மனைவி தாரை ஓடி வந்து அவன்மீது விழுந்து பலவாறு கப் புலம்பி அழுதாள். அப்போது அனுமான் அங்கு வந்து, தாரையை அவளது அந்தப்புரத்துக்கு அனுப்பிவிட்டு, வாலிக்குச் செய்யவேண் டிய அந்திமக்கிரியைகளை அங்கதனைக்கொண்டு செய்வித்து, நடந்த செய்திகளை இராமனிடம் போய்த் தெரிவித்தான். அப்போது சூரியன் அஸ்தமித்தான். இரவில் இராமன் சீதையை நினைத்து வருந்தினுன். மறுநாள் சூரியோதயமானபிறகு, இராமனின் கட்டளைப்படி சுக்கிரீவ னுக்கு இலக்குவன் முடி சூட்டினுன். அரசபதவியை அடைந்த சுக்கிரீ

வன் இராமனைத் தொழுதபோது, இராமன் அவனுக்கு அநேக நீதி களை எடுத்துக் கூறினான். இராமனைக் கிஷ்கிந்தா நகரில் வசிக்கும்படி சுக்கிரீவன் கேட்டுக்கொண்டதற்கு இராமன் இசையவில்லை. பதினான்கு வருஷகாலமும் தான் காட்டிலேயே இருக்கப்போவதாகவும், சீதையை விட்டுப் பிரிந்து நகரத்தில் வந்து வசிப்பதால் அடையக் கூடிய இன்பம் எதுவும் இல்லை என்றும் இராமன் கூறி, நான்கு மாதங் கள் கழிந்ததும் படையோடு தன்னிடம் வரும்படியாகச் சுக்கிரீவனுக் குக் கட்டளையிட்டான். அதற்கு இணங்கிய சுக்கிரீவன் கிஷ்கிந்தா நகரத்துக்குத் திரும்பிச் சென்றான். அங்கதனும் விடை பெற்றுச் சென்றான். அனுமான் இராமனோடு இருந்து பணிவிடை செய்ய விரும்பினான். ஆனால், அவன் சுக்கிரீவனுடைய ராஜ்யபரிபாலனத்தில் உதவியாக இருக்கவேண்டுமென்று கூறி இராமன் அனுப்பிவிட்டான். அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டு அனுமான் செல்லவே, இராம இலக் குவர்கள் வேறொரு மலைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கிருந்து இருசியமூக மலைக்குப்போய், இலக்குவனால் அமைக்கப்பட்ட பர்ண சாலையில் இராமன் வசிக்கலானான். அப்பொழுது......

9. கார்காலப் படலம்

கார்காலம் வந்தது. வானம் இருண்டு மழை பெய்து, கார்காலப் பூக்களெல்லாம் மலர்ந்தன. பட்ட மரங்கள் தளிர்த்தன. வண்டுகள் ரீங்காரம் செய்ய, மயில்கள் ஆடின. அன்னப்பறவை தண்ணீரில் விளை யாடின. சீதையின் திருமுகத்தைக் காணாமல் இராமன் உணர்வழிந்து துயரக் கடலுக்குக் கரைகாண முடியாமல் தத்தளித்தான். மேகம், மயில், பூங்கொடி, மான், கொன்றை முதலியவற்றைப் பார்த்துப் புலம்பினான். தன்னைத் துயர் செய்யும் மன்மதனைப் பழித்தான். இலக் குவன் தேறுதல் கூறினான். ''கார்காலம் நீண்டுகொண்டு போவதைக் கண்டு மனம் தளர்கிறாயா? அரக்கனின் வீரத்தைக் கண்டு, அல்லது சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு சுக்கிரீவனுடைய வானரப் படை வராததைக்கண்டு தளர்கிறாயா? அரக்கர்களை ஒழிப்பதாக வாக் குறுதி கொடுத்த நீ உணர்வு அழிவது சரியா? நீ முயன்றால் உன்னால் ஆகாத காரியம் ஒன்று உண்டா? வெற்றி உனதேயன்றோ?'' என்றெல் லாம் இலக்குவன் கூற, இராமன் சிறிது தேறினான். ஆனாலும் மழைக் காலம் நீண்டுகொண்டே போக, இராமன் சீதையை எண்ணி வருந் தியவண்ணமாகவே இருந்தான். மீண்டும் இலக்குவன் தேற்றினான். கடைசியில் மழைக்காலம் முடிந்து, மேகங்கள் வெளுத்து, சரத்காலம் தொடங்கியது.

10. கிஷ்கிந்தைப் படலம்

சரத்காலம் முடிவடையும்போது, சுக்கிரீவன் முன்பு வாக்களித்த படி நான்கு மாதங்கள் கழிந்ததும் படைகளோடு வராததைக் கண்ட இராமன், தம்பியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்: ''சுக்கிரீ வன் குறித்தகாலமாகிய இப்போது இங்கு வரவில்லை. அரச பதவி

கிடைத்ததும், நாம் செய்த உதவியையும், கைம்மாறு செய்யும் தரு மத்தையும் அவன் மறந்துவிட்டான். நன்றி மறந்து, சத்தியத்தினின் றும் தவறியவனைக் கொல்லுவதுகூடக் குற்றமல்ல. நீ இப்போது சென்று அவனுடைய மன நிலையைக் கண்டறிந்து வா. அவன் வராமல் போனால் வானர சாதி பூண்டோடு அழிந்துவிடும் என்பதையும் அவ னிடம் கூறு. நீ கூறும் நியாயங்களை ஏற்று அவர்கள் நல்ல வழிக்குத் திரும்பாவிட்டால், நீ கோபப்படாமல், அவர்கள் கூறும் பதிலை என்னி டம் வந்து தெரிவிப்பாயாக.''

இராமனின் இந்தக் கட்டளையைச் சிரமேற்கொண்டு, இலக்குவன் கிஷ்கிந்தை நகரை நோக்கி அதிவேகமாக நடந்து சென்றான். நகரை நெருங்கியதும், அவன் வரும் வேகத்தைப் பார்த்த குரங்குகள் பயந்து போய், வாலியின் மகனை அங்கதனிடம் ஓடிச் சென்று, ''இலக்குவன் சீற்றத்தோடு வருகிறான்'' என்று தெரிவிக்க, அவன் தனது சிற்றப்பனை சுக்கிரீவனின் மாளிகைக்கு விரைந்து சென்றான். அங்கே சுக்கிரீவன் குடித்துவிட்டு, இளம் பெண்கள் சூழ்ந்திருக்க இன்ப போதையில் ஆழ்ந்து தன்னை மறந்து கிடந்தான். அவனை அங்கதன் எழுப்பி, இலக்கு வன் சீற்றத்தோடு வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்தும், அவன் அதைக் காதில் வாங்கிக்கொள்ளாமலே பஞ்சணையில் கிடந்தான். உடனே அங்கதன் வேறு வழியின்றி அனுமானிடம் சென்று, அவனை அழைத்துக்கொண்டு, தன் தாயாகிய தாரையிடம் போய், ''இனி நாம் செய்யவேண்டியது என்ன?'' என்று கேட்க, ''செய்நன்றியை மறந்த நீங்கள் இனி தப்பிப் பிழைப்பீர்களா?'' என்று கோபத்தோடு சொன் னாள். அந்தச் சமயத்தில், இலக்குவன் நகரினுள் பிரவேசித்துவிடாத படி வானரங்கள் ஒன்றுசேர்ந்து கோட்டைவாசலைப் பாறைகளினால் அடைத்துவிட்டு, மரங்களைப் பிடுங்கிவைத்துக் கொண்டும், பாறை களைப் பெயர்த்து வைத்துக்கொண்டும் இலக்குவனோடு போர் செய்வ தற்காகக் கூடி நின்றன. ஆனால் இலக்குவன் கோபத்தோடு புன்முறு வல் செய்துகொண்டு, கோட்டைக்கதவைக் காலால் தள்ளவே, கத வும், வாசலும், வெகு தூரத்துக்கு மதில் சுவரும் நொறுங்கிப் பொடி யாகிவிட்டன. குரங்குகள் யாவும் பயந்து ஓட்டம் எடுத்துவிட்டன. ஊரே கலங்கிப்போய்விட்டது. இலக்குவன் கிஷ்கிந்தை நகரின் வீதி யில் நடந்துவரும்போது, தாரையைச் சுற்றி நின்றவர்கள் என்ன செய்வது என்று திகைத்தார்கள். அப்போது அனுமான் தாரையைப் பார்த்து''நீ சென்று அரண்மனைவாசலுக்கு எதிரே உள்ளவழியில் நின்று மறித்தால், இலக்குவன் வாசலை ஏறிட்டுப் பார்க்கமாட்டான்'' என்று யோசனை கூற, தாரையும் அழகுமிக்க வானரப் பெண்களுடன் சென்று வழிமறித்தாள். அவர்களைக் கண்ட இலக்குவனுக்குக் கோபம் தணிந்து கூச்சம் ஏற்பட்டது. அப்போது தாரை, ''நீ வந்ததால் எங்கள் பாவங்கள் தீர்ந்தன. இதைவிடச் சிறந்த பலன் ஒன்று உண்டா? இராமனை எப்போதும் பிரியாதிருக்கும் நீ இங்குவந்த காரணம் என் னவோ?'' என்று கேட்டாள். அவளைச் சற்றே ஏறிட்டுப் பார்த்த இலக்குவனுக்குக் கோசலையும், சுமித்திரையுமாகிய தன் தாய்மாரின் ஞாபகம் வந்துவிட்டது. விதவைக் கோலத்துடன் நிற்கும் தாரை

யைப் பார்த்ததும், அவனுடைய கண்களில் நீர் ததும்பியது. எனினும் தாரையின் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டியிருந்தது. ஆகவே, இலக்குவன், "குறித்த காலத்தில் படையோடு வந்து சீதையைத் தேடித்தருவதாகக் கூறிச் சென்ற சுக்கிரீவன் இன்னும் வரவில்லை. அவனுடைய நிலையை அறிந்து வரும்படி என் தமையன் என்னை அனுப்பினான்'' என்றான். அதற்குத் தாரை, "நீ கோபம் கொள்ள வேண்டாம். படைகளைத் திரட்டிக் கொண்டுவரும்படி எல்லாத் திசைகளிலும் சுக்கிரீவன் தூதர்களை அனுப்பியிருக்கிறான். படைகள் வருவதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறான். படைகள் வரும் நாளும் நெருங்கிவிட்டது'' என்று சொல்லவும் இலக்குவனின் கோபம் தணிந்தது. இதை அறிந்த அனுமான் அருகில் வந்தான். "நீ கூடவா மறந்துவிட்டாய்?'' என்று இலக்குவன் கேட்டான். உடனே அனுமான், "நன்றி மறந்தவர்களுக்கு உய்யும் வழி உண்டா? சுக்கிரீவன் உங்கள் உதவியை மறந்துவிடவில்லை. படைவீரர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். நீங்கள் சுக்கிரீவனுக்கு அளித்துள்ள செல்வங்களையும், அவனையும் பார்ப்பதற்கு வருவாயாக'' என்று சொல்லி இலக்குவனை அழைத்துக் கொண்டு சென்றான். தாரையும் பெண்கள் கூட்டத்தோடு அப்பால் போய்விட்டாள். தன் வருகையை அறிவிக்குமாறு இலக்குவன் கூறியபடி அங்கதன் தன் சிற்றப்பனாகிய சுக்கிரீவனிடம் சென்றான். சுக்கிரீவனுடைய பாதங்களைத் தடவித் தூக்கத்திலிருந்து எழுப்பி, இலக்குவன் கோபத்தோடு வந்திருக்கும் செய்தியை அங்கதன் தெரிவித்தான். "அவன் எதற்காகக் கோபம் கொண்டிருக்கிறான்?'' என்று சுக்கிரீவன் கேட்க, குறித்த காலத்தில் இராமனிடம் படைகளோடு செல்லாமல், சுகபோகத்தில் சுக்கிரீவன் ஆழ்ந்து கிடந்ததுதான் அவனுடைய கோபத்துக்குக் காரணம் என்று அங்கதன் சொன்னான். அத்துடன், இலக்குவன் நகருக்குள் பிரவேசித்ததிலிருந்து நடந்த காரியங்களையும் கூறினான். "அவன் வருகையை நீங்கள் ஏன் எனக்கு அப்போதே தெரிவிக்கவில்லை?'' என்று சுக்கிரீவன் கேட்டான். "வந்து தெரிவித்தேன். நீ தன்னை மறந்து கிடந்தாய்'' என்றான் அங்கதன். இதைக் கேட்ட சுக்கிரீவன், வெட்கம் அடைந்து, கள்ளைக் குடிப்பதால் ஏற்படும் தீங்குகளை விஸ்தாரமாக அங்கதனிடம் கூறிவிட்டு, அரண்மனை வாசலுக்கு வந்துசேர்ந்தான். இலக்குவனை அவன் எதிர்கொண்டு அழைத்து உபசரித்தான். அனைவரும் அரண்மனைக்குள் சென்றனர். இலக்குவன் சிம்மாசனத்தில் அமர மறுத்துவிட்டு, கற்கள் பாவிய தரையில் உட்கார்ந்தான். இராமன் புல்லில் அமர்ந்திருக்கும்போது, தான் சிம்மாசனத்தில் இருப்பதா என்று சொன்னான். விருந்துண்ணவும் மறுத்துவிட்டான். மேலும், இராமனுக்குத் தான் சென்று உணவு தேடி அளிக்கவேண்டியிருப்பதால் சீக்கிரமாகப் புறப்படவேண்டும் என்பதையும் இலக்குவன் தெரிவித்தான். "வந்து சேரும் சேனைகளை நீ இருந்து அழைத்துக்கொண்டு வா'' என்று சுக்கிரீவன், அனுமானுக்குக் கட்டளையிட்டுவிட்டு இலக்குவனோடும், அங்கதனோடும், தன் பரிவாரங்களோடும் இராமன் இருக்கும் இடத்துக்குச் சென்றான். இராமனைக் கண்

டதும் காலில் விழுந்து வணங்கினுன். அவனை இராமன் கட்டித் தழுவி க்ஷேமம் விசாரித்தான். சுக்கிரீவன் தன் பிழையைப் பொறுக்கும்படி இராமனை வேண்டினுன். "பரதனைப் போன்ற நீ இப்படியெல்லாம் பேசலாமோ?" என்று இராமன் கூறிவிட்டு, அனுமான் எங்கே என்று விசாரித்தான். அவன் படைகளோடு வருவான் என்று சுக்கிரீவன் தெரிவித்து, "இப்போது ஒன்பதாயிரம்கோடி சேனை வந்திருக்கிறது. மிகப் பெரிய சேனை இனி வரவேண்டும். நாளையே அது வந்து சேர வேண்டும். அது வந்த பிறகு, மேலே செய்யவேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசலாம்" என்ருன். அதற்கு இராமன் சம்மதித்து, மறு நாள் படையோடு வந்து சேரும்படி சொல்லி சுக்கிரீவனை அனுப்பி வைத்தான். அங்கதனையும் அனுப்பினுன். இலக்குவன் தான் கிஷ்கிந்தை நகருக்குச் சென்று திரும்பிய செய்தியை விபரமாக இராமனுக்கு எடுத்துக் கூறினுன்.

அன்று அங்கே இராமன் தங்கியிருந்தான். மறுநாள் சூரியோதயத்துக்கு முன்பாகவே, சுக்கிரீவனின் தூதர்கள் அழைத்ததும் வானரப்படை வந்து சேர்ந்ததைப்பற்றிக் கூறுவோம்.

11. தானை காண் படலம்

கோடிக்கணக்கான வானர வீரர்களைக்கொண்ட படைகளைச் சதவலி, சுசேடணன், தாரன், கேசரி, ஆன்பெயர்க்கண்ணன், பனசன், நீலன், தரீமுகன், கயன் முதலிய தலைவர்கள் நடத்திக்கொண்டு வந்தார்கள். கரடிப் படைகளுடன் சாம்பவானும், அவன் சகோதரன் துமிரனும் வந்தனர். இந்தப் படைகள் மூழ்கினுல் ஏழு சமுத்திரங்களும் வற்றிப் புழுதியாகிவிடும் என்றும், ஒருபக்கமாகச் சாய்ந்தால் உலகமும் மேருமலையும் சாய்ந்துவிடும் என்றும், அணிவகுத்துச் சென்ருல் உலகத்தில் எள் விழ இடமிராது என்றும், கோபித்தால் அக்கினியும் சூரியனும் கூடத் தீய்ந்துவிடும் என்றும் சொல்லத்தக்கவாறு பேராற்றல் கொண்ட பிரம்மாண்டமான சேனுசமுத்திரத்தை நடத்திவந்த தலைவர்கள் சுக்கிரீவனின் காலில் விழுந்து வணங்கினுர்கள். உடனே அவன் இராமனிடம் சென்று, "பெரும் படை வந்து விட்டது. அதனை நீ பார்த்தருள்வாயாக" என்ருன். சீதையே வந்து விட்டதுபோல எண்ணிய இராமனும் மகிழ்ச்சிகொண்டு, ஒரு பெரிய மலையின்சிகரத்தில் ஏறிச் சேனையைப் பார்த்தான். அப்பொழுது அவன் இலக்குவனைப் நோக்கி, "இந்தப் படைப் பெருக்கத்துக்குக் கடைசி எல்லையைக் காண முடியுமா?" என்ருன். உடனே இலக்குவன் கூறியதாவது: "இந்தச் சேனையின் எல்லையைக் கண்டு, அதற்குப் பிறகு செயலில் இறங்குவதென்ருல் பல நாட்கள் செல்லும். அதனுல் உடனே செயலில் இறங்குவதுதான் உசிதம். இந்தப் பெரும் படையால் முடியாத காரியம் எதுவுமே இல்லை. சீதையைத் தேடிக் காண்பது இவர்களுக்கு ஓர் அற்பமான காரியம். இந்தப் படையினுல் பாவம் தோற்றது; தருமம் வென்றது. இனி இங்கே தாமதம் செய்வது எதற்காக? சீதையைத் தேடுவதற்காக அனுப்ப வேண்டியவர்களை எட்டுத்

திசைகளிலும் அனுப்பவேண்டியதுதான்.'' தம்பி இவ்வாறு கூறியதும், சுக்கிரீவனைப் பார்த்து இராமன் பின்வருமாறு கேட்டான்:

12. நாடவிட்ட படலம்

''இந்தப் படைக்கு அளவு ஏதாவது இருக்கிறதா?'' இராமன் இவ்வாறு கேட்கவே, ''வானர சேனை மொத்தம் எழுபது வெள்ளம் என்று அறிவாளிகள் சொல்லியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டு விடவேண்டியதுதான். மற்றப்படி இந்தச் சேனையின் அளவை எண்ணிக் கணக்கிட்டுக் கூறமுடியுமா?''என்றான் சுக்கிரீவன். மேற்கொண்டு பேசி ஆகவேண்டிய காரியம் எதுவும் இல்லையாதலால், செய்யவேண்டிய காரியத்தை ஆலோசிக்கவேண்டும் என்று இராமன் கூறியதும், சுக்கிரீவன் அனுமானைப் பார்த்து, ''மூன்று உலகங்களிலும் உன் தந்தையான வாயுபகவானைப்போல நீ அதிவேகமாகச் சஞ்சரிக்கும் ஆற்றல் உடையவன். அந்த ஆற்றலை நீ அறியாமல், காலதாமதம் செய்துகொண்டிருக்கிறாயா? அல்லது வேகமாகச் செல்லும் மற்றக் குரங்குகளின் செயலைப் பார்க்கலாம் என்று இருக்கிறாயா?'' என்று கேட்டுவிட்டு, தென் திசையில் இராவணன் இருக்கும் இலங்கை நகருக்கு அனுமானைப் போகச் சொன்னான். அவனுடன் அங்கதனையும் சாம்பவானையும், வேறு சில வீரர்களையும் இரண்டு வெள்ளம் சேனைகளோடு போகும்படி கட்டளையிட்டான். மேற்குத் திசையில் இடபனும், வடக்கே சதவலியும், கிழக்கே வினதனும் படைகளோடு போகவேண்டும் என்று கூறினான். சீதையைத் தேடிக் கண்டுபிடித்து ஒரு மாதத்துக்குள் திரும்பிவிடவேண்டுமென்றும் அனைவருக்கும் கட்டளையிட்டான். பிறகு, தென்திசையில் செல்லுகிறவர்கள் எந்தெந்த வழிகளில் செல்லவேண்டும் என்பதையும் விபரமாக எடுத்துக் கூறினான். சீதையைப் பார்த்தால் அடையாளம் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காக இராமன், அனுமானைத் தனியே அழைத்துச் சென்று, சீதையின் அங்க அடையாளங்களைப் பாதாதி கேசாந்தமாக வருணித்தான். அத்துடன், தான் முன்பு மிதிலை நகரின் கன்னிமாடத்தில் சீதையைக் கண்டது, சிவதனுசை வளைத்து முறித்தவன் இராமனாக இல்லாவிட்டால் உயிர் துறப்பதாகச் சீதை சொன்னது, ஜனக மன்னனின் சபையில் தான் அவளைப் பார்த்தது, தான் காட்டுக்குப் புறப்பட்டபோது அவளை அயோத்தியிலேயே இருக்கும்படி கூறியதற்கு அவள் அழுது துடித்தது, நகரின் கோட்டை வாசலைக் கடந்ததும், காடு எங்கே இருக்கிறது என்று அவள் கேட்டது ஆகிய செய்திகளையும் அவனுக்குக் கூறி, அவளை அடையாளம் கண்டுகொள்ளுமாறு சொல்லி, தனது மோதிரத்தையும் இராமன் அடையாளப் பொருளாக அனுமானிடம் கொடுத்து, அவனுக்கு ஆசிகூறி விடைகொடுத்து அனுப்பினான். அங்கதன் முதலியவர்களும் இரண்டு வெள்ளம் சேனையுடன் சுக்கிரீவனையும், இராம இலக்குவர்களையும் வணங்கிவிட்டு அனுமானுடன் தென்திசை நோக்கிப் புறப்பட்டார்கள்.

13. பிலம் புக்கு நீங்கு படலம்

மற்ற மூன்று திசைகளிலும் மற்றவர்களைச் சுக்கிரீவன் அனுப்பி வைத்தான். தென்திசையில் சென்றவர்கள் விந்திய மலைப் பகுதியில் சீதையைத் தேடிவிட்டு, நருமதையாற்றைத் தாண்டி ஏமகூடத்துக் குப்போய்ச் சேர்ந்தார்கள். அங்கேயும் சீதையைத் தேடினார்கள். அதன்பின், சீதையைத் தேட இரண்டு வெள்ளம் வீரர்களைத் தனியே பிரித்து அனுப்பி, மகேந்திர மலையில் வந்து தம்மைச் சந்திக்குமாறு கட்டளையும் இட்டு, அங்கதன், அனுமான், சாம்பவான் முதலிய தலைமையான சில வீரர்கள்மட்டும் ஒரு பிரிவாகத் திரண்டு, ஏமகூட மலையிலிருந்து தெற்கே புறப்பட்டார்கள். ஒரு கொடிய பாலைவனத்தைக் கடக்க முயலும்போது வெப்பத்தைப் பொறுக்கமுடியாமல், வானர வீரர்கள் ஒரு குகைக்குள் நுழைந்தார்கள். அங்கே இருளில் அகப்பட்டுக்கொண்டு மூச்சுத்திணறி, தங்களைக் காப்பாற்றுமாறு அனுமானைக் கேட்டுக்கொள்ள, அவன் அவர்களை நோக்கித் தன் வாலைப் பிடித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு, கையால் தடவிக்கொண்டே முன்னே சென்றான். அவனுடைய குண்டலங்களின் ஒளியால் அங்கே இருள் நீங்கியது. அவ்வாறு சென்றவர்கள் அங்கே ஓர் அழகு மிக்க நகரைக் கண்டார்கள். நகரில் பிரவேசித்து சீதையைத் தேடும்போது, இராவணன் அமைத்த பொறிக்குள் அகப்பட்டுக்கொண்டுவிட்டதாக சாம்பவான் மனம் கலங்கிச் சொன்னான். அவனை அனுமான் தேற்றினான். மேலும் நடந்து சென்றபோது, சுயம்பிரபை என்பவள் தவம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அவளே சீதையாக இருக்கக் கூடுமோ என்று வானர வீரர்கள் சந்தேகித்தனர். அவள் சீதையாக இருக்கமுடியாது என்றான் அனுமான். வானர வீரர்களை நோக்கி, ''நீங்கள் யார்?'' என்று சுயம்பிரபை கேட்க, இராமனுடைய தூதர்கள் என்ற விபரத்தைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்டு சுயம்பிரபை பெருமகிழ்ச்சிகொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்; வானரர்களுக்கு விருந்திட்டாள். அனுமான் கேட்டுக்கொண்டபடி, சுயம்பிரபை தனது வரலாற்றைப் பின்வருமாறு கூறினாள் :

''மயன் என்ற அசுரச் சிற்பி செய்த தவத்தின் பயனாக, அவனுக்குப் பிரமன் இந்த நகரத்தைக் கொடுத்தான். மயன், தேவலோகத்து அரம்பையருள் ஒருத்தியாகிய ஹேமை என்பவள்மீது ஆசைகொண்டான். அவன் வேண்டுகோளுக்கிணங்க, அவளை நான் இந்த குகைக்குக் கொண்டுவந்து சேர்த்தேன். இருவரும் வெகுகாலம் இன்பத்தில் களித்தனர். நானும் இங்கேயே இருந்தேன். ஒருநாள் அவளைத் தேடிக் கொண்டுவந்த இந்திரன், மயனைக் கொன்று, ஹேமையையும் கடிந்து கொண்டதோடு, அவளை இங்கே கொண்டுவந்த குற்றத்திற்காக, என்னை இங்கேயே இருந்து நகர்க் காவல் செய்யும்படி சபித்து, இராமனுடைய கட்டளையால் வானரர்கள் இங்கே வரும்போது என் சாபம் நீங்கும் என்றும் கூறிவிட்டுப் போனான். அன்றுமுதல் உங்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இந்த இருள் மண்டிய குகையிலிருந்து நான் மீள்வதற்கு நீங்கள் உதவவேண்டும்.''

அவள் மேல் உலகம் போய்ச் சேருவதற்கு உதவிபுரிவதாக அனுமான் வாக்குறுதியளித்தான். பின்பு, பிரம்மாண்டமான வடிவம் கொண்டு ஆகாயத்தைத் தொடும்படியாக அனுமான் வளர்ந்து நின்ருன். அப்போது பூமி நூற்று நாற்பது யோசனை தூரம் பெயர்ந்துவிட்டது. அனுமான் அந்த நகரத்தைத் தூக்கி மேற்குக் கடலில் வீசி எறிந்துவிட்டான். அந்தத் தீவு இப்போதும் ''பிலத்தீவு'' என்ற பெயருடன் அங்கே இருக்கிறது. சுயம்பிரபையும் வானர வீரர்களும் வெளியே வந்தார்கள். அவள் தேவலோகத்துக்குப் போய்விட்டாள். வானர வீரர்கள் அனுமானுடைய பலத்தைப் புகழ்ந்து பேசியவண்ணம் நடந்து, சூரியாஸ்தமனத்தின்போது ஒரு பொய்கைக் கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

14. ஆறுசெல் படலம்

வானரர்கள் பொய்கைக் கரையில் சாப்பிட்டுவிட்டு உறங்கும் போது, மலையைப்போன்ற பிரம்மாண்டமான ஓர் அசுரன் அங்கு வந்து, ''என்னுடைய பொய்கையில் உறங்கும் இவர்கள் யார்?'' என்று கோபத்தோடு சொல்லிக்கொண்டே அங்கதனுடைய மார்பில் அறையவே, அங்கதன் தூக்கம் கலைந்து எழுந்து, அசுரனை அறைந்தான். உடனே அசுரன் அலறிக்கொண்டு கீழே விழுந்து உயிரைவிட்டான். அப்போது மற்ற வீரர்களும் தூக்கத்திலிருந்து எழுந்துவிட்டார்கள். அந்த அசுரன் துமிரன் என்பவன்என்ற விபரத்தைச் சாம்பவான் தெரிவித்தான். பிறகு எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டு, பெண்ணை நதிக்குச்சென்று அதைச் சார்ந்த இடங்களில் சீதையைத் தேடினுர்கள். இவ்வாறு தேடிக்கொண்டே, தசநவநாடு, விதர்ப்பநாடு, தண்டகாரணியம், முண்டகத்துறை, பாண்டுமலை, கோதாவரி நதி, சுவண நதி, குலிந்த நாடு, அருந்ததி மலை, திருவேங்கட மலை முதலியவற்றைக் கடந்து, தொண்டை நாடு, சோழ நாடு ஆகியவற்றையும் பார்த்து, பாண்டிய நாட்டை அடைந்து, சீதையைக் காணுத வருத்தத்துடன் மகேந்திர மலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

15. சம்பாதிப் படலம்

மகேந்திர மலைக்கு வந்து சேர்ந்த வானர வீரர்கள், தென் கடலை நோக்கினுர்கள். சீதை இலங்கையில் இருக்கிருள் என்ற செய்தியைத் தெரிவித்து அவர்களை அழைப்பதுபோலக் கடல் அலை வீசிக்கொண்டிருந்தது. முன்பு ஏமகூட மலையில் தனியே பிரித்து வேறு மார்க்கத்தில் அனுப்பப்பட்ட இரண்டு வெள்ளம் வானரப்படையும் இங்கே வந்து அங்கதன் முதலிய வீரர்களோடு சேர்ந்துகொண்டது. சீதையை இன்னும் கண்டுபிடிக்கவில்லையே என்றும், சுக்கிரீவன் குறித்த ஒரு மாதத் தவணையும் கடந்துவிட்டதே என்றும் வருந்திக்கொண்டிருந்த வானர வீரர்களைப் பார்த்து அங்கதன் பின்வருமாறு கூறினுன்: ''சீதையைத் தேடிக் கண்டுபிடித்து வருவதாக இராமனிடம் வாய்ப் பெருமை பேசிவிட்டு வந்தோம். மேற்கொண்ட காரியத்தை இன்னும் செய்து

முடிக்கவில்லை. இனிமேலாவது செய்வோம் என்பதற்கான அறிகுறியும் தென்படவில்லை. ஏற்றுக்கொண்ட காரியத்தைச் செய்துமுடிக்காமல் திரும்பிச் சென்றால் என் தந்தை கோபிப்பான். இராமன் வருந்துவான். இதையெல்லாம் என்னால் பார்க்கச் சகிக்காது. ஆகவே நான் உயிரை மாய்த்துக்கொள்ளப்போகிறேன்.''

அங்கதன் இவ்வாறு கூறியதைக் கேட்ட சாம்பவான், ''நீ அரசகுமாரன். பட்டத்தை ஏற்கவேண்டிய நீ இறப்பது சரியல்ல. நாங்களே உயிரை மாய்த்துக்கொள்ளுகிறோம்'' என்றான். அதற்கு அங்கதன், ''உயிர்போன்ற நீங்கள் இறக்க, நான் உயிரோடு திரும்பிச் சென்றேன் என்ற பழியை உலகம் கூறுவதற்குமுன்பே நான் இறந்துவிடுகிறேன். நாம் எல்லோரும் இங்கே இறந்துவிட்டால் இந்தச் செய்தியை என் தாயாகிய தாரைக்கும், சுக்கிரீவனுக்கும் வேறு யாராவது போய்ச் சொல்லக்கூடும். அதைக் கேட்டு, அவ்விருவரும் இறக்கக்கூடும். அதனைக் காணும் இராம இலக்குவர்களும் இறப்பார்கள். அதன் காரணமாகப் பரதன் முதலியவர்களும் உயிர் துறப்பார்கள். சீதையின் பொருட்டு உலகத்தாருக்கு எவ்வளவு பெரிய துன்பம் ஏற்பட்டுவிட்டது.''

அங்கதன் இறப்பது சரியன்று என்பதற்குரிய நியாயங்களை சாம்பவான் எடுத்துக் கூறும்போது, அனுமான், ''மூன்று உலகங்களிலும் ஒரு ஓரத்தைக்கூட நாம் இன்னும் தேடி முடிக்கவில்லை. அதற்குள் சலித்துவிட்டீர்களா? தவணை கடந்தாலும், நாம் சகல இடங்களிலும் சீதையைத் தேடுவதே உத்தமம். அவளுடைய துயரைத் தீர்ப்பதற்காகப் போரில் இறங்கிச் சடாயுவைப்போல உயிர் துறப்பதே பெருமை'' என்றான்.

சடாயு இறந்தான் என்ற செய்தியைக் கேட்டதும், சடாயுவின் தமையனாகிய சம்பாதி என்ற கழுகரசன் புலம்பிக்கொண்டே அங்கு வந்து சேர்ந்தான். சிறகுகள் அரியப்பட்ட மலையைப்போல அவன் காட்சியளித்தான். அவனுடைய சிறகுகள் முன்னொரு சமயம் சூரிய கிரணங்கள் பட்டு எரிந்துவிட்டன. ''என் தம்பியைக் கொன்றது யார்?'' என்று கேட்டுக்கொண்டே அருவியாகக் கண்ணீர் சொரிந்து சம்பாதி அழுதான். சம்பாதியை ஓர் அரக்கன் என்று கருதி வானர வீரர்கள் பயந்து ஓட, அனுமான்மட்டும் கோபத்துடன் எதிர்த்து நின்றான். பிறகு சம்பாதியின் துயரையும் கண்ணீரையும் பார்த்து அவன் குற்றமற்றவன் எனக் கண்டறிந்தான். அனுமானிடம், ''சடாயுவைக் கொன்றது யார்?'' என்று சம்பாதி கேட்டான். ''நீ யார் என்பதை முதலில் சொல்'' என்றான் அனுமான். தான் சடாயுவின் தமையன் என்று சம்பாதி கூறவே, இராவணனுடைய வாளுக்கு இரையாகிச் சடாயு மடிந்தான் என்று அனுமான் தெரிவித்தான். சம்பாதி துக்கத்துடன் அழுது புலம்பினான். அவனை அனுமான் தேற்றினான். இராவணன் சீதையை எடுத்துச் செல்லும்போது சடாயு எதிர்த்துப் போர் செய்ததாகவும், போரில் இறந்ததாகவும் அனுமான் சொன்னான். இராமனுடைய மனைவியின் பொருட்டு உயிர் துறந்ததைவிடச் சடா

யுவுக்கு வேறு இன்பமோ, பாக்கியமோ கிடையாது என்று சம்பாதி கூறி, தன் தம்பிக்கு நீர்க்கடன் கழித்துவிட்டு வந்து, வானரர்களை நோக்கி, ''நீங்கள் எல்லோரும் ராமநாமத்தைச் சொல்லுங்கள். அதனுல் எனக்கு நற்பயன் உண்டு'' என்ருன். அவ்வாறே வானரர்கள் ராமநாமத்தைச் சொன்னுர்கள். உடனே சம்பாதிக்குச் சிறகுகள் முளைத்துவிட்டன. வானர வீரர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சம்பாதி தனது பழைய வரலாற்றைப் பின்வருமாறு சொன்னுன்:

''சம்பாதி, சடாயு என்ற நாங்கள் இருவரும் சூரியனுடைய சாரதியாகிய அருணனுடைய புதல்வர்கள். நாங்கள் இருவரும் கழுகுகளுக்கு அரசர்கள். நாங்கள் தேவலோகத்தைக் காண வேண்டுமென்று வானத்தில் பறந்து சென்றபோது, எங்களைப் பார்த்துச் சூரியன் கோபம் கொண்டான். என்னைவிட மேலே பறந்து சென்ற என் தம்பி சடாயுவைச் சூரியன் தன் கிரணங்களால் சுட்டபோது, ''என்னைக் காப்பாற்று'' என்று சடாயு என்னைப் பார்த்துக் கூவினுன். நான் என் சிறகுகளை விரித்து அவனுக்கு நிழல் கொடுத்துக் காப்பாற்றினேன். அப்போது, என் சிறகுகள் சூரிய கிரணங்களினுல் எரிந்துவிட்டன. நான் மண்ணுலகில் வந்து விழுந்தேன். சூரியன் என்னை நோக்கி, சீதையைத் தேடிவரும் வானர வீரர்கள் இராம நாமத்தைச் சொல்லும்போது உனக்குச் சிறகுகள் முளைக்கும் என்ருன். நான் விழுந்த இடம், லோகசாரங்கன் என்ற முனிவன் வசிக்கும் மலைச்சாரலாகும். சிறகுகளை இழந்த நான் துன்பம் பொறுக்க மாட்டாமல் உயிரைவிடத் துணிந்தேன். அப்போது லோகசாரங்க முனிவன் எதிரே வந்து, எனக்குத் தேறுதல் கூறி, இறக்கத் துணிந்த என் கருத்தை மாற்றினுன்.''

சம்பாதி இவ்வாறு தன் வரலாற்றைக் கூறி முடித்துவிட்டு, வானரர்களிடம் மேலும் கூறியதாவது: ''சீதையை இராவணன் எடுத்துக் கொண்டுபோனபோது நான் பார்த்தேன். இலங்கையில் அவளை அந்த அரக்கன் சிறையில் வைத்திருக்கிருன். அங்கே சென்று சீதையைக் காணுங்கள். ஆனுல் இலங்கை எழுநூறு யோசனை தூரத்துக்கு அப்பால் இருக்கிறது. இந்தக் கடலைக் கடப்பது மிகமிக அரிது. அதனுல் எல்லோரும் அங்கே போகாமல், உங்களில் ஒருவன்மட்டும் சென்று, இராமனுடைய செய்தியைச் சீதைக்குக் கூறி, அவளுடைய மனத் துயரைப் போக்கிவிட்டுத் திரும்பி வரவேண்டும். அப்படியில்லை என்ருல், சீதை இலங்கையில் சிறைப்பட்டிருக்கும் செய்தியை இராமனுக்குத் தெரிவியுங்கள். கழுகுக் கூட்டங்கள் தம்மைப் பாதுகாப்போர் இல்லாமையால் நிலை தடுமாறி வருந்தும் அவற்றைப் பாதுகாக்க நான் போகவேண்டி யிருக்கிறது. நண்பர்களே, நான் கூறிய இரண்டு யோசனைகளில், நன்மை பயக்கக்கூடிய ஒன்றை நிறைவேற்றுங்கள்.''

இவ்வாறு கூறிவிட்டுச் சம்பாதி வானத்தில் பறந்து சென்ருன்.

16. மகேந்திரப் படலம்

கடலை யார் கடப்பது என்பது குறித்து வானரர்கள் தமக்குள் பேசிக்கொண்டார்கள். அநேகர் தங்களால் கடலைக் கடக்க இயலாது

என்றனர். அங்கதனே, தன்னல் கடக்கமுடியும் என்ருலும், திரும்பி வந்து சேரமுடியாது என்று சொன்னன். சாம்பவான், ''திருமால் பூமியைத் தனது பாதத்தால் அளந்த காலத்தில், நான் எட்டுத்திசைகளிலும் சுற்றி அவனது வெற்றியை அறிவித்துக்கொண்டு வரும்போது, மேரு மலை மோதிவிடவே என் கால் சிறிது ஊனமாகிவிட்டது. அதனல் என்னல் கடல்கடக்க இயலாது. நம்மில் அனுமான் ஒருவனே கடலைக் கடக்கவல்ல பலசாலி'' என்று கூறி, அனுமானைப் பலவாருகப் பாராட்டினன். அனுமானும் கடல் கடந்து இலங்கைக்குச் செல்ல அடக்கத்துடன் தன் சம்மதத்தைத் தெரிவித்தான். பின்பு, வானர வீரர்களை நோக்கி, ''நான் போய்த் திரும்பும் வரையிலும் இங்கேயே இருங்கள். இப்பொழுது எனக்கு விடை கொடுங்கள்'' என்ருன். விடை பெற்றுக்கொண்டு மகேந்திர மலையின் உச்சிக்குப்போய், ஆகாயத்தைத் தொடும்படியாகப் பிரம்மாண்டமான வடிவம் எடுத்து, கடலைக் கடப்பதற்குச் சித்தமாய் நின்ருன். அப்போது அவன், பாற்கடலில் திருமாலின் கூர்மாவதாரத்தின்மீது நின்ற மந்தர மலையைப்போலக் காட்சியளித்தான். மகேந்திர மலை அவனது பாரத்தால் பூமியில் அழுந்தியது. இந்தப் பிரபஞ்சத்தைத் தாங்கும் தங்கத் தூண்போல அனுமான் நின்ருன். தூணின் கீழ் பதிக்கப்பட்ட கல்லைப்போல இருந்தது மகேந்திர மலை.

ஆரணிய காண்டம்

— o —

1. விராதன் வதைப் படலம்

[விராதன் என்ற அரக்கனை, இராமன் கொன்றது பற்றிக் கூறும் பகுதி]

கடவுள் வணக்கம்

பேதி யாதுநிமிர் பேதஉரு வம்பி றழ்கிலா
ஓதி ஓதிஉண ரும்தொறும் உணர்ச்சி உதவும்
வேதம் வேதியர் விரிஞ்சன்முத லோர் தெரிகிலா
ஆதி தேவர்அவர் எம்அறிவி னுக்கு அறிவரோ. **1**

இராமனும் இலக்குவனும் சீதையும் அத்திரி முனிவன் ஆசிரமத்தை அடைதல்

முத்து இருத்தியது எனத்திகழும் மொய்ந்ந கையொடும்
சித்தி ரக்குனி சிலைக்குமரர் சென்ற ணுகினர்
அத்தி ரிப்பெயர் அருந்தவன் இருந்த அமைதிப்
பத்தி ரப்பழு மரப்பொழில் துவன்ற பழுவம். **2**

திக்கு றும்செறி பரம்தெரிய நின்ற திரள்பொற்
கைக்கு றுங்கண்மலை போற்குமரர் காமம் முதலா
முக்கு றும்புஅற எறிந்தவினை வான் முனிவனைப்
புக்கு இறைஞ்சினர் அருந்தவன் உவந்து புகலும். **3**

குமரர் நீர்இவண் அடைந்துதவும் கொள்கை எளிதோ
அமரர் யாவரொடும் எவ்வுலகும் வந்த தலவோ
எமரின் யார்தவம் முயன்றனர்கள் என்று உருகினன்
தமர்எ லாம்வர உகந்தனைய தன்மை முனிவன். **4**

அன்ன மாமுனியொடு அன்றுஅவண் உறைந்துஅ வன்அரும்
பன்னி கற்பின்அன சூயைபணி யால் அணிகலன்
துன்னு தூசினொடு சந்துஇவை சுமந்த சனகன்
பொன்னொடு ஏகிஉயர் தண்டக வனம் புகுதலும் **5**

4-ம் பாட்டு : உதவும் கொள்கை — காட்சி கொடுக்கும் தன்மை.
5-ம் பாட்டு : தண்டக வனம்—விந்தியமலைக்கும் சைவல மலைக்கும் நடுவில் உள்ளது. இங்கு ஓடும் நதிகள் தப்தியும் நருமதையும்.

தண்டக வனத்தில் விராதன் வருகை

எட்டொடு எட்டுமத மாகரி இரட்டி அரிமா
வட்ட வெங்கண்வரை யாளிபதி ஞறு வகையின்
கிட்ட இட்டுஇடை கிடந்தன செறிந்த ஒருகைத்
தொட்ட முத்தலை அயில்தொகை மிடல்க ழுவொடே 6

செஞ்சு டர்ச்செறி மயிர்ச்சுருள் செறிந்த செனியன்
அஞ்சு வெற்புஉருவு பெற்றுஇடை நடந்த தெனமா
மஞ்சு சுற்றிய வயங்குகிரி வாத விசையில்
பஞ்சு பட்டது படப்படியின் மேல் முடுகியே 7

புண்து ளங்கியன கண்கள்அனல் பொங்க மழைசூழ்
விண்து ளங்கிட விலங்கல்கள் குலுங்க வெயிலும்
கண்டு உளம்கதிர் குறைந்திட நெடுங் கடல்குலாம்
மண்து ளங்கவய அந்தகன் மனம்த ளரவே 8

புக்கு வாளரி முழங்கு செவியின் பொறிஉறப்
பக்கம் மின்னும் மணிமேரு சிகரம் குழைபடச்
செக்கர் வான்மழை நிகர்த்த எதிர்உற்ற செருவத்து
உக்க வீரர்உதி ரத்தின்ஒளிர் செச்சை யினெடே 9

படையொடு ஆடவர்கள் பாய்புரவி மால்க ளிறுதேர்
நடைய வாளரிகள் கோள்உழுவை நண்ணி யஎலாம்
அடைய வாரிஅர வால்அசை அநேக விதஅம்
தொடையல் மாலைதுயல் வந்துஉலவு தோள்பொ லியவே 10

குன்று துன்றின எனக்குமுறும் கோப மதமா
ஒன்றின் ஒன்றிடை அடுக்கின தடக்கை உதவப்
பின்று கின்றபில னில்பெரிய வாயில் ஒருபால்
மென்று தின்று விளியாது விரியும் பசியொடே 11

பன்ன காதிபர் பணுமணி பறித்த வைபகுத்து
என்ன விண்ணவர் விமானம்இடை யிட்டு அரவிடைத்
துன்னு கோளினெடு தாரகை தொடுத்த துழனிச்
சன்ன வீரம்இடை மின்னுதட மார்பி னெடுமே 12

பம்பு செக்கர்எரி யொக்கும்மயிர் பக்கம் எரியக்
கும்பம் உற்றஉயர் நெற்றியின் விசித்து ஒளிகுலாம்
உம்ப ருக்குஅரசன் மால்கரியின் ஓடை எயிறின்
கிம்பு ரிப்பெரிய தோள்வளை யொடும் கிளரவே 13

தங்கு திண்கரிய காளிமை தழைந்து தவழப்
பொங்கு வெங்கொடுமை என்பது புழுங்கி எழமா
மங்கு பாதகம் விடம்கனல் வயங்கி நிமிரக்
கங்கு பூசிவரு கின்றகலி காலம் எனவே 14

12-ம் பாட்டு : பன்னகாதிபர்—எட்டுத் திசைகளிலும் உள்ள பெரிய பாம்புகள். அவையாவன : வாசுகி, அனந்தன், தக்ஷன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகாபத்மன், கார்க்கோடகன்.

செற்ற வாள்உழுவை வன்செறி அதள் திருகுறச்
சுற்றி வாரண உரித்தொகுதி நீவி தொடரக்
கொற்றம் மேவும்திசை யானையின் மணிக் குலம்உடைக்
கற்றை மாசுணம் விரித்துவரி கச்சு ஒளிரவே 15

செங்கண் அங்கஅர வின்பொருவில் செம்ம ணிவிராய்
வெங்கண் அங்கவல யங்களும் விலங்க விரவிச்
சங்கு அணங்கிய சலஞ்சலம் அலம்பு தவளக்
கங்க ணங்களும் இலங்கிய கரம்பி றழவே 16

முந்து வெள்ளிமலை பொன்னின்மலை யோடு முரணப்
பந்தின் உந்துகழல் பாடுபட ஊடு படர்வோன்
வந்து மண்ணினிடை யோன்எனினும் வானின் இடையோர்
சிந்தை யுள்ளும் விழியுள்ளும் உளன்என்ற திறலோன். 17

பூதம் அத்தனையும் ஓர்வடிவு கொண்ட புதிதுஎன்று
ஓத ஒத்தஉரு வத்தன்உரும் ஒத்த குரலன்
காத லித்துஅயன் அளித்தகடை யிட்ட கணிதப்
பாத லக்கமத வெற்புஇடை படைத்த வலியான். 18

சார வந்துஎதிர் விலங்கினன் மரங்கள் தரையில்
பேர வன்கிரி பிளந்துக வளர்ந்து இகல்பெரு
வீர வெஞ்சிலையி னோர்எதிர் விராதன் எனும்அக்
கோர வெங்கண்உரும் ஏறுஅன கொடுந் தொழிலினன். 19

விராதன் சீதையைத் தூக்கிக்கொண்டு செல்லுதல்

நில்லும் நில்லும்என வந்துநிணம் உண்ட நெடுவெண்
பல்லும் வல்எயிறு மின்னுபகு வாய் முழைதிறந்து
அல்லி புல்லும்மலர் அன்னம்அனை யாளை ஒருகைச்
சொல்லும் எல்லையின் முகந்துஉயர் விசும்பு தொடர 20

காளை மைந்தர்அது கண்டுகதம் வந்து கதுவத்
தோளின் வெஞ்சிலை இடம்கொடு தொடர்ந்து சுடர்வாய்
வாளி தங்கிய வலங்கையவர் வஞ்சனை அடா
மீளுக எங்குஅகறி என்பது விளம்ப அவனும் 21

ஆதி நான்முகன் வரத்தின்எனது ஆவி அகலேன்
ஏது யாவதுவும் இன்றிஉலகு யாவும் இகலில்
சாதி யாதனவும் இல்லைஉயிர் தந்த னன்அடா
போதிர் மாதுஇவளை உந்திஇனிது என்று புகல 22

15-ம் பாட்டு : திசையானை—எட்டுத் திசைகளிலும் உள்ள யானைகள். அவையாவன : ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பகாந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம். 18-ம் பாட்டு : கடையிட்ட கணிதப் பாத லக்க மதவெற்பு இடை படைத்த வலியான்—ஒன்றேகால் லக்ஷம் மதயானைகளின் பலத்தை உடையவன். 21-ம் பாட்டு: இடம்—இடது கை.

வீர னும்சிறிது வெண்முறுவல் வெண் நிலவுஉகப்
போர்அ றிந்திலன் இவன்தனது பொற்பும் முரணும்
தீரும் எஞ்சினன நெஞ்சின்உறு சிந்தை தெரியாப்
பார வெஞ்சிலேயின் நாணெலி படைத்த பொழுதே 23

இலேகொள் வேல்அடல் இராமன்எழு மேக உருவன்
சிலேகொள் நாண்நெடிய கோதைஒலி ஏறு திரைநீர்
மலேகள் நீடுதலம் நாகர்பிலம் வானம் முதலாம்
உலகம் ஏழும்உரும் ஏறென ஒலித்து உரறவே 24

இராமனும் விராதனும் போரிடல்

வஞ்ச கக்கொடிய பூசைநெடு வாயின் மறுகும்
பஞ்ச ரக்கிளி எனக்கதறும் பாவை யைவிடா
நெஞ்சு உளுக்கினன் எனச்சிறிது நின்று நினேயா
அஞ்ச னக்கிரி அனுன்எதிர் அரக்கன் அழலா 25

பேய்மு கப்பிணி அறப்பகைஞர் பெட்பின் உதிரம்
தோய்மு கத்தது கனத்தது சுடர்க் குதிரையின்
வாய்மு கத்திடை நிமிர்ந்துவட வேலே பருகும்
தீமு கத்திரி சிகைப்படை திரித்து எறியவே 26

திசையும் வானவரும் நின்றதிசை மாவும் உலகும்
அசையும் ஆலம்என அன்னஅயில் மின்னி வரலும்
வசைஇல் மேருமுதல் மால்வரைகள் ஏழின் வலிசால்
விசய வார்சிலே இராமன்ஒரு வாளி விடவே 27

இற்றது இன்றெடுஇவ் அரக்கர்குலம் என்று பகலே
வெற்ற விண்ணிடை நின்றுநெடு மீன் விழுவபோல்
சுற்று அமைந்தசுடர் எஃகமது இரண்டு துணியா
அற்ற கண்டம்அவை ஆசையினது அந்தம் உறவே 28

சூர்ஒ டுங்கஅயில் துணிந்துஇறுதல் கண்டு சிறிதும்
போர்ஒ டுங்கலன் மறம்கொடு புழுங்கி நிருதன்
பார்ஒ டுங்குறு கரம்கொடு பருப்ப தம்எலாம்
வேரொ டும்கடிது எடுத்துஎதிர் விசைத்து விடலும் 29

வட்ட மிட்டகிரி அற்றுஉக வயங்கு வயிரக்
கட்ட மைந்தகதிர் வாளி எதிரே கடவலால்
விட்ட விட்டமலே மீளஅவன் மெய்யின் விசையால்
பட்ட பட்டஇடம் எங்கும்உடல் ஊறு படலும் 30

26-ம் பாட்டு: குதிரை—வடவை என்னும் பெண் குதிரை. இது கடலில் வசிப்பது. இதன் முகத்தில் தீ இருக்கும். கடல்நீர், மழை முதலியவற்றினல் மிகுந்துவிடாமல் அந்தத் தீ வற்றச் செய்து கொண்டிருக்கும். அதுதான் வடவா முகாக்கினி என்பதாகும்.

27-ம் பாட்டு: திசையும் வானவரும்-எட்டுத்திசைகளும் அவற்றிற் குரிய தேவர்களான இந்திரன், அக்கினி, எமன், நிருதி, வருணன்,

ஓம ராமரை ஒருங்கும் உணர்வோர் உணர்வுறு
நாம ராம்அவரை நல்லறம் நிறுத்த நணுகித்
தாம்அ ராவணை துறந்துதரை நின்ற வரைஓர்
மாம ராமரம் இறுத்துஅதுகொடு எற்ற வரலும் 31

ஏறு சேவகன் இரண்டிணுெடு இரண்டு கணையால்
வேறு வேறுதுணி செய்துஅது விழுத்தி விசையால்
மாறு மாறுநிமிர் தோளிடையும் மார்பின் இடையும்
ஆறும் ஆறும்அயில் வெங்கணை அழுத்த அவனும் 32

மொய்த்த முள்தனது உடல்தலை தொளைப்ப முடுகிக்
கைத்த லத்தின் நிமிரக்கடிது கன்றி விசிறும்
எய்த்த மெய்ப்பெரிய கேழல்என எங்கும் விசையில்
தைத்த அக்கணை தெரிப்பமெய் சிலிர்த்து உதறவே 33

எரியின் வார்கணை இராமன்விட எங்கும் நிலையாது
உருவி ஓடமறம் ஓடுதல் செயா உணர்விஞன்
அருவி பாயும்வரை போல்குருதி யாறு பெருகிச்
சொரிய வேகவலி கெட்டுஉணர்வு சோர்வு றுதலும் 34

மெய்வ ரத்தினன் மிடல்படை விடப்ப டுகிலன்
செய்யும் மற்றும்இகல் என்றுசின வாள் உருவிவன்
கைது ணித்தும்என முந்து கடுகிப் படர்புயத்து
எய்வுஇல் மல்பொருவு தோள்இருவர் ஏற நிருதன் 35

உண்டு எழுந்தஉணர்வு அவ்வயின் உணர்ந்து முடுகித்
தண்டு எழுந்தனைய தோள்கொடு சுமந்து தழுவிப்
பண்டு எழும்தனது வன்கதி பதிற்றின் முடுகிக்
கொண்டு எழுந்தனன் விழுந்துஅழி கொழுங்கு ருதியான். 36

முந்து வான்முக டுறக்கடிது முட்டி முடுகிச்
சிந்து சோரியொடு சாரிகை திரிந்த னன்அரோ
வந்து மேருவினை நாள்தொறும் வலம்செய்து உழலும்
இந்து சூரியரை ஒத்து இருவரும் பொலியவே. 37

சுவண வண்ணனெடு கண்ணன்மிசை கொள்ள விசைதோய்
அவண்அ விண்ணிடை நிமிர்ந்து படர்கின் றவன்அறம்
சிவணது அன்னசிறை முன்அவரொடு ஏகு செலவத்து
உவண அண்ணல்எனும் மன்னவனும் ஒத்த னன்அரோ. 38

வாயு, குபேரன், ஈசானன் ஆகியோரும். வரைகள் ஏழின்-ஏழு குல பர்வதங்களைப் போல. அவையாவன: கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி. *31*-ம் பாட்டு: ஓம ராமர் —ஓம் என்ற பிரணவ மந்திரத்தின் பொருளாகிய இராமனை. *33*-ம் பாட்டு: முள்-அம்பு. கேழல் - முள்ளம் பன்றி. *38*-ம் பாட்டு: சுவணவண்ணனெடுகண்ணன்-பொன்னிற மேனியனுன இலக்குவனேடு கருநிறம்கொண்ட இராமன். அவரொடு - பலராமனேடும் கிருஷ்ணனேடும்.

மாத யாஉடைய தன்கணவன் வஞ்சன் வினையின்
போத லோடும் அலமந்தனள் புலர்ந்து பொடியில்
கோதை யோடும்ஒசி கொம்பென விழுந்த னள்குலச்
சீதை சேவல்பிடி யுண்டசிறை அன்னம் அனையாள். 39

பின்னை ஏதும் உதவும்துணை பெருள்உ ரைபெருள்
மின்னை யேஇடை நுடங்கிட விரைந்து தொடர்வாள்
அன்னை யேஅனைய அன்பின்அற வோர்கள் தமைவிட்டு
என்னை யேநுகர்தி என்றனள் எழுந்து விழுவாள். 40

அழுது வாய்குழறி ஆருயிர் அழுங்கி அலையா
எழுது பாவை அனையாள் நிலைஉணர்ந்து இளையவன்
தொழுது தேவி துயர்கூர விளையாடல் தொழிலோ
பழுது வாழிஎன ஊழி முதல்வன் பகர்வுறும். 41

ஏக நின்றநெறி எல்லைகடி தேறி இனிதில்
போகல் நன்றென நினைந்தனன் இவன் பொருவிலோய்
சாகல் இன்றுபொருள் அன்றென நகும் தகைமையோன்
வேக வெங்கழலின் உந்தலும் விராதன் விழவே 42

தோள்இ ரண்டும்வடி வாள்கொடு துணித்து விசையால்
மீளி மொய்ம்பினர் குதித்தலும் வெகுண்டு புருவத்
தேள்இ ரண்டும்நெறி யச்சினவு செங்கண் அரவக்
கோள்இ ரண்டுசுட ரும்தொடர் வதின் குறுகலும் 43

புண்ணி டைப்பொழி உயிர்ப்புனல் பரந்து விழவும்
விண்ணி டைப்படர்தல் விட்டெழு விகற்பம் நினையா
எண்ணு டைக்குரிசில் எண்ணிஇளை யோய் இவனைஇம்
மண்ணி டைக்கடிது பொத்துதல் வழக்குஎ னலுமே 44

மதநல் யானைஅனை யான்நிலம் வகிர்ந்த குழிவாய்
நதம்உ லாவும்நளி நீர்வயின் அழுந்த நவைதீர்
அதவ மாய்நறுநெய் உண்டுஉலகில் அன்பர் கருதிற்று
உதவு சேவடியி ருல்அமலன் உந்து தலுமே 45

பட்ட தன்மையும் உணர்ந்துபடர் சாபம் இடமுன்
கட்ட வன்பிறவி தந்தகடை யான உடல்தான்
விட்டு விண்ணிடை விளங்கினன் விரிஞ்சன் எனஓர்
முட்டை தந்ததனில் வந்தமுதல் முன்ன வனியே. 46

பொறியின் ஒன்றிஅயல் சென்றுதிரி புந்தி உணரான்
நெறியின் ஒன்றிநிலை நின்றநினைவு உண்ட தனினும்
பிரிவில் அன்புதனி பண்டுடைய பெற்றி தனினும்
அறிவு வந்துஉதவ நம்பனை அறிந்து பகர்வான். 47

43-ம் பாட்டு: அரவக்கோள் - இராகு கிரகம். இரண்டு சுடரும் - சூரியனும், சந்திரனும். 46-ம்பாட்டு: பட்ட-முன்னுள் நிகழ்ந்த. சாபமிட-குபேரன் சாபமிட.

வேறு

இராமனை விராதன் புகழ்ந்து கூறுதல்

வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனஉன்
பாதங்கள் இவைஎன்னில் படிவங்கள் எப்படியோ
ஓதம்கொள் கடலன்றி ஒன்றினேடு ஒன்ருெவ்வாப்
பூதங்கள் தொறும்உறைந்தால் அவைஉன்னைப் பொறுக்குமோ. 48

கடுத்துநிமிர் கராம்கவ்வக் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை அனைத்தினும்சென்று ஒலிகொள்ள உறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத்து அரும்பரமே பரமேஎன்று
எடுத்தொருவா ரணம்அழைப்ப நீயோஅன்று ஏன்என்ருய். 49

புறம்காண அகம்காணப் பொதுமுகத்தின் அருள்நோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பெருமான் இயம்புதியால்
அறம்காத்தற்கு உனக்கொருவர் ஆரும்ஒரு துணையின்றி
கறங்காகும் எனத்திரிய நீயேயோ கடவாய்தான். 50

துறப்பதே தொழிலாகத் தோன்றினேர் தோன்றியக்கால்
மறப்பரோ தம்மைஅது வன்ருகில் மற்றவர்போல்
பிறப்பரோ எவர்க்கும்தாம் பெற்றபதம் பெறல்அரிதோ
இறப்பதே பிறப்பதே எனும்விளையாட்டு இனிதுகந்தோய். 51

பனிநின்ற பெரும்பிறவிக் கடல்கடக்கும் புணைபற்றி
நனிநின்ற சமயத்தோர் எல்லாரும் நன்றென்னத்
தனிநின்ற தத்துவத்தின் தகைமூர்த்தி நீயாகில்
இனிநின்ற முதல்தேவர் என்கொண்டுஎன் செய்வாரே. 52

ஓயாத மலர்அயனே முதலாக உளராகி
மாயாத வானவர்க்கும் மற்ருெழிந்த மன்னுயிர்க்கும்
நீயாகில் முதல்தாதை நெறிமுறையால் ஈன்றெடுத்த
தாயாவார் யாவரே தருமத்தின் தனிமூர்த்தி. 53

நீஆதி பரம்பரமும் நின்னவே உலகங்கள்
ஆயாத சமயமும்நின் அடியவே அயல்இல்லை
தீயாரின் ஒளித்தியால் வெளிநின்ருல் தீங்குண்டோ
வீயாத பெருமாய விளையாட்டும் வேண்டுமோ. 54

தாய்தன்னை அறியாத கன்றில்லை தன்கன்றை
ஆயும் அறியும் உலகின்தாய் ஆகில்ஐய
நீஅறிதி எப்பொருளும் அவைஉன்னை நிலைஅறியா
மாயைஇது என்கொலோ வாராதே வரவல்லாய். 55

பன்னலாம் என்றுலகம் பலபலவும் நினையுமால்
உன்னலால் பெருந்தெய்வம் உயர்ந்துளோர் ஒழுக்கன்றே
அன்னஊர் தியைமுதலாம் அந்தணர்மாட்டு அருந்தெய்வம்
நின்அலால் இல்லாமை நெறிநின்ருர் நினையாரோ. 56

48-ம் பாட்டு: பூதங்கள்-பஞ்ச பூதங்களான மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பவை.

பொருவரிய சமயங்கள் புகல்கின்ற புத்தேளிர்
இருவினையும் உடையார்போல் இருந்தவம்நின்று இயற்றுவார்
திருஉறையும் மணிமார்ப நினக்குஎன்னை செயற்பால
ஒருவினையும் இல்லார்போல் உறங்குதியால் உறங்காதாய். 57

அரவாகிச் சுமத்தியால் அணிஎயிற்றில் ஏந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியால் ஓர்அடியால் ஒளித்தியால்
திருவான நிலமகளை இஃதுஅறிந்தால் சீறுளோ
மருவாரும் துழாய்அலங்கல் மணிமார்பின் வைகுவாள். 58

மெய்யைத்தான் சிறிதுணர்ந்து நீவிதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ உனக்கென்ன குறைஉண்டோ
வையத்தார் வானத்தார் மழுவாளிக்கு அன்றளித்த
ஐயத்தால் சிறிதுஐயம் தவிர்ந்தாரும் உளர்ஐயா. 59

அன்னமாய் அருமறைகள் அறைந்தாய்நீ அவைஉன்னை
முன்னம்ஆர் ஓதுவித்தார் எல்லாரும் முடிந்தாரோ
பின்னமாய் ஒன்றுதல் பிரிந்தேயோ பிரியாதோ
என்னமா மாயம்இவை ஏனமாய் மண்இடந்தாய். 60

ஒப்புஇறையும் பெறலரிய ஒருவாமுன் உவந்துறையும்
அப்புஉறையுள் துறந்துஅடியேன் அருந்தவத்தால் அணுகுறலால்
இப்பிறவிக் கடல்கடந்தேன் இனிப்பிறவேன் இருவினையும்
துப்புஉறழும் நீர்த்தசுடர்த் திருவடியால் துடைத்தாய்நீ. 61

வேறு

இற்று எலாம் இயம்பினான், நிற்ற லோடு நீஇவ்வாறு
உற்ற வாறு உணர்த்துஎனா, வெற்றி யான்வி ளம்பினான். 62

விராதன் தனது வரலாற்றை இராமனுக்குக் கூறுதல்

கள்ள மாய வாழ்வெலாம், விள்ள ஞானம் வீசுதாள்
வள்ளல் வாழி கேள்எனா, உள்ள வாறு உணர்த்தினான். 63

ஆடு அரம்பை நீடுஅரங்கு, ஊடு நின்று பாடலால்
ஊடல் வந்து கூடஇக், கூடு வந்து கூடினேன். 64

இம்பர் உற்றுஇது எய்தினேன், வெம்பு விற்கை வீரபேர்
தும்பு ருத்த னதன்சூழ், அம்ப ரத்து ளேன்அரோ. 65

கரக்க வந்த காமநோய், துரக்க வந்த தோமினால்
இரக்க மின்றி ஏயினான், அரக்கன் மைந்தன் ஆயினேன். 66

58-ம் பாட்டு : அரவாகி - ஆதிசேஷனாகி. எயிற்றில் - வராக அவதாரத்தின்போது கொம்பினால். ஓர் அடியால் - வாமன அவதாரத்தின் போது, நெடுமாலாக வளர்ந்து ஒரு காலடியால். வைகுவாள்- தங்குபவளாகிய இலக்குமி. 59-ம் பாட்டு : மழுவாளி - சிவன். 65-ம் பாட்டு : தனதன்-குபேரன்.

அன்ன யக்கன் ஆதியாய், இன்னல் தீரும் ஈகையான்
நின்ன தாளின் நீங்கும்என்று, உன்னும் எற்கு ணர்த்தினன். 67

வலம்செய் திந்த வான்எலாம், நலிஞ்சு தின்ன நாமவேல்
பொலிஞ்ச வென்றி பூணும்அக், கிலிஞ்சன் மைந்தன் ஆயினேன். 68

அன்று மூலம் ஆதியாய், இன்று காறும் ஏழையேன்
நன்று தீது நாடலேன், தின்று தீய தேடினேன். 69

தூண்ட நின்ற தொன்மைதான், வேண்ட நின்ற வேதநூல்
பூண்ட நின்பொ லம்கொள்தாள், தீண்ட இன்று தேறினேன். 70

தெறுத்து வந்த தீதெலாம், அறுத்த உன்னை ஆதனேன்
ஒறுத்த தன்மை ஊழியாய், பொறுத்தி என்று போயினன். 71

விராதன் இறந்ததும், இராம இலக்குவர்கள் ஏகுதல்

தேவு காதல் சீரியோன், ஆவி போயி னன்எனப்
பூஉ லாவு பூவையோடு, ஏவ லாரும் ஏகினர். 72

கைகொள் கால வேலினர், மெய்கொள் வேத மெய்யர்வாழ்
மொய்கொள் சோலை முன்னினர், வைகல் தானும் வைகினர். 73

2. சரபங்கன் பிறப்புநீங்கு படலம்

[இராமனுடைய அருள்பெற்றுச் சரபங்கன் என்ற முனிவன் பிறப்பு நீங்கி முக்தி பெற்றதைக் கூறும் பகுதி]

குரவம்குவி கோங்குஅலர் கொம்பிஞெடும்
இரவுஅங்கண் உறும்பொழுது ஏகினரால்
சரவங்கன் இருந்து தவம்கருதும்
மரவம்கிளர் கோங்கொளிர் வாசவனம். 74

சரபங்கனுடைய ஆசிரமத்தில் இந்திரன்

செவ்வேலவர் சென்றனர் சேரலுறும்
அவ்வேலையில் எய்தினன் ஆயிரமாம்
தவ்வாதுஇர வும்பொலி தாமரையின்
வெவ்வேறுஅலர் கண்ணினன் விண்ணவர்கோன். 75

அன்னச்செல வில்படி மேல்அயல்சூழ்
பொன்னின்பொலி வார்அணி பூண்ஒளிமேல்
மின்னின்செறி கற்றை விரிந்தனபோல்
பின்னிச்சுட ரும்பிறழ் பேர்ஒளியான். 76

67-ம் பாட்டு: யக்கன்-யக்ஷனாகிய குபேரன். 72-ம் பாட்டு: தேவு காதல் சீரியோன் — தேவர்களை வருத்துவதைப் பெருமையாகக் கொண்ட விராதன். காதல்-வருத்துதல். 75-ம் பாட்டு - செவ்வேலவர் - இராமஇலக்குவர்கள்.

வானில்பொலி தோகையர் கண்மலர்வண்
கானில்படர் கண்களி வண்டொடுகார்
மேனித்திரு நாரதன் வீணைஇசைத்
தேனில்பொலி யும்செவி வண்டுடையான். 77

அனலின்துறை ஐம்பதொடு ஐம்பதுநூல்
வினையின்தொகை வேள்விநி ரம்பியமா
முனிவன்முது தேவரில் மூவர்அலார்
புனையும்முடி துன்றுபொ லம்கழலான். 78

செம்மாமல ராள்நிகர் தேவியொடும்
மும்மாமத வெண்ணிற முன்உயர்தாள்
வெம்மாமிசை யான்விரி வெள்ளிவிளங்கு-
அம்மாமலை அண்ணலையேஅனையான். 79

தான்இன்றுஅயல் நின்றுளிர் தண்கதிரோன்
யான்நின்றதென் என்றுளி எஞ்சிடமா
வான்நின்ற பெரும்பதம் வந்துஉருவாய்
மேல்நின்றென நின்றுளிர் வெண்குடையான். 80

திசைகட்டிய மால்கரி தெட்டமதப்
பசைகட்டின கிட்டின பற்பலபோர்
விசைகட்டுஅழி தானவர் விட்டவர்பேர்
இசைகட்டிய ஒத்துஇவர் சாமரையோன். 81

தீர்வுஇல்திரி செங்கதிர் தங்குவதோர்
ஊர்உற்ற தெனப்பொலி ஒண்முடியான்
போர்வித்தகன் நேமி பொறுத்தவன்மா
மார்பில்திரு வின்பொலி மாலையினன். 82

செற்றிக்கதி ரின்பொலி செம்மணியின்
கற்றைச்சுடர் விட்டுஎரி கஞ்சுகியான்
வெற்றித்திரு வின்குளிர் வெண்ணகைபோல்
சுற்றிக்கிள ரும்சுடர் தோளைவளையான். 83

பல்லாயிர மாமணி பாடமுறும்
தொல்லார்அணி கால்சுட ரின்தொகைதாம்
எல்லாம்உட னுய்எழ லால்அயலே
வில்லால்ஒளிர் மேகம் எனப்பொலிவான். 84

மானுஉல கம்தனில் மன்றல்பொரும்
தேனுறு நலம்செறி தொங்கலினன்
மீனேடு கடுத்துஉயர் வென்றியவாம்
வானுடியர் கண்ணெனும் வாள்உடையான். 85

77-ம் பாட்டு : நாரதனின் வீணைக்கு மஹதீ என்று பெயர். 80-ம் பாட்டு : தண்கதிரோன் - சந்திரன்

வெல்வான்நசை யால்விசை யால்விடுநாள்
எல்வான்சுடர் மாலே இராவணன்மேல்
நெல்வாலும் அருத நிறம்பிறழா
வல்வாய்மடி யாவயி ரப்படையான். 86

நின்ருன்எதிர் நின்ற நெடுந்தவனும்
சென்ருன்எதிர் கொண்டு சிறப்பமையா
என்தான்இவண் எய்திய வாறுஎனலும்
பொன்ருத பொலம்கழ லோன்புகலும். 87

பிரமன் அழைத்ததை இந்திரன் கூறுதலும் சரபங்கன் போக மறுத்தலும்

நின்ஞல்இயை நீதி நெடும்தவம்இன்று
என்ஞனும் விளம்பரி தென்றுணர்வான்
அந்நான்முகன் நின்னே அழைத்தனஞல்
பொன்ஞர்சடை மாதவ போதுதியால். 88

எந்தாய்உலகு யாவையும் எவ்வுயிரும்
தந்தான்உறை யும்நெறி தந்தனஞல்
நந்தாத பெருந்தவ நாடதுநீ
வந்தாய்எனில் நின்எதி ரேவருவான். 89

எல்லாஉல கிற்கும் உயர்ந்தமையான்
சொல்லாவகை நீஉணர் தொன்மையையால்
நல்லாய்உட னேநட நீஎனலும்
அல்லேன்என வால்அறி வான்அறைவான். 90

சொற்பொங்கு பெரும்புக ழோய்தொழில்மாய்
சிற்பங்களின் வீவன சேர்குவெனே
அற்பம்கரு தேன்என் அருந்தவமோ
கற்பம்பல சென்றது காணுதியால். 91

சொற்றும்தரம் அன்றிது சூழ்கழலாய்
பெற்றும்பெறு கில்லதொர் பெற்றியதே
மற்றென்பல சொல்இவண் வந்துதவ
முற்றும்பகல் தானும் முடித்தனஞல். 92

சிறுகாலே இலாநிலே யோதிரியா
குறுகாநெடு காகுணம் வேறுபடா
உறுகால்கிளர் பூதம் எலாம்உகினும்
மறுகாநெறி எய்துவென் வானுடையாய். 93

86-ம் பாட்டு: நெல்வாலும் - நெல்லின் நுனி அளவும், 87-ம் பாட்டு: நெடுந்தவன் - சரபங்க முனிவன். பொலம்கழலோன் - இந்திரன்.

அப்போது இராம இலக்குவர் அங்கு வருதல்

என்றுஇன்ன விளம்பிடும் எல்லையின்வாய்
வன்திண்சிலை வீரரும் வந்தணுகா
ஒன்றும்கிளர் ஓதையி னல்உணர்வார்
நின்றென்னைகொல் இன்ன தெனநினைவார். 94

கொம்பொத்தன நால்ஒளிர் கோள்வயிரக்
கம்பக்கரி நின்றது கண்டனமால்
இம்பர்த்தலை மாதவர் பால்இவனும்
உம்பர்க்கரசு எய்தினன் என்றுணரா 95

மானேஅனை யாளொடு மைந்தனையும்
பூநேர்பொழி லின்புற மேநிறுவா
ஆன்ஏறென ஆள்அரி ஏறிதுஎனத்
தானேஅ(வ்) அகன்பொழில் சாருதலும் 96

கண்தாம்அவை ஆயிர மும்கதுவக்
கண்தாமரை போல்கரு ஞாயிறெனக்
கண்டான்இமை யோர்இறை காசினியின்
கண்தான்அரு நான்மறை யின்கனியை. 97

காணுமனம் நொந்து கவன்றனனால்
ஆண்நாதனை அந்தணர் நாயகனை
நாள்நாளும் வணங்கிய நன்முடியால்
தூணுகிய தோள்கொடு அவற்றெழுவான். 98

வேறு

துவசம்ஆர் தொல்அமருள் துன்னரைச் செற்றும்
சுருதிப் பெருங்கடலின் சொற்பொருள்கற் பித்தும்
திவசம்மா நல்லறத்தின் செந்நெறியின் உய்த்தும்
திருவளித்தும் வீடளித்தும் சிங்காமைத் தங்கள்
கவசமாய் ஆருயிராய்த் தவமாய்க் கண்ணுய்க்
கடைஇலா ஞானமாய்க் காப்பானைக் காண
அவசமாய்ச் சிந்தைஅழிந்து அயலே நின்ருன்
அறியாதான் போல அறிந்தஎலாம் சொல்வான். 99

தோய்ந்தும் பொருள்அனைத்தும் தோயாது நின்ற
சுடரே தொடக்குஅறுத்தோர் சுற்றமே பற்றி
நீந்த அரிய நெடுங்கருணைக் கெல்லாம்
நிலையமே வேத நெறிமுறையின் நேடி
ஆய்ந்த உணர்வின் உணர்வே பகையால்
அலைப்புண்டு அடியேம் அடிபோற்ற அந்நாள்
ஈந்த வரம்உதவ எய்தினையே எந்தாய்
இருநிலத்த வோநின் இணையடித்தா மரைதாம். 100

95-ம் பாட்டு: கொம்பொத்தன.........கம்பக்கரி—நான்கு தந்தங்களை உடைய ஐராவதம் என்ற யானை.

மேவாதவர் இல்லை மேவினரும் இல்லை
வெளியோடு இருள்இல்லை மேல்கீழும் இல்லை
மூவாமை இல்லை மூத்தமையும் இல்லை
முதல்இடையோடு ஈறில்லை முன்னெடுபின் இல்லை
தேவாஇங்கு இவ்வோநீ சென்றநிலை என்றால்
சிலைஏந்தி வந்தெம்மைச் சேவடிகள் நோவக்
காவாது ஒழியில் பழிபெரிதோ அன்றேல்
கருங்கடலில் கண்வளராய் கைம்மாறும் உண்டோ. 101

நாழி நவைதீர் உலகெலாம் ஆக
நளினத்து நீதந்த நான்முகனார் தாமே
ஊழி பலபலவும் நின்றளந்தால் ஒன்றும்
உலவாப் பெருங்குணத்த உத்தமனே மேனாள்
தாழி தரையாகத் தண்தயிர் நீராகத்
தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ
ஆழி கடைந்துஅமுதம் எங்களுக்கே ஈந்தாய்
அவுணர்கள்தாம் நின்அடிமை யல்லாமை உண்டோ. 102

ஒன்றாகி மூலத்து உருவம் பலவாகி
உணர்வும் உயிரும் பிறிதாகி ஊழி
சென்றுஆச றும்காலத்து அந்நிலைய தாகித்
திறத்துஉலகம் தானாகிச் செஞ்செவே நின்ற
நன்றாய ஞானத் தனிக்கொழுந்தே எங்கள்
நவைதீர்க்கும் நாயகமே நல்வினையே நோக்கி
நின்றாரைக் காத்தி அயல்பேரைக் காய்தி
நிலைஇல்லாத் தீவினையும் நீதந்த தன்றே. 103

வல்லை வரம்பில்லாத மாயவினை தன்னால்
மயங்கின ரோடுஎய்தி மதிமயங்கி மேனாள்
அல்லை இறைவன்நீ ஆதிஎனப் பேதுற்று
அலமருவேம் உன்னை அறப்பயன் உண்டாக
எல்லை வலயங்கள் நின்உழைஎன்று அந்நாள்
எரியோனைத் தீண்டி எழுவர்என நின்ற
தொல்லை முதல்முனிவர் சூள்உற்ற போதே
தொகைநின்ற ஐயம் துடைத்திலையோ எந்தாய். 104

வேறு

இன்னன பலநினைந்து ஏத்தினன் இயம்பாத்
துன்னுதல் இடைஉளது எனநனி துணிவான்
தன்நிகர் முனிவனை தரவிடை என்னாப்
பொன்னொளிர் நெடுமுடிப் புரந்தரன் போனான். 105

104-ம் பாட்டு: எரியோன்—தீ நிறம் உடைய சிவன். எழுவர்—சப்த ரிஷிகள்: அத்திரி, பிருகு, குத்ஸன், வசிட்டன், கௌதமன், காசிபன், ஆங்கிரசன். சூள் உற்ற போதே—திருமாலே கடவுள் என்று முனி

இராமனைச் சரபங்கன் வரவேற்றல்

போனவன் அகநிலை புலமையின் உணர்வான்
வானவர் தலைவனை வரவெதிர் கொண்டான்
ஆனவன் அடிதொழ அருள்வர அழுதான்
தான்நட விடவகை தழுவினன் நுழைவான். 106

ஏழையும் இளவலும் வருகென இனிதாய்
வாழிய அவரொடும் வந்தனன் மகிழ்வால்
ஊழியின் முதல்முனி உறையுளை அணுகா
ஆழியில் விழிதுயில் அவன்என மகிழ்வான். 107

அவ்வயின் அழகனும் வைகினன் அறிஞன்
செவ்விய அறஉரை செவிவயின் உதவ
நவ்வியின் விழியவ ளொடுநனி இருளைக்
கவ்விய நிசிஒரு கடையுறும் அளவின் 108

விலகிடு நிழலினன் வெயில்விரி அயில்வாள்
இலகிடும் சுடரவன் இசையன திசைதோய்
அலகிடல் அரியதன் அவிர்கர நிரையால்
உலகிடு நிறைஇருள் உறையினை உரிவான். 109

ஆயிடை அறிஞனும் அவன்எதிர் அழுவத்
தீயினை நுழைவதொர் தெளிவினை உடையான்
நீவிடை தருகென நிறுவினன் நெறியால்
காயெரி வரன்முறை கடிதினில் இடுவான். 110

வைகுந்தத்துக்குச் செல்லுவதற்காக தான் நெருப்பில் விழப்போவதாய் சரபங்கன் கூறுதல்

வரிசிலை உழவனும் மறைஉழ வனைநீ
புரிதொழில் எனைஅது புகலுதி எனலும்
திருமகள் தலைவசெய் திருவினை உறயான்
எரிபுக நினைகுவென் அருள்என இறைவன் 111

யான்வரும் அமைதியின் இதுசெயல் எவனோ
மான்வரு தனிஉரி மார்பினை எனலும்
மீன்வரு கொடியவன் விறல்அடும் அறவோன்
ஊன்விடும் உவகையின் உரைநனி பகர்வான். 112

வர்கள் சத்தியம் செய்த காலத்தில். ஐயம்—திருமால் இறைவனு, அல்லனு என்ற சந்தேகம். 106-ம் பாட்டு: போனவன் - இந்திரன். ஆனவன்-இராமன். அழுதான்—சரபங்கன் அழுதான். நடவிட—வைகுந்தத்துக்குச்செல்ல. 107-ம்பாட்டு: ஏழை—சீதை. 112-ம் பாட்டு: மீன்வரு கொடியவன் விறல்அடும் அறவோன் - மீன் உருவம் பொறிக்கப்பட்ட கொடியை உடையவனுகிய மன்மதனது

ஆயிரம் முகம்உள தவம்அயர் குவனல்
நீஇவண் வருதிகொல் எனும்நினை வுடையேன்
போயின இருவினை புகலரு விதியால்
மேயினை இனிஒரு வினைஇலை விறலோய். 113

இந்திரன் அருளினன் இறுதிசெய் பகலா
வந்தனன் மருவுதி மலர்அயன் உலகம்
தந்தனன் எனஅது சாரலென் உரவோய்
அந்தம்இல் உயர்பதம் அடைதலை முயல்வேன். 114

சரபங்கன் தன் மனைவியோடு தீ மூழ்குதல்

ஆதலின் இதுபெற அருள்என உரையாக்
காதலி யவளொடு கதழ்எரி மூழ்கிப்
போதலை மருவினன் ஒருநெறி புகலா
வேதமும் அறிவரு மிகுபொருள் உணர்வோன். 115

தேவரும் முனிவரும் உறுவது தெரிவோர்
மாவரு நறுவிரை மலர்அயன் முதலோர்
ஏவரும் அறிவினில் இருவினை ஒருவிப்
போவது கருதும்அவ் அருநெறி புக்கான். 116

அண்டமும் அகிலமும் அறிவரு நெறியால்
உண்டவன் ஒருபெயர் உணர்குநர் உறுபேறு
எண்தவ நெடிதுஎனில் இறுதியில் அவனைக்
கண்டவர் உறுபொருள் கருதுவது எளிதோ. 117

3. அகத்தியப் படலம்

[இராமன் முதலியவர்கள் அகத்திய முனிவனிடம் சென்றது பற்றிக் கூறும் பகுதி]

அனையவன் இறுதியின் அமைவு நோக்கலின்
இனியவர் இன்னலால் இரங்கும்நெஞ்சினர்
குனிவரு திண்சிலைக் குமரர் கொம்பொடும்
புனிதனது உறையுள்நின்று அரிதில் போயினர். 118

*மலைகளும் மரங்களும் மணிக்கற் பாறையும்
அலைபுனல் நதிகளும் அருவிச் சாரலும்
இலைசெறி பழுவமும் இனிய சூழலும்
நிலைமிகு தடங்களும் இனிது நீங்கினர். 119

வெற்றியைக் கெடுத்த சரபங்கன். மன்மத பாணங்களைப் பங்கப் படுத்தியவனுதலால் இவனுக்குச் சரபங்கன் என்னும் பெயர் உண்டா யிற்று. சரம் - பாணம். 114-ம் பாட்டு: இறுதி செய் பகலா - நேற் றுப் பகலின் இறுதியாகிய மாலைப்போதில் (அல்லது ஊழிக்காலம் வரை.) 118-ம் பாட்டு: அனையவன் - சரபங்கமுனிவன்.

தண்டகவனத்து முனிவர்கள் இராமனைக் கண்டு மகிழ்தல்

*பண்டுஅயன் பயந்தருள் பால கில்லரும்
முண்டரும் மோனரும் முதலி னோர்கள்அத்
தண்டக வனத்துறை தவத்து ளோர்கள்தாம்
கண்டனர் இராமனைக் களிக்கும் சிந்தையார். 120

*கனல்வரும் கடுஞ்சினத்து அரக்கர் காயஓர்
வினைபிறிது இன்மையின் வெதும்பு கின்றனர்
அனல்வரு கானகத்து அமுது அளாவிய
புனல்வர உயிர்வரும் உலவை போல்கின்றார். 121

*ஆய்வரும் பெருவலி அரக்கர் நாமமே
வாய்வெரீஇ அலமரும் மறுக்கம் நீங்கினார்
தீவரு வனத்திடை இட்டுத் தீர்ந்ததோர்
தாய்வரல் நோக்கிய கன்றின் தன்மையார். 122

கரக்கரும் கடுந்தொழில் அரக்கர் காய்தலின்
பொரற்குஇடம் இன்மையின் புழுங்கிச் சோருநர்
அரக்கர்என் கடலிடை ஆழ்கின் றார்ஒரு
மரக்கலம் பெற்றென மறுக்கம் நீங்கினர். 123

*தெரிஞ்சுற நோக்கினர் செய்த செய்தவம்
அருஞ்சிறப்பு உதவநல் அறிவு கைதர
விரிஞ்சுறப் பற்றிய பிறவி வெந்துயர்ப்
பெருஞ்சிறை விடுபெற் றனைய பெற்றியார். 124

வேண்டின வேண்டினர்க்கு அளிக்கும் மெய்த்தவம்
பூண்டுளர் ஆயினும் பொறையின் ஆற்றலால்
மூண்டெழு வெகுளியை முதலின் நீக்கினர்
ஆண்டுறை அரக்கரால் அலைப்புண் டார்அரோ. 125

*எழுந்தனர் எய்தினர் இருண்ட மேகத்தின்
கொழுந்தென நின்றஅக் குரிசில் வீரனைப்
பொழிந்தெழு காதலில் பொருந் தினர்அவன்
தொழுந்தொறும் தொழுந்தொறும ஆசி சொல்லுவார். 126

*இனியதோர் சாலைகொண்டு ஏகி இவ்வயின்
நனிஉறை கென்றுஅவற்கு அமைய நல்கித்தாம்
தனியிடம் சார்ந்தனர் தங்கி மாதவர்
அனைவரும் எய்தினர் அல்லல் சொல்லுவான். 127

அரக்கர்களால் அடைந்த துன்பங்களை இராமனுக்கு முனிவர்கள் உரைத்தல்

*எய்திய முனிவரை இறைஞ்சி ஏத்துஉ வந்து
ஐயனும் இருந்தனன் அருள்என் என்றலும்
வையகம் காவலன் மைந்த வந்ததோர்
வெய்யவெங் கொடுந்தொழில் விளைவு கேள்என 128

*இரக்கம்என் றொருபொருள் இலாத நெஞ்சினர்
அரக்கர்என் றுளர்சிலர் அறத்தின் நீங்கினர்
நெருக்கவும் யாம்படர் நெறிய லாநெறி
துரக்கவும் அருந்தவத் துறையுள் நீங்கினேம். 129

வல்லியம் பலதிரி வனத்து மான்என
எல்லியும் பகலும்நொந்து இரங்கி ஆற்றலேம்
சொல்லிய அறநெறித் துறையும் நீங்கினேம்
வில்லியல் மொய்ம்பினாய் வீடு காண்குமோ. 130

*மாதவத்து ஒழுகலேம் மறைகள் யாவையும்
ஓதலேம் ஓதுவார்க்கு உதவல் ஆற்றலேம்
மூதெரி வளர்க்கிலேம் முறையின் நீங்கினேம்
ஆதலின் அந்தண ரேயும் ஆகிலேம். 131

*இந்திரன் எனில்அவன் அரக்கர் ஏயின
சிந்தையில் சென்னியில் கொள்ளும் செய்கையான்
எந்தைமற்று யாருளர் இடுக்கண் நீக்குவார்
வந்தனை யாம்செய்த தவத்தின் மாட்சியால். 132

*உருள்உடை நேமியால் உலகை ஓம்பிய
பொருள்உடை மன்னவன் புதல்வ போக்கிலா
இருள்உடை வைகலேம் இரவி தோன்றினாய்
அருள்உடை வீரநின் அபயம் யாம்என்றார். 133

வேறு

*புகல்பு குந்தில ரேல்புறத்து அண்டத்தின்
அகல்வ ரேனும்என் அம்பொடும் வீழ்வரால்
தகவில் துன்பம் தவிருதிர் நீர்எனாப்
பகல வன்குல மைந்தன் பணிக்கின்றான். 134

*வேந்தன் வீயவும் யாய்துயர் மேவவும்
ஏந்தல் எம்பி வருந்தவும் என்நகர்
மாந்தர் வன்துயர் கூரவும் யான்வனம்
போந்தது என்னுடைப் புண்ணியத் தால்என்றான். 135

அறம்த வாநெறி அந்தணர் தன்மையை
மறந்த புல்லர் வலிதொலை யேன்எனில்
இறந்து போகினும் நன்றுஇது அல்லது
பிறந்து யான்பெறும் பேறென்பது யாவதோ. 136

நிவந்த வேதியர் நீவிரும் தியவர்
கவந்த பந்தக் களிநடம் கண்டிட
அமைந்த வில்லும் அருங்கணைத் தூணியும்
சுமந்த தோளும் பொறைத்துயர் தீருமால். 137

ஆவுக் காயினும் அந்தணர்க் காயினும்
யாவர்க் காயினும் எளியவர்க் காயினும்
சாவப் பெற்றவ ரேதகை வானுறை
தேவர்க் கும்தொழும் தேவர்க ளாகுவார். 138

சூர்அ றுத்தவ னும்சுடர் நேமியும்
ஊர்அ றுத்த ஒருவனும் ஓம்பினும்
ஆர்அ றத்தினெடு அன்றிநின் ருர்அவர்
வேர்அ றுப்பென் வெருவல்மின் நீர்என்ருன். 139

உரைத்த வாசகம் கேட்டுஉவந்து ஓங்கிட
இரைத்த காதலர் ஏகிய இன்னலர்
திரித்த கோலினர் தேமறை பாடினர்
நிருத்தம் ஆடினர் நின்று விளம்புவார். 140

தோன்றல் நீமுனி யின்புவ னத்தொகை
மூன்று போல்வன முப்பது கோடிவந்து
ஏன்ற போதும் எதிர்அல என்றலில்
சான்று வேதம் தவம்பெரு ஞானமே. 141

*அன்ன தாகலின் ஏயின ஆண்டெலாம்
இன்னல் காத்திங்கு இனிதுறை வாய்எனச்
சொன்ன மாதவர் பாதம் தொழுதுஉயர்
மன்னர் மன்னவன் மைந்தனும் வைகினன். 142

தண்டகாரணியத்தில் இராமன் முதலியோர் பத்து ஆண்டுகள் வசித்து அதன்பின் அகத்தியனிடம் செல்லுதல்

*ஐந்தும் ஐந்தும் அமைதியின் ஆண்டுஅவண்
மைந்தர் தீதிலர் வைகினர் மாதவர்
சிந்தை எண்ணி அகத்தியற் சேர்கென
இந்து நன்னுதல் தன்னெடும் ஏகினர். 143

விடர்அ கங்களும் வேய்செறி கானமும்
படரும் சில்நெறி பைப்பைய நீங்கினர்
சுடரும் மேனிச் சுதீக்கணன் என்னும்அவ்
இடரி லான்உறை சோலைசென் றெய்தினர். 144

அருக்கன் அன்ன முனிவனை அவ்வழிச்
செருக்கில் சிந்தையர் சேவடி தாழ்தலும்
இருக்க ஈண்டென்று இனியன கூறினன்.
மருக்கொள் சோலையில் மைந்தரும் வைகினர். 145

வைகும் வைகலின் மாதவன் மைந்தர்பால்
செய்கை யாவையும் செய்துஇவண் செல்வநீ
எய்த யான்செய்தது எத்தவம் என்றனன்
ஐய னும்அவற்கு அன்பினன் கூறுவான். 146

சொன்ன நான்முகன் தன்வழித் தோன்றினர்
முன்னை யோருள் உயர்தவம் முற்றினர்
உன்னின் யார்உளர் உன்அருள் எய்திய
என்னின் யார்உளர் இப்புவி மீதென்ருன். 147

139-ம் பாட்டு : சூர் அறுத்தவனும் - சூரபத்மனைக் கொன்ற சுப்பிரமணியனும். சுடர் நேமியும் - சக்கராயுதம் தரித்த திருமாலும். ஊர்

உவமை நீங்கிய தோன்றல் உரைக்கெதிர்
நவமை நீங்கிய நற்றவன் சொல்லுவான்
அவம்இ லாவிருந் தாகிஎன் ஞல்அமை
தவம்எ லாம்கொள்க தக்கிணை யாஎன்ருன். 148

அகத்தியனைச் சென்று காண விரும்புவதாக சுதீக்கண முனிவனிடம் இராமன் கூறுதல்

மறைவ லான்எதிர் வள்ளலும் கூறுவான்
இறைவ நின்அருள் எத்தவத் திற்குஎளிது
அறைவது ஈண்டுண்டு அகத்தியற் காண்பதோர்
குறைகி டந்தது இனிஎனக் கூறினுன். 149

நல்ல தேநினைந் தாய்அது நானும்முன்
சொல்லு வான்துணி கின்றது தோன்றல்நீ
செல்க ஆண்டுஅவற் சேருதி சேர்ந்தபின்
இல்லை நின்வயின் எய்தல்இல் லாதவே. 150

அன்றி யும்நின் வரவினை ஆதரித்து
இன்று காறும்நின்று ஏமுறு மால்அவற்
சென்று சேருதி சேருதல் செவ்வியோய்
நன்று தேவர்க்கும் யாவர்க்கும் நன்றெனு. 151

வழியும் கூறி வரம்பில ஆசிகள்
மொழியும் மாதவன் மொய்ம்மலர்த் தாள்தொழாப்
பிழியும் தேனில் பிறங்குஅரு வித்திரள்
பொழியும் சாரல் விரைவினில் போயினுர். 152

வேறு

இராமனை அகத்தியன் எதிர்கொள்ளுதல்

*ஆண்தகையர் அவ்வயின் அடைந்தமை அறிந்தான்
ஈண்டுஉவகை வேலைதுணை ஏழுலகம் எய்த
மாண்டவர தன்சரண் வழங்குஎதிர் வந்தான்
நீண்டதமி ழால்உலகை நேமியின் அளந்தான். 153

*பண்டுஅவுணர் மூழ்கினர் படார்கள்என வானோர்
எண்தவம் எமக்கருள் எனக்குறை இரந்தார்
கண்டொருகை வாரினன் முகந்துகடல் எல்லாம்
உண்டுஅவர்கள் பின்உமிழ்க என்றலும் உமிழ்ந்தான். 154

தூயகடல் நீர்அடிசில் உண்டுஅது துரந்தான்
ஆயஅது அலால்அமரும் மெய்உடைய அன்னுன்
மாயவினை வாள்அவுணன் வாதவிதன் வன்மைக்
காயம்இனிது உண்டுஉலகி னுர்இடர் களைந்தான். 155

அறுத்த ஒருவனும் - திரிபுரங்களை எரித்த சிவனும். 152-ம் பாட்டு : சாரல் - பொதிகைமலைச் சாரல். 155-ம் பாட்டு : வாதவி -வாதாபி

*யோகம்உறு பேருயிர்கள் தாம்உலே வுறுமல்
ஏகும்நெறி யாதென மிதித்துஅடியின் ஏறி
மேகநெடு மாலேதவழ் விந்தம்எனும் விண்தோய்
நாகமது நாகம்உற நாகம்என நின்ருன். 156

*மூசுஅரவு சூடுமுத லோன்உரையின் மூவா
மாசில்தவ ஏகென வடாதுதிசை மேல்நாள்
நீசம்உற வானின்நெடு மாமலயம் நேரா
ஈசன்நிக ராய்உலகு சீர்பெற இருந்தான். 157

உழக்குமறை நாலினும் உயர்ந்துலகம் ஓதும்
வழக்கினும் மதிக்கவியி னும்மரபின் நாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றிஉமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான். 158

*விண்ணினில் நிலத்தினில் விகற்பஉல கில்பேர்
எண்ணினில் இருக்கினில் இருக்கும்என யாரும்
உள்நினே கருத்தினே உறப்பெறுவ ஞல்என்
கண்ணினில் எனக்கொடு களிப்புறு மனத்தான். 159

இரைத்தமறை நான்கிஞெடு இயைந்தபிற யாவும்
நிரைத்தநெடு ஞானநிமிர் கல்லில்நெடு நாள்இட்டு
அரைத்தும்அய ஞலும்அறி யாதபொருள் நேர்நின்று
உரைக்குதவு மால்எனும் உணர்ச்சியின் உவப்பான். 160

உய்ந்தனர் இமைப்பிலர் உயிர்த்தனர் தவத்தோர்
அந்தணர் அறத்தின்நெறி நின்றனர்கள் ஆஞ
வெந்திறல் அரக்கர்விட வேர்முதல் அறுப்பான்
வந்தனன் மருத்துவன் எனத்தனி வலிப்பான். 161

ஏனேஉயி ராம்உலவை யாவும்இடை வேவித்து
ஊன்நுகர் அரக்கர்உரு மைச்சுடு சினத்தின்
ஆனஅன லேக்கடிது அவித்துல களிப்பான்
வானமழை வந்ததென முந்துறும் மனத்தான். 162

*கண்டனன் இராமனே வரக்கருணே கூரப்
புண்டரிக வாள்நயன நீர்பொழிய நின்ருன்
எண்திசையும் ஏழுலகும் எவ்வுயிரும் உய்யக்
குண்டிகையி னில்பொருவில் காவிரி கொணர்ந்தான். 163

*நின்றவனே வந்தநெடி யோன்அடி பணிந்தான்
அன்றவனும் அன்பொடு தழீஇஅமுத கண்ஞென்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றும்உள தென்தமிழ் இயம்பிஇசை கொண்டான். 164

என்ற அரக்கன். 156-ம் பாட்டு: "நாகம்" என்ற சொல் இங்கு முறையே மலே, பாதாளம், யானே என்ற மூன்றையும் குறிக்கும்.

வேதியர்கள் வேதமொழி வேறுபல கூறிக்
காதல்மிக நின்றெழில் கமண்டலுவின் நல்நீர்
மாதவர்கள் வீசிநெடு மாமலர்கள் தூவப்
போதுமணம் நாறுகுளிர் சோலைகொடு புக்கான். 165

*பொருந்தஅம லன்பொழி லகத்துஇனிது புக்கான்
விருந்தவன் அமைத்தபின் விரும்பினன் விரும்பி
இருந்தவம் இழைத்தனது இல்இடையின் வந்தென்
அருந்தவம் முடித்தனை அருட்கரச என்றான். 166

*என்றமுனி யைத்தொழுது இராமன்இமை யோரும்
நின்றதவம் முற்றும்நெடி யோரின்நெடி யோரும்
உன்தன்அருள் பெற்றிலர்கள் உன்அருள் சுமந்தேன்
வென்றனன் அனைத்துலகும் மேல்இனிதென் என்றான். 167

*தண்டக வனத்துறைதி என்றுரை தரக்கொண்டு
உண்டுவரவு இத்திசை எனப்பெரிது உவந்தேன்
எண்தகு குணத்தினை எனக்கொடுஉயர் சென்னி
துண்டமதி வைத்தவனை ஒத்தமுனி சொல்லும். 168

*ஈண்டுறைதி ஐயஇனி இவ்வயின் இருந்தால்
வேண்டியன மாதவம் விரும்பின முடிப்பாய்
தூண்டுசின வாள்நிருதர் தோன்றிஉளர் என்றால்
மாண்டுக மலைந்துஎமர் மனத்துயர் துடைப்பாய். 169

வாழும்மறை வாழும்மனு நீதிஅறம் வாழும்
தாழும்இமை யோர்உயர்வர் தானவர்கள் தாழ்வார்
ஆழிஉழ வன்புதல்வ ஐயம்இலை மெய்யே
ஏழுலகும் வாழும்இனி இங்குறைதி என்றான். 170

*செருக்குடை அரக்கர்புரி தீமைசிதை வெய்தித்
தருக்கழி தரக்கடிது சொல்வது சமைந்தேன்
வருக்கமறை யோய்அவர் வருந்திசையில் முந்துற்று
இருக்கைநலம் நிற்குஅருள்என் என்றனன் இராமன். 171

இராமனுக்கு அகத்தியன் ஆயுதங்களைக் கொடுத்தல்

*விழுமியது சொற்றனைஇவ் வில்இதுஇவண் மேல்நாள்
முழுமுதல்வன் வைத்துளது மூவுலகும் யானும்
வழிபட இருப்பதுஇது தன்னை வடிவாளிக்
குழுவழுவில் புட்டிலொடு கோடிஎன நல்கி 172

*இப்புவனம் முற்றும்ஒரு தட்டினிடை இட்டால்
ஒப்புவர விற்றுஎன உரைப்பரிய வாளும்
வெப்புருவு பெற்றஅரன் மேருவரை வில்லா
முப்புரம் எரித்ததனி மொய்க்கணையும் நல்கா 173

172-ம் பாட்டு : முழுமுதல்வன் - திருமால். இராமன் முன்பு பரசு ராமனிடமிருந்து பெற்ற விஷ்ணு—தனுசை வருணனிடம் கொடுத்து வைத்திருந்தான். வருணன் அதை அகத்தியனிடம் கொடுத்

*ஓங்குமரன் ஓங்கிமலை ஓங்கிமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர் சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ் சூழலதுஓர் குன்றின்
பாங்கர்உள தால்உறையுள் பஞ்சவடி மஞ்ச. 174

கன்னிஇள வாழைகனி ஈவகதிர் வாலின்
செந்நெல்உள தேன்ஒழுகு போதும்உள தெய்வப்
பொன்னிஎன லாயபுனல் ஆறும்உள போதா
அன்னம்உள பொன்இவளொடு அன்பின் விளையாட. 175

இராமன் முதலியோர் பஞ்சவடிக்குப் புறப்பட்டுச் செல்லுதல்

*ஏகிஇனி அவ்வயின் இருந்துறைமின் என்றுன்
மேகநிற வண்ணனும் வணங்கிவிடை கொண்டான்
பாகனைய சொல்லியொடு தம்பிபரி வில்பின்
போகமுனி சிந்தைதொட ரக்கடிது போனான். 176

4. சடாயு காண் படலம்

[இராம இலக்குவர்கள் சடாயு என்ற கழுகு வேந்தனைக் கண்டதுபற்றிக் கூறும் பகுதி]

*நடந்தனர் காவதம் பலவும் நன்னதி
கிடந்தன நின்றன கிரிகள் கேண்மையில்
தொடர்ந்தன துவன்றின சூழல் யாவையும்
கடந்தனர் கண்டனர் கழுகின் வேந்தையே. 177

சடாயுவின் தோற்ற வருணனை

உருக்கிய சுவணம்ஒத்து உதயத்து உச்சிசேர்
அருக்கன்இவ் அகலிடத்து அலங்கு திக்கெலாம்
தெரிப்புறு செறிசுடர்ச் சிகையி னல்சிறை
விரித்திருந் தனன்என விளங்கு வான்தனை 178

*முந்தொரு கருமலை முகட்டு முன்றிலில்
சந்திரன் ஒளியொடு தழுவச் சார்த்திய
அந்தம்இல் கனைகடல் அமரர் நாட்டிய
மந்தர கிரிஎன வயங்கு வான்தனை 179

தான். அகத்தியன் அந்த வில்லை இப்போது இராமனிடம் கொடுக்கிறான். 174-ம் பாட்டு : பஞ்சவடி-ஐந்து ஆலமரங்களின் கூட்டம் உடைய இடம். இது நாசிக்கின் அருகே கோதாவரி நதிக்கரையில் உள்ளது.

மால்நிற விசும்பெழில் மறையத் தன்மணிக்
கால்நிறச் சேயொளி கதுவக் கண்ணகல்
நீல்நிற வரையினில் பவள நீள்கொடி
போல்நிறம் பொலிந்தெனப் பொலிகின் றுன்தனை 180

*தூய்மையன் இருங்கலை துணிந்த கேள்வியன்
வாய்மையன் மறுவிலன் மதியின் கூர்மையன்
ஆய்மையின் மந்திரத்து அறிஞ னும்எனச்
சேய்மையின் நோக்குறு சிறுக ணுன்தனை 181

*வீட்டிவாள் அவுணரை விருந்து கூற்றினை
ஊட்டிவீழ் மிச்சில்தான் உண்டு நாள்தொறும்
தீட்டிமேல் இந்திரன் சிறுகண் யானையின்
தோட்டிபோல் தேய்ந்தொளிர் துண்டத் தான்தனை 182

*கோள்இரு நான்கினேடு ஒன்று கூடிய
ஆள்உறு திகிரிபோல் ஆரத் தான்தனை
நீள்உறும் மேருவின் நெற்றி முற்றிய
வாள்இர வியில்பொலி மௌலி யான்தனை 183

*சொல்பங்கம் உறநிமிர் இசையின் சும்மையை
அல்பங்கம் உறவரும் அருணன் செம்மலைச்
சிற்பங்கொள் பகல்எனக் கடிது சென்றுதீர்
கற்பங்கள் எனைப்பல கண்டு ளான்தனை 184

சடாயுவிடம் இராம இலக்குவர்கள் செல்லுதல்

*ஓங்குயர் நெடுவரை ஒன்றில் நின்றுஅது
தாங்கலது இருநிலம் தாழ்ந்து தாழ்வுற
வீங்கிய வலியினில் இருந்த வீரனை
ஆங்கவர் அணுகினர் அயிர்க்கும் சிந்தையார். 185

*இறுதியைத் தன்வயின் இயற்ற எய்தினன்
அறிவிலி அரக்கனும் அல்ல னும்எனின்
எறும்வலிக் கலுழனே என்ன உன்னிஅச்
செறிகழல் வீரரும் செயிர்த்து நோக்கினர். 186

*வனைகழல் வரிசிலை மதுகை மைந்தரை
அனையவன் தானும்கண்டு அயிர்த்து நோக்கினன்
வினைஅறு நோன்பினர் அல்லர் வில்லினர்
புனைசடை முடியினர் புலவரோ என 187

183-ம் பாட்டு; கோள் இருநான்கினேடு ஒன்றுகூடிய ஆளுறு திகிரி போல் ஆரத்தான் - நவக்கிரகங்களையும் ஆட்சி செய்கிற துருவ சக்கரம் போன்று, நவரத்தினங்கள் கோக்கப்பட்ட ஆரம்தரித்த சடாயுவை. துருவ சக்கரம்-துருவன் என்ற நட்சத்திரம் நடுவே இருந்து கொண்டு, காற்று வடிவான கயிறுகளால் கட்டப்பட்ட ஒன்பது கிரகங்களையும் சுற்றித் திருப்பும் சக்கரம். இவ்வாறு திருப்புவதால்

*புரந்தரன் முதலிய புலவர் யாரையும்
நிரந்தரம் நோக்குவென் நேமி யானும்அவ்
வரம்தரும் இறைவனும் மழுவ லாளனும்
கரந்திலர் என்னையான் என்றும் காண்பெனல். 188

*காமன்என் பவனையும் கண்ணின் நோக்கினேன்
தாமரைச் செங்கண்இத் தடக்கை வீரர்கள்
பூமரு பொலங்கழல் பொடியி னேடும்ஒப்பு
ஆம்என அறிகிலென் ஆர்கொ லாம்இவர். 189

*உலகொடு மூன்றும்தம் உடைமை ஆக்குறும்
அலகுஅறும் இலக்கணம் அமைந்த மெய்யினர்
மலர்மகட்கு உவமையா ளோடும் வந்தஇச்
சிலைவலி வீரரைத் தெரிகி லேன்எனு 190

*கருமலை செம்மலை அனைய காட்சியர்
திருமகிழ் மார்பினர் செங்கண் வீரர்தாம்
அருமைசெய் குணத்தின்என் துணைவன் ஆழியான்
ஒருவனை இருவரும் ஒத்து ளார்அரோ. 191

*எனப்பல நினைப்பினன் மனத்துள் எண்ணுவான்
சினப்படை வீரர்மேல் செல்லும் அன்பினன்
கனப்படை வரிசிலைக் காளை யீர்கள்யார்
மனப்பட எனக்குஉரை வழங்கு வீர்என்றான். 192

வினவிய காலையில் மெய்ம்மை யல்லது
புனைமலர்த் தாரவர் புகல்கி லாமையால்
கனைகடல் நெடுநிலம் காவல் ஆழியான்
வனைகழல் தயரதன் மைந்தர் யாம்என்றார். 193

*உரைத்தலும் பொங்கிய உவகை வேலையன்
தரைத்தலை இழிந்துஅவர்த் தழுவு காதலன்
விரைத்தடம் தாரினிர் வேந்தர் வேந்தன்தன்
வரைத்தடம் தோள்இணை வலிய வோஎன்றான். 194

*மறக்கமுற் றுதன வாய்மை காத்துஅவன்
துறக்கம்உற் றான்என இராமன் சொல்லலும்
இறக்கம்உற் றான்என ஏக்கம் எய்தினன்
உறக்கம்உற் றான்என உணர்வு நீங்கினன். 195

இரவு பகல்கள் உண்டாக்கப்படுகின்றன. இந்த வானசக்கரம் மகா மேரு மலையின் அருகில் உள்ளதாகக் கருதப்படுகிறது. நவக்கிரகங்களாவன: சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், பிருகஸ்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது. நவரத்தினங்களாவன: கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம். 188-ம் பாட்டு: வரம்தரும் இறைவன்-பிரமன். 191-ம் பாட்டு: துணைவன் - தசரதன்.

*தழுவினர் எடுத்தனர் தடக்கை யால்முகம்
கழுவினர் இருவரும் கண்ணின் நீரினுல்
வழுவிய இன்னுயிர் வந்த மன்னனும்
அழிவுறு நெஞ்சினன் அரற்றி னுன்அரோ. 196

வேறு

தசரதன் இறந்ததைக் குறித்து சடாயு புலம்புதல்

*பரவலரும் கொடைக்கும்நின்றன் பனிக்குடைக்கும்
பொறைக்கும்நெடும் பண்பு தோற்ற
கரவல்அரும் கற்பகமும் உடுபதியும்
கடலிடமும் களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே பொய்ப்பகையே
மெய்க்கணியே புகழின் வாழ்வே
இரவலரும் நல்லறமும் யானும்இனி
என்படநீத்து ஏகி னுயே. 197

அலங்காரம் எனஉலகுக்கு உயிர்அளிக்கும்
தனிக்குடையாய் ஆழி சூழ்ந்த
நிலம்காவல் இதுகிடக்க நிலையாத
நிலையுடையேன் நேயநெஞ்சின்
நலம்காண நடந்தனையோ நாயகனே
தீவினையேன் நண்பி னின்றும்
விலங்கானேன் ஆதலினுல் விலங்கினேன்
இன்னும்உயிர் விட்டி லேனுல் 198

*தயிர்உடைக்கும் மத்தென்ன உலகைநலி
சம்பரனைத் தடிந்த அந்நாள்
அயிர்கிடக்கும் கடல்வலயத் தவர்அறிய
நீஉடல்நான் ஆவி என்று
செயிர்கிடத்தல் செய்யாத திருமனத்தாய்
செப்பினுய் திறம்பா நின்சொல்
உயிர்கிடக்க உடலைவிசும்பு ஏற்றினுர்
உணர்விறந்த கூற்றி னுரே. 199

*எழுவதோர் இசைபெருக இப்பொழுதே
ஒப்பரிய எரியும் தீயில்
விழுவதே நிற்கமட மெல்லியலார்
தம்மைப்போல் நிலத்தின் மேல்வீழ்ந்து
அழுவதே யான்என்னு அறிவுற்ருன்
எனஎழுந்துஆங்கு அவரை நோக்கி
முழுவதேழ் உலகுடையான் மைந்தன்மீர்
கேண்மின்என முறையில் சொல்வான் 200

சடாயு தனது வம்சாவளி விபரங்களைக் கூறுதல்

தக்கன்மனை வயிற்றுதித்தார் ஐம்பதின்மர்
தடங்கொங்கைத் தைய லாருள்
தொக்கபதின் மூவரைஅக் காசிபனும்
புணர்ந்தனன்அத் தோகை மாருள்
மிக்கஅதி திப்பெயராள் முப்பத்து
முக்கோடி விண்ணோர் ஈந்தாள்
மைக்கருங்கண் திதிஎன்பாள் அதின்இரட்டி
அசுரர்தமை வயிறு வாய்த்தாள். 201

தானவரே முதலோரைத் தனுப்பயந்தாள்
மதிஎன்பாள் மனிதர் தம்மூடு
ஆனவரு ணங்கள்அவ யவத்துஅடைவே
பயந்தனளால் சுரபி என்பாள்
தேனுவுடன் கந்தருவம் மற்றுமுள்ள
பிறபயந்தாள் தெரிக்கும் காலை
மானமுடைக் குரோதவசை கழுதைமரை
ஒட்டைபிற வயிறு வாய்த்தாள். 202

மழைபுரையும் குழல்விநதை வான்இடிமின்
அருணனுடன் வயிந தேயன்
தழைபுரையும் சிறைக்கூகை பாறுமுதல்
பெரும்பறவை தம்மை ஈன்றாள்
இழைபுரையும் தாம்பிரைஊர்க் குருவிசிவல்
காடைபல பிறவும் ஈன்றாள்
கழைஎனும்அக் கொடிபயந்தாள் கொடியுடனே
செடிமுதலாக் கண்ட எல்லாம். 203

வெருட்டிஎழு கணபணத்தின் வியாளமெலாம்
கத்துருவாம் மின்னும் ஈன்றாள்
மருள்திகழும் ஒருதலைய புயங்கமெலாம்
சுதைஎன்னும் மாது தந்தாள்
அருட்டைஎனும் வல்லிதந்தாள் ஒந்திஉடும்பு
அணில்கள்முத லாய எல்லாம்
தெருட்டிடும்மாது இளைஈந்தாள் செலசரம்ஆ -
கியபலவும் தெரிக்கும் காலை. 204

அதிதிதிதி தனுஅருட்டை சுதைகழையே
சுரபிஅணி விநதை ஆன்ற
மதிஇளைகத் துருவுடனே குரோதவசை
தாம்பிரையாம் மடந லார்கள்
விதிமுறையே இவை அனைத்தும் பயந்தனர்கள்
விநதைசுதன் அருணன் மென்தோள்
புதுமதிசேர் நுதல்அரம்பை தனைப்புணர
உதித்தனம்யாம் புவனி மீதே. 205

201-ம் பாட்டு: தக்கன் - பிரமனின் மகன். காசிபன் - ஒன்பது பிரமமாக்களில் ஒருவன். **205-ம் பாட்டு:** அதிதி, திதி, தனு, அருட்டை,

*அருணன்தன் புதல்வன்யான் அவன்படரும்
உலகெல்லாம் படர்வேன் ஆழி
இருள்மொய்ம்பு கெடத்துரந்த தயரதற்குஇன்
உயிர்த்துணைவன் இமையா ரோடும்
வருணங்கள் வகுத்திட்ட காலத்தே
வந்துதித்தேன் கழுகின் மன்னன்
தருணம்கொள் பேரொளியீர் சம்பாதி
பின்னர்வரு சடாயு என்றான். 206

*ஆண்டுஅவன்ஈது உரைசெய்ய அஞ்சலித்த
மலர்க்கையார் அன்பி னோடும்
மூண்டபெருந் துன்பத்தால் முறைமுறையின்
நிறைமலர்க்கண் மொய்த்த நீரார்
பூண்டபெரும் புகழ்நிறுவித் தம்பொருட்டாய்
மேலுலகம் புக்க தாதை
மீண்டனன்வந் தானவனைக் கண்டனரே
ஒத்தனர்அவ் விலங்கல் தோளார். 207

*மருவுஇனிய குணத்தவரை இருசிறகால்
உறத்தழுவி மக்காள் நீரே
உரியகடன் வினையேற்கும் உதவுவீர்
உடல்இரண்டுக்கு உயிர்ஒன் றானன்
பிரியவும்தான் பிரியாதே இனிதிருக்கும்
உடல்பொறையாம் பீழை பாராது
எரியதனில் இன்றேபுக்கு இறவேனேல்
இத்துயரம் மறவேன் என்றான். 208

வேறு

*என்று ரைத்த எருவை அரசனைத்
துன்று தாரவர் நோக்கித் தொழுதுகண்
ஒன்றும் முத்தம் முறைமுறை யாய்உக
நின்று மற்றின்ன நீர்மை நிகழ்த்தினர். 209

*உய்வி டத்துஉத வற்குரி யானும்தன்
மெய்வி டக்கரு தாதுவிண் ஏறினன்
இவ்வி டத்தினில் எம்பெரு மான்எமைக்
கைவி டில்பினை யார்களை கண்உளார். 210

தாயின் நீங்கரும் தந்தையின் தண்நகர்
வாயின் நீங்கி வனம்புகுந்து எய்திய
நோயின் நீங்கினெம் நுன்னின்என் எங்களை
நீயும் நீங்குதி யோநெறி நீங்கலாய். 211

சுதை, கழை, சுரபி, விநதை, மதி, இளை, கத்துரு, குரோதவசை, தாம்பிரை - இந்தப் பதின்மூன்று பேரும் தக்கனுடைய புதல்விகள்; காசிபனுடைய மனைவிமார். விநதையின் மகனாகிய அருணனும் அரம்பையும் சேர்ந்து சம்பாதியையும் சடாயுவையும் பெற்றார்கள்.

*என்று சொல்ல இருந்துஅழி நெஞ்சினன்
நின்ற வீரரை நோக்கி நினைந்துஅவன்
அன்றுஅது என்னின் அயோத்தியின் ஐயநீர்
சென்ற பின்அவற் சேர்குவென் யான்என்றான். 212

*வேந்தன் விண்அடைந் தான்எனில் வீரர்நீர்
ஏந்து ஞாலம் இனிதுஅளி யாதுஇவண்
போந்தது என்னை புகுந்தஎன் புந்திபோய்க்
காந்து கின்றது கட்டுரை யீர்என்றான். 213

தேவர் தானவர் திண்திறல் நாகர்வேறு
ஏவ ராக இடர்இழைத் தார்எனில்
பூஅ ராவும் பொலங்கதிர் வேலினீர்
சாவர் ஆக்கித் தருவென் அரசுஎன்றான். 214

*தாதை கூறலும் தம்பியை நோக்கினான்
சீதை கேள்வன் அவனும்தன் சிற்றவை
மாத ரால்வந்த செய்கை வரம்பிலா
ஓத வேலை ஒழிவின்று உணர்த்தினான். 215

இராமனைச் சடாயு புகழ்தல்

*உந்தை உண்மையன் ஆக்கிஉன் சிற்றவை
தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி
வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே
எந்தை வல்லது யாவர்வல் லார்எனா 216

*அல்லித் தாமரைக் கண்ணனை அன்புறப்
புல்லி மோந்து பொழிந்து கண்ணீரினன்
வல்லை மைந்தஅம் மன்னையும் என்னையும்
எல்லை இல்புகழ் எய்துவித் தாய்என்றான். 217

*பின்ன ரும்அப் பெரியவன் பெய்வளை
அன்னம் அன்ன அணங்கினை நோக்கினான்
மன்னர் மன்னவன் மைந்தஇவ் வாள்நுதல்
இன்னள் என்ன இயம்புதி யால்என்றான். 218

*அல்இ றுத்துஅன தாடகை ஆதியா
வில்இ றுத்தது இடைஎன மேலைநாள்
புல்இ றுத்தது யாவும் புகன்றுதன்
சொல்இ றுத்தனன் தோன்றல்பின் தோன்றினான். 219

*கேட்டு உவந்தனன் கேழ்கிளர் மௌலியான்
தோட்டு அலங்கலி னீர்துறந் தீர்வள
நாட்டின் நீவிரும் நன்னுதல் தானும்இக்
காட்டில் வைகுதிர் காக்குவென் யான்என்றான். 220

212-ம் பாட்டு : அவற் சேர்குவென் - அவ(தசரத)னிடம் போய்ச் சேருவேன். 219-ம் பாட்டு : புல் இறுத்தது - வனத்தை அடைந்

*இறைவ எண்ணி அகத்தியன் ஈந்துளது
அறையும் நன்மணி யாற்றின் அகன்கரைத்
துறையின் உண்டொரு சூழல்அச் சூழல்புக்கு
உறைதும் என்றனன் உள்ளத்து உறைகுவான். 221

*பெரிதும் நன்றுஅப் பெருந்துறை வைகிநீர்
புரிதிர் மாதவம் போதுமின் யான்அது
தெரிவு றுத்துவென் என்றுஅவர் திண்சிறை
விரியும் நீழலில் செல்லவிண் சென்றனன். 222

*ஆய சூழல் அறிய உணர்த்திஅத்
தூய சிந்தைய தோம்இல் குணத்தினன்
போய பின்னைப் பொருசிலை வீரரும்
ஏய சோலை இனிதுசென்று எய்தினர். 223

*வார்ப்பொற் கொங்கை மருகியை மக்களை
ஏற்பச் சிந்தனை யிட்டுஅவ் அரக்கர்தம்
சீர்ப்பைச் சிக்கறத் தேறினன் சேக்கையில்
பார்ப்பைப் பார்க்கும் பறவையில் பார்க்கின்றான். 224

5. சூர்ப்பநகைப் படலம்

[இராவணனின் தங்கையாகிய சூர்ப்பநகை, பஞ்சவடிக்கு
வந்து இராமனை மோகித்து, மூக்கறுபட்டுக்
கோபாவேசத்துடன் திரும்பியதைக் கூறும் பகுதி]

புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்று ஆகி
அவிஅகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிஅ ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்என் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவிஎனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார். 225

தது. தசரதனுக்குச் சரம கைங்கரியம் செய்தது என்றும் பொருள் கூறப்படும். 221-ம் பாட்டு: நன்மணி யாற்றின்-கோதாவரி நதியின். 225-ம் பாட்டு : கோதாவரி நதிக்கும் சான்றோர்கவிக்கும் சிலேடையாகவும், நதிக்குக்கவியை உவமையாக வைத்தும் இயற்றப்பட்டது இச்செய்யுள். கோதாவரிநதிபற்றிப்பாட்டுக் கூறுவதாவது: பூமிக்கு அலங்காரமாகவும், பொன் மணி அகில் முதலிய ஏராளமான பொருள்களைத் தருவதாகவும், விளை நிலத்தில் பாய்வதாகவும், பாவங்களைப் போக்கும் துறைகளை உடையதாகவும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்துவகை நிலங்களில் பாய்ந்து ஓடி வருவதாகவும், நன்றாகத் தெளிந்துள்ளதாகவும், குளிர்ச்சி பொருந்திய நீர்ப் பெருக்கு உடையதாகவும், அறிஞர்களின் கவிகளைப்போல இருந்த கோதாவரி நதியை இராமனும் இலக்குவனும் பார்த்தார்கள். கவிபற்றி இதே செய்யுள் கூறுவதாவது: உலகத்துக்கு அழகு தருவதாகவும், சிறந்த அர்த்தங்களைக் கொடுப்பதாகவும், அறிவினிடம் இருப்பதாகவும், அமைந்த அகப்பொருள் இலக்

வண்டுறை கமலச் செவ்வி வாள்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை ஒண்கண் ஒருங்குற நோக்கி ஊழின்
தெண்திரைக் கரத்தின் வாரித் திருமலர் தூவிச் செல்வர்க்
கண்டடி பணிவ தென்னப் பொலிந்தது கடவுள் யாறு. 226

எழுஉறு காத லால்இங்கு இரைத்திரைத்து ஏங்கி ஏங்கிப்
பழுவநாள் குவளைச் செவ்விக் கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மைந்தர் வனத்துறை வருத்தம் நோக்கி
அழுவதும் ஒத்த தால்அவ் அலங்குநீர் ஆறு மன்னோ. 227

நாளங்கொள் நளினப் பள்ளி நயனங்கள் அனைய நேமி
வாளங்கள் உறைவ கண்டு மங்கைதன் கொங்கை நோக்கும்
நீளங்கொள் சிலையோன் மற்றை நேரிழை நெடிய நம்பி
தோளின்கண் மனம்வைத்து அன்ன சுடர்மணித் தடங்கள் கண்டாள்.

*ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள். 229

*வில்லியல் தடக்கை வீரன் வீங்குநீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான் மங்கைதன் மருங்குல் நோக்க
எல்லிஅம் குவளைக் கானத்து இடைஇடை மலர்ந்து நின்ற
அல்லிஅம் கமலம் கண்டாள் அண்ணல்தன் வடிவு கண்டாள். 230

அனையதோர் தன்மை யால்அவ் அருவிநீர் ஆற்றின் பாங்கர்ப்
பனிதரு படிவப் பஞ்ச வடியெனும் பருவச் சோலைத்
தனிஇடம் அதனை நண்ணித் தம்பியால் சமைக்கப் பட்ட
இனியபூஞ் சாலை எய்தி இருந்தனன் இராமன் இப்பால். 231

வேறு

*நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினள்
மேலைநாள் உயிரொடும் பிறந்து தான்வினை
காலம்ஓர்ந்து உடன்உறை கடிய நோய்அனாள். 232

*செம்புஅரா கம்படச் செறிந்த கூந்தலாள்
வெம்பரா குத்தனி விளைந்த மெய்யினள்
உம்பரா னவர்க்கும்ஒண் தவர்க்கும் ஓதநீர்
இம்பரா னவர்க்கும்ஓர் இறுதி ஈட்டுவாள். 233

கணத் துறைகளைக் கொண்டதாகவும், ஐந்திணை இலக்கணத்தைத் தழுவி, மிகவும் தெளிவானதாகவும், குளிர்ச்சியோடு நல்ல ஓட்டம் உடையதாகவும் இருப்பது சான்றோர் கவி. இந்தப் பாட்டுக்கு இன்னும் விரிவாகப் பொருள் கூறுவதும் உண்டு. 226-ம் பாட்டு: செல்வர் - இராம இலக்குவர். 232-ம் பாட்டு : வேந்தனை-இராவணனை. 233-ம் பாட்டு: வெம்பராகுத்தனி விளைந்த மெய்யினள் - இராகு என்னும் கொடிய கிரகமும் அவளோடு ஒப்பாக முடியாமல் வாடும்

*வெய்யதோர் காரணம் உண்மை மேவினுள்
வைகலும் தமியள்அவ் வனத்து வைகுவாள்
நொய்தின்இவ் உலகெலாம் நுழையும் நோன்மையாள்
எய்தினள் இராகவன் இருந்த சூழல்வாய். 234

சூர்ப்பநகை இராமனைக் கண்டு, அவனது அழகில் ஈடுபடுதல்

*எண்தகும் இமையவர் அரக்கர் எங்கள்மேல்
விண்டனர் விலக்குதி என்ன மேலைநாள்
அண்டசத்து அருந்துயில் துறந்த ஐயனைக்
கண்டனள் தன்கிளைக்கு இறுதி காட்டுவாள். 235

*சிந்தையில் உறைபவற்கு உருவம் தீர்ந்ததால்
இந்திரற்கு ஆயிர நயனம் ஈசற்கு
முந்திய மலர்க்கண்ஓர் மூன்று நான்குதோள்
உந்தியில் உலகளித் தாற்குஎன்று உன்னுவாள். 236

*கற்றையஞ் சடையவன் கண்ணில் காய்தலால்
இற்றவன் அன்றுதொட்டு இன்று காறும்தான்
நற்றவம் இயற்றிஅவ் அனங்கன் நல்உருப்
பெற்றனனும்எனப் பெயர்த்தும் எண்ணுவாள். 237

*தரங்களின் அமைந்துதாழ்ந்து அழகின் சார்பின
மரங்களும் நிகர்க்கல மலையும் புல்லிய
உரங்களின் உயர்திசை ஓம்பும் ஆனையின்
கரங்களே இவன்மணிக் கரம்என் றுன்னுவாள். 238

வில்மலை வல்லவன் வீரத் தோளொடும்
கல்மலை நிகர்க்கில கனிந்த நீலத்தின்
நல்மலை யல்லது நாம மேருவும்
பொன்மலை யாதலால் பொருவ லாதுஎன்பாள். 239

தாள்உயர் தாமரைத் தளங்கள் தம்மொடும்
கேள்உயர் நாட்டத்துக் கிரியின் தோற்றத்தான்
தோளொடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நீளிய அல்லகண் நெடிது மார்பென்பாள். 240

அதிகம்நின் றொளிரும்இவ் அழகன் வாள்முகம்
பொதிஅவிழ் தாமரைப் பூவை ஒப்பதோ
கதிர்மதி யாம்எனில் கலைகள் தேயும்அம்
மதிஎனில் மதிக்கும்ஓர் மறுஉண்டு என்பரால். 241

படியாக இணையின்றி வளர்ந்த சரீரம் படைத்தவள், அல்லது சினம் கொண்ட இராகு என்னும் கரும்பாம்பைப் போலத் தனித்து உண்டான உடலை உடையவள். இப்படி இரண்டு விதமாகப் பொருள்கூற, முறையே வெம்ப+ராகு என்றும், வெம்பு+அராகு என்றும் பிரிக்கவேண்டும். அராகு—இராகு. 235-ம் பாட்டு : அண்டசம் - முட்டையில் பிறப்பது; (இங்கே) ஆதிசேஷன் என்ற பாம்பு. 236-ம் பாட்டு : சிந்தையில் உறைபவன் - மன்மதன்.

*எவன்செய இனியஇவ் அழகை எய்தினேன்
அவம்செயத் திருஉடம்பு அலச நோற்கின்றான்
நவம்செயத் தகையஇந் நளின நாட்டத்தான்
தவம்செயத் தவம்செய்த தவம்என் என்கின்றாள். 242

உடுத்தநீர் ஆடையள் உருவச் செவ்வியள்
பிடித்தரு நடையினள் பெண்மை நன்றுஇவன்
அடித்தலம் தீண்டலின் அவனிக்கு அம்மயிர்
பொடித்தன போலும்இப் புல்என் றுன்னுவாள். 243

வாள்நிலை மருங்குலான் வயங்கு சோதியைக்
காணல னேகொலோ கதிரின் நாயகன்
சேணெலாம் புல்லொளி செலுத்திச் சிந்தையின்
நாணலன் மீமிசை நடக்கின் றான்என்றாள். 244

குப்புறற்கு அரியமாக் குன்றை வென்றுயர்
இப்பெருந் தோளவன் இதழுக்கு ஏற்பதோர்
ஒப்பென உலகம்மேல் உரைக்க ஒண்ணுமோ
துப்பினில் துப்புடை யாதைச் சொல்லுகேன். 245

நற்கலை மதிஉற வயங்கு நம்பிதன்
எற்கலை திருஅரை எய்தி ஏமுற
வற்கலை நோற்றன மாசி லாமணிப்
பொற்கலை நோற்றில போலு மால்என்றாள். 246

தொடைஅமை நெடுமழைத் தொங்க லாம்எனக்
கடைகுழன்று இடைநெறி கரிய குஞ்சியைச்
சடைஎனப் புனைந்திலன் என்னில் தையலார்
உடைஉயிர் யாவையும் உடையு மால்என்றாள். 247

நாறிய நகைஅணி நல்ல புல்லினால்
ஏறிய செவ்விமேல் இயற்று மோஎனா
மாறுஅகல் முழுமணிக்கு அரசின் மாட்சிதான்
வேறொரு மணியினால் விளங்கு மோஎன்றாள். 248

கரந்திலன் இலக்கணம் எடுத்துக் காட்டிய
பரம்தரு நான்முகன் பழிப்புற் றானரோ
இரந்திவன் இணையடிப் பொடியும் ஏற்கிலாப்
புரந்தரன் உலகெலாம் புரக்கின் றான்என்றாள். 249

நித்தமும் பரவையும் குறுக நெஞ்சிடைக்
கோத்தஅன்பு உணர்விடைக் குளிப்ப மீக்கொள
ஏத்தவும் புரியஒன்று ஈக வான்பொருள்
காத்தவன் புகழ்எனத் தேயும் கற்பினாள். 250

*வான்தனில் வரைந்ததோர் மாதர் ஓவியம்
போன்றனள் புலர்ந்தனள் புழுங்கு நெஞ்சினள்
தோன்றல்தன் சுடர்மணித் தோளில் நாட்டங்கள்
ஊன்றினள் பறிக்கலா் ஊற்றம் பெற்றிலள். 251

*நின்றனள் இருந்தவன் நெடிய மார்பகம்
ஒன்றுவென் அன்றெனில் அமுதம் உண்ணினும்
பொன்றுவென் போக்குஇனி அரிது போன்ம்எனுச்
சென்றெதிர் நிற்பதோர் செய்கை தேடுவாள். 252

*எயிறுடை அரக்கிஎவ் உயிரும் இட்டதோர்
வயிறுடை யாள்என மறுக்கும் ஆதலால்
குயில்தொடர் குதலைஓர் கொவ்வைச் செவ்விவாய்
மயில்தொடர் இயலியாய் மருவல் நன்றுஎனு. 253

*பங்கயச் செல்வியை மனத்துப் பாவியா
அங்கையின் ஆயமந் திரத்தை ஆய்ந்தனள்
திங்களில் சிறந்தொளிர் முகத்தள் செவ்வியள்
பொங்கொளி விசும்பினில் பொலியத் தோன்றினுள். 254

வேறு

இராமனுக்கு எதிரே சூர்ப்பநகை ஓர் அழகியாக வருதல்

*பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிமிர் சீறடிய ளாகி
அஞ்சொல்இள மஞ்ஞைஎன அன்னம்என மின்னும்
வஞ்சிஎன நஞ்சம்என வஞ்சமகள் வந்தாள். 255

பொன்ஒழுகு பூவில்உறை பூவைஎழில் பூவை
பின்எழில்கொள் வாள்இணை பிறழ்ந்தொளிர் முகத்தாள்
கன்னிஎழில் கொண்டது கலைத்தட மணித்தேர்
மின்இழிவ தன்மைஇது விண்இழி வதென்ன. 256

*கானின்உயர் கற்பகம் உயிர்த்தகதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமம்நிறை வாசத்
தேனின்மொழி உற்றுஇனிய செவ்விநனி பெற்றுஓர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள். 257

*நூபுரமும் மேகலையும் நூலும்அறல் ஓதிப்
பூமுரலும் வண்டும்இவை பூசல்இடும் ஓசை
தாம்உரைசெய் கின்றதொரு தையல்வரும் என்னுக்
கோமகனும் அத்திசை குறித்தனன் விழித்தான். 258

*விண்அருள வந்ததொரு மெல்அமுதம் என்ன
வண்ணமுலை கொண்டுஇடை வணங்கவரு போழ்தத்து
எண்அருளி ஏழைமை துடைத்துஎழும்மெய்ஞ் ஞானக்
கண்அருள்செய் கண்ணன்இரு கண்ணின்எதிர் கண்டான். 259

*பேர்உழைய நாகர்உல கில்பிறிதின் வானில்
பார்உழையின் இல்லதொரு மெல்உருவு பாரா
ஆர்உழை அடங்கும்அழ கிற்குஅவதி உண்டோ
நேரிழையர் யாவர்இவர் நேர்என நினைந்தான். 260

*அவ்வயின்அவ் ஆசைதன் அகத்துடைய அன்னுள்
செவ்விமுகம் உன்னிஅடி செங்கையின் இறைஞ்சா
வெவ்விய நெடுங்கண்அயில் வீசிஅயல் பாரா
நவ்வியின் ஒதுங்கிஇறை நாணிஅயல் நின்ருள். 261

*தீதில்வர வாகதிரு நின்வரவு சேயோய்
போதஉளது எம்உழைஓர் புண்ணியம தன்ருே
ஏதுபதி ஏதுபெயர் யாவர்உறவு என்ருன்
வேதமுதல் பேதையவள் தன்நிலை விரிப்பாள். 262

வேறு

இராமனிடம் சூர்ப்பநகை தன்னைப்பற்றிய விபரங்களைக் கூறுதல்

*பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் துணைவ னை செங்கையோன் தங்கை திக்கின்
மாஎலாம் தொலைத்து வெள்ளி மலைஎடுத்து உலகம் மூன்றும்
காவலோன் பின்னை காம வல்லியாம் கன்னி என்ருள். 263

அவ்வுரை கேட்ட வீரன் ஐயுறும் மனத்தான் செய்கை
செவ்விதுஅன்று அறித லாகும் சிறிதின்என் றுணரச் செங்கண்
வெவ்உரு அமைந்தோன் தங்கை என்பது மெய்ம்மை யாயின்
இவ்உரு இயைந்த தன்மை இயம்புதி இயல்பின் என்ருன். 264

தூயவன் பணியா முன்னம் சொல்லுவாள் சோர்வி லாள்அம்
மாயவல் அரக்க ரோடு வாழ்வினை மதிக்க லாதேன்
ஆய்வுறு மனத்தே ஞகி அறம்தலை நிற்ப தானேன்
தீவினை தீய நோற்றுத் தேவரில் பெற்ற தென்ருள். 265

இமையவர் தலைவ னேயும் எளிமையின் ஏவல் செய்யும்
அமைதியின் உலகம் மூன்றும் ஆள்பவன் தங்கை யாயின்
சுமையுறு செல்வத் தோடும் தோன்றலை துணையும் இன்றித்
தமியைநீ வருதற் கொத்த தன்மைஎன் தையல் என்ருன். 266

வீரன்அஃது உரைத்த லோடும் மெய்இலாள் விமல யான்அச்
சீரிய ரல்லார் மாட்டுச் சேர்கிலென் தேவர் பாலும்
ஆரிய முனிவர் பாலும் அடைந்தனென் இறைவ ஈண்டுஓர்
காரியம் உண்மை நின்னைக் காணிய வந்தேன் என்ருள். 267

அன்னவள் உரைத்த லோடும் ஐயனும் அறிதற்கு ஒவ்வா
நன்னுதல் மகளிர் சிந்தை நன்னெறிப் பால அல்ல
பின்இது தெரியும் என்னுப் பெய்வளைத் தோளி என்பால்
என்னகா ரியத்தை சொல்அஃது இயையுமேல் இழைப்பல் என்ருன். 268

263-ம் பாட்டு : பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி - பிரமனுடைய மகனை புலத்தியனின் மைந்தன் விச்சிரவசு முனிவனுடைய மகள். சேவலோன் துணைவன் - (சே+வலோன்) மாட்டு வாகனம்

தாம்உறு காமத் தன்மை தாங்களே உரைப்ப தென்பது
ஆம்எனல் ஆவது அன்ருல் அருங்குல மகளிர்க்கு அம்மா
ஏம்உறு உயிர்க்கு நோவேன் என்செய்கேன் யாரும் இல்லேன்
காமன்என் ருருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்ருள். 269

சேண்உற நீண்டு மீண்டு செவ்அரி சிதறி வெவ்வேறு
ஏண்உற மிளிர்ந்து நாணு விதம்புரண்டு இருண்ட வாட்கண்
பூண்இயல் கொங்கை அன்னுள் அம்மொழி புகறலோடும்
நாண்இலள் ஐயன் நொய்யள் நல்லளும் அல்லள் என்முன். 270

பேசலன் இருந்த வள்ளல் உள்ளத்தின் பெற்றி ஓராள்
பூசல்வண்டு அரற்றும் கூந்தல் பொய்ம்மகள் புகன்ற என்கண்
ஆசைகண்டு அருளிற் றுண்டோ அன்றெனல் உண்டோ என்னும்
ஊசலால் உலாவு கின்ருள் மீட்டும்ஓர் உரையைச் சொல்வாள். 271

எழுதரு மேனி யாய்ஈண்டு எய்தியது அறிந்தி லாதேன்
முழுதுணர் முனிவர் ஏவல் செய்தொழில் முறையின் முற்றிப்
பழுதறு பெண்மை யோடும் இளமையும் பயனின் றேகப்
பொழுதொடு நாளும் வாளா கழிந்தன போலும் என்ருள். 272

நிந்தனை அரக்கி நீதி நிலைஇலாள் வினைமற்று எண்ணி
வந்தன ளாகும் என்றே வள்ளலும் மனத்துட் கொண்டான்
சுந்தரி மரபிற் கொத்த தொன்மையின் துணிவிற்று அன்ருல்
அந்தணர் பாவை நீயான் அரசரில் வந்தேன் என்முன். 273

ஆரண மறையோன் எந்தை அருந்ததிக் கற்பின் எம்மோய்
தாரணி புரந்த சால கடங்கடர் மரபின் தையல்
போர்அணி பொலம்கொள் வேலாய் பொருந்தலை இகழ்தற் கொத்த
காரணம் இதுவே யாயின் என்உயிர் காண்பென் என்ருள். 274

அருத்தியள் அனைய கூற அகத்துறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு கின்ற நீலக் கொண்டல்உண் டாட்டம் கொண்டான்
வருத்தம்நீங்கு அரக்கர் தம்மில் மானுடர் மணத்தல் நங்கை
பொருத்தமன்று என்று சாலப் புலமையோர் புகல்வர் என்முன். 275

உடைய சிவனின் நண்பன். செங்கையோன் - குபேரன். காவலோன் - இராவணன். விச்சிரவசு முனிவனுக்குப் பரத்துவாச முனிவனின் மகளுடைய வயிற்றில் பிறந்தவன் குபேரன். அதே விச்சிரவசுவுக்கு சுமாலி என்ற அரக்கனின் மகள் கேகசியின் வயிற்றில் பிறந்தவர்கள் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பநகை ஆகியோர். இதனுல் குபேரனுக்குச் சூர்ப்பநகை தங்கை ஆகினுள். கன்னி - கல்யாணமாகாதவள் (உண்மையில் சூர்ப்பநகை ஒரு விதவை.) 274-ம் பாட்டு: சாலகடங்கடர் - சாலகடங்கடை என்ற அரக்கியின் வம்சத்தில் தோன்றியவர்கள். அவளுடைய கணவன் வித்யுத்கேசன். சாலகடங்கடையின் வயிற்றில் பிறந்தவன் சுகேசன். சுகேசனுடைய மக்கள் மாலியவான், சுமாலி, மாலி ஆகியோர். சுமாலியின் மகளான கேகசி, இராவணனுக்குத் தாய்.

பராவரும் சிரத்தை ஆரும் பத்தியின் பயத்தை ஓராது
இராவணன் தங்கை என்றது ஏழைமைப் பாலது என்னு
அராவணை அமலன் அன்னாய் அறிவித்தேன் முன்னம் தேவர்ப்
பராவினில் நீங்கி னேன்அப் பழிபடு பிறவி என்றாள். 276

ஒருவனே உலகம் மூன்றிற்கு ஓங்கொரு தலைவன் ஊங்கில்
ஒருவனே குபேரன் நின்னோடு உடன்பிறந் தவர்கள் அன்னார்
தருவரேல் கோடும் அன்றேல் தமியையே றிடத்துச் சார
வெருவுவென் நங்கை என்றான் வேதத்தின் அறிவை வென்றான். 277

கந்தருவ முறைப்படித் தன்னை மணந்துகொள்ள இராமனைச் சூர்ப்பநகை வேண்டல்

*காந்தர்ப்பம் என்ப துண்டால் காதலில் கலந்த சிந்தை
மாந்தர்க்கும் மடந்தை மார்க்கும் மறைகளே வகுத்த கூட்டம்
ஏந்தல்பொற் றோளி னாய்இஃது இயைந்தபின் எனக்கு மூத்த
வேந்தர்க்கும் விருப்பிற் றாகும் வேறும்ஓர் உரைஉண் டென்றாள். 278

*முனிவரோடு உடையர் முன்னே முதிர்பகை முறைமை நோக்கார்
தனியைநீ ஆத லால்மற்று அவரொடும் தழுவற் கொத்த
வினையம்ஈது அல்லது இல்லை விண்ணும்நின் ஆட்சி யாக்கி
இனியராய் அன்னர் வந்துன் ஏவலின் நிற்பர் என்றாள். 279

*நிருதர்தம் அருளும் பெற்றேன் நின்நலம் பெற்றேன் நின்னோடு
ஒருவரும் செல்வத்து யாண்டும் உறையவும் பெற்றேன் ஒன்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னு
வரிசிலை வடித்த தோளான் வாள்எயிறு இலங்க நக்கான். 280

*விண்ணிடை இம்பர் நாகர் விரிஞ்சனே முதலோர்க் கெல்லாம்
கண்ணிடை ஒளியின் பாங்கர்க் கடிகமழ் சாலை நின்றும்
பெண்ணிடை அரசி தேவர் பெற்றநல் வரத்தால் பின்னர்
மண்ணிடை மணியின் வந்த வஞ்சியே போல்வாள் வந்தாள். 281

சீதையைச் சூர்ப்பநகை காணுதல்

*ஊன்சுட உணங்கு பேழ்வாய் உணர்விலி உருவம் நாறும்
வான்சுடர்ச் சோதி வெள்ளம் வந்திடை வயங்கல் நோக்கி
மின்சுடர் விண்ணும் மண்ணும் விரிந்தபோர் அரக்கர் என்னும்
கான்சுட முளைத்த கற்பின் கனலியைக் கண்ணில் கண்டாள். 282

மருஒன்று கூந்த லாளை வனத்துஇவன் கொண்டு வாரான்
உருஇங்குஇது உடைய ராக மற்றையோர் யாரும் இல்லை
அரவிந்த மலருள் நீங்கி அடிஇணை படியில் தோயத்
திருஇங்கு வருவாள் கொல்லோ என்றுஅகம் திகைத்து நின்றாள். 283

*பண்புற நெடிது நோக்கிப் படைக்குநர் சிறுமை யல்லால்
எண்பிறங்கு அழகிற்கு எல்லை இல்லையாம் என்று நின்றாள்
கண்பிற பொருளில் செல்லா கருத்தெனின் அஃதே கண்ட
பெண்பிறந் தேனுக்கு என்றால் என்படும் பிறருக் கென்றாள். 284

*பொருதிறத் தானை நோக்கிப் பூவையை நோக்கி நின்ருள்
கருதமற்று இனிவே றில்லை கமலத்துக் கடவுள் தானே
ஒருதிறத்து உணர நோக்கி உருவினுக்கு உலகம் மூன்றின்
இருதிறத் தார்க்கும் செய்த வரம்புஇவர் இருவர் என்ருள். 285

*பொன்னைப்போல் ஒளிரும் மேனிப் பூவைப்பூ வண்ணத் தான்இம்
மின்னைப்போல் இடையா ளோடு மேவும்மெய் உடையன் அல்லன்
தன்னைப்போல் தகையோர் இல்லாத் தளிரைப்போல் அடியி ளுளும்
என்னைப்போல் இடையே வந்தாள் இகழ்விப்பேன் இவளை என்னு.286

*வரும்இவள் மாயம் வல்லள் வஞ்சனை அரக்கி நெஞ்சம்
தெரிவிலள் தேறும் தன்மை சீரியோய் செயலிற்று அன்ருல்
உருவமும் மெய்யது அன்ருல் ஊன்நுகர் வாழ்க்கை யாளை
வெருவினென் எய்தி டாமல் விலக்குதி வீர என்ருள். 287

*ஒள்ளிதுன் உணர்வு மின்னே உன்னையார் ஒளிக்கும் ஈட்டார்
தெள்ளிய நலத்தி ளுல்உன் சிந்தனை தெரிந்த தம்மா
கள்ளம்வல் அரக்கி போலாம் இவளைநீ காண்டி என்னு
வெள்ளிய முறுவல் மூத்தம் வெளிப்பட வீரன் நக்கான். 288

*ஆயிடை அமுதின் வந்த அருந்ததிக் கற்பின் அஞ்சொல்
வேயிடை தோளி ளுளும் வீரனைச் சேரும் வேலை
நீஇடை வந்த தென்னை நிருதர்தம் பாவை என்னுக்
காய்எரி அனைய கள்ள உள்ளத்தாள் கதித்த லோடும் 289

*அஞ்சினள் வஞ்சி யன்ன மின்னிடை அலச ஓடிப்
பஞ்சின்மெல் அடிகள் நோவப் பதைத்தனள் பருவக் கால
மஞ்சிடை வயங்கித் தோன்றும் பவளத்தின் வல்லி என்னக்
குஞ்சரம் அனைய வீரன் குவவுத்தோள் தழுவிக் கொண்டாள். 290

*வளைஎயிற் றவர்க ளோடு வரும்வினை யாட்டென் ருலும்
வினைவன தீமை யேயாம் என்பதை உணர்ந்து வீரன்
உளைவன இயற்றேல் ஒல்லை உன்நிலை உணரு மாயின்
இளையவன் முனியும் நங்கை ஏகுதி விரைவின் என்ருன். 291

பொற்புடை அரக்கி பூவில் புனலினில் பொருப்பில் வாழும்
அற்புடை உள்ளத் தாரும் அனங்கனும் அமரர் மற்றும்
எற்பெறத் தவம்செய் கின்ருர் என்னைநீ இகழ்வ தென்னே
நற்பொறை நெஞ்சின் இல்லாக் கள்வியை நச்சி என்ருள். 292

*தன்னெடும் தொடர்வி லாதேம் என்னவும் தவிராள் தான்இக்
கல்நெடும் மனத்தி சொல்லும் கள்ளவா சகங்கள் என்னு
மின்னெடு நடந்து செல்லும் மேகம்போல் மிதிலை வேந்தன்
பொன்னெடும் புனிதன் போய்அப் பூம்பொழில் சாலை புக்கான். 293

*புக்கபின் போய தென்னும் உணர்வினள் பொறையின் நீங்கி
உக்கதாம் உயிரள் ஒன்றும் உயிர்த்திலள் ஒடுங்கி நின்ருள்
தக்கிலள் மனத்துள் யாதும் தழுவிலள் சலமும் கொண்டாள்
மைக்கருங் கூந்த லாள்மாட்டு அன்பினில் வலியன் என்பாள். 294

285-ம் பாட்டு: இருதிறத்தார்-ஆண்களும், பெண்களும்.

*நின்றிலள் அவனைச் சேரும் நெறியினை நினைந்து போனாள்
இன்றிவன் ஆகம் புல்லேன் எனின்உயிர் இழப்பென் என்னாப்
பொன்திணி சரளச் சோலைப் பளிக்கறைப் பொதும்பர் புக்காள்
சென்றது பரிதி மேல்பால் செக்கர்வந்து இறுத்த தன்றே. 295

வேறு

சூர்ப்பநகையின் காமவேதனை

*அழிந்த சிந்தைய ளாய்அயர் வாள்வயின்
மொழிந்த காமக் கடுங்கனல் மூண்டதால்
வழிந்த நாகத்தின் வன்தொளை வாள்எயிற்று
இழிந்த கார்விடம் ஏறுவ தென்னவே. 296

*தாட கைக்கொடி யாள்தட மார்பிடை
ஆட வர்க்கர சன்அயில் அம்புபோல்
பாட வத்தொழில் மன்மதன் பாய்கணை
ஓட உட்கி உயிர்உலைந் தாள்அரோ. 297

*கலைஉ வாமதி யேகறி யாகவன்
சிலையின் மாரனைத் தின்னும் நினைப்பினாள்
மலைய மாருத மாநெடும் காலவேல்
உலைய மார்பிடை ஊன்றிட ஓயுமால். 298

*அலைக்கும் ஆழி அடங்கிட அங்கையால்
மலைக்கு லங்களில் தூர்க்கும் மனத்தினாள்
நிலைக்கும் வானின் நெடுமதி நீள்நிலா
மலைக்க நீங்கும் மிடுக்கினள் மாந்துவாள். 299

*பூவெ லாம்பொடி யாகஇப் பூமியுள்
காவெ லாம்ஒடிப் பென்எனக் காந்துவாள்
சேவ லோடுஉறை செந்தலை அன்றிலின்
நாவி னால்வலி எஞ்ச நடுங்குவாள். 300

அணவுஇல் திங்களை நுங்க அராவினைக்
கொணர்வென ஓடி எனக்கொதித் துன்னுவாள்
பணையின் மென்முலை மேல்பனி மாருதம்
புணர ஆருயிர் வெந்து புழுங்குமால். 301

*கைக ளால்தன் கதிர்இளங் கொங்கைமேல்
ஐய தண்பனி அள்ளினள் அப்பினள்
மொய்கொள் தீயிடை வெந்து முருங்கிய
வெய்ய பாறையில் வெண்ணெய் நிகர்க்குமால். 302

*அளிக்கும் மெய்உயிர் கான்றுஅழல் அஞ்சினள்
குளிக்கும் நீரும் கொதித்தெழக் கூசுமால்
விளிக்கும் வேலையை வெங்கண் அனங்கனை
ஒளிக்க லாம்இடம் யாதென உன்னுமால். 303

*வந்து கார்மழை தோன்றினும் மாமணிக்
கந்து காணினும் கைத்தலம் கூப்புமால்
இந்து காந்தத்தின் ஈரநெ டுங்கலும்
வெந்து காந்த வெதும்புறு மேனியாள். 304

வாம மாமதி யும்பனி வாடையும்
காம னும்தனைக் கண்டுண ராவகை
நாம வாள்எயிற்று ஓர்கத நாகம்வாழ்
சேம மால்வரை யின்முழை சேருமால். 305

அன்ன காலை அழல்மிகு தென்றலும்
முன்னின் மும்மடி யாய்முலை வெந்துக
இன்ன வாசெய்வ தென்றறி யாதுஇளம்
பொன்னின் வார்தளி ரில்புரண் டாள்அரோ. 306

*வீரன் மேனி வெளிப்பட வெய்யவள்
கார்கொள் மேனியைக் கண்டன ளாம்எனச்
சோரும் வெள்கும் துணுக்கெனும் அவ்உருப்
பேரும் கால்வெம் பிணியிடைப் பேருமால். 307

*ஆகக் கொங்கையின் ஐயன்என்று அஞ்சன
மேகத் தைத்தழு வும்அவை வெந்தன
போகக் கண்டு புலம்பும்அப் புன்மையாள்
மோகத் துக்கொர் முடிவும்உண் டாம்கொலோ. 308

*ஊழி வெங்கனல் உற்றனள் ஒத்தும்அவ்
ஏழை ஆவி இறந்திலள் என்பரால்
ஆழி யானை அடைந்தனள் பின்னையும்
வாழ லாம்எனும் ஆசை மருந்தினே. 309

*வஞ்ச னைக்கொடு மாயை வளர்க்கும்என்
நெஞ்சு புக்குஎன தாவத்தை நீக்கெனும்
அஞ்ச னக்கிரி யேஅரு ளாய்எனும்
நஞ்சு நக்கினள் போல நடுங்குவாள். 310

*காவி யோகய லோஎனும் கண்இணைத்
தேவி யோதிரு மங்கையின் செவ்வியாள்
பாவி யேனையும்பார்க்கும்கொ லோஎனும்
ஆவி ஒயினும் ஆசையின் ஒய்விலாள். 311

மாண்ட கற்புடை யாள்மலர் மாமகள்
ஈண்டி ருக்கும்நல் லாள்மகள் என்னுமால்
வேண்ட கிற்பின்அ னல்வர மெய்யிடைத்
தீண்ட கிற்பதன் றேதெறும் காமமே 312

*ஆன்ற காதல் அஃதுற எய்துழி
மூன்று லோகமும் மூடும் அரக்கராம்
ஏன்ற காரிருள் நீக்க இராகவன்
தோன்றி னன்என வெய்யவன் தோன்றினன். 313

307-ம் பாட்டு: வெளிப்பட - உருவெளித் தோற்றமாகக் காணப்பட.

வேறு

*விடியல் காண்டலின் ஈண்டுதன் உயிர்கண்ட வெய்யாள்
படிஇ லாள்மருங்கு உள்அளவு எனைஅவன் பாரான்
கடிதின் ஓடினென் எடுத்துஒல்லைக் கரந்துஅவள் காதல்
வடிவி னுனுடன் வாழ்வதே மதிஎன மதியா. 314

*வந்து நோக்கினள் வள்ளல்போய் ஒருமணித் தடத்தில்
சந்தி நோக்கினன் இருந்தது கண்டனள் தம்பி
இந்து நோக்கிய நுதலியைக் காத்துஅயல் இருண்ட
கந்தம் நோக்கிய சோலையில் இருந்தது காணுள். 315

*தனிஇ ருந்தனள் சமைந்ததுஎன் கருத்துஎனத் தாழ்வுற்று
இனிஇ ருந்துஎனக்கு எண்ணுவது இல்என எண்ணுத்
துனிஇ ருந்தவன் மனத்தினள் தோகையைத் தொடர்ந்தாள்
கனிஇ ரும்பொழில் காத்துஅயல் இருந்தவன் கண்டான். 316

*நில்ல டீஎனக் கடுகினன் பெண்என நினைந்தான்
வில்ல டாதுஅவள் வீங்கெரி யாம்என விரிந்த
சில்அல் ஓதியைச் செங்கையின் திருகுறப் பற்றி
ஒல்வ யிற்றுஉதைத்து ஒளிகிளர் சுற்றுவாள் உருவி 317

சூர்ப்பநகையின் மூக்கு முதலியவற்றை இலக்குவன் அறுத்தல்

*ஊக்கித் தாங்கிவிண் படர்வென்என்று உருத்துஎழு வாளை
நூக்கி நொய்தினில் வெய்துஇழை யேல்என நுவலா
மூக்கும் காதும்வெம் முரண்முலைக் கண்களும் முறையால்
போக்கிப் போக்கிய சினத்தொடும் புரிகுழல் விட்டான். 318

அக்க ணத்துஅவள் வாய்திறந்து அரற்றிய அமலை
திக்க னைத்தினும் சென்றது தேவர்தம் செவியும்
புக்கது உற்றது புகல்வதுஎன் மூக்கெனும் புழையூடு
உக்க சோரியின் ஈரம்உற்று உருகியது உலகம். 319

*கொலைது மித்துயர் கொடுங்கதிர் வாளின்அக் கொடியாள்
முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
மலைது மித்தென இராவணன் மணியுடை மகுடம்
தலைது மித்தற்கு நாள்கொண்டது ஒத்ததோர் தன்மை. 320

*அதிர மாநிலத்து அடிபதைத்து அரற்றிய அரக்கி
கதிர்கொள் காலவேல் கரன்முதல் நிருதர்வெங் கதப்போர்
எதிர்இ லாதவர் இறுதியின் நிமித்தமா எழுந்துஆண்டு
உதிர மாரிபெய் கார்நிற மேகம்ஒத் துயர்ந்தாள். 321

உயரும் விண்ணிடை மண்ணிடை விழும்கிடந்து உழைக்கும்
அயரும் கைகுலைத்து அலமரும் ஆருயிர் சோரும்
பெயரும் பெண்பிறந் தேன்பட்ட பிழைஎனப் பிதற்றும்
துயரும் அஞ்சிமுன் தொடர்ந்திலாத் தொல்குடிப் பிறந்தாள். 322

*ஒற்றும் மூக்கினை உலைஉறு தீஎன உயிர்க்கும்
எற்றும் கையினை நிலத்தினில் இணைத்தடங் கொங்கை
பற்றும் பார்க்கும்மெய் வெயர்க்கும்தன் பருவலிக் காலால்
சுற்றும் ஓடும்போய்ச் சோரிநீர் சொரிதரச் சோரும். 323

*ஊற்று மிக்கநீர் அருவியின் ஒழுகிய குருதிச்
சேற்று வெள்ளத்துள் திரிபவள் தேவரும் இரியக்
கூற்றும் உட்கும்தன் குலத்தினேர் பெயரெலாம் கூறி
ஆற்று கிற்கிலள் பற்பல பன்னிநின்று அழைத்தாள். 324

வேறு

சூர்ப்பநகை புலம்பல்

நிலைஎடுத்து நெடுநிலத்து நீஇருக்கத் தாபதர்கள்
சிலைஎடுத்துத் திரியும்இது சிறிதன்றே தேவர்எதிர்
தலைஎடுத்து விழியாமை சமைப்பதோ தழல்எடுத்தான்
மலைஎடுத்த தனிமலையே இவைகாண வாராயோ. 325

புலிதானே புறத்தாகக் குட்டிகோள் படாதுஎன்ன
ஒலிஆழி உலகுரைக்கும் உரைபொய்யோ ஊழியினும்
சலியாத மூவருக்கும் தானவர்க்கும் வானவர்க்கும்
வலியானே யான்பட்ட வலிகாண வாராயோ. 326

ஆர்த்துஆனைக்கு அரசுஉந்தி அமரர்கணத் தொடும்அடர்ந்த
போர்த்தானை இந்திரனைப் பொருதவனைப் போர்தொலைத்து
வேர்த்தானை உயிர்கொண்டு மீண்டானை வெரிந்பண்டு
பார்த்தானே யான்பட்ட பழிவந்து பாராயோ. 327

325-ம் பாட்டு: தழல் எடுத்தான் மலை எடுத்த தனிமலை-நெருப்பைக் கையில் ஏந்திய சிவனின் கயிலாய மலையை எடுத்த ஒப்பற்ற மலை போன்ற இராவணன். 327-ம் பாட்டு : இந்தப் பாட்டுக்குப் பல விதமாகப் பொருள் கூறுவதுண்டு :-1. யானைகளுக்கு அரசாகிய ஐராவதத்தில் ஏறிக்கொண்டு தேவர்கள் கூட்டத்தோடு வந்த, போரில்வல்ல சேனைகளை உடைய, இந்திரனை எதிர்த்துப் போரிட்டு அவனைத் தோற்கடித்து, அவன் பயத்தினுல் வேர்த்து உயிரைக் காப்பாற்றிக்கொண்டு திரும்பி ஓடும் போது அவனுடைய முதுகைக் கண்ட இராவணனே, நான் அடைந்த பழியை வந்து பார்க்கமாட்டாயோ ? 2.........இந்திரனை எதிர்த்த சம்பராசுரனை அழித்து, வேர்த்து நின்றவனுன தசரத னுடைய உயிரைக் கொண்டுபோன எமனை முன்னொரு காலத்தில் முதுகுகண்ட இராவணனே,......3.........இந்திரனைத் தோற்கடித்து, தன்னுடைய மூல பலப்படைகளுக்கு உயிரழிவு நேராதபடி காத்துத் திரும்பிவந்த இந்திரசித்துவுக்குப் பின்னுல், அவன் முதுகைப் பார்த்துக்கொண்டு வந்த இராவணனே,............

காற்றினையும் புனலினையும் கனலினையும் கடுங்காலக்
கூற்றினையும் விண்ணினையும் கோளினையும் பணிகோடற்கு
ஆற்றினைநீ ஈண்டுஇருவர் மானுடவர்க்கு ஆற்றாது
மாற்றினையோ உன்வலத்தைச் சிவன்தடக்கைவாள்கொண்டாய். 328

உருப்பொடியா மன்மதனை ஒத்துளரே ஆயினும்உன்
செருப்படியின் பொடிஒவ்வா மானுடரைச் சீறுதியோ
நெருப்புஅடியில் பொடிசிதற நிறைந்தமதத் திசையானை
மருப்புஒடியப் பொருப்புஇடியத் தோள்நிமிர்த்த வலியோனே. 329

தேனுடைய நறுந்தெரியல் தேவரையும் தெறும்ஆற்றல்
தானுடைய இராவணற்கும் தம்பியர்க்கும் தவிர்ந்ததோ
ஊனுடைய உடம்பினராய் எம்குலத்தோர்க்கு உணவாய
மானுடவர் மருங்கேபுக்கு ஒடுங்கினதோ வலிஅம்மா. 330

மரன்ஏயும் நெடுங்கானில் மறைந்துறையும் தாபதர்கள்
உரனேயோ அடல்அரக்கர் ஒய்வேயோ உற்றெதிர்ந்தார்
அரனேயோ அயனேயோ அரியேயோ எனும்ஆற்றல்
கரனேயோ யான்பட்ட கையறவு காணாயோ. 331

இந்திரனும் அரன்அயனும் இமையவரும் பணிகேட்பச்
சுந்தரிபல் லாண்டுஇசைப்ப உலகுஏழும் தொழுதேத்தச்
சந்திரன்பொற் குடைநிழற்ற நீஇருக்கும் சவைநடுவே
வந்தடியேன் நாணாது முகம்காட்ட வல்லேனே. 332

*உரம்நெரிந்து விழஎன்னை உதைத்துருட்டி மூக்கரிந்த
நரன்இருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புதோ
கரன்இருந்த வனம்அன்றோ இவைபடவும் கடவேனோ
அரன்இருந்த மலைஎடுத்த அண்ணாவோ அண்ணாவோ. 333

328-ம் பாட்டு: காற்று - வாயு. புனல் - வருணன். கனல் - அக்கினி. கோள் - நவக்கிரகங்கள். சிவன் தடக்கை வாள் - சிவனால் கொடுக்கப்பட்ட சந்திரஹாஸம் என்ற வாள். 329-ம் பாட்டு: இந்தச் செய்யுள் சம்பந்தமாகப் பின்வருமாறு ஒரு கட்டுக்கதை உண்டு: ஸ்ரீரங்கத்தில் கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய காலத்தில், இந்தப் பாட்டை வாசிக்க, இதைக் கேட்ட ஒருவர் இராமனையும் இலக்குவனையும் செருப்பின் அடியில் ஒட்டியுள்ள பொடியாகக் கூறுவது அபசாரம் அல்லவா என்று கேட்டார். அதற்குக் கம்பர் பதில் சொல்லுவதற்கு முன்னமே நாதமுனிகள் என்ற வைஷ்ணவ ஆச்சாரியார் புன்னகை செய்து, கம்பர் அவ்வாறு கூறவில்லை என்றும், சூர்ப்பநகைதான் கோபத்துடன் அவ்வாறு கூறியதாகக் கவிச்சக்கரவர்த்தி பாடியிருக்கிறார் என்றும் விளக்கம் தந்து, அத்துடன், ''செருப்படியின் பொடி ஒவ்வா'' என்பது, ''யுத்தபூமியின் தூசிக்குக் கூடச் சமானம் ஆகாத'' எனவும் பொருள்படும் என்றும் தெரிவிக்க, எல்லோரும் மகிழ்ந்தார்கள். 332-ம் பாட்டு: சுந்தரி - இந்திராணி.

*நவசயாலே மூக்கிழந்து நாணமிலா நான்பட்ட
வசையாலே நினதுபுகழ் மாசுண்ட தாகாதோ
திசையானை விசைகலங்கச் செருச்செய்து மருப்புஒசித்த
இசையாலே நிறைந்தபுயத்து இராவணவோ இராவணவோ. 334

*கானமதன் இடைஇருவர் காதோடு மூக்குஅரிய
மானமதால் பாவியேன் இவண்மடியக் கடவேனே
தானவரைக் கருவறுத்துச் சதமகனைத் தளைஇட்டு
வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ. 335

ஒருகாலத்து உலகுஏழும் உருத்துஎரியத் தனுஒன்றால்
திருகாத சினம்திருகித் திசையனைத்தும் செலநூறி
இருகாலில் புரந்தரனை இருஞ்சிறையின் இடுவித்த
மருகாவோ மானிடவர் வலிகாண வாராயோ. 336

*கல்ஈரும் படைத்தடக்கை அடல்கரதூ டணர்முதலா
அல்ஈரும் சுடர்மணிப்பூண் அரக்கர்குலத் தவதரித்தீர்
கொல்ஈரும் படைக்கும்ப கருணனைப்போல் குவலயத்துள்
எல்லீரும் உறங்குதிரோ யான்அழைத்தல் கேளீரோ. 337

சூர்ப்பநகை புலம்பிப் புரளும்போது இராமன் அங்கு வருதல்

என்றுஇன்ன பலபன்னி இகல்அரக்கி அழுதிரங்கிப்
பொன்துன்னும் படியகத்துப் புரள்கின்ற பொழுதகத்து
நின்றந்த நதியகத்து நிறைதவத்தின் குறைமுடித்து
வன்திண்கைச் சிலைநெடுந்தோள் மரகதத்தின் மலைவந்தான். 338

வந்தானை முகம்நோக்கி வயிறலைத்து மழைக்கண்ணீர்
செந்தாரைக் குருதியொடு செழுநிலத்தைச் சேறுக்கி
அந்தோஉன் திருமேனிக்கு அன்பிழைத்த வன்பிழையால்
எந்தாய்யான் பட்டபடி இதுகாண்என்று எதிர்விழுந்தாள். 339

விரிந்துஆய கூந்தலாள் வெய்யவினை யாதானும்
புரிந்தாள்என் பதுதனது பொருவரிய திருமனத்தால்
தெரிந்தான்இன்று இளையானே இவளைநெடுஞ் செவியொடுமூக்கு
அரிந்தான்என் பதும்உணர்ந்தான் அம்மனைநீ யார்என்றான். 340

அவ்வுரைகேட்டு அடல்அரக்கி அறியாயோ நீஎன்னைத்
தெவ்வுரைஎன்று ஓர்உலகும் இல்லாத சீற்றத்தான்
வெவ்இலைவேல் இராவணனும் விண்ணுலகம் முதலாக
எவ்வுலகும் உடையானுக்கு உடன்பிறந்தேன் யான்என்றாள். 341

334-ம் பாட்டு: நசையாலே - 'இராவணனுக்காகச் சீதையை எடுத்துக்கொண்டு போகவேண்டும் எனும் ஆசையாலே' (என்று சூர்ப்பணகை பொய்யாகக் கூறுகிறாள் எனப் பொருள் கூறுவர். உண்மையைச் சொன்னால் அவளுடைய குற்றம் வெளியாகிவிடும் அல்லவா? இராமன்மீது அவள்கொண்ட ஆசையாலே என்றும் பொருள்படுவதால்அவள் சிலேடையாகக் கூறியதாகவும் கருதலாம்.)
335-ம் பாட்டு: மருகாவோ - இந்திரசித்தே.

தாம்இருந்த தகைஅரக்கர் புகல்ஒழியத் தவம்இயற்ற
யாம்இருந்த நெடுஞ்சூழற்கு என்செயவந் தீர்எனலும்
வேம்இருந்தை எனக்கனலும் வெங்காம வெம்பிணிக்கு
மாமருந்தே நெருநலினும் வந்திலெனே யான்என்ருள். 342

செங்கயல்போல் கருநெடுங்கண் தேமருதா மரைஉறையும்
நங்கைஇவர் எனநெருநல் நடந்தவரோ நாம்என்னக்
கொங்கைகளும் குழைக்காதும் கொடிமூக்கும் குறைத்தழித்தால்
அங்கண்அர சேஒருவர்க்கு அழியாதோ அழகென்ருள். 343

மூரல்முறு வலன்இனிய மொய்ம்பினேன் முகம்நோக்கி
வீரவிரைந் தனைஇவள்தன் விடுகாதும் கொடிமூக்கும்
ஈரநினைந்து இவள்இழைத்த பிழைஎன்என்று இறைவினவச்
சூரன்நெடுந் தகையவனை அடிவணங்கிச் சொல்லுவான். 344

தேட்டந்தான் வாள்எயிற்றில் தின்னவோ தீவினையோர்
கூட்டந்தான் புறத்துளதோ குறித்தபொருள் அறிந்திலமால்
நாட்டந்தான் எரிஉமிழ நல்லாள்மேல் பொல்லாதாள்
ஒட்டந்தாள் அரிதின்இவள் உடன்றுஎழுந்தாள் எனஉரைத்தான். 345

ஏற்றவனை வரிசிலையோன் இயம்பாமுன் இகல்அரக்கி
சேற்றவனை தன்கணவன் அருகிருப்ப சினம்திருகிச்
சூல்தவளை நீர்உழக்கும் துறைகெழுநீர் வளநாடா
மாற்றவனைக் கண்டக்கால் அழலாதோ மனம்என்ருள். 346

பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலத்தை ஒருங்குஅவிப்பான்
தேடிப்போந் தனம்இன்று தீமாற்றம் சிலவிளம்பி
வீடிப்போ காதேஇம் மெய்வனத்தை விட்டுஅகல
ஓடிப்போ என்றுரைப்ப உரைகடந்தாற்கு அவள்உரைப்பாள். 347

தன்னை மணந்துகொள்ளுமாறு இராமனைச் சூர்ப்பநகை வேண்டுதல்

நரைதிரையொன் றில்லாத நான்முகனே முதல்அமரர்
கரையிறந்தோர் இராவணற்குக் கரம்இறுக்கும் குடிஎன்ருல்
விரையும்இது நன்றன்று வேருக யான்உரைக்கும்
உரைஉளது நுமக்குறுதி உணர்வுளதேல் என்றுரைப்பாள். 348

ஆக்கரிய மூக்குஉங்கை அரியுண்டாள் என்ருரை
நாக்கரியும் தயமுகனுர் நாகரிக ரல்லாமை
மூக்கரிந்து நும்குலத்தை முதல்அரிந்தீர் இனிஉமக்குப்
போக்கரிதுஇவ் அழகையெல்லாம் புல்லிடையே உகுத்தீரே. 349

343-ம் பாட்டு: நாம்- (இங்கே மரியாதை காரணமாக) நீர் (என்று அர்த்தம்) 346-ம் பாட்டு: ஏற்ற வனை வரிசிலையோன் - கட்டமைந்த வில்லை வளைத்துக் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் இலக்குவன்.

வான்காப்போர் மண்காப்போர் மாநாகர் வாழ்உலகம்
தான்காப்போர் இனித்தங்கள் தலைகாத்து நின்றுங்கள்
ஊன்காக்க உரியார்யார் என்னைஉயிர் நீர்காக்கின்
யான்காப்பென் அல்லால்அவ் இராவணனுர் உளர்என்ருல். 350

காவல்திண் கற்பமைந்தார் தம்பெருமை தாம்கழறுர்
ஆவல்பே ரன்பினுல் அறைகின்றேன் ஆம்அன்ருே
தேவர்க்கும் வலியான்தன் திருத்தங்கை யாள்இவள்ஈண்டு
ஏவர்க்கும் வலியாள்என்று இளையானுக்கு இயம்பீரோ. 351

மாப்போரில் புறம்காப்பென் வான்சுமந்து செலவல்லேன்
தூப்போலக் கனிபலவும் சுவையுடைய தரவல்லேன்
காப்போரைக் கைத்துஎன்நீர் கருதியது தருவேன்இப்
பூப்போலும் மெல்லியலால் பொருள்என்னே புகல்வீரே. 352

குலத்தாலும் நலத்தாலும் குறித்தனவே கொணர்தக்க
வலத்தாலும் மதியாலும் வடிவாலும் மடத்தாலும்
நிலத்தாரும் விசும்பாரும் நேரிழையார் என்னைப்போல்
சொலத்தான்இங்கு உரியாரைச் சொல்லீரோ வல்லீரேல். 353

போக்கினீர் என்நாசி போய்த்துஎன்நீர் போற்றுவிரேல்
ஆக்குவென்ஓர் நொடிவரையில் அழகமைவென் அருள்கூரும்
பாக்கியம்உண் டெனின்அதனுல் பெண்மைக்குஓர் பழுதுண்டோ
மேக்குயரும் நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகைஅன்ருே. 354

விண்டாரே அல்லாரோ வேண்டாதார் மனம்வேண்டின்
உண்டாய காதலின்என் உயிர்என்பது உமதன்ருே
கண்டாரே காதலிக்கும் கட்டழகும் விடம்அன்ருே
கொண்டாரே கொண்டாடும் உருப்பெற்ருல் கொள்ளீரோ. 355

சிவனும்மலர்த் திசைமுகனும் திருமாலும் தெறுகுலிசத்து
அவனும்அடுத்து ஒன்ருகி நின்றன்ன உருவோனே
புவனம்அனைத் தையும்ஒருதன் பூங்கணையால் உயிர்வாங்கும்
அவனும்உனக்கு இளையானே' இவனேபோல் அருள்இலனுல். 356

வேறு

பொன்உருவப் பொருகழலீர் புழைகாண
மூக்கரிவான் பொருள்வே றுண்டோ
இன்உருவம் இதுகொண்டுஇங்கு இருந்தொழியும்
நம்மருங்கே ஏகாள் அப்பால்
பின்இவளை அயல்ஒருவர் பாரார்என் —
றேஅரிந்தீர் பிழைசெய் தீரோ
அன்னதனை அறிந்தன்ருே அன்புஇரட்டி
பூண்டதுநான் அறிவி லேனே. 357

வெப்பழியா நெடுவெகுளி வேல்அரக்கர்
ஈதறிந்து வெகுண்டு நோக்கின்
அப்பழியால் உலகனைத்தும் நும்பொருட்டால்
அழிந்தனவாம் அறத்தை நோக்கி

ஒப்பழியச் செய்கில்லார் உயர்குலத்துத்
தோன்றினோர் உணர்ந்து நோக்கி
இப்பழியைத் துடைத்துதவி இனிதிருத்திர்
என்னெடும்என் றிறைஞ்சி நின்ருள். 358

அரக்கர் குலத்தை ஒழிக்கவே தான் தோன்றியிருப்பதாக இராமன் கூறுதல்

நாடறியாத் துயர்இழைத்த நவைஅரக்கி
நின்அன்னை தன்னை நல்கும்
தாடகையை உயிர்கவர்ந்த சரம்இருந்தது
அன்றியும்நான் தவம்மேற் கொண்டு
தோள்தகைய துறுமலர்த்தார் இகல்அரக்கர்
குலம்தொலைப்பான் தோன்றி நின்றேன்
போடுஅகலப் புல்ஒழுக்கை வல்அரக்கி
என்றிறைவன் புகலும் பின்னும். 359

தரைஅளித்த தனிநேமித் தயரதன்தன்
புதல்வர்யாம் தாய்சொல் தாங்கி
விரைஅளித்த கான்புகுந்தேம் வேதியரும்
மாதவரும் வேண்ட நீண்டு
கரைஅளித்தற்கு அரியபடைக் கடல்அரக்கர்
குலம்தொலைத்துக் கண்டாய் பண்டை
வரைஅளித்த குலமாட நகர்புகுவேம்
இவைதெரிய மனக்கொள் என்ருன். 360

நெறித்தாரை செல்லாத நிருதர்எதிர்
நில்லாதே நெடிய தேவர்
மறித்தார்ஈண்டு இவர்இருவர் மானிடவர்
என்னுது வல்லை யாகில்
வெறித்தாரை வேல்அரக்கர் விறல்இயக்கர்
முதலினர்நீ மிடலோர் என்று
குறித்தாரை யாவரையும் கொணருதியேல்
நின்எதிரே கோறும் என்ருன். 361

கொல்லலாம் மாயங்கள் குறித்தனவே
கொள்ளலாம் கொற்றம் முற்ற
வெல்லலாம் அவர்இயற்றும் வினையெல்லாம்
கடக்கலாம் மேல்வாய் நீங்கிப்
பல்எலாம் உறத்தோன்றும் பகுவாயாள்
என்னுது பார்த்தி யாயின்
நெல்எலாம் சுரந்தளிக்கும் நீர்நாட
கேள்என்று நிருதி கூறும். 362

359-ம் பாட்டு: சூர்ப்பநகையின் தாயான கேகசிக்குத் தாடகையைத் தாய் என்று இராமன் கூறுவது, அவர்களுக்கிடையே இருந்த நெருங்கிய அன்பையும் உறவையும் கருதியாகும்.

காம்பறியும் தோளானைக் கைவிடேர்
என்னினும்யான் மிகையோ கள்வர்
ஆம்பொறிஇல் அடல்அரக்க ரவரோடே
செருமலைய அமைந்தீ ராயின்
தாம்பொறியின் பலமாயம் தரும்பொறிகள்
அறிந்துஅவற்றைத் தடுப்பென் அன்றே
பாம்பறியும் பாம்பின்கால் எனமொழியும்
பழமொழியும் பார்க்கி லீரோ. 363

உளம்கோடற்கு அன்புஇழைத்தாள் உண்டொருத்தி
என்னுதியேல் நிருத ரோடும்
களம்கோடற்கு உரியசெருக் கண்ணியக்கால்
ஒருமூவேம் கலந்த காலைக்
குளம்கோடும் என்றெய்திக் கொடியதிறல்
வீரர்தமைக் கொன்ற பின்னர்
இளங்கோவோடு எனைஇருத்தில் இருகோளும்
சிறைவைத்தாற்கு இளையேன் என்றாள். 364

பெருங்குலாவு உறுநகர்க்கே ஏகும்நாள்
வேண்டும்உருப் பிடிப்பேன் அன்றேல்
அருங்கலாம் உற்றிருந்தான் என்னினும்ஈங்கு
இனையவன்தான் அறிந்த நாசி
ஒருங்குஇலா இவளோடும் உறைவேனே
என்பானேல் இறைவ ஒன்றும்
மருங்கிலா தவளோடும் அன்றோநீ
நெடுங்காலம் வாழ்ந்த தென்பாய். 365

என்றவள்மேல் இளையவன்தான் இலங்கிலைவேல்
கடைக்கணியா இவளை ஈண்டுக்
கொன்றுகளை யேமாயின் நெடிதுஅலைக்கும்
அருள்என்கொல் கோவே என்ன
நன்றுஅதுவே யாம்அன்றோ போகாளேல்
ஆகஎன நாதன் கூற
ஒன்றும்இவர் எனக்குஇரங்கார் உயிர்இழப்பேன்
நிற்கில்என அரக்கி உன்னு 366

364-ம் பாட்டு: குளம் கோடும் - குளம்பறித்து விடுவோம், அதாவது தலையைப் பறித்துவிடுவோம். குளம் - நெற்றி (ஆகுபெயராகித் தலையைக் குறிக்கிறது;) ''ரத்தக் குளமாக்கிவிடுவோம்'' என்று பொருள் கூறுவதும் உண்டு. இருகோளும்-சூரியன், சந்திரன் என்ற இரண்டு கிரகங்களையும். 336-ம் பாட்டு: ஆக - செய்யக் கடவது.

கரனை அழைத்துவரப்போவதாகச் சொல்லிக்கொண்டு சூர்ப்பநகை போதல்

ஏற்றநெடுங் கொடிமூக்கும் இருகாதும்
முலைஇரண்டும் இழந்தும் வாழ
ஆற்றுவனே வஞ்சனையால் உமைஉள்ள
பரிசறிவான் அமைந்த தன்றோ
காற்றினிலும் கனலினிலும் கடியானைக்
கொடியானைக் கரனை உங்கள்
கூற்றுவனை இப்பொழுதே கொணர்கின்றேன்
என்றுசலம் கொண்டு போனாள். 367

6. கரன் வதைப் படலம்

[கரன் என்ற அரக்கனை இராமன் கொன்றதுபற்றிக் கூறும் பகுதி]

*இருந்த மாக்கரன் தாள்இணை யின்மிசை
சொரிந்த சோரியள் கூந்தலள் தூம்பெனத்
தெரிந்த மூக்கினள் வாயினள் செக்கர்மேல்
விரிந்த மேகம் எனவிழுந் தாள்அரோ. 368

*அழுங்கும் நாள்இதுஎன்று அந்தகன் ஆணையால்
தழுங்கும் பேரி எனத்தனித்து ஏங்குவாள்
முழங்கும் மேகம் முடித்தவெந் தீயினால்
புழுங்கும் நாகம் எனப்புரண் டாள்அரோ. 369

*வாக்கிற்கு ஒப்பப் புகைமுந்து வாயினான்
நோக்கிக் கூசலர் நுன்னைஇத் தன்மையை
ஆக்கிப் போனவர் ஆர்சொல்என் றான்அவன்
மூக்கின் சோரி முழீஇக்கொண்ட கண்ணினாள். 370

*இருவர் மானிடர் தாபதர் ஏந்திய
வரிவில் வாட்கையர் மன்மதன் மேனியர்
தரும நீரர் தயரதன் காதலர்
செருவில் நேரும் நிருதரைத் தேடுவார். 371

*ஒன்றும் நோக்கலர் உன்வலி ஓங்குஅறம்
நின்று நோக்கி நிறுத்தும் நினைப்பினர்
வென்றி வேற்கை நிருதரை வேர்அறக்
கொன்று நீக்குதும் என்றுணர் கொள்கையார். 372

*மண்ணில் நோக்கரு வானினில் மற்றினில்
எண்ணில் நோக்குறின் யாவரும் நேர்கிலாப்
பெண்ணின் நோக்குடை யாள்ஒரு பேதைஎன்
கண்ணின் நோக்கி உரைப்பரும் காட்சியாள். 373

*கண்டு நோக்கரும் காரிகை யாள்தனைக்
கொண்டு போவல் இலங்கையர் கோக்கென
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்டம் ஆக்கினர் மூக்கெனச் சொல்லினள். 374

*கேட்ட னன்உரை கண்டிலன் கேடினர்
தோட்ட நுங்கின் தொளையுறும் மூக்கினைக்
காட்டுள ளஎழுந் தான்எதிர் கண்டவர்
நாட்டம் தீய உலகை நடுக்குவான். 375

*எழுந்து நின்றுஉலகு ஏழும் எரிந்துஉகப்
பொழிந்த கோபக் கனல்உகப் பொங்குவான்
கழிந்து போயினர் மானிடர் என்னுங்கால்
அழிந்த தோஇவ் அரும்பழி என்னுமால். 376

*வருக தேர்எனும் மாத்திரை மாடுளோர்
இருகை மால்வரை ஏழினேடு ஏழ்அனர்
ஒருகை யால்உல கேந்தும் உரத்தினர்
தருக இப்பணி எம்வயின் தான்என்றார். 377

*சூலம் வாள்மழுத் தோமரம் சக்கரம்
கால பாசம் கதைபொருங் கையினர்
வேலை ஞாலம் வெருவுறும் ஆர்ப்பினர்
ஆல காலம் திரண்டன்ன ஆக்கையார். 378

*வெம்பு கோபக் கனலர் விலக்கினர்
நம்பி எம்அடி மைத்தொழில் நன்றென
உம்பர் மேல்இன்று உருத்தனை போதியோ
இம்பர் மேல்இனி யாம்உளே மோஎன்றார் 379

*நன்று சொல்லினிர் நான்இச் சிறார்கள்மேல்
சென்று போர்செயின் தேவர் சிரிப்பரால்
கொன்று சோரி குடித்துஅவர் கொள்கையை
வென்று மீளுதிர் மெல்லிய லோடுஎன்றான். 380

*என்ன லோடும் விரும்பி இறைஞ்சினர்
சொன்ன நாணிலி அந்தகன் தூதென
அன்னள் பிற்படர் வார்என ஆயினர்
மன்னன் காதலர் வைகிடம் நண்ணினர். 381

*துமிலப் போர்வல் அரக்கர்க்குச் சுட்டியே
அமலத் தொல்பெயர் ஆயிரத்து ஆழியான்
நிமலப் பாதம் நினைவின் இருந்தஅக்
கமலக் கண்ணனைக் கையினில் காட்டினள். 382

*எற்று வாம்பிடித்து ஏந்துதும் என்குநர்
பற்று வாம்நெடும் பாசத்தின் என்குநர்
முற்று வாம்இறை சொல்முறை யால்எனச்
சுற்றி னர்வரை சூழ்ந்தன்ன தோற்றத்தார். 383

383-ம் பாட்டு: இறை - கரன்.

*ஏத்து வாய்மை இராமன் இளவலைக்
காத்தி தையலை என்றுதன் கற்பகம்
பூத்த தன்ன பொருவில் தடக்கையால்
ஆத்த நாணின் அருவரை வாங்கினன். 384

*வாங்கி வாளொடு வாளிபெய் புட்டிலும்
தாங்கித் தாமரைக் கண்ணன்அச் சாலையை
நீங்கி இவ்வழி நேர்மின் அடாஎன
வீங்கு தோளன் மலைதலை மேயினன். 385

மழுவும் வாளும் வயங்கொளி முச்சிகைக்
கழுவும் காலவெந் தியன்ன காட்சியார்
எழுவின் நீள்தடக் கைஎழு நான்கையும்
தழுவும் வாளிக ளால்தலம் சார்த்தினன். 386

*மரங்கள் போல்நெடு வாளொடு தோள்விழ
உரங்க ளால் அடர்ந் தார்க்குஉர வோன்விடும்
சரங்கள் ஓடின தைக்க அவர்கள்தம்
சிரங்கள் ஓடின தீயவள் ஓடினள். 387

*ஒளிரு வேல்கரற்கு உற்றது உணர்த்தினள்
குளிறு கோபவெங் கோளரி மாஅடக்
களிறெ லாம்படக் கைதலை மேலுறப்
பிளிறி ஓடும் பிடியன்ன பெற்றியாள். 388

*அங்குஅ ரக்கர் அவிந்தழிந் தார்எனப்
பொங்குஅ ரத்தம் விழிவழிப் போந்துக
வெங்க ரப்பெய ரோன்வெகுண் டான்விடைச்
சங்க ரற்கும் தடுப்பரும் தன்மையான். 389

*அழைஎன்று ஏவ அரக்கர்வன் போர்ப்படை
உழையர் ஓடி ஒருநொடி ஓங்கல்மேல்
மழைஎன் மாமுரசு ஏற்றினர் வல்லையின்
முழையின் வாள்அரி அஞ்ச முழக்குவார், 390

*பேரி யோசை பிறத்தலும் பெட்புறு
மாரி மேகம் வரம்பில வந்தெனத்
தேரின் சேனை திரண்டன தேவர்தம்
ஊரும் நாகர் உலகும் உலைந்தவே. 391

*போர்ப்பெ ரும்பணை பொம்என் முழக்கமா
நீர்த்த ரங்கம் நெடுந்தடந் தேர்களா
ஆர்த்தெ ழுந்தது இறுதியின் ஆர்கலிக்
கார்க்க ருங்கடல் கால்கிளர்ந் தென்னவே. 392

*காடு துன்றி விசும்பு கரந்தென
நீடி எங்கும் நிமிர்ந்த நெடுங்கொடி
ஓடும் எங்கள் பசிஎன்று உவந்தெழுந்து
ஆடு கின்ற அலகையின் ஆடவே. 393

*தறியின் நீங்கிய தாழ்தடக் கைத்துளைக்
குறிகொள் மாமத வேழக் குழுஅனுர்
செறியும் வாளொடு வாளிடை தேய்த்துகும்
பொறியின் கான்எங்கும் வெங்கனல் பொங்கவே. 394

*முருடுஇ ரண்டு முழங்குறத் தாக்கொலி
உருள்தி ரண்டுஎழும் தேரொலி யுள்புக
அருள்தி ரண்ட அருக்கன்தன் மேல்வழங்கு
இருள்தி ரண்டுவந்து ஈண்டிய தென்னவே. 395

*தலையில் மாசுணம் தாங்கிய தாரணி
நிலைநி லாது முதுகை நெளிப்புற
உலைவில் ஏழுல கத்தினும் ஓங்கிய
மலைஎ லாம்ஒரு மாடுதொக் கென்னவே. 396

வேறு

வல்லியக் குழாங்களோ மழையின் ஈட்டமோ
ஒல்இபத் தொகுதியோ ஓங்கும் ஓங்கலோ
அல்லமற்று அரிகளின் அனிக மேஎனப்
பல்பதி னுயிரம் படைக்கை வீரரே. 397

ஆளிகள் பூண்டன அரிகள் பூண்டன
மீளிகள் பூண்டன வேங்கை பூண்டன
ஞாளிகள் பூண்டன நரிகள் பூண்டன
கூளிகள் பூண்டன குதிரை பூண்டன. 398

ஏற்றினம் ஆர்த்தன ஏனம் ஆர்த்தன
காற்றினம் ஆர்த்தன கழுதை ஆர்த்தன
தோற்றின மாத்திரத்து உலகு சூழ்வரும்
பாற்றினம் ஆர்த்தன பணிலம் ஆர்த்தன. 399

தேரினம் துவன்றின சிறுகண் செம்முகக்
காரினம் நெருங்கின காலின் கால்வரு
தாரினம் குழுமின தடைஇல் கூற்றன்ன
பேரினம் கடல்எனப் பெயரும் காலையே. 400

மழுக்களும் அயில்களும் வயிர வாள்களும்
எழுக்களும் தோமரத் தொகையும் ஈட்டியும்
முழுக்கஅளும் முசுண்டியும் தண்டும் முத்தலைக்
கழுக்களும் உலக்கையும் கூல மாசமும். 401

குந்தமும் குலிசமும் கோலும் பாலமும்
அந்தம்இல் சாபமும் சரமும் ஆழியும்
வெந்தொழில் வலையமும் விளங்கு சங்கமும்
பந்தமும் கப்பணப் படையும் பாசமும். 402

ஆதியின் அருக்கனும் அனலும் அஞ்சுறும்
சோதிய சோரியும் தூவும் துன்னிய
ஏதிகள் மிடைந்தன இமைய வர்க்கெலாம்
வேதனை கொடுத்தன வாகை வேய்ந்தன. 403

ஆயிரம் ஆயிரம் களிற்றின் ஆற்றலர்
மாஇரு ஞாலத்தை விழுங்கும் வாயினர்
தீஎரி விழியினர் நிருதர் சேனையின்
நாயகர் பதின்மரோடு அடுத்த நால்வரே. 404

ஆறினோடு ஆயிரம் அமைந்த ஆயிரம்
கூறின ஒருபடை குறித்த அப்படை
ஏறின ஏழினது இரட்டி என்பரால்
ஊறின சேனையின் தொகுதி உன்னுவார். 405

உரத்தினர் உரும்என உரறும் வாயினர்
கரத்தெறி படையினர் கமலத் தோன்தரும்
வரத்தினர் மலைஎன மழைது யின்றெழு
சிரத்தினர் தருக்கினர் செருக்கும் சிந்தையார். 406

விண்அள விடநிமிர்ந் துயர்ந்த மேனியர்
கண்அள விடஅரும் மார்பர் காலினால்
மண்அள விடும்நெடு வலத்தர் வானவர்
எண்அள விடவரும் செருவென் றேறினார். 407

இந்திரன் முதலினோர் எறிந்த மாப்படை
சிந்தின தெவித்துகச் செறிந்த தோளினர்
அந்தகன் அடிதொழுது அடங்கும் ஆணையார்
வெந்தழல் உருவுகொண் டனைய மேனியார். 408

சூலமும் பாசமும் தொடர்ந்த செம்மயிர்ச்
சாலமும் தறுகணும் எயிறும் தாங்கினர்
ஆலமும் வெளிதெனும் நிறத்தர் ஆற்றலால்
காலனும் காலன்என்று அயிர்க்கும் காட்சியார். 409

கழலினர் தாரினர் கவச மார்பினர்
நிழலுறு பூணினர் நெறித்த நெற்றியர்
அழலுறு குஞ்சியர் அமரை வேட்டுவந்து
எழலுறு மனத்தினர் ஒருமை எய்தினர். 410

மருப்புஇரு மதகளிற்று அமரர் மன்னனும்
விருப்புறு முகத்தெதிர் விழிக்கின் வெந்இடும்
உருப்பொருது உலைவுறும் உலகம் மூன்றினும்
செருப்பெருத் தினவுறு சிகரத் தோளினர். 411

குஞ்சரம் குதிரைபேய் குரங்கு கோளரி
வெஞ்சினக் கரடிநாய் வேங்கை யாளிஎன்று
அஞ்சுறக் கனல்புரை முகத்தர் ஆர்கலி
நஞ்சுதொக் கெனப்புரை நயனத் தார்களும். 412

404-ம் பாட்டு : பதின்மரோடு அடுத்த நால்வர் - 14 பேர். 405-ம் பாட்டு : ஆறினோடு ஆயிரம் அமைந்த ஆயிரம் - ஆறாயிரம் ஆயிரங்கள்: 60 லக்ஷம்.

எண்கையர் எழுகையர் ஏழும் எட்டுமாய்க்
கண்கனல் சொரிதரும் முகத்தர் காலினர்
வண்கையின் வளைத்துயிர் வாரி வாயிலிட்டு
உண்கையின் உவகையர் உலப்பி லார்களும். 413

இயக்கரில் பறித்தன அவுணர் இட்டன
மயக்குறுத்து அமரரை வலியின் வாங்கின
துயக்கில்கந் தர்ப்பரைத் துரந்து வாரின
வியப்புறு படைக்கல விழுமம் பெற்றுளார். 414

கொடிதழை கவிகைவான் தொங்கல் குஞ்சரம்
படியுறு பதாகைமீ விதானம் பல்வகை
இடையிலாது எங்கணும் இசைய மீமிசை
மிடைதலின் உலகெலாம் வெயில் இழப்பவே. 415

எழுவரோடு எழுவராம் உலகம் ஏழொடுஏழ்
தழுவிய வென்றியர் தலைவர் தானையர்
மழுவினர் வாளினர் வயங்கு சூலத்தர்
உழுவையோடு அரிஎன உடற்றும் சீற்றத்தார். 416

வில்லினர் வாளினர் இதழின் மீதிடும்
பல்லினர் மேருவைப் பறிக்கும் ஆற்றலர்
புல்லினர் திசைதொறும் புரவித் தேரினர்
சொல்லின முடிக்குறும் துணிவின் நெஞ்சினர் 417

தூடணன் திரிசிராத் தோன்றல் ஆதியர்
கோடணை முரசினம் குளிறு சேனையர்
ஆடவர் உயிர்கவர் அலங்கல் வேயினர்
பாடவ நிலையினர் பலரும் சுற்றினர். 418

ஆன்றமை எறிபடை அழுவத்து ஆர்கலி
வான்தொடர் மேருவை வளைத்த தாம்என
ஊன்றின தேரினன் உயர்ந்த தோளினன்
தோன்றினன் கரன்நமன் துணுக்கம் எய்தவே. 419

அசும்புறு மதகரி புரவி ஆடகத்
தசும்புறு சயந்தனம் அரக்கர் தாள்தர
விசும்புறு தூளியால் வெண்மை மேயின
பசும்பரிப் பகலவன் பைம்பொற் றேர்அரோ. 420

வனம்துகள் பட்டன மலையின் வானுயர்
கனம்துகள் பட்டன கடல்கள் தூர்ந்தன
இனம்தொகு தூளியால் இசைப்பது என்இனிச்
சினம்தொகு நெடுங்கடற் சேனை செல்லவே. 421

நிலமிசை விசும்பிடை நெருக்க லால்நெடு
மலைமிசை மலையினம் வருவ போல்மலைத்
தலைமிசைத் தலைமிசைத் தாவிச் சென்றனர்
கொலைமிசை நஞ்செனக் கொதிக்கும் நெஞ்சினர். 422

வேறு

*வந்தது சேனை வெள்ளம் வள்ளியோன் மருங்கு மாய
பந்தமா வினையை மாளப் பற்றறு பெற்றி யோர்க்கும்
உந்தரு நிலைய தாகி உடன்உறைந்து உயிர்கள் தம்மை
அந்தகற்கு அளிக்கும் நோய்போல் அரக்கிமுன் னுகஅம்மா. 423

தூரியக் குரலின் வானின் முகில்கணம் துணுக்கம் கொள்ள
வார்சிலை ஒலியின் அஞ்சி உரும்எலாம் மறுக்கம் கொள்ள
ஆர்கலி ஆர்ப்பின் உட்கி அசைவுற அரக்கர் சேனை
போர்வனத் திருந்த வீரர் உறைவிடம் புக்க தன்றே. 424

வாய்புலர்ந்து அழிந்த மெய்யின் வருத்தத்த வழியில் யாண்டும்
ஒய்வில நிமிர்ந்து வீங்கும் உயிர்ப்பின உலைந்த கண்ண
தியவர் சேனை வந்து சேர்ந்தமை தெரியச் சென்று
வேய்தெரிந் துரைப்ப போன்ற புள்ளொடும் விலங்கும் அம்மா. 425

துளியின் படலை வந்து தொடர்வுற மரமும் தூறும்
தாளிடை ஒடியும் ஓசை சடசட ஒலிப்பக் கானத்து
ஆளியும் அரியும் அஞ்சி இரிதரும் அலக்கண் நோக்கி
மீளிமொய்ம் பினரும் சேனை மேல்வந்தது உளதென்று உன்னு. 426

மின்நின்ற சிலையன் வீரக் கவசத்தன் விசித்த வாளன்
பொன்நின்ற வடிம்பின் வாளிப் புட்டிலன் புகையும் நெஞ்சன்
நில்நின்று காண்டி யான்செய் நிலைஎன விரும்பி நேரா
முன்நின்ற பின்வந் தோனை நோக்கினன் மொழிய லுற்முன். 427

நெறிக்கொள்மா தவர்க்கு முன்னே நேர்ந்தனென் நிருதர் ஆவி
பறிக்குவென் யானே என்ற பழமொழி பழுது முமே
வெறிக்கொள்பூங் குழலி னளை வீரநீ வேண்டி னேன்யான்
குறிக்கொடு காத்தி இன்னே கொல்வென்இக் குழுவை என்னு 428

*மரன்படர் கானம் எங்கும் அதர்பட வந்த சேனை
கரன்படை என்ப தெண்ணிக் கருநிறக் கடலைக் கண்ணன்
சரன்படர் புட்டில் கட்டிச் சாபமும் தரித்தான் தள்ளா
உரன்படர் தோளில் மீளாக் கவசமிட்டு உடைவாள் ஆர்த்தான். 429

*மீளரும் செருவில் விண்ணும் மண்ணும்மென் மேல்வந் தாலும்
நாள்உலந்து அழியு மன்றே நான்உனக்கு உரைப்ப தென்னே
ஆளியின் துப்பி னய்இவ் அமர்எனக்கு அருளி நின்றுஎன்
தோளினைத் தின்னு கின்ற சோம்பினைத் துடைத்தி என்முன். 430

*என்றனன் இளைய வீரன் இசைந்திலன் இராமன் ஏந்தும்
குன்றன தோளின் ஆற்றல் உள்ளத்தின் உணரக் கொண்டான்
அன்றியும் அண்ணல் ஆணை மறுக்கிலன் அங்கை கூப்பி
நின்றனன் இருந்தான் கண்ணீர் நிலனுறப் புலர்கின் முள்பால். 431

423-ம் பாட்டு: மாள-மாள்விக்க, ஒழிக்க. 426—ம் பாட்டு: மீளி மொய்ம்பினர்-இராமனும் இலக்குவனும்.

*குழையுறு மதியம் பூத்த கொம்பனுள் குழைந்து சோரத்
தழையுறு சாலே நின்றும் தனிச்சிலே தரித்த மேரு
மழைஎன முழங்கு கின்ற வாள்எயிற் றரக்கர் காண
முழையினின்று எழுந்துசெல்லும் மடங்கலின் முனிந்துசென்ருன். 432

தோன்றிய தோன்றல் தன்னே சுட்டினள் காட்டிச் சொன்னுள்
வான்தொடர் மூங்கில் தந்த வயங்குவெந் தீஇது என்ன
தான்தொடர் குலத்தை எல்லாம் தொலேக்குமா சமைந்துநின்ருள்
ஏன்றுவந் தெதிர்த்த வீரன் இவன்இகல் இராமன் என்ன. 433

கண்டனன் கனகத் தேர்மேல் கதிரவன் கலங்கி நீங்க
விண்தனில் நின்ற வென்றிக் கரன்எனும் விலங்கல் தோளான்
மண்டுஅமர் யானே செய்துஇம் மானிடன் வலியை நீக்கிக்
கொண்டனன் வாகை என்று படைஞரைக் குறித்துச் சொன்னுன். 434

மானிடன் ஒருவன் வந்த வலிகெழு சேனேக்கு அம்மா
கானிடம் இல்லே என்னும் கட்டுரை கலந்த காலே
யானுடை வென்றி என்னும் யாவரும் கண்டு நிற்றிர்
ஊனுடை இவனே யானே உண்குவென் உயிரை என்ருன். 435

அவ்வுரை கேட்டு வந்தான் அகம்பன்என்று அமைந்த கல்விச்
செவ்வியான் ஒருவன் ஐய செப்புவென் செருவில் சால
வெவ்வியர் ஆதல் நன்றே வீரரில் ஆண்மை வீர
இவ்வயின் உளவாம் தீய நிமித்தம்என் றியம்ப லுற்ருன். 436

வேறு

குருதி மாமழை சொரிந்தன மேகங்கள் குமுறிப்
பருதி வானவன் ஊர்வளேப் புண்டது பாராய்
கருது வீரநின் கொடிமிசைக் காக்கையின் கணங்கள்
பொருது வீழ்வன புலம்புவ நிலம்படப் புரள்வ. 437

வாளின் வாய்களே ஈவளேக் கின்றன வயவர்
தோளும் நாட்டமும் இடம்துடிக் கின்றன தூங்கி
மீளி மொய்ம்பரின் இவுளிவீழ் கின்றன விரவி
ஞாளி யோடுநின்று உளேக்கின்ற நரிக்குலம் பலவால். 438

பிடிஎ லாம்மதம் பெய்திடப் பெருங்கவுள் வேழம்
ஒடியும் மால்மருப்பு உலகமும் கம்பிக்கும் உயர்வான்
இடியும் வீழ்ந்திடும் எரிந்திடும் பெருந்திசை எவர்க்கும்
முடியின் மாலேகள் புலாலொடு முழுமுடை நாறும். 439

இனேய ஆகலின் மானிடன் ஒருவன்என்று இவனே
நினேய லாவதுஇங்கு ஏழைமை நீஅமர்க்கு இயன்ற
வினேஎ லாம்செய்து வெல்லலாம் தன்மையன் அல்லன்
புனேயும் வாகையாய் பொறுத்திஎன் உரைஎனப் புகன்ருன். 440

உரைத்த வாசகம் கேட்டலும் உலகெலாம் உலேயச்
சிரித்து நன்றுநம் சேவகம் தேவரைத் தேய
அரைத்த அம்மியாம் அலங்குஎழில் தோள்அமர் வேண்டி
இரைத்து வீங்குவ மானிடற்கு எளியவோ என்ருன். 441

என்னும் மாத்திரத்து எறிபடை இடிஎன இடியா
மன்னர் மன்னவன் மதலையை வளைந்தன வனத்து
மின்னும் வால்உளை மடங்கலை முனிந்தன வேழம்
துன்னி ஞெலெனச் சுடுசினத்து அரக்கர்தம் தொகுதி. 442

வளைந்த காலையில் வளைந்தன இராமன்கை வரிவில்
விளைந்த போரையும் ஆவதும் விளம்புதும் விசையால்
புளைந்த பாய்பரி புரண்டன புகர்முகப் பூட்கை
உளைந்த மால்வரை உரும்இடி படஒடிந் தென்ன. 443

சூலம் அற்றன அற்றன சுடர்மழுத் தொகைவாள்
மூலம் அற்றன அற்றன முரண்தண்டு பிண்டி
பாலம் அற்றன அற்றன பகழிவெம் பகுவாய்
வேலும் அற்றன அற்றன வில்லொடு பல்லம். 444

தொடிது ணிந்தன தோளொடு தோமரம் துணிந்த
அடிது ணிந்தன கடக்களிறு அச்சொடு நெடுந்தேர்
கொடிது ணிந்தன குரகதம் துணிந்தன குலமா
முடிது ணிந்தன துணிந்தன முளையொடு முசலம். 445

கருவி மாவொடு கார்மதக் கைம்மலைக் கணத்தோடு
உருவி மாதிரத்து ஓடின சுடுசரம் உதிரம்
அருவி மாரியில் தேங்கினது அவனியில் அரக்கர்
திருவின் மார்பகம் திறந்தன துறந்தன சிரங்கள். 446

ஒன்று பத்துநா றுயிரம் கோடிஎன்று உணராத்
துன்று பத்திய இராகவன் சுடுசரம் துரப்பச்
சென்று பத்திரத் தலையின மலைதிரண் டென்னக்
கொன்று பத்தியில் குவித்தன பிணப்பெரும் குன்றம். 447

காடு கொண்டகார் உலவைகள் கதழ்எரி கதுவச்
சூடு கொண்டன எனத்தொடர் குருதிமீத் தோன்ற
ஆடு கின்றன அறுகுறை அயில்அம்பு விண்மேல்
ஓடு கின்றன உயிரையும் தொடர்வன ஒத்த. 448

கைகள் வாளொடு களம்படக் கழுத்தறக் கவச
மெய்கள் போழ்படத் தாள்விழ வெருவிட நிருதர்
செய்ய மாத்தலை சிந்தின திசையுறச் சென்ற
தைய லார்நெடு விழிஎனக் கொடியன சரங்கள். 449

443-ம் பாட்டு : புளைந்த - அலங்கரிக்கப்பட்ட. இது "புழைந்த" என்பதன் போலி என்று கூறி "துளைபட்ட" என்று அர்த்தம் சொல்லுவதும், புள்+ஐந்த+பாய் பரி எனப் பிரித்து, பறவைகளைப் போலத் தரையில் கால்பாவாமல் பறப்பனவும், ஐந்துவகையான கதிகளைக் கொண்டனவுமான குதிரைகள் என்று அர்த்தம் சொல்லுவதும் உண்டு.

மாரி ஆக்கிய வடிக்கணை வரைபுரை நிருதர்
பேர்இ யாக்கையின் பெருங்கரை வயின்தொறும் பிறங்கு
ஏரி யாக்கின யாறுகள் இயற்றின நிறையச்
சோரி யாக்கின போக்கின வனம்எனும் தொன்மை. 450

அலைமி தந்தன குருதியின் பெருங்கடல் அரக்கர்
தலைமி தந்தன நெடுந்தடி மிதந்தன தடக்கைம்
மலைமி தந்தன வாம்பரி மிதந்தன வயப்போர்ச்
சிலைமி தந்தன கொடியொடு மிதந்தன தேர்கள். 451

ஆய காலையில் அனல்விழிந்து ஆர்த்துஇகல் அரக்கர்
தீய வார்கணை முதலிய தெறுசினப் படைகள்
மேய மால்வரை ஒன்றினை வளைத்தன மேகம்
தூய தாரைகள் சொரிவன வாம்எனச் சொரிந்தார். 452

சொரிந்த பல்படை துணிபடத் துணிபடச் சரத்தால்
அரிந்து போந்தன சிந்திடத் திசைதிசை அகற்றி
நெரிந்து பார்மகள் நெளிவுற வனம்முற்றும் நிறைய
விரிந்த செம்மயிர்க் கருந்தலை மலையென வீழ்த்தான். 453

கவந்த பந்தங்கள் களித்தன குளித்தகைம் மலைகள்
சிவந்து பாய்ந்தவெங் குருதியில் திருகிய சினத்தால்
நிவந்த வெந்தொழில் நிருதர்தம் நெடுநிணம் தெவிட்டி
உவந்த வன்கழுது உயிர்சுமந்து உளுக்கியது உம்பர். 454

மருள்த ரும்களி வஞ்சனை வளைஎயிற்று அரக்கர்
கருடன் அஞ்சுறும் கண்மணி காகமும் கவர்ந்த
இருள்த ரும்புரத்து இழுதையர் பழுதுறற்கு எளிதே
அருள்த ரும்திறத்து அறனன்றி வலியதுண் டாமோ. 455

வேறு

பல்லாயிரம் இருள்கீறிய பகலோன்என ஒளிரும்
வில்லாளனை முனியாவெயில் அயிலாம்என விழியாக்
கல்ஆர்மழை கணமாமுகில் கடைநாள்விழு வனபோல்
எல்லாம்ஒரு தொடையாஉடன் எய்தார்வினை செய்தார். 456

எறிந்தார்என எய்தார்என நினைந்தார்என எறிய
அறிந்தார்என அறியாவகை அயில்வாளியின் அறுத்தான்
செறிந்தாரையும் பிரிந்தாரையும் செறுத்தாரையும் சினத்தால்
மறிந்தாரையும் வலித்தாரையும் மடித்தான்சிலை பிடித்தான். 457

வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டல மிதுனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திசைமுற்றிய கரியின்
தானத்தன காகுத்தன சரம்உந்திய சிரமே. 458

மண்மேலன மலைமேலன மழைமேலன மதிதோய்
விண்மேலன நெடுவேலையின் மேல்கீழன மிடலோர்
புண்மேலன குருதிப்பொழி திரையாறுகள் பொங்கத்
திண்மேருவை நகுமார்பினை உருவித்திரி சரமே. 459

பொலந்தாரினர் அனலின்சிகை பொழிகண்ணினர் எவரும்
வலம்தாங்கிய வடிவெம்படை விடுவார்சர மழையால்
உலந்தார்உடல் கடலோடுற உலவாஉடல் உற்ருர்
அலந்தார்நிசி சரராம்என இமையோரொடும் ஆர்த்தார். 460

ஈரற்செறி கமலத்தன இரதத்திரள் புளினம்
வீரக்கரி முதலேக்குலம் மிதக்கின்றன உதிக்கும்
பாரக்குடர் மிடைபாசடை படர்கின்றன பலவால்
மூரித்திரை உதிரக்கடல் முழுகிக்கழு தெழவே. 461

அழைத்தார்சிலர் அயர்ந்தார்சிலர் அழிந்தார்சிலர் கழிந்தார்
உழைத்தார்சிலர் உயிர்த்தார்சிலர் உருண்டார்சிலர் புரண்டார்
குழைத்தாழ்திரைக் குருதிக்கடல் குளித்தார்சிலர் கொலேவாய்
மழைத்தாரைகள் படப்பாரிடை மடிந்தார்சிலர் உடைந்தார். 462

உடைந்தார்களே நகைசெய்தனர் உருள்தேரினர் உடனுய்
அடைந்தார்படைத் தலேவிரர்கள் பதினுல்வரும் அயில்வாள்
மிடைந்தார்நெடுங் கடல்தானேயர் மிடல்வில்லினர் விரிநீர்
கடைந்தார்வெரு வுறமீதெழு கடுவாமெனக் கொடியார் 463

நாகத்தனி ஒருவில்லியை நளிர்முப்புரர் முன்னுள்
மாகத்திடை வளேவுற்றன ரெனவள்ளலே மதியார்
ஆகத்தெழு கனல்கண்வழி உகஉற்றெதிர் அழன்ருர்
மேகத்தினே நிகர்வில்லியை வளேத்தார்செரு விளேத்தார். 464

எய்தார்பலர் எறிந்தார்பலர் மழுஓச்சினர் எழுவால்
பொய்தார்பலர் புடைத்தார்பலர் கிடைத்தார்பலர் பொருப்பாய்
பெய்தார்மழை பிதிர்த்தார்எரி பிறைவாள்எயிற் றரக்கர்
வைதார்பலர் தெழித்தார்பலர் மலேயாமென வளேத்தார். 465

தேர்பூண்டன விலங்குயாவையும் சிலேபூண்டெழு கணேயால்
பார்பூண்டன மதமாகரி பலிபூண்டன பரிமாத்
தார்பூண்டன உடல்பூண்டில தலேவெங்கதிர் தழிவந்து
ஊர்பூண்டன பிரிந்தாலென விரிந்தார்உயிர் உலேந்தார். 466

மால்பொத்தின மறவோருடன் மழைபொத்தின வழிசெம்
பால்பொத்தின நதியின்கிளர் படிபொத்தின படர்வான்
மேல்பொத்தின குழுவிண்ணவர் விழிபொத்தினர் விரைவெங்
கால்பொத்தினர் நமன்தூதுவர் கடிதுற்றுயிர் கவர்வார். 467

பேய்ஏறினர் செருவேட்டுஎழு பித்தேறினர் பிலவாய்
தீஏறுஇகல் அரியேறென முகில்ஏறெனச் செறிந்தார்
நாய்ஏறின தலேமேல்நெடு நரிஏறின எரிகால்
வாய்ஏறின வடிவாளியின் வானேறினர் வந்தார். 468

464-ம் பாட்டு: நாகத்தனி ஒருவில்லி - மலேயாகிய ஒப்பற்ற வில்லேஉடைய சிவன்.

தலைசிந்தின விழிசிந்தின தழல்சிந்தின தரைமேல்
மலைசிந்தின படிசிந்தின வரிசிந்துரம் மழைபோல்
சிலைசிந்தின கணைசிந்தின திசைசிந்தின திசையூடு
உலைசிந்தின பொறிசிந்தின உயிர்சிந்தின உடலம். 469

வேறு

படைப்பெரும் தலைவரும் படைத்த தேர்களும்
உடைத்தடம் படைகளும் ஒழிய உற்றெதிர்
விடைத்தடர்ந்து எதிர்ந்தவர் வீரன் வாளியால்
முடைத்தவெங் குருதியின் கடலில் மூழ்கினர். 470

சுற்றுற நோக்கினர் தொடர்ந்த சேனையில்
அற்றில தலையெனும் ஆக்கை கண்டிலர்
தெற்றினர் எயிறுகள் திருகி னர்சினம்
முற்றினர் இராமனை முடுகு தேரினர். 471

ஏழிரு தேரும்வந்து இமைப்பின் முன்பிடைச்
சூழ்வன கணைகளின் துணிய நூறினன்
ஆழியும் புரவியும் ஆளும் அற்றவை
ஊழிவெங் கடல்எறி ஓங்கல் ஒத்தவே. 472

அழிந்தன தேர்அவர் அவனி கீண்டுக
இழிந்தனர் வரிசிலை எடுத்த கையினர்
ஒழிந்திலர் சரங்களை உருமின் ஏறெனப்
பொழிந்தனர் மிகுகனல் பொடிக்கும் கண்ணினர். 473

நூறிய சரமெலாம் நுறுங்க வாளியால்
ஈறுசெய்து அவர்சிலை ஏழொடு ஏழையும்
ஆறினொடு ஆறும்ஓர் இரண்டும் அம்பினல்
கூறுசெய்து அமர்த்தொழில் கொதிப்பை நீக்கினன். 474

வில்இழந்து அனைவரும் வெகுளி மீக்கொளக்
கல்லுயர் நெடுவரை கடிதின் ஏந்தினர்
ஒல்லையின் உருத்துஉயர் விசும்பின் ஓங்கிநின்று
எல்உயர் பொறிஉக எறிதல் மேயினர். 475

கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியான்
நிலைகொள்வெம் பகழிஏ ழிரண்டு வாங்கினன்
கொலைகொள்வெஞ் சிலையொடு புருவம் கோட்டினன்
மலைகளும் தலைகளும் விழுந்த மண்ணினே. 476

படைத்தலைத் தலைவர்கள் படலும் பல்படை
புடைத்துஅடர்ந்து எதிர்அழல் புரையும் கண்ணினர்
கிடைத்தனர் அரக்கர்கள் கீழும் மேலும்மொய்த்து
அடைத்தனர் திசைகளை அமரர் அஞ்சினர். 477

முழங்கின பெரும்பணை மூரி மால்கரி
முழங்கின வரிசிலை முடுகு நாணொலி
முழங்கின சங்கொடு புரவி முற்றுற
முழங்கின அரக்கர்தம் முகிலின் ஆர்ப்பரோ. 478

வேறு

வெம்படை நிருதர் வீச விண்ணிடை மிடைந்த வீரன்
அம்பிடை அறுக்கச் சிந்தி அற்றன படும்என்று அஞ்சி
உம்பரும் இரியல் போனர் உலகெலாம் உலைந்து சாய்ந்த
கம்பம்இல் திசையின் நின்ற களிறும்கண் இமைத்த வன்றே. 479

வேறு

*அத்தலைத் தானையன் அளவில் ஆற்றலன்
முத்தலைக் குரிசில்பொன் முடியன் முக்கணான்
கைத்தலைச் சூலமே அனைய காட்சியான்
வைத்தலைப் பகழியான் மழைசெய் வில்லினன். 480

அன்னவன் நடுவுற ஆழி ஊழிஈது
என்னவந்து எங்கணும் இரைத்த சேனையுள்
தன்நிகர் வீரனும் தமியன் வில்லினன்
துன்இருள் இடையதோர் விளக்கில் தோன்றினன். 481

ஓங்கொளி வாளினன் உருமின் ஆர்ப்பினன்
வீங்கிய கவசத்தன் வெய்ய கண்ணினன்
ஆங்கவன் அணிக்கெதிர் அணிக ளாகநேர்
தாங்கினன் இராமனும் சரத்தின் தானையால். 482

தாள்இடை அற்றன தலையும் அற்றன
தோள்இடை அற்றன தொடையும் அற்றன
வாள்இடை அற்றன மழுவும் அற்றன
கோள்இடை அற்றன குடையும் அற்றன. 483

கொடியொடு கொடுஞ்சினப் புரவிக் கூட்டுஅற
படியிடை படிந்தன பருத்த தேர்பணை
நெடியவெங் கடகரி புரண்ட நெற்றியில்
இடியொடு முறிந்துவீழ் சிகரம் என்னவே. 484

அற்றன சிரம்என அறிதல் தேற்றலர்
கொற்றவெஞ் சிலைச்சரம் கோத்து வாங்குவார்
இற்றலர் இருதவர் எழுந்து விண்ணினைப்
பற்றின மழையெனப் படைவ ழங்குவார். 485

கேடகத் தடக்கைய கிரியின் தோற்றத்த
ஆடகக் கவசத்த கவந்தம் ஆடுவ
பாடகத்து அரம்பையர் மருளப் பல்வித
நாடகத் தொழிலினை நடிப்ப ஒத்தவே. 486

கவரிவெண் குடையெனும் நுரைய கைம்மலைச்
சுவல்தரும் சுறவம்ஆழ் சுழிய தண்துறைப்
பவர்இனப் பருமணி குவிக்கும் பண்ணைய
உவரியைப் புதுக்கின உதிர ஆறரோ. 487

480-ம் பாட்டு: முத்தலைக் குரிசில் - திரிசிரா. 487-ம் பாட்டு: உவரியைப் புதுக்கின-கடலின் நிறத்தை மாற்றின.

சண்டவெங் கடுங்கணை தடியத் தான்சில
திண்திறல் வளையிற்று அரக்கர் தேவராய்
வண்டுழல் புரிகுழல் மடந்தை மாரொடும்
கண்டனர் தம்முடைக் கவந்த நாடகம். 488

ஆய்வளை மகளிரோடு அமரர் ஈட்டத்தர்
தூயவெங் கடுங்கணை துணித்த தங்கள்தோள்
பேய்ஒரு தலைகொளப் பிணங்கி வாய்களின்
நாய்ஒரு தலைகொள நகையுற் றார்சிலர். 489

தெரிகணை மூழ்கலின் திறந்த மார்பினர்
இருவினை கடந்துபோய் உம்பர் எய்தினர்
நிருதர்தம் பெரும்படை நெடிது நின்றவன்
ஒருவன்என்று உள்ளத்தில் உலைவுற் றார்அரோ. 490

கைக்கரி யன்னவன் பகழி கண்டகர்
மெய்க்குலம் வேரொடும் துணித்து வீழ்த்தின
மைக்கரு மனத்தொரு வஞ்சன் மாண்பிலன்
பொய்க்கரி கூறிய கொடுஞ்சொல் போலவே. 491

அம்சிறை அறுபதம் அடைந்த கீடத்தைத்
தஞ்செனத் தன்மயம் ஆக்கும் தன்மைபோல்
வஞ்சகத் தரக்கரைவளைத்து வள்ளல்தான்
செஞ்சரத் தூய்மையால் தேவ ராக்கினன். 492

வலங்கொள்போர் மானிடன் வலிந்து கொன்றமை
அலங்கல்வேல் இராவணற்கு அறிவிப் பாம்எனச்
சலங்கொள்போர் அரக்கர்தம் உருக்கள் தாங்கின
இலங்கையின் உற்றஅக் குருதி யாறரோ. 493

சூழ்ந்ததார் நெடும்படை பகழி சுற்றுறப்
போழ்ந்துயிர் குடித்தலில் புரளப் பொங்கினன்
தாழ்ந்திலன் முத்தலைத் தலைவன் சோரியில்
ஆழ்ந்ததேர் அம்பரத்து ஓட்டி ஆர்க்கின்றான். 494

ஊன்றிய தேரினன் உருமின் வெங்கணை
வான்தொடர் மழையென வாய்மை யாவர்க்கும்
சான்றென நின்றஅத் தரும மன்னவன்
தோன்றல்தன் திருவுரு மறையத் தூவினன், 495

*தூவிய சரமெலாம் துணிய வெங்கணை
ஏவினன் இராமனும் ஏவி ஏழிடு
பூவியல் வாளியால் பொலங்கொள் தேர்அழித்து
ஆவிவெம் பாகனை அழித்து மாற்றினன். 496

*அன்றியும் அக்கணத்து அமரர் ஆர்த்தெழப்
பென்தெரி வடிம்புடைப் பொருவில் வாளியால்
வன்தொழில் தீயவன் மகுட மாத்தலை
ஒன்றொழித்து இரண்டையும் உருட்டி னன்அரோ. 497

497-ம் பாட்டு : ஒன்றொழித்து - ஒன்றைமட்டும் அப்படியே இருக்

*தேர்அழிந்து அவ்வழித் திரிசி ராஎனும்
பேர்அழிந்து அதனினும் மறம்பி ழைத்திலன்
வார்அழிந்து உமிழ்சிலே வான நாட்டுழிக்
கார்இழிந் தாலெனக் கணைகள் சிந்தினன். 498

*ஏற்றிய நுதலினன் இருண்ட கார்மழை
தோற்றிய வில்லொடும் தொடர மீமிசைக்
காற்றிடை அழிந்தெனக் கார்மு கத்தையும்
மாற்றரும் பகழியால் அறுத்து மாற்றினன். 499

வேறு

*வில்இ ழந்தனன் என்னினும் விழித்தவாள் முகத்தின்
எல்இ ழந்திலன் இழந்திலன் வெங்கதம் இடிக்கும்
சொல்இ ழந்திலன் தோள்வலி இழந்திலன் சொரியும்
கல்இ ழந்திலன் இழந்திலன் கறங்கெனத் திரிதல். 500

*ஆள்இ ரண்டுநூ றுளஎன அந்தரத் தொருவன்
மூள்இ ரும்பெரு மாயையின் செருமுயல் வானைத்
தாள்இ ரண்டையும் இரண்டுவெங் கணைகளால் தடிந்து
தோள்இ ரண்டையும் இரண்டுவெங் கணைகளால் துணித்தான். 501

*அற்ற தாளொடு தோளினன் அயில்எயி றிலங்கப்
பொற்றை மாமுழைப் புலாலுடை வாயினன் புகுந்து
பற்ற ஆதரிப் பான்தனை நோக்கினன் பரிவான்
கொற்ற வார்சரத்து ஒழிந்ததோர் தலையையும் குறைத்தான். 502

*திரிசி ராஎனும் சிகரம்மண் சேர்தலும் செறிந்த
நிருதர் ஓடினர் தூடணன் விலக்கவும் நில்லார்
பரிதி வாளினர் கேடகத் தடக்கையர் பரந்த
குருதி நீரிடை வார்கழல் கொழுங்குடர் தொடக்க. 503

கணத்தின் மேல்நின்ற வானவர் கைபுடைத்து ஆர்த்தார்
பணத்தின் மேல்நிலம் குழியுறக் கால்கொடு பதைத்தார்
நிணத்தின் மேல்விழுந்து அழுந்தினர் சிலர்சிலர் நிவந்த
பிணத்தின் மேல்விழுந்து உருண்டனர் உயிர்கொடு பிழைப்பார். 504

வேய்ந்த வாளொடு வேலிடை மிடைந்தன வெட்ட
ஒய்ந்து ளார்சிலர் உலந்தனர் உதிரநீர் யாற்றில்
பாய்ந்து கால்பறித்து அழுந்தினர் சிலர்சிலர் பயத்தால்
நீந்தி னார்நெடுங் குருதியங் கடல்புக்கு நிலையார். 505

*கச்சும் வாளும்தம் கால்தொடர்ந்து ஈர்வன காணார்
அச்சம் என்பதொன்று உருவுகொண் டாலென அழிவார்
உச்ச வீரன்கைச் சுடுசரம் நிருதர்நெஞ் சுருவத்
தச்சு நின்றன கண்டனர் அவ்வழித் தவிர்ந்தார். 506

கும்படி விட்டுவிட்டு. 504-ம் பாட்டு : பணத்தின்மேல் நிலம் - ஆதிசேஷன் என்ற பாம்பின் படத்தின் மீதுள்ள பூமி.

மண்டி ஓடினர் சிலர்நெடுங் கடகரி வயிற்றில்
புண்தி றந்தமா முழையிடை வாளொடும் புகுவார்
தொண்டை நீங்கிய கவந்தத்தைத் துணைவநீ எம்மைக்
கண்டி லேன்எனப் புகல்எனக் கைதலைக் கொள்வார். 507

*அனையர் ஆகிய அரக்கரை ஆண்தொழிற்கு அமைந்த
வினையம் நீங்கிய மனத்தரை வெருவல்மின் என்னு
நினையும் நான்உமக்கு உரைப்பதும் உண்டென நின்றே
துணையும் வாம்பரித் தேரினன் தூடணன் சொன்னான். 508

வச்சை யாம்எனும் பயம்மனத்து உண்டென வாழும்
கொச்சை மாந்தரைக் கோல்வளை மகளிரும் கூசார்
நிச்ச யம்எனும் கவசம்தான் நிலைநிற்ப தன்றி
அச்சம் என்னும்ஈது ஆருயிர்க்கு அருந்துணை ஆமோ. 509

*பூஅ ராவுவேல் புரந்தா னேடுதான் பொன்று
மூவ ரோடுதான் முன்னின்று முட்டிய முனையில்
ஏவர் ஓடினர் இராக்கதர் நுமக்குஇடைந்து ஓடும்
தேவ ரோடுகற்று அறிந்துளி ராம்எனத் திகைத்தீர். 510

இங்கொர் மானிடற்கு இத்தனை வீரர்கள் இடைந்தீர்
உம்கை வாளொடு போய்விழுந்து ஊர்புக லுற்றீர்
கொங்கை மார்பிடைக் குளிப்புறக் களிப்புற்றும் கொழுங்கண்
நங்கை மார்களைப் புல்லுதி ரோநலம் நுகர்வீர். 511

*செம்பு காட்டிய கண்ணிணை பால்எனத் தெளிந்தீர்
வெம்பு காட்டிடை நுழைதொறும் வெரிந்உறப் பாய்ந்த
கொம்பு காட்டுதி ரோதட மார்பிடைக் குளித்த
அம்பு காட்டுதி ரோகுல மங்கையர்க்கு அம்மா. 512

ஏக்கம் இங்குஇதன் மேலும்உண் டோஇகல் மனிதன்
ஆக்கும் வெஞ்சமத்து ஆண்மைஅவ் அமரர்க்கும் அரிதாத்
தாக்க ரும்புயத்து உம்குலத் தலைமகன் தங்கை
மூக்கொ டன்றியும் முதுகொடும் போம்பழி முயன்றீர். 513

*ஆரவாழ்க்கையின் வணிகராய் அமைதிரோ அயில்வேல்
வீர வாட்கொழு எனமடுத்து உழுதிரோ வெறிபோர்த்
தீர வாழ்க்கையின் தெவ்வரைச் செருவிடைப் பறித்த
வீர வாட்கையீர் எங்ஙனம் வாழ்திரோ விளம்பீர். 514

507–ம் பாட்டு: தொண்டை நீங்கிய கவந்தம் – தொண்டையில் அறுபட்ட முண்டம். கழுத்து நீங்கிய என்று கூறாமல் தொண்டை (மட்டும்) நீங்கியதாகக் கூறியிருப்பதால், தலை ஒரு சிறிது உடம்பில் ஒட்டிக்கொண்டு கோரமாகத் தொங்கியதைக் குறிப்பிடுவதாக உரையாசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.
514–ம் பாட்டு: இரண்டாவது அடி, ''ஈரும் வாட்கொழு என மடுத்து உழுதிரோ எறிபோர்த்'' என்று இருந்தால் பொருத்தமாக

*என்று தானும்தன் எறிகடற் சேனையும் இறைநிர்
நின்று காண்டிர்என் நெடுஞ்சிலை வலிஎன நேராச்
சென்று தாக்கினன் தேவரும் மருள்கொண்டு திகைத்தார்
நன்று காத்திஎன்று இராமனும் எதிர்செல நடந்தான். 515

ஊடு அறுப்புண்ட மொய்படைக் கையொடும் உயர்ந்த
கோடு அறுப்புண்ட குஞ்சரம் கொடிஞ்கொடு கொடியின்
காடு அறுப்புண்ட கால்இயல் தேர்கதிர்ச் சாலி
சூடு அறுப்புண்ட எனக்கழுத்து அறுப்புண்ட துரகம். 516

துருவி யோடின உயிர்நிலை சுடுசரம் துரந்த
கருவி யோடின கச்சையும் கவசமும் கழல
அருவி யோடின எனவழி குருதியாறு ஒழுக
உருவி யோடின கேடகத் தட்டொடும் உடலம். 517

ஆய்ந்த சங்கபத் திரங்கள்புக்கு அரக்கரது ஆவி
தோய்ந்த தோய்விலாப் பிறைமுகச் சரம்சிரம் துமித்த
காய்ந்த வெஞ்சரம் நிருதர்தம் கவசமார் புருவப்
பாய்ந்த வஞ்சகர் இதயமும் பிளந்தன பல்லம். 518

தூட ணன்விடு சுடுசரம் யாவையும் துணிய
மாடு நின்றவர் வழங்கிய படைகளும் மாற
ஆடல் கொண்டனன் அளப்பரும் பெருவலி அரக்கர்
கூடி நின்றஅக் குரைகடல் வறள்படக் குறைத்தான். 519

ஆர்த்தெ ழுந்தனர் வானவர் அருவரை மரத்தோடு
ஈர்த்தெ ழுந்தன குருதியின் பெருநிதி இராமன்
தூர்த்த வெஞ்சரம் திசைதொறும் திசைதொறும் தொடர்ந்து
போர்த்த வெஞ்சினத்து அரக்கரைப் புரட்டின புவியில். 520

தோன்று மால்வரைத் தொகையெனத் துவன்றிய நிணச்சேறு
ஆன்ற பாழ்வயிற்று அலகையைப் புகல்வதென் அமர்வேட்டு
ஊன்றி னார்எலாம் உலைந்தனர் ஒல்லையில் ஒழிந்தார்
கான்ற இன்னுயிர் காலனும் கவர்ந்துமெய் மறந்தான். 521

களிறு தேர்பரி கடுத்தவர் முடித்தலை கவந்தம்
ஒளிரு பல்படைத் தம்குலத்து அரக்கர்தம் உடலம்
வெளிறு சேர்நிணம் பிறங்கிய அடுக்கலின் மீதாக்
குளிறு தேர்கடிது ஓட்டினன் தூடணன் கொதித்தான். 522

இருக்குமெனத் தோன்றுகிறது. ஏனெனில், இரண்டாவது அடியிலும், நான்காவது அடியிலும் ''வீரவாள்'' என்ற ஒரே சொல் வருவது அழகல்ல. ''வெறிபோர்'' என்பது சந்தி பிரிக்கும்போது ''எறி போர்'' என்று ஆகும். ''எறிபோர்'' என்பது ''ஈரும் வாட்கொழு'' என்பதற்கு மோனையாக அமையும். ''வெறிபோர்''என்றபாடத்தை வைத்துக்கொண்டு உரை எழுதியவர்கள் ''வெறிப்போர்'' என்பதற்கான உரையையே எழுதியிருப்பதால், ''வெறிபோர்'' என்பது சரியான பாடமல்ல என்பதும், அது ''எறிபோர்'' என்று இருப்பது தான் சரி என்பதும் தெளிவு.

அறம்கொ ளாதவர்ஆக்கைகள் அடுக்கிய அடுக்கல்
பிறங்கி நீண்டன கணிப்பில பெருங்கடு விசையால்
கறங்கு போன்றுள தாயினும் பிணப்பெரும் காட்டில்
இறங்கும் ஏறும்அத் தேர்பட்டது யாதென உரைப்பாம். 523

அரிதின் எய்தினன் ஐஐந்து கொய்யுளைப் பரிமா
உருளும் ஆழியது ஒருதனித் தேரினன் உலகத்து
இருளை நீக்கிய இந்துவில் பொலிகின்ற இராமன்
தெருளும் வார்கணைக் கூற்றெதிர் ஆவிசென் றென்ன. 524

*சென்ற தேரையும் சிலையுடை மலைஎனத் தேர்மேல்
நின்ற தூடணன் தன்னையும் நோக்கிய நிமலன்
நன்று நன்றுநின் நிலைஎன அருள்இறை நயந்தான்
என்ற காலத்துஅவ் வெய்யவன் பகழிமுன் றெய்தான். 525

தூர வட்டஎண் திசைகளைத் தனித்தனிச் சுமக்கும்
பார எட்டினேடு இரண்டினில் ஒன்றுபார் புரக்கப்
பேர விட்டவன் நுதலண ஒடையின் பிறழும்
வீர பட்டத்தில் பட்டன விண்ணவர் வெருவ. 526

*எய்த காலமும் வலியும்நன் றெனநினைந்து இராமன்
செய்த சேயொளி முறுவலன் கடுங்கணை தெரிந்தான்
நொய்தின் அங்குஅவன் நொறில்பரித் தேர்பட நூறிக்
கையின் வெஞ்சிலை அறுத்தொளிர் கவசமும் கடிந்தான். 527

*தேவர் ஆர்த்தெழ முனிவர்கள் திசைதொறும் சிலம்பும்
ஓவில் வாழ்த்தொலி நாற்கடல் முழக்கென ஓங்கக்
காஅ டாஇது வல்லையேல் நீஎனக் கணையொன்று
ஏவி ஞன்அவன் எயிறுடை நெடுந்தலை இழந்தான். 528

வேறு

*தம்பிதலை அற்றபடி யும்தயர தன்சேய்
அம்புபடை யைத்துணி படுத்ததும் அறிந்தான்
வெம்புபடை விற்கைவிச யக்கரன் வெகுண்டான்
கொம்புதலை கட்டிய குலக்கரி கடுப்பான். 529

524-ம் பாட்டு: ஐஐந்து - இருபத்தைந்து, 526-ம் பாட்டு: பார எட்டு—எட்டுத்திசை யானைகள். இரண்டினில் ஒன்று—உலகத்தைச் சுமக்கும் ஆதிசேஷன், ஆதிகூர்மம் ஆகிய இரண்டில் ஒன்ருகிய ஆதி சேஷனின் அம்சமான பாதுகை. உலக பரிபாலனம் செய்யப் பரத னிடம் இது கொடுத்தனுப்பப்பட்டது. 529-ம் பாட்டு: கொம்புதலை கட்டிய-முகத்தில் தந்தங்களை உறுதியாகக் கொண்ட என்று பொருள்கூறி, தந்தங்களைக் கரனுடைய கோரப்பற்களுக்கு உவமை கூறுவதுண்டு. முகத்தில் கொம்புகள் வெட்டப்பட்ட என்றும், தலை யில் வந்து படிந்த தந்தங்கள் என்றும் பொருள் கூறுவதும் உண்டு. இந்தப் பொருள்களில் எதுவுமே சரியான பொருளாகத் தோன்ற வில்லை. உண்மைப் பொருளை அறிய முயலுகிறவர்களுக்கு உதவி

*அந்தகனும் உட்கிட அரக்கர் கடலோடும்
சிந்துரம் வயப்புரவி தேர்திசை பரப்பி
இந்துவை வளைக்கும்எழி லிக்குலம் எனத்தான்
வந்துவரி விற்கைமத யானையை வளைத்தான். 530

*அடங்கல்இல் கொடுந்தொழில் அரக்கர்அவ் அனந்தன்
படம்கிழி தரப்படி தனில்பல விதப்போர்
கடம்கலுழ் தடங்களிறு தேர்பரி கடாவித்
தொடங்கினர் நெடுந்தகையும் வெங்கணை துரந்தான். 531

துடித்தன கடக்கரி துடித்தன பரித்தேர்
துடித்தன முடித்தலை துடித்தன தொடித்தோள்
துடித்தன மணிக்குடர் துடித்தன தசைத்தோல்
துடித்தன கழற்றுணை துடித்தன இடத்தோள். 532

*வாளின்வனம் வேலின்வனம் வார்சிலை வனம்திண்
தோளின் வனம் என்றிவை துவன்றி நிருதப்பேர்
ஆளின்வனம் நின்றதனை அம்பின்வனம் என்னும்
கோளின்வன வன்குழுவி னில்குறை படுத்தான். 533

தான்உருவு கொண்டதரு மம்தெரி சரத்தான்
மீன்உருவும் மேருவை விலங்குருவும் மேலாம்
வான்உருவும் மண்உருவும் வாள்உருவி வந்தார்
ஊன்உருவும் என்னும்இ துணர்த்தவும் உரித்தோ. 534

அன்றிடை வளைந்தவர் குலங்களொடு அடங்கச்
சென்றுலை வுறும்படி தெரிந்து கணைசிந்த
மன்றிடை நலிந்துவலி யோர்கள்எளி யோரைக்
கொன்றனர் நுகர்ந்தபொரு ளில்கடிது சென்ற. 535

*கடுங்கரன் எனப்பெயர் படைத்த கழல்வீரன்
அடங்கலும் அரக்கர்அழி வுற்றிட அழன்றான்
ஒடுங்கல்இல் நிணக்குருதி ஓதமதின் உள்ளான்
நெடுங்கடலின் மந்தரம் எனத்தமியன் நின்றான். 536

*செங்கண்எரி சிந்தவரி வில்பகழி சிந்தப்
பொங்குகுரு திப்புணரி யுள்புகையும் நெஞ்சன்
கங்கமொடு காகம்மிடை அக்கடலின் ஓடும்
வங்கமெனல் ஆயதொரு தேரின்மிசை வந்தான். 537

*செறுத்துஇறுதி யில்புவனி தியஎழு தியின்
மறத்தின்வழி ரத்தொருவன் வந்தனுகு முந்தைக்
கருத்தமணி கண்டர்கட வுள்சிலை கரத்தால்
இறுத்தவனும் வெங்கணை தெரிந்தனன் எதிர்ந்தான். 538

யாக இருக்கும்பொருட்டு, "குலக்கரி கடுப்பான்" என்பதற்கு "கொலைக்கரியொ டொப்பான்" என்னும் பிரதிபேதம் உண்டு என்ற விபரத்தையும் இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறோம். 530-ம் பாட்டு: மதயானை-மதயானைபோன்ற இராமன்.

தீஉருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை அரக்கர்பதி எய்தான்
தீஉருவ கால்விசைய செவ்வியன வெவ்வாய்
ஆயிரம் வடிக்கணை இராமனும் அறுத்தான். 539

*ஊழிஎரி யில்கொடிய பாய்பகழி ஒன்பான்
ஏழுலகி னுக்கும்ஒரு நாயகனும் எய்தான்
சூழ்சுடர் வடிக்கணை அவற்றெதிர் தொடுத்தே
ஆழிவரி விற்கரனும் அன்னவை அறுத்தான். 540

*கள்ளஅமர் மாயவினை கல்வியின் விளைத்தான்
வள்ளல்உரு வைப்பகழி மாரியின் மறைத்தான்
உள்ளம்உலை உற்றுஅமரர் ஓடினர் ஒளித்தார்
வெள்எயிறு இதழ்ப்பிறழ வீரனும் வெகுண்டான். 541

வேறு

*முடிப்பென் இன்றொரு மொய்கணை யால்எனத்
தொடுத்து நின்றுயர் தோளுற வாங்கினன்
பிடித்த திண்சிலை பேர்அகல் வானிடை
இடிப்பின் ஓசை படக்கடி திற்றதே. 542

வெற்றி கூறிய வானவர் வீரன்வில்
இற்ற போது துணுக்கமுற்று ஏங்கினர்
மற்றொர் வெஞ்சிலை யின்மை மனக்கொளா
அற்ற தால்எம் வலிஎன அஞ்சினர். 543

*என்னும் மாத்திரத்து ஏந்திய கார்முகம்
சின்னம் என்றும் தனிமையும் சிந்தியான்
மன்னர் மன்னவன் செம்மல் மரபினால்
பின்னு றத்தன் பெருங்கரம் நீட்டினன். 544

*கண்டு நின்று கருத்துணர்ந் தான்என
அண்டர் நாதன் தடக்கையின் அத்துணை
பண்டு போர்மழு வாளியைப் பண்பினால்
கொண்ட வில்லை வருணன் கொடுத்தனன். 545

*கொடுத்த வில்லைஅக் கொண்டல் நிறத்தினன்
எடுத்து வாங்கி வலம்கொண்டு இடக்கையில்
பிடித்த போது நெறிபிழைத் தோர்க்கெலாம்
துடித்த வால்இடக் கண்ணொடு தோளுமே. 546

*ஏற்றி நாண்இமை யாமுன் எடுத்துஅது
கூற்றி னாரும் குனிக்கக் குனித்தெதிர்
ஆற்றி னன்அவன் ஆழியந் தேர்சரம்
நூற்றி னால்நுண் பொடிபட நூறினன். 547

545-ம் பாட்டு: மழுவாளி - பரசுராமன். வில்லை - விஷ்ணுதனுசை.

*எந்தி ரத்தடந் தேர்இழிந் தான்இழந்து
அந்த ரத்திடை ஆர்த்தெழுந்து அம்பெலாம்
சுந்த ரத்தனி வில்லிதன் தோள்ளனும்
மந்த ரத்தின் மழையின் வழங்கினன். 548

தாங்கி நின்ற தயரத ராமனும்
தூங்கு தூணி யிடைச்சுடு செஞ்சரம்
வாங்கு கின்ற வலக்கைஓர் வாளியால்
வீங்கு தோளொடு பார்மிசை வீழ்த்தினன். 549

வலக்கை வீழ்தலும் மற்றைக்கை யால்வெற்றி
உலக்கை வானத்து உரும்என ஓச்சினன்
இலக்கு வற்குமுன் வந்த இராமனும்
விலக்கி னன்ஒரு வெங்கதிர் வாளியால். 550

விராவ ரும்கடு வெள்எயிறு இற்றபின்
அராஅ மூன்ற தனையதன் ஆற்றலால்
மராம ரம்கையில் வாங்கிவந் தெய்தினன்
இராமன் அங்கோர் தனிக்கணை ஏவினன். 551

*வரம் அரக்கன் படைத்தலின் மாயையின்
உரம் உடைத்தன்மை யால்உல கேழையும்
பரம் உருக்கிய பாவத்தி னல்வலக்
கரம் எனக்கரன் கண்டம்உற் றான்அரோ. 552

*ஆர்த்தெ ழுந்தனர் ஆடினர் பாடினர்
தூர்த்து அமைந்தனர் வானவர் தூய்மலர்
தீர்த்த னும்பொலிந் தான்கதி ரோன்மிசை
போர்த்த மென்பனி போக்கிய தென்னவே. 553

முனிவர் வந்து முறைமுறை மொய்ப்புற
இனிய சிந்தை இராமனும் ஏகினன்
அனிக வெஞ்சமத்து ஆருயிர் போகத்தான்
தனி இருந்த உடல்அன்ன தையல்பால். 554

*விண்ணில் நீங்கிய வெய்யவர் மேனியின்
புண்ணின் நீரும் பொடிகளும் போய்உக
அண்ணல் வீரனைத் தம்பியும் அன்னமும்
கண்ணின் நீரினில் பாதம் கழுவினர். 555

மூத்தம் ஒன்றில் முடிந்தவர் மொய்ப்புண்நீர்
நீத்தம் ஓடி நெடுந்திசை நேர்உறக்
கோத்த வேலைக் குரலென வானவர்
ஏத்த வீரன் இனிதிருந் தான்அரோ. 556

*இங்கு நின்றது உரைத்தும் இராவணன்
தங்கை தன்கை வயிறு தகர்த்தனள்
கங்குல் அன்ன கரனைத் தழீஇநெடும்
பொங்கு வெங்குரு திப்புரன் டாள்அரோ. 557

*ஆக்கி னேன்மனத்து ஆசைஅவ் ஆசைஎன்
மூக்கி னோடு முடிய முடிந்திலேன்
வாக்கி னால்உங்கள் வாழ்வையும் நாளையும்
போக்கி னேன்கொடி யேன்என்று போயினாள். 558

*அலங்கல் வேற்கை அரக்கரை ஆசுஅறக்
குலங்கள் வேர்அறுப் பான்குறித்து ஆழ்கடல்
கலங்கு சூறைவன் போர்நெடுங் கால்என
இலங்கை மாநகர் நொய்தில்சென் றெய்தினாள். 559

7. மாரீசன்வதைப் படலம்

[மாரீசன் மாயமான் வடிவம்கொண்டு வந்தபோது இராமன் அவனைக் கொன்றதுபற்றிக் கூறும் பகுதி]

இரைக்கும்நெடுங் கடல்அரக்கர் இறந்ததனை
மறந்தனள்போல் இராமன் துங்க
வரைப்புயத்தின் இடைக்கிடந்த பேராசை
மனம்கவற்ற ஆற்று ளாகித்
திரைப்பரவைப் பேரகழித் திண்நகரில்
கடிதோடிச் சீதை தன்மை
உரைப்பென்எனச் சூர்ப்பநகை வரஇருந்தாள்
இருந்தபரிசு உரைத்தும் மன்னோ. 560

நிலைஇலா உலகினிடை நிற்பனவும்
நடப்பனவும் நெறியின் ஈந்த
மலரின்மேல் நான்முகற்கும் வகுப்பரிது
நுனிப்பதொரு வரம்பில் ஆற்றல்
உலைவிலா வகைஉழந்த தருமம்என
நினைந்தஎலாம் உதவும் தச்சன்
புலன்எலாம் தெரிப்பதொரு புனைமணிமண்
டபமதனில் பொலிய மன்னோ. 561

பண்டுஅலங்குஅல் திசைக்களிற்றின் பணைமருப்பின்
இணைஒடியப் படர்ந்த பொற்றோள்
விண்தலங்கள் உறவீங்கி ஓங்குதய
மால்வரையின் விளங்க மீதில்
குண்டலங்கள் குலவரையை வலம்வருவான்
இரவிகொழுங் கதிர்சூழ் கற்றை
மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய்
பொலிந்தஎன வயங்க மன்னோ. 562

561-ம் பாட்டு: தச்சன்-விசுவகர்மா. மயன் என்றும் கூறுவதுண்டு. மயன் தெய்வத் தச்சன் என்று சிலரும், அசுரத் தச்சன் என்று சிலரும் கூறுவார்கள். 562-ம் பாட்டு : மண்டலங்கள் பன்னிரண்டு நாலைந்தாய் - பன்னிரண்டு சூரியமண்டலங்கள், இருபது மண்டலங்

புலியின்அதள் உடையானும் பொன்னுடை
புனைந்தானும் பூவி னானும்
நலியும்வலத் தார்அல்லர் தேவரின்இங்கு
யாவர்இனி நாட்ட லாவார்
மெலியும்இடை தடிக்கும்முலை வேய்இளந்தோள்
சேய்அரிக்கண் வென்றி மாதர்
வலியநெடும் புலவியினும் வணங்காத
மகுடநிரை வயங்க மன்னோ. 563

வாள்உலாம் முழுமணிகள் வயங்கொளியின்
தொகைவழங்க வயிரக் குன்றத்
தோள்எலாம் படிசுமந்த விடஅரவின்
படநிரையில் தோன்ற ஆன்ற
நாள்எலாம் புடைதயங்க நாமநீர்
இலங்கையில்தான் வாரி இட்ட
கோள்எலாம் கிடந்தநெடும் சிறையன்ன
நிறைஆரம் குலவ மன்னோ. 564

வேறு

*ஆய்வரும் பெருவலி அரக்க ராதியோர்
நாயகர் நளிர்மணி மகுடம் நண்ணலால்
தேய்வுறத் தேய்வுறப் பெயர்ந்து செஞ்சுடர்
ஆய்மணிப் பொலன்கழல் அடிநின்று ஆர்ப்பவே. 565

மூவகை உலகினும் முதல்வர் முந்தையோர்
ஓவலர் உதவிய பரிசின் ஓங்கல்போல்
தேவரும் அவுணரும் முதலி னோர்திசை
தூவிய நறுமலர்க் குப்பை துன்னவே. 566

*இன்னபோது இவ்வழி நோக்கும் என்பதை
உன்னலர் கரதலம் சுமந்த உச்சியர்
மின்அவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள்
துன்னினர் முறைமுறை துறையில் சுற்றவே. 567

களாக விளங்கியதுபோல இராவணனுடைய பத்து முகங்களிலும் இருபது குண்டலங்கள் பிரகாசித்தன. மாதத்துக்கு ஒரு சூரியன் வீதம் மொத்தம் பன்னிரண்டு சூரியர்களின் பெயர்களாவன: தாதா, இந்திரன், அரியமா, மித்திரன், வருணன், அம்சுமான், பர்ஜன்யன், பகன், விவஸ்வான், பூஷா, விஷ்ணு, துவஷ்டா. பெயர்கள் வேறொரு விதமாகவும் கூறப்படும்: வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலோகப்பிரகாசன், உலோகசாட்சி, திரிவிக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி. 563-ம் பாட்டு: பொன்னுடை புனைந்தான் - திருமால். 564-ம் பாட்டு: அரவின் படநிரை - ஆதிசேஷனுடைய படங்களின்

மங்கையர் திறத்தொரு மாற்றம் கூறினும்
தங்களை யாம்எனத் தாழும் சென்னியர்
அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்
சிங்கரை றெனத்திறல் சித்தர் சேரவே. 568

அன்னவன் அமைச்சரை நோக்கி ஆண்டுஒரு
நன்மொழி பகரினும் நடுங்கும் சிந்தையர்
என்னைகொல் பணிஎன இறைஞ்சு கின்றனர்
கின்னரர் பெரும்பயம் கிடந்த நெஞ்சினர். 569

பிரகர நெடுந்திசைப் பெருந்தண் டேந்திய
கரதலத்து அண்ணலைக் கண்ணின் நோக்கிய
நரகின ராம்என நடுங்கும் நாவினர்
உரகர்கள் தம்மனம் உலைந்து சூழவே. 570

*திசையுறு கரிகளைச் செற்றுத் தேவனும்
வசையுறக் கைலையை மறித்து வானெலாம்
அசையுறப் புரந்தரன் அடர்த்த தோள்களின்
இசையினைத் தும்புரு இசையின் ஏத்தவே. 571

*சேண்உயர் நெறிமுறை திறம்பல் இன்றியே
பாணிகள் பணிசெயப் பழுதில் பண்நிறை
வீணையின் நரம்பிடை விளைந்த தேமறை
வாணியின் நாரதன் செவியில் வார்க்கவே. 572

வேறு

மேகம்என் துருத்தி கொண்டு விண்ணவர் தருவும் விஞ்சை
நாகமும் சுரந்த தீந்தேம் புனலொடும் அளாவி ஒவ்வித்
தோகையர் துகிலில் தோயும் என்பதோர் துணுக்கத் தோடும்
சீகரம் மகர வேலைக் காவலன் சிந்த மன்னோ. 573

நறைமலர்த் தாதும் தேனும் நளிர்நெடு மகுட கோடி
முறைமுறை அறையச் சிந்தி முரிந்துகு மணியும் முத்தும்
தரையிடை உகாத முன்னம் தாங்கினன் தழுவி வாங்கித்
துறைதொறும் தொடர்ந்து நின்று சமீரணன் துடைப்ப மன்னோ. 574

வரிசை. நாள் - இருபத்தேழு நட்சத்திரங்கள். கோள் - நவக்கிரகங்கள். இந்திரசித்து பிறந்தபோது, அவன் எல்லோரையும்விடச் சிறந்தவனாக ஆகவேண்டு மென்பதற்காக நவக்கிரகங்களையும் பிடித்து இராவணன் ஓர் இடத்தில் சிறை வைத்தானாம். 570-ம் பாட்டு : அண்ணல் - எமன். 571-ம் பாட்டு : தேவன் - சிவன். 572-ம் பாட்டு : வீணை - மகதீ என்னும் பெயருடைய வீணை. தேமறை - சாமகானம். செவியில் - இராவணனுடைய செவியில். 573-ம் பாட்டு : விண்ணவர் தரு - தேவருலகில் உள்ள கற்பகம். விஞ்சைநாகம் - வித்தியாதரர்களின் இருப்பிடத்திலுள்ள புன்னை மரம். இங்கே அம்மரங்களின் மலர்களைக் குறிக்கின்றன. காவலன் - வருணன்.

வேறு

மின்னுடை வேத்திரக் கையர் மெய்புகத்
துன்நெடுங் கஞ்சுகத் துகிலர் சோர்விலர்
பொன்னொடு வெள்ளியும் புரந்த ராதியர்க்கு
இன்இயல் முறைமுறை இருக்கை ஈயவே. 575

சூலமே முதலிய துறந்து சுற்றிய
சேலையால் சிறியவாய் புதைத்துச் செங்கையின்
தோலுடை நெடும்பணை துவைக்கும் தோறெலாம்
காலன்வந்து இசைக்கும்நாள் கடிகை கூறவே. 576

நயம்கிளர் நானநெய் அளாவி நந்தல்இல்
வியங்கருப் பூரம்மென் பஞ்சின் மீக்கொளீஇக்
கயங்களின் மரைமலர்க் காடு பூத்தென
வயங்கெரிக் கடவுளும் விளக்கம் மாட்டவே. 577

அதிசயம் அளிப்பதற்கு அருள் அறிந்துநற்
புதிதுஅலர் கற்பகத் தருவும் பொய்இலாக்
கதிர்நெடு மணிகளும் கறவை ஆன்களும்
நிதிகளும் முறைமுறை நின்று நீட்டவே. 578

குண்டலம் முதலிய குலம்கொள் பேரணி
மண்டிய பேரொளி வயங்க விசலால்
உண்டுகொல் இரவுஇனி உலகம் ஏழினும்
எண்திசை மருங்கினும் இருள்இன் றென்னவே. 579

கங்கையே முதலிய கடவுட் கன்னியர்
கொங்கைகள் சுமந்திடை கொடியின் ஒல்கிடச்
செங்கையின் அரிசியும் மலரும் சிந்தினர்
மங்கலம் முறைமுறை கூறி வாழ்த்தவே. 580

ஊருவில் தோன்றிய உயிர்பெய் ஓவியம்
காரினில் செருக்கிய கலாப மஞ்ஞைபோல்
வார்விசிக் கருவியோர் வகுத்த பாணியில்
நாரியர் அருநடம் நடிப்ப நோக்கியே. 581

*இருந்தனன் உலகங்கள் இரண்டும் ஒன்றும்தன்
அருந்தவம் உடைமையின் அளவில் ஆற்றலில்
பொருந்திய இராவணன் புருவக் கார்முகக்
கருந்தடங் கண்ணியர் கண்ணின் வெள்ளத்தே. 582

575-ம் பாட்டு : பொன்னொடு வெள்ளியும் - தேவகுருவான பிருகஸ்பதியும், அசுரகுருவான சுக்கிரனும் என்பர். இவ்விருவரும் முறையே பொன்னிறமும், வெண்ணிறமும் உடையவர்கள். 581-ம் பாட்டு: ஊருவில் தோன்றிய உயிர்பெய் ஓவியம் - திருமாலின் அம்சமாகத் தோன்றி பதரிகாசிரமத்தில் தவம் செய்துகொண்டிருந்த நாராயண முனிவனுடைய துடையில் பிறந்த ஊர்வசி. பிரமனின் துடையில் என்று சொல்லப்படுவதும் உண்டு.

*தங்கையும் அவ்வழி தலையில் தாங்கிய
செங்கையள் சோரியின் தாரை சேந்திழி
கொங்கையள் மூக்கினள் குழைஇல் காதினள்
மங்குலின் ஒலிபடத் திறந்த வாயினள். 583

*முடையுடை வாயினள் முறையிட்டு ஆர்த்தெழு
கடையுகக் கடலொலி காட்டிக் காந்துவாள்
குடதிசைச் செக்கரில் சேர்ந்த கூந்தலாள்
வடதிசை வாயிலின் வந்து தோன்றினாள். 584

தோன்றலும் தொல்நகர் அரக்கர் தோகையர்
ஏன்றுஎதிர் வயிறலைத்து இரங்கி ஏங்கினர்
மூன்றுல குடையவன் தங்கை மூக்கிலள்
தான்தனி யவள்வரத் தரிக்க வல்லரோ. 585

*பொருக்கென நோக்கினர் புகல்வ தோர்கிலர்
அரக்கரும் இரைத்தனர் அசனி யாமெனக்
கரத்தொடு கரங்களைப் புடைத்துக் கண்களை
நெருப்பெழ விழித்துவாய் மடித்து நிற்கின்றார். 586

*இந்திரன் மேலதோ உலகம் ஈன்றபேர்
அந்தணன் மேலதோ ஆழி யானதோ
சந்திர மௌலிபால் தங்கு மேகொலோ
அந்தரம் என்றுநின்று அழல்கின் றார்சிலர். 587

செப்புறற்கு உரியவர் தெவ்வர் யார்உளர்
முப்புறத்து உலகமும் அடங்க மூடிய
இப்புறத்து அண்டத்தோர்க்கு இயைவ தன்றிது
அப்புறத்து அண்டத்தோ ராம்என் றார்சிலர் 588

*என்னையே இராவணன் தங்கை என்றபின்
அன்னையே என்றுஅடி வணங்கல் இன்றியே
உன்னவே ஒண்ணுமோ ஒருவ ரால்இவள்
தன்னையே அரிந்தனள் தான்என் றார்சிலர். 589

போர்இலான் புரந்தரன் ஏவல் பூண்டனன்
ஆர்உலாம் நேமியான் ஆற்றல் தோற்றுப்போய்
நீரினன் நெருப்பினன் பொருப்பி னன்இனி
ஆர்கொலாம் ஈதென அறைகின் றார்சிலர். 590

சொற்பிறந் தார்க்குஇது துணிய ஒண்ணுமே
இற்பிறந் தார்தமக்கு இயைவ செய்திலள்
கற்பிறந் தாள்எனக் கரன்கொ லாம்இவள்
பொற்புஇறந்த ஆக்கினன் புகன்றுஎன் றார்சிலர். 591

தத்துறு சிந்தையர் தளரும் தேவரில்
பித்துற அல்லரே பிழைப்பில் சூழ்ச்சியார்
முத்திறத் துலகையும் முடிக்க எண்ணுவார்
இத்திறம் புணர்த்தனர் என்கின் றார்சிலர். 592

இனிஒரு கற்பம்உண்டு என்னின் அன்றியே
வனிகழல் வயங்குவாள் வீரர் வல்லரோ
பனிவரும் கானிடைப் பழிப்பில் நோன்புடை
முனிவரர் வெகுளியின் முடிபென் ருர்சிலர். 593

*கரையறு திருநகர்க் கருங்கண் நங்கைமார்
நிரைவளைத் தளிர்க்கரம் நெரித்து நோக்கினர்
பிரையுறு பாலென நிலையில் பின்றிய
உரையினர் ஒருவர்முன் ஒருவர் ஓடினர். 594

*முழவினில் வீணையில் முரளி யாழினில்
தழுவிய குழலினில் சங்கில் தாரையில்
எழுகுரல் இன்றியே என்றும் இல்லதோர்
அழுகுரல் பிறந்ததுஅவ் இலங்கைக்கு அன்றரோ. 595

*கள்ளுடை வள்ளமும் களித்த தும்பியும்
உள்ளமும் ஒருவழிக் கிடக்க ஓடினர்
வெள்ளமும் நாணுற விரிந்த கண்ணினர்
தள்ளுறு மருங்கினர் தழிஇக்கொண் டேகினர். 596

நாந்தக உழவரை நாட்டும் தண்டத்தர்
காந்திய மனத்தினர் புலவி கைம்மிகச்
சேந்தகண் அதிகமும் சிவந்து நீர்உக
வேந்தனுக்கு இளையவள் தாளின் வீழ்ந்தனர். 597

பொற்றலை மரகதப் பூகம் நோவுற
சுற்றிய மணிவடம் தூங்கும் ஊசலின்
முற்றிய ஆடலின் முனிவுற்று ஏங்கினர்
சிற்றிடை அலமரத் தெருவு சேர்கின்ருர். 598

எழுஎன மலைஎன எழுந்த தோள்களைத்
தழுவிய வளைத்தளிர் நெகிழத் தாமரை
முழுமுகத்து இருகயல் முத்தின் ஆலிகள்
பொழிதரச் சிலர்உளம் பொருமி விம்முவார். 599

வேறு

நெய்ந்நிலைய வேலரசன் நேருநரை இல்லான்
அந்நிலை உணர்ந்தபொழுது எந்நிலையன் என்னு
மைந்நிலை நெடுங்கண்மழை வான்நிலைய தாகப்
பொய்ந்நிலை மருங்கினர் புலம்பினர் புரண்டார். 600

மனம்தலை வரும்கனவின் இன்சுவை மறந்தார்
கனம்தலை வரும்குழல் சரிந்துகலை சோர
நனந்தலைய கொங்கைகள் ததும்பிட நடந்தார்
அனந்தர்இள மங்கையர் அழுங்கிஅயர் கின்ருர். 601

*அங்கையின் அரன்கயிலை கொண்டதிறல் ஐயன்
தங்கைநிலை இங்கிதுகொல் என்றுதளர் கின்ருர்
கொங்கையிணை செங்கையின் மலைந்துகுலை கோதை
மங்கையர்கள் நங்கைஎதிர் வந்துவிழு கின்ருர். 602

இலங்கையில் விலங்கும்இவை எய்தல்இல என்றும்
வலங்கையில் இலங்கும்அயில் மன்னன்உளன் என்று
நலம்கையில் அகன்றதுகொல் நம்மின்என நைந்தார்
கலங்கலின் நல்அம்கண்இணை வாரிகலுழ் கின்றார். 603

என்றினைய வன்துயர் இலங்கைநகர் எய்த
நின்றவர் இருந்தவரொடு ஓடும்நெறி தேடக்
குன்றின்அடி வந்துபடி கொண்டல்என மன்னன்
பொன்திணி கருங்கழல் விழுந்தனள் புரண்டாள். 604

மூடினது இருட்படலை மூவுலகும் முற்றச்
சேடனும் வெருக்கொடு சிரக்குவை நெளித்தான்
ஆடின குலக்கிரி அருக்கனும் அயிர்த்தான்
ஓடின திசைக்கரிகள் உம்பரும் ஒளித்தார். 605

விரிந்தவல யங்கள்மிடை தோள்படர மிதிட்டு
எரிந்தநய னங்கள்எயி றின்புறம் எரிப்ப
நெரிந்தபுரு வங்கள்இடை நெற்றியினை முற்றத்
திரிந்தபுவ னங்கள்வினை தேவரும் அயிர்த்தார். 606

தென்திசை நமன்தனொடு தேவர்குலம் எல்லாம்
இன்றிறுதி வந்தது நமக்கென இருந்த
நின்றுடல் நடுங்கிஉயிர் விம்மிநிலை நில்லா
ஒன்றும் உரை யாடல்இலர் உம்பரினொடு இம்பர். 607

*மடித்தபில வாய்கள்தொறும் வந்துபுகை முந்தத்
துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள உயிர்ப்பக்
கடித்தகதிர் வாள்எயிறு மின்கஞல மேகத்து
இடித்தஉரும் ஒத்துஉரறி யாவர்செயல் என்றான். 608

*கானிடை அடைந்துபுவி காவல்புரி கின்றார்
மீனுடை நெடுங்கொடியி னேன்அனையர் மேல்கீழ்
ஊனுடை உடம்புடைமை யோர்உவமை ஒவ்வா
மானுடர் தடிந்தனர்கள் வாள்உருவி என்றாள். 609

செய்தனர்கள் மானுடர் எனத்திசை அனைத்தும்
எய்தநகை வந்ததுஎரி சிந்தினகண் எல்லாம்
நொய்துஅவர் வலித்தொழில் நுவன்றமொழி ஒன்றோ
பொய்தவிர் பயத்தைஒழி புக்கபுகல் என்றான். 610

மன்மதனை ஒப்பர்மணி மேனிவட மேரு
தன்எழில் அழிப்பர்திரள் தோளின்வலி தன்னால்
என்அதனை இப்பொழுது இசைப்பதுஉல கேழில்
நல்மதன் அழிப்பர்ஓர் இமைப்பில்நனி வில்லால். 611

வந்தனை முனித்தலைவர் பால்உடையர் வானத்து
இந்துவின் முகத்தர்எறி நீரில்எழு நாளக்
கந்தமல ரைப்பொருவு கண்ணர்கழல் கையர்
அந்தம்இல் தவத்தொழிலர் ஆர்அவரை ஒப்பார். 612

609-ம் பாட்டு: மீனுடை நெடுங்கொடியினேன் - மன்மதன்.

வற்கலையர் வார்கழலர் மார்பில்நனி நூலர்
விற்கலையர் வேதம்உறை நாவர்நனி மெய்யர்
உற்குஅலையர் உன்னைஓர் துகள்துணையும் உன்னார்
சொற்கலை எனத்தொலைவில் தூணிகள் சுமந்தார். 613

ஆறுபுலன் அஞ்சினம் அரக்கரை எனச்சென்று
ஏறுநெறி அந்தணர் இயம்பஉல கெல்லாம்
வேறும்எனும் நுங்கள்குலம் வேரொடும் அடங்கக்
கோறும்என முந்தைஒரு சூளுறவு கொண்டார். 614

*மாரர்உள ரேஇருவர் ஓர்உலகின் வாழ்வார்
வீரர்உள ரேஅவரின் வில்லதனில் வல்லார்
ஆர்ஒருவர் அன்னவரை ஒப்பவர்கள் ஐயா
ஓர்ஒருவ ரேஇறைவர் மூவரையும் ஒப்பார். 615

*தராவலய நேமிஉழ வன்தயர தப்பேர்ப்
பராவரும் நலத்தொருவன் மைந்தர்பழி யில்லார்
விராவரும் வனத்துஅவன் விளம்பஉறை கின்றார்
இராமனும் இலக்குவனும் என்பர்பெயர் என்றாள். 616

மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரும் மானுடர் அரிந்தும்உயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்துஇறையும் வெள்காது
இருந்தனன் இராவணனும் இன்னுயிர்கொடு இன்னும். 617

*கொற்றமது முற்றிவலி யால்அரசு கொண்டே
உற்றபயன் மற்றிதுகோ லாம்உரை இறந்தேன்
முற்றஉல கத்துமுதல் வீரர்முடி யெல்லாம்
அற்றபொழு தத்துஇது பொருந்தும்எனல் ஆமே. 618

*மூளும்உள தாயபழி என்வயின் முடித்தோர்
ஆளும்உள வாம்அவரது ஆருயிரும் உண்டாம்
வாளும்உளது ஓதவிடம் உண்டவன் வழங்கும்
நாளும்உள தோளும்உள நானும்உளென் அன்றே. 619

பொத்துற உடல்பழி புகுந்ததென நாணித்
தத்துறுவது என்னைமன னேதளரல் அம்மா
எத்துயர் உனக்குளது இனிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள்பல அன்றே. 620

என்றுரைசெ யாநகைசெ யாஎரி விழிப்பான்
வன்துணைஇ லாஇருவர் மானுடரை வாளால்
கொன்றிலர்க ளாநெடிய குன்றுடைய கானில்
நின்றகர னேமுதலி னோர்நிருதர் என்றான். 621

வேறு

அற்றுஅவன் உரைத்த லோடும் அழுதுஇழி அருவிக் கண்ணள்
எற்றிய வயிற்றள் பாரின் இடைவிழுந் தேங்கு கின்றாள்
சுற்றமும் தொலைந்தது ஐய நொய்தெனச் சுமந்த கையள்
உற்றது தெரியும் வண்ணம் ஒருவகை உரைக்கல் உற்றாள். 622

சொல்என்றுஎன் வாயில் கேட்டார் தொடர்ந்தெழு சேனை யோடும்
கல்லென்ற ஒலியில் சென்றார் கரன்முதல் காளை வீரர்
எல்ஒன்று கமலச் செங்கண் இராமன்என் றிசைத்த ஏந்தல்
வில்ஒன்றில் கடிகை மூன்றில் ஏறினர் விண்ணில் என்றாள். 623

தார்உடைத் தானை யோடும் தம்பியர் தமியன் செய்த
போரிடை மடிந்தார் என்ற உரைசெவி புகாத முன்னம்
காரிடை உருமின் மாரி கனலொடும் பிறக்கு மாபோல்
நீரொடு நெருப்புக் கான்ற நிரைநெடுங் கண்க ளெல்லாம். 624

*ஆயிடை எழுந்த சீற்றத்து அழுந்திய துன்பம் ஆழித்
தீயிடை உருக்கும் நெய்யில் சீற்றத்திற்கு ஊற்றம் செய்ய
நீஇடை இழைத்த குற்றம் என்னைகொல் நின்னை இன்னே
வாயிடை இதழும் மூக்கும் வலிந்துஅவர் கொய்ய என்றான். 625

*என்வயின் உற்ற குற்றம் யாவர்க்கும் எழுத ஒண்ணாத்
தன்மையன் இராம னோடும் தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள் வெய்வயின் மென்தோள் கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள் பொருட்டினால் புகுந்த என்றாள்.

ஆர்அவள் என்ன லோடும் அரக்கியும் ஐய ஆழித்
தேர்அவள் அல்குல் கொங்கை செம்பொன்செய் குலிகச் செப்பு
பார்அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்த தம்மா
பேர்அவள் சீதை என்று வடிவெலாம் பேச லுற்றாள். 627

காமரம் முரலும் பாடல் கள்ளனக் கனிந்த இன்சொல்
தேமலர் நிரந்த கூந்தல் தேவர்க்கும் அணங்காம் என்னத்
தாமரை யிருந்த தையல் சேடிஆம் தரமும் அல்லள்
யாம்உரை வழங்கல் என்பது ஏழைமைப் பால தன்றே. 628

மஞ்சொக்கும் அளகஓதி மழையொக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதின் அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற் றேனும் கடலினும் பெரிய கண்கள். 629

ஈசனார் கண்ணின் வெந்தான் என்னும்ஈது இழுதைச் சொல்இவ்
வாசம்நாறு ஓதி யாளைக் கண்டனன் வவ்வல் ஆற்றான்
பேசலாம் தகைமைத் தல்லாப் பெரும்பிணி பிணிப்ப நீண்ட
ஆசையால் அழிந்து தேய்ந்தான் அனங்கன்அவ் உருவம் அம்மா. 630

தெவ்உல கத்தும் காண்டி சிரத்தினில் பணத்தி னோர்கள்
அவ்வுல கத்தும் காண்டி அலைகடல் உலகில் காண்டி
வெவ்உலை யுற்ற வேலை வாளினை வென்ற கண்ணாள்
இவ்வுல கத்தாள் அங்கம் யாவர்க்கும் எழுதொ ணாதாள். 631

625-ம் பாட்டு: வாயிடை இதழ் என்பதற்குத் துவாரமுள்ள காது எனவும் பொருள் கூறப்படும். 631-ம் பாட்டு: தெவ் உலகம் — இராவணனின் பகைவர்களான தேவர்களின் உலகம். சிரத்தினில் பணத்தினோர்- தலையில் (பாம்பின்) படத்தைக்கொண்ட நாகர்கள்.

தோளையே சொல்லு கேனோ சுடர்முகத் துலவு கின்ற
வாளையே சொல்லு கேனோ அல்லவை வழுத்து கேனோ
மீளவும் திகைப்ப தல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன்
நாளையே காண்டி யன்றே நான்உனக்கு உரைப்ப தென்னோ. 632

வில்ஒக்கும் நுதல்என் றாலும் வேல்ஒக்கும் விழிஎன் றாலும்
பல்ஒக்கும் முத்தென் றாலும் பவளத்தை இதழ்என் றாலும்
சொல்ஒக்கும் பொருள்ஒவ் வாவால் சொல்லலாம் உவமை உண்டோ
நெல்ஒக்கும் புல்என் றாலும் நேர்உரைத் தாக வற்றே. 633

இந்திரன் சசியைப் பெற்றான் இருமூன்று வதனத் தோன்தன்
தந்தையும் உமையைப் பெற்றான் தாமரைச் செங்க ணானும்
செந்திரு மகளைப் பெற்றான் சீதையைப் பெற்றாய் நீயும்
அந்தரம் பார்க்கின் நன்மை அவர்க்கில்லை உனக்கே ஐயா. 634

பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தின் மின்னை முன்னே வென்றநுண் இடையை நீயும்
மாகத்தோள் வீர பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி? 635

பிள்ளைபோல் பேச்சினாளைப் பெற்றபின் பிழைக்க லாற்றாய்
கொள்ளைபோ கின்ற செல்வம் அவளுக்கே கொடுத்தி ஐய
வள்ளலே உனக்கு நல்லேன் மற்றுநின் மனையில் வாழும்
கிள்ளைபோல் மொழியார்க் கெல்லாம் கேடுசூழ் கின்றேன் அன்றே.

தேர்ந்த அல்குல் சீதை தேவர்தம் உலகின் இம்பர்
வார்தந்த கொங்கை யார்தம் வயிறுதந் தாளும் அல்லள்
தார்தந்த கமலத் தாளைத் தருக்கினர் கடையச் சங்க
நீர்தந்தது அதனை வெல்வான் நிலம்தந்து நிரம்பிற் றன்றே. 637

மீன்கொண்டுஊ டாடும் வேலை மேகலை உலகம் ஏத்தத்
தேன்கொண்டுஊ டாடும் கூந்தல் சிற்றிடைச் சீதை என்னும்
மான்கொண்டு டாடும் நீஉன் வாள்வலி உலகம் காண
யான்கொண்டு டாடும் வண்ணம் இராமனைத் தருதி என்பால். 638

தருவது விதியே என்றால் தவம்பெரிது உடைய ரேனும்
வருவது வரும்நா ளன்றி வந்துகை கூட வற்றோ
ஒருபது முகமும் கண்ணும் உருவமும் மார்பும் தோள்கள்
இருபதும் படைத்த செல்வம் எய்துவது இனிநீ எந்தாய். 639

*அன்னவள் தன்னை உன்பால் உய்ப்பல்என் றணுகல் உற்ற
என்னைஅவ் இராமன் தம்பி இடைபுகுந்து இலங்கு வாளால்
முன்னைமூக் கரிந்து விட்டான் முடிந்ததென் வாழ்வும் உன்னின்
சொன்னபின் உயிரை நீப்பான் துணிந்தனென் என்னச் சொன்னாள்.

635-ம் பாட்டு: பாகத்தில்......நாவில் வைத்தான் - சிவன் தனது உடம்பின் இடதுபாகத்தில் உமையை வைத்தான்; திருமால் தனது மார்பில் இலக்குமியை வைத்தான்; பிரமன் தனது நாவில் சரஸ்வதியை வைத்தான். இடையை-சீதையை. 637-ம் பாட்டு: தருக்கினர். தேவர்களும் அசுரர்களும். சங்கநீர்-பாற்கடல். அதனை-பாற்கடலை.

கோபமும் மறனும் மானக் கொதிப்பும்என் றினைய எல்லாம்
பாபம்நின் றிடத்து நில்லாப் பெற்றிபோல் பற்று விட்ட
தீபம்ஒன் றொன்றை உற்றால் என்னல்ஆம் செயலின் புக்க
தாபமும் காம நோயும் ஆருயிர் கலந்த அன்றே. 641

*கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்
உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான் வெற்றி
அரனையும் கொண்ட காமன் அம்பினால் முன்னைப் பெற்ற
வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்தி லாதான். 642

சிற்றிடைச் சீதை என்னும் நாமமும் சிந்தை தானும்
உற்றுஇரண்டு ஒன்றாய் நின்றால் ஒன்றொழித்து ஒன்றை உன்ன
மற்றொரு மனமும் உண்டோ மறக்கல்ஆம் வழிமற்று யாதோ
கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கல் ஆமோ. 643

மயிலுடைச் சாய லாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை வேந்தன் இதயமாம் சிறையில் வைத்தான்
அயிலுடை அரக்கன் உள்ளம் அவ்வழி மெல்ல மெல்ல
வெயிலுடை நாளில் உற்ற வெண்ணெய்போல் வெதும்பிற் றன்றே.

விதியது வலியி னானும் மேலுள விளைவி னானும்
பதியுறு கேடு வந்து குறுகிய பயத்தி னானும்
கதியுறு பொறியின் வெய்ய காமநோய் கல்வி நோக்கா
மதியிலி மறையச் செய்த தீமைபோல் வளர்ந்த தன்றே. 645

பொன்மய மான நங்கை மனம்புகப் புன்மை பூண்ட
தன்மையோ அரக்கன் தன்னை அயர்த்ததோர் தகைமை யாலோ
மன்மதன் வாளி தூவி நலிவதோர் வலத்த னாவான்
வன்மையை மாற்றும் ஆற்றல் காமத்தே வதிந்த தன்றே. 646

*எழுந்தனன் இருக்கை நின்றுஆண்டு ஏழுல கத்து ளோரும்
மொழிந்தனர் ஆசி ஓசை முழங்கின சங்கம் எங்கும்
பொழிந்தன பூவின் மாரி போயினர் புறத்தோர் எல்லாம்
அழிந்தழி சிந்தை யோடும் ஆடகக் கோயில் புக்கான். 647

பூவினால் வேய்ந்து செய்த பொங்குபே ரமளிப் பாங்கர்த்
தேவிமார் குழுவும் நீங்கச் சேர்ந்தனன் சேர்த லோடும்
நாவிநாறு ஓதி நவ்வி நயனமும் குயமும் புக்குப்
பாவியாக் கொடுத்த வெம்மை பயப்பயப் பரந்த தன்றே. 648

642-ம் பாட்டு: முன்னைப் பெற்ற வரனையும் - "எந்தப் பெண்ணை யும் பலாத்காரமாக நீ தொட்டால், அவளுடைய கற்புத் தீயால் எரிந்துவிடுவாய்" என்று வேதவதி, அரம்பை முதலிய தேவமாதர் கள் (இராவணனுக்குக்) கொடுத்த சாபத்தையும். 645-ம் பாட்டு: பதி - இலங்கை. 648-ம் பாட்டு ; நவ்வி—சீதை.

வேறு

நூக்கல்ஆக லாதகாதல் நூறுநூறு கோடியாய்ப்
பூக்கவாச வாடைவீசு சீதநீர்பொ திந்தமென்
சேக்கைவீ கரிந்துதிக் கயங்கள்எட்டை வென்றதோள்
ஆக்கைதீய உள்ளம்நைய ஆவிவேவ தாயினுன். 649

தாதுகொண்ட சீதம்மேவும் சந்துசந்த மென்தளிர்
போதுகொண்ட டுத்தபோது பொங்குதீ மருந்தினுல்
வேதுகொண்ட தென்னமேனி வெந்துவெந்து விம்முதீ
ஊதுவன் துருத்திபோல் உயிர்த்துயிர்த் துயங்கினுன். 650

தாவியாது தீதெனுது தையலாளை மெய்யுறப்
பாவியாத போதிலாத பாவிமாழை பானல்வேல்
காவியான கண்ணிமேனி காணமுளும் ஆசையால்
ஆவிசால நொந்துநொந் தழுங்குவானும் ஆயினுன். 651

பரம்கிடந்த மாதிரம் சுமந்தபாழி யானையின்
கரம்கிடந்த கொம்பொடிந்து இரங்கவென்ற காவலன்
மரம்குடைந்த தும்பிபோல்அ னங்கன்வாளி வந்துவந்து
உரம்குடைந்து உருங்கநொந்து உளைந்துளைந்து ஒதுங்கினுன். 652

கொன்றைதுன்று கோதையோடொர் கொம்புவந்தென் நெஞ்சிடை
நின்றதுண்டு கண்டதுஎன்றழிந்த ழுங்கு நீர்மையான்
மன்றல்தங்கு அலங்கல்மாரன் வாளிபோல மல்லிகைத்
தென்றல்வந்தெ திர்ந்தபோது சீறுவானும் ஆயினுன். 653

அன்னகாலை அங்குநின்றெ ழுந்தழுங்கு சிந்தையான்
இன்னவாறு செய்வென்என்றோர் எண்இலாது இரங்குவான்
பன்னுகோடி தீபமாலை பாலையாழ் பழித்தசொல்
பொன்அனுர்எ டுக்கஅங்கொர் சோலையூடு போயினுன். 654

வேறு

மாணிக்கம் பனசம் வாழை மரகதம் வயிரம் தேமா
ஆணிப்பொன் வேங்கை கோங்கம் அரவிந்த ராகம் பூகம்
சேணுற்ற நீலம் சாலம் குருவிந்தம் தென்னம் வெள்ளி
பாணித்தண் பளிங்கு நாகம் பாடலம் பவளம் மன்னே. 655

வானுற நிவந்த செங்கேழ் மணிமரம் துவன்றி வான
மீனெடு மலர்கள் தம்மில் வேற்றுமை தெரிதல் தேற்ருத்
தேனுகு சோலை நாப்பண் செம்பொன்மண் டபத்துள் ஆங்கோர்
பால்நிற அமளி சேர்ந்தான் பையுள்உற்று உயங்கி நைவான். 656

651-ம் பாட்டு: பாவியாத போதிலாத பாவி - நினைக்காத சமய மில்லாத இராவணன். கண்ணி - சீதை. 655—ம்பாட்டு: ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு ரத்தினத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது.

கனிகளின் மலரின் வந்த கள்ளுண்டு களிகொள் அன்னம்
வனிதையர் மழலை இன்சொற் கிள்ளையும் குயிலும் வண்டும்
இனியன மிழற்று கின்ற யாவையும் இலங்கை வேந்தன்
முனியும்என்று அவிந்த வாய மூங்கையர் போன்ற அன்றே. 657

பருவத்தால் வாடை வந்த பசும்பனி அனங்க பாணம்
உருவிப்புக்கு ஒளித்த புண்ணில் குளித்தலும் உளைந்து விம்மி
இருதுத்தான் யாத டாளென்று இயம்பினன் இயம்ப லோடும்
வெருவிப்போய்ச் சிசிரம் நீங்கி வேனில்வந் திறுத்த தன்றே. 658

வன்பனை மரமும் தீய மலைகளும் குளிர வாமும்
மென்பனி எரிந்த தென்றல் வேனிலை விளம்பல் ஆமோ
அன்பெனும் விடம்உண் டாரை ஆற்றல்ஆம் மருந்தும் உண்டோ
இன்பமும் துன்பந் தானும் உள்ளத்தோடு இயைந்த அன்றே. 659

மாதிரத்து இறுதி காறும் தன்மனத்து எழுந்த மையல்
வேதனை வெப்பம் செய்ய வேனிலும் வெதுப்புங் காலை
யாதுஇதுஇங்கு இதனின் முன்னைச் சிசிரம்நன்று இதனை நீக்கிக்
கூதிராம் பருவம் தன்னைக் கொணருதிர் விரைவின் என்றான். 660

கூதிர்வந்து அடைந்த காலைக் கொதித்தன குவவுத் திண்தோள்
சீதமும் சுடுமோ முன்னைச் சிசிரமே காண்இது என்றான்
ஆதியாய் அஞ்சும் அன்றே அருள்அலது இயற்ற என்ன
யாதும்இங்கு இருது ஆகாது யாவையும் அகற்றும் என்றான். 661

என்னலும் இருது எல்லாம் ஏகின யாவும் தத்தம்
பன்னரும் பருவம் செய்யா யோகி போல் பற்று நீத்த
பின்னரும் உலக மெல்லாம் பிணிமுதல் பாசம் வீசித்
துன்னரும் தவத்தின் எய்தும் துறக்கம்போல் தோன்றிற் றன்றே. 662

கூலத்துஆர் உலகம் எல்லாம் குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க
நீலத்துஆர் அரக்கன் மேனி நெய்இன்றி எரிந்த தன்றே
காலத்தால் வருவ தொன்றோ காமத்தால் கனலும் வெந்தீச்
சீலத்தால் அவிவ தன்றிச் செய்யத்தான் ஆவ துண்டோ. 663

நாரம்உண்டு எழுந்த மேகம் தாமரை வளையம் நாளுச்
சாரம்உண் டிருந்த சீதச் சந்தனத் தளிர்மென் தாதோடு
ஆரம்உண் டிருந்தும் சிந்தை அயர்கின்றான் அயல்நின் றாரை
ஈரம்உண் டென்பர் ஓடி இந்துவைக் கொணர்மின் என்றான். 664

வெஞ்சினத் தரக்கன் ஆண்ட வியல்நகர் மீது போதும்
நெஞ்சிலன் ஒதுங்கு கின்ற நிறைமதி யோனை நோக்கி
அஞ்சலை வருதி நின்னை அழைத்தனன் அரசன் என்னச்
சஞ்சலம் துறந்து தான்அச் சந்திரன் உதிக்க லுற்றான். 665

அயிர்உறக் கலந்த நன்னீர் ஆழிநின்று ஆழி இந்து
செயிர்உறச் சேதித்து ஆண்டுஓர் தேய்வுவந் துற்ற போது
வயிரம்உற்று உடைந்த செற்றோர் வலியவர்ச் செல்லு மாபோல்
உயிர்தெறக் காலன் என்பான் ஒத்தனன் உதயம் செய்தான். 666

பராவரும் கதிர்கள் எங்கும் பரப்பிமிப் படர்ந்து வானில்
தராதலத் தெவரும் பேண அவனையே சலிக்கும் நீரால்
அராவணை துயிலும் அண்ணல் காலம்ஓர்ந்து அற்றம் நோக்கி
இராவணன் உயிர்மேல் உய்த்த திகிரியும் என்ன லானுன். 667

அருகுறு பாலின் வேலை அமுதெலாம் அளைந்து வாரிப்
பருகினன் பரந்து பாய்ந்த நிலாச்சுடர்ப் பனிமென் கற்றை
நெரியுறு புருவச் செங்கண் அரக்கற்கு நெருப்பின் நாப்பண்
உருகிய வெள்ளி அள்ளி வீசினுல் ஒத்த தன்றே. 668

மின்நிலம் திரிந்த தன்ன விழுநிலா மிதிலை சூழ்ந்த
செந்நெல்அம் கழனி நாடன் திருமகள் செவ்வி கேளா
நன்னலம் தொலைந்து சோரும் அரக்கனை நாளும் தோலாத்
துன்னலன் ஒருவன் பெற்ற புகழ்எனச் சுட்ட தன்றே. 669

கருங்கழல் காலன் அஞ்சும் காவலன் கறுத்து நோக்கித்
தருங்கதிர் சீத யாக்கை சந்திரற் றருதிர் என்ன
முருங்கிய தணலின் மூரி விடத்தினை முகக்கும் சீற்றத்து
அருங்கதிர் அருக்கன் தன்னை யார்அழைத் தீர்கள் என்ருன். 670

அவ்வழிச் சிலதர் அஞ்சி ஆதியாய் அருள்இல் லாரை
இவ்வழித் தருதும் என்பது இயம்பலாம் இயல்பிற் றன்ருல்
செவ்வழிக் கதிரோன் என்றும் தேரின்மே லன்றி வாரான்
வெவ்வழித்து எனினும் திங்கள் விமானத்தின் மேலது என்ருர். 671

வேறு

பணம்தாழ் அல்குல் பனிமொழியார்க்கு அன்பு பட்டார் படுங்காமக்
குணந்தான் முன்னம் அறியாதான் கொதியா நின்ருன் மதியாலே
தண்அம்தா மரையின் தனிப்பகைஞன் என்னும் தன்மை ஒருதானே
உணர்ந்தான் உணர்வுற்று அவன்மேலிட்டு உயிர்தந்து உய்க்க உரைசெய்வான்.

தேயா நின்ருய் மெய்வெளுத்தாய் உள்ளம் கறுத்தாய் நிலைதிரிந்து
காயா நின்ருய் ஒருநீயும் கண்டார் சொல்லக் கேட்டாயோ
பாயா நின்ற மலர்வாளி பறியா நின்ருர் இன்மையால்
ஓயா நின்றேன் உயிர்காத்தற்கு உரியார் யாவர் உடுபதியே, 673

ஆற்ரு ராகில் தம்மைக்கொண்டு அடங்கா ரோஎன் ஆருயிர்க்குக்
கூற்ருய் நின்ற குலச்சனகி குவளை மலர்ந்த தாமரைக்குத்
தோற்ருய் அதனல் அகம்கரிந்தாய் மெலிந்தாய் வெதும்பத் தொடங்கினுய்
மாற்ருர் செல்வம் கண்டழிந்தால் வெற்றியாக வற்ருமோ. 674

என்னப் பன்னி இடர்உறுவான் இரவோடு இவனைக் கொண்டகற்றி
முன்னைப் பகலும் பகலோனும் வருக என்ருன் மொழியாமுன்
உன்னற்கு அரிய உடுபதியும் இரவும் ஒழிந்த ஒருநொடியில்
பன்னற்கு அரிய பகலவனும் பகலும் வந்து பரந்தவால். 675

673-ம் பாட்டு : கண்டார் சொல்ல - சீதையின் அழகைக் கண்டவர்கள் அதைச் சொல்ல. 674-ம் பாட்டு : குவளை மலர்ந்த தாமரை - கருங்குவளை மலர்கள் (போன்ற கண்கள்) தன்னிடத்தே மலரப்பெற்ற தாமரை (போன்ற சீதையின் முகம்).

இருக்கின் மொழியார் எரிமுகத்தின் ஈந்த நெய்யின் அவிர்செம்பொன்
உருக்கி அனைய கதிர்பாய அனல்போல் விரிந்தது உயர்கமலம்
அருக்கன் எய்த அமைந்துஅடங்கி வாழா அடாத பொருள்எய்தி
செருக்கி இடையே திருஇழந்த சிறியோர் போன்ற சேதாம்பல், 676

நாணி நின்ற ஒளிமழுங்கி நடுங்கா நின்ற உடம்பினனுய்ச்
சேணி னின்று புறம்சாய்ந்து கங்குல் தாரம் பின்செல்லப்
பூணின் வெய்யோன் ஒருதிசையே புகுதப் போவான் புகழ்வேந்தர்
ஆணை செல்ல நிலைஅழிந்த அரசர் போன்ருன் அல்ஆண்டான். 677

வேறு

மணந்தபே ரன்பரை மலரின் சேக்கையுள்
புணர்ந்திலர் இடைஒரு வெகுளி பொங்கலால்
கணங்குழை மகளிர்கள் கங்குல் நீங்கிட
உணர்ந்திலர் கனவினும் ஊடல் தீர்ந்திலர். 678

தள்ளுறும் உயிரினர் தலைவர் நீங்கலால்
நள்ளிர விடைஉறு நடுக்கம் நீங்கலர்
கொள்ளையின் அலர்தரு குவளை நாள்மலர்
கள்உகு வனஎனக் கலுழும் கண்ணினர். 679

அணைமலர்ச் சேக்கையுள் ஆடல் தீர்ந்தனர்
பணைகளைத் தழுவிய பவள வல்லிபோல்
இணைமலர்க் கைகளின் இறுக இன்னுயிர்த்
துணைவரைத் தழுவினர் துயில்கின் ருர்சிலர். 680

அளியினம் கடம்தொறும் ஆர்ப்ப ஆய்கதிர்
ஒளிபட உணர்ந்தில உறங்கு கின்றன
தெளிவில இன்துயில் விளையும் சேக்கையுள்
களிகளை நிகர்த்தன களிநல் யானையே. 681

விரிந்துஉறை துறைதொறும் விளக்கம் யாவையும்
எரிந்துஇழுது அஃகல ஒளி இழந்தன
அரும்துறை திரம்பிய உயிரின் அன்பரை
பிரிந்துஉறை தரும்குலப் பேதை மாரினே, 682

புனைந்துஇதழ் உரிஞ்சுறு பொழுது புல்லியும்
வனைந்தில வைகறை மலரும் மாமலர்
நனந்தலை அமளியில் துயிலும் நங்கைமார்
அனந்தரின் நெடுங்கணேடு ஒத்த ஆம்அரோ. 683

இச்சையில் துயில்வதற்கு யாவர் கண்களும்
நிச்சயம் பகனும்தம் இமைகள் நீக்கல
பிச்சையும் இடுதும்என்று உணர்வு பேணலா
வச்சையர் நெடுமனை வாயில் ஆனவே. 684

677-ம் பாட்டு: அல்ஆண்டான் - இரவை ஆட்சி புரிந்தவனுன சந்திரன்.

நஞ்சுறு பிரிவினை நாளின் நீளம்ஓர்
தஞ்சுற விடுவதோர் தயாவு தாங்கலால்
வெஞ்சிறை நீங்கிய வினையி னார்என
நெஞ்சுறக் களித்தன நேமிப் புள்ளெலாம். 685

நாள்மதிக் கல்லது நடுவண் எய்திய
ஆணையில் திறக்கலா அலரில் பாய்வன
மாண்வினைப் பயன்படா மாந்தர் வாயில்சேர்
பாணரின் தளர்ந்தன பாடல் தும்பியே. 686

அருமணிச் சாளர மதனின் ஊடுபுக்கு
எரிகதிர் இன்துயில் எழுப்பி ஏற்றவும்
மருளொடு தெருளுறு நிலையர் மங்கையர்
தெருளுறு மெய்ப்பொருள் தெளிந்தி லாரினே, 687

ஏவலின் வன்மையை எண்ணல் தேற்றலர்
நாவலர் இயற்றிய நாளின் நாமநூல்
காவலர் நுனித்துணர் கணித மாக்களும்
கூவுறு கோழியும் துயில்வு கொண்டவே. 688

இனையன உலகினில் நிகழும் எல்லையில்
கனைகழல் அரக்கனும் கண்ணின் நோக்கினன்
நினைவுறு மனத்தையும் நெருப்பில் தீக்குமால்
அனையஅத் திங்களே ஆகு மால்என்றான். 689

திங்களோ அன்றுஇது செல்வ செங்கதிர்
பொங்குஉளைப் பச்சையம் புரவித் தேரதால்
வெங்கதிர் சுடுவதே யன்றி மெய்யுறத்
தங்குதண் கதிர்சுடத் தகாதென் றார்சிலர், 690

வேறு

நீலச் சிகரக் கிரியன்னவன் நின்ற வெய்யோன்
ஆலத்தினும் வெய்யன் அகற்றி அரற்று கீன்ற
வேலைக் குரலைத் தவிர்கென்று விலக்கி மேலை
மாலைப் பிறைப்பிள்ளையைக் கூவுதிர் வல்லை என்றான். 691

சொன்னான் நிருதர்க்குஇறை அம்மொழி சொல்ல லோடும்
அந்நாளில் நிரம்பிய அம்மதி ஆண்டுஓர் வேலை
முந்நாளின் இளம்பிறை யாகி முளைத்த தென்றால்
எந்நாளும் அருந்தவம் அன்றி இயற்றல் ஆமோ. 692

குடபாலின் முளைத்தது கண்ட குணங்கள் தீயோன்
வடவா அனல்அன்றெனின் மண்பிடர் வைத்த பாம்பின்
விடவாள் எயிறன்றெனின் என்னை வெகுண்டு மாலை
அடவாள் உருவிக்கொடு தோன்றிய தாகும் அன்றே. 693

688-ம் பாட்டு : ஏவலின் - (இரவிலேயே சூரியனை வரவழைத்த). இராவணனுடைய கட்டளையின்.

தாதுண் சடிலத்தலை வைத்தது தண்த ரங்கம்
மோதும் கடலிற்குஇடை முந்து பிறந்த போதே
ஓதும் கடுவைத்தன் மிடற்றின் ஒளித்த தக்கோன்
ஈதும் கடுவாம்என எண்ணிய எண்ணம் அன்றே. 694

உரும்ஒக்க உலைந்துயிர் நுங்கிய திங்கள் ஒடித்
திருமிச்சிறு மின்பிறை தீமை குறைந்த தில்லை
கருமைக்கறை நெஞ்சினில் நஞ்சு கலந்த பாம்பின்
பெருமைச்சிறு மைக்கொரு பெற்றி குறைந்த துண்டோ. 695

கன்னக்கனி யும்இருள் தன்னையும் காண்டும் அன்றே
முன்னைக்கதிர் நன்று இது அகற்றுதிர் முன்பு சான்ற
என்னைச்சுடும் என்னின்இவ் ஏழுல கத்தும் வாழ்வோர்
பின்னைச்சிலர் உயவர்என்று அங்கொரு பேச்சும் உண்டோ. 696

ஆண்டுஅப்பிறை நீங்கலும் எய்தியது அந்த காரம்
தீண்டற்கெளி தாய்ப்பல தேய்ப்பன தேய்க்க லாகி
வேண்டில்சர பத்திரத்து ஈர்த்து விழுத்த லாகிக்
காண்டற்கினி தாய்ப்பல கந்து திரட்ட லாகி. 697

முருடுஈர்ந்து உருட்டற்கு எளிதென்பதுஎன் முற்றும் முற்றிப்
பொருள்தீங்கில் கேள்விச் சுடர்புக்கு வழங்க லின்றி
குருடுஈங்கிது என்னக் குறிக்கொண்டுகண் ணோட்டம் குன்றி
அருள்தீர்ந்த நெஞ்சின் அரிதென்பதுஅவ் அந்த காரம். 698

விள்ளாது செறிந்திடை மேலுற வீங்கி எங்கும்
நள்ளா இருள்வந்துஅகல் ஞாலம் விழுங்க லோடும்
எள்ளாது உலகுயாவையும் யாவரும் வீயும் என்பது
உள்ளாது உமிழ்ந்தாள்விடம் உண்ட ஒருத்தன் என்றுன். 699

வேலைத்தலை வந்துஒரு வன்வலி யால்வி ழுங்கும்
ஆலத்தின் அடங்குவது அன்றுஇது அறிந்து ணர்ந்தே
ஞாலத்தொடு விண்முதல் யாவையும் நாவில் நக்கும்
காலக்கனல் கார்விடம் உண்டு கறுத்த தன்றே. 700

அம்பும் அனலும்நுழை யாக்கன அந்த காரத்து
உம்பர் மழைகொண்டுஅயல் ஒப்பரி தாய துப்பின்
கொம்பர் குரும்பைக்குலம் கொண்டது திங்கள் தாங்கி
வெம்பும் தமியேன்முன் விளக்கெனத் தோன்றும் அன்றே. 701

மருளூடு வந்த மயக்கோமதி மற்றும் உண்டோ
தெருளாதுஇது என்னே திணிமைஇழைத் தாலும் ஒவ்வா
இருளூடுஇரு குண்டலம் கொண்டும் இருண்ட நீலச்
சுருளோடும் வந்தோர் சுடர்மாமதி தோன்றும் அன்றே. 702

695-ம் பாட்டு: திருமிச்சிறு - திரும்பி, சிறுத்து (வந்த.) பெருமைச் சிறுமைக்கு - பெரிய வடிவத்தைவிடச் சிறிய வடிவத்துக்கு.

புடைகொண்டெழு கொங்கையும் அல்குலும் புல்கி நிற்கும்
இடைகண்டில மல்லதுஎல்லா உருவும் தெரிந்தாம்
விடம்நுங்கிய கண்ணுடை யார்இவர் மெல்ல மெல்ல
மடமங்கைய ராய்என் மனத்தவர் ஆயி னரே. 703

பண்டேஉலகு ஏழினும் உள்ள படைக்க ளுரைக்
கண்டேன்இவர் போல்வதொர் பெண்உருக் கண்டி லேனல்
உண்டேஎனில் வேறினி எங்கை உணர்த்தி நின்ற
வண்டேறு கோதை மடவார்இவர் ஆகும் அன்றே. 704

பூண்டுஇப்பிணி யான்உறு கின்றது தான்பொ ருதாள்
தேண்டிக்கொடு வந்தனள் செய்வதொர் மாறும் உண்டோ
காண்டற்கினி யாள்உருக் கண்டவட் கேட்கு மாற்றல்
ஈண்டிப்பொழு தேவிரைந்து எங்கையைக் கூவு கென்றான். 705

என்றான்என லும்கடி தேகினர் கூவும் எல்லே
வன்தாள்நிரு தக்குலம் வேரற மாய்த்தல் செய்வாள்
ஒன்றாதகா மக்கனல் உள்தெற லோடு நாசி
பொன்தாழ்குழை தன்னெடும் போக்கினள் போய்ப்பு குந்தாள். 706

பொய்ந்நின்ற நெஞ்சில் கொடியாள்புகுந் தாளை நோக்கி
நெய்ந்நின்ற கூர்வா ளவன்நேருற நோக்கி நங்காய்
மைந்நின்ற வாட்கண் மயில்நின்றென வந்தென் முன்னர்
இந்நின்றவ ளாம்கொல் இயம்பிய சிதை என்றான். 707

செந்தாமரைக் கண்ணெடும் செங்கனி வாயி னேடும்
சந்தார்தடந் தோளொடும் தாழ்தடக் கைக ளோடும்
அம்தார்அக லத்தொடும் அஞ்சனக் குன்றம் என்ன
வந்தான்இவன் ஆகும்அவ் வல்வில் இராமன் என்பான். 708

பெண்பால்உரு நான்இது கண்டது பேதை நீஈண்டு
எண்பாலும்இ லாததொர் ஆண்உரு என்றி என்னே
கண்பால்உறு மாயைக வற்றுதல் கற்ற நம்மை
மண்பாலவ ரேகொல்வி ளைப்பவர் மாயை என்றான். 709

ஊன்றும்உணர்வு அப்புறம் ஒன்றினும் ஓடல் இன்றி
ஆன்றும்உள தாம்நெடிது ஆசை கனற்ற நின்றாய்க்கு
ஏன்றுன்எதி ரேவிழி நோக்கும் இடங்கள் தோறும்
தோன்றும்அனை யாள்இது தொல்நெறித் தாகும் அன்றே. 710

அன்னாள்அது கூற அரக்கனும் அன்ன தாக
நின்னால்அவ்இ ராமனைக் காண்குறும் நீர்என் என்றான்
எந்நாள்அவன் என்னைஇத் தீர்வரும் இன்னல் செய்தான்
அந்நாள்முதல் யானும் அயர்த்தில னாகும் என்றாள். 711

704-ம் பாட்டு: எங்கை-சூர்ப்பநகை. 705-ம் பாட்டு: தான் - சீதை. காண்டற்கினியாள்-சீதை. கண்டவட்கேட்குமாற்றல்-முன்பு கண்டவளாகிய சூர்ப்பநகையிடம், 'இவள் சீதைதானா?' என்று கேட்டுச் சந்தேசத்தை தீர்த்துக் கொள்ளும்படியாக.

ஆமாம்அது அடுக்கும்என் ஆக்கையொடு ஆவி நைய
வேம்ஆல்வினை யேற்குஇனி என்விடி வாகும் என்னக்
கோமான்உல குக்கொரு நிகுறை கின்ற தென்னே
பூமாண்குழ லாள்தனை வவ்வுதி போதி என்றாள். 712

என்றாள் அகன்றாள் அவ்அரக்கனும் ஈட ழிந்தான்
ஒன்றானும் உணர்ந்திலன் ஆவி உலைந்து சோர்ந்தான்
நின்றாரும் நடுங்கினர் நின்றுள நாளி றாலே
பொன்றாது உளன்ஆயினன் அத்துணை போலும் அன்றே. 713

இறந்தார் பிறந்தார்என இன்னுயிர் பெற்ற மன்னன்
மறந்தான் உணர்ந்தான்அவண் மாடுநின் றாரை நோக்கி
கறந்தா லெனநீர்தரு சந்திர காந்தத் தாலே
சிறந்துஆர் மணிமண்டபம் செய்கெனச் செப்பு கென்றான். 714

வந்தான்நெடு வானுறை தச்சன் மனத்து ணர்ந்தான்
சிந்தாவினை யன்றியும் செய்வினை யாலும் செய்தான்
அம்தாமநெ டுந்தறி ஆயிரத் தால்அ மைத்த
சந்தார்மணி மண்டபம் தாமரை யோனும் நாண. 715

காந்தம் அமுதின்துளி கால்வன கால மீனின்
வேந்தன் ஒளியன்றியும் மேலொடு கீழ்வி ரித்தான்
பூந்தென் றல்புகுந்துறை சாளர மும்பு ணைந்தான்
ஏந்தும் மணிக்கற்பகச் சீதளக் காஇ ழைத்தான். 716

ஆணிக்குஅமை பொற்கைம் மணிச்சுடர் ஆர்வி ளக்கம்
சேணுற்றுஇருள் சீப்பஅத் தெய்வ மடந்தை மார்கள்
பூணில்பொலி வார்புடை ஏந்திடப் பொங்கு தோளான்
மாணிக்க மானத்திடை மண்டபம் காண வந்தான். 717

அல்ஆயிர கோடி அடுக்கிய தொத்த தேனும்
நல்லார்முக மாம்நளிர் வான்நிலவு ஈன்ற நாமப்
பல்லாயிர கோடி பனிச்சுடர் ஈன்ற திங்கள்
எல்லாம்உடன் ஆய்இருள் ஓடி இரிந்த தன்றே. 718

பொற்புற்றன மாமணி ஒன்பதும் பூவில் நின்ற
கற்பத்தரு வின்கதிர் நாண்நிழல் கற்றை நாற
அல்பற்றழி யப்பகல் ஆக்கிய தால்அ ருக்கன்
நிற்பத்தெளி கின்றது நீள்சுடர் மேன்மை அன்றே. 719

714-ம் பாட்டு: மறந்தான் உணர்ந்தான் - மறம் + தான் எனப் பிரித்து (தனது) வலிமையை உணர்ந்தான் என்று பொருள் கூறு வார்கள். 715-ம் பாட்டு: வானுறை தச்சன் - தெய்வத் தச்சனு கிய விஸ்வகர்மா; மயன் என்றும் கூறுவார்கள். 716-ம் பாட்டு: காலமீனின் வேந்தன் - காலத்தைத் தெரிவிக்கக் கூடியவையான நட்சத்திரங்களின் அரசன்; சந்திரன்.

ஊறுஓசை முதல்பொறி யாவையும் ஒன்றின் ஒன்று
தேறுநிலை உற்றதொர் சிந்தையன் செய்கை ஓரான்
வேறாய பிறப்பிடை வேட்கை விசித்தது ஈர்ப்ப
மாறோர்உடல் உற்றென மண்டபம் வந்து புக்கான். 720

வேறு

தண்டல்இல் தவம்செய் வோர்கள் வேண்டிய தரவே நல்கும்
மண்டல மகர வேலை அமுதொடு வந்த தென்னப்
பண்தரு அரும்பு சேரும் பசுமரம் உயிர்த்த பைம்பொன்
தண்தளிர் மலரில் செய்த சீதளச் சேக்கை சார்ந்தான். 721

நேரிழை மகளிர் கூந்தல் நிறைநறை வாசம் நீந்தி
வேரியம் சரளச் சோலை வேனிலான் விருந்து செய்ய
ஆர்கலி அழுவம் தந்த அமிழ்தென ஒருவர் ஆவி
தீரினும் உதவற் கொத்த தென்றல்வந்து இறுத்த தன்றே. 722

சாளரத் தூடு வந்து தவழ்தலும் தரித்தல் தேற்றான்
நீள்அரத் தங்கள் சிந்தி நெருப்புக நோக்கும் கண்ணான்
வாழ்மனை புகுந்த தூண்டுஓர் மாசுணம் வரக்கண் டன்ன
கோள்உறக் கொதித்து விம்மி உழையரைக் கூவிச் சொன்னான். 723

கூவலின் உயிர்த்த சின்னீர் உலகினைக் குப்புற் றென்னத்
தேவரில் ஒருவன் என்னை இன்னலும் செயத்தக் கானோ
ஏவலி னன்றித் தென்றல் எவ்வழி எய்திற்று என்னாக்
காவலின் உழையர் தம்மைக் கொணருதிர் கடிதின் என்றான். 724

அவ்வழி உழையர் ஓடி ஆண்டுஅவர்க் கொணர்த லோடும்
வெவ்வழி அமைந்த செங்கண் வெருவுற நோக்கி வெய்யோன்
செவ்வழி தென்ற லோற்குத் திருத்தினீர் நீர்கொல் என்ன
இவ்வழி இருந்த காலைத் தடைஅவற்கு இல்லை என்றார். 725

காற்றினோன் தன்னை வாளா முனிதலில் கண்ட தில்லை
கூற்றுவந்து என்னை இன்னே குறுகுமால் குறித்த வாற்றால்
வேல்தரும் கருங்கண் சீதை மெய்அருள் புனையே னென்றால்
ஆற்றலால் அடுத்தது எண்ணும் அமைச்சரைக் கொணர்திர் என்றான்.

ஏவின சிலதர் ஓடி ஏனும் அளவில் எங்கும்
கூவினர் கூவ லோடும் குறுகினர் கொடித்திண் தேரர்
மாவினர் சிவிகை மேலர் மும்மதக் களிற்றர் வையத்
தேவரும் வானம் தன்னில் தேவரும் சிந்தை சிந்த. 727

725-ம் பாட்டு: அவர்க் கொணர்தலோடும் - காவற்காரர்களை அழைத்துக்கொண்டு வரவும். இவ்வழி இருந்த காலைத்தடை அவற்கு இல்லை – நீங்கள் இங்கே இருக்கும்போது தென்றல் இங்குவீச அனுமதித்திருக்கிறீர்களே ஒழிய, தடைவிதிக்கவில்லை. 726-ம் பாட்டு: கண்டதில்லை-காணும் பயன் எதுவுமில்லை.

வந்தமந் திரிய ரோடு மாசற மனத்தின் எண்ணிச்
சிந்தையில் நினைந்த செய்யும் செய்கையன் தெளிவில் நெஞ்சன்
அந்தரம் செல்வ தாண்டோர் விமானத்தில் ஆரும் இன்றி
இந்தியம் அடக்கி நின்ற மாரீசன் இருக்கை சேர்ந்தான். 728

இருந்தமா ரீசன் அந்த இராவணன் எய்த லோடும்
பொருந்திய பயத்தன் சிந்தை பொருமுற்று வெருவு கின்றான்
கருந்தட மலைஅன் னானை எதிர்கொண்டு கடன்கள் யாவும்
திருந்திய செய்து செவ்வித் திருமுகம் நோக்கிச் செப்பும். 729

வேறு

சந்த மலர்த்தண் கற்பக நீழல் தலைவற்கும்
அந்தக னுக்கும் அஞ்ச அடுக்கும் அரசாள்வாய்
இந்த வனத்தென் இன்னல் இருக்கைக்கு எளியோரின்
வந்த கருத்தென் சொல்லுதி என்றான் மருள்கின்றான். 730

ஆனது அனைத்தும் ஆவி தரித்தேன் அயர்கின்றேன்
போனது பொற்பும் மேன்மையும் மற்றென் புகழோடும்
யான்அது உனக்கின்று எங்ஙன் உரைக்கேன் இனிதென்னா
வானவ ருக்கும் நாணது அடுக்கும் வசைமன்னே. 731

வன்மை தரித்தோர் மானுடர் மற்றங்கு அவர்வாளால்
நின்மரு கிக்கு நாசி இழக்கும் நிலைநேர்ந்தார்
என்மர புக்கும் நின்மர புக்கும் இதன்மேல்ஓர்
புன்மை தெரிப்பின் வேறினி எற்றே புகல்வேலோய். 732

திருகு சினத்தர் முதிர மலைந்தார் சிறியோர்நாள்
பருகினர் என்றால் வென்ற நலத்தின் பழியன்றோ
இருகை சுமந்தாய் இனிதின் இருந்தாய் இகல்வேல்உன்
மருகர் உலந்தார் ஒருவன் மலைந்தான் வரிவில்லால். 733

வெப்பழி யாதுஎன் நெஞ்சும் உலந்தேன் விளிகின்றேன்
ஒப்பழிவு என்றே போர்செயல் ஒல்லேன் உடன்வாழும்
துப்பழி செவ்வாய் வஞ்சியை வவ்வத் துணைகொண்டிட்டு
இப்பழி நின்னால் திரிய வந்தேன் இவண்என்றான். 734

இச்சொல் அனைத்தும் சொல்லி அரக்கன் எரிகின்ற
கிச்சின் உருக்குஇட்டு உய்த்தனன் என்னக் கிளராமுன்
சிச்சி எனத்தன மெய்ச்செவி பொத்தித் தெருமந்தான்
அச்சம் அகற்றிச் செற்ற மனத்தோடு அறைகின்றான். 735

733-ம் பாட்டு: சிறியோர் நாள் - இராவணனுக்குத் தம்பி முறைமை உடையவர்களான கரன், தூடணன், திரிசிரா என்பவர்களின் ஆயுளை. அவர்கள் மாரீசனுக்கு மருமக்கள். இருகை சுமந்தாய்- இரண்டு கைகளைத் தலைக்குமேல் தூக்கிக்கொண்டு யோக நிஷ்டையில் இருந்தவனே. ஒருவன் - இராமன்.

மன்னு நீநின் வாழ்வை முடித்தாய் மதியற்ருய்
உன்னல் அன்றுஈது ஊழ்வினை என்றே உணர்கின்றேன்
இன்னு வேனும் யான்இது உரைப்பன் இதம்என்னுச்
சொன்னுன் அன்றே அன்னவ னுக்குத் துணிவெல்லாம். 736

அற்ற கரத்தோடு உன்தலை நீயே அனல்முன்னில்
பற்றினை உய்த்தாய் பற்பல காலம் பசிகூர
உற்றுயிர் உள்ளே தேய உலந்தாய் பினையன்ருே
பெற்றனை செல்வம் பின்அது இகழ்ந்தால் பெறலாமோ. 737

திறத்திற னுலோ செய்தவம் முற்றித் திருவுற்ருய்
மறத்திற னுலோ சொல்லுதி சொல்லாய் மறைவல்லோய்
அறத்திற னுலே எய்தினை அன்ருே அதுநீயும்
புறத்திற னுலே பின்னும் இழக்கப் புகுவாயோ. 738

நாரம் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா
வாரம் கொண்டார் மற்ருெரு வர்க்காய் மனைவாழும்
தாரம் கொண்டார் என்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈரும் கண்டாய் கண்டகர் உய்ந்தார் எவர்ஐயா. 739

737-ம் பாட்டு: அற்ற கரத்தோடு........உலந்தாய் - ஒன்பதினுயிரம் வருஷகாலம் தவம்செய்து ஆயிரம் வருஷத்துக்கு ஒரு தலையும் இரண்டு கைகளும் விதம் மொத்தம் ஒன்பது தலைகளையும், பதினெட்டுக் கைகளையும் அறுத்து நீ (இராவணன்) அக்கினியில் ஓமம் செய்தாய்; அவ்வளவு காலமும் ஒன்றும் சாப்பிடாமல், உள்ளுக்குள்ளேயே உன் உயிர் தேய உடல் அழிந்துகொண்டு வந்தது.

இராவணன் கடைசியில் தனது பத்தாவது தலையையும், மிஞ்சிய கைகள் இரண்டையும் அக்கினியில் இட அறுக்கத்தொடங்கியபோது, பிரமதேவன் அவன் எதிரில் வந்து, அவன் கேட்ட வரங்களையெல்லாம் கொடுத்ததுடன், ஏற்கெனவே அறுக்கப்பட்ட ஒன்பது தலைகளும், பதினெட்டுக் கைகளும் திரும்பவும் முளைக்கும் படியாகவும் அருள் செய்தான்.

இராவணனது தவத்தைப்பற்றிக் கூறும் உத்தரகாண்டச் செய்யுட்கள் பின்வருமாறு:

ஓரா யிரம்ஆண்டு உபவசித்துக் கழிந்தால் ஒரோர் தலையாகச்
சீரார் சிரம்ஒன் பதும்தடிந்து செந்தீ யிடைஓ மம்புரிந்து
பேரா உபவா சத்தினுய்ப் பின்பும் ஓரா யிரத்தாண்டில்
தாரார் மற்றைத் தலைதடியல் உற்ருன் பற்றித் தசக்கிரிவன்.

அன்ன காலை அயன்தோன்றி அவனை நோக்கி அருந்தவத்தின்
தின்னை ஒப்பார் நீயன்றி ஒருவர் இல்லை நின்கரத்தால்
முன்னம் அரிந்த தலையெல்லாம் முன்பு போல முளைத்திடுக
என்ன அவைதாம் பண்டையிலும் எழில்உண் டாக எழுந்தனவால்.

—இராவணன் பிறப்புப் படலம். 26, 27.

அந்தரம் உற்ருன் அகலிகை பொற்பால் அழிவுற்ருன்
இந்திரன் ஒப்பார் எத்தனை யோர்தாம் இழிவுற்ருர்
செந்திரு ஒப்பார் எத்தனை யோர்நின் திருஉண்பார்
மந்திரம் அற்ருர் உற்றது உரைத்தாய் மதியற்ருய். 740

செய்தா யேனும் தீவினை யோடும் பழியல்லால்
எய்தாது எய்தாது எய்தின் இராமன் உலகீன்ருன்
வைதால் அன்ன வாளிகள் கொண்டும் வழியோடும்
கொய்தான் அன்றே கொற்றம் முடித்துன் குழுவெல்லாம். 741

என்ருல் என்னே எண்ணலை யேநீ கரன்என்பான்
நின்தா னைக்கும் மேல்உளன் என்னும் நிலைஅம்மா
தனதா னைக்குஉற் ருரொடு மாளத் தனுஒன்ருல்
கொன்ருன் முற்றும் கொல்ல மனத்தில் குறிகொண்டான். 742

வெய்யோர் யாரே வீர விராதன் துணைவெய்யோர்
ஐயோ போனுன் அம்பொடும் உம்பர்க்கு அவன்என்ருல்
உய்வார் யாரே நம்மின் எனக்கொண்டு உணர்தோறும்
நையா நின்றேன் நீஇது உரைத்து நலிவாயோ. 743

மாண்டார் மாண்டார் நீஇனி மாள்வார் தொழில்செய்ய
வேண்டா வேண்டா செய்திடில் உய்வான் விதிஉண்டோ
ஆண்டார் ஆண்டார் எத்தனை என்கோ அறம்நோனுர்
ஈண்டார் ஈண்டார் நின்றவர் எல்லாம் இலர்அன்ருே. 744

எம்பிக் கும்என் அன்னை தனக்கும் இறுதிக்குஓர்
அம்புஉய்க் கும்போர் வில்லி தனக்கும் அயல்நிற்கும்
தம்பிக் கும்என் ஆண்மை தவிர்ந்தேன் தளர்வுற்றேன்
கம்பிக் கும்என் நெஞ்சுஅவன் என்றே கவல்கின்றேன் 745

நின்றும் சென்றும் வாழ்வன யாவும் நிலையாவால்
பொன்றும் என்னும் மெய்ம்மை உணர்ந்தோய் புலையாடற்கு
ஒன்றும் உன்னுய் என்உரை கொள்ளாய் உயர்செல்வத்து
என்றும் என்றும் வைகுதி ஐயா இனிஎன்ருன். 746

வேறு

கங்கைசடை வைத்தவ னெடும்கயிலை வெற்போர்
அங்கையின் எடுத்தனது ஆண்தொழில் மணித்தோள்
இங்கொர்மனி தற்குஎளிய என்றனை எனத்தன்
வெங்கண்எரி யப்புருவம் மீதுற விடைத்தான். 747

நிகழ்ந்ததை நினைந்திலைஎன் நெஞ்சின்நிலை அஞ்சாது
இகழ்ந்தனை எனக்கிளைய நங்கைமுகம் எங்கும்
அகழ்ந்தனையது ஒப்புற அமைத்தவரை ஐயா
புகழ்ந்தனை தனிப்பிழை பொறுத்தனென்இது என்ருன். 748

744-ம் பாட்டு: மாண்டார் மாண்டார் - மாண்டவர்கள் மாண்டு போனுர்கள். 745-ம் பாட்டு: எம்பி - சுபாகு. அன்னை - தாடகை. வில்லி - இராமன். தம்பி - இலக்குவன்.

தன்னைமுனி வுற்றதறு கண்தகவி லோனைப்
பின்னைமுனி வுற்றிடும் எனத்தவிர்தல் பேறுது
உன்னைமுனி வுற்றுஉள குலத்தைமுனி வுற்ருய்
என்னைமுனி வுற்றிலைஇது என்னென இசைத்தான். 749

எடுத்தமலை யேநினையின் ஈசன்இகல் வில்லாய்
வடித்தமலை யேஇது வலித்திஎன வாரிப்
பிடித்தமலை நாணிடை பிடித்தொருவன் மேல்நாள்
ஒடித்தமலை உம்பர்முகடு உற்றமலை அன்ருே 750

யாதும்அறி யாய்உரைகொ ளாய்இகல் இராமன்
கோதைபுனை யாமுன்உயிர் கொள்ளைபடும் அன்றே
பேதைமதி யால்இஃதொர் பெண்உருவம் என்ருய்
சிதைஉரு வோநிருதர் தீவினையது அன்ருே. 751

உஞ்சுபிழை யாய்உறவி னேடும்என உன்னு
நெஞ்சுபறை போதும்அது நீநினைய கில்லாய்
அஞ்சும்எனது ஆருயிர் அறிந்தருகு நின்ருர்
நஞ்சுநுகர் வாரைஇது நன்றெனலும் நன்ருே 752

ஈசன்முத லாகஇமை யோர்உலகும் மற்றைத்
தேசம்முதல் முற்றும்ஓர் இமைப்பின்உயிர் தின்னக்
கோசிகன் அளித்தகட வுட்படை கொதிப்போடு
ஆசில கணிப்பில இராமன்அருள் நிற்ப. 753

ஆயிரம் அடற்கைஉடை யானைமழு வாளால்
ஏஎனும் உரைக்குள்உயிர் செற்றஎதிர் இல்லோன்
மேயவிறல் முற்றும்வரி வெஞ்சிலையி னேடும்
தாயவன் வலித்தகைமை யாம்உறு தகைத்தோ. 754

வேதனைசெய் காமவிடம் மேலிட மெலிந்தாய்
தீதுரைசெய் தாய்இனைய செய்கைசிதை வன்ருே
மாதுலனு மாய்மரபின் முந்தையுற வந்தேன்
ஈதுரைசெய் தேன்இதனை எந்தைதவிர் கென்ருன். 755

'நீயும் ஒரு ஆண்மகனு?' என்று மாரீசனை இராவணன் இகழ்தல்

என்னஉரை அத்தனையும் எத்தனையும் எண்ணச்
சொன்னவனை ஏசின அரக்கர்பதி சொன்னுன்
அன்னஉயிர் செற்றவனை அஞ்சிஉறை கின்ருய்
உன்னைஒரு வற்கொருவன் என்றுணர்கை நன்ருே 756

750-ம் பாட்டு : எடுத்தமலை - கயிலைமலை. வடித்தமலை, பிடித்த மலை, ஒடித்தமலை - மேருமலை; சிவதனுசு. ஒருவன் - இராமன். உம்பர் முகடுஉற்றமலை-ஆகாய முகட்டை அளாவிய மேருமலை. 754-ம் பாட்டு: உடையானை-கார்த்தவீரியாருச்சுனனை. எதிர் இல்லோன்-பரசுராமன். வெஞ்சிலை - விஷ்ணு தனுசு. 756-ம் பாட்டு: ஒருவற்கு ஒருவன் - ஆண்தன்மை உடையவர்களில் ஒருவன்.

திக்கயம் ஒளிப்பநிலை தேவர்கெட வானம்
புக்கவர் இருக்கைபுகை வித்துஉலகம் யாவும்
சக்கரம் நடத்தும்எனை யோதயர தன்தன்
மக்கள்நலி கிற்பர்இது நன்றுவலி யன்றே. 757

மூவுலகி னுக்கும்ஒரு நாயகம் முடித்தேன்
மேவலர் கிடைக்கின்இதன் மேல்இனிய துண்டோ
ஏவல்செய கிற்றிஎனது ஆணைவழி எண்ணிக்
காவல்செய் அமைச்சர்கடன் நீகடவ துண்டோ. 758

மறுத்தனை எனப்பெறினும் நின்னைவடி வாளால்
ஒறுத்துமனம் உற்றது முடிப்பதொழி கில்லேன்
வெறுப்பன கிளத்தல்உறும் இத்தொழிலை விட்டுஎன்
குறிப்பின்வழி நிற்றிஉயிர் கொண்டுஉழலின் என்றான். 759

வேறு

அரக்கன்அஃது உரைத்த லோடும் அறிந்தனன் அடங்கி நெஞ்சம்
தருக்கினர் கெடுவர் அன்றே தத்துவ நிலைஇற்று அன்றே
செருக்கினில் தீர்தும் என்பார் தம்மின்ஆர் செருக்கர் என்னு
உருக்கிய செம்பின் உற்ற நீர்என உரைக்கல் உற்றான். 760

உன்வயின் உறுதி நோக்கி உண்மையின் உணர்த்தி னேன்மற்று
என்வயின் உறுதி நோக்கி அச்சத்தால் இசைத்தேன் அல்லேன்
நன்மையும் தீமையன்றே நாசம்வந் துற்ற போது
புன்மையின் நின்ற நீராய் செய்வது புகறி என்றான். 761

என்றலும் எழுந்து புல்லி ஏறிய வெகுளி நீங்கிக்
குன்றெனக் குவிந்த தோளாய் மாரவேள் கொதிக்கும் அம்பால்
பொன்றலின் இராமன் அம்பால் பொன்றலே புகழ்உண் டன்றே
தென்றலைப் பகையாச் செய்த சீதையைத் தருதி என்றான். 762

ஆண்டையான் அனைய கூற அரக்கர்ஓ ரிருவ ரோடும்
பூண்டஎன் மானம் தீரத் தவவனம் புக்க போழ்தில்
தூண்டிய சரங்கள் பாயத் துணைவர்பட்டு உருள அஞ்சி
மீண்டயான் சென்று செய்யும் வினைஎன்கொல் விளம்பு கென்றான். 763

ஆயவன் அனைய கூற அரக்கர்கோன் ஐய நொய்துஉன்
தாயைஆ ருயிர்உண் டானை யான்கொலச் சமைந்து நின்றேன்
போய்ஐயா புணர்ப்பது என்னே என்பது பொருந்திற்று அன்றே
மாயையால் வஞ்சித்து அன்றே வெளவுதல் அவளை என்றான். 764

புறத்துஇனி உரைப்பது என்னே புரவலன் தேவி தன்னைத்
திறத்துழி யன்றி வஞ்சித்து எய்துதல் சிறுமைத் தாகும்
அறத்துளது ஒக்கும் அன்றே அமர்த்தலை வென்று கொண்டுஉன்
மறத்துறை வளர்த்தி மன்ன என்னமா ரீசன் சொன்னான். 765

763-ம் பாட்டு : ஓரிருவர் - ஒரு சிலர். மீண்ட - தாடகை வதையின்போது மீண்ட.

ஆனவன் உரைக்க நக்க அரக்கர்கோன் அவரை வெல்லத்
தானையும் வேண்டு மோஎன் தடக்கைவாள் தக்க தன்றே
ஏனையர் இறக்கில் தானும் தமியளாய் இறக்கும் அன்றே
மானவள் ஆத லாலே மாயையின் வலித்தும் என்றான். 766
தேவியைத் தீண்டா முன்னம் இவன்தலை சரத்தின் சிந்திப்
போம்வகை புணர்ப்பன் என்று புந்தியால் புகல்கின் றேற்கும்
ஆம்வகை ஆயிற் றில்லை ஆர்விதி விளைவை ஓர்வார்
ஏவிய செய்வ தல்லால் இல்லைவேறு ஒன்றென்று எண்ணு 767

மாயமானாகச் செல்ல இணங்கி மாரீசன் புறப்படுதல்

என்னமா மாயம் யான்இங்கு இயற்றுவது இயம்பு கென்றான்
பொன்னின்மா னாகிப் புக்குப் பொன்னைமால் புணர்த்து கென்ன
அன்னது செய்வென் என்னா மாரீசன் அமைந்து போனான்
மின்னும்வேல் அரக்கர் கோனும் வேறொரு நெறியில் போனான். 768

வேறு

*மேல்நாள்அவன் வில்வலி கண்டமையால்
தானாக அமைந்து சமைந்திலனால்
மான்ஆகுதி என்றவன் வாய்மொழியால்
போனான்மன மும்செய லும்புகல்வாம். 769
*வெஞ்சுற்றம் நினைந்துஉகும் வீரரைவேறு
அஞ்சுற்று மறுக்குறும் ஆழ்குழிநீர்
நஞ்சுற்றுஉறும் மீனின் நடுக்குறுமாஸ்
நெஞ்சுற்றதொர் பெற்றி நினைப்பரிதால். 770
அக்காலமும் வேள்வியின் அன்றுஇவனோடு
எக்காலும் நலிந்தும்ஓர் ஈறுபெறான்
முக்காலின் முடிந்திடு வான்முயல்வான்
புக்கான்அவ் இராகவன் வைகுபுனம். 771
*தன்மானம் இலாத தயங்கொளிசால்
மின்வானமும் மண்ணும் விளங்குவதோர்
பொன்மான்உரு வம்கொடு போயினனால்.
நன்மான்அனை யாள்தனை நாடுறுவான். 772
கலைமான்முத லாயின கண்டஎலாம்
அலைமான்உறு ஆசையின் வந்தனவால்
நிலையாமன வஞ்சனை நேயம்இலா
விலைமாதர்கண் யாரும் விழுந்தெனவே. 773
*பொய்யாம்என ஓது புறஞ்சொலினால்
நையாஇடை நோவ நடந்தனளால்
வைதேகிதன் வால்வளை மென்கைஎனும்
கொய்யாமல ரால்மலர் கொய்துறுவாள். 774

766-ம் பாட்டு: ஏனையர் - இராம இலக்குவர். தானும் - சீதையும்.
771-ம் பாட்டு: வேள்வியின் அன்று - விசுவாமித்திரனுடைய வேள்விக் காலத்தில்.

உண்டாகிய கேடுடை யார்துயில்வாய்
எண்தானும்இ யைந்துஇயை யாஉருவம்
கண்டார்என லாம்வகை கண்டனளால்
பண்டுஆரும் உருஇடர் பாடுறுவாள். 775

காணுஇது கைதவம் என்றுணராள்
பேணுத நலம்கொடு பேணினளால்
வாழ்நாளை இராவணன் மாளுதலால்
வீழ்நாளின் அறம்புவி மேவுதலால். 776

நெற்றிப்பிறை யாள்முனம் நின்றிடலும்
முற்றிப்பொழி காதலின் முந்துறுவாள்
பற்றித்தரு கென்பென் எனப்பதையா
வெற்றிச்சிலை வீரனை மேவினளால். 777

மாயமானின் அழகைச் சீதை புகழ்தல்

ஆணிப்பொனின் ஆகிய தாய்கதிரால்
சேணில்சுடர் கின்றது திண்செவிகால்
மாணிக்க மயத்தொரு மான்உளதால்
காணத்தகும் என்றனள் கைதொழுவாள். 778

இம்மான்இந் நிலத்தினில் இல்லைஎனு
எம்மான்இது எனச்சிறிது எண்ணல்செயான்
செம்மானவள் சொற்கொடு தேமலரோன்
அம்மானும் அருத்தியன் ஆயினனுல். 779

ஆண்டுஅங்குஇனை யோன்உரை பாடினனுல்
வேண்டும்என லால்விழைவு அன்றிதுஎனுன்
பூண்துஞ்சு பொலங்கொடி யோய்அதுநாம்
காண்டும்எனும் வள்ளல் கருத்துணர்வான். 780

காயம்கன கம்மணி கால்செவிவால்
பாயும்உரு வோடுஇது பண்பெனலால்
மாயம்என லன்றி மனக்கொளவே
ஏயும்இறை ஐயுறவு என்றனனுல். 781

775-ம் பாட்டு: கண்டார் - கனவில் கண்டார். 779-ம் பாட்டு: இம்மான் - இப்படிப்பட்ட மான். தேமலரோன் அம்மானும் - தாமரை மலரில் இருக்கும் பிரமனுடைய தந்தையாகிய திருமாலின் அம்சமான இராமனும். 780-ம் பாட்டு: (மாயமானைக் காணத்தகும் அழகிய மான் என்று [779-ம் பாட்டில்] சீதை கூறி) அந்த மான் தனக்கு வேண்டும் என்று சொல்லுவதனுல், அது விரும்பத் தக்கதல்ல என்று இராமன் கூருமல், ''ஆபரணங்கள் அணிந்த தங்கக் கொடி போன்றவளே! அந்த மானை நாம் போய்ப் பார்ப்போம்'' என்று மட்டும் கூறினுன். அவன் கருத்தை உணர்ந்த இலக்குவன் ஒரு வார்த்தை சொன்னுன். (இலக்குவன் கூறியதை 781-ம் பாட்டில் காண்க.) 781-ம் பாட்டு: '' 'உடம்பு பொன்போலவும், கால், காது, வால் ஆகியவை மாணிக்கம்போலவும் இருக்கிறது;

நில்லாஉல கின்நிலை நேர்மையினால்
வல்லாரும் உணர்ந்திலர் மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்துளவால்
இல்லாதன இல்லை இளங்குமரா. 782

என்என்று நினைத்தது இழைத்துஉளம்நம்
கன்னங்களில் வேறுள காணுதுமால்
பொன்னின்ஒளி மேனி பொருந்தியஏழ்
அன்னங்கள் பிறந்தது அறிந்திலையோ. 783

முறையும்முடி வும்இலை மொய்உயிர்என்று
இறைவன்இனை யாரொடு இயம்பினனால்
பறையும்துணை அன்னது பல்நெறிபோய்
மறையும்என ஏழை வருந்தினளால். 784

வேறு

அனையவள் கருத்தை உன்னா அஞ்சனக் குன்றம் அன்னான்
புனைஇழை காட்டுஅது என்று போயினான் பொருத சிந்தைக்
கனைகழல் தம்பி பின்பு சென்றனன் கடக்க ஒண்ணா
வினைஎன வந்து நின்ற மான்எதிர் விழித்த தன்றே. 785

நோக்கிய மானை நோக்கி நுதிஇழை மதியின் ஒன்றும்
தூக்கிலன் நன்றிது என்றான் அதன்பொருள் சொல்ல லாகும்
சேக்கையின் அரவு நீங்கிப் பிறந்தது தேவர் செய்த
பாக்கியம் உடைமை அன்றோ அன்னது பழுது போமோ. 786

என்ஒக்கும் என்ன லாகும் இளையவ இதனை நோக்காய்
தன்னொக்கும் உவமை யல்லால் தனையொக்கும் உவமை உண்டோ
பல்நக்க தரளம் ஒக்கும் பசும்புல்மேல் படரும் மெல்நா
மின்னொக்கும் செம்பொன் மேனி வெள்ளியின் விளங்கும் புள்ளி. 787

மானின் தன்மை இது' என்று சீதை கூறுவதனால், அதை மாயமான் என்றே கூறவேண்டும். அவ்வாறு கூறாமல், அதை உண்மையான மான் என்றே நினைப்பது சிறிதாவது பொருந்துமா? மான் நிஜ மான்தானா என்பது சந்தேகமே'' என்று இலக்குவன் சொன்னான். ஏயும் இறை - சிறிதும் பொருந்துமா? இப்பாட்டுக்கு வேறு விதங் களிலும் பொருள் கூறப்படும். 783-ம் பாட்டு: என் என்று நினைத் தது இழைத்து உளம் - உன் மனம் ஆராய்ந்து என்ன என்று நினைத்தது? நம் கன்னங்களில் வேறுள காணுதுமால் - நம் காது களில் வெவ்வேறு புதுமைகளைக் கேள்விப்படுகிறோம். ஏழ் அன்னங் கள் - பரத்துவாச முனிவனின் ஏழு புதல்வர்களும் தங்கள் மறுபிறப் பில் குருவின் பசுவைக் கொன்று தின்றபாவத்தால் பல இழிந்தஜன் மங்கள் எடுத்து, அப்புறம் நற்கதி அடையும் மார்க்கத்தில் ஏழு அன்னங்களாகவும் பிறந்தார்கள். 784-ம் பாட்டு: அன்னது - அந்த மான்.

வரிசிலை மறைவ லோனே மான்இதன் வடிவை உற்ற
அரிவையர் மைந்தர் யாரே ஆதரம் கூர்கி லாதார்
உருகிய மனத்த ஆகி ஊர்வன பறப்ப யாவும்
விரிசுடர் விளக்கம் கண்ட விட்டில்போல் வீழ்வ காணுய். 788

ஆரியன் அனைய கூற அன்னது தன்னை நோக்கிச்
சீரியது அன்றுஇது என்று சிந்தையில் தெளிந்த தம்பி
காரியம் என்னை ஈண்டுக் கண்டது கனக மானல்
வேரியம் தெரியல் வீர மீள்வதே மேன்மை என்ருன். 789

அற்றுஅவன் பகரா முன்னம் அனகனை அழகி யாளும்
கொற்றவன் மைந்த மற்றைக் குழைவுடை உழையை வல்லை
பற்றினை தருதி யாயின் பதியிடை அவதி எய்தப்
பெற்றுழி இனிதுஉண் டாடப் பெறற்கரும் தகைமைத் தென்ருள்.

*ஐயநுண் மருங்குல் நங்கை அஃதுரை செய்ய ஐயன்
செய்வென்என்று அமைய நோக்கித் தெளிவுடைச் செம்மல் செப்பும்
வெய்யவல் அரக்கர் வஞ்சம் விரும்பினுர் வினையின் செய்த
கைதவ மான்என்று அண்ணல் காணுதி கடையின் என்ருன். 791

*மாயமேல் மடியும் அன்றே வாளியின் மடிந்த போது
காய்சினத் தவரைக் கொன்று கடன்கழித் தோமும் ஆதும்
தூயதேல் பற்றிக் கோடும் சொல்லிய இரண்டின் ஒன்று
தீயதே உரைத்தி என்ருன் தேவரை இடுக்கண் தீர்ப்பான். 792

*பின்நின்ருர் இனையர் என்றும் உணர்கிலம் பிடித்த மாயம்
என்என்றும் தெளிதல் தேற்ரும் யாவதுஈது என்றும் ஒராம்
முன்நின்ருர் முறையில் நின்ருர் முனிந்துள வேட்டம் முற்றல்
பொன்நின்ற வயிரத் தோளாய் புகழுடைத் தாம்அன்று என்ருன். 793

பகையுடை அரக்கர் என்றும் பலர்என்றும் பயிலும் மாயம்
மிகையுடைத் தென்றும் பூண்ட விரதத்தை விடுதும் என்றல்
நகையுடைத் தாகும் அன்றே ஆதலின் நன்றுஈது என்னத்
தகையுடைத் தம்பிக்கு அந்நாள் சதுமுகன் தாதை சொன்னுன். 794

*அடுத்தவும் எண்ணிச் செய்தல் அண்ணலே அமைதி யன்ருே
விடுத்துஇதன் பின்நின் ருர்கள் பலருளர் எனினும் வில்லால்
தொடுத்தவெம் பகழி தூவித் தொடர்ந்தனென் விரைந்து சென்று
படுக்குவென் அதுவன் ருயின் பற்றினென் கொணர்வென் என்ருன்.

*ஆயிடை அன்னம் அன்னுள் அமுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொல் கிளியினில் குழறி மாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலும் என்னுச்
சேய்அரிக் குவளை முத்தம் சிந்துபு சிதறிப் போனுள். 796

791-ம் பாட்டு : செம்மல் - இலக்குவன். 792-ம் பாட்டு : சினத் தவர் - அரக்கர். தீயதே - தீயதோ? 794-ம் பாட்டு : பூண்ட விரதம்-அரக்கர்களை அழிப்பதாகப் பூண்ட விரதம்.

மானைப் பிடிக்க இராமன் செல்லுதல்

*போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலன்கொள் தாராய்
மான்இது நானே பற்றி வல்லையின் வருவென் அன்றே
கான்இயல் மயில்அன் னானைக் காத்தனை இருத்தி என்று
வேல்நகு சரமும் வில்லும் வாங்கினன் விரையல் உற்றான். 797

*முன்னமும் மகவாய் வந்த மூவரின் ஒருவன் போனான்
அன்னமா ரீசன் என்றே அயிர்த்தனென் இதனை ஐயா
இன்னமும் காண்டி வாழி ஏகென இருகை கூப்பிப்
பொன்அனாள் புக்க சாலை காத்தனன் புறத்து நின்றான். 798

*மந்திரத்து இளையோன் சொன்ன வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற்கு உவமை சான்ற வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய் முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளி னான்அம் மானினைத் தொடரல் உற்றான். 799

*மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதில்
குதித்தது செவியை நீட்டிக் குரபதம் உரத்தைக் கூட்டி
உதித்தெழும் ஊதை உள்ளம் என்றிவை உருவச் செல்லும்
கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்தது அன்றே. 800

நீட்டினான் உலகம் மூன்றும் நின்றெடுத்து அளந்த பாதம்
மீட்டும்நாம் உரைத்தற்கு அம்மா வேறும்ஓர் அண்டம் உண்டோ
ஓட்டினான் தொடர்ந்த தன்னை ஒழிவற நிறைந்த தன்மை
காட்டினான் அன்றி அன்றுஅக் கடுமையார் கணிக்கற் பாலார். 801

*குன்றிடை இவரும் மேகக் குழுவிடைக் குதிக்கும் கூடச்
சென்றிடில் அகலும் தாழில் திண்டலாம் தகைமைத் தாகும்
நின்றதே போல நீங்கும் நிதிவழி நேயம் நீட்டும்
மன்றலங் கோதை மாதர் மனம்எனப் போயிற் றம்மா. 802

காயம்வே றாகிச் செய்யும் கருமம்வே றாயிற் றன்றே
ஏயுமே என்னின் முன்னம் எண்ணமே இளவற்கு உண்டே
ஆயுமேல் உறுதல் செல்லாம் அரக்கரா னவர்கள் செய்த
மாயமே ஆய தேநான் வருந்தியது என்றான் வள்ளல். 803

வேறு

*பற்று வான்இனி அல்லன் பகழியால்
செற்று வானில் செலுத்தல்உற் றான்என
மற்றுஅம் மாய அரக்கன் மனக்கொளா
உற்ற வேகத்தின் உப்பரில் ஓங்கினான். 804

*அக்க ணத்தினில் ஐயனும் வெய்யதன்
சக்கரத்தின் தகைவரி தாயதோர்
செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்
புக்க தேயம்புக்கு இன்னுயிர் போக்கென. 805

798-ம் பாட்டு: மகவாய் - (மகம் + வாய்) விசுவாமித்திரனின் வேள்வியின்போது. மூவரின் ஒருவன் போனான் - தாடகை, சுபாகு, மாரீசன் என்ற மூவரில் ஒருவனான மாரீசன் இறவாமல் சென்றான்.

மாரீசன் கதறிக்கொண்டு விழுதல்

*நெட்டி லேச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினுல்
அட்ட திக்கினும் அப்புற மும்புக
விட்ட ழைத்தொரு குன்றென வீழ்ந்தனன். 806

*வெய்ய வன்தன் உருவொடு வீழ்தலும்
செய்யது அன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லன்என் ஆருயிர் வல்லன்யான்
உய்ய வந்தவன் வல்லன்என்று உன்னினுன். 807

*ஆசை நீளத்து அரற்றினன் வீழ்ந்தஅந்
நீசன் மேனியை நின்றுஉடன் நோக்கினுன்
மாசில் மாதவன் வேள்வியின் வந்தமா -
ரீச னேஇவன் என்பதும் தேறினுன். 808

*உழைத்த வாளி உரம்புகப் புல்லியோன்
இழைத்த மாயையின் என்குர லால்இசைத்து
அழைத்த துண்டுஅது கேட்டுஅயர்வு எய்துமால்
மழைக்கண் ஏழைஎன்று உள்ளம் வருந்தினுன். 809

*மாற்றம் இன்னது மாயமா ரீசன்என்று
ஏற்ற முன் உணர்ந் தான்எனில் என்னுடை
ஆற்றல் தேரும் அறிவினன் ஆதலால்
தேற்று மால்இவே யோன்எனத் தேறினுன். 810

*மாள்வ தேபொரு ளாகவந் தானலன்
சூழ்வ தோர்பொருள் உண்டுஇவன் சொல்லினுல்
மூள்வது ஏதம் அதுமுடி யாமுனம்
மீள்வ தேநலம் என்றுஅவன் மீண்டனன். 811

8. சடாயு உயிர்நீத்த படலம்

[இராவணனேடு போரிட்டு வீழ்ந்த சடாயு, இராம இலக்கு வர்களைப் பார்த்துச் சீதையின் செய்தியை அறிவித்தபின் இறந்ததுபற்றிக் கூறும் பகுதி]

சங்கு அடுத்த தனிக்கடல் மேனியாற்கு
அங்கு அடுத்த நிலைமை அறைந்தனம்
கொங்கு அடுத்த மலர்க்குழல் கொம்பனுட்கு
இங்கு அடுத்த தகைமை இயம்புவாம். 812

806-ம் பாட்டு : விட்டழைத்து - 'ஆ சிதா! இலக்குவா!' என்று உரத்த குரலில் அழைத்து என்றும் ஒரு பொருள். 808-ம் பாட்டு: மாதவன் - விசுவாமித்திரன்.

*எயிறு அலேத்து முழைதிறந்து ஏங்கிய
செயிர்த லேக்கொண்ட சொல்செவி சேர்தலும்
குயில்த லத்திடை உற்றதொர் கொள்கையாள்
வயிறு அலேத்து விழுந்து மயங்கினுள். 813

*பிடித்து நல்குஇவ் உழைஎனப் பேதை யேன்
முடித்த னென்முதல் வாழ்வென மொய்குழல்
கொடிப் படிந்த தெனநெடுங் கோள்அரா
இடிக்கு உடைந்த தெனப்புரண்டு ஏங்கினுள். 814

*குற்றம் வீந்த குணத்தின்எம் கோமகன்
மற்றை வாள்அரக் கன்புரி மாயையால்
இற்று விழ்ந்தனன் என்னவும் என்அயல்
நிற்றி யோஇளே யோய்ஒரு நீஎன்ருள். 815

வேறு

சீதையை இலக்குவன் தேற்றுதல்

*எண்மைஆர் உலகினில் இராமற்கு ஏற்றம்ஓர்
திண்மையார் உளர்எனல் செப்பற் பாலதோ
பெண்மையால் உரைசெயப் பெறுதி ரால்என
உண்மையான் அனேயவட்கு உணரக் கூறினுன். 816

*ஏழுமே கடல்உல கேழும் ஏழுமே
சூழும்ஏழ் மலேஅவை தொடர்ந்த சூழல்வாய்
வாழும்ஏ ழையர்சிறு வலிக்கு வாள்அமர்
தாழுமே இராகவன் தனிமை தையலீர். 817

பார்எனப் புனல்எனப் பவனம் வான்கனல்
பேர்எனேத்து அவைஅவன் முனியின் பேருமால்
கார்எனக் கரியஅக் கமலக் கண்ணனே
யார்எனக் கருதிஇவ் இடரில் ஆழ்கின்றீர். 818

*இடைந்துபோய் நிசிசரற்கு இராமன் எவ்வம்வந்து
அடைந்தபோது அழைக்குமே அழைக்கு மாம்எனின்
மிடைந்தபேர் அண்டங்கள் மேல கீழன
உடைந்துபோம் அயன்முதல் உயிரும் தீயுமால். 819

மாற்றம்என் பகர்வது மண்ணும் வானமும்
போற்றவன் திரிபுரம் எரித்த புங்கவன்
ஏற்றிநின்று எய்தவில் இறுத்த எம்பிரான்
ஆற்றலின் அமைவதோர் ஆற்றல் உண்மையோ. 820

காவலன் ஈண்டுநீர் கருதிற்று எய்துமேல்
மூவகை உலகமும் முடியும் முந்துள
தேவரும் முனிவரும் முதல செவ்வியோர்
ஏவரும் வீவர்நல் அறமும் எஞ்சுமால். 821

817-ம் பாட்டு : ஏழுமே......ஏழுமே - ஏழு கடல்களும், பதினுன்கு உலகங்களும்.

*பரக்களன் பகர்வது பகழி பண்ணவன்
துரக்கவந் ததுபடத் தொலைந்து சோர்கின்ற
அரக்கன்அவ் வுரைஎடுத்து அரற்றி ஞன்அதற்கு
இரக்கம்உற்று இரங்கலிர் இருத்திர் ஈண்டென்ருன். 822

*என்றுஅவன் இயம்பலும் எடுத்த சிற்றத்தள்
கொன்றன இன்னலள் கொதிக்கும் உள்ளத்தள்
நின்றநின் நிலைஇது நெறியிற்று அன்றென
வன்தறு கண்ணினள் வயிர்த்துக் கூறுவாள். 823

*ஒருபகல் பழகினுர் உயிரை ஈவரால்
பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும்நீ
வெருவலை நின்றனை வேறென் யான்இனி
எரியிடைக் கடிதுபுக்கு இறப்பென் ஈண்டெனு. 824

*தாமரை வனத்திடை தாவும் அன்னம்போல்
தூமவெங் காட்டெரி தொடர்கின் ருள்தனைச்
சேமவில் குமரனும் விலக்கிச் சீறடிப்
பூமுக நெடுநிலம் புல்லிச் சொல்லுமால். 825

*துஞ்சுவது என்னைநீர் சொற்ற சொல்லையான்
அஞ்சுவென் மறுக்கிலென் அவலம் தீர்ந்துஇனி
இஞ்சிரும் அடியனேன் ஏகு கின்றனென்
வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ. 826

சீதையிடம் இலக்குவன் விடைபெறுதல்

*போகின்றேன் அடியனேன் பொருந்தி வந்துகேடு
ஆகின்றது அரசன்தன் ஆணை நீர்மறுத்து
ஏகென்றீர் இருக்கின்றிர் தமியிர் என்றுபின்
வேகின்ற சிந்தையான் விடைகொண் டேகினுன். 827

*இருப்பனேல் எரியிடை இறப்பரால்இவர்
பொருப்பனை யானிடைப் போவெ னேஎனில்
அருப்பம்இல் கேடுவந்து அடையும் ஆருயிர்
விருப்பனேற்கு என்செயல் என்று விம்மினுன். 828

அறந்தனுல் அழிவிலது ஆகின் ஆக்கலாம்
இறந்துபாடு இவர்க்குறும் இதனின் இவ்வழி
துறந்துபோம் இதனையே துணிவென் தொல்வினைப்
பிறந்துபோந்து இதுபடும் பேதை யேன்எனு. 829

*போவது புரிவல்யான் புகுந்தது உண்டெனில்
காவல்செய் எருவையின் தலைவன் கண்ணுறும்
ஆவது காக்கும்என்று அறிவித்து அவ்வழித்
தேவர்செய் தவத்தினுல் செம்மல் ஏகினுன். 830

827-ம் பாட்டு: அரசன்தன் ஆணை - சீதைக்குக் காவலாக இருக்கும்படி இலக்குவனுக்கு இராமன் இட்ட கட்டளை. 830-ம் பாட்டு: புகுந்தது - நேர்ந்த ஆபத்து. எருவையின் தலை

இராவணன் சந்நியாசி வேடத்தில் வருதல்

*இளையவன் ஏகலும் இறவு பார்க்கின்ற
வளையிற்று இராவணன் வஞ்சம் முற்றுவான்
முளைவிரித் தண்டுஒரு மூன்றும் முப்பகைத்
தளைஅரி தவத்தவர் வடிவும் தங்கினான். 831

*ஊண்இல னும்என உலர்ந்த மேனியன்
சேண்நெறி வந்ததோர் வருத்தச் செய்கையான்
பாணியின் நடத்திடை படிக்கின் றான்என
வீணையின் இசைபட வேதம் பாடுவான். 832

*பூப்பொதி அவிழ்ந்தன நடையன் பூதலம்
தீப்பொதிந் தாம்என மிதிக்கும் செய்கையன்
காப்பரு நடுக்குறும் காலன் கையினன்
மூப்பெனும் பருவமும் முனிய முற்றினான். 833

*தாமரைக் கண்ணொடுஏர் தவத்தின் மாலையன்
ஆமையின் இருக்கையன் வளைந்த ஆக்கையன்
நாமநூல் மார்பினன் நணுகி னான்அரோ
தூமனத்து அருந்ததி இருந்த சூழல்வாய். 834

*தோம்அறு சாலையின் வாயில் துன்னினான்
நாமுதல் குழறிட நடுங்கு சொல்லினன்
யாவிர்இவ் இருக்கையுள் இருந்து ளீர்என்றான்
தேவரும் மருள்கொளத் திரிந்த மேனியான். 835

*தோகையும் அவ்வழித் தோம்இல் சிந்தனை
சேகறு நோன்பினர் என்னும் சிந்தையாள்
பாகியல் கிளவியாள் பவளக் கொம்பர்போன்று
ஏகுமின் ஈண்டென எதிர்வந்து எய்தினாள். 836

*வெற்பிடை மதமென வியர்க்கும் மேனியன்
அற்பினில் திரைபுரள் ஆசை வேலையன்
பொற்பினுக்கு அணியினைப் புகழின் சேக்கையைக்
கற்பினுக்கு அரசியைக் கண்ணின் நோக்கினான். 837

வன் - கழுகரசனான சடாயு. ஆவது - தன்னால் ஆனமட்டும். அறிவித்து - சிறிது தூரம் சென்றவன் திரும்ப வந்து அறிவித்து. 831-ம் பாட்டு : முளைவரித் தண்டு ஒரு மூன்றும் - கட்டமைந்த மூங்கில் தண்டுகள் மூன்றையும் முறுக்கிய திரிதண்டம். இதற்கு வேறொரு பொருள்: ஆப்பு உடைய, கட்டமைந்த, அரசு புரசு மூங்கில் ஆகிய வற்றின் மூன்று தண்டுகளையும் ஒன்றாக முறுக்கிய திரிதண்டம். 834-ம் பாட்டு : தாமரைக்கண் - தாமரை மணிகள். தவத்தின் மாலை - தவசிகள் அணியும் மாலைகள், அல்லது ஜபமாலை. ஆமையின் இருக்கை - ஆமையைப் போலச் செய்யப்பட்டதும், தவசிகளுக்கு உரியதுமான கூர்மாசனம். அருந்ததி - கற்பில் சிறந்த அருந்ததி போன்ற சீதை. 837-ம் பாட்டு : அற்பினில் திரைபுரள் ஆசை

இராவணனது வேட்கை மிகுதல்

*தூங்கலின் குயில்கெழு சொல்லின் உம்பரின்
ஓங்கிய அழகினுள் உருவம் காண்டலும்
ஏங்கினன் மனநிலே யாதென்று உன்னுவாம்
வீங்கின மெலிந்தன வீரத் தோள்களே. 838

புனமயில் சாயலின் எழிலின் பூநறைச்
சுனேமடுத்து உண்டுஇசை முரலும் தும்பியின்
இனம்எனக் களித்துளது என்பது என்அவன்
மனம்எனக் களித்தது கண்ணின் மாலேயே. 839

*சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண்
மேயவள் மணிநிற மேனி காணுதற்கு
ஏயுமே இருபதுஇங்கு இமைப்பில் நாட்டங்கள்
ஆயிரம் இல்லேஎன்று அல்லல் எய்தினன். 840

அரைகடை இட்டமுக் கோடி ஆயுவும்
புரைதபு தவத்தின்யான் படைத்த போதுமே
நிறைவளே முன்கையின் நிறைந்த நங்கைதன்
கரையறு நல்நலக் கடற்குஎன்று உன்னினன். 841

வேலேயன்-உண்மையிலேயே காதல் கொண்டவர்களின் காதல் எவ்வாறு அலே வீசுமோ,அவ்வாறுகாமவெறிஅலேமோதும்கடல்போன்ற இராவணன். குறிப்பு:- இந்த அடிக்கு, வேறுவிதமாகக் கூறும் அர்த்தங்களும், வேறுவிதமான பாடங்களும் பொருந்தாது. இராவணன் காதல் (அல்லது அன்பு) கொண்டதாகவும், அந்தக் காதலின் அலேகள் புரண்டதாகவும் பொருள் கூறுவது பொருத்தமற்றதாகும். வேறொருவனுடைய மனேவியை விரும்புவது அன்போ, காதலோ அல்ல. காமவெறி கொண்டவனிடம் இந்த இரண்டையும் எதிர்பார்க்க முடியாது. 838-ம் பாட்டு: தூங்கலின் குயில்கெழு சொல்லின் உம்பரின் ஓங்கிய அழகினுள் - மெதுவாக நடந்துவருவதிலும், குயில் போன்ற இனிய சொற்களுடன் பேசுவதிலும், ஆகாயத்தையே அளாவி நிற்பதாகத் தோன்றும் பேரழகி. இராவணனுக்கு முன், மெதுவாக நடந்துவந்ததும், குயில்போன்று பேசியதுமான இரண்டு காரியங்களேயும் சீதை செய்திருக்கிருள். குறிப்பு : 'தூங்கலின்' என்பதற்கு 'சோர்வுகொண்ட' என்று பொருள் கூறுவதோ, 'தூங்கலில்' என்ற பாடத்தை வைத்துக்கொண்டு 'சோர்தல் இல்லாத' என்று பொருள் கூறுவதோ சரியல்ல. இராவணன் காண்பது யாதொரு குறையுமற்ற அழகியையே ஒழிய, சோர்வுகொண்ட அழகியையல்ல என்பதற்கு பின் இரண்டு அடிகளில் குறிப்பிடப்படும் அவனுடைய செயல்கள் சான்றுகளாக விளங்குகின்றன. 841-ம் பாட்டு : அரைகடை......ஆயுவும் - மூன்றரைக் கோடி வருஷங்கள் கொண்ட ஆயுளும்.

*தேவரும் அவுணரும் தேவி மாரொடும்
கூவல்செய் தொழிலினர் குடிமை செய்திட
மூவுல கமும்இவர் முறையின் ஆளயான்
ஏவல்செய்து உய்குவென் இனிதுஎன்று உன்னினன். 842

உளைவுறு துயர்முகத்து ஒளிஇ தாம்எனில்
முளைஎயிறு இலங்கிடும் முறுவல் என்படும்
தளையவிழ் குழல்இவட் கண்டு தந்தஎன்
இளையவட்கு அளிப்பென்என் அரசென்று எண்ணினன். 843

*ஆண்டையான் அனையன உன்னி ஆசைமேல்
மூண்டெழு சிந்தனை முறைஇ லோன்தனைக்
காண்டலும் கண்ணின்நீர் துடைத்த கற்பினள்
ஈண்டெழுந் தருளும்என்று இனிய கூறினள். 844

*ஏத்தினள் எய்தலும் இருத்திர் ஈண்டென
வேத்திரத்து ஆசனம் விதியின் நல்கினள்
மாத்திரி தண்டுஅயல் வைத்த வஞ்சனும்
பூத்தொடர் சாலையின் இருந்த போழ்தினே 845

நடுங்கின மலைகளும் மரனும் நாஅவிந்து
அடங்கின பறவையும் விலங்கும் அஞ்சின
படம்குறைந்து ஒதுங்கின பாம்பும் பாதகக்
கடுந்தொழில் அரக்கனைக் காணும் கண்ணினே. 846

*இருந்தவன் யாவதுஇவ் இருக்கை ஈங்குஉறை
அருந்தவன் யாவன்நீர் யாரை என்றலும்
விருந்தினர் இவ்வழி விரகி லார்எனப்
பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினள். 847

*தயரதன் தொல்குலத் தலைவன் தம்பியோடு
உயர்குலத்து அன்னைசொல் உச்சி ஏந்தினன்
அயர்விலன் இவ்வழி உறையும் அன்னவன்
பெயரினைத் தெரிகுதிர் பெருமை யீர்என்றாள். 848

*கேட்டனென் கண்டிலென் கெழுவு கங்கைநீர்
நாட்டிடை ஒருமுறை நண்ணி னேன்மலர்
வாள்தடங் கண்ணினிர் யாவன் மாமகள்
காட்டிடை அரும்பகல் கழிக்கின் றீர்என்றான். 849

*அனகமா நெறிபடர் அடிகள் நும்அலால்
நினைவதோர் தெய்வம்வே றிலாத நெஞ்சினன்
சனகன்மா மகள்பெயர் சனகி காகுத்தன்
மனைவியான் என்றனள் மறுவில் கற்பினள். 850

849-ம் பாட்டு : கங்கைநீர் நாட்டிடை - கோசல நாட்டிடை. நண்ணினேன் - வந்திருக்கிறேன். முன்னொரு காலத்தில் இராவணன். திக்கு விஜயம் செய்தபோது, கோசலநாட்டின் தலைநகரான அயோத்திக்கும் சென்று, அங்கே அப்போது ஆட்சி செலுத்திய அன்ரண்ணி

*அவ்வழி அனையன உரைத்த ஆயிழை
வெவ்வழி வருந்தினிர் விளைந்த மூப்பினிர்
இவ்வழி இருவினை கடக்க எண்ணினிர்
எவ்வழி நின்றும்இங்கு எய்தி னீர்என்றாள். 851

இராவணன் தன்னுடைய பெருமைகளைக் கூறுதல்

*இந்திரற்கு இந்திரன் எழுத லாகலாச்
சுந்தர நான்முகன் மரபில் தோன்றினன்
அந்தரத் தோடும்எவ் வுலகும் ஆள்கின்றான்
மந்திரத்து அருமறை வைகும் நாவினன். 852

*ஈசன்ஆண்டு இருந்தபேர் இலங்கு மால்வரை
ஊசிவே ரொடும்பறித்து எடுக்கும் ஊற்றத்தான்
ஆசைகள் சுமந்தபேர் அளவில் யானைகள்
பூசல்செய் மருப்பினைப் பொடிசெய் தோளினன். 853

*நிற்பவர் கடைத்தலை நிறைந்து தேவரே
சொற்பகும் மற்றவன் பெருமை சொல்லுங்கால்
கற்பகம் முதலிய நிதியம் கையன்
பொற்பக மானநீர் இலங்கை பொன்னகர். 854

ஏனகை திலோத்தமை முதல ஏழையர்
வானகம் துறந்துவந்து அவன்தன் மாட்சியால்
ஊனம்இல் அடைப்பைகால் வருடல் ஒண்செருப்பு
ஆனவை முதல்தொழில் அவரது ஆகுமே. 855

சந்திரன் இரவிஎன் பவர்கள் தாம்அவன்
சிந்தனை வழிநிலை திரிவர் தேசுடை
இந்திரன் முதலிய அமரர் ஈண்டுஅவன்
கந்துஅடு கோயிலின் காவ லாளரே 856

பொன்னக ரத்தினும் பொலங்கொள் நாகர்தம்
தொல்நக ரத்தினும் தொடர்ந்த மாநிலத்து
எந்நக ரத்தினும் இனிய ஈண்டுஅவன்
நல்நக ரத்தன நவைஇ லாதன. 857

யன் என்ற சூரியகுல வேந்தனோடு போர் செய்து, அவனை அடித்து வீழ்த்திப் பரிகாசமாகச் சிரித்தான். அப்போது அனரண்ணியன், இராவணனை நோக்கி, "காலத்தை யாரால் வெல்ல முடியும்? நீ என்னை அவமதித்தாய். அதனால், என் குலத்தில் தசரதனுடைய மகனாகப் பிறக்கும் இராமனுடைய அம்பினால் உன் தலைகள் அறுபட்டுப் பனங்காய்க் குலைபோலத் தரையில் வீழ்க" என்று சபித்தான். இந்தச் செய்தி, உத்தரகாண்டம், திக்கு விசயப்படலத்தில், 33-லிருந்து 42 வரையுள்ள செய்யுட்களில் கூறப்பட்டிருக்கிறது.

850-ம் பாட்டு: நும்அலால் - உம்மைப்போன்ற முனிவர்களை யல்லாமல்.

*தாளுடை மலருளான் தந்த அந்தம்இல்
நாளுடை வாழ்க்கையன் நாரி பாகத்தன்
வாளுடைத் தடக்கையன் வாரி வைத்தவெங்
கோளுடைச் சிறையினன் குணங்கள் மேன்மையான். 858

வெம்மைதீர் ஒழுக்கினன் விரிந்த கேள்வியன்
செம்மையோன் மன்மதன் திகைக்கும் செவ்வியன்
எம்மனோர் அனைவரும் இறைவர் என்றுஎனும்
மும்மையோர் பெருமையும் முற்றும் பெற்றியான். 859

அனைத்துல கினும்அழ கமைந்த நங்கையர்
எனைப்பலர் அவன்தனது அருளின் இச்சையோர்
நினைத்துஅவர் உருகவும் உதவ நேர்கிலன்
மனக்கினி யாள்ஒரு மாதை நாடுவான். 860

*ஆண்டையான் அரசுவீற் றிருந்த அந்நகர்
வேண்டியான் சிலபகல் உறைதல் மேவினேன்
நீண்டனென் இருந்துஅவற் பிரிந்த நெஞ்சினேன்
மீண்டனென் என்றனன் வினையம் உன்னுவான். 861

வேதமும் வேதியர் அருளும் வெஃகலாச்
சேதன மன்னுயிர் தின்னும் தீவினைப்
பாதக அரக்கர்தம் பதியின் வைகுதற்கு
ஏதுஎன் உடலமும் மிகைஎன்று எண்ணுவீர். 862

*வனத்திடை மாதவர் மருங்கு வைகலிர்
புனல்திரு நாட்டிடைப் புனிதர் ஊர்புக
நினைக்கிலிர் அறநெறி நினைக்கி லாதவர்
இனத்திடை வைகினிர் என்செய் திர்என்றாள். 863

வேறு

அரக்கர்களே நல்லவர்கள் என்று கபட சந்நியாசி கூறுதல்

மங்கைஅஃது உரைத்தல் கேட்ட வரம்பிலான் மறுவில் தீர்ந்தார்
வெங்கண்வாள் அரக்கர் என்ன வெருவலம் மெய்ம்மை நோக்கில்
திங்கள்வாள் முகத்தி னாய்அத் தேவரில் தீயர் அல்லர்
எங்கள்போ லியர்க்கு நல்லார் நிருதரே போலும் என்றான். 864

சேயிழை அன்ன சொல்லத் தியவர்ச் சேர்தல் செய்தார்
தூயவர் அல்லர் சொல்லின் தொல்நெறி தொடர்ந்தோர் என்றாள்
மாயவல் லரக்கர் வல்லர் வேண்டுரு வரிக்க என்பது
ஆயவள் அறிதல் தேற்றாள் ஆதலின் அயல்ஒன்று எண்ணாள். 865

அயிர்த்தனள் ஆகும் என்றோர் ஐயுறவு அகத்துக் கொண்டான்
பெயர்த்தது துடைக்க எண்ணிப் பிறிதுறப் பேச உற்றான்
மயக்கறும் உலகம் மூன்றின் வாழ்பவர்க்கு அனைய வல்லோர்
இயற்கையின் திரியின் அல்லால் இயற்றல்ஆம் நெறிஎன் என்றான்.

858-ம் பாட்டு: கோளுடைச் சிறையினன் — மாரிசன் வதைப் படலம், 564-ம் பாட்டின் அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

திறம்தெரி வஞ்சன் அச்சொல் செப்பலும் செப்பம் மிக்காள்
அறந்தரு வள்ளல் ஈண்டிங்கு அருந்தவம் முயலும் நாளுள்
மறம்தலை திரிந்த வாழ்க்கை அரக்கர்தம் வருக்கத் தோடும்
இறந்தனர் முடிவர் பின்னர் இடர்இலை உலகம் என்றாள். 867

மான்அவள் உரைத்த லோடும் மானிடர் அரக்கர் தம்மை
மீன்என மிளிரும் கண்ணாய் வேர்அற வெல்வர் என்னின்
யானையின் இனத்தை எல்லாம் இளமுயல் கொல்லும் பின்னும்
கூன்உகிர் மடங்கல் ஏற்றைக் குருளைமான் கொல்லும் என்றான். 868

மின்திரண்டு அனையபங்கி விராதனும் வெகுளி பொங்கக்
கன்றிய மனத்து வென்றிக் கரன்முதல் கணக்கி லோரும்
பொன்றிய பூசல் ஒன்றும் கேட்டிலிர் போலும் என்றாள்
அன்றுஅவற்கு அடுத்தது உன்னி மழைக்கணீர் அருவி சோர்வாள். 869

வாளரி வள்ளல் தன்னால் இலங்கைமா நிருதர் எல்லாம்
கோளொடு மடியு மாறும் வானவர் கிளரு மாறும்
நாளையே காண்டிர் அன்றே நவையிலிர் உணர்கி லீரோ
மீளரும் தருமம் தன்னை வெல்லுமோ பாவம் என்றாள். 870

தேனிடை அமுது அளாய அன்னமென் சிலசொல் மாலை
தானுடைச் செவிக ளூடு தவமுறத் தளிர்த்து வீங்கும்
ஊனுடை உடம்பி னானும் உருகெழு மானம் ஊன்ற
மானிடர் வலியர் என்ற மாற்றத்தால் சீற்றம் வைத்தான். 871

சீறினன் உரைசெய் வான்அச் சிறுவலிப் புல்லி யோர்கட்கு
ஈறொரு மனிதன் செய்தான் என்றெடுத்து இயம்பி னாயேல்
தேறுதி நாளை யேஅவ் இருபது திண்தோள் வாடை
வீறிய பொழுது பூளை வீஎன வீவன் அன்றே. 872

மேருவைப் பறிக்க வேண்டின் விண்ணினை இடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின் நெருப்பினை அவிக்க வேண்டின்
பாரினை எடுக்க வேண்டின் பலவினை சிலசொல் ஏழாய்
யார்எனக் கருதிச் சொன்னாய் இராவணற்கு அரிதென் என்றான். 873

அரண்தரு திரள்தோள் சால உளஎனின் ஆற்றல் உண்டோ
கரண்டநீர் இலங்கை வேந்தைச் சிறைவைத்த கழற்கால் வீரன்
திரண்டதோள் வனத்தை எல்லாம் சிறியதோர் பருவம் தன்னில்
இரண்டுதோள் ஒருவன் அன்றோ மழுவினால் எறிந்தான் என்றாள். 874

இராவணன் தனது பொய் வேடத்தை விடுதல்

என்றுஅவள் உரைத்த லோடும் எரிந்தன நயனம் திக்கில்
சென்றன திரள்தோள் வானம் தீண்டின மகுடம் திண்கை
ஒன்றொடொன்று அடித்த மேகத்து உரும்என எயிறு தம்மின்
மென்றன வெகுளி பொங்க விட்டது மாய வேடம். 875

869-ம் பாட்டு: அவற்கு - இராமனுக்கு. 873-ம் பாட்டு: பலவினை சில சொல்-சில சொற்களைச்சொன்ன மாத்திரத்தில் பல காரியங்கள் நடக்கும். 874-ம் பாட்டு: வீரன்-கார்த்தவீரியார்ச்சுனன். இவன்

இருவினை துறந்த மேலோர் அல்லர்கொல் இவர்என்று எண்ணி
அரிவையும் ஐயம் எய்தா ஆர்இவன் தான்என்று ஒன்றும்
தெரிவரும் நிலைய னாகத் திவிடத்து அரவம் தானே
உருகெழு சீற்றம் பொங்கிப் பணம்விரித்து உயர்ந்த தொத்தான்.

ஆற்றவெந் துயரத்து அன்னாள் ஆண்டுற்ற அலக்கண் நோக்கின்
ஏற்றம்என் நினைக்க லாகும் எதிர்எடுத்து இயம்ப லாகும்
மாற்றம்ஒன் றில்லை செய்யும் வினையில்லை வரிக்க லாகாக்
கூற்றம்வந் துற்ற காலத்து உயிரெனக் குலைவு கொண்டாள். 877

விண்ணவர் ஏவல் செய்ய வென்றஎன் வீரம் பாராய்
மண்ணிடைப் புழுவின் வாழும் மானிடர் வலியர் என்றாய்
பெண்ணெனப் பிழைத்தாய் அன்றேல் உன்னையான் பிசைந்து தின்ன
எண்ணுவன் எண்ணில் பின்னை என்உயிர் இழப்பன் என்றான். 878

குலைவுறல் அன்னம் முன்னம் யாரையும் கும்பி டாஎன்
தலைமிசை மகுடம் என்னத் தனித்தனி இனிது தாங்கி
அலகில்பூண் அமரர் மாதர் அடிஇணை ஏவல் செய்ய
உலகம்ஈ ரேழும் ஆளும் செல்வத்துள் உறைதி என்றான். 879

செவிகளைத் தளிர்க்கை யாலே சிக்குறச் சேமம் செய்தாள்
கவினும்வெஞ் சிலைக்கை வென்றிக் காகுத்தன் கற்பி னேனைப்
புவியிடை ஒழுக்கம் நோக்காப் பொங்கெரிப் புனிதர் ஈயும்
அவியைநாய் வேட்ட தென்ன என்சொனாய் அரக்க என்னா. 880

புல்நுனை நீரின் நொய்தாப் போதலை புரிந்து நின்ற
இன்னுயிர் இழத்தல் அஞ்சி இல்பிறப்பு அழிதல் உண்டோ
மின்உயிர்த்து உருமில் சீறும் வெங்கணை விரவா முன்னம்
உன்உயிர்க்கு உறுதி நோக்கி ஒளித்தியால் ஓடி என்றாள். 881

என்றவள் உரைக்க நின்ற இரக்கம்இல் அரக்கன் எய்த
உன்துணைக் கணவன் அம்புஅவ் உயர்திசை சுமந்த ஓங்கல்
வன்திறல் மருப்பின் ஆற்றல் மடித்தஎன் மார்பின் வந்தால்
குன்றிடை தொடுத்து விட்ட பூங்கணை கொல்அது என்றான் 882

அணங்கினுக்கு அணங்கு அனாய்நின் ஆசைநோய் அகத்துப் பொங்க
உணங்கிய உடம்பி னேனுக்கு உயிரினை உதவி உம்பர்க்
கணங்குழை மகளிர்க் கெல்லாம் பெரும்பதம் கைக்கொள் என்னா
வணங்கினன் உலகம் தாங்கும் மலையினும் வலிய தோளான். 883

வேறு

தரைவாய்அவன் வந்தடி தாழுதலும்
கறைவாள்பட ஆவி கலங்கினள்போல்
இறைவாஇனி யோய்என ஏங்கினளால்
பொறைதீர்ன்உரு வானதொர் பொற்புடையாள். 884

ஒரு சமயம் இராவணனைப் பிடித்துச் சிறையிலிட்டு, பிறகு விடுவித்து, ''இராவணசித்து'' என்ற பட்டமும் பெற்றான். ஒருவன் - பரசுராமன்; இவன் கார்த்தவீரியனுடைய ஆயிரம் தோள்களையும் தன் கோடாலியால் வெட்டிக் கொன்றவன்.

சீதையை இராவணன் தரையுடன் பெயர்த்து எடுத்தல்

*ஆண்டுஆயிடை தீயவன் ஆயிழையைத்
தீண்டால்எனும் மேலுரை சிந்தைசெயாத்
தூண்தான்என லாம்உயர் தோள்வலியால்
ஈண்டான்நிலம் ஓசனை கீழொடுமேல். 885

கொண்டான்உயர் தேர்மிசை கோல்வளையாள்
கண்டாள்தனது ஆருயிர் கண்டிலளால்
மண்தான்உறு மின்னின் மயங்கினளால்
விண்தான்வழி யாஎழு வான்விரைவான் 886

*விடுதேர்என வெங்கனல் வெந்தழியும்
கொடிபோல்புரள் வாள்குலை வாள்அயர்வாள்
துடியாவிழு வாள்துய ரால்எழுவாள்
கடிதாஅற னேஇது காஎனுமால். 887

*மலையேமர னேமயி லேகுயிலே
கலையேபிணை யேகளி றேபிடியே
நிலையாஉயி ரேநிலை தேறினர்போய்
உலையாவலி யாருழை நீர்உரையீர். 888

செஞ்சேவக னூர்நிலை நீர்தெரிவீர்
மஞ்சேபொழி லேவன தேவதைகாள்
அஞ்சேல்என நல்குதி ரேல்அடியேன்
உஞ்சால்அது தான்இழி போஉரையீர். 889

*நிருதாதியர் வேர்அற நீள்முகில்போல்
சரதாரைகள் வீசினிர் சார்கிலிரோ
வரதாஇனை யோய்மறு ஏதும்இலாப்
பரதாஇனை யோய்பழி பூணுதிரோ. 890

கோதாவரி யேகுளிர் வாய்குழைவாய்
மாதாஅனை யாய்மன னேதெளிவாய்
ஓதாதுஉணர் வார்உழை ஓடினைபோய்
நீதான்வினை யேன்நிலை சொல்லலையோ. 891

முந்தும்சுனை காள்முழை வாழ்அரிகாள்
இந்தந்நில னேடும்எ டுத்தகைந்நால்-
ஐந்தும்தலை பத்தும்அ லைந்துலையச்
சிந்தும்படி கண்டுசி ரித்திடுவீர். 892

885-ம் பாட்டு: ஆயிழையைத் தீண்டால் எனும் மேலுரை- 'எந்தப் பெண்ணையாவது நீ பலாத்காரமாகத் தொட்டால், அவளுடைய கற்புத் தீயினல் எரிந்து சாவாய்' என்று முன்னொரு சமயம் அரம்பை இட்ட சாபம். பிரமனும் இதே மாதிரி ஒரு சமயம் சாப மிட்டிருக்கிறன். ஓசனை கீழொடுமேல் - சுமார் 40 மைல் ஆழமும், 40 மைல் அகலமும்.

வேறு

என்றுஇன்ன பலவும் பன்னி இரியலுற்று அரற்று வாளேப்
பொன்துன்னு புணர்மென் கொங்கைப் பொலங்குழாய் போரில் என்னைக்
கொன்றுன்னை மீட்பர் கொல்அம் மானிடர் கொள்க என்னு
வன்திண்கை எறிந்து நக்கான் வாழ்க்கைநாள் வறிது வீழ்வான். 893

வாக்கினுல் அன்னுன் சொல்ல மாயையால் வஞ்ச மான்ஒன்று
ஆக்கினுய் ஆக்கி உன்னை ஆருயிர் உண்ணும் கூற்றைப்
போக்கினுய் புகுந்து கொண்டு போகின்ருய் பொருது நின்னைக்
காக்குமா காண்டி யாயின் கடவல்உன் தேரை என்ருள். 894

மீட்டும்ஒன்று உரைசெய் வாள்நீ வீரனேல் விரைவில் மற்றுன்
கூட்டமாம் அரக்கர் தம்மைக் கொன்றுஉங்கை கொங்கை மூக்கும்
வாட்டினுர் வனத்தில் உள்ளார் மானிடர் என்ற வார்த்தை
கேட்டும்இம் மாயம் செய்தது அச்சத்தின் கிளர்ச்சி அன்ருே. 895

மொழிதரும் அளவில் நங்கை கேள்இது முரண்இல் யாக்கை
இழிதரு மனித ரோடே யான்செரு ஏற்பல் என்ருல்
விழிதரு நெற்றி யான்தன் வெள்ளிவெற்பு எடுத்த தோட்குப்
பழிதரும் அதனில் சாலப் பயன்தரும் வஞ்சம் என்ருன். 896

பாவையும் அதனைக் கேளாத் தம்குலப் பகைஞர் தம்பால்
போவது குற்றம் வாளில் பொருவது நாணம் போலாம்
ஆவது கற்பி னுரை வஞ்சிக்கும் ஆற்ற லேயாம்
ஏவம்என் பழிதான் என்னே இரக்கம்இல் அரக்கர்க் கென்ருள். 897

என்னும்அவ் வேலே யின்கண் எங்கடா போவது எங்கே
நில்நில்என்று இடித்த சொல்லன் நெருப்பிடைப் பரப்பும் கண்ணன்
மின்என விளங்கும் வீரத் துண்டத்தன் மேரு என்னும்
பொன்நெடுங் குன்றம் வானில் வருவதே போலும் மெய்யான் 898

இராவணனை எதிர்க்கச் சடாயு வருதல்

பாழிவன் கிரிகள் எல்லாம் பறித்தெழுந்து ஒன்ருே டொன்று
பூழியின் உதிர விண்ணில் புடையுறக் கிளர்ந்து பொங்கி
ஆழியும் உலகும் ஒன்ருய் அழிதர முழுதும் வீசும்
ஊழிவெங் காற்றிது என்ன இருசிறை ஊதை மோத 899

வேறு

சாகைவன் தலேயொடு மரமும் தாழமேல்
மேகமும் விண்ணின்மீச் செல்ல மீமிசை
மாகவெங் கலுழனும் வருகின் ருன்என
நாகமும் படம்ஒளித்து ஒதுங்கி நையவே 900

யானையும் யாளியும் முதல யாவையும்
கான்நெடு மரத்தொடு தூறு கல்இவை
மேல்நிறைந்து இருசிறை வீச்சின் ஏறலால்
வானமும் கானமும் மாறு கொள்ளவே 901

894-ம் பாட்டு: கூற்றை - (இங்கே) இராமனை.

உத்தமன் தேவியை உலகொடு ஓங்குதேர்
வைத்தனை ஏகுவது எங்கு வானிஞேடு
இத்தனை திசையையும் மறைப்பென் ஈண்டெனுப்
பத்திரச் சிறைகளை விரிக்கும் பண்பினுன் 902

வந்தனன் எருவையின் மன்னன் மாண்பிலான்
எந்திரத் தேர்செலவு ஒழிக்கும் எண்ணினுன்
சிந்துரக் கால்சிரம் செக்கர் சூடிய
சுந்தரக் கைலையை நிகர்க்கும் காட்சியான் 903

வேறு

*ஆண்டுற்ற அணங்கினை அஞ்சல்எனுத்
தீண்டுற்றிலன் என்றுணர் சிந்தையினுன்
மூண்டுற்றெழு வெங்கதம் முற்றிலனுல்
மீண்டுற்றுரை யாடலே மேவினனுல். 904

இராவணனைப் பார்த்துச் சடாயு கோபத்தோடு பேசுதல்

கெட்டாய்கிளை யோடுநின் வாழ்வையெலாம்
சுட்டாய்இது என்ன தொடங்கினைநீ
பட்டாய்என வேகொடு பத்தினியை
விட்டேகுதி யால்விளி கின்றிலையால். 905

*பேதாய்பிழை செய்தனை பேருலகின்
மாதாஅனை யாளை மனக்கொடுநீ
யாதாகநி னைத்தனை எண்ணமிலாய்
ஆதாரம்நி னக்கினி யார்உளரோ. 906

உய்யாமல் மலைந்துஉமர் ஆருயிரை
மெய்யாக இராமன் விருந்திடவே
கையார முகந்துகொடு அந்தகனுர்
ஐயாபுதி துண்டத றிந்திலையோ. 907

கொடுவெங்கரி கொல்லிய வந்ததன்மேல்
விடும்உண்டை கடாவ விரும்பினையே
அடும்என்ப துணர்ந்திலை யாயினும்வன்
கடுஉண்டுயி ரின்றிலை காணுதியோ. 908

எல்லாஉல கங்களும் இந்திரனும்
அல்லாதவர் மூவரும் அந்தகனும்
புல்வாய்புலி கண்டது போல்வர்அலால்
வில்லாளனை வெல்லும் மிடுக்கினரோ. 909

*இம்மைக்குஉற வோடும்இ றந்தழியும்
வெம்மைத்தொழில் இங்கிதன் மேல்இலையால்
அம்மைக்குஅரு மாநர கம்தருமால்
எம்மைக்குஇத மாகஇ தெண்ணினைநீ. 910

முத்தேவரின் மூல முதற்பொருளாம்
அத்தேவர்இம் மானிடர் ஆதலினால்
எத்தேவரொடு எண்ணுவது எண்ணம்இலாப்
பித்தேறினை யாதல் பிழைத்தனையால். 911

*புரம்பற்றிய போர்விடை யோன்அருளால்
வரம்பெற்றவும் மற்றுள விஞ்சைகளும்
உரம்பெற்றன ஆவன உண்மையினேன்
சரம்பற்றிய சாபம் விடும்தனையே. 912

*வானாள்பவன் மைந்தன் வளைத்தவிலான்
தானேவரின் இன்று தடுப்பரிதால்
நானேஅவண் உய்ப்பென்இந் நன்னுதலைப்
போநீகடிது என்று புகன்றிடலும் 913

கேட்டான்நிரு தர்க்கிறை கேழ்கிளர்தன்
வாள்தாரைநெ ருப்புக வாய்மடியா
ஒட்டாய்இனி நீஉரை செய்குநரைக்
காட்டாய்கடி தென்று கனன்றுரையா 914

வரும்புண்டரம் வாளியின் மார்புருவிப்
பெரும்புண்திற வாவகை பேருதிந்
இரும்புண்டநிர் மீளினும் என்உழையில்
கரும்புண்டசொல் மீள்கிலள் காணுதியால். 915

வேறு

என்னும்அள வில்பயம் முன்னின் இரட்டி எய்த
அன்னம்அயர் கின்றது நோக்கி அரக்கன் யாக்கை
சின்னம்உறும் இப்பொழு தேசிலை ஏந்தி நங்கள்
மன்னன்மகன் வந்திலன் என்று வருந்தல் அன்னை. 916

முத்துஉக்கன போல்முகத்து ஆலி முலைக்கண் வீழத்
தத்துற்றுஅய ரேல்தலை தால பலத்தின் ஏலும்
கொத்தொப்பன கொண்டிவன் கொண்டன என்ற ஆசை
பத்திற்கும்இன் றேபலி ஈவது பார்த்தி என்றான். 917

சடாயுவும் இராவணனும் போர்செய்தல்

இடிப்பொத்த முழக்கின் இருஞ்சிறை வீசி எற்றி
முடிப்பத்தி களைப்படி யிட்டு முழங்கு துண்டம்
கடிப்பக்கடி துஉற்றவன் காண்தகு நீண்ட வீணைக்
கொடிப்பற்றி ஒடித்துயர் வானவர் ஆசி கொண்டான். 918

913-ம் பாட்டு : வானாள்பவன் - தசரதன். 915-ம் பாட்டு : இரும்பு - பழுக்கக் காய்ச்சிய இரும்பு. கரும்புண்டசொல்-சீதை. நிர் - நீர் என்பதன் குறுக்கல் விகாரம்.

அக்காலை அரக்கன் அரக்குஉருக்கு அன்ன கண்ணன்
எக்காலமும் இன்னதொர் ஈடழி வுற்றி லாதான்
நக்கான்உல கேழும் நடுங்கிட நாக மன்ன
கைக்கார்முகத் தோடு கடைப்புரு வம்கு னித்தான். 919

சண்டப்பிறை வாள்எயிற் றுன்சர தாரை மாரி
மண்டச்சிற கால்அடித் தான்சில வள்உ கிரால்
கண்டப்படுத் தான்சில காலனும் காண உட்கும்
துண்டப்படை யால்சில துண்டதுண் டங்கள் கண்டான். 920

மீட்டும்அணு காநெடு வெங்கண் அனந்த நாகம்
வாட்டும்கலு ழன்என வந்தலை பத்தின் மீது
நீட்டும்நெடு மூக்கெனும் நேமியன் சேம விற்கால்
கோட்டும்அள வின்மணிக் குண்டலம் கொண்டெ ழுந்தான். 921

எழுந்தான்தட மார்பினில் ஏழிெனுடு ஏழு வாளி
அழுந்தாதுக ழன்றிடப் பெய்தெடுத் தார்த்துஅ ரக்கன்
பொழிந்தான்புகர் வாளிகள் மீளவும் போர்ச்ச டாயு
விழுந்தான்என அஞ்சினர் விண்ணவர் வெய்து யிர்த்தார். 922

புண்ணின்புது நீர்பொலி யப்பொழி புள்ளின் வேந்தன்
மண்ணில்கர னேமுத லோர்உதி ரத்தின் வாரிக்
கண்ணில்கடல் என்றுநு கர்ந்தது கான்று மீள
விண்ணில்பொலி கின்றதொர் வெண்ணிற மேகம் என்ன. 923

ஒத்தான்உட னேஉயிர்த் தான்உருத் தான்அ வன்தோள்
பத்தோடுபத் தின்நெடும் பத்தியில் தத்தி மூக்கால்
கொத்தாநகத் தால்குடை யாச்சிறை யால்பு டையா
முத்தார மார்பின் கவசத்தையும் மூட்ட றுத்தான். 924

அறுத்தானை அரக்கனும் ஐம்பதொடு ஐம்பது அம்பு
செறித்தான்தட மார்பில் செறித்தலும் தேவர் அஞ்சி
வெறித்தார்வெறி யாமுன் இராவணன் வில்லைப் பல்லால்
பறித்தான்பற வைக்கிறை விண்ணவர் பண்ணை ஆர்ப்ப. 925

எல்இட்டவெள் ளிக்கயி லைப்பொருப் பீச னோடு
மல்லிட்டதோ ளால்எடுத் தான்சிலை வாயின் வாங்கி
வில்இட்டு உயர்ந்த நெடுமேக மெனப்பொ லிந்தான்
சொல்இட்டுஅவன் தோள்வலி யாருளர் சொல்ல வல்லார். 926

மீளாநிறத்து ஆயிரம் கண்ணவன் விண்ணின் ஓட
வாளால்ஒறுத் தான்சிலை வாயிடை நின்றும் வாங்கி
தாளால்இறுத் தான்தழல் வண்ணன் தடக்கை வில்லைத்
தோளால்இறுத் தான்துணைத் தாதைதன் அன்பின் தோழன். 927

923-ம் பாட்டு : புதுநீர் - ஆற்றில் புதிதாகப் பெருக்கெடுத்துவரும் செந்நிறமான கலங்கல் நீரைப்போன்ற ரத்தம். வாரிக் கண்ணில் - சமுத்திரத்தினிடம். 924-ம் பாட்டு : ஒத்தான்-முன் பாட்டின்படி வெண் மேகத்தை ஒத்த சடாயு. 926-ம் பாட்டு : வில்இட்டு - வான வில் இட்டு. 927-ம் பாட்டு: ஆயிரம் கண்ணவன் - இந்திரன். ஒறுத்

ஞாலம்படுப் பான்தனது ஆற்றலுக்கு ஏற்ற நல்வில்
மூலம்ஒடிப் புண்டது கண்டு முனிந்த நெஞ்சன்
ஆலம்மிடற் றான்புரம் அட்டதோர் அம்பு போலும்
சூலம்எடுத் தான்எறிந் தான்மறம் தோற்றி லாதான். 928

ஆற்றான்இவன் என்றுண ராதுஎனது ஆற்றல் காண்என்று
ஏற்றான்எரு வைக்கிறை முத்தலை எஃகம் மார்பின்
மேல்தான்இது செய்பவர் யார்என விண்ணு ளோர்கள்
தோற்றாதுநின் றார்தம தோள்புடை கொட்டி ஆர்த்தார். 929

பொன்நோக்கியர் தம்புலன் நோக்கிய புன்கணோரும்
இன்நோக்கியர் இல்வழி எய்திய நல்வி ருந்தும்
தன்நோக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச் சார்ந்த
மெல்நோக்கியர் நோக்கமும் ஆம்என மீண்டது அவ்வேல். 930

வேகம்முடன் வேல்இழந் தான்படை வேறுள தாமுன்
மாகம்மறை யும்படி நீண்ட வயங்கு மான்தேர்ப்
பாகன்தலை யைப்பறித் துப்படர் கற்பி னாள்பால்
மோகம்படைத் தான்உளை வெய்த முகத்தெ றிந்தான். 931

எறிந்தான்தனை நோக்கி இராவணன் நெஞ்சின் ஆற்றல்
அறிந்தான்முனிந்து ஆண்டதுஓர் ஆடகத் தண்டு வாங்கிப்
பொறிந்துஆங்குஎரி யின்சிகை பொங்கி எழப்பு டைத்தான்
மறிந்தான்எரு வைக்கிறை மால்வரை போல மண்மேல். 932

மண்மேல்விழுந் தான்விழ லோடும் வயங்கு மான்தேர்
கண்மேல்ஒளி யும்தொட ராவகை தான்க டாவி
விண்மேல்எழுந் தான்எழ மெல்லிய லாளும் வெந்தீப்
புண்மேல்நுழை யத்துடிக் கின்றனள் போல்பு ரண்டாள். 933

தான் சிலை-இராவணனுடைய வில்லை. தழல்வண்ணன் தடக்கை வில்-சிவதனுசு. இறுத்தான் துணை-இராமனுடைய துணைவனான சடாயு. தாதை தன் அன்பின் தோழன் - தசரதனுடைய நண்பனான சடாயு. 928-ம் பாட்டு: ஞாலம் படுப்பான் - இராவணன். 929-ம் பாட்டு: இவன் - சடாயு. தன்னையே ''இவன்'' என்று சடாயு கம்பீரமாகக் குறிப்பிடுகிறான். 930-ம் பாட்டின் உரை : பொருளையே குறியாகக் கொண்ட வேசையரிடம், ஐம்புலன்களும் ஒருசேர அனுபவிக்கும் காம இன்பத்தைத்துய்க்க விரும்பிச் சென்று காரியம் கைகூடாமல் திரும்பும் தரித்திரர்களைப்போலவும், இனிய பார்வையோடு உபசரிக்கும் நற்குணமுடைய பெண்கள் இல்லாத வீட்டுக்குப்போய், உணவு கொள்ள வழியில்லாமல் திரும்பும் விருந்தினர்களைப்போலவும், தன்னையே காணும் யோகத்தில் ஈடுபட்டுள்ள முனிவர்களின் மீது செலுத்திய பெண்களின் பார்வைபோலவும், இராவணன் எறிந்த வேல் சடாயுவின் மார்பில் பட்டும், குத்தித் துளைக்கமுடியாமல் திரும்பிவிட்டது.

கொழுந்தேஅனே யாள்குழைந்து ஏங்கிய கொள்கை கண்டான்
அழுந்தேல்அவ லத்திடை அஞ்சலே அன்னம் என்னு
எழுந்தான்உயிர்த் தான்அட எங்கினிப் போவ தென்னு
விழுந்தான்அவன் தேர்மிசை விண்ணவர் பண்ணே ஆர்ப்ப. 934

பாய்ந்தான்அவன் பன்மணித் தண்டு பறித்தெ றிந்தான்
ஏய்ந்தார்கதித் தேர்ப்பரி எட்டினேடு எட்டும் எஞ்சித்
தீர்ந்துஆசற வீசிஅத் திண்திறல் துண்ட வாளால்
காய்ந்தான்கவர்ந் தான்உயிர் காலனும் கைவி திர்த்தான். 935

திண்தேர்அழித்து ஆங்குஅவன் திண்புறம் சேர்ந்த தூணி
விண்தான்மறைப் பச்செறி கின்றன வில்இ லாமை
மண்டுஆர்அமர் தான்வழங் காமையில் வச்சை மாக்கள்
பண்டாரம்ஒக் கின்றன வள்உகி ரால்ப றித்தான். 936

மாச்சிச்சிரம் பாய்ந்துஅவன் மார்பினும் தோள்கள் மேலும்
ஓச்சிச்சிற கால்புடைத் தான்கடித் தான்உ லேயா
மூச்சுஇற்ற இராவண னும்முடி சாய்ந்தி ருந்தான்
போச்சுஇத்தனே போலும்நின் ஆற்றல் எனப்பு கன்ருன். 937

அவ்வேலேயி னேமுனிந் தான்முனிந்து ஆற்றல் அன்ன
வெவ்வேல்அரக் கன்விடல் ஆம்படை வேறு காணுன்
இவ்வேலேயி னேஇவன் இன்னுயிர் உண்பென் என்னுச்
செவ்வேபிழை யாநெடு வாள்உறை தீர்த்தெ றிந்தான். 938

சிறகுகளே இழந்து சடாயு வீழ்தல்

வலியின்தலே தோற்றிலன் மாற்றரும் தெய்வ வாளால்
நலியும்தலே என்றஅது வன்றியும் வாழ்க்கை நாளும்
மெலியும்கடை சென்றுள தாகலின் விண்ணின் வேந்தன்
குலிசம்எறி யச்சிறை யற்றதொர் குன்றின் வீழ்ந்தான். 939

விரிந்துஆர்சிறை கீழுற வீழ்ந்தனன் மண்ணில் விண்ணேர்
இரிந்தார்இழந் தாள்துணே என்னமு னிக்க ணங்கள்
பரிந்தார்படர் விண்டுவின் நாட்டவர் பைம்பொன் மாரி
சொரிந்தார்அது நோக்கிய சீதை துளக்கம் உற்ருள். 940

வெள்கும்அரக் கன்நெடு விண்புக ஆர்த்து மிக்கான்
தொள்கின்தலே எய்திய மான்எனச் சோர்ந்து நைவாள்
உள்கும்உயிர்க் கும்உயங் கும்ஒரு சார்பு காணுள்
கொள்கொம்பொடி யக்கொடி வீழ்ந்தது போல்கு லேந்தாள். 941

வேறு

*வன்துணே உளன்என வந்த மன்னனும்
பொன்றினன் எனக்கினிப் புகல்என் என்கின்ருள்
இன்துணே பிரிந்திரிந்து இன்னல் எய்திய
அன்றில்அம் பெடைஎன அரற்றி னுள்அரோ. 942

934-ம் பாட்டு: கண்டான்-சடாயு. அவன் தேர் - இராவணனுடைய தேர். 938-ம் பாட்டு : நெடுவாள் - சிவனிடம் பெற்ற சந்திர ஹாஸம் என்ற வாள்.

*பின்னவன் உரையினை மறுத்துப் பேதையேன்
அன்னவன் தனைக்கடிது அகற்றி னேன்பொரு
மன்னவன் சிறைஅற மயங்கி னேன்விதி
இன்னமும் எவ்வினை இயற்று மோஎன 943

*அல்லல்உற் றேனைவந்து அஞ்சல் என்றஇந்
நல்லவன் தோற்பதோ நரகன் வெல்வதோ
வெல்வதும் பாவமோ வேதம் பொய்க்குமோ
இல்லையோ அறம்என இரங்கி ஏங்கினாள். 944

*நாணிலேன் உரைகொடு நடந்த நம்பிமீர்
நீள்நிலை அறநெறி நின்று ளோர்க்கெலாம்
ஆணியை உந்தையர்க்கு அமைந்த அன்பனைக்
காணிய வம்எனக் கலங்கி விம்மினாள். 945

கற்பழி யாமைஎன் கடமை யாயினும்
பொற்பழி யாவலம் பொருந்தும் போர்வலான்
விற்பழி உண்டது வினையி னேன்வந்த
இல்பழி உண்டதென்று இரங்கி ஏங்கினாள். 946

எல்இயல் விசும்பிடை இருந்த நேமியாய்
சொல்இயல் ஆய்நெறி தொடர்ந்த தோழமை
நல்இயல் அருங்கடன் கழித்த நம்பியைப்
புல்லுதி யோஎனப் பொருமிப் பொங்கினாள். 947

சீதையைத் தூக்கிக்கொண்டு இராவணன் செல்லுதல்

*ஏங்குவாள் தன்மையும் இறகி ழந்தவன்
ஆங்குறு தன்மையும் அரக்கன் நோக்கினான்
வாங்கினன் தேரிடை வைத்த மண்ணொடும்
வீங்குதோள் மீக்கொடு விண்ணின் ஏகினான். 948

விண்ணிடை வெய்யவன் ஏகும் வேகத்தால்
கண்ணொடு மனம்அவை சுழன்ற கற்பினாள்
உள்நிறை உணர்வழிந்து ஒன்றும் ஓர்ந்திலள்
மண்ணிடைத் தன்னையும் மறந்து சாம்பினாள் 949

*ஏகினன் அரக்கனும் எருவை வேந்தனும்
மோகவெந் துயர்சிறிது ஆறி மூர்ச்சியா
மாகம்மேல் நோக்கினன் வஞ்சன் வல்லையில்
போகுதல் கண்டுஅகம் புலர்ந்து சொல்லுவான். 950

945-ம் பாட்டு : நம்பிமீர் - இராம, இலக்குவர்களே. அன்பனை - சடாயுவை. 946-ம் பாட்டு : போர்வலான் - இராமன். 947-ம் பாட்டு : நேமியாய் - தசரதனே. நம்பியை - சடாயுவை.

*வந்திலர் மைந்தர்நம் மருகிக்கு எய்திய
வெந்துயர் துடைத்தனன் என்னும் மெய்ப்புகழ்
தந்திலர் விதியினுர் தரும வேலியைச்
சிந்தினர் மேல்இனிச் செயல்என் ளுங்கொலோ. 951
*வெற்றியர் உளர்எனின் மின்னின் நுண்ணிடை
பொற்ருெடிக்கு இந்நிலே புகுதற் பாலதோ
உற்றதை இன்னதென்று உணர கிற்றிலேன்
சிற்றவை வஞ்சனே முடியச் செய்ததோ. 952
பஞ்சணே பாம்பணே யாகப் பள்ளிசேர்
அஞ்சன வண்ணனே இராமன் ஆதலால்
வெஞ்சின அரக்கனுல் வெல்லற் பாலனே
வஞ்சனே இழைத்தனன் கள்ள மாயையால். 953
வேர்அற அரக்கரை வென்று வெம்பழி
தீரும்என் சிறுவனும் தீண்ட அஞ்சுமால்
ஆரியன் தேவியை அரக்கன் நன்மலர்ப்
பேருல களித்தவன் பிழைப்பில் சாபத்தால். 954
பருஞ்சிறை இன்னன பன்னி உன்னுவான்
அருஞ்சிறை உற்றன ளாம்எ ளுமனம்
பொரும்சிறை இற்றதேல் பூவை கற்பெனும்
இருஞ்சிறை இருதென இடரும் நீங்கினுன். 955
*அஞ்சிறைக் குருதியால் அழிந்து சோர்வுற
வஞ்சியை மீட்கிலேன் என்னும் மானமும்
செஞ்செவே மக்கள்பால் சென்ற காதலும்
நெஞ்சுறத் துயின்றனன் உணர்வு நீங்கலான். 956
*வஞ்சியை அரக்கனும் வல்லே கொண்டுபோய்ச்
செஞ்செவே திருவுருத் தீண்ட அஞ்சுவான்
நஞ்சியல் அரக்கியர் நடுவண் ஆயிடைச்
சிஞ்சுப வனத்திடைச் சிறைவைத் தான்அரோ 957
*இந்நிலே இனேயவன் செயல் இயம்பினும்
பொன்நிலே மானின்பின் தொடர்ந்து போகிய
மன்நிலே அறிகென மங்கை ஏவிய
பின்னவன் தன்நிலே பேசு வாம்அரோ. 958
ஒருமகள் தனிமையை உன்னி உள்உறும்
பருவரல் மீதிடப் பதைக்கும் நெஞ்சினுன்
பெருமகன் தனேத்தனிப் பிரிந்து பேதுறும்
திருநகர் தீரும்அப் பரதன் செய்கையான் 959

951-ம் பாட்டு : தந்திலர்......சிந்தினர் - விதியானது தரவில்லே...... சிதைத்துவிட்டது. 952-ம் பாட்டு : வெற்றியர் - இராம, இலக்கு வர்கள். சிற்றவை - கைகேயி. 954-ம் பாட்டு: சாபத்தால் - 'பலாத் சாரமாக எந்தப் பெண்ணேயாவது கற்பழித்தால், இறந்துவிடுவாய்' என்று இராவணனுக்குப் பிரமனும் ஒரு சமயம் சாபமிட்டான். 959-ம் பாட்டு : பரதன் செய்கையான் - பரதன் செய்தது போன்ற

இராமனை இலக்குவன் காணுதல

*தெண்திரைக் கலம்என விரைவில் செல்கின்றான்
புண்டரி கத்தடங் காடு பூத்தொரு
கொண்டல்வந்து இழிந்தன்ன கோலத் தான்தனைக்
கண்டனன் மனமெனக் களிக்கும் கண்ணினான். 960

* துன்எனும் அவ்வுரை தொடரத் தோகையும்
பெண்எனும் பேதைமை மயக்கப் பேதினல்
உள்நிறை சோரும்என்று ஊச லாடும்அக்
கண்ணனும் இளவலைக் கண்ணுற் றான் அரோ. 961

வேறு

புன்சொற் கள்தந்த பகுவாய் அரக்கன் உரைபொய் எனாது புலர்வாள்
வன்சொற் கள்தந்து மடமங்கை ஏவ நிலைதேர வந்த மருளோ
தன்சொற் கடந்து தளர்கின்ற நெஞ்சம் உடையேன் மருங்கு தனியே
என்சொற் கடந்து மனமும் தளர்ந்த இளவீரன் வந்த இயல்பே. 962

என்றுன்னி என்னை விதியார் முடிப்ப தெனஎண்ணி நின்ற இறையைப்
பொன்துன்னு விற்கை இளவீரன் வந்து புனைதாள் இறைஞ்சு பொழுதில்
மின்துன்னு நூலின் மணிமார் பழுந்த விரைவோடு புல்லி உருகா
நின்றுன்னி வந்த நிலைஎன்கொல் என்று நெடியோன் விளம்ப நொடிவான். 963

இல்லா நிலத்தின் இசையாத வெஞ்சொல் எழஅஞ்சி ஏவ முறையால்
வல்வாய் அரக்கன் உரையாகும் என்ன மதியாள் மறுக்கம் உறுவாள்
நில்லாது மற்றுஇது அறிபோதி என்ன நெடியோய் புயத்தின் வலிஎன்
சொல்லால் மனத்தின் அடையாள் சினத்தின் முனிவோடு நின்று துவள்வாள்.

ஏகாது நிற்றி எனின்யான் நெருப்பி னிடைவீழ்வென் என்று முடுகா
மாகான கத்தி னிடைஓட லோடும் மனம்அஞ்சி வஞ்ச வினையேன்
போகா திருக்கின் இறவா திருக்கை புணராள் எனக்கொ டுணரா
ஆகாது இறக்கை அறனன்று எனக்கொடு இவண்வந்த தென்ன அமலன்

சாவாது இருத்தல் இலள்ஆனது உற்றது அதையோ தடுக்க முடியாது
ஆஆ அலக்கண் உறுவாள் உரைத்த பொருளோ அகத்தின் அடையா
காவா நிலத்தின் வரும்ஏதம் மற்றுஅது ஒழியாது கைக்கொடு அகலப்
போவார் பிரிக்க முயல்வார் புணர்த்த பொருளாம் இதென்று தெருளா 966

காரியத்தைச் செய்பவன்: இலக்குவன். 961-ம் பாட்டு: அவ்வுரை தொடர - இராமனின் குரலில் மாரீசன் போட்ட கூக்குரல் (காதில் வந்து) எட்டியதும். 962-ம் பாட்டு : தன் சொற்கடந்து - (இது மாயமான் என்று கூறிய இலக்குவனுடைய) சொல்லை மீறி. 965-ம் பாட்டு : வஞ்ச வினையேன் - வஞ்சகமான செயலை உடையவன் என்று சீதையால் கருதப்பட்ட நான் (என்று பொருள் கூறுவர்.) இறவாதிருக்கை புணராள்-சாவாமல் இருப்பதைச் செய்ய மாட்டாள்; நிச்சயம் சாவாள். ஆகாது இறக்கை - இறத்தல் தக்கதன்று. 966-ம் பாட்டு : சாவாது......உற்றது - (இலக்குவன் சீதை கூறிய படி. இராமனைப் பார்க்கப் பர்ணசாலையினின்றும் வராமல் அங்கேயே இருந்திருந்தால் அவள்) சாவாமல் இருப்பது என்பது இல்லை (செத்து

வந்தாய் திறத்தின் உளதன்று குற்றம் மடவாள் மறுக்கம் உறுவாள்
சிந்தா குலத்தொடு உரைசெய்த செய்கை அதுதீரும் என்று தெளிவாய்
முந்தே தடுக்க ஒழியாது எடுத்த வினையேன் முடித்த முடிவால்
அந்தோ கெடுத்தது எனஉன்னி உன்னி அழியாத உள்ளம் அழிவான்.

பாணிக்க நின்று பயனுவது என்னை பயில்பூவை அன்ன குயிலைக்
காணில் கலந்த துயர்தீரும் அன்றி அயல்இல்லை என்று கடுகிச்
சேணுற்று அகன்ற நெறியூடு சென்று சிலைவாளி யன்ன விசைபோய்
ஆணிப் பசும்பொன் அனையாள் இருந்த அவிர்சோலை வல்லை அணுகா.

வேறு

பர்ணசாலையில் சீதையைக் காணுமல் இராமன் திகைத்தல்

*ஓடி வந்தனன் சாலையில் சோலையின் உதவும்
தோடுஇ வர்ந்தபூஞ் சுரிகுழ லாள்தனைக் காணுன்
கூடு தன்னுடை யதுபிரிந்து ஆருயிர் குறியா
நேடி வந்துஅது கண்டில தாம்என நின்ருன். 969

கைத்த சிந்தையன் கனங்குழை அணங்கினைக் காணுது
உய்த்து வாழ்தர வேருெரு பொருள்இலான் உதவ
வைத்த மாநிதி மண்ணொடு மறைந்தன வாங்கிப்
பொய்த்து ளோர்கொளத் திகைத்துநின் ருனையும் போன்ருன். 970

மண்சு ழன்றது மால்வரை சுழன்றது மதியோர்
எண்சு ழன்றது சுழன்றதுஅவ் எறிகடல் ஏழும்
விண்சு ழன்றது வேதமும் சுழன்றது விரிஞ்சன்
கண்சு ழன்றது சுழன்றது கதிரொடு மதியும். 971

அறத்தைச் சீறும்கொல் அருளையே சீறும்கொல் அமரர்
திறத்தைச் சீறும்கொல் முனிவரைச் சீறும்கொல் தீயோர்
மறத்தைச் சீறும்கொல் என்கொலோ முடிவென்று மறையின்
நிறத்தைச் சீறும்கொல் நெடுந்தகை யோன்என நடுங்கா 972

விடுவாள்) என்னும் நிலைமை ஏற்பட்டது. அதையோ...-முடியாது. (சீதை நினைத்தபடி) மரணம் அடைவதைத் தடுப்பது (அவளை விட்டு வந்த செய்கை ஒன்றைத் தவிர வேறு எதனுலும்) முடியாது. உரைத்த......அடையா - இலக்குவன் சொன்ன விஷயம் சீதையின் உள்ளத்தில் புகவில்லை. 967-ம் பாட்டு: மடவாள் மறுக்கம் உறுவாள்-மாயமானை உண்மையான மான் என்று கருதிச் சீதை தடுமாற்றம் அடைய. சிந்தாகுலத் தொடு......கெடுத்தது - நீ (இலக்குவன்) மனக் கவலையோடு கூறிய, (மானைப் பிடிக்கும்) செயலைத் தவிருங்கள் என்று, (மாயமான் எனச் சந்தேகமில்லாமல்) தெளிந்து, முன்னமே (இராமன்) தடுக்கவும், அந்தச்செயலை விட்டொழிக்காமல் கைக்கொண்டு நான் செய்து தீர்த்த தீர்மானத்திஞல், ஐயோ, (அச்செயல் என்னைக்) கெடுத்து விட்டது. - இவ்வாறு பொருள் கூறுவர்; வேறு விதமாகக் கூறுவதும் உண்டு. ஆனுல் அது பொருத்தமாகத் தெரியவில்லை. 968-ம் பாட்டு : பயில்பூவை - (இனிய சொற்களைப்பேசிப்) பழகும் மைனு. அயல் இல்லை - வேறில்லை. 969-ம் பாட்டு: உத

நீல மேனிநல் நெடியவன் மனநிலை திரிய
மூல காரணத் தவனெடு முடிவுற முற்றும்
கால மாம்எனக் கடையிடு கணிக்கரும் பொருள்கள்
மேல கீழுறக் கீழன மேலுறும் வேலை 973

தேரின் ஆழியும் தெரிந்தனம் தீண்டுதல் அஞ்சிப்
பாரி னேடுகொண்டு அகழ்ந்ததும் பார்த்தனம் பயன்இன்று
ஓரும் தன்மைஈது என்என்பது உரன்இலா தவர்போல்
தூரம் போதல்முன் தொடர்தும்என்று இளையவன் சொன்னன். 974

ஆம்அ தேஇனி அமைவதுஎன்று அமலனும் மெய்யில்
தாம வார்கணைப் புட்டிலும் முதலிய தாங்கி
வாம மால்வரை மரன்இவை மடிதர வயவர்
பூமி மேல்அவன் தேர்சென்ற நெடுநெறி போனர். 975

மண்ணின் மேல்அவன் தேர்சென்ற சுவடெலாம் ஆய்ந்து
விண்ணின் ஓங்கியது ஒருநிலை மெய்யுற வெந்த
புண்ணின் ஊடுறு வேலென மனம்மிகப் புழுங்கி
எண்ணி நாம்இனிச் செய்வதென் இளவலே என்ருன். 976

தெற்கு நோக்கியது எனும்பொருள் தெரிந்ததுஇத் திண்தேர்
மற்கு நோக்கிய திரள்புயத் தண்ணலே வானம்
விற்கு நோக்கிய பகழியின் நெடிதன்று விம்மி
நிற்கும் நோக்குஇதுஎன் பயத்ததுஎன்று இளையவன் நேர்ந்தான். 977

ஆகும் அன்னதே கருமம்என்று அத்திசை நோக்கி
ஏகி யோசனை இரண்டுசென் ருர்இடை எதிர்ந்தார்
மாக மால்வரை கால்பொர மறிந்தது மானப்
பாக வீணையின் கொடியொன்று கிடந்தது பார்மேல். 978

கண்டு கண்டக ரோடும்அக் காரிகை பொருட்டால்
அண்ட ராதியர்க்கு ஆர்அமர் விளைந்ததென்று அயிர்த்தார்
துண்ட வாளினில் சுடர்க்கொடி துணிந்ததென்று உணராப்
புண்ட ரீகக்கண் புனல்வரப் புரவலன் புகல்வான். 979

நோக்கி னுல்ஐய நொய்துஇவண் எய்திய நுந்தை
மூக்கி னுல்இது முறிந்தமை முடிந்ததால் மொய்ம்பின்
தாக்கி னன்நடு அடுத்தது தெரிகிலம் தமியன்
யாக்கை தேம்பிடும் எண்ணரும் பருவங்கள் இறந்தான். 980

வும் - (வழக்கமாகக்) காட்சி தரும். கூடு தன்னுடையது...நின்ருன் - உயிரானது தான் தங்கியிருந்த உடம்பை விட்டுப் பிரிந்து சென்று, பின்பு திரும்பவும் அதே உடம்பைத் தேடி வந்து, அதைக் காண முடியாமல் போனதைப்போல இராமன் நின்ருன். இங்கே உடம்பு, சீதை; உயிர், இராமன். 974-ம் பாட்டு : தூரம் போதல் முன் - சீதையைக் கொண்டு போகிறவன் வெகு தூரம் போய் விடுவதற்குமுன்.

நன்று சாலவும் நடுக்கரு மிடுக்கினன் நாமும்
சென்று கூடலாம் பொழுதெலாம் தடுப்பது திடனுல்
வென்று மீட்கினும் மீட்குமால் வேறுற எண்ணி
நின்று தாழ்ந்தொரு பயனிலை என்றலும் நெடியோன் 981

தொடர்வ தேநல மாம்எனப் படிமிசைச் சுற்றிப்
படரும் கால்எனக் கறங்கெனச் செல்லுவார் பார்த்தார்
மிடல்கொள் வெஞ்சிலை விண்ணிடு வில்முறிந் தென்னக்
கடலின் மாடுஉயர் திரைஎனக் கிடந்தது கண்டார். 982

சிலைகி டந்ததால் இலக்குவ தேவர்நீர் கடைந்த
மலைகி டந்தென வலியதே வடிவினன் மதியின்
கலைகி டந்தெனக் காட்சியான் இதுகடித்து ஒடுத்தான்
நிலைகி டந்தவா நோக்கென நோக்கினன் நின்ருன். 983

நின்று பின்னரும் நெடுநெறி கடந்துஉற நிமிரச்
சென்று நோக்கினர் திரிசிகைத் திணிநெடுஞ் சூலம்
ஒன்று பல்கணை மழையுறு புட்டில்ஓர் இரண்டு
குன்று போல்அவண் கிடந்தன குறுகினர் உற்ருர். 984

மறித்தும் சென்றனர் வானிடை வயங்குற வழங்கி
எறிக்கும் சோதிகள் யாவையும் தொக்கன எனலாம்
நெறிக்கொள் கானகம் மறைதர நிருதர்கோன் நெஞ்சில்
பறித்து வீசிய கவசமும் கிடந்தது பார்த்தார். 985

கான்கி டந்தது மறைதரக் கால்வயக் கலிமாத்
தான்கி டந்துழி சாரதி கிடந்துழி சார்ந்தார்
ஊன்கி டந்தொளிர் உதிரமும் கிடந்துளது உலகில்
வான்கி டந்தது போல்பவன் கிடந்துழி வந்தார். 986

கண்டுஅ லங்குதம் கைத்தலம் விதிர்த்தனர் கவின்ஆர்
விண்த லம்துறந்து இறுதியின் விரிகதிர் வெய்யோன்
மண்ட லம்பல மண்ணிடைக் கிடந்துஅன மணியின்
குண்ட லம்பல குலமணிப் பூண்களின் குவியல். 987

தோள்அ ணிக்குலம் பலஉள குண்டலத் தொகுதி
வாள்இ மைப்பன பலஉள மணிமுடி பலவால்
நாள்அ னைத்தையும் கடந்தனன் தமியன்நம் தாதை
யாளி போல்பவர் பலருளர் பொருதனர் இனையோய். 988

திருவின் நாயகன் உரைசெயச் சுமித்திரை சிங்கம்
தருவின் நீளிய தோள்பல தலைபல என்ருல்
பொருது தாதையை இத்தனை நெறிக்கொடு போனுன்
ஒருவ னேஅவன் இராவண னும்என உரைத்தான். 989

981-ம் பாட்டு: சென்று கூடலாம்......திடனுல்-நாம் சடாயுவிடம் போய்ச் சேருவோம்; இன்றைப் பொழுது முழுவதும் இராவணனைச் சடாயு தடுத்து நிறுத்துவது நிச்சயம்.

சடாயுவை இராமன் காணுதல்

*மடல்உள் நாட்டிய தார்இளை யோன்தனை மதியா
மிடல்உன் நாட்டங்கள் தீயுக நோக்கினன் விரைவான்
உடலுள் நாட்டிய குருதியம் பரவையின் உம்பர்க்
கடலுள் நாட்டிய வரையெனத் தாதையைக் கண்டான். 990

*துள்ளி ஓங்குசெந் தாமரைக் கண்கள்நீர் சொரியத்
தள்ளி ஓங்கிய அமலன்தன் தனிஉயிர்த் தந்தை
வள்ளி யோன்திரு மேனியில் தழல்நிற வண்ணன்
வெள்ளி ஓங்கலில் அஞ்சன மலைஎன வீழ்ந்தான். 991

*உயிர்த்தி லன்ஒரு நாழிகை உணர்விலன் கொல்என்று
அயிர்த்த தம்பிபுக்கு அங்கையின் எடுத்தனன் அருவிப்
புயற்க லந்தநீர் தெளித்தலும் புண்டரீ கக்கண்
பெயர்த்துப் பைப்பய அயர்வுதீர்ந்து இனையன பேசும். 992

வேறு

*தம்தா தையரைத் தனயர் கொலைநேர்ந்தார்
முந்தாரே உள்ளார் முடிந்தான் முனைஒருவன்
எந்தாயோ எற்காக நீயும் இறந்தனையோ
அந்தோ வினையேன் அருங்கூற்றம் ஆனேனே. 993

பின்உறுவது ஓராதே பேதுறுவேன் பெண்பாலாள்
தன்உறுவல் தீர்ப்பான் தனிஉறுவது ஓராதே
உன்உறவு நீதீர்த்தாய் ஓர்உறவும் இல்லாதேன்
என்உறுவான் வேண்டி இடர்உறுவேன் எந்தாயே. 994

மாண்டேனே அன்றே மறையோர் குறைமுடிப்பான்
பூண்டேன் விரதம் அதனால் உயிர்பொறுப்பேன்
நீண்டேன் மரம்போல நின்றொழிந்த புன்தொழிலேன்
வேண்டேன்இம் மாமாயப் புன்பிறவி வேண்டேனே. 995

*எனதாரம் பற்றுண்ண ஏன்றாயைச் சான்றோயைக்
கொன்றானும் நின்றான் கொலையுண்டு நீகிடந்தாய்
வன்தாள் சிலைஏந்தி வாளிக் கடல்சுமந்து
நின்றேனும் நின்றேன் நெடுமரம்போல் நின்றேனே. 996

சொல்உடையார் என்போல் இனிஉளரோ தொல்வினையேன்
இல்லுடையாள் காண இறகுடையாய் எண்ணிலாப்
பல்லுடையாய் உன்னைப் படையுடையான் கொன்றகல
வில்லுடையேன் நின்றேன் விறலுடையேன் அல்லேனே. 997

991-ம் பாட்டு: "தள்ளி ஓங்கிய......தனிஉயிர்த்" என்பதற்குப் பதிலாக "பள்ளி நீங்கிய அமலன்தன் பனிநிறத்" என்று இருந்தால் பொருத்தமாக இருக்குமெனத் தோன்றுகிறது. "தள்ளி ஓங்கிய அமரினில் தனி உயிர் தந்த" என்று இருந்தாலும் பொருந்தும்.

*அன்ன பலபலவும் பன்னி அழும்மயங்கும்
தன்நேர் இலாதானும் தம்பியும்அத் தன்மையனாய்
உன்ன உணர்வுசிறிது உள்முளைப்பப் புள்ளரசும்
இன்ன உயிர்ப்பான் இருவரையும் நோக்கினான். 998

*உற்ற துணராது உயிர்உலைய வெய்துயிர்ப்பான்
கொற்றவனைக் கண்டான்தன் உள்ளம் குளிர்ப்புற்றான்
இற்ற இருசிறகும் இன்னுயிரும் ஏழுலகும்
பெற்றனனே யொத்தேன் பெயர்த்தேன் பழிஎன்றான். 999

*பாக்கியத்தால் இன்றென் பயன்இல் பழியாக்கை
போக்குகின்றேன் கண்ணுற்றேன் புண்ணியரே வம்மின்என்று
தாக்கி அரக்கன் மகுடத் தலை துமித்த
மூக்கினால் உச்சி முறைமுறையே மோக்கின்றான். 1000

*வஞ்சனையால் வந்த வரவென்பது என்னுடைய
நெஞ்சகமே முன்னே நினைவித்தது ஆனாலும்
அஞ்சொல் மயிலை அருந்ததியை நீங்கினிரோ
எஞ்சல்இலா ஆற்றல் இருவீரும் என்றுரைத்தான். 1001

வேறு

*என்றவன் இயம்பலும் இளைய கோமகன்
ஒன்றும்ஆண்டு உறுபொருள் ஒழிவுறாவகை
வன்திறல் மாயமான் வந்தது ஆதியாய்
நின்றதும் நிகழ்ந்ததும் நிகழ்த்தி னான்அரோ. 1002

*ஆற்றலோன் அவ்வரை அறைய ஆணையால்
ஏற்றுணர்ந்து எண்ணிஅவ் எருவை வேந்தனும்
மாற்றரும் துயர்அவர் மனக்கொ ளாவகை
தேற்றுதல் நன்றென இனைய செப்புவான். 1003

இராமனைச் சடாயு தேற்றுதல்

*அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தான்
விதிவயம் என்பதை மேற்கொ ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ. 1004

தெரிவுறு துன்பம் வந்து ஊன்றச் சிந்தையை
எரிவுசெய்து ஒழியும்அது இழுதை நீரதால்
பிரிவுசெய்து உலகெலாம் பெறுவிப் பான்தலை
அரிவுசெய் விதியினார்க்கு அரிதுண் டாகுமோ. 1005

1001—ம் பாட்டு: வஞ்சனையால் வந்த வரவு - (மாரீசன் மானாகவும், இராவணன் சந்நியாசியாகவும்) வந்த வருகை. 1005—ம் பாட்டு: பிரிவு செய்து.........அரிதுண்டாகுமோ - உலகங்களை வெவ்வேறாக வகுத்துப் படைக்கின்ற பிரமனுடைய ஐந்து தலைகளில் ஒன்றை அறுக்கும்படி செய்த ஊழ்வினையினால் முடியாத காரியம் இருக்கிறதா? சிவனுக்கும் ஐந்து தலைகள். தன்னைப்

அலக்கணும் இன்பமும் அணுகும் நாள்இவை
விலக்குவம் என்பது மெய்யிற் ருகுமோ
இலக்கமுப் புரங்களை எய்த வில்லியார்
தலைக்கலத்து இரந்தது தவத்தின் பாலதோ. 1006

*பொங்குவெங் கோள்அரா விசும்பு பூத்துஅன
வெங்கதிர்ச் செல்வனை விழுங்கி நீங்குமால்
அங்கண்மா ஞாலத்தை விளக்கும் ஆய்கதிர்த்
திங்களும் ஒருமுறை வளரும் தேயுமால். 1007

அந்தரம் வருதலும் அனைய தீர்தலும்
சுந்தரத் தோளினிர் தொன்மை நீரவால்
மந்திர இமையவர் குருவின் வாய்மொழி
இந்திரன் உற்றன எண்ண ஒண்ணுமோ. 1008

*தடைக்கரும் பெருவலிச் சம்பரப் பெயர்க்
கடைத்தொழில் அவுணனுல் குலிசக் கையினுன்
படைத்தனன் பழிஅது பகழி வில்வலாய்
துடைத்தனன் உந்தைதன் குவவுத் தோளினுல். 1009

வேறு

*பிள்ளைச்சொல் கிளிய ஞளைப் பிரிவுறல் உற்ற பெற்றி
தள்ளுற்ற அறமும் தேவர் துயரமும் தந்த தேயால்
கள்ளப்போர் அரக்கர் என்னும் களையினைக் களைந்து வாழ்தி
புள்ளிற்கும் புலன்இல் பேய்க்கும் தாய்அன்ன புலவு வேலோய். 1010

வடுக்கண்வார் கூந்த லாளை இராவணன் மண்ணி னேடும்
எடுத்தனன் ஏகு வானை எதிர்ந்தெனது ஆற்றல் கொண்டு
தடுத்தனென் ஆவ தெல்லாம் தவத்துஅரன் தந்த வாளால்
படுத்தனன் இங்கு வீழ்ந்தேன் இதுஇன்று பட்ட தென்ருன். 1011

போலவே பிரமனுக்கும் ஐந்து தலைகள் இருப்பதை விரும்பாத சிவன், அவனுடைய ஒரு தலையைக் கிள்ளிவிடவே, பிரமன் நான்முகன் ஆனுன். 1006-ம் பாட்டு: வில்லியார்-சிவன். பிரமனுடைய தலையைக் கிள்ளிய பாவத்துக்காகச் சிவன், பிரமனது மண்டை யோட்டைத் திருவோடாகக் கொண்டு பிச்சை எடுத்து அலைந்தான். 1008-ம் பாட்டு: இமையவர் குரு - பிரகஸ்பதி என்ற வியாழ பகவான். இவன் ஒரு சமயம் இந்திர சபைக்குப் போயிருந்தபோது, இந்திரன் இவனை மதிக்காமல் இருந்தான். அதனுல் பிரகஸ்பதி கோபம் கொண்டு சாபமிட்டான். இந்திரன் பற்பல துன்பங்களை அனுபவித்தான். தேவர்களின் வேண்டுகோளால் பிரகஸ்பதி கோபம் தணிந்து, இந்திரனைக் கொண்டு திருமாலைக் குறித்து அசுவமேத யாகம் செய்வித்தபின், இந்திரன் பழைய நல்ல நிலையை அடைந்தான்.

கூறின மாற்றம் சென்று செவித்துளை குறுகா முன்னம்
ஊறின உதிரம் செங்கண் உயிர்த்தன உயிர்ப்புச் செந்தீ
ஏறின புருவம் மென்மேல் இரிந்தன சுடர்கள் எங்கும்
கீறினது அண்ட கோளம் கிழிந்தன கிரிகள் எல்லாம். 1012

மண்ணகம் திரிய நின்ற மால்வரை திரிய மற்றைக்
கண்ணகன் புனலும் காலும் கதிரொடும் திரியக் காவல்
விண்ணகம் திரிய மேலை விரிஞ்சனும் திரிய வீரன்
எண்ணரும் பொருள்கள் எல்லாம் என்பது தெரிந்த தன்றே. 1013

குறித்தவெங் கோபம் யார்மேல் கொள்ளும் கொல்என்று அஞ்சி
வெறித்துநின்று உலகம் எல்லாம் விம்முறு கின்ற வேலைப்
பொறிப்பிதிர் படலைச் செந்நீப் புகையொடு பொடிப்பப் பொம்மென்று
எறிப்பதோர் முறுவல் தோன்ற இராமனும் இயம்ப லுற்றான். 1014

*பெண்தனி யொருத்தி தன்னைப் பேதைவாள் அரக்கன் பற்றிக்
கொண்டனன் ஏக நீஇக் கோளுறக் குலுங்கல் செல்லா
எண்திசை இறுதி யான உலகங்கள் இவற்றை இன்னே
கண்டவா னவர்க ளோடும் களையும் ஆறு இன்று காண்டி. 1015

தாரகை உதிரும் ஆறும் தனிக்கதிர் பிதிரும் ஆறும்
பேரகல் வானம் எங்கும் பிறங்கெரி பிறக்கும் ஆறும்
நீரொடு நிலனும் காலும் நின்றவும் கிடந்த யாவும்
வேரொடும் அழியும் ஆறும் விண்ணவர் விளியும் ஆறும் 1016

இக்கணம் ஒன்றில் நின்ற ஏழினோடு ஏழு சான்ற
மிக்கன போன்று தோன்றும் உலகங்கள் விளியும் ஆறும்
திக்குடை அண்ட கோளப் புறத்தவும் தீந்து நீரின்
மொக்குளின் உடையும் ஆறும் காண்என முனியும்வேலை 1017

வெஞ்சுடர்க் கடவுள் மீண்டு மேருவில் மறைய லுற்றான்
எஞ்சலில் திசையில் நின்ற யானையும் இரியல் போய
துஞ்சின உலகம் எல்லாம் என்பதென் துணிந்த நெஞ்சின்
அஞ்சினன் இளைய கோவும் அயலுளோர்க்கு அவதி உண்டோ. 1018

இவ்வழி நிகழும் வேலை எருவைகட்கு இறைவன் யாதும்
செவ்வியோய் முனியல் வாழி தேவரும் முனிவர் தாமும்
வெவ்வலி வீர நின்னால் வேறும்என்று ஏமுற்று உய்வார்
எவ்வலி கொண்டு வெல்வார் இராவணன் செயலை என்றான். 1019

நாட்செய்த கமலத் தண்ணல் நல்கிய நவைஇல் ஆற்றல்
தோட்செய்த வீரம் என்னில் கண்டனை சொல்லும் உண்டோ
தாட்செய்த கமலத் தானே முதலினர் தலைபத்து உள்ளாற்கு
ஆட்செய்கின் றார்கள் அன்றி அறம்செய்கின் றார்கள் யாரே. 1020

தெண்திரை உலகம் தன்னில் செறுநர்மாட்டு ஏவல் செய்து
பெண்டிரின் வாழ்வ ரன்றே இதுவன்றோ தேவர் பெற்றி
பண்டுலக ளந்தோன் நல்கப் பாற்கடல் அமுதம் அந்நாள்
உண்டில ராயின் இந்நாள் அன்னவர்க்கு உய்தல் உண்டோ. 1021

*வம்பிழை கொங்கை வஞ்சி வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின் பின்போய்க் குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவில் செங்கை ஐயன்மீர் ஆயும் காலை
உம்பிழை என்ப தல்லால் உலகம்செய் பிழையும் உண்டோ. 1022

ஆதலால் முனிவா யல்லை அருந்ததி அனைய கற்பின்
காதலாள் துயரம் நீக்கித் தேவர்தம் கருத்து முற்றி
வேதநூல் முறையின் யாவும் விதியுளி நிறுவி வேறும்
தீதுள துடைத்தி என்றான் சேவடிக் கமலம் சேர்வான். 1023

புயல்நிற வண்ணன் ஆண்டுஅப் புண்ணியன் புகன்ற சொல்லைத்
தயரதன் பண்இ தென்னச் சிந்தையில் தழுவி நின்றான்
அயல்இனி முனிவ தென்னை அரக்கர்தம் வருக்கம் தீர்க்கும்
செயல்இனிச் செயல்என்று எண்ணிக் கண்ணிய சிற்றம் தீர்ந்தான்.

சடாயு உயிர் நீத்தல்

*ஆயபின் அமலன் தானும் ஐயநீ அமைதி என்ன
வாயிடை மொழிந்த தன்றி மற்றொரு செயலும் உண்டோ
போயதுஅவ் அரக்கன் எங்கே புகல்எனப் புள்ளின் வேந்தன்
ஒய்வினன் உணர்வும் தேய உரைத்திலன் உயிரும் தீர்ந்தான். 1025

சீதங்கொள் மலரு ளோனும் தேவரும் என்ப தென்னே
வேதங்கள் காண்கி லாமை வெளிநின்றே மறையும் வீரன்
பாதங்கள் கண்ணில் பார்த்தான் படிவம்கொள் நெடிய பஞ்ச
பூதங்கள் விளியும் நாளும் போக்கிலா உலகம் புக்கான். 1026

வீடுஅவன் எய்தும் வேலை விரிஞ்சனே முதல மேலோர்
ஆடவர்க்கு அரச னோடு தம்பியும் அழுது சோரக்
காடுஅமர் மரமும் மாவும் கற்களும் கரைந்து சாய்ந்த
சேடரும் பாரு ளோரு கரம்சிரம் சேர்த்தார் அன்றே 1027

அறந்தலை நின்றி லாத அரக்கனின் ஆண்மை தீர்ந்தேன்
துறந்தனென் தவம்செய் கேனோ துறப்பெனோ உயிரைச் சொல்லாய்
பிறந்தனென் பெற்று நின்ற பெற்றியால் பெற்ற தாதை
இறந்தனன் இருந்து ளேன்யான் என்செய்கேன் இளவல் என்றான்.

என்றலும் இளைய கோவும் இராமனை இறைஞ்சி யாண்டும்
வென்றியாய் விதியின் தன்மை பழியல விளைந்த தொன்றோ
நின்றினி நினைவ தென்னை நெருக்கிஅவ் அரக்கர் தம்மைக்
கொன்றபின் அன்றோ வெய்ய கொடுந்துயர் குளிப்ப தென்றான். 1029

எந்தைநீ இயம்பிற்று என்னை எளிமையன் ஆகி ஏழைச்
சந்தவார் குழலி னாளைத் துறந்தனை தனிதி யேனும்
உந்தையை உயிர்கொண் டானை உயிர்உண்ணும் ஊற்றம் இல்லாச்
சிந்தையை ஆகி நின்று செய்வதென் செய்கை என்றான். 1030

அவ்வழி இளவல் கூற அறிவனும் அயர்வு நீங்கி
இவ்வழி இனைய எண்ணின் ஏழைமைப் பால தென்னா
வெவ்வழி பொழியும் கண்ணீர் விலக்கினன் விளிந்த தாதை
செவ்வழி உரிமை யாவும் திருத்துவம் சிறுவ என்றான். 1031

இந்தன மாக வேண்டும் கார்அகில் ஈட்டத் தோடும்
சந்தனம் குவித்து வேண்டும் தருப்பையும் திருத்திப் பூவும்
சிந்தினன் அரணி தன்னால் தீக்கடைந்து இயற்றித் தெண்ணீர்
தந்தனன் தாதை தன்னைத் தடக்கையின் எடுத்துச் சார்வான். 1032

ஏந்தினன் இருகை தன்னால் ஏற்றினன் ஈமந் தன்மேல்
சாந்தொடு மலரும் நீரும் சொரிந்தனன் தலையின் சாரல்
காந்தெரி கனல மூட்டிக் கடன்முறை கடவா வண்ணம்
நேர்ந்தனன் நிரம்பு நல்நூல் மந்திர நெறியின் வல்லான். 1033

கிளித்துஅன களித்த மேனி தாமரைக் கெழுவு செம்பூத்
துளித்தன அனைய என்னத் துள்ளிசோர் வெள்ளக் கண்ணன்
குளித்தனன் கொண்டல் ஆற்றில் குளித்தபின் கொண்ட நன்னீர்
அளித்தனன் அரக்கர்ச் செற்ற சீற்றத்தான் அவலம் தீர்ந்தான். 1034

மீட்டினி உரைப்பது என்னே விரிஞ்சனே முதல மேல்கீழ்
காட்டிய உயிர்கள் எல்லாம் அருந்தின களித்த போலாம்
பூட்டிய கைக ளால்அப் புள்ளினுக்கு அரசைக் கொள்கென்று
ஊட்டிய நன்னீர் ஐயன் உண்டநீர் ஒத்த தன்றே. 1035

பல்வகைத் துறையும் வேதப் பலிக்கடன் பலவும் முற்றி
வெல்வகைக் குமரன் நின்ற வேலையின் வேலை சார்ந்தான்
தொல்வகைக் குலத்தின் வந்தான் துன்பத்தால் புனலும் தோய்ந்து
செல்வகைக் குரிய எல்லாம் செய்குவான் என்ன வெய்யோன். 1036

9. அயோமுகிப் படலம்

[அயோமுகி என்ற அரக்கி இலக்குவனை மந்திர சக்தி யால்மயக்கியதையும், அவன் அவளது மூக்கை அறுத்ததையும் பற்றிக் கூறும் பகுதி.]

அந்திவந் தணுகும் வேலை அவ்வழி அவரும் நீங்கிச்
சிந்துரச் சென்னித்து ஆண்டுஓர் மைவரைச் சேக்கை கொண்டார்
இந்திரற்கு அடங்கல் செல்லா இராக்கதர் எழுந்த தென்ன
வெந்துயர்க் கூற்ற மாய விரியிருள் வீங்கிற்று அன்றே. 1037

தேன்உக அருவி சிந்தித் தெருமரல் உறுவ போலக்
கானமும் மலையு மெல்லாம் கண்ணின்நீர் உகுக்கும் கங்குல்
மானமும் சினமும் தாதை மரணமும் மைந்தர் சிந்தை
ஞானமும் துயரும் தம்முள் மலிந்தன நலிந்த அன்றே. 1038

1032-ம் பாட்டு: தெண்ணீர் தந்தனன் - தெளிந்த நீரினால் சடாயுவின் சடலத்தைக் குளிப்பாட்டி, (என்றும் பொருள் கூறுவர்).

1034-ம் பாட்டு: கொண்ட நன்னீர் அளித்தனன் - தன் கையில் கொண்ட நன்னீரைச் சடாயுவுக்குத் தருப்பணமாகக் கொடுத்தான்.

1035-ம் பாட்டு: சடாயுவுக்கு அளித்த தருப்பண நீரைத் தாமும் உண்டு களித்ததுபோல எல்லா உயிர்களும் மகிழ்ந்தன. ஏனெனில், அந்த நீரானது, இராமனே உட்கொண்ட நீரைப் போன்றதாகும்.

மெய்யுற உணர்வு செல்லா அறிவினை வினையின் ஊக்கும்
பொய்யுறு பிறவி போலப் போக்கரும் பொங்கு கங்குல்
நெய்யுறு நெருப்பின் விங்கி நிமிர்தர உயிர்ப்பு நீளக்
கையறவு உறுகின்று ரால் காணலாம் கரையிற்று அன்றே. 1039

யாம்அது தெரிதல் தேற்றும் இன்நகைச் சனகி என்னும்
காமரு திருவை நீத்தோ முகமதி காண்கி லாதோ
தேமரு தெரியல் வீரன் கண்எனத் தெரிந்த செய்ய
தாமரை கங்குற் போதும் குவிந்திலாத் தன்மை என்னே. 1040

பெண்ணியல் தீபம் அன்ன பேரெழி லாட்டி மாட்டு
நண்ணிய பிரிவு செய்த நவையில்ஆ நவையின் உள்ளத்து
எண்ணியது அறிதல் தேற்றும் இமைத்தில இராமன் என்னும்
புண்ணியன் கண்ணும் வன்தோள் தம்பிகண் போன்ற அன்றே. 1041

வண்டுளர் கோதைச் சீதை வாள்முகம் பொலிய வானில்
கண்டனென் என்று வீரற்கு ஆங்கொரு காதல் காட்டத்
தண்தமிழ்த் தென்றல் என்னும் கோள்அராத் தவழும்சாரல்
விண்தலம் விளக்கும் செவ்வி வெண்மதி விரிந்த தன்றே. 1042

களியுடை அனங்கக் கள்வன் கரந்துறை கங்குற் காலம்
வெளிபடுத்து உலக மெங்கும் விளக்கிய நிலவின் வெள்ளம்
நளிஇருள் பிழம்பென்று ஈண்டு நஞ்சொடு கலந்த நாகத்
துளைஎயிற்று ஊன்றல் உற்ற தாம்எனச் சுட்ட தன்றே. 1043

சீதையை நினைத்து இராமன் வருந்துதல்

இடம்படு மானத் துன்பம் இருள்தர எண்ணின் தீர்ந்தான்
விடம்பரந் தனையது ஆய வெண்ணிலா வெதுப்ப வீரன்
படம்பரந் தனைய அல்குல் பால்பரந் தனைய இன்சொல்
தடம்படு கண்ணி னாள்தன் தனிமையை நினைக்க லுற்றான். 1044

வேறு

மடித்த வாயன் வயங்கும் உயிர்ப்பினன்
துடித்து விங்கி ஒடுங்குறு தோளினன்
பொடித்த தண்தளிர்ப் பூவொடு மால்கரி
ஒடித்த கொம்பனை யாள்திறத்து உன்னுவான். 1045

வாங்கு வில்லன் வரும்வரும் என்றிரு
பாங்கும் நீள்நெறி பார்த்தன னோஎனும்
விங்கும் வேலை விரிதிரை யாமென
ஓங்கி ஓங்கி ஒடுங்கும் உயிர்ப்பினான். 1046

இராமன் உண்டால் உலகின் உயிர்கள் யாவும் உண்டதற்குச் சமான மாகும். அதற்குக் காரணம், உயிர் வர்க்கங்கள் அனைத்தும் அவனுடைய சொருபமாக இருப்பதுதான். 1036-ம் பாட்டு : குலத்தின் வந்தான் - இராமன்; சடாயு என்றும் கூறலாம்.

தன்நி னைந்திலள் என்பது சாலுமோ
மின்நி னைந்த விலங்கும் எயிற்றினன்
நில்நில் என்று நெருங்கிய போதுஅவள்
என்நி னைந்தன ளோஎன எண்ணுமால். 1047

நஞ்சு காலும் நகைநெடு நாகத்தின்
வஞ்ச வாயின் மதியென மட்குவாள்
வெஞ்சி னம்செய் அரக்கர்தம் வெம்மையை
அஞ்சி னன்கொல்என்று ஐயுறு மால்என்பான். 1048

பூண்ட மானமும் போக்கரும் காதலும்
தூண்ட நின்றிடை தோமுறும் ஆருயிர்
மீண்டு மீண்டு வெதுப்ப வெதும்பினன்
வேண்டு மோஎனக்கு இன்னமும் வில்என்பான். 1049

வில்லை நோக்கி நகும்மிக வீங்குதோள்
கல்லை நோக்கி நகும்கடைக் கால்வரும்
சொல்லை நோக்கித் துணுக்குறும் தொல்மறை
எல்லை நோக்கினர் யாவரும் நோக்குவான். 1050

கூதிர் வாடைவெங் கூற்றினை நோக்கினன்
வேத வேள்வி விதிமுறை மேவிய
சீதை என்வயின் தீர்ந்தன ளோஎனும்
போத கம்எனப் பொம்மென் உயிர்ப்பினன். 1051

நின்று பல்லுயிர் காத்தற்கு நேர்ந்தயான்
என்து ணைக்குல மங்கைஓர் ஏந்திழை
தன்து யர்க்கும் தகவிலென் ஆயினேன்
நன்று நன்றென் வலிஎன நாணுமால். 1052

சாயும் தம்பி திருத்திய தண்தளிர்
தீயும் அங்கவை தீர்கெனும் செவ்விருந்து
ஆயும் ஆவி புழுங்க அழுங்குமால்
வாயும் நெஞ்சும் புலர மயங்குவான். 1053

பிரிந்த ஏதுகொல் பேரபி மானம்கொல்
தெரிந்த தில்லை திருமலர்க் கண்இமை
பொருந்த ஆயிரம் கற்பங்கள் போக்குவான்
இருந்து கண்டிலன் கங்குலின் ஈறரோ. 1054

வென்றி வேற்கை இளவலை முன்னெலாம்
ஒன்று போல உலப்பில நாள்கள்தாம்
நின்று காண்டிஅன் றேநெடுங் கங்குல்தான்
இன்று நீள்வதற்கு ஏதுஎன் என்னுமால். 1055

1053-ம் பாட்டு: செவ்விருந்து ஆயும் - இலக்குவன் புதிதாகக் கொண்டு வந்து பரப்பிய செந்நிறமான தளிர்களைக் கூர்ந்து பார்ப்பான்.

நீண்ட மாலை மதியினை நித்தமும்
மீண்டும் மீண்டும் மெலிந்தனை வெள்குவாய்
பூண்ட பூணவள் வாள்முகம் போதர
ஈண்டு சால விளங்கினை என்னுமால். 1056

நீள்நி லாவின் இசைநிறை தன்குலத்து
ஆணி யாய பழிவர அன்னது
நாணி நாடு நடந்தன னும்கொலோ
சேணு லாம்தனித் தேரவன் என்னுமால். 1057

சுட்ட கங்குல் நெடிதெனச் சோர்கின்றான்
முட்ட மைந்த நெடுமுடக் கோனொடு
கட்டி வாளரக் கன்கதி ரோனையும்
இட்ட னன்கொல் இருஞ்சிறை என்னுமால். 1058

துடியின் நேர்இடை தோன்றல ளாம்எனில்
கடிய காரிருள் கங்குலின் கற்பம்போய்
முடியு மாகில் முடியும்இம் மூரிநீர்
நெடிய மாநிலம் என்ன நினைக்குமால். 1059

திறத்துஇ னாதன செய்தவத் தோர்உற
ஒறுத்து ஞாலத்து உயிர்தமை உண்டுஉழல்
மறத்தி னார்கள் வலிந்தனர் வாழ்வரேல்
அறத்தி னால்இனி ஆவதுஎன் என்னுமால். 1060

தேனின் தெய்வத் திருநெடு நாண்சிலைப்
பூநின்று எய்யும் பொருகணை வீரனும்
மேல்நின்று எய்ய விமலனை நோக்கினாள்
தானும் தேர்கில னய்த்தடு மாறுவான். 1061

உழந்த யோகத்து ஒருமுதல் கோபத்தால்
இழந்த மேனியும் எண்ணி இரங்கினான்
கெழுந்த கைக்கொரு வன்மை கிடைக்குமேல்
பழந்து யர்க்குப் பரிவுறும் பான்மையால். 1062

1057-ம் பாட்டு: தேரவன் - சூரியன். *1058-ம் பாட்டு:* முடக் கோன்-முடவனாகிய தலைவன்: அருணன். இவனுக்குத் துடை கிடையாது. இவன் காசிப முனிவனின் புதல்வன்; கருடனுக்குத் தமையன்; சடாயுவுக்குத் தந்தை; சூரியனுக்குத் தேர் ஓட்டுபவன். *1061-ம் பாட்டு:* சிலைப் பூநின்று எய்யும்-வில்லிலிருந்து மலர்களை எய்யும். ''சிலைப்பூ'' என்பதற்கு வேறொரு பொருள் ''மலர்வில்'' என்பதாகும். மன்மததந்திரம் அல்லது காம நூல் எனப்படும் ஒருவகை மலர், மன்மதனுக்கு வில்லாகும் என்ற கற்பனை வட மொழி நூல்களிலும், தமிழ்நூல்களிலும் காணப்படுகிறது என் பதை உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். *1062-ம் பாட்டு:* ஒருமுதல்-சிவன்.

நீல மாய நிறத்தன் நினைப்புடைச்
சூல மாகத் தொலைவுறும் எல்லையில்
மூல மாமலர் முன்னவன் முற்றுறும்
கால மாமெனக் கங்குல் கழிந்ததே. 1063

வேறு

வெள்ளம் சிலம்பு பாற்கடலின் விரும்பும் துயிலை வெறுத்து அளியும்
கள்ளும் சிலம்பும் பூங்கோதை கற்பின் கடலில் படிவாற்குப்
புள்ளும் சிலம்பும் பொழில்சிலம்பும் புனலும் சிலம்பும் புனைகோலம்
உள்ளும் சில்அம்பும் சிலம்பாவேல் உயிர்உண் டாகும் வகையுண்டோ.

மயிலும் பெடையும் உடன்திரிய மானும் கலையும் மருவிவரப்
பயிலும் பிடியும் கடகரியும் வருவ திரிவ பார்க்கின்றான்
குயிலும் கரும்பும் செழுந்தேனும் குழலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதும் சுவைநீத்த மொழியைப் பிரிந்தால் அழியானோ.

முடிநாட் டியகோட்டு உதயத்து முற்ற உற்றான் முதுகங்குல்
விடிநாள் கண்டும் கிளிமிழற்றும் மென்சொல் கேளா வீரற்குஆண்டு
அடிநாள் செந்தா மரைஒதுங்கும் அன்னம் இலளால் யான்அடைத்த
கடிநாள் கமலந்து எனஅவிழ்த்துக் காட்டு வான்போல் கதிர்வெய்யோன். 1066

பொழிலை நோக்கும் பொழில்உறையும் புள்ளை நோக்கும் பூங்கொம்பின்
எழிலை நோக்கும் இளமயிலின் இயலை நோக்கும் இயல்பாளுள்
குழலை நோக்கிக் கொங்கையிணைக் குவட்டை நோக்கி அக்குவட்டின்
தொழிலை நோக்கித் தன்னுடைய தோளை நோக்கி நாள்கழிப்பான்.

அன்ன காலை இளவீரன் அடியின் வணங்கி நெடியோய்அப்
பொன்னை நாடாது ஈண்டுஇருத்தல் பொருளோ என்னப் புகழோனும்
சொன்ன அரக்கன் இருக்கும்இடம் துருவி அறிதும் தொடர்ந்தென்ன
மின்னும் சிலையார் மலைதொடர்ந்த வெயில்வெங் கானம் போயினரால்,

வேறு

ஆசை சுமந்த நெடுங்கரி யன்னார்
பாசிலை துன்று வனம்பல பின்னாக்
காசறு குன்றினெடு ஆறு கடந்தார்
யோசனை ஒன்பதொடு ஒன்பது சென்றார். 1069

இராம இலக்குவர்கள் ஒரு சோலைக்குப் போய்ச் சேருதல்

மட்படி செய்த தவத்தினின் வந்த
கட்படி கோதையை நாடினர் காணார்
உட்படி கோபம் உயிர்ப்பொடு பொங்கப்
புட்படி யும்குளிர் கார்ப்பொழில் புக்கார் 1070

1063-ம் பாட்டு: முன்னவன் முற்றுறும் காலம் - பிரமன் முடிவை அடையும் ஊழிக்காலம். **1064**-ம் பாட்டு : புனைகோலம் - புனைந் துள்ள போர்க்கோலம். **1067**-ம் பாட்டு: பொழில் (இருள் அடர்ந்த சோலை), சீதையின் கூந்தலுக்கும் புள் - (சக்கரவாகப் பறவை), அவ ளுடைய தனங்களுக்கும் பூங்கொம்பு - அவளுடைய தனங்களில் (குங்குமக் குழம்பால்) எழுதப்பட்ட தொய்யிலுக்கும் உவமை.

ஆரியர் சிந்தை அலக்கண் அறிந்தான்
நாரியை எங்கணும் நாடினன் நாடி
பேருல கெங்கும் உழன்றனன் பின்னு
மேருவை வெங்கதிர் மீள மறைந்தான். 1071

அரண்தரு கும்செறி அஞ்சன புஞ்சம்
முரண்டன போல்இருள் எங்கணும் முந்தத்
தெருண்டறி வில்லவர் சிந்தையின் முந்தி
இருண்டன மாதிரம் எட்டும் இரண்டும். 1072

இளிக்குஅறை இன்சொல் இயைந்தன பூவை
கிளிக்குஅறை யும்பொழில் கிஞ்சுக வேலி
ஒளிக்கறை மண்டிலம் ஒத்துள தாங்கோர்
பளிக்கறை கண்டதில் வைகல் பயின்றார். 1073

அவ்விடை எய்திய அண்ணல் இராமன்
வெவ்விடை போல்இள வீரனை வீர
இவ்விடை நாடினை நீர்கொணர் கென்றான்
தெவ்விடை வில்லவ னும்தனி சென்றான். 1074

இலக்குவனைக் கண்டு அயோமுகி மோகித்தல்

எங்கணும் நாடினன் நீர்இடை காணான்
சிங்கம்எ னத்தமி யன்திரி வானை
அங்குஅவ் வனத்துள் அயோமுகி என்பாள்
வெங்கண் அரக்கி விரும்பினள் கண்டாள். 1075

நன்மதி யோர்புகல் மந்திர நாமச்
சொல்மதி யாஅர வில்தொடர் கிற்பாள்
தன்மத னோடுதன் வெம்மை தணிந்தாள்
மன்மத னும்இவன் என்னும் மனத்தாள். 1076

அழுந்திய சிந்தை அரக்கி அலக்கண்
எழுந்துயர் காதலின் வந்தெதிர் நின்றாள்
புழுங்கும்என் நோவொடு புல்லுவென் அன்றி
விழுங்கு வெனோஎன விம்மல் உழன்றாள். 1077

இரந்தனென் எய்திய போதுஇசை யாது
கரந்தன னேல்நனி கொண்டு கடந்தென்
முரஞ்சினில் மேவி முயங்குவென் என்று
விரைந்தெதிர் வந்தனள் தீஎனும் வெய்யாள் 1078

உயிர்ப்பின் நெருப்புமிழ் கின்றனள் ஒன்ற
எயிற்றின் மலைக்குலம் மென்றினி துண்ணும்
வயிற்று வயக்கொடு மாசுணம் வீசு
கயிற்றின் இசைத்த முலைக்குழி கண்ணாள். 1079

பற்றிய கோளரி யாளி பணிக்கண்
தெற்றிய பாத சிலம்பு தரித்தாள்
இற்றுக யாவையும் ஈறுறும் அந்நாள்
முற்றிய ஞாயிறு போலும் முகத்தாள். 1080

ஆழி வறக்க முகக்க அமைந்த
மூழை எனப்பொலி மொய்பில வாயாள்
கூழை புறத்து விரிந்ததொர் கொட்பால்
ஊழி நெருப்பின் உருத்தனை ஒப்பாள். 1081

தடிதட வத்தலை பலதழு வத்தாள்
நெடிதுஅடை யக்குடர் கெழுமும் நிணத்துஊண்
படிதட வப்பல பாவம் இசைக்கும்
கடிதட வத்தினள் உருமு கறிப்பாள். 1082

இவைஇறை ஒப்பன என்ன விழிப்பாள்
அவைகுளி ரக்கடிது அழலும் எயிற்றாள்
குவைகுலை யக்கடல் குவிய அலைப்பாள்
நவைஇல் புவித்திரு நாண நடப்பாள். 1083

நீள்அர வச்சரி தாழ்கை நிரைத்தாள்
ஆள்அர வப்புலி ஆரம் அணைத்தாள்
யாளியி னைப்பல தாலி இசைத்தாள்
கோளரி யைக்கொடு தாழ்குழை இட்டாள். 1084

நின்றனள் ஆசையின் நீர்கலு ழும்கண்
குன்றி நிகர்ப்பக் குளிர்ப்ப விழிப்பாள்
மின்திரி கின்ற எயிற்றின் விளக்கால்
கன்றிரு ளில்திரி கோளரி கண்டான். 1085

பண்டையில் நாசி இழந்து பதைக்கும்
திண்திற லாளொடு தாடகை சீராள்
கண்டக ராய அரக்கர் கணத்தோர்
ஒண்தொடி யாம்இவள் என்ப துணர்ந்தான். 1086

பாவிய ராம்இவர் பண்பிலர் நம்பால்
மேவிய காரணம் வேறிலை என்பான்
மாவியல் கானின் வயங்கிருள் வந்தாய்
யாவள் அடீஉரை செய்கடி தென்றான். 1087

பேசினன் அங்கவள் பேசுற நாணாள்
ஊசல் உழன்றுஅழி சிந்தைய ளும்தான்
நேசம்இல் அன்பின ளாயினும் நின்பால்
ஆசையின் வந்த அயோமுகி என்றாள். 1088

பின்னும் உரைப்பவள் பேரெழில் வீரா
முன்னம் ஒருத்தர் தொடாமுலை யோடும்
பொன்னின் மணித்தட மார்பு புணர்ந்தென்
இன்னுயி ரைக்கடிது ஈகுதி என்றாள். 1089

1087-ம் பாட்டு: வேறிலை - காம இச்சையைத் தவிர வேறில்லை.

ஆறிய சிந்தையள் அஃதுரை செய்யச்
சீறிய கோளரி கண்கள் சிவந்தான்
மாறில வார்கனை இவ்வுரை வாயின்
கூறிடின் நின்னுடல் கூறிடும் என்றான். 1090

மற்றவள் அவ்வுரை செப்ப மனத்தால்
செற்றிலள் கைத்துணை சென்னியின் வைத்தாள்
கொற்றவ நீஎனை வந்துயிர் கொள்ளப்
பெற்றிடின் இன்று பிறந்தனென் என்றாள். 1091

வெங்கதம் இல்லவள் பின்னரும் மேலாய்
இங்கு நறும்புனல் நாடுதி என்னின்
அங்கையி னுள்ளனை அஞ்சலை என்றால்
கங்கையின் நீர்கொணர் வென்கடி தென்றாள். 1092

சுமித்திரை சேய்அவள் சொன்ன சொல்அன்ன
கமித்திலன் நின்இரு காதொடு நாசி
துமிப்பதன் முன்அகல் என்பது சொல்ல
இமைத்திலள் நின்றனள் இன்ன நினைந்தாள். 1093

எடுத்தனென் ஏகினென் என்முழை தன்னுள்
அடைத்திவன் வெம்மை அகற்றிய பின்னை
உடற்படு மால்உட னேஉறும் நன்மை
திடத்திது வேநலன் என்றுஅயல் சென்றாள். 1094

அயோமுகி இலக்குவனைத் தூக்கிக்கொண்டு செல்லுதல்

மோகனை என்பது முந்தி முயன்றாள்
மாக நெடுங்கிரி போலியை:வவ்வா
ஏகினள் உம்பரின் இந்துவொடு ஏகும்
மேகம் எனும்படி நொய்தினில் வெய்யாள். 1095

மந்தரம் வேலையில் வந்ததும் வானத்து
இந்திரன் ஊர்பிடி என்னலும் ஆனாள்
வெந்திறல் வேல்கொடு சூர்அடும் வீரச்
சுந்தரன் ஊர்தரு தோகையும் ஒத்தாள். 1096

ஆங்குஅவள் மார்பொடு கையின் அடங்கிப்
பூங்கழல் வார்சிலை மீளி பொலிந்தான்
வீங்கிய வெஞ்சின வீழ்மத வெம்போர்
ஓங்கல் உரிக்கும் உருத்திரன் ஒத்தான். 1097

இப்படி ஏகினள் அன்னவள் இப்பால்
அப்புஇடை தேடி நடந்தனன் ஆவித்
துப்புடை மால்வரை தோன்றலன் என்ன
வெப்புடை மெய்யுடை வீரன் விரைந்தான். 1098

வேறு

இலக்குவன் வராததைக் கண்டு இராமன் வருந்துதல்

வெய்தாகிய கானிடை மேவருநீர்
ஐதுஆதலி ஞேஅயல் ஒன்றுளதோ
நொய்தாய்வர வேகமும் நொய்திலனுல்
எய்தாதொழி யான்இது என்னை கொலாம். 1099

நீர்கண்டனை இவ்வழி நேடினைபோய்ச்
சார்கொண்டென இத்துணை சார்கிலனுல்
வார்கொண்டணி கொங்கையை வவ்வினர்பால்
போர்கொண்டன ஞேபொருள் உண்டிதெனு. 1100

அஞ்சொல்கிளி அன்ன அணங்கினைமுன்
வஞ்சித்த இராவணன் வவ்வினஞே
நஞ்சில்கொடி யான்நட லைத்தொழிலால்
துஞ்சுற்றன ஞேவிதி யின்துணிவால். 1101

வரிவில்கைஎன் ஆருயிர் வந்திலனுல்
தருசொல்கரு தேன்ஒரு தையலையான்
பிரிவுற்றனென் என்பதொர் பீழைபெருத்து
எரிவுற்றிட ஆவி இழந்தனஞே. 1102

உண்டாகிய காரிரு ளோடுஒருவுஎன்
கண்தான்அயல் வேறெரு கண்ணிலனுல்
புண்தான்உறு நெஞ்சுபு முங்குறுவேன்
எண்தான்இலென் எங்ஙனம் நாடுகெனே. 1103

தள்ளாவினை யேன்தனி ஆருயிரை
உள்ளாய்ஒரு நீயும் ஒளித்தனையோ
பிள்ளாய்பெரி யாய்பிழை செய்தனையால்
கொள்ளாஉலகு உன்னைஇ தோகொடிதே. 1104

பேராஇடர் வந்தன பேர்க்கவலாய்
தீராஇடர் தந்தனை தெவ்வர்தொழும்
வீராஎனை இங்ஙன் வெறுத்தனையோ
வாராய்புறம் இத்துணை வைகுதியோ. 1105

என்னைத்தரும் எந்தையை என்னையரைப்
பொன்னைப்பொரு கின்ற பொலங்குழையாள்
தன்னைப்பிரி வேன்உளென் ஆவதுதான்
உன்னைப்பிரி யாத உயிர்ப்பலவோ. 1106

1104-ம் பாட்டு: பிழை செய்தனை - (என்னைக் காட்டில் தனியே தவிக்கவிட்டுச் சென்றதால்) நீ தவறு செய்தாய். துயரமிகுதியால் இவ்வாறு அன்புக்குரியவர்களையும் குற்றஞ்சாட்டுவது வழக்கம்.

பொற்ருேடுஇவர் கின்ற பொலங்குழையாள்
தற்றேடி வருந்து தவம்புரிவேன்
நிற்றேடி வருந்த நிரப்பினையோ
எற்றேடினை வந்த இளங்களிறே. 1107

இன்றேஇற வாதொழி யேன்எமரோ
பொன்ருதொழி யார்புகல் வார்உளரோ
ஒன்ருகிய உன்கிளை யோரையெலாம்
கொன்ருய்கொடி யாய்இது வும்குணமோ. 1108

மாந்தாமுதல் மன்னவர் தம்வழியில்
வேந்துஆகை துறந்தபின் மெய்உறவோர்
தாம்தாம்ஒழி யத்தமி யேனுடனே
போந்தாய்எனை விட்டனை போயினையோ. 1109

என்ருஉரை யாளமும் விழும்இருந்து
உன்ருஉணர் வோய்வுறும் ஒன்றலவால்
மின்ருதுஇடி யாதுஇருள் வாய்விளைவுஈது
என்ருஎனும் என்தனி நாயகனே. 1110

நாடும்பல சூழல்கள் தோறும்நடந்து
ஓடும்பெயர் சொல்லி உளைந்துயிர்போய்
வாடும்வகை சோரும் மயங்குறுமால்
ஆடும்களி மாமத யானைஅனுன். 1111

கமையாளொடும் என்உயிர் காவலில்நின்று
இமையாதவன் இத்துணை தாழ்வுறுமோ
சுமையாஉலகு ஊடுழல் தொல்வினையேன்
அமையாதுகொல் வாழ்வுஅறி யேன்எனுமால். 1112

அறப்பால்உள தேல்அவன் முன்னவனுய்ப்
பிறப்பால்உறின் வந்து பிறக்களுை
மறப்பால்வடி வாள்கொடு மன்னுயிரைத்
துறப்பானுறு கின்ற தொடர்ச்சியின்வாய். 1113

அயோமுகியின் மூக்கை இலக்குவன் அறுத்தல்

போந்தான்நெடு மாயையி னில்பிரியா
ஈர்ந்தான்அவள் நாசி பிடித்திளையோன்
சோர்ந்தாள்இடு பூசல் செவித்தொளையில்
சேர்ந்தார்தலு மேதிரு மால்தெருளா 1114

1107-ம் பாட்டு: பொற்ருேடு - பொன்தோடு. தற்றேடி - தன்னைத் தேடி. நிற்றேடி - நின்னைத் தேடி. எற்றேடினை - என்னைத் தேடினை; மாயமானின் பின் போன இராமனைத்தேடி இலக்குவன் சென்ருன். *1109-ம் பாட்டு:* மாந்தா-மாந்தாதா என்ற சூரியகுல மன்னன். *1114-ம் பாட்டு:* திருமால் - இராமன்.

வேறு

பரல்தரு கானத்து அரக்கர் பல்கழல்
முரற்றுஅரு வெஞ்சமம் முயல்கின் றூர்எதிர்
உரற்றிய ஓசையன்று ஒருத்தி ஊறுபட்டு
அரற்றிய குரல்அவள் அரக்கி யேகொலாம். 1115

அங்கியின் நெடும்படை வாங்கி அங்குஅது
செங்கையில் கரியவன் திரிக்கும் எல்லையில்
பொங்கிருள் அப்புறத் துலகம் புக்கது
கங்குலும் பகலெனப் பொலிந்து காட்டிற்றே. 1116

நெடுவரை பொடிபட நிவந்த மாமரம்
ஒடிவுற நிலமகள் உலைய ஊங்கெலாம்
சடசட எனும்ஒலி தழைப்பத் தாக்குமா
முடுகினன் இராமன்வெங் காலின் மும்மையான். 1117

இராமனிடம் இலக்குவன் வருதல்

ஒருங்குயர்ந்து உலகின்மேல் ஊழிப் பேர்ச்சியுள்
கருங்கடல் வருவதே அனைய காட்சியான்
பெருந்துணைத் தம்முனை நோக்கிப் பின்னவன்
வருந்தலை வருந்தலை வள்ளி யோய்எனா 1118

வந்தனென் அடியனேன் வருந்தல் வாழிநின்
அந்தம்இல் உள்ளம்என்று அறியக் கூறுவான்
சந்தமென் தளிர்புரை சரணம் சார்ந்தனன்
சிந்தின நயனம்வந் தனைய செய்கையான். 1119

ஊற்றுறு கண்ணின்நீர் ஒழுக நின்றவன்
ஏற்றிளங் கன்றினைப் பிரிவுற்று எங்கணும்
ஆற்றலின் ஆற்றுவது அரிதின் எய்திய
பாற்றுஇளம் பால்முலை ஆவின் பான்மையான். 1120

தழுவினன் பன்முறை தாரைக் கண்ணின்நீர்
கழுவினன் ஆண்டுஅவன் கனக மேனியை
வழுவினை யாமென மனக்கொடு ஏங்கினேன்
எழுவென மலையென இயைந்த தோளினாய். 1121

என்னைஅங்கு எய்தியது இயம்பு வாய்என
அன்னவன் அஃதெலாம் அறியக் கூறலும்
இன்னலும் உவகையும் இரண்டும் எய்தினான்
தன்அலது ஒருபொருள் தனக்கு மேல்இலான். 1122

ஆய்வுறு பெருங்கட லகத்துள் ஏயவன்
பாய்திரை வருதொறும் பரிதற் பாலனே
தீவினைப் பிறவிவெஞ் சிறையில் பட்டயாம்
நோயுறு துயரென நுடங்கல் நோன்மையோ. 1123

மூவகை அமரரும் உலகம் மும்மையும்
மேவரும் பகைஎனக் காக மேல்வரின்
ஏவரே கடப்பவர் எம்பி நீஉனை
ஆவதே வலிஇனி அரணும் வேண்டுமோ. 1124

பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழல்
செருவலி விரநிற் றிரும் அல்லது
பருவரல் என்வயின் பயிலற் பாலதோ. 1125

வன்திறல் விரபோர் வலிஅ ரக்கியை
வென்றுபின் மீண்டனென் எனவி ளம்பினுய்
புன்தொழில் அனையவள் புகன்ற சிற்றத்தால்
கொன்றிலை போலுமால் கூறு வாய்என்ருன். 1126

துனைபடு மூக்கொடு செவிது மித்துகத்
தனைவயின் நகிலொடு கடிந்து நீக்கிய
அளவையின் பூசலிட்டு அரற்றி ஞள்என
இளையவன் விளம்பிநின்று இருகை கூப்பினுன். 1127

தொல்இருள் தனில்கொலத் தொடர்கின் ருளையும்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினுய்
வல்லைநீ மனுமுதல் மரபி னேய்எனப்
புல்லினன் உவகையில் பொருமி விம்முவான். 1128

பேரரும் துயர்அறப் பேர்ந்து ளோர்என
வீரனும் தம்பியும் விடிவு நோக்குவார்
வாருணம் நினைந்தனர் வான நீர்உண்டு
தாரணித்து அங்கொரு கிரியில் தங்கினுர். 1129

கல்அகல் வெள்ளிடைக் கான கத்துள
பல்லவ மலர்க்கொடு படுத்த பாயலின்
எல்லைஇல் துய ரினேடு இருந்து சாய்ந்தனன்
மெல்அடி இளையவன் வருட வீரனே. 1130

சீதையின் பிரிவால் இராமன் துன்புறுதல்

மயில்இயல் பிரிந்தபின் மான நோயினுல்
அயில்விலன் ஒருபொருள் அவலம் எய்தலால்
துயில்விவன் என்பது சொல்லற் பாலதோ
உயிர்நெடிது உயிர்ப்பிடை ஊச லாடுவான். 1131

மானவள் மெய்இறை மறக்க லாமையின்
ஆனதோ அன்றெனின் அரக்கர் மாயமோ
கானகம் முழுவதும் கண்ணின் நோக்குங்கால்
சானகி உருவெனத் தோன்றும் தன்மையே. 1132

கருங்குழல் சேயரிக் கண்ணி கற்பிஞேர்க்கு
அருங்கலம் மருங்குவந் திருப்ப ஆசையால்
ஒருங்குறத் தழுவுவான் ஊறு காண்கிலேன்
மருங்குல்போல் ஆனதோ வடிவு மெல்லவே. 1133

புண்டரி கப்புது மலரில் தேன்பொதி
தொண்டையஞ் சேயொளித் துவர்த்த வாய்அமுது
உண்டனென் ஈண்டுஅவள் உழையள் அல்லளால்
கண்துயில் அன்றியும் கனவுண் டாகுமோ. 1134

மண்ணினும் வானினும் மற்றை மூன்றினும்
எண்ணினும் பெரியதோர் இடர்வந்து எய்தினல்
தண்நறும் கருங்குழற் சனகன் மாமகள்
கண்ணினும் நெடியதோ கொடிய கங்குலே. 1135

அப்புடை அலங்குமீன் அமரும் ஆர்கலி
உப்புடை இந்துஎன்று உதித்த ஊழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்ப மெய்யெலாம்
கொப்புளம் பொடித்ததோ கொதிக்கும் வானமே. 1136

இன்னன இன்னன பன்னி ஈடழி
மன்னவர் மன்னவன் மதிம யங்கிஞன்
அன்னது கண்டனன் அல்கி ஞன்எனத்
துன்னிய செங்கதிர்ச் செல்வன் தோன்றிஞன். 1137

10. கவந்தன் படலம்

[கவந்தன் என்பவன் இராம இலக்குவர்களால் வெட்டப்பட்டுச் சாபம் நீங்கியதுபற்றிக் கூறும் பகுதி]

நிலம்பொறை இலதென நிமிர்ந்த கற்பிஞள்
நலம்பொறை கூர்தரும் மயிலே நாடியே
அலம்புறு பறவையும் அழுவ வாவம்என
புலம்புறு விடியலில் கடிது போயிஞர். 1138

வேறு

ஐயைந்து அடுத்த யோசனையின் இரட்டி அடவி புடைபடுத்த
வையம் திரிந்தார் கதிரவனும் வானின் நாப்பண் வந்துற்ருன்
எய்யும் சிலேக்கை இருவரும்சென்று இருந்தே நீட்டி எவ்வுயிரும்
கையின் வளைத்து வயிற்றடக்கும் கவந்தன் வனத்தின் கண்உற்ருர்.

1133-ம் பாட்டு: மருங்கு வந்திருப்ப - உருவெளித்தோற்றத்தில் காணும் சீதை அருகில் வந்து இருக்க. *1135-ம் பாட்டு:* மண்ணினும்........மூன்றினும் - நிலத்தையும், ஆகாயத்தையும், மற்றப் பூதங்களான தண்ணீர், தீ, காற்று ஆகியவற்றையும் விட. *1139-ம் பாட்டு:* ஐயைந்து அடுத்த யோசனையின் இரட்டி - 50 யோசனை தூரம்: சுமார் 200 மைல்.

வேறு

எறுப்பினம் கடையுற யானை யேமுதல்
உறுப்புடை உயிரெலாம் உலைந்து சாய்ந்தன
வெறிப்புறு நோக்கின வெருவு கின்றன
பறிப்பரு வலையிடைப் பட்ட பான்மைய. 1140

மரபுளி நிறுத்திலன் புரக்கும் மாண்பிலன்
உரன்இலன் ஒருவன்நாட்டு உயிர்கள் போல்வன
வெருவுவ சிந்துவ குவிவ விம்மலோடு
இரிவன மயங்குவ இயல்பு நோக்கினர். 1141

மால்வரை உருண்டன வருவ மாமரம்
கால்பறிந் திடுவன கான யாறுகள்
மேல்உள திசையொடு வெளிக ரப்பன
சூல்முதிர் மேகங்கள் சுருண்டு விழ்வன. 1142

கவந்தன் கைகளில் இராம இலக்குவர்கள் அகப்படுதல்

நாற்றிசைப் பரவையும் இறுதி நாள்உறக்
காற்றிசைத்து எழுஎழுந்து உலகைக் கால்பரந்து
ஏற்றுஇசைத் துரந்துவந்து இடுங்கு கின்றன
போல்திசை சுற்றிய கரத்துப் புக்குளார். 1143

தேமொழி திறத்தினல் அரக்கன் சேனைவந்து
ஏமுற வளைந்ததென்று உவகை எய்தினர்
நேமிமால் வரைவர நெருக்கு கின்றதே-
யாம்என லாயகைம் மதிட்குள் ஆயினர். 1144

இளவலை நோக்கினன் இராமன் ஏழையை
உளைவுசெய் இராவணன் உறையும் ஊரும்இவ்
அளவையது ஆகுதல் அறிதி ஐயநம்
கிளர்பெருந் துயரமும் கீண்ட தாம்என்ருன். 1145

முற்றிய அரக்கர்தம் முழங்கு தானையேல்
எற்றிய முரசொலி எங்கும் சங்கொலி
பெற்றில தாகலின் பிறதொன் ருெம்எனச்
சொற்றனன் இளையவன் தொழுது முன்நின்ருன். 1146

தெள்ளிய அமுதெழத் தேவர் வாங்கிய
வெள்எயிற்று அரவந்தான் வேருெர் நாகந்தான்
தள்ளரு வாலொடு தலையி ருல்வளைத்து
உள்ளுறக் கவர்வதே ஒக்கும் ஊழியாய். 1147

என்றிவை விளம்பிய இளவல் வாசகம்
நன்றென நினைந்தனன் நடந்த நாயகன்
ஒன்றிரண்டு யோசனை உள்புக்கு ஒங்கல்தான்
நின்றென இருந்தஅக் கவந்தன் நேர்சென்ருர். 1148

1144-ம் பாட்டு : தேமொழி - சீதை. அரக்கன் - இராவணன்.
1147-ம் பாட்டு : வெள்எயிற்று அரவம் - வாசுகி என்ற பாம்பு.

கவந்தனுடைய தோற்றம்

வெயிற்சுடர் இரண்டினை மேரு மால்வரை
குயிற்றிய வாம்எனக் கொதிக்கும் கண்ணினன்
எயிற்றினுக்கு இடைஇரு காதம் ஈண்டிய
வயிற்றிடை வாய்எனும் மகர வேலையான். 1149

ஈண்டிய புலவரோடு அவுணர் இந்துவைத்
தீண்டிய நெடுவரை தெய்வ மத்தினை
பூண்டுயர் வடம்இரு புடையும் வாங்கலின்
நீண்டெனக் கிடந்தன நிமிர்ந்த கையினன். 1150

தொகைக்கனல் கருமகன் துருத்தித் தூம்பென
புகைக்கொடி கனலொடு பொடிக்கும் மூக்கினன்
பகைத்தகை நெடுங்கடல் பருகும் பாவகன்
சிகைக்கொழுந் தெனஎதிர் தெரியும் நாவினன். 1151

புரண்டுபாம் பிடைவர வெருவிப் புக்குறை
அரண்தனை நாடிஓர் அருவி மால்வரை
முரண்தொகு முழைநுழை முழுவெண் திங்களை
இரண்டுகூறு இட்டென இலங்குஎ யிற்றினன். 1152

ஓதநீர் மண்இவை முதல ஓதிய
பூதம்ஓர் ஐந்தினில் பொருந்திற் றன்றியே
வேதநூல் வரன்முறை விதிக்கும் ஐம்பெரும்
பாதகம் திரண்டுயிர் படைத்த பண்பினன். 1153

வெய்யவெங் கதிர்களை விழுங்கும் வெவ்அரா
செய்தொழில் இலைதுயில் செவியின் தொள்ளையான்
பொய்கிளர் வன்மையின் புரியும் புன்மையோர்
வைகுறும் நரகையும் நகும் வயிற்றினன். 1154

முற்றிய உயிரெலாம் முருங்க வாரித்தான்
பற்றிய கரத்தினன் பணைத்த பண்ணையில்
துற்றிய புகுதரும் தோற்றத் தால்யமன்
கொற்றவாய் தல்செயல் குறித்த வாயினன். 1155

1149-ம் பாட்டு : வயிற்றிடை வாய் - கவந்தனுடைய வாய் வயிற்றில் இருக்கிறது. அவனுடைய தலை முழுவதுமே வயிற்றுக்குள் இருந்ததால், அவன் தலையற்ற முண்டம்போலத் தோற்றம் அளித்தான். இக்காரணம் பற்றியே அவனுக்குக் கவந்தன் என்ற பெயரும் உண்டாயிற்று. *1150-ம் பாட்டு :* தெய்வ மத்து - பாற்கடலைக் கடைந்த மந்தரமலை. *1153-ம் பாட்டு :* ஐம்பெரும் பாதகம்- பஞ்சமாபாதங்கள் : மற்றவனுடைய மனைவியை இச்சித்தல், சூதாடுதல், கள் குடித்தல், பொய் சொல்லுதல், கொடுப்பதைத் தடுத்தல் என்றும், வேறொரு விதமாக, பொய், கொலை, களவு, குடி, பிறர் மனைவியை விரும்புதல் என்றும் கூறுவர்.

ஓலம்ஆர் கடல்என முழங்கும் ஓதையான்
ஆலமே எனஇருண்டு அழன்ற ஆக்கையான்
நீலமால் நேமியின் தலையை நீக்கிய
காலநே மியில்பெருங் கவந்தக் காட்சியான். 1156

தாக்கிய தணப்பில்கால் எறியத் தன்னுடை
மேக்குயர் கொடுமுடி இழந்த மேருநேர்
ஆக்கையின் இருந்தவன் தன்னை அவ்வழி
நோக்கினர் இருவரும் நுணங்கு கேள்வியார். 1157

நீர்புகு நெடுங்கடல் அடங்கு நேமிசூழ்
பார்புகு நெடும்பகு வாயைப் பார்த்தனர்
சூர்புக அரியதோர் அரக்கர் தொல்மதில்
ஊர்புகு வாயிலோ இதுஎன்று உன்னினர். 1158

அவ்வழி இளையவன் அமர்ந்து நோக்கியே
எவ்விய தொருபெரும் பூதம் வில்வலாய்
வவ்விய தன்கையின் வளைத்து வாய்ப்பெயும்
செய்வதென் இவண்எனச் செம்மல் சொல்லுவான். 1159

பாரிட மேஇது பரவை சுற்றுறும்
பார்இடம் அரிதுஎனப் பரந்த மெய்யது
பார்இடம் வலம்வரப் பரந்த கையது
பார்இடந்து எடுத்தமா அனைய பாழியாய். 1160

தோகையும் பிரிந்தனள் எந்தை துஞ்சினன்
வேகவெம் பழிசுமந்து உழல வேண்டலேன்
ஆகலின் யான்இனி இதனுக்கு ஆம்இடம்
ஏகுதி ஈண்டுநின்று இளவ லேஎன்றான். 1161

ஈன்றவர் இடர்பட எம்பி துன்புறச்
சான்றவர் துயருறப் பழிக்குச் சார்வுமாய்
தோன்றலின் என்உயிர் துறந்த போதலால்
ஊன்றிய பெரும்பழி துடைக்க ஒண்ணுமோ. 1162

1156-ம் பாட்டு: காலநேமி - இந்த அரக்கன், இரணியனுடைய மகன். திருமாலை எதிர்த்து இவன் போர் செய்தபோது, அந்த மூர்த்தியாலும், கருடனாலும் கொல்லப்பட்டான். 1157-ம் பாட்டு: கொடுமுடி இழந்த மேரு - ஒரு சமயம் வாயுபகவானும், ஆதிசேஷனும் தமக்குள் யார் பலசாலி என்பதை அறியத் தீர்மானித்தனர். மேருமலையின் ஆயிரம் சிகரங்களையும் ஆதிசேஷன் தன் ஆயிரம் படங்களால் மறைத்துக் காத்தும், வாயு தன் பலத்தால் மூன்று சிகரங்களைப் பெயர்த்துத் தென்திசையில் தள்ளிவிட்டான். 1160-ம் பாட்டு: (அடிகளின் கிரமப்படி இதன் பொருள்): இது பூதந் தான். கடல் சூழ்ந்த உலகத்தின் இடம் முழுவதும் போதாது என்று சொல்லத்தகும் பரந்த உடம்பைக் கொண்டது இந்தப் பூதம். பார்! இடப்புறமும் வலப்புறமும் உலகைச் சுற்றிவரும்

இல்இயல்பு உடையநீர் அளித்த இன்சொலாம்
வல்லிஅவ் அரக்கர்தம் மனையு ளாள்எனச்
சொல்லிநன் மலையெனச் சுமந்த தூணியன்
வில்லினென் செல்வெனே மிதிலை வேந்தன்பால். 1163

தளையவிழ் கோதையைத் தாங்கல் ஆற்றலன்
இளைபுரிந்து அளித்தல்மேல் இவர்ந்த காதலன்
உளன்என உரைத்தலின் உம்ப ரான்என
விளைதல்நன்று ஆதலின் விளிதல் நன்றென்றான். 1164

வேறு

ஆண்டான் இன்னன பன்னிட ஐயற்கு இளவீரன்
ஈண்டுயான் உன்பின் ஏகிய பின்இவ் இடர்வந்து
மூண்டால் முன்னே ஆருயி ரோடு முடியாதே
மீண்டே போதற் காம்எனில் நன்றென் வினைஎன்றான். 1165

என்றான் என்னாப் பின்னும் இசைப்பான் இடர்தன்னை
வென்றா ரன்றே வீரர்க ளாவார் விரவாரின்
தன்தாய் தந்தை தம்முன் எனும்தன் மையர்முன்னே
பொன்றான் என்றால் நீங்குவ தன்றே புகழ்அம்மா. 1166

மானே யன்னாள் தன்னொடு தம்முன் வரையாரும்
கானே வைகக் கண்துயில் கொள்ளாது அயல்காத்தற்கு
ஆனான் என்னே என்றவர் முன்னே அவரின்றித்
தானே வந்தான் என்றலின் வேறோர் தவறுண்டோ. 1167

என்றாய் உன்முன் ஏவிய யாவும் இசைஇன்னல்
பின்றாது எய்திப் பேரிசை யாளற்கு அழிவுண்டேல்
பொன்றா முன்னம் பொன்றுதி என்றாள் உரைபொய்யா
நின்றால் அன்றே நிற்பது வாய்மை நிலைஅம்மா. 1168

எற்பெற் றாளும் யானும் எனைத்தோர் வகையாலும்
நிற்பெற் றாட்கும் நிற்கும் நினைப்புப் பிழையாமல்
நற்பொற் றோளாய் நல்லவர் பேண நனிநிற்கும்
சொற்பெற் றால்மற்று ஆருயிர் பேணித் துறவேமால். 1169

ஓதும் கால்அப் பல்பொருள் முற்றுற்று ஒருவாத
வேதம் சொல்லும் தேவரும் வீயும் கடைவீயாய்
மாதங் கம்தின்று உய்ந்துஇவ் வனத்தின் தலைவாழும்
பூதம் கொல்லப் பொன்றுதி போலும் பொருளுண்டோ. 1170

நீண்ட கைகளைக் கொண்டதாகவும் இருக்கிறது. உலகத்தைத் தன் கொம்பால் குத்தி எடுத்த வராகமூர்த்தியைப் போன்ற பலம் உடையவனே! (பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலில் மூழ்கிய இரணியாக்கன் என்பவனைத் திருமால் வராகமூர்த்தியாய் அவதரித்துக் கொன்று, உலகத்தைக் கொம்பில் குத்திக்கொண்டு வந்து பழையபடியும் விரித்தான்.) *1168–ம் பாட்டு:* பொன்றுதி என்றாள் - சுமித்திரை.

கேட்டார் கொள்ளார் கண்டவர் பேணுர் கிளர்போரில்
தோட்டார் கோதைச் சோர்குழல் தன்னைத் துவளாமல்
மீட்டான் என்னும் பேரிசை கொள்ளான் செருவெல்ல
மாட்டான் மாண்டான் என்றபின் மேலும் வசையுண்டோ. 1171

தணிக்கும் தன்மைத் தன்றுஎனில் அன்றுஇத் தகைவாளால்
கணிக்கும் தன்மைத் தல்ல விடத்தில் கனல் பூசும்
பிணிக்கும் கையும் பெய்பில வாயும் பிழையாமல்
துணிக்கும் வண்ணம் காணுதி துன்பம் துறஎன்ருன். 1172

என்று முன்னே சொல்லும் இளங்கோ இறையோற்கு
முன்னே செல்ல முன்னவன் அன்ன வினும்முந்தத்
தன்நேர் இல்லாத் தம்பி தடுப்பான் பிறர்இல்லை.
அன்றே கண்ட உம்பரும் வெய்துற்று அழுதாரால். 1173

வேறு

இனைய ராகிய இருவரும் முகத்திரு கண்போல்
கனையும் வார்கழல் வீரர்சென்று அணுகலும் கவந்தன்
வினையின் எய்திய வீரர்நீர் யாவர் கொல் என்ன
நினையும் நெஞ்சினர் இமைத்திலர் உருத்தனர் நின்ருர். 1174

கவந்தனுடைய தோள்களை இராம இலக்குவர்கள்
வெட்டி எறிதல்

அழிந்து ளார்அலர் இகழ்ந்தனர் என்னைஎன்று அழன்ருன்
பொழிந்த கோபத்தன் புதுப்பொறி மயிர்ப்புறம் பொடிப்ப
விழுங்கு வேன்என ஓங்கலும் விண்ணுற வீரர்
எழுந்த தோள்களை வாள்களால் அரிந்தனர் இட்டார். 1175

கைகள் அற்றுவெங் குருதியாறு ஒழுகிய கவந்தன்
மெய்யின் மேற்கொடு கிழக்குறப் பெருநதி விரவும்
சைய மாநெடுந் தாழ்வரைத் தனிவரை தன்னேடு
ஐயம் நீங்கிய பேரெழில் உவமையன் ஆனுன். 1176

ஆனும் நாயகன் அங்கையின் தீண்டிய அதனுல்
மூனும் சாபத்தின் முற்றிய தீவினை முடித்தான்
தோனும் வாங்கிய தோமுடை யாக்கையைத் துறவா
நீளம் நீங்கிய பறவையின் விண்ணுற நிமிர்ந்தான். 1177

விண்ணில் நின்றவன் விரிஞ்சனே முதலினர் யார்க்கும்
கண்ணில் நின்றவன் இவன்எனக் கருத்துற உணர்ந்தான்
எண்ணில் அன்னவன் குணங்களை வாய்திறந்து இசைத்தான்
புண்ணி யம்பயக் கின்றுழி அரியதுஎப் பொருளே. 1178

1177-ம் பாட்டு: சாபத்தின் - முன்பு தனு என்ற பெயருடையவனும், அழகனுமாக இருந்த இவன், அரக்க வடிவம்கொண்டு முனிவர்களுக்குக் கெடுதல் செய்வதையே தொழிலாகக் கொண்டு, ஒரு நாள் ஸ்தூலசிரஸ் என்ற முனிவனின் உணவைப் பறிக்கவே, அவன் "உனக்கு இந்தக் கவந்த வடிவமே நிலைக்கக் கடவது" என்று சாபமிட்டான்.

வேறு

சாபம் நீங்கிய கவந்தன், இராமனை நோக்கித் தோத்திரம் செய்தல்

ஈன்றவனே எப்பொருளும் எல்லைதீர் நல்லறத்தின்
சான்றவனே தேவர் தவத்தின் தனிப்பயனே
மூன்று கவடாய் முளைத்தெழுந்த மூலமோ
தோன்றி இருவினையேன் சாபத் திடர்துடைத்தாய். 1179

மூலமே இல்லா முதல்வனே நீஎடுத்த
கோலமே யார்க்கும் தெரிவரிய கொள்கைத்தால்
ஆலமோ ஆலின் அடையோ அடைக்கிடந்த
பாலனோ ஆதிப் பரனோ பகராயே. 1180

காண்பார்க்கும் காணப் படுபொருட்கும் கண்ணாகிப்
பூண்பாய்போல் நிற்றியால் யாதொன்றும் பூணாதாய்
மாண்பால் உலகை வயிற்றொளித்து வாங்குதியால்
ஆண்பாலோ பெண்பாலோ அப்பாலோ எப்பாலோ. 1181

ஆதிப் பிரமனும்நீ ஆதிப் பரமனும்நீ
ஆதி யுறுபொருளுக்கு அப்பால்உண் டாயினும்நீ
சோதிச் சுடர்ப்பிழம்பு நீஎன்று சொல்லுகின்ற
வேதம் முறைசெய்தால் வெள்காரோ வேறுள்ளார். 1182

எண்திசையும் திண்சுவரா ஏழேழ் நிலைவகுத்த
அண்டப் பெருங்கோயிற்கு எல்லாம் அழகுடைய
மண்டலங்கள் மூன்றின்மேல் என்றும் மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா. 1183

மண்பால் அமரர் வரம்புஆரும் காணாத
எண்பால் உயர்ந்த எரியோங்கும் நல்வேள்வி
உண்பாய்நீ ஊட்டுவாய் நீஇரண்டும் ஒக்கின்ற
பண்புஆர் அறிவார் பகராய் பரமேட்டி. 1184

நிற்கும் நெடுநீத்த நீரில் முளைத்தெழுந்த
மொக்குளே போல முளைத்தெழுந்த அண்டங்கள்
ஒக்கஉயர்ந்து உன்னுளே தோன்றி ஒளிக்கின்ற
பக்கம் அறிதற்கு எளிதோ பரம்பரனே. 1185

1180-ம் பாட்டு: அடைக்கிடந்த பாலனே - பிரளயகாலத்தில் கடல் பொங்கி, உலகங்களை மூழ்கடித்தபோது, அந்தப் பெருவெள்ளத்தில் ஒரு ஆலமரம் தோன்றியது. அதன் இலையொன்றில் திருமால் குழந்தை வடிவத்துடன் படுத்து அறிதுயிலில் ஆழ்ந்திருந்தான். அப்போது அவன் உலகின் சகல ஜீவராசிகளையும் தன் வயிற்றில் அடக்கிக் காப்பாற்றினான். 1181-ம் பாட்டு: அப்பாலோ - ஆணும் பெண்ணும் அல்லாத அலியோ? எப்பாலோ - எந்தப் பாலை (வகுப்பை)ச் சேர்ந்தவனே? 1182-ம் பாட்டு: வேறுள்ளார் (தம்

நின்செய்கை கண்டு நினைந்தனவோ நீள்மறைகள்
உன்செய்கை அன்னவைதான் சொன்ன ஒழுக்கினவோ
என்செய்தேன் முன்னம் மறம்செய்கை எய்தினார்
பின்செல்வ தில்லாப் பெருஞ்செல்வம் நீதந்தாய். 1186

மாயப் பிறவி மயல்நீக்கி மாசிலாக்
காயத்தை நல்கித் துயரின் கரையேற்றிப்
பேயொத்தேன் பேதைப் பிணக்கறுத்த எம்பெருமான்
நாயொத்தேன் என்ன நலன் இழைத்தேன் நான்என்றான். 1187

என்றுஆங்கு இனிதியம்பி இன்றறியக் கூறுவெனேல்
ஒன்றாது தேவர் உறுதிக் கெனஉன்னாத்
தன்தாயைக் கண்ணுற்ற கன்றனைய தன்மையனாய்
நின்றானைக் கண்டான் நெறிநின்றார் நேர்நின்றான். 1188

பாராய் இளையோனே பட்டஇவன் வேறேஓர்
பேராளன் தானே ஒளியோங்கு பெற்றியனாய்
நேராத காயத்தில் நிற்கின்றான் நீஇவனை
ஆராய் எனஅவ்வை ஆர்கொலோ நீஎன்றான். 1189

வேறு

கவந்தன் தனது வரலாற்றைக் கூறுதல்

சந்தப்பூண் அலங்கல் வீர தனுஎனும் நாமத் தேன்ஓர்
கந்தர்ப்பன் சாபத் தால்இக் கடைப்படு பிறவி கண்டேன்
வந்துற்றீர் மலர்க்கை தீண்ட முன்னுடை வடிவம் பெற்றேன்
எந்தைக்கும் எந்தை நீரே இசைப்பது கேண்மின் என்றான். 1190

கணையுலாம் சிலையி னீரைக் காக்குநர் இல்லை யேனும்
இணையிலாள் தன்னை நாடற்கு ஏயன செய்தற்கு ஏற்கும்
புணையிலா தவற்கு வேலை போக்கரிது அன்ன தேபோல்
துணையிலா தவற்கும் இன்னா பகைப்புலம் தொலைத்து நீக்கல். 1191

பழிப்பறு நிலைமை ஆண்மை பகர்வதென் பதும பீடத்து
உழிப்பெருந் தகைமை சான்ற அந்தணன் உயிர்த்த எல்லாம்
அழிப்பதற்கு ஒருவ னான அண்ணலும் அறிதிர் அன்றே
ஒழிப்பரும் திறல்பல் பூத கணத்தொடும் உறையும் உண்மை. 1192

மையே பரம்பொருளாக நினைத்துக்கொண்டிருக்கும்) பிற தேவர்கள். 1183-ம் பாட்டு: ஏழேழ் - பதினான்கு (உலகங்களாகிய). மண்டலங்கள் மூன்று - சூரிய, சந்திர, நட்சத்திர மண்டலங்கள். மலராத புண்டரிகம் - சூரியனால் புதிதாக மலராமல், எப்போதுமே மலர்ந்திருக்கும் தாமரை. 1188-ம் பாட்டு: கூறுவெனேல் - சீதையைக் கண்டுபிடித்து, மீட்கும் வழியைச் சொல்லிவிட்டால். ஒன்றாது தேவர் உறுதிக்கு - அரக்கர்களை இராமன் கொன்றொழிக்க வேண்டும் என்று மன உறுதிகொண்டுள்ள தேவர்களுடைய கருத்துக்கு ஒவ்வாது.

ஆயது செய்கை என்பது அறத்துறை நெறியின் எண்ணித்
தீயவர்ச் சேர்க்கி லாது செவ்வியோர்ச் சேர்த்துச் செய்தல்
தாயினும் உயிர்க்கு நல்கும் சவரியைத் தலைப்பட்டு அன்னாள்
ஏயதோர் நெறியின் எய்தி இரலையின் குன்றம் ஏறி 1193

கதிரவன் சிறுவ னானை கனகவாள் நிறத்தி னானை
எதிர்எதிர் தழுவி நட்பின் இனிதமர்ந்து அவனின் நீண்ட
வெதிர்பொரும் தோளி னானை நாடுதல் விழுமிது என்றான்
அதிர்கழல் வீரர் தாமும் அன்னதே அமைவ தானார். 1194

ஆனவன் தொழுது வாழ்த்தி அந்தரத் தெழுந்து போனான்
மானவக் குமரர் தாமும் அத்திசை வழிக்கொண் டேகிக்
கானமும் மலையும் நீங்கிக் கங்குல்வந் திறுத்த காலை
யானையின் இரட்டை என்ன மதங்கனது இருக்கை சேர்ந்தார். 1195

11. சவரி பிறப்புநீங்கு படலம்

[சவரி என்ற தவப்பெண், இ ரா ம இலக்குவர்களுக்குக் கனி விருந்திட்டு, முக்தி அடைந்ததைக் கூறும் பகுதி]

கண்ணிய தருதற் கொத்த கற்பகத் தருவும் என்ன
நண்ணிய நல்கும் தெய்வக் கடிநறுஞ் சோலை ஞாலம்
எண்ணிய இன்ப மன்றித் துன்பங்கள் இல்லை யான
புண்ணியம் புரிந்தோர் வைகும் துறக்கமே போன்ற தன்றே. 1196

அன்னதாம் இருக்கை நண்ணி ஆண்டுநின்று அளவில் காலம்
தன்னையே நினைந்து நோற்கும் சவரியைத் தலைப்பட்டு அன்னாட்கு
இன்னுரை அருளித் தீதின் றிருந்தனை போலும் என்றான்
முன்இவற்கு இதுஎன்று எண்ண லாவதோர் மூலம் இல்லான். 1197

இராமனுக்குச் சவரி விருந்தளித்தல்

ஆண்டுஅவள் அன்பின் ஏத்தி அழுதிழி அருவிக் கண்ணள்
மாண்டதென் மாயப் பாசம் வந்தது வரம்பில் காலம்
பூண்டமா தவத்தின் செல்வம் போயது பிறவி என்பாள்
வேண்டிய கொணர்ந்து நல்கி விருந்துசெய் திருந்த வேலை. 1198

ஈசனும் கமலத் தோனும் இமையவர் யாரும் எந்தை
வாசவன் தானும் ஈண்டு வந்தனர் மகிழ்ந்து நோக்கி
ஆசறு தவத்திற்கு எல்லை அணுகியது இராமற்கு ஆய
பூசனை விரும்பி எம்பால் போதுதி என்று போனார். 1199

1194-ம் பாட்டு: கதிரவன் சிறுவன்: சூரியனுக்குப் பிறந்த சுக்கிரீவன். 1197-ம் பாட்டு: இருக்கை - ஆசிரமம்.

இருந்தனன் எந்தை நீஈண்டு எய்துதி என்னும் தன்மை
பொருந்திட இன்று தான்என் புண்ணியம் பூத்ததென்ன
அருந்தவத் தரசி தன்னை அன்புற நோக்கி எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய் அம்மனை வாழி என்றார். 1200

அனகனும் இளைய கோவும் அன்றவண் உறைந்த பின்றை
வினையறு நோன்பி னாளும் மெய்ம்மையின் நோக்கி வெய்ய
துனைபரித் தேரோன் மைந்தன் இருந்தஅத் துளக்கில் குன்றம்
நினைவரிது ஆயற்கு ஒத்த நெறியெலாம் நினைந்து சொன்னாள். 1201

விட்டினுக்கு அமைவ தான மெய்ந்நெறி வெளியிற்றாகக்
காட்டுறும் அறிஞர் என்ன அன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டனன் என்ப மன்னோ கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வின் உண்ணும் அமுதத்தின் சுவையாய் நின்றான்.

சவரி முக்தி அடைதல்

பின்அவள் உழன்று பெற்ற யோகத்தின் பெற்றியாலே
தன்உடல் துறந்து தான்அத் தனிமையின் இனிது சார்ந்தாள்
அன்னது கண்ட வீரர் அதிசயம் அளவின் றெய்திப்
பொன்னடிக் கழல்கள் ஆர்ப்பப் புகன்றமா நெறியில் போனார். 1203

தண்ணெனும் கானும் குன்றும் நதிகளும் தவிரப் போனார்
மண்ணிடை வைகல் தோறும் வரம்பிலா மாக்கள் ஆடக்
கண்ணிய வினைகள் என்றும் கட்டுஅழல் கதுவ லாலே
புண்ணியம் உருகிற் றன்ன பம்பையாம் பொய்கை புக்கார். 1204

ஆரணிய காண்டம் முற்றிற்று.

ஆரணிய காண்டம்

பாட்டு முதற் குறிப்பு அகராதி

(எண் : பாட்டின் எண்)

அ

கிஷ்கிந்தா காண்டம்

——o——

1. பம்பைப் படலம்

[இராம இலக்குவர்கள் பம்பை என்ற பொய்கையைக் கண்டது பற்றிக் கூறும் பகுதி. பம்பையை நதி என்றும் கூறுவார்கள்]

காப்பு

மூன்றுரு எனக்குணம் மும்மை யாம்முதல்
தோன்றுரு எவையும்அம் முதலேச் சொல்லுதற்கு
ஏன்றுரு அமைந்தவும் இடையில் நின்றவும்
சான்றுரு உணர்வினுக்கு உவந்த தாயினுன். 1

பம்பைப் பொய்கையின் வருணனை

தேன்படி மலரது செங்கண் வெங்கைம்மா
தான்படி கின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து வீங்குநீர்
வான்படிந்து உலகிடைக் கிடந்த மாண்பது. 2

ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த ஈர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலால்
ஓர்ந்துணர்வு இல்லவர் உள்ளம் ஒப்பது. 3

குவால்மணித் தடம்தொறும் பவளக் கோல்இவர்
கவான்அர சன்னமும் பெடையும் காண்டலின்
தவாநெடு வானகம் தயங்கு மீனெடும்
உவாமதி உலப்பில உதித்த தொப்பது. 4

1-ம் பாட்டு: இந்தப் பாட்டுக்குப் பலவிதமாகப் பொருள் கூறுவார்கள். அதில் ஒருவிதம் பின்வருமாறு: அறிவுக்கு உகந்தவனுன இராமன், (பிரமன், சிவன், திருமால் என்ற) மும்மூர்த்திகளாகவும், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று செயல்களேச் செய்யும் முக்குணங்கள் படைத்தவனுகவும், முழுமுதல் கடவுளாகவும் இருக்கிருன். உலகில் தோன்றிய எல்லாத் தத்துவங்களேயும், முழுமுதல் கடவுளேப்பற்றி எடுத்துக் கூறிப் போற்றும் உருவம் படைத்த பிரபஞ்சங்களேயும், பிரபஞ்சங்களில் வாழும் உயிர்களேயும் சேர்த்துத் தனது உருவமாகக் கொண்டவன் அவன். இவ்விதமாகப் பொருள் கொள்ளும்போது ''சான்றுரு'' என்பதைச் ''சான்றஉரு'' என்று பிரிக்கவேண்டும்.

ஓதநீர் உலகமும் உயிர்கள் யாவையும்
வேதபா ரகரையும் விதிப்ப வேட்டநாள்
சீதம்வீங்கு உவரியைச் செருக்கு மாறுஒரு
காதிகா தலன்தரு கடலின் அன்னது. 5

எல்பொரு நாகர்தம் இருக்கை ஈதுஎனக்
கிற்பதோர் காட்சியது எனினும் கீழுறக்
கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொரு ளாம்எனத் தோன்றல் சான்றது. 6

களன்நவில் அன்னமே முதல கண்ணகல்
தளமலர்ப் புள்ளொலி தழங்க இன்னதோர்
கிளவிஎன்று அறிவரும் கிளர்ச்சித்து ஆதலால்
வளநகர்க் கூலமே போலும் மாண்பது. 7

அரிமலர்ப் பங்கயத்து அன்னம் எங்கணும்
புரிகுழல் புக்கிடம் புகல்கி லாமையால்
திருமுகம் நோக்கலம் இறந்து தீர்தும்என்று
எரிபுகு வனஎனத் தோன்றும் ஈட்டது. 8

காசடை விளக்கிய காட்சித் தாயினும்
மாசடை பேதைமை இடை மயக்கலால்
ஆசடை நல்லுணர்வு அனைய தாம்எனப்
பாசடை வயின்தொறும் பரந்த பண்பது. 9

களிப்படா மனத்தவன் காணில் கற்பெனும்
கிளிப்படா மொழியவள் விழியின் கேள்எனத்
துளிப்படா நயனங்கள் துளிப்பச் சோரும்என்று
ஒளிப்படாது ஆயிடை ஒளிக்கும் மீனது. 10

கழைபடு முத்தமும் கலுழிக் கார்மத
மழைபடு தரளமும் மணியும் வாரிநேர்
இழைபடர்ந் தனையநீர் அருவி எய்தலால்
குழைபடு முகத்தியர் கோலம் ஒப்பது. 11

பொங்குவெங் கடகரி பொதுவின் ஆடலின்
கங்குலின் எதிர்பொரு கலவிப் பூசலின்
அங்கம்நொந்து அலசிய விலையின் ஆய்வளை
மங்கையர் வடிவென வருந்தும் மெய்யது 12

விண்தொடர் நெடுவரைத் தேனும் வேழத்தின்
வண்டுளர் நறுமத மழையும் மண்டலால்
உண்டவர் பெருங்களி உறலின் ஒதியர்
தொண்டையங் கனியிதழ்த் தோன்றல் சான்றது. 13

5-ம் பாட்டு: காதிகாதலன் - காதிமுனிவனின் மகனான விசுவாமித்திரன். 8-ம் பாட்டு: புரிகுழல்-சீதை. திருமுகம்-இராமனுடைய முகம். 11-ம் பாட்டு: கார்மதமழைபடு தரளம்-கரியநிறம் கொண்ட மேகம் போன்ற மதயானைகளின் (தந்தத்திலிருந்து) உண்டான முத்துக்கள்.

ஆரியம் முதலிய பதினெண் பாடையிற்
பூரியர் ஒருவழி புகுந்த தாமென
ஓர்வில கிளவிகள் ஒன்றொடு ஒப்பில
சோர்வில விளம்புபுள் துவன்றுகின்றது. 14

தான்உயிர் உறத்தனி தழுவும் பேடையை
ஊன்உயிர் பிரிந்தெனப் பிரிந்த ஓதிமம்
வான்அர மகளிர்தம் வயங்கு நூபுரத்
தேனுகு மழலையைச் செவியின் ஏற்பது. 15

ஈறிடல் அரியமால் வரைநின்று ஈர்த்துஇழி
ஆறிடு விரைஅகில் ஆரம் ஆதியா
ஊறிட ஒண்நகர் உரைத்த ஒண்தளச்
சேறிடு பரணியின் திகழும் நேரது. 16

வேறு

நவ்வி நோக்கியர் இதழ்நிகர் குமுதத்தின் நறுந்தேன
வவ்வும் மாந்தரின் களிமயக் குறுவன மகரம்
எவ்வம் நீங்கிய பிறப்பினொடு இறப்பிவை என்னக்
கவ்வும் மீனொடு முழுகுவ எழுவன கரண்டம். 17

கவள யானைஅ ஞற்குஅந்தக் கடிநறுங் கமலத்து
அவளை ஈகலம் ஆவது செய்தும்என்று அருளித்
திவள அன்னங்கள் திருநடை காட்டுவ செங்கண்
குவளை காட்டுவ துவரிதழ் காட்டுவ குமுதம். 18

பெய்க லன்களின் இலங்கொளி மருங்கொடு பிறழ
வைக லும்புனல் குடைபவர் வான்அர மகளிர்
செய்கை அன்னங்கள் ஏந்திய சேடியர் என்னப்
பொய்கை அன்னங்கள் ஏந்திய பூங்கொம்பர் பொலிவ. 19

ஏலும் நீர்நிழல் இடையிடை எறித்தலின் படிகம்
போலும் வார்புனல் புகுந்துள வாம்எனப் பொங்கி
ஆலும் மீன்கணம் அஞ்சின அலம்வர வஞ்சிக்
கூல மாமரத்து இருஞ்சிறை புலர்த்துவ குரண்டம். 20

அங்கொர் பாகத்தின் அஞ்சன மணிநிழல் அடையப்
பங்கு பெற்றொளிர் பதுமரா கத்தொளி பாயக்
கங்கு லும்பக லும்எனப் பொலிவெய்து கரைய
மங்கை மார்தட முலையெனப் பொலிவன வாளம். 21

14-ம் பாட்டு: ஆரியம் முதலிய பதினெண்பாடை: சமஸ்கிருதம் சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளு, குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கு, கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கவுடம், குசலம் ஆகிய 18 பாஷைகள். தமிழைச் சேர்த்தால் 19. கவிஞர், மேற்கூறிய 18 பாஷைகளோடு தமிழையும் சேர்த்துக் கூருததால், தமிழை ஒப்பற்ற மொழியாக அவர் நினைத்திருக்கவேண்டும் என்று உரையாசிரியர்களில் சிலர் கருதுகிறார்கள்.

வலிந டத்திய வாள்என வாளைகள் பாய
நிலைந டத்திய திரைதொறும் உகள்வன நீர்நாய்
கலிந டைக்கழைக் கண்ணுளர் எனநடம் கவினப்
பொலிவு டைத்தெனத் தேரைகள் புகழ்வன போலும். 22

அன்ன தாகிய அகன்புனல் பொய்கையை அணுகிக்
கன்னி அன்னமும் கமலமும் முதலிய கண்டான்
தன்னின் நீங்கிய தளிர்இயற்கு உருகினன் தளர்வான்
உன்னும் நல்லுணர்வு ஒடுங்கிடப் புலம்பிடல் உற்றான். 23

வேறு

இராமன் சீதையை எண்ணிப் புலம்புதல்

வரியார் மணிக்கால் வாளமே மடஅன் னங்காள் எனைநீங்கத்
தரியாள் நடந்தாள் இல்லளேல் தளர்ந்த போதும் தகைவேயோ
எரியா நின்ற ஆருயிருக்கு இரங்கி னால்ஈது இசையன்றே
பிரியா திருந்தேற்கு ஒருமாற்றம் பேசில் பூசல் பெரிதாமோ. 24

வண்ண நறுந்தா மரைமலரும் வாசக் குவளை நாள்மலரும்
புண்ணின் எரியும் ஒருநெஞ்சம் பொதியும் மருந்தில் தரும்பொய்காய்
கண்ணும் முகமும் காட்டுவாய் வடிவும் ஒருகால் காட்டாயோ
ஒண்ணும் என்னின் அஃதுதவாது உலோவி னரும் உயர்ந்தாரோ. 25

விரிந்த குவளை சேதாம்பல் விரைமென் கமலம் கொடிவள்ளை
தரங்கம் கெண்டை வரால்ஆமை என்றித் தகைய தமைநோக்கி
மருந்தின் அனையாள் அவயவங்கள் அவைநிற் கண்டேன் வல்லரக்கன்
அருந்தி அகல்வான் சிந்தினவோ ஆவி உரைத்தி யாம்அன்றே. 26

ஓடா நின்ற களிமயிலே சாயற்கு ஒதுங்கி உள்ளழிந்து
கூடா தாரின் திரிகின்ற நீயும் ஆகம் குளிர்ந்தாயோ
தேடா நின்ற என்உயிரைத் தெரியக் கண்டாய் சிந்தைஉவந்து
ஆடா நின்றாய் ஆயிரம்கண் உடையாய்க்கு ஒளிக்கு மாறுண்டோ. 27

அடையிர் எனினும் ஒருமாற்றம் அறிந்தது உரையீர் அன்னத்தின்
பெடையீர் ஒன்றும் பேசீரோ பிழையா தாற்குப் பிழைத்தீரோ
நடைநீர் அழியச் செய்தாரே நடுஇ லாதார் நனிஅவரோடு
உடையீர் பகைதான் உமைநோக்கி உவக்கின் றேனை முனிவீரோ. 28

23-ம் பாட்டு : தளிர் இயற்கு - தளிர்போன்ற சீதைக்கு. 26-ம் பாட்டு : சீதையின் அவயவங்களுக்குக் கூறியுள்ள உவமானங்களின் விபரம் :—குவளை - கண்; சேதாம்பல் - வாய்; கமலம் - முகம், கை, கால்; கொடிவள்ளை - காது; தரங்கம் - வயிற்று மடிப்பு; கெண்டை-கணைக்கால்; வரால்-கணைக்கால்; ஆமை; புறங்கால் (பாதத்தின்மேல் பகுதி). அரக்கன் அருந்தி-இராவணன், சீதையைத் தின்று அல்லது தின்னும்போது. 27-ம் பாட்டு : ஆயிரம் கண் - மயிலின் தோகையில் உள்ள ஆயிரக்கணக்கான கண்கள். 28-ம் பாட்டு: நடு இலாதார்-இடை இல்லாத (மிகவும் சுருங்கிய இடையை உடையவளான) சீதை.

பொன்பால் பொருவும் விரைஅல்லிப் புல்லிப் பொலிந்த பொலந்தாது
தன்பால் தழுவும் குழல்வண்டு தமிழ்ப்பாட் டிசைக்கும் தாமரையே
என்பால் இல்லை அப்பாலோ இருப்பா ரல்லர் விருப்புடைய
உன்பால் இல்லை என்றக்கால் ஒளிப்பா ரோடும் உறவுண்டோ. 29

ஒருவா சகத்தை வாய்திறந்திட்டு உதவாய் பொய்கை யுள்ஒடுங்கும்
திருவாய் அனைய சேதாம்பற்கு அயலே கிடந்த செங்கிடையே
வெருவா எதிர்நின்று அமுதுயிர்க்கும் விழிச் செவ்விக் கொழுங்கனிவாய்
தருவாய் அவ்வாய் இன்னமிழ்தும் தண்ணென் மொழியும் தாராயோ.

அலக்கண் உற்றேற்கு உற்றுதவற்கு அடைவுஒன்று உண்டே கொடிவள்ளாய்
மலர்க்கொம் பனைய மடச்சீதை காதே மற்றொன்று அல்லையால்
பொலக்குண் டலமும் கொடுங்குழையும் புனைதாழ் முத்தின் பொற்றோடும்
விலக்கி வந்தாய் விளம்பாதே இன்னும் பூசல் விரும்புதியோ 31

பஞ்சு பூத்த விரல்பதுமம் பவளம் பூத்த அடியாள் என்
நெஞ்சு பூத்த தாமரையின் நிலயம் பூத்தாள் நிறம்பூத்த
மஞ்சு பூத்த மலர்பூத்த குழலாள் கண்போல் மணிக்குவளாய்
நஞ்சு பூத்த தாலென்ன நகுவாய் என்னை நலிவாயோ. 32

வேறு

என்றுஅ யாஉயிர்க் கின்றவன் ஏடவிழ்
கொன்றை ஆவிப் புறத்திவை கூறியான்
பொன்ற யாதும் புகல்கிலை போலுமால்
வன்த யாவிலி என்ன வருந்தினன். 33

வார்அ ளித்தழை மாப்பிடி வாயிடைக்
கார்அ ளிக்கலு ழிக்கருங் கைம்மலை
நீர்அ ளிப்பது நோக்கினன் நின்றனன்
பேர்அ ளிக்குப் பிறந்தஇல் ஆயினன். 34

ஆண்டுஅவ் வள்ளலை அன்பெனும் ஆர்அணி
பூண்ட தம்பி பொழுது கழிந்ததால்
ஈண்டுஇ ரும்புனல் தோய்ந்துன் இசைஎன
நீண்ட வன்கழல் தாழ்நெடி யோய்என்றான். 35

அரசும் அவ்வழி நின்றுஅரிது எய்திஅத்
திரைசெய் தீர்த்தம்முன் செய்தவம் உண்மையால்
வரைசெய் மாமத வாரணம் நாணுற
விரைசெய் பூம்புனல் ஆடலை மேயினன். 36

நீத்த நீரில் நெடியவன் மூழ்கலும்
தீத்த காமத் தெறுகதிர்த் தீயினால்
காய்த்தி ரும்பைக் கருமகக் கம்மியன்
தோய்த்த தண்புனல் ஒத்ததுஅத் தோயமே. 37

35-ம் பாட்டு : நீண்டவன் - திருமால்

வேறு

சூரியாஸ்தமனம்

ஆடினுன் அன்னமாய் அருமறைகள் பாடினுன்
நீடுநீர் முன்னை நூல் நெறிமுறையின் நேமிதாள்
சூடினுன் முனிவர்தம் தொகுதிசேர் சோலைவாய்
மாடுதான் வைகினுன் எரிகதிரும் வைகினுன். 38

அந்தியாள் வந்துதான் அணுகஅங்கு அணுகுருச்
சந்தவார் கொங்கையாள் தனிமைதனி நாயகன்
சிந்தியா நொந்துதேய் பொழுதுதெறு சீதநீர்
இந்துவான் உந்துவான் எரிகதிரி னுன்என. 39

பூஒடுங் கினவிரவு புள்ஒடுங் கினபொழில்கள்
மாஒடுங் கினமரனும் இலைஒடுங் கினகிளிகள்
நாஒடுங் கினமயில்கள் நடம்ஒடுங் கினகுயில்கள்
கூஒடுங் கினபிளிறு குரல்ஒடுங் கினகளிறு. 40

மண்துயின் றனநிலைய மலைதுயின் றனமறுஇல்
பண்துயின் றனவிரவு பணிதுயின் றனபகரும்
விண்துயின் றனகழுதும் விழிதுயின் றனபழுதில்
கண்துயின் றிலநெடிய கடல்துயின் றனகளிறு. 41

பொங்கிமுற் றியஉணர்வு புணர்தலும் புகையினெடு
பங்கம்உற் றனையவினை பரிவுறும் படிமுடிவில்
கங்குல்இற் றதுகமலம் முகம்எடுத் தனகடலில்
வெங்கதிர்க் கடவுள்எழ விமலன்வெந் துயரின்எழ. 42

*காலையே கடிதுவர ஏகினுர் கடல்கவினும்
சோலைஏய் மலைதழுவு கானநீள் நெறிதொலைய
ஆலைஏய் துழனிஅகல் நாடர்ஆர் கலிஅமிழ்து
போலவே உரைசெய்புன மானைநா டுதல்புரிஞர். 43

38-ம் பாட்டு : ஆடினுன்.........பாடினுன் - அன்னத்தின் வடிவம் எடுத்துப் பிரமனுக்கு வேதங்களை உபதேசித்த திருமால், ஒரு சமயம் பிரமனிடமிருந்து மது கைடபன் என்னும் இரு அரக்கர்கள் வேதங் களைப் பறித்துக்கொண்டு ஓடி கடலுக்குள் மூழ்கி மறைய, திருமால் அவர்களைத் தேடிச் சென்று கண்டுபிடித்துக் கொன்று, திரும்பவந்து பிரமனுக்கு மேற்சொன்னவாறு வேதங்களை உபதேசித்தான். 41-ம் பாட்டு : நெடிய......களிறு - பெரிய பாற்கடலில் கண்வளருபவர் களும், யானையின் கம்பீரம் உடையவர்களுமான இராம இலக்கு வர்கள்.

2. அனுமப் படலம்

[இராம இலக்குவர்களை அனுமான் சந்தித்துப் பேசியது பற்றிக் கூறும் பகுதி]

எய்தினர் சவரிநெடிது ஏயமால் வரைஎளிதின்
நொய்தின்ஏ றினர்அதனின் நோன்மைசால் கவியரசு
செய்வதோர் கிலன்இவர்கள் தெவ்வராம் எனவெருவி
உய்தும்நாம் எனவிரைவின் ஒடினன் மலைமுழையின். 44

காலின்மா மதலைஇவர் காண்மினோ கறுவுடைய
வாலிஏ வலின்வரவி னர்கள்தாம் வரிசிலையர்
நீலமார் வரையனையர் நீதியா நினைமின்என
மூலம்ஓர் கிலன்மறுகி ஓடினன் முழையதனின். 45

தாரன்நீ லனைமருவு தாமமா ருதியைமுதல்
வீரரோடு இரவிசுதன் மேருமால் வரையைநிகர்
பாரமா மலையின்ஒரு பாகம்ஒ டுதல்புரிய
ஆரமா ர்பரும்அதனின் ஆகுமாறு உறல்கருதி 46

மானைநா டுதல்புரிஞர் வாலிஏ வலின்வருதல்
ஆனவாறு அலர்மறுகி ஆவிசோர் நிலையர்என
ஏனைவா னரர்சிலரும் ஏகிமா முழையின்முழு
ஞானநா தரைஅறிவில் நாடிமா ருதிமொழியும்.

அவ்விடத்து அவர்மறுகி அஞ்சிநெஞ் சழிஅமைதி
வெவ்விடத் தினைமறுகு தேவர்தா னவர்வெருவல்
தவ்விடத் தனிஅருளும் தாழ்சடைக் கடவுள்என
இவ்விடத்து இனிதிருமின் அஞ்சல்என்று இடைஉதவி 48

இராம இலக்குவரை அனுமான் அணுகி ஆலோசித்தல்

*அஞ்சனைக்கு ஒருசிறுவன் அஞ்சனக் கிரியனைய
மஞ்சனைக் குறுகிஒரு மாணவப் படிவமொடு
வெஞ்சினத் தொழிலர்தவ மெய்யர்கைச் சிலையர்என
நெஞ்சயிர்த்து அயல்மறைய நின்றுகற் பினில்நினையும். 49

44-ம் பாட்டு: மால்வரை - இருசியமூகமலை. கவியரசு - வானரர்களுக்கு அரசனான சுக்கிரீவன். 45-ம் பாட்டு: காலின் மாமதலை - வாயுவின் குமாரனான அனுமானே. 46-ம் பாட்டு: தாரன், நீலன் - வானர வீரர்கள். மாருதி-வாயு குமாரன் (அனுமான்). இரவிசுதன் - சூரியகுமாரனான சுக்கிரீவன். ஆரமார்பர் - இராம இலக்குவர்கள். அதனின் ஆகுமாறு உறல் கருதி - அந்த மலையில் தங்கள் காரியம் (சீதையைத் தேடிக் கண்டுபிடித்தல்) கைகூடுவதற்கான வழியைக் காணப்போவதை எண்ணி. 49-ம் பாட்டு: அஞ்சனைக்கு ஒரு சிறுவன்-அஞ்சனாதேவியின் ஒப்பற்ற புதல்வனான அனுமான். மஞ்சனை-இராமனை.

*தேவருக் கொருதலைவ ராம்முதல் தேவர்எனின்
மூவர்மற் றிவர்இருவர் மூரிவிற் கரர்இவரை
யாவர்ஒப் பவர்உலகின் யாதிவர்க்கு அரியஒருபொருள்
கேவலத்து இவர்நிலைமை தேர்வதுஎக் கிழமைகொடு. 50

*சிந்தையில் சிறிதுதுயர் சேர்வுறத் தெருமரலின்
நொந்தயர்த் தவர்அனையர் நோவுறச் சிறியர்அலர்
அந்தரத்து அமரர்அலர் மானிடப் படிவமவர்
நிந்தனைக் கரியபொருள் நேருதற்கு உறுநிலையர். 51

தருமமும் தகவும்இவை தனம்எனும் தகையர்இவர்
கருமமும் பிறிதொர்பொருள் கருதியன்று அதுகருதின்
அருமருந் தனையதுஇடை அழிவுவந் துளதுஅதனை
இருமருங் கினும்நெடிது துருவுகின் றனர்இவர்கள். 52

*கதமெனும் பொருண்மைஇலர் கருணையின் கடல்அனையர்
இதமெனும் பொருள்அலதுஒர் இயல்புணர்ந் திலர்இவர்கள்
சதமன்அஞ் சுறுநிலையர் தருமன்அஞ் சுறுசரிதர்
மதனன்அஞ் சுறுவடிவர் மறலிஅஞ் சுறுவிறலர். 53

வேறு

*என்பன பலவும் எண்ணி இருவரை எய்த நோக்கி
அன்பினன் உருகு கின்ற உள்ளத்தன் ஆர்வத் தோரை
முன்பிரிந் தனையர் தம்மை முன்னினான் என்ன நின்றான்
தன்பெருங் குணத்தால் தன்னின் தானலது ஒப்பி லாதான். 54

தன்கன்று கண்ட அன்ன தன்மைய தறுகண் பேழ்வாய்
மின்கன்றும் எயிற்றுக் கோள்மா வேங்கைஎன் றினைய வேயும்
பின்சென்று காதல்கூரப் பேய்கனித்து இரங்கு கின்ற
என்கன்று கின்றது எண்ணில் பற்பல இவரை அம்மா. 55

மயில்முதல் பறவை யெல்லாம் மணிநிறத்து இவர்தம் மேனி
வெயிலுறற்கு இரங்கி மீதா விரிசிறைப் பந்தர் வீசி
எயில்வகுத்து எய்து கின்ற விண்முகில் கணங்கள் எங்கும்
பயில்வுறத் திவலை சிந்திப் பயப்பயத் தழுவும் பாங்கர். 56

*காயெரி கனலும் கற்கள் கள்ளுடை மலர்க ளேபோல்
தூயசெங் கமல பாதம் தோய்தொறும் இழைந்து தோன்றும்
போயின திசைகள் தோறும் மரனொடு புல்லு மெல்லாம்
சாய்வுறும் தொழுவ போல்இங்கு இவர்களோ தருமம் ஆவார். 57

*துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித்
தென்புலத் தன்றி மீளா நெறிஉய்க்கும் தேவ ரோதாம்
என்புஎனக்கு உருகு கின்றது இவர்கின்றது அளவில் காதல்
அன்பினுக்கு அவதி இல்லை அடைவென்கொல் அறிதல் தேற்றேன்.

இராம இலக்குவரும் அனுமானும் சந்தித்தல்

*இவ்வழி எண்ணி ஆண்டுஅவ் இருவரும் எய்த லோடும்
செவ்வழி உள்ளத் தானும் தெரிவுற எதிர்சென் றெய்திக்
கவ்வைஇன் ருக நுங்கள் வரவெனக் கருணை யோனும்
வெவ்வழி நீங்கி யோய்நீ'யார்என விளம்பல் உற்ருன். 59

*மஞ்செனத் திரண்ட கோல மேனிய மகளிர்க் கெல்லாம்
நஞ்செனத் தகைய வாகி நளிர்இரும் பனிக்குத் தேம்பாக்
கஞ்சம்ஒத் தலர்ந்த செய்ய கண்ணயான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றின் வந்தேன் நாமமும் அனுமன் என்ருன். 60

*இம்மலை இருந்து வாழும் எரிகதிர்ப் பரிதிச் செல்வன்
செம்மலுக்கு ஏவல் செய்வேன் தேவநும் வரவு நோக்கி
விம்மலுற்று அனையன் ஏவ வினவிய வந்தேன் என்ருன்
எம்மலைக் குலமும் தாழ இசைசுமந்து எழுந்த தோளான். 61

*மாற்றம்அஃது உரைத்த லோடும் வரிசிலைக் குரிசில் மைந்தன்
தேற்றம்உற்று இவனின் ஊங்குச் செவ்வியோர் இன்மை தேறி
ஆற்றலும் நிறைவும் கல்வி அமைதியும் அறிவும் என்னும்
வேற்றுமை இவனேடு இல்லை யாம்என விளம்ப லுற்ருன். 62

*இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே யார்கொல்இச் சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இளைய வீர விரிஞ்சனே விடைவல் லானே. 63

மாணியாம் படிவம் அன்று மற்றிவன் வடிவம் மைந்த
ஆணிஇவ் வுலகுக் கெல்லாம் என்னலாம் ஆற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை என்று தம்பிக்குக் கழறிக் கண்ணன் 64

மற்றும்இவ் உலகத் துள்ள முனிவர்வா னவர்கள் ஆர்இச்
சொல்திறம் உடையார் மற்றுச் சுருதியின் தொகுதி யாவும்
உற்றறி தரும்இம் மாணி மொழிக்கெதிர் முதல்வர் ஆய
பெற்றியர் மூவர்க் கேயும் பேராற்றல் அரிது மன்னே. 65

*எவ்வழி இருந்தான் சொன்ன கவிக்குலத் தரசன் யாங்கள்
அவ்வழி அவனைக் காணும் அருத்தியால் அணுக வந்தேம்
இவ்வழி நின்னை உற்ற எமக்குநீ இன்சொல் அன்ன
செவ்வழி உள்ளத் தோனைக் காட்டுதி தெரிய என்ருன். 66

63-ம் பாட்டு : இல்லாத - இப்போது இல்லாமல் இனிமேல் உண்டாகக்கூடிய (என்பது ஒரு பொருள்.) பாட்டின் முதல் அடி சரியான பாடமாக இருக்குமெனத் தோன்றவில்லை. ''இல்லாத உலகத்தெங்கும் இயங்குவான் இயல்பு கூற'' என்ற பாடமும் பொருத்தமாக இல்லை.

மாதிரப் பொருப்போடு ஓங்கு வரம்பிலா உலகில் மற்றுப்
பூதரப் புயத்து வீரர் நும்ஒக்கும் புனிதர் யாரே
ஆதரித்து அவனைக் காண்டற்கு அணுகினிர் என்னின் அன்னன்
தீதவித்து அமையச் செய்த செய்தவச் செல்வம் நன்றே. 67

இரவிதன் புதல்வன் தன்னை இந்திரன் புதல்வன் என்னும்
பரிவிலன் சிறப் போந்து பருவரற்கு ஒருவன் ஆகி
அருவியங் குன்றில் என்னோடு இருந்தனன் அவன்பால் செல்வம்
வருவதோர் அமைவின் வந்திர் வரையினும் வளர்ந்த தோளீர். 68

ஒடுங்கலில் உலகம் யாவும் உவந்தன உதவி வேள்வி
தொடங்கின மற்றும் முற்றத் தொல்லறம் துணிவர் அன்றே
கொடுங்குலப் பகைஞ னுகிக் கொல்லிய வந்த கூற்றை
நடுங்கினர்க்கு அபயம் நல்கும் அதனினும் நல்ல துண்டோ. 69

எம்மையே காத்திர் என்றல் எளிதரோ இமைப்பி லாதோர்
தம்மையே முதலிட்டு ஆன்ற சராசரம் சமைந்த ஆற்றல்
மும்மைஏழ் உலகம் காக்கும் முதல்வர்நீர் முருகச் செவ்வி
உம்மையே புகல்புபுக் கேமுக்கு இதின்வரும் உறுதி உண்டோ. 70

*யார்என விளம்பு கேன்நான் எம்குலத் தலைவற்கு உம்மை
வீரர்நீர் பணித்திர் என்முன் மெய்ம்மையின் வேலி போல்வான்
வார்கழல் இளைய வீரன் மரபுளி வாய்மை யாதும்
சோர்விலன் நிலைமை யெல்லாம் தெரிவுறச் சொல்ல லுற்றான். 71

சூரியன் மரபின் தோன்றல் சுடர்நெடு நேமி ஆண்ட
ஆரியன் அமரர்க் காக அசுரரை ஆவி உண்ட
வீரியன் வேள்வி செய்து விண்ணுல கோடும் ஆண்ட
கார்இயல் கருணை யன்ன கண்ணன்அக் கவிகை மன்னன். 72

*புயல்தரு மதத்தின் கோட்டுப் புகர்மலைக்கு இறையை ஊர்ந்து
மயல்தரும் அவுணர் யாரும் மடிதர வரிவில் கொண்ட
இயல்தரு புலமைச் செங்கோல் மனுமுதல் யாரும் ஒவ்வாத்
தயரதன் கனக மாடத் தடமதில் அயோத்தி வேந்தன். 73

*அன்னவன் சிறுவ னும்இவ் ஆண்தகை அனையன் ஏவத்
தன்னுடை உரிமைச் செல்வம் தம்பிக்குத் தகவின் நல்கி
நன்னெடுங் கானம் சேர்ந்தான் நாமமும் இராமன் என்பான்
இந்நெடுஞ் சிலைவ லானுக்கு ஏவல்செய் அடியன் யானே. 74

*என்றவன் தோற்ற மாதி இராவணன் இழைத்த மாயப்
புன்தொழில் இறுதி யாகப் புகுந்துள பொருள்க ளெல்லாம்
ஒன்றும்ஆண்டு ஒழிவு றமல் உணர்த்தினன் உணர்த்தக் கேட்டு
நின்றஅக் காலின் மைந்தன் நெடிதுவந்து அடியில் தாழ்ந்தான். 75

67-ம் பாட்டு : மாதிரப் பொருப்பு - எட்டுத் திசைகளிலும் சுற்றியுள்ள சக்கர வாளமலை. பூதரப்புயம் - பூமியைத் தாங்கும் தோள்.
68 -ம் பாட்டு: இரவிதன் புதல்வன் - சூரியகுமாரனை சுக்கிரீவன். இந்திரன் புதல்வன் - வாலி.

*தாழ்தலும் தகாத செய்தது என்னைநீ தருமம் அன்றால்
கேள்விநூல் மறைவல் லாள என்றனன் என்னக் கேட்ட
பாழியந் தடந்தோள் வீர மாருதி பதுமச் செங்கண்
ஆழியாய் அடியேன் தானும் அரிக்குலத் தொருவன் என்றான். 76

*மின்உருக் கொண்ட வில்லோர் வியப்புற வேத நன்னூல்
பின்உருக் கொண்ட தென்னும் பெருமையாம் பொருளும் தாழப்
பொன்னுருக் கொண்ட மேரு புயத்திற்கும் உவமை போதாத்
தன்னுருக் கொண்டு நின்றான் தருமத்தின் தனிமை தீர்ப்பான். 77

கண்டிலன் உலகம் மூன்றும் காலினால் கடந்து கொண்ட
புண்டரி கக்கண் ஆழிப் புரவலன் பொலங்கொள் சோதி
குண்டல வதனம் என்றால் கூறலாம் தகைமைத் தொன்றோ
பண்டைநூல் கதிரோன் சொல்லப் படித்தனன் படிவம் அம்மா. 78

*தாள்படாக் கமலம் அன்ன தடங்கணான் தம்பிக்கு அம்மா
கீழ்ப்படா நின்ற நீக்கிக் கிளர்படா தாகி என்றும்
நாள்படா மறைக ளாலும் நவைபடா ஞானத் தாலும்
கோள்படாப் பதமே ஐய குரக்குருக் கொண்ட தென்றான். 79

*நல்லன நிமித்தம் பெற்றோம் நம்பியைப் பெற்றோம் நம்பால்
இல்லையே துன்ப மானது இன்பமும் எய்திற்று இன்னும்
வில்லினாய் இவனைப் போலாம் கவிக்குலக் குரிசில் வீரன்
சொல்லினால் ஏவல் செய்வான் அவன்நிலை சொல்லற் பாற்றோ. 80

*என்றகம் உவந்து கோல முகம்மலர்ந்து இனிதின் நின்ற
குன்றுறழ் தோளி னுரை நோக்கிஅக் குரக்குச் சீயம்
சென்றுஅவன் தன்னை இன்னே கொணர்கின்றேன் சிறிது போது
வென்றியிர் இருத்திர் என்று விடைபெற்று விரைவில் போனான். 81

3. நட்புக்கோள் படலம்

[இராமனும் சுக்கிரீவனும் நட்புக் கொண்டதைப் பற்றிக் கூறும் பகுதி]

போனமந் தரமணிப் புயநெடும் புகழினான்
ஆனதன் பொருசினத்து அரசன்மாடு அணுகினான்
யானும்உன் குலமும்இவ் வுலகும்உய்ந் தனம்எனா
மானவன் குணமெலாம் நினையுமா மதியினான். 82

இராமனின் வருகையை சுக்கிரீவனிடம் அனுமான் தெரிவித்தல்

மேலவன் திருமகற்கு உரைசெய்தான் விரைசெய்தார்
வாலிஎன் றளவிலா வலியினான் உயிர்தெறக்
காலன்வந் தனன்இடர்க் கடல்கடந் தனம்எனா
ஆலம்உண் டவனின்நின் றருநடம் புரிகுவான். 83

மண்ணுளார் விண்ணுளார் மாறுளார் வேறுளார்
எண்ணுளார் இயலுளார் இசையுளார் திசையுளார்
கண்ணுளார் ஆயினர் பகையுளார் கழிநெடும்
புண்ணுளார் ஆருயிர்க்கு அமுதமே போலுளார். 84

சூழிமால் யானையார் தொழுகழல் தயரதன்
பாழியால் உலகெலாம் ஒருவழிப் படரவாழ்
ஆழியான் மைந்தர்பே ரறிவினர் அழகினர்
ஊழியார் எளிதின்நிற்கு அரசுதந் துதவுவார். 85

நீதியார் கருணையின் நெறியினர் நெறிவயின்
பேதியா நிலைமையார் எவரினும் பெருமையார்
போதியாது அளவிலா உணர்வினர் புகழினர்
காதிசேய் தருகடல் கடவுள்வெம் படையினர். 86

வேல்இகல் சினவுதா டகைவிளிந்து உருளவில்
கோலிஅக் கொடுமையாள் புதல்வரைக் கொன்றுதன்
கால்இயல் பொடியினல் நெடியகல் படிவமாம்
ஆலிகைக்கு அரியபே ருருவளித்து அருளினன். 87

நல்உறுப்பு அமையும்நம் பியரின்முன் பவன்நயந்து
எல்உறுப்பு அரியபே ரெழுசுடர்க் கடவுள்தன்
பல்இறுத் தவன்வலிக்கு அமைதியம் பகம்எனும்
வில்இறுத் தருளினன் மிதிலைபுக்கு அனையநாள். 88

உளைவயப் புரவியான் உதவஉற்று ஒருசொலால்
அளவில்கற் புடையசிற் றவைபணித் தருளலால்
வளையுடைப் புணரிசூழ் மகிதலத் திருவெலாம்
இளையவற் குதவிஇத் தலைஎழுந் தருளினன். 89

தெவ்இரா வகைநெடுஞ் சிகைவிரா மழுவினன்
அவ்இரா மனையும்மா வலிதொலைத் தருளினன்
இவ்இரா கவன்வெகுண்டு எழும்இரா அனையனும்
வெவ்விரா தனைஇரா வகைதுடைத் தருளினன். 90

கரன்முதல் கருணையற் றவர்கடல் படையொடும்
சிரம்உகச் சிலைகுனித்து உதவுவான் திசையுளார்
பரமுகப் பகைதுமித்து அருளுவான் பரமராம்
அரன்முதல் தலைவருக்கு அதிசயத் திறலினன். 91

84-ம் பாட்டு: மாறுளார் - மண்ணுக்கும் விண்ணுக்கும் மாறுன பாதாள உலகத்தில் உள்ளவர்கள். 87-ம் பாட்டு: ஆலிகை - அகலிகை (என்பதன்விகாரம்). 88-ம் பாட்டு: எல் உறுப்பு......இறுத் தருளினன்-இருளின் சிறு பகுதியையும் அரிதாகும்படி (இல்லாமல்) ஒழிக்கும் சூரியனுடைய பற்களை (தக்ஷனுடைய யாகத்தின்போது) உதிர்த்த முக்கண்ணனை சிவனுடைய வில்லை ஒடித்தான். 89-ம் பாட்டு: சிற்றவை - சிற்றன்னையாகிய கைகேயி. புரவியான் - தசரதன். இளையவற்கு - பரதனுக்கு, 90-ம் பாட்டு; அவ்இராமன் - பரசுராமன்.

ஆயமால் நாகர்தாழ் ஆழியா னேஅலால்
காயமான் ஆயினன் யாவனே காவலா
நீஅமான் நேர்தியால் நேரில்மா ரீசனர்
மாயமா னாயினர் மாயமான் ஆயினன். 92

உக்கஅந் தமும்உடல் பொறைதுறந்து உயர்பதம்
புக்கஅந் தமும்நமக்கு உரைசெயும் புரையதோ
திக்குஅவம் தரநெடுந் திரள்கரம் சினவுதோள்
அக்கவந் தனும்நினைந்து அமரர்தாழ் சவரிபோல். 93

முனைவரும் பிறரும்மேல் முடிவரும் பகல்எலாம்
இனையர்வந் துறுவர்என்று இயல்தவம் புரிகுவார்
வினையெனும் சிறைதுறந்து உயர்பதம் விரவினர்
எனையர்என்று உரைசெய்கேன் இரவிதன் சிறுவனே. 94

மாயையால் மதியிலா நிருதர்கோன் மனைவியைத்
தீயகான் நெறியின்உய்த் தனன்அவட் டேடுவார்
நீஐயா தவம்இழைத் துடைமையால் நெடுமனம்
தூய்மையா உடைமையால் உறவினைத் துணிகுவார். 95

தந்திருந் தனர்அருள் தகைநெடும் பகைஞனும்
இந்திரன் சிறுவனுக்கு இறுதிஇன்று இசைதரும்
புந்தியின் பெருமையாய் போதர்என்று உரைசெய்தான்
மந்திரம் கெழுமுநூல் மரபுணர்ந்து உதவுவான். 96

அன்னவாம் உரையெலாம் அறிவினல் உணர்குவான்
உன்னையே உடையஎற்கு அரியதுஎப் பொருள்அரோ
பொன்னையே பொருவுவாய் போதுவாய் என்றனன்
தன்னையே அனையவன் சரணம்வந் தணுகினன். 97

வேறு

இராமனைச் சுக்கிரீவன் சந்தித்தல்

*கண்டனன் என்ப மன்னோ கதிரவன் சிறுவன் காமர்க்
குண்டலம் துறந்த கோல வதனமும் குளிர்க்கும் கண்ணும்
புண்டரிகங்கள் பூத்துப் புயல்தழீஇப் பொலிந்த திங்கள்
மண்டலம் உதயம் செய்த மரகதக் கிரிய னானை. 98

*நோக்கினன் நெடிது நின்றான் நொடிவரும் கமலத் தண்ணல்
ஆக்கிய உலகம் எல்லாம் அன்றுதொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த எல்லாம் குவிந்திரு படிவம் ஆகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்த என்பான். 99

92-ம் பாட்டு: மால்நாகர் - பெரிய தேவர்கள். ஆழியான் - திருமால். காயமான் - மனித சரீரம் உடையவன். அமான் - அந்தப் பெரியோன். மாயமான் - பெரிய எமன். 95-ம் பாட்டு: நிருதர் கோன் - இராவணன். அவட்டேடுவார் - அவளை (சீதையை)த் தேடுவார். 96-ம் பாட்டு: இந்திரன் சிறுவன் - வாலி.

*தேறினன் அமரர்க் கெல்லாம் தேவராம் தேவர் அன்றே
மாறிஇப் பிறப்பில் வந்தார் மானிட ராகி மன்னே
ஆறுகொள் சடிலத் தானும் அயனும்என்று இவர்கள் ஆதி
வேறுள குழுவை யெல்லாம் மானுடம் வென்ற தென்றே. 100

*எனநினைந்து இனைய எண்ணி இவர்கின்ற காதல் ஓதக்
கனைகடற் கரைநின் றேறாக் கண்ணிணை களிப்ப நோக்கி
அனகனைக் குறுகி னான்அவ் அண்ணலும் அருத்தி கூரப்
புனைமலர்த் தடக்கை நீட்டிப் போந்தினி திருத்தி என்றான். 101

தவாவலி அரக்கர் என்னும் தகாஇருட் பகையைத் தள்ளிக்
குவால்அறம் நிறுத்தற் கேற்ற காலத்தின் கூட்டம் ஒத்தார்
அவாமுதல் அறுத்த சிந்தை அனகனும் அரியின் வேந்தும்
உவாஉற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார். 102

கூட்டம்ஒத் திருந்த வீரர் குறித்ததோர் பொருட்கு முன்னாள்
ஈட்டிய தவமும் பின்னர் முயற்சியும் இயைந்த தொத்தார்
மீட்டும்வாள் அரக்கர் என்னும் தீவினை வேரின் வாங்கக்
கேட்டுணர் கல்வி யோடு ஞானமும் கிடைத்த தொத்தார். 103

*ஆயதோர் அவதி யின்கண் அருக்கன்சேய் அரசை நோக்கித்
தீவினை தீய நோற்றார் என்னின்யார் செல்வ நின்னை
நாயகம் உலகுக் கெல்லாம் என்னலாம் நலமிக் கோயை
மேயினன் விதியே நல்கின் மேவலா காதென் என்றான். 104

மையறு தவத்தின் வந்த சவரிஇம் மலையில் நீவந்து
எய்தினை இருந்த தன்மை இயம்பினள் யாங்கள் உற்ற
கையறு துயரம் நின்னால் கடப்பது கருதி வந்தேம்
ஐயநிற் றீரும் என்ன அரிக்குலத் தரசன் சொல்வான். 105

*முரணுடைத் தடக்கை ஓச்சி முன்னவன் பின்வந் தேனை
இருள்நிலைப் புறத்தின் காறும் உலகெங்கும் தொடர இக்குன்று
அரணுடைத் தாகி உய்ந்தேன் ஆருயிர் துறக்க லாற்றேன்
சரண்உனைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம் என்றான். 106

*என்றஅக் குரக்கு வேந்தை இராமனும் இரங்கி நோக்கி
உன்தனக் குரிய இன்ப துன்பங்கள் உள்ள முன்னாள்
சென்றன போக மேல்வந்து உறுவன தீர்ப்பல் அன்ன
நின்றன எனக்கும் நிற்கும் நேர்என மொழியும் நேரா. 107

102-ம் பாட்டு: உவாஉற வந்துகூடும் உடுபதி இரவி - அமாவாசையன்று சூரியனும் சந்திரனும் ஒன்றுசேர்ந்து, சூரிய கிரணங்களில் சந்திரன் மறைந்திருக்கிறான் என்பது நூற்கொள்கை. உடுபதி - இராமச்சந்திரன். இரவி - சூரிய குமாரனான சுக்கிரீவன். 105-ம் பாட்டு: நிற்றீரும்-நின்னால் (அந்தத் துயரம்) தீரும். 106-ம் பாட்டு: இருள்நிலைப்புறம் - உலகைக் கடலும், கடலைச் சக்கரவாளமலையும், அந்த மலையை இருளும் சூழ்ந்திருக்கிறது. அந்த இருள்வரையிலும் சுக்கிரீவனை வாலி துரத்தினான்.

*மற்றினி உரைப்ப தென்னே வானிடை மண்ணில் உன்னைச்
செற்றவர் என்னைச் செற்றார் தீயரே எனினும் உன்னோடு
உற்றவர் எனக்கும் உற்றார் உன்கிளை எனதுஎன் காதல்
சுற்றம்உன் சுற்றம் நீஎன் இன்னுயிர்த் துணைவன் என்றான். 108

*ஆர்த்தது குரக்குச் சேனை அஞ்சனை சிறுவன் மேனி
போர்த்தன பொடித்த ரோமப் புளகங்கள் பூவின் மாரி
தூர்த்தனர் விண்ணோர் மேகம் சொரிந்தன அனகன் சொன்ன
வார்த்தைஎக் குலத்து ளோர்க்கும் மறையினும் மெய்என்று உன்ன.

ஆண்டெழுந்து அடியில் தாழ்ந்து அஞ்சனை சிங்கம் வாழி
தூண்திரள் தடந்தோள் மைந்த தோழனும் நீயும் வாழி
ஈண்டுநும் கோயில் எய்தி இனிதினின் இருக்கை காண
வேண்டுதும் அருளு கென்றான் வீரனும் விழுமி தென்றான். 110

அனைவரும் பூஞ்சோலைக்குச் செல்லுதல்

*ஏகினன் இரவி சேயும் இருவரும் அரிகள் ஏறும்
ஊகவெஞ் சேனை சூழ்வந்து அடியிணை உவந்து வாழ்த்த
நாகமும் நரந்தக் காவும் நளினவா விகளும் நல்கிப்
போகபூ மியையும் ஏயும் புதுமலர்ச் சோலை புக்கார். 111

ஆரமும் அகிலும் துன்றி அவிர்பளிக் கறைஅ ளாவி
நாரம்நின் றனபோல் தோன்றி நவமலர்த் தடங்கள் நாடும்
பாரமும் மருங்கும் தெய்வத் தருவும்நீர்ப் பண்ணை ஆடும்
சூர்அர மகளிர் ஊசல் துவன்றிய சும்மைத் தன்றே. 112

வேறு

அயர்வில் கேள்விசால் அறிஞர் வேலைமுன்
பயில்வில் கல்வியார் பொலிவில் பான்மைபோல்
குயிலும் மாமணிக் குழுவு சோதியால்
வெயிலும் வெள்ளிவெண் மதியும் மேம்படா. 113

ஏய அன்னதாம் இனிய சோலைவாய்
மேய மைந்தரும் கவியின் வேந்தனும்
தூய பூவணை பொலித்து தோன்றினார்
ஆய அன்பினர் அளவ ளாவுவார். 114

கனியும் கந்தமும் காயும் தூயநன்கு
இனிய யாவையும் கொணர யாரினும்
புனிதன் மஞ்சனத் தொழில்பு ரிந்துபின்
இனிதி ருந்துநல் விருந்தும் ஆயினான். 115

விருந்தும் ஆகிஅம் மெய்ம்மை அன்பினோடு
இருந்து நோக்கிநொந்து இறைவன் சிந்தியாப்
பொருந்து நன்மனைக் குரிய பூவையைப்
பிரிந்து ளாய்கொலோ நீயும் பின்என்றான். 116

என்ற வேலையின் எழுந்து மாருதி
குன்று போலநின்று இருகை கூப்பினுன்
நின்ற நீதியாய் நெடிது கேட்டியால்
ஒன்று யான்உனக்கு உரைப்ப துண்டெனு. 117

வாலி - சுக்கிரீவன் பகைமைபற்றி இராமனுக்கு அனுமான் கூறுதல்

நாலு வேதமாம் நவையில் ஆர்கலி
வேலி அன்னதொல் மலையின் மேல்உளான்
சூலி தன்அருள் துறையின் முற்றினுன்
வாலி என்றுளான் வரம்பில் ஆற்றலான். 118

கழறு தேவரோடு அவுணர் கண்ணில்நின்று
உழலும் மந்தரத்து உருவு தேயமுன்
அழலும் கோள்அரா அகடு தேய்விடச்
சுழலும்வேலையைக் கடையும் தோளினுன். 119

நிலனும் நீருமாய் நெருப்பும் காற்றும்என்று
உலேவில் பூதம்நான்கு உடைய ஆற்றலான்
அலையும் வேலைசூழ் கிடந்த ஆழிமா
மலையி னின்றும்இம் மலையின் வாவுவான். 120

கிட்டு வார்பொரக் கிடைக்கின் அன்னவர்
பட்ட நல்வலம் பாகம் எய்துவான்
எட்டு மாதிரத்து இறுதி நாளும்உற்று
அட்ட மூர்த்திதாள் பணியும் ஆணையான். 121

கால்செ லாதுஅவன் முன்னர்க் கந்தவேள்
வேல்செ லாதுஅவன் மார்பின் வென்றியான்
வால்செ லாதவாய் அலது இராவணன்
கோல்செ லாதுஅவன் குடைசெ லாதரோ. 122

118-ம் பாட்டு : தொல்மலை - பழமையான (கயிலாய) மலை. சூலி - சூலாயுதத்தை உடைய சிவன். *119-ம் பாட்டு :* அரா - வாசுகி என்ற பாம்பு. தோளினுன் - வாலி. ஒரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து மந்தர மலையை மத்தாகவும், வாசுகியைக் கயிருகவும் கொண்டு பாற்கடலைக் கடைய முயன்று, போதிய பல மில்லாததால் என்ன செய்வது என்று சோர்ந்து நின்ற சமயத்தில், அவ்வழியே வந்த வாலியை நோக்கி, பாற்கடலைக் கடையுமாறு தேவர்கள் வேண்டிக்கொள்ள, வாலியும் தனியொருவனுக நின்று வாசுகி என்ற பாம்பின் தலையையும் வாலையும் பிடித்துக் கடைந் தான். *120-ம் பாட்டு :* ஆழிமா மலை - சக்கர வாளமலை. *121-ம் பாட்டு :* வலம் பாகம் - பலத்தின் பாதிப்பாகம். அட்டமூர்த்தி - பஞ்சபூதங்கள், சூரியன், சந்திரன், எஜமானன் என எட்டு மூர்த்தி களாக இருக்கும் சிவன். *122-ம் பாட்டு :* வால் செலாதவாய் அலது - வால் செல்லாத இடத்தில் அல்லாமல்; வால்சென்ற இடத்தில்.

மேரு வேமுதல் கிரிகள் வேரொடும்
பேரு மேஅவன் பேரு மேல்நெடும்
காரும் வானமும் கதிரும் நாகமும்
தூரு மேஅவன் பெரிய தோள்களால். 123

பார்இ டந்தவெம் பன்றி பண்டைநாள்
நீர்க டைந்தபே ராமை நேருளான்
மார்பி டந்தமா எனினும் மற்றவன்
தார்கி டந்ததோள் தகைய வல்லவோ. 124

படர்ந்த நீள்நெடும் தலைப ரப்பிமீது
அடர்ந்து பாரம்வந்து உறஅ னந்தனும்
கிடந்து தாங்கும்இக் கிரியை மேயினன்
நடந்து தாங்கும்இப் புவனம் நாளெலாம். 125

கடல்ஒ லிப்பதும் கால்ச லிப்பதும்
மிடல்அ ருக்கர்தேர் மீது செல்வதும்
தொடரின் மற்றவன் சுளியின் ஏற்றலால்
அடலின் வெற்றியாய் அயலின் ஆவதோ. 126

வெள்ளம் ஏழுபத்து உள்ள மேருவைத்
தள்ள லானதோள் அரியின் தானையான்
உள்ள மின்றிஎவ் உயிரும் எஞ்சலால்
வள்ள லேஅவன் வாழ வாழுமால். 127

மழைஇ டிப்புறு வயவெஞ் சீயமா
முழைஇ டிப்புறு முரண்வெங் காலும்மென்
தழைது டிப்புறச் சார்வு றுதுஅவன்
விழைவி டத்தின்மேல் விளிவை அஞ்சலால். 128

மெய்க்கொள் வாலினன் மிடல்இ ராவணன்
தொக்க தோள்உறத் தொடர் படுத்தநாள்
புக்கி லாதவெம் பொழிஅ ரத்தநீர்
உக்கி லாதவே றுலகம் யாவதோ. 129

இந்தி ரன்தனிப் புதல்வன் இன்நளிர்ச்
சந்தி ரன்தழைத் தனைய தன்மையான்
அந்த கன்தனக்கு அரிய ஆணையான்
முந்தி வந்தனன் இவனின் மொய்ம்பினேய். 130

124-ம் பாட்டு : பார் இடந்த பன்றி - உலகத்தைக் கொம்பால் குத்தித் தூக்கிய வராகமூர்த்தி. நீர் கடைந்த பேராமை - பாற் கடல் கடைந்தபோது, மத்தாக நின்ற மந்தர மலையின் அடிப்பாகத் தில் ஆதாரமாக இருந்து தாங்கிய கூர்மாவதாரம். மார்பிடந்த மா- இரணியனது மார்பைப் பிளந்த நரசிம்ம மூர்த்தி. 125-ம் பாட்டு : ஆதிசேஷன் இந்தப் பூமியைத் தன் தலைகளின்மேல் சுமந்து தாங்கு கிறான்; வாலி இதன்மீது நடந்து தாங்குகிறான் (பரிபாலனம் செய்கி றான்). 130-ம் பாட்டு : சந்திரன்......தன்மையான் - பூரண சந்தி ரனைப் போன்று வெண்ணிறமுடையவன் வாலி.

அன்ன வன்எமக்கு அரச ளுக வே
இன்ன வன்இளம் பதம்இ யற்றும்நாள்
முன்ன வன்குலப் பகைஞன் முட்டினுன்
மின்ன யிற்றுவாள் அவுணன் மேன்மையான். 131

முட்டி நின்றவன் முரண்உ ரத்தின்நேர்
ஒட்ட அஞ்சிநெஞ்சு உலைய ஓடினுன்
வட்ட மண்டலத்து அரிது வாழ்வெனு
எட்ட ரும்பெரும் பிலனுள் எய்தினுன். 132

எய்து காலையில் பிலனுள் எய்தியான்
நொய்தின் இங்குஅவற கொணாவன் நோன்மையாய்
செய்தி காவல்நீ சிறிது போதெனு
வெய்தின் எய்தினுன் வெகுளி மேயினுன். 133

ஏகி வாலியும் இருது ஏழொடு ஏழ்
வேக வெம்பிலம் தடவி வெம்மையான்
மோக வென்றிமேல் முயல்வின் வைகிடச்
சோகம் எய்திநின் துணைது ளங்கினுன். 134

அழுத ழுங்குறும் இவனை அன்பினில்
தொழுதி ரந்துநின் தொழில்இ தாதலால்
எழுது வென்றியாய் அரசு கொள்கெனப்
பழுதி தென்றனன் பரியும் நெஞ்சினுன். 135

என்று தானும்அவ் வழிஇ ரும்பிலம்
சென்றென் முன்னவற் றேடு வேன்அவற்
கொன்று ளான்தனைக் கொலவொ ணுதெனில்
பொன்று வேன்எனுப் புகுதல் மேயினுன். 136

தடுத்து வல்லவர் தணிவு செய்துநோய்
எடுத்த வேலைஓர் இயைவி னுல்இயைந்து
அடுத்த காவலும் அரிகள் ஆணையால்
கொடுத்த துண்டிவன் கொண்ட னன்கொலாம். 137

அன்ன நாளில்மா யாவி அப்பிலத்து
இன்ன வாயினூடு எய்தும் என்னயாம்
பொன்னின் மால்வரைப் பொருப்பொ ழித்துவேறு
உன்னு குன்றெலாம் உடன்அ டுக்கினேம். 138

131-ம் பாட்டு: இளம்பதம் - இளவரசுப் பதவி. அவுணன் - மாயாவி என்ற அரக்கன். இவன் இராவணனுடைய மனைவியான மண்டோதரியின் சகோதரன்; மயனுடைய புதல்வன். 133-ம் பாட்டு: நோன்மையாய் - வலிமையுடைய சுக்கிரீவனே. 134-ம் பாட்டு: இருது, ஏழொடு ஏழ் - 28 மாதகாலம். நின்துணை - உன் துணைவனை சுக்கிரீவன்.

சேமம் அவ்வழிச் செய்து செங்கதிர்க்
கோம கன்தனைக் கொண்டு வந்துயாம்
மேவு குன்றின்மேல் வைகும் வேலைவாய்
ஆவி உண்டனன் அவனை அன்னவன். 139

ஒளித்த வன்உயிர்க் கள்ளை உண்டுஉளம்
களித்த வாலியும் கடிதின் எய்தினன்
விளித்து நின்றுவேறு உரைபெ றான்இருந்து
அளித்த வாறுநன்று இளவ லார்எனு 140

வால்வி சைத்துவான் வளிநி மிர்ந்தெனக்
கால்வி சைத்துஅவன் கடிதின் எற்றலும்
நீல்நி றத்துவிண் நெடுமு கட்டவும்
வேலை புக்கவும் பெரிய வெற்பெலாம். 141

ஏறி னான்அவன் எவரும் அஞ்சுறச்
சீறி னான்நெடும் சிகரம் எய்தினன்
வேறில் ஆதவன் புதல்வன் மெய்ம்மையாம்
ஆறி னானும்வந்து அடிவ ணங்கினன். 142

வணங்கி அண்ணநின் வரவி லாமையால்
உணங்கி உன்வழிப் படர உன்னுவேற்கு
இணங்கர் இன்மையால் இறைவ உன்னுடைக்
கணங்கள் காவல்உன் கடமை என்றனர். 143

ஆணை அஞ்சிஇவ் அரசை எய்திவாழ்
நாணி லாதஎன் நவையை நல்குவாய்
பூணு லாவுதோள் இணைபொ றுய்எனக்
கோணி னான்நெடுங் கொடுமை கூறினன். 144

அடல்க டந்ததோ ளவனை அஞ்சிவெங்
குடல்க லங்கிஎம் குலம்ஒ டுங்கமுன்
கடல்க டைந்தஅக் கரத லங்களால்
உடல்க டைந்தனன் இவன்உ லைந்தனன். 145

இவன்உ லைந்துலைந்து எழுக டற்புறத்து
அவனி யும்கடந்து அயல்க டந்தனன்
கவனம் ஒன்றிலான் கால்க டாய்என
அவனி வேலைஏழ் அரியின் வாவினன். 146

என்று கால்மகன் இயம்ப ஈசனும்
நன்று நன்றெனு நனிதொ டர்ந்துபின்
சென்ற வாலிமுன் சென்ற செம்மல்தான்
அன்று வாவுதற்கு அறிந்த னன்கொலாம். 147

139-ம் பாட்டு: அவனை - மாயாவியை. அன்னவன் - வாலி.

இனைய வாவியந்து இளவல் தன்னொடும்
வனையும் வார்கழல் கருணை வள்ளல்பின்பு
இளைய வீரர்செய் தமைஇ யம்பெனப்
புனையும் வாகையான் புகறல் மேயினன். 148

நக்க ரக்கடல் புறத்து நண்ணும்நாள்
செக்கர் மெய்த்தனிச் சோதி சேர்கலாச்
சக்க ரப்பொருப் பின்த லைக்கும்அப்
பக்கம் உற்றுஅவன் கடிது பற்றினன். 149

பற்றி அஞ்சிலன் பழியை வெஞ்சினம்
முற்றி நின்றதன் மூரண்வ லிக்கையால்
எற்று வான்எடுத்து எழுத லும்பிழைத்து
அற்றம் ஒன்றுபெற்று இவன் அகன்றனன். 150

எந்தை மற்றுஅவன் எயிறுஅ துக்குமேல்
அந்த கற்கும்ஓர் அரணம் இன்மையால்
இந்த வெற்பின்வந்து இவன்இ ருந்தனன்
முந்தை உற்றதோர் சாபம் உண்மையால். 151

உரிமை என்றுஇவற்கு உரிய தாரமாம்
அரும ருந்தையும் அவன் விரும்பினன்
இருமை யும்துறந்து இவன்இ ருந்தனன்
கருமம் இங்கிதே கடவுள் என்றனன். 152

வேறு

வாலிமீது இராமன் கோபம் கொள்ளுதல்

பொய்இ லாதவன் வரன்முறை இம்மொழி புகல
ஐயன் ஆயிரம் பெயருடை அமரர்க்கும் அமரன்
வையம் நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கண்
செய்ய தாமரை ஆம்பலம் போதெனச் சிவந்த. 153

திறத்து மாமறை அயனொடுஐம் முகன்பிறர் தேடிப்
புறத்துஅ கத்துணர் அரியதன் பொலன்அடிக் கமலம்
உறச்சி வப்பஇத் தரைமிசை யுறல்அறம் ஆக்கல்
மறத்தை வீட்டுதல் அன்றியே பிறிதுமற் றுண்டோ. 154

148-ம் பாட்டு: இளையவீரர் - வாலியும் சுக்கிரீவனும். இந்தப் பாட்டும் 147-ம் பாட்டும் செருகுகவிகள் என்று ஏற்கெனவே அச்சிட்டவர்கள் கூறியிருக்கிறார்கள். 149-ம் பாட்டு: சோதி-சூரியன். பொருப்பின் தலைக்கும் அப்பக்கம் - மலையிடத்துக்கும் அப்பால். 151-ம் பாட்டு: சாபம் -'இருசிய மூகமலைக்கு வந்தால் இறப்பாய்' என்று வாலிக்கு மதங்கமுனிவன் இட்ட சாபம். 152-ம் பாட்டு: ''உரிமை'' என்பது ''உருமை'' என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும். சுக்கிரீவனுடைய மனைவிக்கு உருமை என்று பெயர். இருமை - இளவரசுப் பதவியும், மனைவியும்.

ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத் தன்அர சுரிமைப்
பாரம் ஈந்தவன் பரிவிலன் ஒருவன்தன் இளையோன்
தாரம் வவ்வினன் என்றசொல் தரிக்குமா றுளதோ. 155

உலகம் ஏழினோடு ஏழும்வந்து அவன்உயிர்க்கு உதவி
விலகும் என்னினும் வில்லிடை வாளியின் வீட்டித்
தலைமை யோடுநின் தாரமும் உனக்கின்று தருவேன்
புலமை யோய்அவன் உறைவிடம் காட்டென்று புகன்றான். 156

எழுந்து பேருவ கைக்கடல் பெருந்திரை இரைப்ப
அழுந்து துன்பத்துக்கு அக்கரை கண்டனன் அனையான்
விழுந்த தேஇனி வாலிதன் வலிஎன விரும்பா
மொழிந்த வீரற்குயாம் எண்ணுவது உண்டென மொழிந்தான். 157

அனைய ஆண்டுஉரைத்து அனுமனே முதலிய அமைச்சர்
நினைவும் கல்வியும் நீதியும் சூழ்ச்சியும் நிறைந்தார்
எனையர் அன்னவ ரோடும்வேறு இருந்தனன் இரவி
தனயன் அவ்வழிச் சமீரணன் மகன்உரை தருவான். 158

உன்னி னேன்நினது உள்ளத்தின் உள்ளவை உரவோய்
அன்ன வாலியைக் காலனுக்கு அளிப்பதோர் ஆற்றல்
இன்ன வீரர்பால் இல்லைஎன்று அயிர்த்தனை இனியான்
சொன்ன கேட்டவை கடைப்பிடிப் பாய்எனச் சொன்னான். 159

சங்கு சக்கரக் குறியுள தடக்கையில் தாளில்
எங்கு இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை
செங்கண் வில்கரத்து இராமன்அத் திருநெடு மாலே
இங்குஉ தித்தனன் ஈண்டுஅறம் நிறுத்தற்கு இன்னும் 160

செறுக்கும் வன்திறல் திரிபுரம் தீயெழச் சினவிக்
கறுக்கும் வெஞ்சினக் காலன்தன் காலமும் காலால்
அறுக்கும் புங்கவன் ஆண்டபேர் ஆடகத் தனுவில்
இறுக்கும் தன்மைஅம் மாயவற் கன்றியும் எளிதோ. 161

என்னை ஈன்றவன் இவ்வுலகு யாவையும் ஈன்றான்
தன்னை ஈன்றவற்கு அடிமைசெய் தவம்உனக்கு அஃதே
உன்னை ஈன்றஎற்கு உறுபதம் உளதென உரைத்தான்
இன்ன தோன்றலே அவன்இதற்கு ஏதுஉண்டு இறையோய். 162

துன்பு தோன்றிய பொழுதுடன் தோன்றுவன் எவர்க்கும்
முன்பு தோன்றலை அறிதற்கு முடிவுஎன் என்று இயம்ப
அன்பு சான்றென உரைத்தனன் ஐயஎன் யாக்கை
என்பு தோன்றல உருகினது எனில்பிறிது எவனோ. 163

161-ம் பாட்டு: காலமும் - காலபாசத்தையும். புங்கவன் - ஆடவரில் சிறந்த சிவன். 163-ம் பாட்டு: முடிவு-உபாயம். சான்றென. சாட்சி என்று. உரைத்தனன்-வாயுபகவான் சொன்னான். பிறிது எவனோ - வேறுவிதமாகச் சந்தேகிப்பது எப்படி?

பிறிதும் மன்னவன் பெருவலி ஆற்றலைப் பெரியோய்
அறிதி என்னின்உண்டு உபாயமும் அஃதுஅரு மரங்கள்
நெறியில் நின்றன ஏழின்ஒன்று உருவஇந் நெடியோன்
பொறிகொள் வெஞ்சரம் போவது காண்எனப் புகன்றான். 164

நன்று நன்றெனா நன்னெடுங் குன்றமும் நாணும்
தன்து ணைத்தனி மாருதி தோளிணை தழுவிச்
சென்று செம்மலைக் குறுகியான் செப்புவது உளதால்
ஒன்று னக்குஎன இராமனும் உரைத்திஅஃது என்றான். 165

மராமரங்களை எய்யும்படி இராமனிடம் சுக்கிரீவன் கூறுதல்

ஏக வேண்டும்இந் நெறிஎன இனிதுகொண் டேகி
மாகம் நீண்டன குறுகிட நிமிர்ந்தன மரங்கள்
ஆக ஐந்தினோடு இரண்டின்ஒன்று உருவநின் அம்பு
போக வேஎன்றன் மனத்திடர் போம்எனப் புகன்றான். 166

மறுவி லான்அது கூறலும் வானவர்க்கு இறைவன்
முறுவல் செய்துஅவன் முன்னிய முயற்சியை உன்னி
எறுழ்வ லித்தடந் தோள்களால் சிலையைநாண் ஏற்றி
அறிவி னால்அளப் பரியவற்று அருகுசென்று அணைந்தான். 167

4. மராமரப் படலம்

[ஏழு மராமரங்களின்மீது இராமன் அம்பை எய்து துளைத்ததைப்பற்றிக் கூறும் பகுதி]

ஊழி பேரினும் பேர்வில உலகங்கள் உலைந்து
தாழும் காலத்தும் தாழ்வில தயங்குபே ரிருள்சூழ்
ஆழி மாநிலம் தாங்கிய அரும்பெரும் கிரிகள்
ஏழும் ஆண்டுசென்று ஒருவழி நின்றென இயைந்த. 168

கலைகொண்டு ஓங்கிய மதியமும் கதிரவன் தானும்
தலைகண்டு ஓடுதற்கு அருந்தவம் தொடங்குறும் சாரல்
மலைகண் டோம்என்ப தல்லது மலர்மிசை அயற்கும்
இலைகண் டோம்எனத் தெரிப்பரும் தரத்தன ஏழும். 169

ஒக்க நாளெலாம் உழல்வன உலைவில ஆக
மிக்க தோர்பொருள் உளதென வேறுகண் டிலமால்
திக்கும் வானமும் செறிந்தஅத் தருநிழற் சீதம்
புக்கு நீங்கலில் தளர்வில இரவிதேர்ப் புரவி. 170

166-ம் பாட்டு: குறுகிட - ஆகாயமும் சிறிதாகும்படியாக. 168-ம் பாட்டு: மாநிலம் தாங்கிய அரும்பெரும் கிரிகள் - ஏழு குலபர்வதங்களும் பூமியைத் தாங்குவதாக நூற்கொள்கை. அந்தப் பர்வதங்களின் பெயர்களை ஆரணிய காண்டம் 27-ம் பாட்டின் அடிக்குறிப்பில் காண்க.

நீடு நாள்களும் கோள்களும் என்னமேல் நிமிர்ந்து
மாடு தோற்றுவ மலர்எனப் பொலிகின்ற வளத்த
ஓடு மாச்சுடர் வெண்மதிக் குள்கறுப்பு உயர்ந்த
கோடு தேய்த்தலில் களங்கம்உற் றுமெனும் குறிய. 171

தீதுஅ றும்பெருஞ் சாகைகள் தழைக்கின்ற செயலால்
வேதம் என்னவும் தகுவன விசும்பினும் உயர்ந்த
ஆதி அண்டம்முன்பு அளித்தவன் உலகின்அங்கு அவன்ஊர்
ஓதி மம்தனிப் பெடையொடும் புடைஇருந்து உறைவ. 172

நாற்றம் மல்குபோது அடைகனி காய்முதல் நாளு
வீற்று மண்டலத்து யாவையும் வீழ்கில யாண்டும்
காற்ற லம்பினும் கலிநெடு வானிடைக் கலந்த
ஆற்றின் வீழ்ந்துபோய் அலேகடல் பாய்தரும் இயல்ப. 173

அடிய நான்மறை அந்தணன் அண்டத்துக்கு அப்பால்
முடியின் மேல்சென்ற முடியன ஆதலின் முடியா
நெடிய மால்எனும் நிலேயன நீரிடைக் கிடந்த
படியின் மேல்நின்ற மேருமால் வரையினும் பரிய. 174

வள்ளல் இந்திரன் மைந்தற்கும் தம்பிக்கும் வயிர்த்த
உள்ள மேஎன ஒன்றினென்று உள்வயிர்ப்பு உடைய
தெள்ளு நீரிடைக் கிடந்தபார் சுமக்கின்ற சேடன்
வெள்ளி வெண்படம் குடைந்துகீழ் போகிய வேர. 175

சென்று திக்கினே அளந்தன பணேகளின் தேவர்
என்று நிற்கும்என்று இசைப்பன இருசுடர் திரியும்
குன்றி னுக்குயர்ந்து அகன்றன ஒன்றினும் குறுகா
ஒன்றி னுக்கொன்றின் இடைநெடிது யோசனே உடைய. 176

ஆய மாமரம் அனேத்தையும் நோக்கிநின்று அமலன்
தூய வார்கணே துரப்பதோர் ஆதரம் தோன்றச்
சேய வானமும் திசைகளும் செவிடுறத் தேவர்க்கு
ஏய்வி லாததோர் பயம்வரச் சிலேயின்நாண் எறிந்தான். 177

ஒக்க நின்றதெய் வுலகமும் அங்கங்கே ஓசை
பக்கம் நின்றவர்க்கு உற்றது பகர்வதெப் படியோ
திக்க யங்களும் மயங்கின திசைகளும் திகைத்த
புக்க யன்பதி சலிப்புற ஒலித்ததப் பொருவில். 178

அரிந்த மன்சிலே நாண்நெடிது ஆர்த்தலும் அமரர்
இரிந்து நீங்கினர் கற்பத்தின் இறுதிஎன்று அயிர்த்தார்
பரிந்த தம்பியே பாங்குநின் றுன்மற்றைப் பல்லோர்
புரிந்த தன்மையை உரைசெயின் பழிஅவர்ப் புணரும். 179

175-ம் பாட்டு: வள்ளல் இந்திரன் மைந்தற்கும் தம்பிக்கும் - வாலிக்கும், சுக்கிரீவனுக்கும்.

மராமரங்களின்மீது இராமன் அம்பு எய்தல்

எய்தல் காண்டும்கொல் இன்னம்என்று அரிதின்வந்து எய்திப்
பொய்இல் மாருதி முதலினோர் புகல்உறும் பொழுதில்
மொய்கொள் வார்சிலை நாணினை முறையுற வாங்கி
வெய்ய வாளியை ஆளுடை வில்லியும் விட்டான். 180

ஏழு மாமரம் உருவிக்கீழ் உலகம்என்று இசைக்கும்
ஏழும் ஊடுபுக்கு உருவிப்பின் உடன்அடுத்து இயன்ற
ஏழ்இ லாமையால் மீண்டதுஅவ் இராகவன் பகழி
ஏழு கண்டபின் உருவுமால் ஒழிவதன்று இன்னும். 181

ஏழு வேலையும் உலகுமேல் உயர்ந்தன ஏழும்
ஏழு குன்றமும் இருடிகள் எழுவரும் புரவி
ஏழும் மங்கையர் எழுவரும் நடுங்கின என்னை
ஏழு பெற்றதோ இக்கணைக்கு இலக்கம்என்று எண்ணி. 182

அன்ன தாயினும் அறத்தினுக்கு ஆருயிர்த் துணைவன்
என்னும் தன்மையை நோக்கினர் யாவரும் எவையும்
பொன்னின் வார்கழல் புதுநறுந் தாமரை பூண்டு
சென்னி மேல்கொண்ட அருக்கன்சேய் இவைஇவை செப்பும். 183

வேறு

வையம்நீ வானும்நீ மற்றும்நீ மலரின்மேல்
ஐயன்நீ ஆழிநீ ஆழிவாழ் அமலன்நீ
செய்யநீ வினைதெறும் தேவும்நீ நாயினேன்
உய்யவந்து உதவினாய் உலகம்முந்து உதவினாய். 184

என்எனக்கு அரியதுஎப் பொருளும்எற்கு எளிதலால்
உன்னைஇத் தலைவிடுத்து உதவினார் விதியினார்
அன்னைஒப் புடையஉன் அடியருக்கு அடியன்யான்
மன்னவர்க் கரசஎன்று உரைசெய்தான் வசைஇலான். 185

ஆடினார் பாடினார் அங்கும்இங் கும்கலந்து
ஓடினார் உவகையாம் நறவைஉண்டு உணர்கிலார்
நேடினும் வாலிகா லனைஎன நெடிதுநாள்
வாடினார் தோளெலாம் வளரமற் றவரெலாம். 186

181-ம் பாட்டு: அடுத்து இயன்ற ஏழ் இலாமையால் - கீழே இருக்கும் ஏழு உலகங்களுக்கு அப்பால், ஏழு என்ற எண்ணிக்கையுடன் வேறு எவையும் இல்லாத காரணத்தால். கீழ் ஏழு உலகங்களின் பெயர்கள்: அதலம், விதலம், சுதலம், கராதலம், ரசாதலம், மகாதலம், பாதாளம். *182-ம் பாட்டு:* ஏழுவேலை - உவர்நீர், கரும்பின் சாறு, மது, நெய், தயிர், பால், நீர் ஆகியவை தனித்தனியே ஒவ்வொன்றிலும் நிறைந்திருக்கும் ஏழு கடல்கள். உலகுமேல் உயர்ந்தன ஏழும் - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், மஹர்லோகம், தபோலோகம், சத்தியலோகம். இருடிகள் எழுவரும்-ஆரணிய காண்டம் 104-ம் பாட்டின் அடிக்குறிப்பைப்

துந்துபியின் எலும்புக் குவியலை இராமன் காணுதல்

அண்டமும் அகிலமும் அடையஅன்று அனலிடைப்
பண்டுவெந்து அனநெடும் பசைவறந் திடினும்வான்
மண்டலம் தொடுவதுஅம் மலையின்மேல் மலையெனக்
கண்டனன் துந்துபிக் கடல்அனான் உடல்அரோ. 187

தென்புலக் கிழவன்ஊர் மயிடமோ திசையின்வாழ்
வன்புலக் கரிமடிந் ததுகொலோ மகரமீன்
என்புலப் புறஉலர்ந் ததுகொலோ இதுஎனா
அன்புலப் பரியநீ உரைசெயாய் எனஅவன் 188

5. துந்துபிப் படலம்

[துந்துபி என்ற அரக்கனும் வாலியும் போரிட்டதையும், அரக்கனின் எலும்பை இலக்குவன் கால்விரலால் தள்ளி எறிந்ததையும்பற்றிக் கூறும் பகுதி]

துந்துபிப் பெயருடைச் சுடுசினத்து அவுணன்மீது
இந்துவைத் தொடநிமிர்ந் தெழுமருப்பு இணையினான்
மந்தரக் கிரியெனப் பெரியவன் மகரநீர்
சிந்திடக் கருநிறத்து அரியினைத் தேடுவான். 189

அங்குவந்து அரிஎதிர்ந்து அமைதிஎன் என்றலும்
பொங்குவெஞ் செருவினில் பொருதிஎன்று உரைசெயக்
கங்கையின் கணவன்அக் கறைமிடற் றிறைவனே
உங்கள்வெங் கதவலிக்கு ஒருவன்என்று உரைசெய்தான். 190

பார்க்க. புரவி ஏழும் - சூரியனுடைய ஏழு குதிரைகளும். மங்கையர் எழுவரும் - சப்த மாதர்கள்: பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, சாமுண்டி. 187-ம் பாட்டு: அண்டமும்......அரோ - பிரளய காலத்தில் ஊழித்தீயால் வெந்த உலகங்களைப்போல, பசையற்றுப்போன துந்துபியின் எலும்புகளின் குவியல் இருசியமூகமலையின்மேல் மற்றொரு மலை இருந்ததுபோல ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. அன்று-பிரளய காலத்தில். கடல்அனான் - கடலைப்போன்று பெரிதாகவும் கருப்பாகவும், முழக்கம் செய்பவனாகவும் இருந்த துந்துபி. இவன் வாலியினால் கொல்லப்பட்ட ஓர் அரக்கன்; மாயாவிக்குச் சகோதரன். இவனைப் பற்றிய விபரங்களை அடுத்த படலத்தில் காணலாம். 188-ம் பாட்டு: தென்புலக் கிழவன் ஊர் - தென் திசைக்கு உரியவனான எமன் ஏறிச்செல்லும். 189-ம் பாட்டு: மருப்பு இணையினான் - எருமைக்கடாவின் வடிவம் கொண்டவனாதலால் துந்துபிக்கு இரண்டு கொம்புகள் உண்டு.

கடிதுசென்று அவனும்அக் கடவுள்தன் கயிலையைக்
கொடியகொம் பினில்மடுத்து எழுதலும் குறுகிமுன்
நொடிதிநின் குறையைஎன் றலும்நுவன் றனன்அரோ
முடிவில்வெஞ் செருஎனக்கு அருள்செய்வான் முயல்கெனா. 191

மூலமே வீரமே மூடினா யோடுபோர்
ஏலுமே தேவர்பால் ஏகெனா ஏவினான்
சாலநாள் போர்செய்வா யாதியே சாரல்போய்
வாலிபால் ஏகெனா வானுளோர் வானுளான். 192

அன்னவன் விடஉவந்து அவனும்வந்து அரிகள்தம்
மன்னவன் வருகபோர் செயஎனா மலையினைச்
சின்னபின் னம்படுத் திடுதலும் சினவிஎன்
முன்னவன் முன்னர்வந்து அனையவன் முனைதலும் 193

இருவரும் திரிவுறும் பொழுதில்இன் னவர்கள்என்று
ஒருவரும் சிறிதுணர்ந் திலர்கள்எவ் உலகினும்
வெருவரும் தகைவிலார் விழுவர்நின்று எழுவரால்
மருவரும் தகையர்தா னவர்கள்வா னவர்கள்தாம். 194

தீயெழுந் ததுவிசும் புறநெடுந் திசையெலாம்
போய்எழுந் ததுமுழக் குடன்எழுந் ததுபுகை
தோயநன் புணரியும் தொடர்தடங் கிரிகளும்
சாய்அழிந் தனஅடித் தலம்எடுத் திடுதலால். 195

புயலும்வா னகமும்அப் புணரியும் புணரிசூழ்
அயலும்வீழ் தூளியால் அறிவரும் தகையவா
மயனின்மா மகனும்வா லியும்மறத்து உடலினர்
இயலும்மா மதியம்ஈ ராறும்வந்து எய்தவே. 196

அற்றதா கியசெருப் புரியும்அவ் வளவினில்
கொற்றவா லியும்அவன் குவவுதோள் வலியொடும்
பற்றிஆ சையின்நெடும் பணைமருப் பிணைபறித்து
எற்றினான் அவனும்வான் இடியின்நின்று உரறினான். 197

தலையின்மேல் அடிபடக் கடிதுசாய் நெடிதுதாள்
உலையவாய் முழைதிறந்து உதிரஆறு ஒழுகமா
மலையின்மேல் உரும்இடித் தென்னவான் மண்ணெடும்
குலையமா திசைகளும் செவிடுறக் குத்தினான். 198

191-ம் பாட்டு: முடிவில்........முயல்கெனா - (என்னோடு) முடிவில் லாத யுத்தம் செய்ய வரவேண்டும்; இதுவே நீ எனக்கு அருள வேண்டியது. 192-ம் பாட்டு: மூலமே......ஏலுமே - முதன்மை யும், பலமும் மிகுந்த உன்னுடன் போர்செய்ய என்னால் இயலுமோ? வானுளான்-இந்திரன். 196-ம் பாட்டு: உடலினர்......எய்தவே - பன்னிரண்டு மாதகாலம் போரிட்டனர்.

கவரிஇங்கு இதுஎனக் கரதலம் கொடுதிரித்து
இவர்தலும் குருதிபட்டு இசைநெடும் திசைதொறும்
துவர்அணிந் தனஎனப் பொசிதுதைந் தனதுணைப்
பவர்நெடும் பணைமதப் பகையின்வன் கரிகளே. 199

புயல்கடந்து இரவிதன் புகல்கடந்து அயல்உளோர்
இயலும்மண் டிலம்இகந்து எனையவும் தவிரமேல்
வயிரவன் கரதலத்து அவன்வலித் தெறியஅன்று
உயிரும்விண் படரஇவ் உடலும்இப் பரிசரோ. 200

முட்டிவான் முகடுசென்று அளவிஇம் முடையுடல்
கட்டிமால் வரையைவந்து உறுதலும் கருணையான்
இட்டசா பமும்எனக்கு உதவும்இவ் இயல்பினில்
பட்டவா முழுவதும் பரிவினுல் உரைசெய்தான். 201

வேறு

கேட்டனன் அமலனும் கிளந்த வாறெலாம்
வாள்தொழில் இளவலை இதனை மைந்தநீ
ஓட்டுஎன அவன்கழல் விரலின் உந்திஞன்
மீட்டுஅது விரிஞ்சன்நாடு உற்று மீண்டதே. 202

ஆயிடை அரிக்குலம் அசனி அஞ்சிட
வாய்திறந்து ஆர்த்தது வள்ளல் ஓங்கிய
தூயநற் சோலையில் இருந்த சூழல்வாய்
நாயக உணர்த்துவது உண்டு நான்எனு 203

6. கலன்காண் படலம்

[இராவணன் தூக்கிக்கொண்டு போகும்போது சீதை கழற்றி எறிந்த ஆபரணங்களை எடுத்துச் சேர்த்துவைத்திருந்த சுக்கிரீவன், அவற்றைக் கொண்டுவந்து காட்ட இராமன் அந்த நகைகளைக் கண்டதுபற்றிக் கூறும் பகுதி]

இவ்வழி யாம்இயைந்து இருந்த தோர்இடை
வெவ்வழி இராவணன் கொணர மேலைநாள்
செவ்வழி நோக்கிநின் தேவி யேகொலாம்
கவ்வையின் அரற்றினள் கழிந்த சேணுளாள். 204

200-ம் பாட்டு : வயிர வன் கரதலத்து - உறுதியும் வலிமையும் கொண்ட கையினுல். 201-ம் பாட்டு : கருணையான் இட்ட சாபமும் - வாலியினுல் வீசி எறியப்பட்ட துந்துபியின் சவம், மதங்க முனிவனின் ஆசிரமத்தில் விழுந்து அசுத்தப்படுத்தியதால், அம்முனிவன் கோபம் கொண்டு, 'வாலி இந்த இருசியமூக மலைக்கு வந்தால் தலைவெடித்துச் சாவான்' என்றும், 'அவன் நண்பர்கள் வந்தால் கல்லாகிவிடுவார்கள்' என்றும் இட்ட சாபமும். 202-ம் பாட்டு : இதனை - துந்துபியின் எலும்பை. 203-ம்பாட்டு : நான் - சுக்கிரீவன்.

உழையரின் உணர்த்துவது என்பது உன்னியோ
குழைபொரு கண்ணினுள் குறித்த தோர்ந்திலம்
மழைபொரு கண்ணிணை வாரி யோடுதன்
இழைபொதிந் திட்டனள் யாங்கள் ஏற்றனம். 205

வைத்தனம் இவ்வழி வள்ளல் நின்வயின்
உய்த்தன தந்தபோது உணர்தி யால்எனுக்
கைத்தலத்து அன்னவை கொணர்ந்து காட்டினன்
நெய்த்தலைப் பால்கலந் தனைய நேயத்தான். 206

சீதையின் ஆபரணங்களைப் பார்த்த இராமனின் நிலை

தெரிவுற நோக்கினன் தெரிவை மெய்அணி
எரிகனல் எய்திய மெழுகின் யாக்கைபோய்
உருகினன் என்கிலம் உயிருக்கு ஊற்றமாய்
பருகினன் என்கிலம் பகர்வ தென்கொல்யாம். 207

நல்குவது என்இனி நங்கை கொங்கையை
புல்கிய பூணும்அக் கொங்கை போன்றன
அல்குலின் அணிகளும் அல்கு லாயின
பல்கலன் பிறவும்அப் படிவம் ஆனவே. 208

விட்டபே ருணர்வினை விளித்த என்கெனோ
அட்டன உயிரைஅவ் அணிகள் என்கெனோ
கொட்டின சாந்தெனக் குளிர்ந்த என்கெனோ
சுட்டன என்கெனோ யாது சொல்லுகேன். 209

மோந்திட நறுமல ரான மொய்ம்பினில்
ஏந்திட உத்தரி யத்தை ஏய்ந்தன
சாந்தமும் ஆய்ஒளி தழுவப் போர்த்தலால்
பூந்துகில் ஆயஅப் பூவை பூண்களே. 210

ஈர்த்தது செங்கணீர் வெள்ளம் யாவையும்
போர்த்தன மயிர்ப்புறம் புளகம் பொங்குதோள்
வேர்த்தன என்கெனோ வெதும்பி னன்என்கோ
தீர்த்தனை அவ்வழி யாது செப்புகேன். 211

விடம்பரந் தனையதோர் வெம்மை மீக்கொள
நெடும்பொழுது உணர்வினோடு உயிர்ப்பு நீங்கிய
தடம்பெருங் கண்ணனைத் தாங்கி னன்தனது
உடம்பினில் செறிமயிர் சுறுக்கென்று ஏறவே. 212

207-ம் பாட்டு : தெரிவை - தெரிவைப் பருவமுடைய சீதை. 26 வயது முதல் 31 வரை தெரிவைப் பருவமாகும். சீதைக்கு அப்போது 31 வயது முடிந்து 32 தொடங்கியது. 212-ம் பாட்டு : தாங்கினன் - சுக்கிரீவன் தாங்கினன்.

தாங்கினன் இருத்திஅத் துயரம் தாங்கலாது
ஏங்கிய நெஞ்சினன் இரங்கி விம்முவான்
வீங்கிய தோளினுய் வினையி னேன்உயிர்
வாங்கினென் இவ்அணி வருவித் தேஎனு 213

அயனுடை அண்டத்தின் அப்பு றத்தையும்
மயர்வற நாடிஎன் வலியும் காட்டிஉன்
உயர்புகழ்த் தேவியை உதவற் பாலனல்
துயர்உழந்து அயர்தியோ சுருதி நூல்வலாய். 214

திருமகள் அனையஅத் தெய்வக் கற்பினுள்
வெருவரச் செய்துள வெய்ய வன்புயம்
இருபதும் ஈரைந்து தலையும் நிற்கஉன்
ஒருகணைக்கு ஆற்றுமோ உலகம் ஏழுமே. 215

ஈண்டுநீ இருந்தருள் ஏழொடு ஏழெனுப்
பூண்டபே ருலகங்கள் வலியின் புக்கிடைத்
தேண்டிஅவ் வரக்கனைத் திருகித் தேவியைக்
காண்டியான் இவ்வழிக் கொணரும் கைப்பணி. 216

ஏவல்செய் துணைவரேம் யாங்கள் ஈங்கிவன்
தாவரும் பெருவலித் தம்பி நம்பிநின்
சேவகம் இதுஎனில் சிறுக நோக்கல்என்
மூவகை உலகும்நின் மொழியின் முந்துமோ. 217

பெருமையோ ராயினும் பெருமை பேசலார்
கருமமே அல்லது பிறிதென் கண்டது
தருமம்நீ யல்லது தனித்து வேறுண்டோ
அருமைஏது உனக்குநின்று அவலம் கூர்தியோ. 218

முளரிமேல் வைகுவான் முருகற் றந்தஅத்
துளிரியல் பாகத்தான் தடக்கை ஆழியான்
அளவிஒன்று ஆவரே அன்றி ஐயம்இல்
கிளவியாய் தனித்தனிக் கிடைப்ப ரோதுணை. 219

என்னுடைச் சிறுகுறை முடித்தல் ஈண்டுஒரீஇப்
பின்னுடைத் தாயினும் ஆக பேதுறும்
மின்னிடைச் சனகியை மீட்டு மீடுமால்
பொன்னுடைச் சிலையினுய் விரைந்து போய்என்முன். 220

சுக்கிரீவனை நோக்கி இராமன் பேசுதல்

எரிகதிர்க் காதலன் இனைய கூறலும்
அருவியங் கண்திறந்து அன்பின் நோக்கினன்
திருவுறை மார்பனும் தெளிவு தோன்றிட
ஒருவகை உணர்வுவந்து உரைப்ப தாயினன். 221

220-ம் பாட்டு : என்னுடைச்........ஆக - என்னுடைய சிறு குறையை நிறைவேற்றுதல் (வாலியை ஒழித்தல்), இப்பொழுதே நடந்தேறவேண்டுமென்பதில்லை; பின்னல் பார்த்துக்கொள்ளலாம்.

விலங்குஎழில் தோளிஞய் வினையி னேனும்இவ்
இலங்குவில் கரத்தினன் இருக்க வேஅவள்
கலன்கழித் தனள்இது கற்பு மேவிய
பொலன்குழைத் தெரிவையர் புரிந்து ளோர்கள்யார். 222

வாள்நெடுங் கண்ணிஎன் வரவு நோக்கயான்
தாள்நெடுங் கிரியொடும் தடங்கள் தம்மொடும்
பூணேடும் புலம்பியே பொழுது போக்கினேன்
நாண்நெடுஞ் சிலைசுமந்து உழல நாணலேன். 223

ஆறுடன் செல்பவர் அஞ்சொல் மாதரை
வேறுளார் துயர்செயின் விலக்கி வெஞ்சமத்து
ஊறுறத் தம்முயிர் உகுப்பர் யான்எனைத்
தேறினள் தன்துயர் தீர்த்த கிற்றிலேன். 224

கருங்கடல் தொட்டனர் கங்கை தந்தனர்
பொரும்புலி மாஞெடு புனலும் ஊட்டினர்
பெருந்தகை என்குலத்து அரசர் பின்ஒரு
திருந்திழை துயரம்நான் தீர்க்க கிற்றிலேன். 225

இந்திரற்கு உரியதோர் இடுக்கண் தீர்த்துஇகல்
அந்தகற்கு அரியபோர் அவுணற் றேய்த்தனன்
எந்தைமற் றவனின்வந்து உதித்த யான்உளேன்
வெந்துயர்க் கொடும்பழி வில்லின் தாங்கினேன். 226

விரும்பெழில் எந்தையார் மெய்ம்மை வீயுமேல்
வரும்பழி என்றுயான் மகுடம் சூடலேன்
கரும்புஅழி சொல்லியைப் பகைஞன் கைக்கொளப்
பெரும்பழி சூடினேன் பிழைத்தது என்அரோ. 227

என்னநொந்து இன்னன பன்னி ஏங்கியே
துன்னரும் துயரத்துச் சோர்கின் ருன்தனைப்
பன்னரும் கதிரவன் புதல்வன் பையுள்பார்த்து
அன்னவெந் துயர்எனும் அளக்கர் நீங்கினுன். 228

ஐயநீ ஆற்றலின் ஆற்றி னேன்அலது
உய்வனே எனக்கிதின் உறுதி வேறுண்டோ
வையகத்து இப்பழி தீர மாய்வது
செய்வன்நின் குறைமுடித் தன்றிச் செய்கிலேன். 229

என்றனன் இராகவன் இனைய காலையில்
வன்திறல் மாருதி வணங்கி நோக்கினுன்
குன்றிவர் தோளிஞய் கூற வேண்டுவது
ஒன்றுளது அதனைநீ உவந்து கேள்என. 230

225-ம் பாட்டு: கருங்கடல் தொட்டனர்-இராமனின் மூதாதையரான சகரர்கள் கடல் தோண்டினர். கங்கை தந்தனர்-பகீரதன் கங்கையைப் பூமிக்குக்கொண்டுவந்தான். பொரும்புலி......ஊட்டினர்-மாந்தாதா என்ற சூரியகுல மன்னன் புலியும் மானும் ஒரு துறையில் நீர் உண்ணும்படி ஆண்டான். 226-ம் பாட்டு: அவுணற்றேய்த்தனன்-

கொடுந்தொழில் வாலியைக் கொன்று கோமகன்
கடுங்கதி ரோன்மகன் ஆக்கிக் கைவளர்
நெடும்படை கூட்டினு லன்றி நேடரிது
அடும்படை அரக்கர்தம் இருக்கை ஆணையாய். 231

வானதோ மண்ணதோ மற்றும் வெற்பதோ
ஏனமா நாகர்தம் இருக்கைப் பாலதோ
தேனுலாம் தெரியலாய் தெளிவ தன்றுநாம்
ஊனுடை மானிட மானது உண்மையால். 232

எவ்வுல கத்தினும் இமைப்பின் எய்துவர்
வவ்வுவர் அவ்வழி மகிழ்ந்த யாவையும்
வெவ்வினை வந்தென வருவர் மீள்வரால்
அவ்வவர் உறைவிடம் அறியற் பாலதோ. 233

ஒருமுறை யேபரந்து உலகம் யாவையும்
திருமகள் உறைவிடம் தேர வேண்டுமால்
வரன்முறை நாடிட வரம்பின் ருல்உலகு
அருமைஉண்டு அளப்பரும் ஆண்டு வேண்டுமால். 234

ஏழுபத் தாகிய வெள்ளத்து எம்படை
ஊழியின் கடலென உலகம் போர்க்குமால்
ஆழியைக் குடிப்பினும் அயன்செய் அண்டத்தைக்
கீழ்மடுத் தெடுப்பினும் கிடைத்த செய்யுமால். 235

வாலியின் இருப்பிடத்துக்கு அனைவரும் செல்லுதல்

ஆதலால் அன்னதே அமைவ தாம்என
நீதியாய் நினைந்தனென் எனநி கழ்த்தினுன்
சாதுவாம் என்றஅத் தனுவின் செல்வனும்
போதும்நாம் வாலிபால் என்னப் போயினுர். 236

7. வாலிவதைப் படலம்

[வாலியை இராமன் கொன்றதுபற்றிக் கூறும் பகுதி]

வெங்கண்ஆளி ஏறும்மீளி மாவும்வேக நாகமும்
சிங்கஏறு இரண்டொடும்தி ரண்டஅன்ன செய்கையார்
தங்குசாலம் மூலம்ஆர்த மாலம்ஏலம் வாழைமாப்
பொங்குநாக மும்துவன்ற சாரலூடு போயினுர். 237

சம்பராசுரனை (தசரதன்)ஒழித்தான். 237-ம் பாட்டு: ஆளியேறு- ஆண் யாளி (சுக்கிரீவன்). மீளிமா-பராக்கிரமம் பொருந்திய புலிகள். நாகமும் - யானைகளும். புலிகளும் யானைகளும் சுக்கிரீவனுடைய மந்திரிமார் நால்வருக்கு உவமை என்பர். சிங்க ஏறு இரண்டு - இரண்டு ஆண் சிங்கங்கள் (இராமனும் இலக்குவனும்.)

உழையுலாம்நெ டுங்கண்மாதர் ஊசல்ஊசல் அல்லவே
தழைஉலாவு சந்தலர்ந்த சாரல்சாரல் அல்லவே
மழையுலாவு முன்றில்அல்ல மன்றல்நாறு சண்பகக்
குழைஉலாவு சோலைசோலை யல்லபொன்செய் குன்றமே. 238

அறங்கள்நாறு மேனியார்அ ரிக்கணங்க ளோடும்அங்கு
இறங்குபோதும் ஏறுபோதும் ஈறிலாத ஓதையால்
கறங்குவார் கழற்கலன்க லிப்பமுந்து கண்முகிழ்த்து
உறங்குமேகம் நன்குணர்ந்து மாகமீது உலாவுமே. 239

நீடுநாகம் ஊடுமேகம் ஓடநீரும் ஓடநேர்
ஆடுநாகம் ஓடமான யானைஓட ஆளிபோம்
மாடுநாகம் நீடுசாரல் வாளைஓடும் வாவியூடு
ஓடுநாகம் ஓடவேங்கை யோடும்ஊகம் ஓடவே. 240

மருண்டமாம லைத்தடங்கள் செல்லலாவ அல்லமால்
தெருண்டிலாம தத்தயானை சீறிநின்று இடித்தலால்
இருண்டகா ரகில்தடத்தொடு இற்றுவீழ்ந்த சந்துவந்து
உருண்டபோது அழிந்ததேன்ஒ ழுக்குபேர்இ ழுக்கினே. 241

மினல்மணிக்கு லம்துவன்றி வில்அலர்ந்து விண்குலாய்
அனல்பரப்ப ஒப்பமீது இமைப்பவந்து அவிப்பபோல்
புனல்பரப்ப ஒப்பிருந்த பொன்பரப்பும் என்பரால்
இனையவில்த டக்கைவீரர் ஏறுகின்ற குன்றமே. 242

மருவியாடும் வாவிதோறும் வானயாறு பாயும்வந்து
இருவிபாய் தடங்கண்மீனின் ஏறுபாயும் ஆறுபோல்
அருவிபாயும் ஒன்றின்ஒன்றின் ஆனைபாயும் ஏனலில்
குருவிபாயும் ஒடிமந்தி கோடுபாயும் மாடெலாம். 243

தேன்இழுக்கும் சாரல்வாரி செல்லமீது செல்லும்நாள்
மீன்இழுக்கும் அன்றிவான வில்இழுக்கும் வெண்மதிக்
கூன்இழுக்கும் மற்றுலாவு கோள்இழுக்கும் என்பரால்
வான்இழுக்கும் ஏலவாச மன்றல்நாறு குன்றமே. 244

அன்னதாய குன்றின்ஆறு சென்றவீரர் ஐந்தொடைந்து
என்னலாய யோசனைக்கும் உம்பர்ஏறி இம்பரில்
பொன்னின்நாடு இழிந்ததன்ன வாலிவாழ் பொருப்பிடம்
துன்னினார்கள் செய்வதென்னை என்றுநின்று சொல்லுவார். 245

238-ம் பாட்டு : அல்லவே, அல்ல - இல்லாத இடங்களில், அவை அல்லாத இடங்களில். 240-ம் பாட்டு: நாகம் - (பாட்டில் உள்ள கிரமப்படி) ஆகாயம், பாம்பு, சுரபுன்னை, நீர்நாகம். 242-ம் பாட்டு: (இதன் பொருள்) மின்னுகின்ற இரத்தினங்களின் கூட்டம் நிறைந்து, ஒளி வீசி, ஆகாயத்தை அளாவி, நெருப்பைப் பரப்பியதுபோலப் பிரகாசிக்க, வில் வீரர்களான இராம இலக்குவர்கள் ஏறிச்செல்லும் மலைகள், அந்த இரத்தினப் பிரகாசக் கனலை அவிக்கும் நீர்ப் பரப்பைப்போலப் பொன்னொளியைப் பரப்பும். 245-ம் பாட்டு: பொருப்பிடம் - கிஷ்கிந்த மலையிடம்.

அவ்விடத்து இராமன்நீ அழைத்துவாலி யானதோர்
வெவ்விடத்தின் வந்துபோர் விளைக்கும்எல்லை வேறுநின்று
எவ்விடத்து ணிந்தமைந்தது என்கருத்தி தென்றனன்
தெவ்அடக்கும் வென்றியானும் நன்றிதென்று சிந்தியா. 246

வார்த்தைஅன்ன தாகவான்இ யங்குதேரி ஞன்மகன்
நீர்த்தரங்க வேலைஅஞ்ச நீலமேகம் நாணவே
வேர்த்துமண்ணு ளோர்இரிந்து விண்ணுளோர்கள் விம்மமேல்
ஆர்த்தஓசை ஈசன்உண்ட அண்டமுற்றும் உண்டதே. 247

வாலியைப் போருக்கு அழைத்து சுக்கிரீவன் தோள்தட்டுதல்

இடித்துரப்பி வந்துபோர் எதிர்த்தியேல் அடர்ப்பென்என்று
அடித்தலங்கள் கொட்டிவாய்ம டித்தடுத்து அலங்குதோள்
புடைத்துநின்று உளைத்தபூசல் புக்கதென்ப மிக்கிடம்
துடிப்பஅங்கு றங்குவாலி திண்செவித் தொளைக்கணே. 248

வேறு

*மால்பெருங் கடகரி முழக்கம் வாளரி
ஏற்பது செவித்தலத்து என்ன ஓங்கிய
ஆர்ப்பொலி கேட்டனன் அமளி மேல்ஒரு
பாற்கடல் கிடந்ததே அனைய பான்மையான். 249

*உருத்தனன் பொரஎதிர்ந்து இளவல் உற்றமை
வரைத்தடந் தோளிஞன் மனத்தின் எண்ணிஞன்
சிரித்தனன் அவ்வொலி திசையின் அப்புறத்து
இரித்ததுஇவ் உலகம்ஓர் ஏழொடு ஏழையே. 250

*எழுந்தனன் வல்விரைந்து இறுதி ஊழியில்
கொழுந்திரைக் கடல்கிளர்ந் தனைய கொள்கையான்
அழுந்தியது அக்கிரி அருகின் மால்வரை
விழுந்தன தோள்புடை விசித்த காற்றினே. 251

போய்ப்பொடித் தனமயிர்ப் புறத்த வெம்பொறி
காய்ப்பொடுஉற் றெழுவட கனலும் கண்கெடத்
தீப்பொடித் தனவழி தேவர் நாட்டினும்
மீப்பொடித் தனபுகை உயிர்ப்பு வீங்கவே. 252

*கைக்கொடு கைத்தலம் புடைப்பக் காவலின்
திக்கயங் களும்மதச் செருக்குச் சிந்தின
உக்கன உருமினம் உலைந்த உம்பரும்
நெக்கன நெரிந்தன நின்ற குன்றமே. 253

வந்தனென் வந்தனென் என்ற வாசகம்
இந்திரி முதல்திசை எட்டும் கேட்டன
சந்திரன் முதலிய தார கைக்குழாம்
சிந்தின மணிமுடிச் சிகரம் தீண்டவே. 254

வீசின காற்றின்வேர் பறிந்து வெற்பினம்
ஆசையை உற்றன அண்டப் பித்திகை
பூசின வெண்மயிர் பொடித்த வெம்பொறி
கூசினன் அந்தகன் குலைந்த தும்பரே. 255

கடித்தவாய் எயிறுகு கனல்கள் கார்விசும்பு
இடித்தவால் உரும்உகும் இனத்தின் சிந்தின
தடித்துவிழ் வனஎனத் தகர்ந்து சிந்தின
வடித்ததோள் வலயத்தின் வயங்கு காசரோ. 256

ஞாலமும் நாற்றிசைப் புனலும் நாகரும்
மூலமும் முற்றிட முடிவில் தீக்கும்அக்
காலமும் ஒத்தனன் கடலில் தான்கடை
ஆலமும் ஒத்தனன் எவரும் அஞ்சவே. 257

*ஆயிடைத் தாரைஎன்று அமிழ்தில் தோன்றிய
வேயுடைத் தோளினுள் இடைவி லக்கினுள்
வாயிடைப் புகைவர வாலி கண்வரும்
தீயிடைத் தன்நெடுங் கூந்தல் தீகின்றுள். 258

*விலக்கலை விடுவிடு விளித்து ளான்உரம்
கலக்கிஅக் கடல்கடைந்து அமுது கண்டென
உலக்குவித்து உயிர்குடித்து ஒல்லை மீள்குவன்
மலைக்குல மயிலென மடந்தை கூறுவாள். 259

*கொற்றவ நின்பெருங் குவவுத் தோள்வலிக்கு
இற்றனன் முன்னைநாள் ஈடுண்டு ஏகினான்
பெற்றிலன் பெருந்திறல் பெயர்த்தும் போர்செயற்கு
உற்றது நெடுந்துணை உடைமை யால்என்றுள். 260

மூன்றென முற்றிய முடிவில் பேருலகு
ஏன்றுடன் உற்றன எனக்கு நேர்எனத்
தோன்றினும் தோற்றுஅவை தொலையும் என்றலின்
சான்றுள அன்னவை தையல் கேட்டியால். 261

மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தம்இல் கடைகயிறு அடைகல் ஆழியான்
சந்திரன் தூண்எதிர் தருக்கின் வாங்குநர்
இந்திரன் முதலிய அமரர் ஏனையோர் 262

பெயர்வுற வலிக்கவும் மிடுக்கில் பெற்றியார்
அயர்வுறல் உற்றதை நோக்கி யான்அது
தயிர்எனக் கடைந்துஅவர்க்கு அமுதம் தந்தது
மயிலியல் குயில்மொழி மறக்க லாவதோ. 263

262-ம் பாட்டு : பாற்கடல் கடைந்தபோது மத்து, மந்தரமலை; கடையும் கயிறு, வாசுகி என்ற பாம்பு; மத்தைத் தாங்கும் அடைகல், கூர்மாவதாரம் எடுத்த திருமால்; அடைதூண், சந்திரன். ஏனையோர் - அசுரர்கள்.

வில் அரமரும் அவுணர் யாவரும்
ரனர் ஏனையர் சொல்ல லாவதோ
என் பெயர்சொலிக் குலையும் ஆர்இனி
மாற்றலற் காகிவந்து எதிரும் மாண்பினர். 264

*பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்
பாதியும் என்னதால் பகைப்ப தெங்ஙனம்
நீதுயர் ஒழிகென நின்று கூறினன். 265

*அன்னது கேட்டவள் அரச ஆயவற்கு
இன்னுயிர் நட்பமைந்து இராமன் என்பவன்
உன்னுயிர் கோடலுக்கு உடன்வந் தான்எனத்
துன்னிய அன்பினர் சொல்லி னர்என்றாள். 266

*உழைத்தவல் இருவினைக்கு ஊறு காண்கிலாது
அழைத்துஅயர் உலகினுக்கு அறத்தின் ஆறெலாம்
இழைத்தவற்கு இயல்புஅல இயம்பி என்செய்தாய்
பிழைத்தனை பாவிஉன் பெண்மை யால்என்றான். 267

*இருமையும் நோக்குறும் இயல்பினாற்கு இது
பெருமையோ இங்கிதில் பெறுவது என்கொலோ
அருமையின் நின்றுலகு அளிக்கும் ஆறுடைத்
தருமமே தவிர்க்குமோ தன்னைத் தான்அரோ. 268

*ஏற்றபேர் உலகெலாம் எய்தி ஈன்றவள்
மாற்றவள் ஏவமற்று அவள்தன் மைந்தனுக்கு
ஆற்றரும் உவகையால் அளித்த ஐயனைப்
போற்றலை இன்னன புகறற் பாலையோ. 269

*நின்றபேர் உலகெலாம் நெருக்கி நேரினும்
வென்றிவெஞ் சிலையலால் பிறிது வேண்டுமோ
தன்துணை ஒருவரும் தன்னின் வேறிலான்
புன்தொழில் குரங்கொடு புணரும் நட்பனே. 270

*தம்பிய ரல்லது தனக்கு வேறுயிர்
இம்பரில் இலதென எண்ணி ஏய்ந்தவன்
எம்பியும் யானும்உற்று எதிர்ந்த போரிடை
அம்பிடை தொடுக்குமோ அருளின் ஆழியான். 271

267-ம் பாட்டு: (இதன் பொருள்) 'செய்து சேர்த்த நல்வினைக்கும் தீவினைக்கும் முடிவு காண முடியாமல், கூவி வருந்தும் உலகத்துக்கு தர்ம மார்க்கத்தையெல்லாம் எடுத்துக்காட்டியவனை இராமனுடைய இயல்புக்கு மாறுபட்டதைச் சொல்லி என்ன அபசாரத்தைச் செய்துவிட்டாய்! பாவி, உன் பெண் புத்தியால் இந்தத் தவறு செய்துவிட்டாய்' என்று வாலி கூறினன். 268-ம் பாட்டு: தருமமே ......அரோ-தருமமே தருமத்தை ஒழித்துவிடுமோ? 269-ம் பாட்டு: ஈன்றவள் மாற்றவள் - பெற்றதாயின் (கோசலையின்) சக்களத்தி (கைகேயி); மாற்றாந்தாய். புகறற்பாலையோ - நீ சொல்லலாமோ?

*இருத்திநீ இறைஇவண் இமைப்பில் காலையில்
உருத்தவன் உயிர்குடித்து உடன்வந் தாரையும்
கருத்தழித்து எய்துவென் கலங்கல் என்றனன்
விரைக்குழல் பின்உரை விளம்ப அஞ்சினுள். 272

வேறு

வாலி மலையில் ஏறி வருதல்

ஒல்லைச் செருவேட்டு உயர்வான்புய ஓங்கல் உம்பர்
எல்லைக் கும்அப்பால் இவர்கின்ற இரண்டி னேடும்
மல்லல் கிரியின் தலைவந்தனன் வாலி கீழ்பால்
தொல்லைக் கிரியின் தலைதோற்றிய ஞாயி றென்ன. 273

நின்ருன் எதிர்யா வரும்நெஞ்சுந டுங்கி அஞ்சத்
தன்தோள் வலியால் தடமால்வரை சாலும் வாலி
குன்றூ டுவந்துஉற் றனன்கோள்அவு ணன்கு றித்த
வன்தூ ணிடைத்தோன் றியமாநர சிங்கம் என்ன. 274

ஆர்க்கின்ற பின்னேன் தனைநோக்கினன் தானும் ஆர்த்தான்
வேர்க்கின்ற வானது உரும்ஏறு வெறித்து வீழப்
போர்க்கின்ற எல்லா உலகும்பொதிர் வுற்ற பூசல்
கார்க்குன்றம் அன்னுன் நிலம்தாவிய காலின் என்ன. 275

அவ்வே லைஇரா மனும்அன்புடைத் தம்பிக்கு ஐய
செவ்வே செலநோக் குதிதானவர் தேவர் நிற்க
எவ்வே லைஎம்மேகம் எக்காலொடுஎக் கால வெந்தீ
வெவ்வே றுலகத் திவன்மேனியை மானும் என்ருன். 276

வள்ளற்கு இளையான் பகர்வான்இவன் தம்முன் வாழ்நாள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக்கொணர்ந் தான்கு ரங்கின
எள்ளற்கு உறும்போர் செயஎண்ணினன் என்னும் இன்னல்
உள்ளத் திடைஊன் றஉணர்ந்திலன் ஒன்றும் என்ருன். 277

ஆற்ருது பின்னும் பகர்வான்அறத்து ஆறுஅ ழுங்க
தேற்ருது செய்வார் களைத்தேறுதல் செவ்வி தன்ருல்
மாற்ருன் எனத்தம் முனைக்கொல்லிய வந்து நின்ருன்
வேற்ருர் கள்திறத்து இவன்தஞ்சம்என் வீர என்ருன். 278

அத்தா இதுகேள் எனஆரியன் கூறு வான்இப்
பித்தா யவிலங் கின்ஒழுக்கினைப் பேச லாமோ
எத்தா யர்வயிற் றினும்பிறந் தோர்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிதுஉத்தமன் ஆதல் உண்டோ. 279

வில்தாங்கு வெற்பன் னஇலங்கெழில் தோள மேன்மை
உற்ருர் சிலர்அல் லவரேபலர் என்ப துண்மை
பெற்ருே ருழைப்பெற் றபயன்பெறும் பெற்றி யல்லால்
அற்ருர் நவைஎன் றலுக்குஆகுநர் ஆர்கொல் என்ருன். 280

280-ம் பாட்டு : பெற்ருருழை.........என்ருன் - 'நாம் அடையப் பெற்றவர்களிடம் அவர்களால் பெறும் பயனைப் பெறுவதே இயல்பு.

வாலியும் சுக்கிரீவனும் போர் செய்தல்

வீரத் திறலோர் இவர்இன்னவி ளம்பும் வேலை
தேரில் திரிவான் மகன்இந்திரன் செம்மல் என்றிப்
பாரில் திரியும் பனிமால்வரை யன்ன பண்பார்
மூரித் திசையா னைஇரண்டென முட்டி னூரே. 281

குன்றேடு குன்ருெத் தனர்கோளரிக் கொற்ற வல்ஏறு
ஒன்றேடு சென்ருென்று எதிர்உற்றன வேயும் ஒத்தார்
நின்றூர் திரிந்தார் நெடுஞ்சாரி நிலம்தி ரிந்த
வன்தோள் குயவன் திணிமட்கலத்து ஆதி என்ன. 282

தோளோடு தோள்தேய்த் தலின்தொல்நிலம் தாங்க லாற்ருத்
தாளோடு தாள்தேய்த் தலின்தந்தத முற்பி றங்கல்
வாளோடு மின்னே டுவபோல்நெடு வானின் ஓடக்
கோளோடு கோள்உற் றனஒத்துஅடர்ந் தார்கொ தித்தார். 283

தம்தோள் வலிமிக் கவர்தாம்ஒரு தாய்வ யிற்றில்
வந்தோர் மடமங் கைபொருட்டும லைக்க லுற்றூர்
சிந்தோடு அரிஉண் கண்திலோத்தமை காதல் செற்ற
சுந்தோ பசுந்தப் பெயர்த்தொல்லையி னேரும் ஒத்தார் 284

கடல்ஒன் றினெடொன் றுமலைக்கவும் காவல் மேருத்
திடல்ஒன் றினெடொன்று அமர்செய்யவும் சீற்றம் என்பது
உடல்கொண்டு இரண்டா கிஉடற்றவும் கண்டி லாதேம்
மிடல்இங் கிவர்வெந் தொழிற்குஒப்புமை வேறு காணேம். 285

ஊகங் களின்நா யகர்வெங்கண்உ மிழ்ந்த தீயால்
மேகங் கள்எரிந் தனவெற்பும்எ ரிந்த திக்கின்
நாகங் கள்நடுங் கினநானில மும்கு லைந்த
மாகங் களைநண் ணியவிண்ணவர் போய்ம றைந்தார். 286

மற்றப்படி, குற்றமில்லாதவர்கள் என்று கூறுவதற்கு உரியவர்கள் யார்?' என்ருன் இராமன். 281-ம் பாட்டு: தேரில் திரிவான் மகன்- சூரிய குமாரஞன சுக்கிரீவன். 284-ம் பாட்டு: மடமங்கை - வாலி யால் அபகரிக்கப்பட்டவளான சுக்கிரீவனின் மனைவி உருமை. சுந் தோபசுந்தர் - சுந்தன், உபசுந்தன் என்ற சகோதரர்கள். இவர் கள் இரணியன் வம்சத்தில் தோன்றிய அரக்கர்கள்; இளமையி லிருந்து மிகுந்த ஒற்றுமையோடு வாழ்ந்துவந்தவர்கள். உலகத் துக்குப் பலவிதமான துன்பங்களைச் செய்துவந்த இந்தச் சகோ தரர்கள், வேறு யாராலும் கொல்லப்பட முடியாதவாறு வரம் பெற்றிருந்தார்கள். இவர்கள் விந்தியமலைச் சாரலில் இருந்த சம யத்தில், பிரமன் அழகில் சிறந்த திலோத்தமையை இவர்களிடம் அனுப்பிவைத்தான். அவளை அடையவேண்டுமென்று இருவரும் ஆசைப்பட்டதன் விளைவாக, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கொன்று விட்டனர். 285-ம் பாட்டு: காவல்மேரு - உலகத்தைக் காவல் செய்யும் மேரு. மலைகள் உலகத்தைத் தாங்குவதாகவும், காப்ப

விண்மே லினரோ நெடுவெற்பின் முகட்டி ஞரோ
மண்மே லினரோ புறமாதிர வீதி யாரோ
கண்மே லினரோ எனயாவரும் காண நின்ருர்
புண்மேல் இரத்தம் பொடிப்பக்கடிப் பார்பு டைப்பார். 287

ஏழொத்து உடன்ஆம் திசைஎட்டொடுஇ ரண்டும் முட்டும்
ஆழிக் கிளர்ஆர் கலிக்குஐம்மடங்கு ஆர்ப்பின் ஓசை
பாழித் தடந்தோ ளினும்மார்பினும் கைகள் பாய
ஊழிக் கிளர்கார் இடிஒத்தது குத்தின் ஓதை. 288

வெவ்வாய் எயிற்ருல் மிடல்வீரர்க டிப்ப மீச்சென்று
அவ்வாய் எழுசோ ரிஅதுஆசைகள் தோறும் வீச
எவ்வா யும்எழுந் தகொழுஞ்சுடர் மீன்கள் யாவும்
செவ்வா யைநிகர்த் தனசெக்கரை ஒத்த மேகம். 289

வேறு

வெந்த வல்இரும் பிடைநெடுங் கூடங்கள் வீழச்
சிந்தி எங்கணும் சிதறுவ போல்பொறி தெறிப்ப
இந்தி ரன்மகன் புயங்களும் இரவிசேய் உரனும்
சந்த வல்நெடுந் தடக்கைகள் தாக்கலின் தகர்வ. 290

உரத்தி ஞல்மடுத்து உந்துவர் பாதம்இட்டு உதைப்பர்
கரத்தி ஞல்விசைத்து எற்றுவர் கடிப்பர்நின்று இடிப்பர்
மரத்தி ஞல்அடித்து உரப்புவர் பொருப்பினம் வாங்கிச்
சிரத்தின் மேல்எறிந்து உறுக்குவர் தெழிப்பர்தீ விழிப்பர். 291

எடுப்பர் பற்றிமற் ருெருவரை ஒருவர்விட் டெறிவர்
கொடுப்பர் வந்துஉரம் குத்துவர் கைத்தலம் குளிப்பக்
கடுப்பி னில்பெருங் கறங்கெனச் சாரிகை பிறங்கத்
தடுப்பர் பின்றுவர் ஒன்றுவர் தழுவுவர் விழுவர். 292

வாலி ஞல்உரம் வரிந்தனர் நெரிந்துக வலிப்பர்
காலி ஞல்நெடுங் கால்பிடித்து உடற்றுவர் கழல்வர்
வேலி ஞல்அற எறிந்தென விரல்வலி உகிரால்
தோலி ஞல்உடல் நெடுவரை முழைஎனத் தொளைப்பர். 293

மண்ண கத்தன மலைகளும் மரங்களும் மற்றும்
கண்ண கத்தினில் தோன்றிய யாவையும் கையால்
எண்ந கப்பறித்து எறிதலின் எற்றலின் இற்ற
விண்ண கத்தினை மறைத்தன மறிகடல் வீழ்ந்த. 294

தாகவும் கூறுவது நூற்கொள்கை. பூமி உருண்டையின் குறுக்கே அச்சுமாதிரி மேருமலை வளர்ந்திருக்கிற தென்றும், வடதுருவத்தில் அது வெளியே தெரிகிறதென்றும், அவ்வாறு தெரிவதே மேருமலை என்று அழைக்கப்படுவதாகவும் கூறுவது மற்ருெரு நூற்கொள்கை. 288-ம் பாட்டு: ஏழொத்து-ஏழு கடல்களை ஒத்து. திசை எட்டொடு இரண்டும்-மேல், கீழ் என்ற இரண்டையும் சேர்த்து மொத்தம் பத்துத் திசைகளும். 289-ம் பாட்டு: செவ்வாய்-ஒருகிரகம்; இதன் நிறம் சிவப்பு. 293-ம் பாட்டு: தோலினுல் உடல்-தோலோடு உடம்பும்.

வெருவிச் சாய்ந்தனர் விண்ணவர் வேறென்னை விளம்பில்
ஒருவர்க்கு ஆண்டுஅமர் ஒருவரும் தோற்றிலர் உடன்று
செருவில் தேய்த்தலில் செங்கனல் வெண்மயிர் செல்ல
முரிபுல் காய்வரை எரிபரந் தனஎன முனைவார். 295

அன்ன தன்மையர் ஆற்றலின் அமர்புரி பொழுதில்
வல்நெ டுந்தடத் திரள்புயத்து அடுதிறல் வாலி
சொன்ன தம்பியைத் தும்பியை அரிதொலைத் தென்னக்
கொல்ந கங்களின் கரங்களின் குலைந்துக மலைந்தான். 296

மலைந்த போதுஇளைத்து இரவிசேய் ஐயன்மாட்டு அணுகி
உலைந்த சிந்தையோடு உணங்கினன் வணங்கிட உள்ளம்
குலைந்தி டேல்உமை வேற்றுமை தெரிந்திலம் கொடிப்பூ
மிலைந்து செல்லென மிலைச்சியே விடுத்தனன் மீண்டான். 297

தயங்கு தாரகை நிரைதொடுத்து அணிந்தென வெண்பூ
வயங்கு சென்னியன் வயப்புலி வானவல் ஏற்றேடு
உயங்கும் ஆர்ப்பினன் ஒல்லைவந்து அடுதிறல் வாலி
பயங்கொ ளப்புடைத்து எற்றினன் குத்தினன் பலகால். 298

அயிர்த்த சிந்தையன் அந்தகன் குலைகுலைந்து அஞ்சச்
செயிர்த்து நோக்கினன் சினத்தொடு சிறுநகை செய்யா
வயிர்த்த கையினும் காலினும் கதிர்மகன் மயங்க
உயிர்த்த லம்தொறும் புடைத்தனன் அடித்தனன் உதைத்தான். 299

கக்கி ஞன்உயிர் உயிர்ப்பொடும் செவிகளின் கண்ணின்
உக்கது ஆங்குஎரிப் படலையோடு உதிரத்தின் ஒழுக்கம்
திக்கு நோக்கினன் செங்கதி ரோன்மகன் செருக்கிப்
புக்கு மீக்கொடு நெருக்கினன் இந்திரன் புதல்வன். 300

வாலிமீது இராமன் அம்பு எய்தல்

எடுத்துப் பாரிடை எற்றுவாம் பற்றிஎன்று இளவல்
கடித்த லத்தினும் கழுத்தினும் தன்இரு கரங்கள்
மடுத்து மீக்கொண்ட வாலிமேல் கோல்ஒன்று வாங்கித்
தொடுத்து நாணெடும் தோள்உறுத்து இராகவன் துறந்தான். 301

காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேரும் ஊசியின் சென்றது நின்றதென் செப்ப
நீரும் நீர்தரு நெருப்பும்வன் காற்றும்கீழ் நிமிர்ந்த
பாரும் சார்வலி படைத்தவன் உரத்தில்அப் பகழி. 302

அலங்கு தோள்வலி அழிந்தனன் தம்பியை அருளான்
வலங்கொள் பாரிடை எற்றுவான் உற்றபோர் வாலி
கலங்க வல்விசைக் கால்கிளர்ந்து எறிவுறும் கடைக்கால்
விலங்கல் மேருவும் வேர்பறிந் தாலென்ன வீழ்ந்தான். 303

சையம் வேரொடும் உரும்உறச் சாய்ந்தெனச் சாய்ந்தான்
வைய மீதிடைக் கிடந்தபோர் அடுதிறல் வாலி
வெய்ய வன்தரு மதலையை மிடல்கொடு கவரும்
கைநெ கிழ்ந்தனன் நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல். 304

வெற்றி வீரனது அடுகணை அவன்மிடல் உரத்தூடு
உற்றது அப்புறத்து உருதமுன் உறுவலிக் கரத்தால்
பற்றி வாலினும் காலினும் பிணித்துஅகப் படுத்தான்
கோற்ற வெங்கொடு மறலியும் சிரதலம் குலைந்தான். 305

எழுந்து வான்முகடு இடித்துஉகப் படுப்பன்என்று இவரும்
உழுந்து பேர்வுழித் திசைதிரிந்து இறுப்பன்என்று உதைக்கும்
விழுந்து பாரினை வேரொடும் பறிப்பன்என்று உறுக்கும்
அழுந்தும் இச்சரம் எய்தவன் ஆர்கொல்என்று அயிர்க்கும். 306

எற்றும் கையினை நிலத்தொடும் எரிப்பொறி பறப்பச்
சுற்றும் நோக்குறும் சுடுசரத் தைத்துணைக் கரத்தால்
பற்றி வாலினும் காலினும் வலியுறப் பறிப்பான்
உற்றெ றுமையின் உலைவுறும் மலைஎன உருளும். 307

தேவ ரோஎன அயிர்க்கும்அத் தேவர்இச் செயலுக்கு
ஆவ ரோஅவர்க்கு ஆற்றல்உண் டோஎனும் அயலோர்
யாவ ரோஎன நகைசெயும் ஒருவனே இறைவர்
மூவ ரோடும்ஒப் பான்செய லாம்என மொழியும். 308

நேமி தான்கொலோ நீலகண் டன்நெடுஞ் சூலம்
ஆம்இ தாம்கொலோ அன்றெனில் குன்றுருவு அயிலோ
நாம இந்திரன் வச்சிரப் படையும்என் நடுவண்
போம்எ னும்துணை போதுமோ யாதெனப் புகலும். 309

வில்லி னல்துரப் பரிதுஇவ்வெஞ் சரம்என வியக்கும்
சொல்லி னல்நெடு முனிவரோ துண்டினர் என்னும்
பல்லி னல்கடிப் புறும்பல காலும்தன் உரத்தைக்
கல்லி ஆர்ப்பொடும் பறிக்கும்அப் பகழியைக் கண்டான். 310

சரம்எ னும்படி தெரிந்தது பலபடச் சலித்தென்
உரம்எ னும்பதம் உயிரொடும் உருவிய ஒன்றைக்
கரம்இ ரண்டினும் காலினும் வாலினும் கழற்றிப்
பரமன் அன்னவன் பெயர்அறி குவன்எனப் பறிப்பான். 311

304-ம் பாட்டு: நெகிழ்ந்திலன் கடுங்கணை கவர்தல் — இராமனுடைய கடுமையான அம்பைப் பிடித்த பிடியை வாலி நெகிழ்க்கவில்லை; (வேறொரு பொருள்) இராமனது அம்பு தன் உடம்பைப்பற்றிய பிடி நெகிழப்பெற்றானில்லை. 305-ம் பாட்டு: இந்தப் பாட்டு சில பிரதிகளில் இல்லை. 304, 305 ஆகிய இரண்டு பாட்டுக்களில் ஏதேனும் ஒன்று இருந்தாலே இங்கு போதுமானது. 307-ம் பாட்டு: உற்றெறுமையின் - (உற்று + ஒறுமையின்); (அம்பைப் பிடுங்க) முயன்று, முடியாமற் போனதால். 309-ம் பாட்டு: குன்றுருவு அயிலோ - சூரபத்மனுடைய தம்பியாகிய தாரகாசுரனைக் கொல்லக்

ஓங்க ரும்பெருந் திறலினும் காலினும் உரத்தும்
வாங்கி ஞன்மற்றவ் வாளியை யாளிபோல் வாலி
ஆங்கு நோக்கினர் அமரரும் அவுணரும் பிறரும்
வீங்கி ஞர்கள்தோள் வீரரை யார்விய வாதார். 312

மோடு தெண்திரை முரிதரு கடலென முழங்கி
ஈடு பேருலகு இறந்துள தாம்என்றல் எளிதோ
காடு மாநெடு விலங்கல்கள் கடந்ததுஅக் கடலின்
ஊடு போதலுற் றதனைஒத்து உயர்ந்துளது உதிரம். 313

*வாசத் தாரவன் மார்பெனும் மலைவழங்கு அருவி
ஓசைச் சோரியை நோக்கினன் உடன்பிறப் பென்னும்
பாசத் தால்பிணிப் புண்டஅத் தம்பியும் பசுங்கண்
நேசத் தாரைகள் சொரிதர நெடுநிலம் சேர்ந்தான். 314

*பறித்த வாளியைப் பருவலித் தடக்கையால் பற்றி
இறுப்பென் என்றுகொண்டு எழுந்தனன் மேருவை இரண்டாய்
முறிப்பென் என்னினும் முறிவதன் றும்என மொழியாப்
பொறித்த நாமத்தை அறிகுவான் நோக்கினன் புகழோன். 315

வேறு

*மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந் திரத்தை முற்றும்
தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கும் மருந்தினை இராமன் என்னும்
செம்மைசேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான். 316

இராமனை வாலி இகழ்தல்

*இல்லறம் துறந்த நம்பி எங்களுக் காகத் தங்கள்
வில்லறம் துறந்த வீரன் தோன்றலால் வேத நூலில்
சொல்அறம் துறந்தி லாத சூரியன் மரபும் தொல்லை
நல்லறம் துறந்தது என்னு நகைவர நாண்உட் கொண்டான். 317

*வெள்கிடும் மகுடம் சாய்க்கும் வெடிபடச் சிரிக்கும் மீட்டும்
உள்கிடும் இதுவும் தான்ஓர் ஓங்கற மோஎன்று உன்னும்
முள்கிடும் குழியில் புக்க மூரிவெங் களிநல் யானை
தொள்கொடும் கிடந்த தென்னத் துயர்உழந்து அழிந்து சோரும். 318

கிரௌஞ்ச மலையைப் பிளந்த (முருகனுடைய) வேலாயுதமோ? போம் எனும் துணை போதுமோ - நுழைந்து செல்லும் என்று சொல்லக் கூடியவாறு பலம் உடையதோ? 315-ம் பாட்டு: முறிவதன்றும் - இராமபாணம் முறியக்கூடியதாக இல்லை. பொறித்த நாமம்-அம்பில் எழுதப்பட்டுள்ள (இராமனுடைய) பெயர். இவ்வாறு அம்புகளில் தம்முடைய பெயரைப் பொறிக்கும் வழக்கம் அக்காலத்தில் உண்டு. 316-ம் பாட்டு: மும்மைசால் உலகு - சுவர்க்கம், பூமி, பாதாளம் என்ற மூன்று உலகங்கள். எழுமை நோய் - ஏழுவகை பிறவிப் பிணி. ஏழுவகைப் பிறப்புக்களாவன: தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம். 317-ம் பாட்டு: நாண் உட்கொண்டான் - அவமானம்

*இறைதிறம் பினுல் என்னே இழிந்துளோர் இயற்கை என்னில்
முறைதிறம் பினுல் என்று மொழிகின்ற முகத்தான் முன்னர்
மறைதிறம் பாத வாய்மை மன்னர்க்கு மனுவில் சொல்லும்
துறைதிறம் பாமல் காக்கத் தோன்றினுன் வந்து தோன்ற 319

*கண்ணுற்ருன் வாலி நீலக் கார்முகில் கமலம் பூத்து
மண்ணுற்று வரிவில் ஏந்தி வருவதே போலும் மாலைப்
புண்ணுற்ற தனைய சோரிப் பொறியொடும் பொடிப்ப நோக்கி
எண்ணுற்ருய் என்செய் தாய்என்று ஏசுவான் இயம்பல் உற்ருன். 320

*வாய்மையும் மரபும் காத்து மன்உயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்த னேநீ பரதன்முன் தோன்றி ஞயே
தீமைதான் பிறரைக் காத்துத் தான்செய்தால் தீங்கன் ருமோ
தாய்மையும் அன்றி நட்பும் தருமமும் தழுவி நின்ருேய். 321

குலம்இது கல்வி ஈது கொற்றம்ஈது உற்று நின்ற
நலம்இது புவனம் மூன்றின் நாயகம் ஈது நின்தோள்
வலம்இதுஇவ் உலகம் தாங்கும் வண்மைஈ தென்ருல் திண்மை
அலமரச் செய்ய லாமோ அறிந்திருந்து அயர்ந்து ளார்போல். 322

*கோவியல் தருமம் உங்கள் குலத்துதித் தோர்கட் கெல்லாம்
ஓவியத் தெழுத ஒண்ணு உருவத்தாய் உடைமை யன்ருே
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலும் செய்கை. 323

*அரக்கர்ஓர் அழிவு செய்து கழிவரேல் அதற்கு வேருேர்
குரக்கினத்து அரசைக் கொல்ல மனுநெறி கூறிற் றுண்டோ
இரக்கம்எங்கு உகுத்தாய் என்பால் எப்பிழை கண்டாய் அப்பா
பரக்கழி இதுநீ பூண்டால் புகழையார் பரிக்கற் பாலார். 324

*ஒலிகடல் உலகம் தன்னில் உறைதரு குரங்கின் மாடே
கலியது காலம் வந்து பரந்ததோ கருணை வள்ளால்
மெலியவர் பால தேயோ ஒழுக்கமும் விழுப்பம் தானும்
வலியர் மெலிவு செய்தால் வசையன்றிப் புகழும் உண்டோ. 325

அடைந்தான். தன்னுல் மிகவும் மதிக்கப்பட்ட ஒருவர் இழிவான காரியத்தைச் செய்தால், அது தனக்கு அவமானமாக இருப்பது இயல்பு.
319-ம் பாட்டு: இறை......இயற்கை - இறைவனே தவறிவிட்டான். அப்படியானுல், கீழானவர்களின் இயல்பு என்ன ஆகும்? என்னில் - என்னிடம். மனு - மனுதர்ம சாஸ்திரம். தோன்றினுன் - இராமன்.
320-ம் பாட்டு: மாலை - திருமாலாகிய இராமனை. எண்ணுற்ருய் — பெரியோரின் சிந்தனையில் வீற்றிருப்போனே; (அல்லது) எப்போதும் எதையும் நன்கு ஆலோசனை செய்துபார்க்கும் குணம் படைத்தவனே. (வேறு வகையாகவும் பொருள் கூறுவர். ஆனுல், அது சிறப்பாகவோ, இந்த இடத்துக்குப் பொருத்தமாகவோ இல்லை.)

*கூட்டொரு வரையும் வேண்டாக் கொற்றவ பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக் கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமம் செய்தாய் எம்பிக்குஇவ் அரசை நல்கிக்
காட்டொரு கருமம் செய்தாய் கருமம்தான் இதன்மேல் உண்டோ.

அறைகழல் அலங்கல் வீரர் ஆயவர் புரிவது ஆண்மைத்
துறைஎனல் ஆயிற் றன்றே தொன்மைநூல் மறைகட் கெல்லாம்
இறைவன்நீ என்னைச் செய்தது ஈதென்னில் இலங்கை வேந்தை
முறையல செய்தான் என்று முனிதியோ முனிவி லாதாய். 327

இருவர்போர் எதிரும் காலை இருவரும் நல்உற் றாரே
ஒருவர்மேல் கருணை தூண்டி ஒருவர்மேல் ஒளித்து நின்று
வரிசிலை குழைய வாங்கி வாய்அம்பு மருமத் தெய்தல்
தருமமோ பிறிதொன் றாமோ தகுகில தென்னும் பக்கம். 328

வேறு

*வீரம் அன்றுவி தியன்று மெய்ம்மையின்
வாரம் அன்றுநின் மண்ணினுக்கு என்உடல்
பாரம் அன்றுப கையன்று பண்பொழிந்து
ஈரம் அன்றிது என்செய்த வாறுநீ. 329

இருமை நோக்கிநின்று யாவர்க்கும் ஒக்கின்ற
அருமை ஆற்றல்அன் றேஅறம் காக்கின்ற
பெருமை என்பது பின்பிழை பேணல்விட்டு
ஒருமை நோக்கி ஒருவற் குதவலோ. 330

செயலைச் செற்றப கைதெறு வான்தெரிந்து
அயலைப் பற்றித்து ணையமைந் தாய்எனின்
புயலைப் பற்றும்அப் பொங்குஅரி போக்கிஓர்
முயலைப் பற்றுவ தென்னமு யற்சியோ. 331

*கார்இ யன்றநி றத்தக ளங்கம்ஒன்று
ஊர்இ யன்றம திக்குள தாம்எனச்
சூரி யன்மர புக்கும்ஓர் தொல்மறு
ஆரி யன்பிறந் தாக்கினை யாம்ஆரோ. 332

மற்றொ ருத்தன்வ லிந்துஅறை கூவவந்து
உற்ற என்னைஒ ளித்துயிர் உண்டநீ
இற்றை யில்பிறர்க் கும்இகல் ஏறென
நிற்றி போலும்கி டந்தநி லத்தரோ. 333

*நூல்இ யற்கையும் நும்குலத் தந்தையர்
போல்இ யற்கையும் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாய்அலை மன்அற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே. 334

331-ம் பாட்டு: செயலைச் செற்ற - உன் செயல்களைத் தடுமாறச் செய்த. ("திகைத்தனை போலும் செய்கை" என்பதை [பாட்டு 323] இங்கே நினைவு கூரவும்.) பகை - இராவணன். தெறுவான் - அழிக்க.

*தாரம் மற்ஞெருவன்கொளத் தன்கையின்
பார வெஞ்சிலே வீரம் பழிப்பதே
நேரும் அன்றும றைந்து நிராயுதன்
மார்பின் எய்யவோ வில்இகல் வல்லதே. 335

வாலிக்கு இராமன் பதில் கூறுதல்

என்று தானும் எயிறுபொ டிபடத்
தின்று கான்று விழிவழித் தீயுக
அன்றவ் வாலி அனேயன கூறினுன்
நின்றவீரன் இனேயநி கழ்த்தினுன். 336

பிலம்புக் காய்நெடு நாள்பெய ராய்என
புலம்புற் றுன்வழிப் போதலுற் ருன்தனேக்
குலம்புக்கு ஆன்ற முதியர் குறிக்கொள்நீ
அலம்பொற் ருரவ னேஅரசு என்றலும் 337

வானம் ஆளஎன் தம்முனே வைத்தவன்
தானும் மாளக் கிளேயின் இறத்தடிந்து
யானும் மாள்வென் இருந்தரசு ஆள்கிலென்
ஊன மான உரைபகர்ந் தீர்என 338

பற்றி ஆன்ற படைத்தலே வீரரும்
முற்று ணர்ந்த முதியரும் முன்பரும்
எற்றும் நும்அரசு எய்துவை யாம்எனக்
கொற்ற நன்முடி கொண்டதக் கோதிலான். 339

வந்த உன்னே வணங்கி மகிழ்ந்தனன்
எந்தை என்கண் இனத்தவர் ஆற்றலின்
தந்த துன்னரசு என்று தருக்கிலான்
முந்தை உற்றது சொற்ற முனிந்துநீ 340

கொல்லல் உற்றனே உம்பியைக் கோதுஅவற்கு
இல்லே என்பது உணர்ந்தும் இரங்கலே
அல்லல் செய்யேல் உனக்குஅ பயம்பிழை
புல்லல் என்னவும் புல்லலே பொங்கினுய். 341

ஊற்றம் உற்றுடை யான்உனக்கு ஆர்அமர்
தோற்றும் என்று தொழுதுயர் கையன்நீ
கூற்றம் உண்ணக் கொடுப்பென்என் றெண்ணினுய்
நாற்றி சைக்கும் புறத்தையும் நண்ணினுன். 342

அயல் - மற்ஞெருவன் (சுக்கிரீவன்). புயல் - மழை மேகம் போன்ற யானே. 335-ம் பாட்டு: வில் இகல் வல்லதே - வில்போரில் வல்லமை பெற்றதுதான்; (அல்லது) வில்போர் வல்லமை பெற்றுள்ளது. 339-ம் பாட்டு: எற்றும் - (எது) எப்படியாஞலும்.

அன்ன தன்மை அறிந்தும் அருளலே
பின்ன வன்இவன் என்பதும் பேணலே
வன்னி தானிடு சாப வரம்புடைப்
பொன்ம லேக்கவன் நண்ணலில் போகலே. 343

ஈர மாவதும் இல்பிறப் பாவதும்
வீர மாவதும் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவதும் மற்றெரு வன்புணர்
தார மாவது தாங்கும் தருக்கரோ. 344

மறம்தி றம்பல் வலியம் எனுமனம்
புறம்தி றம்பல் எளியவர்ப் பொங்குதல்
அறம்தி றம்பல் அருங்கடி மங்கையர்
திறம்தி றம்பல் தெளிவுடை யோர்க்கெலாம். 345

தருமம் இன்ன தெனும்தகைத் தன்மையும்
இருமை யும்தெரிந்து எண்ணலே எண்ணினல்
அருமை உம்பிதன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினே எய்தப் பெறுதியோ. 346

ஆத லானும் அவன்எனக்கு ஆருயிர்க்
காத லான்என லானும்நிற் கட்டனென்
ஏதி லாரும் எளியர்என் றுரையும்
தீது தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ. 347

பிழைத்த தன்மை இதுஎனப் பேரெழில்
தழைத்த வீரன் உரைசெயத் தக்கிலாது
இழைத்த வாலி இயல்பல இத்துணே
விழைத்தி றத்தொழில் என்ன விளம்புவான். 348

ஐய நுங்கள் அருங்குலக் கற்பின்அப்
பொய்இல் மங்கையர்க்கு ஏய்ந்த புணர்ச்சிபோல்
செய்தி லன்எமைத் தேமலர் மேலவன்
எய்தின் எய்திய தாக இயற்றினன். 349

மணமும் இல்லே மறைநெறி வந்தன
குணமும் இல்லேக் குலமுதற்கு ஒத்தன
உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கலால்
நிணமும் நெய்யும் இணங்கிய நேமியாய். 350

343-ம் பாட்டு: வன்னி - பிரம்மச்சாரி (மதங்க முனிவன்). *345*-ம் பாட்டு : (இதன் பொருள்) தெளிந்த அறிவுடையவர்களுக்கு, மனம் தீய வழிக்குத் திரும்புதலும், பலமில்லாதவர்களேக் கோபித்தலும் வீரத்தினின்று தவறுவதாகும்; கற்பென்ற காவலே உடைய பெண்களிடம் தவருக நடத்தல் தர்மத்தினின்று தவறுவதாகும். *347*-ம் பாட்டு : நிற்கட்டனென் - உன்னே (உன் உயிரை)ப் பறித்தேன். *348*-ம் பாட்டு : தக்கிலாது - தகுதி இல்லாத செயலே. *349*-ம் பாட்டு : புணர்ச்சி - கல்யாணம்.

பெற்றி மற்றிது பெற்றதொர் பெற்றியின்
குற்றம் உற்றிலென் நீயது கோடியால்
வெற்றி யுற்றதொர் வெற்றியி னுய்எனச்
சொற்ற சொல்தகைக்கு உற்றது சொல்லுவான். 351

நலங்கொள் தேவரின் தோன்றி நவையறக்
கலங்க லாதுஅற நன்னெறி காண்டலின்
விலங்கு அலாமை விளங்கியது ஆதலால்
அலங்க லார்க்குஇது அடுப்பதன் றும்அரோ. 352

பொறியின் யாக்கைய தோபுலன் நோக்கிய
அறிவின் மேலதன் றேஅறத் தாறுதான்
நெறியும் நீர்மையும் நேர்நின் றுணர்ந்தநீ
பெறுதி யோபிழை உற்றுறு பெற்றிதான். 353

மாடு பற்றி இடங்கர் வலித்திடக்
கோடு பற்றிய கொற்றவற் கூயதுஓர்
பாடு பெற்ற உணர்வின் பயத்தினல்
வீடு பெற்ற விலங்கும் விலங்கரோ. 354

சிந்தை நல்லறத் தின்வழிச் சேர்தலால்
பைந்தொ டித்திரு வின்பரிவு ஆற்றுவான்
வெந்தொ ழில்திறல் வீடுபெற் றெய்திய
எந்தை யும்எரு வைக்கர சல்லனே. 355

நன்று தீதென்று இயல்தெரி நல்லறிவு
இன்றி வாழ்வதன் றேவிலங் கின்இடை
நின்ற நன்னெறி நீஅறி யாநெறி
ஒன்றும் இன்மைஉன் வாய்மை உணர்த்துமால். 356

தக்க இன்ன தகாதன இன்னஎன்று
ஒக்க உன்னல ராயின் உயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்நெறி
புக்க வேல்அவ் விலங்கும்புத் தேளிரே. 357

காலன் ஆற்றல் கடிந்த கணிச்சியான்
பாலின் ஆற்றிய பத்தி பயத்தலால்
மாலி னல்தரு வன்பெரும் பூதங்கள்
நாலின் ஆற்றலும் ஆற்றுழி நண்ணினுய். 358

351-ம் பாட்டு: சொல்தகை - சொல்லில் வல்லவனுன வாலி. 354-ம் பாட்டு: விலங்கும் - கஜேந்திரன் என்ற யானையும். திருமாலைப் பூஜிக்கத் தாமரை மலர்கள் பறிப்பதற்குச் சென்ற கஜேந்திரனை, முதலையொன்று ஒரு பக்கத்தில் கௌவி இழுக்க, யானையானது சங்கு தரித்த திருமாலைக் கூவி அழைத்தது. அவன் வந்து முதலையைக் கொன்ருன். தனது பெருமைபெற்ற நல்லறிவின் பயனுக யானை முக்தி அடைந்தது. 355-ம் பாட்டு: வெந்தொழில்...... எந்தை-போரிட்டு வீரசுவர்க்கம் அடைந்த சடாயு. 358-ம் பாட்டு: பூதங்கள் நாலின் - உருவமில்லாத ஆகாயத்தைத் தவிர்த்து, மீதி

மேவ ரும்தரு மத்துறை மேவினார்
ஏவ ரும்பவத் தால்இழிந் தோர்களும்
தாவ ரும்தவ ரும்பல தன்மைசால்
தேவரும் உளர் தீமை திருந்தினார். 359

இனையது ஆதலின் எக்குலத்து யாவர்க்கும்
வினையி னால்வரும் மேன்மையும் கீழ்மையும்
அனைய தன்மை அறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சிஎன் றான்மனு நீதியான். 360

வேறு

அவ்வுரை அமையக் கேட்ட அரிக்குலத்து அரசும் ஆன்ற
செவ்வியோய் அனைய தாகச் செருக்களத்து உருத்தெய் யாதே
வெவ்விய புளினார் என்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்விய தென்னை என்றான் இலக்குவன் இயம்ப லுற்றான். 361

முன்புநின் தம்பி வந்து சரண்புக முறைஇ லோயைத்
தென்புலத்து உய்ப்பன் என்று செப்பினன் செருவில் நீயும்
அன்பினை உயிருக் காகி அடைக்கலம் என்று கூறும்
என்பது கருதி அண்ணல் மறைந்துநின்று எய்தது என்றான். 362

இராமனை வாலி வணங்குதல்

கவிக்குலத் தரசும் அன்ன கட்டுரை கருத்தில் கொண்டான்
அவியுறு மனத்தன் ஆகி அறத்திறன் அழியச் செய்யான்
புவியிடை அண்ணல் என்பது எண்ணினன் பொருந்தி முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்.

தாயென உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்
நீயென நின்ற நம்பி நெறியினில் நோக்கும் நேர்மை
நாயென நின்ற எம்பால் நவையற உணர லாமோ
தீயன பொறுத்தி என்றான் சிறியன சிந்தி யாதான். 364

இரந்தனன் பின்னும் எந்தை யாவதும் எண்ணல் தேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய மனித்துக் கொள்ளேல்
அரந்தைவெம் பிறவி என்நோய்க்கு அருமருந் தனைய ஐயா
வரம்தரும் வள்ளால் ஒன்று கேள்என மறுத்தும் சொல்வான். 365

வேறு

ஏவுகூர் வாளியால் எய்துநாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய் அறிவுதந் தருளினாய்
மூவர்நீ முதல்வன்நீ முற்றும்நீ மற்றும்நீ
பாவம்நீ தருமம்நீ பகையும்நீ உறவும்நீ. 366

யுள்ள பூதங்கள், நீர், நெருப்பு, காற்று, பூமி ஆகிய நான்காகும்
ஆற்றுழி - ஆற்றலினால்.

புரமெலாம் எரிசெய்தோன் முதலினோர் பொருவிலா
வரமெலாம் உருவினன் வசைஇலா வலிமைசால்
உரமெலாம் உருவினன் உயிரெலாம் நுகரும்நின்
சரமலால் பிறிதுவேறு உளதரோ தரும்மே. 367

மாவலச் சூலியார் வாழ்த்துநர்க்கு உயர்வரம்
ஓவல்அற்று உதவல்நின் ஒருதனிப் பெயர்இயம்பு
ஆவலிப்பு உடைமையால் ஆகும்அப் பொருளையாம்
தேவநிற் கண்டஎற்கு அரிதெனோ தேரினே. 368

யாவரும் எவையுமாய் இருதுவும் பயனுமாய்ப்
பூவும்நல் வெறியும்ஒத்து ஒருவரும் பொதுமையாய்
ஆவநீ யாவதென்று அறிவினர் அருளினர்
தாவரும் பதம்எனக்கு அருமையோ தனிமையோய். 369

உண்டெனும் தருமமே உருவமாய் உடையநிற்
கண்டனன் மற்றினிக் காணஎன் கடவெனோ
பண்டொடுஇன்று அளவுமே என்பெரும் பழவினை
தண்டமே அடியனேற்கு உறுபதம் தருவதே. 370

வேறு

மற்றினி உதவி உண்டோ? வானினும் உயர்ந்த மானக்
கொற்றவ நின்னை என்னைக் கொல்லிய கொணர்ந்து தொல்லைச்
சிற்றினக் குரங்கி னோடும் தெரிவுறச் செய்த செய்கை
வெற்றரசு எய்தி எம்பி விட்டரசெனக்கு விட்டான். 371

ஓவிய உருவி னய்யான் உளதொன்று பெறுவ துன்பால்
பூவியல் நறவம் மாந்திப் புந்திவே றுற்ற போது
தீவினை இயற்று மேனும் எம்பியைச் சீறி என்மேல்
ஏவிய பகழி என்னும் கூற்றினை ஏவல் என்றான். 372

இன்னும்ஒன்று இரப்ப துண்டால் எம்பியை உம்பி மார்கள்
தன்முனைக் கொல்வித் தான்என்று இகழ்வரேல் தடுத்தி தக்கோய்
முன்முனே மொழிந்தாய் அன்றே இவன்குறை முடிப்பது ஐயா
பின்இவன் வினையின் செய்கை யதனையும் பிழைக்கல் ஆமோ. 373

மற்றிலென் எனினும் மாய அரக்கனை வாலின் பற்றிக்
கொற்றவ நின்கண் தந்து குரக்கியல் தொழிலும் காட்டப்
பெற்றிலென் கடந்த சொல்லில் பயனிலை பிறிதொன் றேனும்
உற்றது செய்கென் றாலும் உரியன்இவ் அனுமன் என்றான். 374

அனுமன்என் பவனை ஆழி ஐயநின் செய்ய செங்கைத்
தனுவென நினைதி மற்றென் தம்பிநின் தம்பி யாக
நினைதிஓர் துணைவர் இன்னோர் அனையவர் இலைநீ ஈண்டுஅவ்
வனிதயை நாடிக் கோடி வானினும் உயர்ந்த தோளாய். 375

368-ம் பாட்டு: (இதன் பொருள்) உன்னுடைய ஒப்பற்ற (இராம) நாமத்தை உச்சாரணம் செய்ததன் பலனாக அடைந்த செருக்கினால் (அல்லது பலத்தினால்) சூலாயுதம் தரித்த சிவன் தன்னை வாழ்த்துகிற

என்றுஅவற்கு இயம்பிப் பின்னர் இருந்தனன் இளவல் தன்னை
வன்துணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி மைந்த
ஒன்றுனக்கு உரைப்ப துண்டால் உறுதிஅஃது உணர்ந்து கோடி
குன்றினும் உயர்ந்த தோளாய் வருந்தலை என்று கூறும். 376

மறைகளும் முனிவர் யாரும் மலர்மிசை அயனும் மற்றைத்
துறைகளின் முடிவும் சொல்லும் துணிபொருள் துணிவில் தூக்கி
அறைகழல் இராமன் ஆகி அறநெறி நிறுத்த வந்த
இறைஒரு சங்கை யின்றி எண்ணுதி எண்ணம் மிக்கோய். 377

நிற்கின்ற செல்வம் வேண்டி நெறிநின்ற பொருள்கள் எல்லாம்
கற்கின்ற இவன்தன் நாமம் கருதுவ இவனைக் கண்டாய்
பொற்குன்றம் அனைய தோளாய் பொதுநின்ற தலைமை நோக்கின்
எற்கொன்ற வலியே சாலும் இதற்கொன்றும் ஏது வேண்டா. 378

கைதவம் இயற்றி யாண்டும் கழிப்பரும் கணக்கில் தீமை
வைகலும் புரிந்து ளாரும் வானுயர் நிலையை வள்ளல்
எய்தவர் பெறுவர் என்றால் இணையடி இறைஞ்சி ஏவல்
செய்தவர் பெறுவது ஐயா செப்பலாம் சீர்மைத் தாமோ. 379

அருமைஎன் விதியி னாரே உதவுவான் அமைந்த காலை
இருமையும் எய்தி னய்மற்று இனிச்செயற் பாலது எண்ணின்
திருமறு மார்பன் ஏவல் சென்னியில் சேர்த்திச் சிந்தை
ஒருமையில் நிறுவி மும்மை உலகினும் உயர்தி யன்றே. 380

மதஇயல் குரக்குச் செய்கை மயர்வொடு மாற்றி வள்ளல்
உதவியை உன்னி ஆவி உற்றிடத் துதவு கிற்றி
பதவியை எவர்க்கும் நல்கும் பண்ணவன் பணித்த யாவும்
சிதைவில செய்து நொய்தில் தீர்வரும் பிறவி தீர்தி. 381

அரசியல் பாரம் பூரித்து அயர்ந்தனை இகழாது ஐயன்
மரைமலர்ப் பாதம் நீங்கா வாழுதி மன்னர் என்பார்
எரிஅனற் குரியார் என்றே எண்ணுதி எண்ணம் யாவும்
புரிதிசிற் றடிமை குற்றம் பொறுப்பர்என்று எண்ண வேண்டா. 382

வர்களுக்கெல்லாம் இடைவிடாது வரம் கொடுத்துவருகிறுன். அந்த நாமத்துக்குரிய பொருளை உன்னிடத்தில் கண்ட எனக்கு இனி எது தான் அரிய பொருள்? (சிவன் தன் மனைவி உமாதேவியின் காதில் உபதேசித்தது இராம நாமத்தையே என்பதை ''சம்பு அநாள் தன் உமை செவி சாற்று பூங்கொம்பனுள்தன் கொழுநன் இராமப்பேர்'' என்ற தனியனும் கூறுகிறது. இதைக் கம்பராமாயணம், முதல் பாகம், 98-ம் பக்கத்தில் காண்க. 377-ம் பாட்டு: துணிவில் தூக்கி-துண்டிக்கும் வில்லை ஏந்தி; (மற்ருெருபொருள்) நன்ருகச் சீர்தூக்கி ஆராய்ந்து (சொல்லும் துணி பொருள்.) 378-ம் பாட்டு: நிற்கின்ற செல்வம் - அழியாத செல்வமாகிய முக்தி. பொருள்கள் - முக்தியை விரும்பும் ஞானிகளின் ஆத்மாக்கள். 382-ம் பாட்டு: மன்னர்

என்னஇத் தகைய வாய உறுதிகள் யாவும் ஏங்கும்
பின்னவற்கு இயம்பி நின்ற பேரெழி லானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்த மற்றிவன் சுற்றத் தோடும்
உன்அடைக் கலம்என்று உந்தி உயர்கரம் உச்சி வைத்தான். 383

வைத்தபின் உரிமைத் தம்பி மாமுகம் நோக்கி வல்லே
உய்த்தனை கொணர்தி உன்தன் ஓங்கரு மகனை என்ன
அத்தலை அவனை ஏவி அழைத்தலின் அணைந்தான் என்ப
கைத்தலத்து உவரி நீரைக் கலக்கினன் பயந்த காளை. 384

*சுடருடை மதியம் என்னத் தோன்றினன் தோன்றி யாண்டும்
இடருடை உள்ளத் தோரை எண்ணினும் உணர்ந்தி லாதான்
மடலுடை நறுமென் சேக்கை மலரின்றி உதிர வாரிக்
கடலிடைக் கிடந்த காதல் தாதையைக் கண்ணில் கண்டான். 385

வாலிமீது அங்கதன் விழுந்து அழுதல்

*கண்டனன் கலுழி நீரும் குருதியும் கால மாலைக்
குண்டலம் அலும்பு கின்ற குவவுத்தோள் குரிசில் திங்கள்
மண்டலம் உலகில் வந்து கிடந்ததுஅம் மதியின் மீதா
விண்தலம் தன்னி னின்றோர் மீன்விழுந் தென்ன வீழ்ந்தான். 386

*எந்தையே எந்தையே இவ் எழுதிரை வளாகத்து யார்க்கும்
சிந்தையால் செய்கை யால்ஓர் தீவினை செய்தி லாதாய்
நொந்தனை அதுதான் நிற்க நின்முகம் நோக்கிக் கூற்றம்
வந்ததே அன்றோ அஞ்சாது ஆர்அதன் வலிமை தீர்ப்பார். 387

*தறைஅடித் ததுபோல் தீராத் தகையஇத் திசைகள் தாங்கும்
கறைஅடிக்கு இழிவு கண்ட கண்டகன் நெஞ்சம் உன்தன்
நிறைஅடிக் கோல வாலின் நிலைமையை நினையும் தோறும்
பறையடிக் கின்ற அந்தப் பயம்அறப் பறந்த தன்றே. 388

*குலவரை நேமிக் குன்றம் என்றவான் உயர்ந்த கோட்டின்
தலைகளும் நின்பொற் றோளின் தழும்பினித் தவிர்ந்த அன்றே
மலைகொளும் அரவும் மற்றும் மதியமும் பலவும் தாங்கி
அலைகடல் கடைய வேண்டின் ஆர்இனிக் கடைவர் ஐயா. 389

பஞ்சின்மெல் அடியாள் பங்கன் பாதுகம் அல்ல யாவும்
அஞ்சலித்து அறியாச் செங்கை ஆணையாய் அமரர் யாரும்
எஞ்சலர் இருந்தார் உன்னால் இன்அமுது ஈந்த நீயோ
துஞ்சினை வள்ளி யோர்கள் நின்னின்யார் சொல்லற் பாலார். 390

என்பார் எரி அனற்குரியார் - மன்னர்கள் நெருப்பைப் போன்றவர்கள். வெகுதூரம் போய்விடாமலும், மிகவும் நெருங்கிவிடாமலும் நெருப்பைப் பயன்படுத்துவதுபோல, அரசர்களோடு பழக வேண்டும். நீண்ட காலம் நட்போடு பழகிவிட்டோம் என்று அத்து மீறி நடந்துகொண்டால் நாசமே விளையும். இந்தக் கருத்தை குறள் முதலிய நூல்களிலும் காணலாம். 384-ம் பாட்டு: மகனை - அங்கதனை. அன்பின் காரணத்தால் தன் மகனைச் சுக்கிரீவனுடைய மகனாகக் குறிப்பிடுகிறான் வாலி. 389-ம் பாட்டு: மலைகொளும்

ஆயன பலவும் பன்னி அழுங்கினன் புழுங்கி நோக்கித்
தீயுறு மெழுகில் சிந்தை உருகினன் செங்கண் வாலி
நீஇனி அயர்வாய் அல்லை என்றுதன் நெஞ்சில் புல்லி
நாயகன் இராமன் செய்த நல்வினைப் பயன்இது என்றான். 391

தோன்றலும் இறத்தல் தானும் துகள்அறத் துணிந்து நோக்கின்
மூன்றுல கத்தி னோர்க்கும் மூலத்தே முடிந்த அன்றே
யான்தவம் உடைமை யால்இவ் இறுதிவந்து இசைந்தது யார்க்கும்
சான்றென நின்ற வீரன் தான்வந்து வீடு தந்தான். 392

பாலமை தவிர்நீ என்சொல் பற்றுதி யாயின் தன்னின்
மேலொடு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக்
கால்தரை தோய நின்று கட்புலக்கு உற்ற தம்மா
மால்தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த. 393

என்உயிர்க்கு இறுதி செய்தான் என்பதை இறையும் எண்ணாது
உன்உயிர்க்கு உறுதி செய்தி இவற்குஅமர் உற்ற துண்டேல்
பொன்உயிர்த்து ஒளிரும் பூணாய் போதுதி நிலைமை நோக்கி
மன்னுயிர்க்கு உறுதி செய்வான் மலரடி சுமந்து வாழ்தி. 394

என்றனன் இனைய வாய உறுதிகள் யாவும் சொல்லித்
தன்துணைத் தடக்கை யாரத் தனயனைத் தழுவிச் சாலக்
குன்றினும் உயர்ந்த திண்தோள் குரக்கினத் தரசன் கொற்றப்
பொன்திணி வயிரப் பைம்பூண் புரவலன் தன்னை நோக்கி 395

*நெய்அடை நெடுவேல் தானை நீல்நிற திருதர் என்னும்
துய்அடைக்கு அனலி அன்ன தோளினன் தொழிலும் தூயன்
பொய்யுடை உள்ளத் தார்க்குப் புலப்படாப் புனித உன்றன்
கையடை யாகும் என்றவ் இராமற்குக் காட்டுங் காலை 396

*தன்அடி தாழ்த லோடும் தாமரைத் தடங்க ணானும்
பொன்னுடை வாளை நீட்டி நீஇது பொறுத்தி என்றான்
என்னலும் உலகம் ஏழும் ஏத்தின கிடந்த வாலி
அந்நிலை துறந்து வானுக்கு அப்புறத் துலகன் ஆனான். 397

கைஅவண் நெகிழ்த லோடும் கணையெனும் காலன் வாலி
வெய்யமார் பகத்துள் தங்காது உருவிமேக் குயர மீப்போய்த்
துய்யநீர்க் கடலுள் தோய்ந்து தூய்மலர் அமரர் தூவ
ஐயன்வெந் விடாத கொற்றத்து ஆவம்வந்து அடைந்த தன்றே. 398

அரவும் - பாற்கடல் கடையும்போது மத்தாக நிறுத்திய மந்தர மலையில் சுற்றப்பட்ட வாசுகி என்ற பாம்பும். 392-ம் பாட்டு: மூலத்தே முடிந்த - ஆதியிலேயே விதிக்கப்பட்டவை.

9. அரசியல் படலம்

[சுக்கிரீவனுடைய அரசாட்சியின் தன்மையைப் பற்றிக் கூறும் பகுதி.]

வாலியும் ஏகி ஞன்விண் வரம்பிலா ஆற்ற லோடும்
பாலியா முன்னர் நின்ற பரிதிசேய் செங்கை பற்றி
ஆலிலைப் பள்ளி யானும் அங்கத னோடும் போனுன்
வேல்விழித் தாரை கேட்டாள் வந்தவன் மேனி வீழ்ந்தாள். 399

*குங்குமம் கொட்டி யன்ன குவிமுலைக் குவட்டிற்கு ஒக்கப்
பொங்குவெங் குருதி போர்ப்பப் புரிகுழல் சிவப்பப் பொற்ருேள்
அங்கவன் அலங்கல் மார்பில் புரண்டனள் அகன்ற செக்கர்
வெங்கதிர் விசும்பில் தோன்றும் மின்னெனத் திகழும் மெய்யாள்.

வேய்குழல் விளிகொள் நல்யாழ் வீணைஎன் றினைய நாண
ஏங்கினள் இரங்கி விம்மி உருகினள் இருகை கூப்பித்
தாங்கினள் தலையில் சோர்ந்து சரிந்துதாழ் குழல்கள் தள்ளி
ஓங்கிய குரலால் பன்னி இனையன உரைக்க லுற்ருள். 401

வேறு

தாரை புலம்புதல்

*வரைசேர் தோளிடை நாளும் வைகுவேன்
கரைசே ராஇடர் எல்லை கண்டிலேன்
உரைசேர் ஆருயி ரேஎன் உள்ளமே
அரசே யான்இது காண அஞ்சினேன். 402

துயரா லேதொலை யாத என்னையும்
பயிரா யோபகை யாத பண்பினேய்
செயிர்தீ ராய்விதி யான தெய்வமே
உயிர்போ ஞல்உட லாரும் உய்வரோ. 403

நறிதாம் நல்அமிழ்து உண்ண நல்கலின்
பிரியா இன்னுயிர் பெற்ற பெற்றிதாம்
அறியா ரோநம ஞர்அது அன்றெனில்
சிறியா ரோஉப காரம் சிந்தியார். 404

அணங்கார் பாகனை ஆசை தோறும்உற்று
உணங்கா ஒண்மலர் கொண்டுள் அன்பொடும்
இணங்காக் காலம் இரண்டொடு ஒன்றினும்
வணங்காது இத்துணை வைக வல்லையோ. 405

*அரசே பூவணை ஆடை வைகுவாய்
தரைமே லாய்உறு தன்மை ஈதெனக்
கரைவேன் நின்றுஇடு பூசல் கண்டும்ஒன்று
உரையாய் என்வயின் ஊனம் யாவதோ. 406

405-ம் பாட்டு: காலம் இரண்டொடு ஒன்றினும் - காலை, நடுப் பகல், மாலை என்ற மூன்று காலங்களிலும்.

நையா நின்றனன் நான்இ ருந்திங்ஙன்
மெய்வா னேர்திரு நாடு மேவினுய்
ஐயா நீஎனது ஆவி என்றதும்
பொய்யோ பொய்உரை யாத புண்ணியா. 407

*செருவார் தோளநின் சிந்தை யாள்எனில்
மருவார் வெஞ்சரம் எனையும் வெளவுமால்
ஒருவேன் உள்உளே யாகில் உய்தியால்
இருவே மும்இரு வேம்உள் இருந்துளோம். 408

*எந்தாய் நீஅமிழ்து ஈய யாமெலாம்
உய்ந்தாம் என்றுப காரம் உன்னுவார்
நந்தா நாள்மலர் சிந்தி நண்பொடும்
வந்தா ரோஎதிர் வானு ளோர்எலாம். 409

*ஓயா வாளிஒ ளித்து நின்றெய்வான்
ஏயா வந்த இராமன் என்றுளான்
வாயால் ஏயினன் என்னில் வாழ்வெலாம்
ஈயா யோஅமிழ் தேயும் ஈகுவாய். 410

*சொற்றேன் முந்துற அன்ன சொல்கொளாய்
அற்ருன் அன்னது செய்க லான்எனு
உற்ருய் உம்பியை ஊழி காணும்நீ
இற்ருய் யான்உனை என்று காண்கெனே. 411

*நீரும் மேருவும் நீநெ ருங்கினுல்
மாருர் வாளிஉன் மார்பை ஈர்வதோ
தேறேன் யான்இது தேவர் மாயமோ
வேருர் வாலிகொ லாம்வி ளிந்தநீ. 412

தகைநேர் வண்புகழ் நின்று தம்பியார்
பகைநேர் வார்உளர் ஆன பண்பினுல்
உகநேர் சிந்தி உலந்த ழிந்தவால்
மகனே கண்டிலை யோநம் வாழ்வெலாம். 413

அருமந்து அற்றம் அகற்றும் வில்லியார்
ஒருமைந் தற்கும்அ டாதது உன்னினுர்
தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமம் கட்டளை என்றல் கட்டதோ. 414

என்ருள் இன்னன பன்னி இன்னலோடு
ஒன்ரு உள்ளுணர்வு ஏதும் உற்றிலாள்
நின்ருள் அந்நிலை நோக்கி நீதியான்
வன்தாள் மால்வரை யன்ன மாருதி 415

மடவார் சூழ மடந்தை தன்னைவாழ்
இடமே வும்படி ஏவி வாலிபால்
கடன்யா வும்கடை கண்டு கண்ணனேடு
உடனுய் உற்றதெ லாம்உ ரைத்தலும் 416

அகம்வேர் அற்றுக விசுஅ ருக்கனர்
புகும்மே லைக்கிரி புக்க போழ்தினில்
நகமே ஒத்தகு ரக்கு நாயகன்
முகமே ஒத்தது மூரி மண்டலம். 417

மறைந்தான் மாலை அருக்கன் வள்ளியோன்
உறைந்தான் மங்கை திறத்தை உன்னுவான்
குறைந்தான் நெஞ்சு குழைந்த ழுங்குவான்
நிறைந்துஆர் கங்குலின் வேலை நீங்கினன். 418

புதல்வன் பொன்மகு டம்பொ றுத்தலால்
முதல்வன் பேருவ கைக்கு முந்துவான்
உதவும் பூமகள் சேர ஒண்மலர்க்
கதவம் செய்யக ரத்தின் நீக்கினன். 419

அதுகா லத்தில் அருட்கு நாயகன்
மதிசால் தம்பியை வல்லை ஏவினன்
கதிரோன் மைந்தனை ஐய கைகளால்
விதியால் மௌலிமி லைச்சு வாய்என்றான். 420

அப்போ தேஅருள் நின்ற அண்ணலும்
மெய்ப்போர் மாருதி தன்னை வீரநீ
இப்போ தேகொணர் இன்ன செய்வினைக்கு
ஒப்பாம் யாவையும் என்று ணர்த்தலும். 421

மண்ணும் நீர்முதல் மங்க லங்களும்
எண்ணும் பொன்முடி யாதி யாவையும்
நண்ணும் வேலையின் நம்பி தம்பியும்
திண்ணம் செய்வன செய்து செம்மலை 422

சுக்கிரீவனுக்கு முடிசூட்டுதல்

மறையோர் ஆசிவ ழங்க வானுளோர்
நறைதோய் நாள்மலர் தூவ நன்னெறிக்கு
இறையோர் முன்வினை செய்ய ஏந்தலைத்
துறையோர் நூல்முறை மௌலி சூட்டினன். 423

பொன்மா மௌலிபு னைந்து பொய்இலான்
தன்மா னக்கழல் தாழும் வேலையின்
நன்மார் பில்தழு வுற்று நாயகன்
சொன்னன் முற்றிய சொல்லின் எல்லையான். 424

417-ம் பாட்டு: மூரி மண்டலம் - பழமையான சூரிய மண்டலம்.
419-ம் பாட்டு: (இதன் பொருள்) தன் புதல்வனை சுக்கிரீவன் மகுடம் சூடப்போகிறான் என்று பெருமகிழ்ச்சி கொண்ட சூரியன், இலக்குமி அவனைச் சேரும்படியாக அவள் வீற்றிருக்கும் தாமரை மலரின் மூடிய இதழ்களைத் தன் கிரணங்களால் திறந்தான்.

வேறு

ஈண்டுநின் றேகி நீநின் இயல்பமை இருக்கை எய்தி
வேண்டுவ மரபின் எண்ணி விதிமுறை இயற்ற வீர
பூண்டபே ரரசுக் கேற்ற யாவையும் புரிந்து போரில்
மாண்டவன் மைந்த னோடும் வாழ்திநல் திருவின் வைகி. 425

வாய்மைசால் அறிவின் வாய்த்த மந்திர மாந்த ரோடும்
தீமைதீர் ஒழுக்கின் வந்த திறத்தொழில் மறவ ரோடும்
தூய்மைசால் புணர்ச்சி பேணித் துகளறு தொழிலை யாகிச்
சேய்மையோடு அணிமை இன்றித் தேவரில் தெரிய நிற்றி. 426

புகையுடைத் தென்னின் உண்டு பொங்கனல் அங்கென் றுன்னும்
மிகையுடைத் துலகம் நூலோர் வினையமும் வேண்டற் பாற்றே
பகையுடைச் சிந்தை யார்க்கும் பயனுறு பண்பின் தீரா
நகையுடை முகத்தை யாகி இன்னுரை நல்கு நாவால். 427

தேவரும் மருள்தற்கு ஒத்த செயிர்அறு செல்வம் அஃதுன்
காவ லுக் குரிய தென்றால் அன்னது கருதிக் காண்டி
ஏவரும் இனிய நண்பர் இரவலர் விரவார் என்று
மூவகை இயலோர் ஆவர் முனைவற்கும் உலகம் மூன்றின். 428

செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தி யாமல்
வைவன வந்த போதும் வசையில இனிய கூறல்
மெய்சொலல் வழங்கல் யாவும் மேவின வெ.'.கல் இன்மை
உய்வன ஆக்கித் தம்மோடு உயர்வன உவந்து செய்வாய். 429

சிறியர்என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல் மற்றிந்
நெறிஇகந்து யான்ஓர் தீமை இழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியதாம் மேனி ஆய கூனியால் குவவுத் தோளாய்
வெறியன எய்தி நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன். 430

மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றல்
சங்கைஇன் றுணர்தி வாலி செய்கையால் சாலும் இன்னும்
அங்கவர் திறத்தி னானே அல்லலும் அழிவும் ஆதல்
எங்களில் காண்டி யன்றே இதனின்வேறு உறுதி உண்டோ. 431

நாயகன் அல்லன் நம்மை நனிபயந் தெடுத்து நல்கும்
தாயென இனிது பேணித் தாங்குதி தாங்கு வாரை
ஆயது தன்மை யேனும் அறத்திறம் அகலா வண்ணம்
தீயன வந்த போது சுடுதியால் தீமை யோரை. 432

இறத்தலும் பிறத்தல் தானும் என்பன இரண்டும் யாண்டும்
திறத்துளி நோக்கில் செய்த வினைதரத் தெரிந்த அன்றே
புறத்தினி உரைப்ப தென்னே பூவின்மேல் புனிதற் கேனும்
அறத்தினது இறுதி வாழ்நாட்கு இறுதிஅஃது உறுதி என்ப. 433

430-ம் பாட்டு: தீமை - இராமன் சிறுவயதில் மந்தரை என்ற கூனியின் முதுகில் மண் உண்டையை வில்லினால் எய்தது. 431-ம் பாட்டு: எங்களில் காண்டி - நான் தடுத்தும் கேளாமல் சீதை

ஆக்கமும் கேடும் தாம்செய் அறத்தொடு பாவம் ஆய
போக்கிவே றுண்மை தேருர் பொருவரும் புலமை நூலோர்
தாக்கின ஒன்றே டொன்று தருக்குறும் செருவில் தக்கோய்
பாக்கியம் அன்றி என்றும் பாவத்தைப் பற்ற லாமோ. 434

இன்னது தகைமை என்ப இயல்புளி மரபின் எண்ணி
மன்அர சியற்றி என்கண் மருவுழி மாரிக் காலம்
பின்உற முறையின் உன்தன் பெருங்கடல் சேனை யோடும்
துன்னுதி போதி என்றுன் சுந்தரன் அவனும் சொல்வான். 435

குரங்குறை இருக்கை என்னும் குற்றமே குற்றம் அல்லால்
அரங்குறு துறக்க நாட்டுக்கு அரசெனல் ஆகும் அன்றே
மரம்கிளர் அருவிக் குன்றில் வள்ளல்நீ மனத்தின் எம்மை
இரங்கிய பணியாம் செய்ய இருத்தியால் சின்னுள் எம்பால். 436

அரிந்தம நின்னை அண்மி அருளுக்கும் உரியேம் ஆகி
பிரிந்துவே றெய்தும் செல்வம் வெறுமையின் பிறிதொன் ருமோ
கருந்தடங் கண்ணி னுளை நாடலாம் காலம் காறும்
இருந்தருள் தருதி எம்மோடு என்றடி இணையின் வீழ்ந்தான். 437

ஏந்தலும் இதனைக் கேளா இன்இள முறுவல் நாற
வேந்தமை இருக்கை எம்போல் விரதியர் விழைதற்கு ஒவ்வா
போந்தவண் இருப்பின் எம்மைப் போற்றவே பொழுது போமால்
தேர்ந்தினிது இயற்றும் உன்தன் அரசியல் தருமம் தீர்தி. 438

ஏழிரண் டாண்டு யானபோந்து எரிவனத்து இருக்க ஏன்றேன்
வாழியாய் அரசர் வைகும் வளநகர் வைகல் ஒல்லேன்
பாழியந் தடந்தோள் வீர பார்த்திலே போலும் அன்றே
யாழிசை மொழியோடு அன்றி யான்உறை இன்பம் என்னே. 439

தேவிவேறு அரக்கன் வைத்த சிறையினுள் இருப்பத் தான்தன்
ஆவிபோல் துணைவ ரோடும் அளவிடற் கரிய இன்பம்
மேவினுன் இராமன் என்றுல் ஐயஇவ் வெய்ய மாற்றம்
மூவகை உலகு முற்றும் காலத்தும் முற்ற வற்றே. 440

இல்லறம் துறந்தி லாதோர் இயற்கையை இழந்து போரின்
வில்லறம் துறந்தும் வாழ வெள்கினன் மேன்மை இல்லாச்
சில்அறம் புரிந்து நின்ற தீமைகள் தீரு மாறு
நல்லறம் தொடர்ந்த நோன்பின் நவையற நோற்பல் என்றுன். 441

அரசியற் குரிய யாவும் ஆற்றுழி ஆற்றி ஆன்ற
கரைசெயற் கரிய சேனைக் கடலொடும் திங்கள் நான்கில்
விரசுக என்பால் நின்னை வேண்டினென் வீர என்றுன்
உரைசெயற்கு எளிதும் ஆகி அரிதும்ஆம் ஒழுக்கில் நின்றுன். 442

காட்டுக்கு வந்ததால் ஏற்பட்டுள்ள அல்லல்களையும் அழிவையும் என்னிடத்திலும், இலக்குவனிடத்திலும் காண்பாயாக. 439-ம் பாட்டு: யாழிசை மொழி - சீதை.

மறித்தொரு மாற்றம் கூறுன் வானுயர் தோற்றத் தன்னுன்
குறிப்பறிந் தொழுகல் மாதோ கோதிலர் ஆதல் என்று
நெறிப்படர் கண்கள் பொங்கி நீர்வர நெடிது தாழ்ந்து
பொறுப்பரும் துன்பம் முன்னுக் கவிக்குலத் தரசன் போனுன். 443

வாலிகா தலனும் ஆண்டு மலரடி வணங்கி னுனை
நீலமா மேகம் என்ன நெடியவன் அருளின் நோக்கிச்
சீலம்நீ உடையை ஆதல் இவன்சிறு தாதை என்று
மூலமே தந்த நுந்தை யாம்என முறையின் நிற்றி. 444

என்னமற் றினைய கூறி ஏகுஅவற் றொடர்க என்றுன்
பொன்னடி வணங்கி மற்றப் புகழுடைக் குரிசில் போனுன்
பின்னர்மா ருதியை நோக்கிப் பேரெழில் வீர நீயும்
அன்னவன் அரசுக் கேற்றது ஆற்றுதி அறிவின் என்றுன். 445

பொய்த்தல்இல் உள்ளத் தன்பு பொழிகின்ற புணர்ச்சி யானும்
இத்தலை இருந்து நாயேன் ஏயின எனக்குத் தக்க
கைத்தொழில் செய்வேன் என்று கழலிணை வணங்கும் காலை
மெய்த்தலை நின்ற வீரன் இவ்வுரை விளம்பி விட்டான். 446

நிரம்பினுன் ஒருவன் காத்த நிறைஅரசு இறுதி நின்ற
வரம்பிலா ததனை மற்றோர் தலைமகன் வலிதில் கொண்டால்
அரும்புவ நலனும் தீங்கும் ஆகலின் ஐய நின்போல்
பெரும்பொறை அறிவி னேரால் நிலையினைப் பெறுவ தம்மா. 447

ஆன்றவற்கு உரிய தாய அரசினை நிறுவி அப்பால்
ஏன்றெனக்கு உரிய தாய கருமமும் இயற்றற் கொத்த
சான்றவர் நின்னின் இல்லை ஆதலால் தருமம் தானே
போன்றநீ யானே வேண்ட அத்தலை போதி என்றுன். 448

ஆழியான் அனைய கூற ஆணை தாகின் அஃதே
வாழியாய் புரிவேன் என்று வணங்கிமா ருதியும் போனுன்
சூழிமால் யானை யன்ன தம்பியும் தானும் தொல்லை
ஊழிநா யகனும் வேறோர் உயர்தடக் குன்றம் உற்றுன். 449

சுக்கிரீவனின் அரசாட்சி

ஆரியன் அருளி னுல்போய் அகன்மலை அகத்தன் ஆன
சூரியன் மகனும் மானத் துணைவரும் கிளையும் சுற்றத்
தாரையை வணங்கி அன்னுள் தாய்எனத் தந்தை முந்தைச்
சீரியன் சொல்லே என்னச் செவ்விதின் அரசு செய்தான். 450

வளஅரசு எய்தி மற்றை வானர வீரர் யாரும்
கிளைஞரின் உதவ ஆணை கிளர்திசை அளப்பக் கேளோடு
அளவிலா ஆற்றல் ஆண்மை அங்கதன் தங்கள் செல்வத்து
இளவரசு இயற்ற ஏவி இனிதினின் இருந்தான் இப்பால். 451

450-ம் பாட்டு: சீரியன் - வாலி (அல்லது இராமன்).

வள்ளலும் அவண்நின் றேகி மதங்கனது இருக்கை ஆய
வெள்ளவான் குடுமிக் குன்றத்து ஒருசிறை மேவி மெய்ம்மை
அள்ளுறு காதல் தம்பி உவகையால் அமைக்கப் பட்ட
எள்ளல்இல் சாலை எய்தி இனிதினின் இருந்த காலை 452

10. கார்காலப் படலம்

[மழைக்காலத்தைப் பற்றிக் கூறும் பகுதி]

மாவியல் வடதிசை நின்று வானவன்
ஓவியம் இதுஎன உரைக்க ஒண்கிலாத்
தேவியை நாடியே முந்தித் தென்திசை
ஏவிய தூதென இரவி ஏகினான். 453

பையணைப் பஃறலைப் பாந்தள் ஏந்திய
மொய்ந்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொற்றிரி
மைஎடுத் தொத்தது மழைத்த வானமே. 454

நண்ணுதல் அருங்கடல் நஞ்சம் நுங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காள மாம்என
விண்ணகம் இருண்டது வெயிலின் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தன தழைத்த மேகமே. 455

நஞ்சினின் நளிர்நெடுங் கடலின் நங்கையர்
அஞ்சன நயனத்தின் அவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை அரக்கர்தம் வடிவின் செய்கையின்
நெஞ்சினின் இருண்டது நீல வானமே. 456

நாட்களில் நளிர்கடல் நாரம் நாஉற
வேட்கையில் பருகிய மேகம் மின்னுவ
வாட்கைகள் மயங்கிய செருவில் வார்மதப்
பூட்கைகள் நிறைந்தபுண் திறப்ப போன்றவே. 457

நீல்நிறப் பெருங்கரி நிரைத்த நீர்த்தெனச்
சூல்நிற முகிற்குலம் துவன்றிச் சூழ்திரை
மால்நிற நெடுங்கடல் வாரி மூரிவான்
மேல்திரைத் துளதென முழக்கம் மிக்கதே. 458

அரிப்பெரும் பெயரவன் முதலி னோர்அணி
விரிப்பவும் ஒத்தன வெற்பு மீதுதீ
எரிப்பவும் ஒத்தன ஏசில் ஆசைகள்
சிரிப்பவும் ஒத்தன தெரிந்த மின்எலாம் 459

454-ம் பாட்டு: மை - இங்கே மேகத்தின் கருமைக்கு உவமை. இந்தப் பாட்டு, "வையம் தகளியா வார்கடலே நெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காக" என்ற பொய்கை யாழ்வார் பாடலைப் பார்த்து யாரோ ஒருவரால் எழுதிச் செருகப்பட்டதாக இருக்கலாம். சில பிரதிகளில் இப்பாட்டு இல்லை.

மாதிரக் கருமகன் மாரிக் கார்மழை
யாதினும் இருண்டவின் இருந்தைக் குப்பையில்
கூதிர்வெங் கால்நெடுந் துருத்திக் கோள்அமைத்து
ஊதுவெங் கனல்உமிழ் உலையும் ஒத்ததே. 460

பிரிந்துறை மகளிரும் பிலத்த பாந்தளும்
எரிந்துயிர் நடுங்கிட இரவி யின்கதிர்
அரிந்தன வாம்என அசனி நாவென
விரிந்தன திசைதொறும் மிசையின் மின்எலாம். 461

சூடின மணிமுடித் துகள்இல் விஞ்சையர்
கூடுறை நீக்கிய குருதி வாட்களும்
ஆடவர் பெயர்தொறும் ஆசை யானையின்
ஓடைகள் ஒளிபிறழ் வனவும் ஒத்ததே. 462

எண்வகை நாகங்கள் திசைகள் எட்டையும்
நண்ணின நாவலைத் தனைய மின்னுவ
கண்ணன்மெய் வடிவெனக் கருகிக் கார்விசும்பு
உள்நிறை உயிர்ப்பென ஊதை பொங்கவே. 463

தலைமையும் கீழ்மையும் தவிர்தல் இன்றியே
மலையினும் மரத்தினும் மற்றும் முற்றினும்
விலைநினைந்து உளவழி விலங்கும் வேசையர்
உலைவுறு மனம்என உலாயது ஊதையே, 464

அழுங்குறு மகளிர்தம் அன்பர்த் தீர்ந்தவர்
புழுங்குறு புணர்முலை கொதிப்பப் புக்குஉலாய்
கொழுங்குறைத் தசைஎன ஈர்ந்து கொண்டுஅது
விழுங்குறு பேய்என வாடை வீங்கிற்றே. 465

ஆர்த்தெழு துகள்விசும்பு அடைத்த லானும்மின்
கூர்த்தெழு வாள்எனப் பிறழும் கொட்பினும்
தார்ப்பெரும் பணையின்விண் தழங்கு காரினும்
போர்ப்பெருங் களம்எனப் பொலிந்த தும்பரே. 466

இன்நகைச் சனகியைப் பிரிந்த வேந்தன்மேல்
மன்மதன் மலர்க்கணை வழங்கி னுன்எனப்
பொன்நெடுங் குன்றின்மேல் பொழிந்த தாரைகள்
மின்னெடும் துவன்றின மேக ராசியே. 467

கல்லிடைப் படும்துணித் திவலை கார்இடு
வில்லிடைச் சரம்என விசையின் வீழ்ந்தன
செல்லிடைப் பிறந்தசெங் கனல்கள் சிந்தின
அல்லிடை மணிசிறந்து அழல்இ யற்றல்போல். 468

மள்ளர்கள் மறுபடை மான யானைமேல்
வெள்ளிவேல் எறிவன போன்ற மேகங்கள்
தள்ளரும் துளிபடத் தகர்ந்து சாய்கிரி
புள்ளிவெங் கடகரி புரள்வ போன்றவே. 469

வான்இடு தனுநெடுங் கரும்பு வில்மழை
மீன்நெடுங் கொடியவன் பகழி வீழ்துளி
தான்நெடுஞ் சார்துணை பிரிந்த தன்மையர்
ஊனுடை உடம்பெலாம் உருக்கல் ஒத்ததே. 470

தீர்த்தனும் கவிகளும் செறிந்து நம்பகை
பேர்த்தனர் இனிஎனப் பேசி வானவர்
ஆர்த்தென ஆர்த்தன மேகம் ஆய்மலர்
தூர்த்தன ஒத்தன துள்ளி வெள்ளமே. 471

வண்ணவில் கரதலத்து அரக்கன் வாளினன்
விண்ணிடைக் கடிதுகொண் டேகும் வேலையில்
பெண்ணினுக்கு அருங்கலம் அனைய பெய்வளை
கண்ணெனப் பொழிந்தது கால மாரியே. 472

பரஞ்சுடர்ப் பண்ணவன் பண்டு விண்தொடர்
புரம்சுட விடுசரம் புரையும் மின்னினம்
அரம்சுடப் பொறிநிமிர் அயிலின் ஆடவர்
உரம்சுட உளைந்தன பிரிந்து ளோர்க்கெலாம். 473

பொருள்தரப் போயினர் பிரிந்த பொய்உடற்கு
உருள்தரு தேர்மிசை உயிர்கொண்டு உய்த்தலால்
மருள்தரு பிரிவின்நோய் மாசு ணம்கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே. 474

முழங்கின முறைமுறை மூரி மேகநீர்
வழங்கின மிடைவன மான யானைகள்
தழங்கின பொழிமதத் திவலை தாழ்தரப்
புழுங்கின எதிர்எதிர் பொருவ போன்றவே. 475

விசைகொடு மாருதம் மறித்து வீசலால்
அசைவுறு சிறுதுளி அப்பு மாரியின்
இசைவுற எய்வன இயைவ வாய்இருந்
திசையொடு திசைசெருச் செய்தல் ஒத்தவே. 476

விழையுறு பொருள்தரப் பிரிந்த வேந்தர்வந்து
உழைஉற உயிர்உற உயிர்க்கும் மாதரின்
மழையுற மணம்உற மலர்ந்து தோன்றின
குழையுறப் பொலிந்தன உலவைக் கொம்பெலாம். 477

470-ம் பாட்டு : மேகம் (மழை) மன்மதனுக்கும் (மீன் நெடுங் கொடியவன்), வானவில் கரும்பு வில்லுக்கும், மழைத்துளி மலர்ப் பாணங்களுக்கும், மலைச்சாரல் (சார்) பிரிந்த காதலர்களுக்கும் உவமை. 472-ம் பாட்டு : அரக்கன் - இராவணன். பெய்வளை - சீதை.

வேறு

பாடலம் வறுமை கூரப் பகலவன் பசுமை கூரக்
கோடல்கள் பெருமை கூரக் குவலயம் சிறுமை கூர
ஆடின மயில்கள் பேசாது அடங்கின குயில்கள் அன்பர்
கேடுறத் தளர்ந்தார் போன்றும் திருவுறக் கிளர்ந்தார் போன்றும். 478

நால்நிறச் சுரும்பும் வண்டும் நன்மணி அணியும் சாரல்
தேன்உக மலர்ந்து சாய்ந்த சேய்இதழ்க் காந்தட் செம்பூ
வேனிலே வென்ற தம்மா கார்என வியந்து நோக்கி
மாநிலக் கிழத்தி கைகள் மறித்தன போன்ற மன்னே. 479

வாள்எயிற்று அரவம் போல வன்தலை கான்ற மானத்
தாளுடைக் கோடல் தம்மைத் தழீஇயன காதல் தங்க
மீளல அவையும் அன்ன விழைவன உணர்வு வீந்த
கோள்அர வென்னப் பின்னி அவற்றொடும் குழைந்து சாய்ந்த. 480

எள்இட இடம்ஒன் றின்றி எழுந்தன இலங்கு கோபம்
தள்ளுறத் தலைவர் தம்மைப் பிரிந்தவர் தழுவத் தூபக்
கள்ளுடை ஓதி யார்தம் கலவியில் பலகால் கான்ற
வெள்ளடைத் தம்பல் குப்பை சிதர்ந்தென விரிந்த மாதோ. 481

தீங்கனி நாவல் ஓங்கும் சேணுயர் குன்றின் செம்பொன்
வாங்கின கொண்டு பாரில் மண்டுமால் யாறு மான
வேங்கையின் மலரும் கொன்றை விரிந்தன வீயும் ஈர்த்துத்
தாங்கின நதிகள் சென்று தலைமயக் குறுவ தம்மில். 482

நன்னெடுங் காந்தள் போதின் நறைவிரி கடுக்கை மென்பூத்
துன்னிய கோபத் தோடும் தோன்றிய தோற்றம் தும்பி
இன்னிசை முரல்வ நோக்கி இருநிலம் மலர்க்கை ஏந்திப்
பொன்னெடும் காசை நீட்டிக் கொடுப்பதே போன்ற தன்றே. 483

கிளைத்துணை மழலை வண்டு கின்னரம் நிகர்த்த மின்னும்
துளிக்குரல் மேகம் வள்வார்த் தூரியம் துவைப்ப போன்ற
வளைக்கையர் போன்ற மஞ்ஞை தோன்றிகள் அரங்கின் மாடே
விளக்கினம் ஒத்த காண்போர் விழிகரு விளையின் மென்பூ. 484

479-ம் பாட்டு: மாநிலக் கிழத்தி கைகள் மறித்தன - மழைக் காலத்தை விரும்பிய பூமிதேவி, வேனிற் காலத்தைக் கைகளால் தடுப்பதுபோல (செங்காந்தள் மலர்கள் பூத்திருந்தன). 482-ம் பாட்டு: குன்றின் - மகாமேரு மலையின். யாறு - சம்புநதி. மகா மேரு மலையின் தென்புறத்தில் உள்ள ஒரு நாவல் மரத்தின் (சம்பு மரம்) கனிகள், அந்த மலையின்மேல் உதிர்ந்து சிதைவதால், அவற்றின் சாறு பெருகி சம்புநதி என்ற ஒரு நதி உற்பத்தியாகி ஓடுகிறது. ஆற்றின் சாறு மேரு மலையிலிருந்து பாய்வதால் அதில் தங்கக் கலப்பு உண்டு. அதனால் அந்தச் சாறு பாயும் இடங்களிலுள்ள மண்ணும், உலர்ந்தபின் தங்கமாகிறது. இந்தத் தங்கத்துக்குச் சாம்புநதம் என்று பெயர். மேற்சொன்ன நாவல் மரத்தினால் இந்தியாவுக்கு நாவலந்தீவு (சம்புத்வீபம்) என்ற பெயரும் வழங்கியது.

பேடையும் ஞிமிறும் பாயப் பெயர்வுழிப் பிறக்கும் ஓசை
ஊடுறத் தாக்கும் தோறும் ஒல்லொலி பிறப்ப நல்லார்
ஆடியல் பாணிக்கு ஒக்கும் ஆரிய அமுதப் பாடல்
கோடிய தாளம் கொட்டல் மலர்ந்தகூ தாளம் ஒக்க. 485

வழைதுறு கான யாறு மாநிலக் கிழத்தி மக்கட்கு
உழைதுறு மலைமாக் கொங்கை சுரந்தபால் ஒழுக்கை ஒத்த
விழைவுறு வேட்கை நாளும் வேண்டினர்க்கு உதவ வேண்டிக்
குழைதொறும் கனகம் தூங்கும் கற்பகம் நிகர்த்த கொன்றை. 486

பூவியல் புறவம் எங்கும் பொறிவரி வண்டு போர்ப்பத்
தீவிய களிய ஆகிச் செருக்கின காமச் செவ்வி
ஓவிய மரங்கள் தோறும் உரைத்துஅற உரிஞ்சி ஒண்கேழ்
நாவியின் மணங்கள் நாறக் கலையொடும் புலந்த நவ்வி. 487

வேறு

தேரி னன்நெடுந் திசைசெலச் செருக்கழிந்து ஒடுங்கும்
கூர்அ யில்தரும் கண்ணெனக் குவிந்தன குவளை
மாரன் அன்னவர் வரவுகண்டு உவக்கின்ற மகளிர்
மூரல் மென்குறு முறுவல்ஒத்து அரும்பின முல்லை. 488

களிக்கும் மஞ்ஞையைக் கண்ணுளர் இனமெனக் கண்ணுற்று
அளிக்கும் மன்னரின் பொன்மழை வழங்கின அருவி
வெளிக்கண் வந்தகார் விருந்தென விருந்துகண்டு உள்ளம்
களிக்கும் மங்கையர் முகம்எனப் பொலிந்தன கமலம். 489

சரத நாள்மலர் யாவையும் குடைந்தன தடவிச்
சுரத நூல்தெரி விடர்எனத் தேன்கொண்டு தொகுப்ப
பரத நூல்முறை நாடகம் பயனுறப் பகுப்பான்
இரதம் ஈட்டுறும் கவிஞரைப் பொருவின தேனீ. 490

நோக்கி னல்நமை நோக்கழி கண்டநுண் மருங்குல்
தாக்க ணங்குஅருஞ் சீதைக்குத் தாங்கரும் துன்பம்
ஆக்கி னன்நமது உருவின்என்று அரும்பெறல் உவகை
வாக்கி னல்உரை யாம்எனக் களித்தன மான்கள். 491

நீடு நெஞ்சுறு நேயத்தால் நெடிதுறப் பிரிந்து
வாடு கின்றன மருளுறு காதலின் மயங்கிக்
கூடு நன்னதித் தடந்தொறும் குடைந்தன படிவுற்று
ஆடு கின்றன கொழுநரைப் பொருவின அன்னம். 492

தார்எ னும்பெயர்க் குரியவன் மார்பினில் கதிர்முத்து
ஆரம் என்னவும் பொலிந்தன அளப்பரும் அளக்கர்
நீர்மு கந்தமா மேகத்தின் மருங்குற நிரைத்த
கூரும் வெண்ணிறத் திரைஎனப் பறப்பன குரண்டம். 493

491-ம் பாட்டு: ஆக்கினன் - மாரீசன் ஆக்கினன்.

மருவி நீங்கல்செல் லாநெடு மாலைய வானில்
பருவ மேகத்தின் அருகுறக் குருகினம் பறப்ப
திருவின் நாயகன் இவன்எனத் தேமறை தெரிக்கும்
ஒருவன் மார்பினில் உத்தரி யத்தையும் ஒத்த. 494

உறவெ துப்புறும் கொடுந்தொழில் வேனிலான் ஒழியத்
திறம்நி னைப்பரும் கார்எனும் செவ்வியோன் சேர
நிறம னத்துறு குளிர்ப்பினின் நெடுநில மடந்தை
புறம யிர்த்தலம் பொடித்தன போன்றன பசும்புல். 495

தேன்அ வாம்மலர்த் திசைமுகன் முதலினர் தெளிந்தோர்
ஞான நாயகன் நவைஉற நோக்கெலாம் நல்கக்
கானம் யாவையும் பரப்பிய கண்எனச் சனகன்
மானை நாடிநின்று அழைப்பன போன்றன மஞ்ஞை. 496

செஞ்செவ் வேலவர் செறிசிலைக் குரிசிலர் இருண்ட
குஞ்சி சேயொளி கதுவுறப் புதுநிறம் கொடுக்கும்
பஞ்சி போர்த்தமெல் அடியெனப் பொலிந்தன பதுமம்
வஞ்சி போலியர் மருங்கென நுடங்கின வல்லி. 497

நீயிர் அன்னவர் குதலையர் ஆதலின் நேடிப்
போய தையலைத் தருதிர்என்று இராகவன் புகலத்
தேயம் எங்கணும் திரிந்தன போந்திடை தேடிக்
கூய வாய்க்குரல் குறைந்தபோல் குறைந்தன குயில்கள். 498

பொழிந்த மாநிலம் புல்தரக் குமட்டிய புனிற்றுஆ
எழுந்த ஆம்பிகள் இடறின செறிதயிர் ஏய்த்த
மொழிந்த தேனுடை முகிழ்முலை ஆய்ச்சியர் முழவில்
பிழிந்த பால்வழி நுரைஎனப் பொருவுவ பிடவம். 499

வேங்கை நாறின கொடிச்சியர் வடிக்குழல் விழைவண்டு
ஏங்க நாகமும் நாறின நுளைச்சியர் ஐம்பால்
ஓங்கு நாள்முல்லை நாறின ஆய்ச்சியர் ஓதி
ஞாங்கர் உற்பலம் உழத்தியர் பித்திகை நாற. 500

சீதையை எண்ணி இராமன் துயருறுதல்

தேரைக் கொண்டபேர் அல்குலாள் திருமுகம் காணான்
ஆரைக் கண்டுஉயிர் ஆற்றுவான் நல்லுணர் வழிந்தான்
மாரற்கு எண்ணில்பல் ஆயிரம் மலர்க்கணை வகுத்த
காரைக் கண்டனன் வெந்துயர்க் கொருகரை காணான். 501

அளவில் காரெனும் அப்பெரும் பருவம்வந் தணைந்தால்
தளர்வர் என்பது தவம்புரி வோர்கட்கும் தகுமால்
கிளவி தேனினும் அமிழ்தினும் குழைத்தவள் கிளைத்தோள்
வளவி உண்டவன் வருந்தும்என் றுல்அது வருத்தோ. 502

497-ம் பாட்டு: குஞ்சி......அடி - ஊடல் காலத்தில் காலில் விழுந்து வணங்கும் கணவனுடைய இருண்ட தலைமயிர் சிவப்பாகும்படி மிதிக்கும் செம்பஞ்சுக் குழம்பு தடவிய பாதம். 498-ம் பாட்டு: அன்னவர் - சீதை. 502-ம் பாட்டு: வருத்தோ - வருத்தம் என்று

காவி யும்கருங் குவளையும் நெய்தலும் காயாம்
பூவை யும்பொரு வானவன் புலம்பினன் தளர்வான்
ஆவி யும்சிறிது உண்டுகொ லாம்என அயிர்த்தான்
தூவி அன்னம்அன் னுள்திறத்து இவைஇவை சொல்லும். 503

வேறு

வார்ஏர்முலை யாளைம றைக்குநர்வாழ்
ஊரேஅறி யேன்உயி ரோடுழல்வேன்
நீரேஉடை யாய்அருள் நின்இலையோ
காரேஎனது ஆவிக லக்குதியோ. 504

வெப்பார்நெடு மின்னின்எ யிற்றைவெகுண்டு
எப்பாலும்வி சும்பின்இ ருண்டெழுவாய்
அப்பாதக வஞ்சஅ ரக்கரையே
ஒப்பாய்உயிர் கொண்டலது ஓவலையோ. 505

அயிலேவிழி யார்விளை ஆரமிழ்தின்
குயிலேமொழி யாய்கொண ராய்கொடியால்
துயிலேன்ஒரு வேன்உயிர் சோர்வுஉணர்வாய்
மயிலேஎனை நீவலி ஆடுதியோ. 506

மழைவாடையொடு ஆடிவ லிந்துயிர்மேல்
நுழைவாய்மலர் வாய்நொடி யாய்கொடியே
இழைவாள்நுத லார்இடை போல்இடையே
குழைவாய்எனது ஆவிகு ழைக்குதியோ. 507

விழையேன்விழைவு ஆனவை மேன்மையினின்று
இழையேன்உணர் வேன்அவை இன்மையினால்
பிழையேன்உயி ரோடுபி ரிந்தனரால்
உழையேஅவர் எவ்வுழை யார்உரையாய். 508

பயில்பாடக மெல்லடி பஞ்சனையார்
செயிர்ஏதும்இ லாரொடு தீருதியோ
அயிராதுட னேஅகல் வாய்அலையோ
உயிரேகெடு வாய்உறவு ஓர்கிலையோ. 509

ஒன்றைப்பக ராய்குழ லுக்குஉடைவாய்
வன்தைப்புஉறு நீள்வயி ரத்தினையோ
கொன்றைக்கொடி யாய்கொணர் கிற்றிலையோ
என்றைக்குஉற வாகஇ ருந்தனையோ. 510

விசேஷித்துச் சொல்லத்தக்கதோ? - அல்ல; அது இயல்பே (என்று பொருள் கூறுவர்). 504-ம் பாட்டு: நின் இலையோ - உன்னிடம் இல்லையோ? 505-ம் பாட்டு: எயிற்றை - பற்களை உடையாய். 508-ம் பாட்டு: அவை - விரும்பத்தக்கவற்றை விரும்புதலும், மேல் நிலையிலிருந்து செயல் புரிதலும். 509-ம் பாட்டு: உறவு - உயிராகிய உனக்கும், சிதைக்கும் உள்ள உறவு. 510-ம் பாட்டு: குழலுக்கு உடைவாய் - சீதையின் கூந்தலுக்குத் தோற்கும் (கொன்றையே). கொன்றையின் காய், பெண்களின் கூந்தலுக்கு வடிவத்தில் உவமையாகக் கூறப்படுவதுண்டு.

வேறு

குராஅரும் பனைய கூர்வாள் எயிற்றுவெங் குருளை நாகம்
விராவுவெங் கடுவின் கொல்லும் மெல்இணர் முல்லை வெய்தின்
உராவரும் துயரம் மூட்டி ஒய்வற மலைவ தொன்றோ
இராவணன் கோபம் நிற்க இந்திர கோபம் என்னே. 511

ஓடைவாள் நுதலி னாளை ஒளிக்கலாம் உபாயம் எண்ணி
நாடிமா ரீச னாரே நாடக நவ்வி ஆனார்.
வாடையாய்க் கூற்றி னாரும் உருவினை மாற்றி வந்தார்
கேடுசூழ் வார்க்கு வேண்டும் உருக்கொளக் கிடைத்த அன்றே. 512

அருவினை அரக்கர் என்ன அந்தரம் அதனில் யாரும்
வெருவர முழங்கு கின்ற மேகமே மின்னு கின்றாய்
தருவன்என்று இரங்கி னாயோ தாமரை மறைந்த தையல்
உருவினைக் காட்டிக் காட்டி ஒளிக்கின்றாய் ஒக்கின் றாயால். 513

உள்நிறைத்து உயிர்க்கும் வெம்மை உயிர்சுட உலையும் உள்ளம்
புண்ணுற வாளி தூர்த்தல் பழுதினிப் போதி மாரா
எண்ணுறு கல்வி யுள்ளத்து இளையவன் இன்னே உன்னைக்
கண்ணுறு மாகில் பின்னை யார்அவன் சீற்றம் காப்பார். 514

வில்லும்வெங் கணையும் வீரர் வெஞ்சமத்து அஞ்சினர் மேல்
புல்லுவ அல்ல ஆற்றல் போற்றலர்க்கு உரித்துப் போலாம்
அல்லும்நன் பகலும் நீங்கா அனங்கநீ அருளின் தீர்ந்தாய்
செல்லும்என்று எளிவந் தோர்மேல் செலுத்தலும் சீர்மைத் தாமோ.

இராமனை இலக்குவன் தேற்றுதல்

என்னஇத் தகைய பன்னி இடர்உழந்து இரங்கு கின்ற
தன்னைஒப் பானை நோக்கித் தகையழிந்து அயர்ந்த தம்பி
நின்னைஎத் தகையை யாக நினைந்தனை நெடியோய் என்னாச்
சென்னியில் சுமந்த கையன் தேற்றுவான் செப்ப லுற்றான். 516

வேறு

காலம்நீளிது காரும்மாரியும் வந்ததென்றக வற்சியோ
நீலமேனிஅ ரக்கர்வீரம்நி னைந்தழுங்கிய நீர்மையோ
வாலிசேனைம டந்தைவைகிடம் நாடவாரல்இ லாமையோ
சாலும்நல்லுரை கேள்விவீரத ளர்ந்ததென்னைத வத்தினோய். 517

மறைதுளங்கினும் மதிதுளங்கினும் வானும்ஆழ்கடல் வையமும்
நிறைதுளங்கினும் நிலைதுளங்குறு நிலைமைநின்வயின் நிற்குமோ
பிறைதுளங்குறும் அனையபேர்எயி றுடையபேதையர் பெருமைநின்
இறைதுளங்குறு புருவமென்சிலை இறைதுளங்குற இயலுமோ. 518

517-ம் பாட்டு: வாலிசேனை - வாலியால் திரட்டப்பட்டு இப்போது சுக்கிரீவனிடம் உள்ள சேனை. மடந்தை - சீதை. 518-ம் பாட்டு: இறை துளங்குறு......இயலுமோ - தெய்வத்தன்மை நிறைந்த புருவங்கள் என்ற மெல்லிய விற்கள் சற்று அசைந்தாலும் (அரக்கர் எதிரில் நிற்க) இயலுமோ?

அனுமன்என்பவன் அறிவறிந்தனம் அறிஞஅங்கதன் ஆதியோர்
எனையர்என்பதோர் இறுதிகண்டிலம் எழுபதென்றெணும் இயல்பினர்
வினையின்வெந்துயர் விரவுதிங்களும் விரைவு சென்றன எளிதில்நின்
தனுவெனும்திரு நுதலிவந்தனள் சரதம்வன்துயர் தவிர்தியே. 519

மறைஅறிந்தவர் வரவுகண்டுஉமை வலியும்வஞ்சகர் வழியொடும்
குறையவென்றுஇடர் களைவென்என்றனை குறைமுடிந்தது வினையினல்
இறைவஅங்கவர் இறுதிகண்டினிது இசைபுனைந்துஇமை யோர்கள்தாம்
உறையும்உம்பரும் உதவிநின்றருள் உணர்வழிந்திடல் உறுதியோ. 520

காதுகொற்றம்உ னக்கலாதுபி றர்க்கெவ்வாறுக லக்குமோ
வேதனைக்கிட மாதல்வீரதை யன்றுபேதைமை யாமரோ
போதுபிற்படல் உண்டிதோர்பொருள் அன்றிஇன்று புணர்த்தியேல்
யாதுனக்கிய லாததெந்தைவ ருந்தல்என்னஇ யம்பினன். 521

சொற்றதம்பிஉ ரைக்குணர்ந்துயிர் சோர்வொடுங்கிய தொல்லையோன்
இற்றஇன்னல்இ யக்கம்எய்திட வைகல்பற்பல ஏகமேல்
உற்றுநின்றவி னைக்கொடும்பிணி ஒன்றின்மேலுடன் ஒன்றுஉராய்
மற்றும்வெம்பிணி பற்றினலென வந்தெதிர்ந்தது மாரியே. 522

வேறு

நிறைந்தன நெடுங்குளம் நெருங்கின தரங்கம்
குறைந்தன கருங்குயில் குளிர்ந்தஉயர் குன்றம்
மறைந்தன தடந்திசை வருந்தினர் பிரிந்தார்
உறைந்தன அகன்றிலுடன் அன்றில்உயிர் ஒன்றி. 523

பாசிழை அரம்பையர் பழிப்பில்அகல் அல்குல்
தூசுதொடர் ஊசல்நனி வெம்மைதொடர் வுற்றே
வீசியது வாடைஎரி வெந்தவிரி புண்வீழ்
ஆசில்அயில் வாளிஎன ஆசைபுரி வார்மேல். 524

வேலைநிறை வுற்றன வெயில்கதிர் வெதுப்பும்
சீலம்அழி வுற்றபுனல் உற்றுருவு செப்பின்
காலம்அறி வுற்றுணர்தல் கன்னல்அள வல்லால்
மாலைபகல் உற்றதென ஓர்வரிது மாதோ. 525

519-ம் பாட்டு: எழுபதென்றெணும் - எழுபது வெள்ளம் என்று எண்ணப்படும் திங்களும் - மாதங்களும். நுதலி - சீதை. வந்தனள்- வந்துவிடுவாள். விரைவாகவும் நிச்சயமாகவும் நிகழப்போகும் காரியத்தை, நிகழ்ந்துவிட்டதாகவே கூறுவது வழக்கம். 520-ம் பாட்டு: மறை அறிந்தவர் - தண்டகவனத்து முனிவர்கள். குறை முடிந்தது - சீதையை இராவணன் தூக்கிக்கொண்டு சென்ற குறை நிகழ்ந்துவிட்டது. இமையோர்கள்தாம் உறையும் உம்பரும் உதவி- இராவணனுல் தங்கள் வானுலக ஸ்தானங்களை இழந்து தவிக்கும் தேவர்களுக்குத் திரும்பவும் அவற்றை மீட்டுக் கொடுத்து. 521-ம் பாட்டு: உண்டிதோர்-உண்டு இது ஓர். போது பிற்படல் உண்டி தோர் பொருள்-காலம் அறிந்து செய்தல் என்ற ஒருநியதியும் உண்டு

நெற்கிழிய நெற்பொதி நிரம்பின நிரம்பாச்
சொற்குஇழிய நற்கிளிகள் தோகையவர் தூமென்
பற்குஇழி மணிப்படர் திரைப்பரதர் முன்றில்
பொற்கிழி விரித்தன சினைப்பொதுளு புன்னை. 526

நிறம்கருகு கங்குல்பகல் நின்றநிலை நீவா
அறம்கருது சிந்தைமுனி அந்தணரின் ஆலிப்
பிறங்கரு நெடுந்துளி படப்பெயர்வில் குன்றின்
உறங்கல விலங்கல்இல நின்றஉயர் வேழம். 527

சந்தின்அடை யின்படலை வேதிகை தடந்தோறு
அந்திஇடுஅ கில்புகை நுழைந்தகுளிர் அன்னம்
மந்திதுயி லுற்றமுழை வன்கடுவன் அங்கத்து
இந்தியம்அ வித்ததனி யோகியின் இருந்த. 528

ஆசில்சுனை வால்அருவி ஆயிழையர் ஐம்பால்
வாசமணம் நாறல்இல ஆனமணி வன்கால்
ஊசல்வறி தானஇதண் ஒண்மணிகள் விண்மேல்
வீசல்இல ஆனநெடு மாரிதுளி வீச. 529

கருந்தகைய தண்சினைய கைதைமடல் காதல்
தரும்தகைய போதுகிளை யின்புடை தயங்கப்
பெருந்தகைய பொற்சிறை ஒடுக்கிஇடை பேராது
இருந்தகுரு கின்பெடை பிரிந்தவர்கள் என்ன. 530

526-ம் பாட்டு : (இதன் பொருள்) செம்படவப் பெண்களின் முற்றுத மழலைச் சொற்களுக்குத் தோற்ற கிளிகள், நெல் பொதிகளில் நிரம்பி, நெல் கிழியும்படி கொத்திக் கொறித்துத் தின்றன. மழைக்காலமானதால் வெளியிடங்களுக்குப் போய் அவை இரை தேட முடியவில்லை. அப்பெண்களின் பற்களுக்குத் தோற்ற முத்துக்களோடு அலைகள் வந்து மோதும் செம்படவர்களின் வீட்டு முற்றங்களில் அரும்புகள் நிறைந்த புன்னை மரங்கள் பொன் முடிந்த முடிப்பை அவிழ்ப்பதுபோலப் பூத்தன. 528-ம் பாட்டு : வேதிகை தடம் - ஓமம் வளர்க்கும் யாக மேடை. நுழைந்த - குளிர் காய்வதற்காக நுழைந்தன. முழை - குகையில். அங்கத்து இந்தியம் அவித்த தனி யோகியின் - யோகத்தின் எட்டு அங்கங்களில் ஒன்றினால், தன் ஐம்பொறி உணர்ச்சிகளை அடக்கிய யோகியைப்போல. ஐம்பொறி உணர்ச்சிகளை அடக்குவது பிரத்தியாகாரம் என்னும் யோக அங்கம். 529-ம் பாட்டு: (இதன் பொருள்) மழை மிகுதியால், அருவிகளில் பெண்கள் நீராடவில்லை. அதனால், அருவி நீரில் நறுமணம் வீசவில்லை. அவர்கள் ஏறிவிளையாடாததால் ஊஞ்சல்கள் வெறிச்சோடி இருந்தன. தினைப்புனங்களைக் காவல் செய்யப் பெண்கள் வரவில்லை. அதனால் பரண்களிலிருந்து கிளிகளை விரட்டுவதற்கு ரத்தினங்களை வீசும் காரியமும் நடைபெறாமல் போய்விட்டது. 530-ம் பாட்டு: (இதன் பொருள்) கருநிறமுள்ள கிளைகளைக்கொண்ட தாழை மரங்களின் மடல்களில், ஆசையைப் பெருகச்செய்யும் மலர்கள்

பதங்கம்முழவு ஒக்கஇசை யைஞிமிறு பன்ன
விதங்களின்ந டித்திடு விகற்பவழி மேவும்
மதங்கியரை ஒத்தமயில் வைகும்மர மூலத்து
ஒதுங்கினஉ ழைக்குலம்ம ழைக்குலம் உழக்க. 531

விளக்கொளிஅ கில்புகைவி ழுங்குஅமளி மென்கொம்பு
இளைக்கும்இடை மங்கையரும் மைந்தர்களும் ஏறத்
தளத்தகும லர்த்தவிசுஇ கந்துநகு சந்தின்
தொளைத்துயில்உ வந்துதுயில் வுற்றகுளிர் தும்பி. 532

தாமரைம லர்த்தவிசுஇ கந்துதகை அன்னம்
மாமரம்நி ரைத்தொகுபொ தும்பர்உழை வைகத்
தேமரம்அ டுக்குஇதண் இடைச்செறி குரம்பைத்
தூமருவுஎ யிற்றியரொடு அன்பர்துயில் வுற்றார். 533

வள்ளிபுடை சுற்றிஉயர் சிற்றிலை மரம்தோறு
எள்ளரு மறிக்குருளொடு அண்டர்கள் இருந்தார்
கள்ளரின் ஒளித்துழல் நெடுங்கழுதுஒ துங்கி
முள்எயிறு தின்றுபசி மூழ்கிட இருந்த. 534

சரம்பயில் நெடுந்துளி நிமிர்ந்தபுயல் சார
உரம்பெயர்வில் வன்கரி கரந்துறஒடுங்கா
வரம்பிகல் நெடும்பிரசம் வைகல்பல வைகும்
முரம்பினில் நிரம்பல முழைஞ்சிடை நுழைந்த. 535

இத்தகைய மாரியிடை துன்னிஇருள் எய்த
மைத்தகும ணிக்குழல்ம லர்ச்சனகன் மான்மேல்
உய்த்தஉணர் வத்தினன் நெருப்பிடை உயிர்ப்பான்
வித்தகன்இ லக்குவனை முன்னினன் விளம்பும். 536

வேறு

மழைக்கரு மின்எயிற்று அரக்கன் வஞ்சனை
இழைப்பரும் கொங்கையும் எதிர்வுற்று இன்னலின்
உழைத்தனள் உலைந்துயிர் உலக்கும் ஒன்றினும்
பிழைப்பரிது எனக்கும்இது என்ன பெற்றியோ. 537

உறவினரைப்போலப் பக்கத்தில் விளங்க, பெண் நாரைகள் தங்கள் பெரிய பொன்னிறச் சிறகுகளை ஒடுக்கி இடம் பெயராமல் அங்கேயே அசைவற்று நின்றன—காதலரைப் பிரிந்த பெண்களைப்போல. குறிப்பு: மழைக்காலத்தில் தாழைகள் மிகுதியாகப் பூக்கும். தாழையின் பூ மன்மதனுடைய வாள் என்று கூறப்படுவதால், அது காதலைப் பெருகச் செய்யக்கூடியது. தாழம் பூவின் வடிவத்தை நாரையின் வடிவத்தோடு ஒப்பிடுவது வழக்கம். 534-ம் பாட்டு: சிற்றிலைமரம் - மழைக்கு ஒதுங்குகிறவர்கள் பெரிய இலைகளை உடைய மரங்களைவிட்டு சிறிய இலைகளை உடைய மரங்களின்கீழ் ஒதுங்குவார்கள்—மழை நீர் அதிகமாக ஒழுகாது என்பதால். 537-ம் பாட்டு: இழைப் பரும் கொங்கை - ஆபரணங்கள் தரித்த பருத்த மார்புடைய சீதை.

தூநிறச் சுடுசரம் தூணி தூங்கிட
வானுறப் பிறங்கிய வயிரத் தோளொடும்
யான்உறக் கடவதே இதுவும் இந்நிலை
வேல்நிறத்து உற்றதொத் துழியும் வீகிலேன். 538

தெரிகணை மலரொடும் திறந்த நெஞ்சொடும்
அரியவள் துயரொடும் யானும் வைகுவேன்
எரியும்மின் மினிமணி விளக்கின் இன்துணைக்
குரீஇஇளம் பெடையொடும் துயில்வ கூட்டினுள். 539

வானகம் மின்னினும் மழை முழங்கினும்
யான்அகம் மெலிகுவேன் எயிற்று அராவெனக்
கானகம் புகுந்துயான் முடித்த காரியம்
மேல்நகும் கீழ்நகும் இனிஎன் வேண்டுமோ. 540

மறந்திருந்து உய்கலேன் மாரி ஈதெனில்
இறந்துவிண் சேர்வது சரதம் இப்பழி
பிறந்துபின் தீர்வனே பின்னர் அன்னது
துறந்துசென்று உறுவனே துயரின் வைகுவேன். 541

ஈண்டுநின்று அரக்கர்தம் இருக்கை யாம்இனிக்
காண்டலில் பற்பல காலம் காண்டுமால்
வேண்டுவது அன்றிது வீர நோய்தெற
மாண்டனன் என்பது மாட்சிப் பாலதால். 542

செப்புருக்கு அனையஇம் மாரிச் சீகரம்
வெப்புறப் புறம்சுட வெந்து வீவதோ
அப்புருக் கொண்டவாள் நெடுங்கண் ஆயிழை
துப்புருக் குமுதவாய் அமுதம் துய்த்தயான். 543

நெய்அடை தீஎதிர் நிறுவி நிற்குஇவள்
கையடை என்றஅச் சனகன் கட்டுரை
பொய்அடை ஆக்கிய பொறிஇ லேனெடு
மெய்அடை யாதுஇனி விளிதல் நன்றரோ. 544

தேற்றுவாய் நீஉளை ஆகத் தேறிநின்று
ஆற்றுவேன் நான்உளன் ஆக ஆய்வளை
தோற்றுவாள் அல்லள்இத் துன்பம் ஆர்இனி
மாற்றுவார் துயர்க்கொரு வரம்புண் டாகுமோ. 545

விட்டதோர் வடிக்கணை விரித்த விண்ணையும்
சுட்டபோது இமையவர் முதல தொல்லையோர்
பட்டபோது உலகமும் உயிரும் பற்றுஅறக்
கட்டபோ தல்லது மயிலைக் காண்டுமோ. 546

541-ம் பாட்டு: மறந்திருந்து-சீதையை மறந்திருந்து. பிறந்து - மற்றொரு பிறப்பு எடுத்து, பின்னர்-மேலும் ஒரு பிறப்பெடுத்து, அன்னது - பழி நீங்குவதை. துறந்து-துறவறம் பூண்டு. 542-ம்பாட்டு: வேண்டுவது அன்றிது - சீதையைத் தேடும் காரியம் வேண்டாம். நோய் - பிரிவு நோய்.

தருமம்என் றொருபொருள் தன்னை அஞ்சியான்
தெருமரு கின்றது செறுநர் தேவரோடு
ஒருமையின் வந்தன ரேனும் உய்கலார்
உரும்என ஒலிபடு உரவி லோய்என்றான். 547

இளவலும் உரைசெய்வான் எண்ணும் நாள்இனும்
உளஅல கூதிரும் இறுதி உற்றதால்
களவுசெய் தவன்உறை காணும் காலம்வந்து
அளவியது அயர்வதென் ஆணை ஆழியாய். 548

திரைசெய்அத் திண்கடல் அமிழ்தம் செங்கணான்
உரைசெயத் தரினும்அத் தொழில்உ வந்திலன்
வரைமுதல் கலப்பைகள் மாடு நாட்டித்தன்
குரைமலர்த் தடக்கையால் கடைந்து கொண்டனன். 549

மனத்தினின் உலகெலாம் வகுத்து வாய்ப்பெயும்
நினைப்பினன் ஆயினும் நேமி யான்நெடும்
எனைப்பல படைக்கலம் ஏந்தி யாரையும்
வினைப்பெரும் சூழ்ச்சியின் பொருது வெல்லுமால். 550

கண்ணுடை நுதலினன் கணிச்சி வானவன்
விண்ணிடைப் புரம்சுட வெகுண்ட மேலைநாள்
எண்ணிய சூழ்ச்சியும் ஈட்டிக் கொண்டவும்
அண்ணலே ஒருவரால் அறியற் பாலவோ. 551

ஆகுநர் யாரையும் துணைவர் ஆக்கிப்பின்
ஏகுறு நாளிடை எய்தி எண்ணுவ
சேகறப் பன்முறை தெருட்டிச் செய்தபின்
வாகைஎன் றொருபொருள் வழுவற் பாலதோ. 552

அறத்துறை திறம்பினர் அரக்கர் ஆற்றலர்
மறத்துறை நமக்கென வலிக்கும் வன்மையோர்
திறத்துறை நன்னெறி திறம்பல் உண்டெனில்
புறத்தினி யார்திறம் புகழும் வாகையும். 553

பைந்தொடிக்கு இடர்களை பருவம் பையவே
வந்தடுத் துளதுஇனி வருத்தம் நீங்குவாய்
அந்தணர்க் காகும்நாம் அரக்கர்க்கு ஆகுமோ
சுந்தரத் தனுவலாய் சொல்லு நீஎன்றான். 554

கார்காலம் முடிவடைதல்

உறுதிஅஃ தேஎன உணர்ந்த ஊழியான்
இறுதிஉண் டோகொல்இம் மாரிக்கு என்பதோர்
தெறுதுயர் உழந்தனன் தேயத் தேய்வுசென்று
அறுதியை அடைந்ததுஅப் பருவம் ஆண்டுபோய். 555

548-ம் பாட்டு: களவு செய்தவன் - இராவணன். 549–ம் பாட்டு: குரை - ஆபரணங்கள் ஒலிக்கும்.

மள்கல்இல் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருள்எலாம் உதவி அற்றபோது
எள்கல்இல் இரவலர்க்கு ஈவது இன்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே. 556

தீவினை நல்வினை என்னத் தேறிய
பேர்வினைப் பொருள்தனை அறிந்து பெற்றதோர்
ஆய்வினை மெய்உணர்வு அணுக ஆசுறும்
மாயையின் மாய்ந்தது மாரிப் பேரிருள். 557

மூள்அமர் முற்றுற முரசுஅ விந்தபோல்
கோள்அமை கணமுகில் குமுறல் ஓவின
நீள்அரு கணைஎனத் துணியும் நீங்கின
வாளுறை உற்றென மறைந்த மின்னெலாம். 558

தடுத்ததாள் நெடுந்தடக் கிரிகள் தாழ்வரை
அடுத்தநீர் ஒழிந்தன அருவி தூங்கின
எடுத்தநூல் உத்தரி யத்தொடு எய்திநின்று
உடுத்த வால்நிறத் துகில் ஒழிந்த போலுமே. 559

மேகமா மலைகளின் புறத்து வீதலால்
மாகயாறு யாவையும் வாரி அற்றன
ஆகையால் தகவிழந்து அளவில் நன்பொருள்
போகஆறு ஒழிந்தவன் செல்வம் போன்றவே. 560

கடம்திறந்து எழுகளிறு அனைய கார்முகில்
இடம்துறந்து ஏகலின் பொலிந்தது இந்துவும்
நடம்திறன் நவில்வுறு நங்கை மார்முகம்
படம்திறந்து உருவலில் பொலியும் பான்மைபோல். 561

பாசிழை மடந்தையர் பகட்டு வெம்முலை
பூசிய சந்தனம் புழுகு குங்குமம்
மூசின முயங்குசேறு உலர மொண்டுற
வீசின நறும்பொடி விண்டு வாடையே. 562

மன்னவன் தலைமகன் வருத்தம் மாற்றுவான்
அந்நெறிப் பருவம்வந்து அணுகிற் றுதலால்
பொன்னினை நாடிய போதும் என்பபோல்
அன்னமும் திசைதிசை அகன்ற விண்ணின்வாய். 563

வஞ்சனைத் தீவினை மறந்த மாதவர்
நெஞ்செனத் தெளிந்தநீர் நிறைந்து தோன்றுவ
பஞ்செனச் சிவக்கும்மென் பாதப் பேதையர்
அஞ்சனக் கண்ணெனப் பிறழ்ந்த ஆடல்மீன். 564

559-ம் பாட்டு: நூல் உத்தரியம்-மேலாடையின் ஸ்தானத்தை வகிக்கும் பூணூல். மேலாடை தரிக்காதபோது, அதன் ஸ்தானத்தை நிரப்புவதற்கென்று இரண்டோடு மேலும் ஒரு பூணூலைச்சேர்த்து மொத்தம் மூன்று பூணூல்களை அணிவது வழக்கம். 561-ம் பாட்டு ஆறு ஒழிந்தவன் - நல்வழியினின்று தவறியவன். 563-ம் பாட்டு:

ஊடிய மடந்தையர் வதனம் ஒத்தன
தாள்தொக மலர்ந்தன முதிர்ந்த தாமரை
கூடினர் துவர்இதழ்க் கோலம் கொண்டன
சேடுறு நறுமுகை விரிந்த செங்கிடை. 565

கல்வியில் திகழ்கணக் காயர் கம்பலைப்
பல்விதச் சிறார்எனப் பகரும் பல்அரி
செல்லிடத்து அல்லதுஒன் றுரைத்தல் செய்கலா
நல்லறி வாளரின் அவிந்த நாவெலாம். 566

தம்சிறை ஒடுக்கின தழுவும் இன்னலின்
நெஞ்சுறு மம்மரும் நினைப்பும் நீண்டன
மஞ்சுறு நெடுமழை பிரிந்த மாமயில்
அஞ்சின மிதிலைநாட்டு அன்னம் என்னவே. 567

செறிபுனல் பூந்துகில் திரைக்கை யால்திரைத்து
உறுதுணைக் கால்மடுத் தொத்த ஓதநீர்
எறும்வலிக் கணவனை எய்தி யாறெலாம்
முறுவலிக் கின்றன போன்ற முத்தெலாம். 568

சொல்நிறை கேள்வியின் தொடர்ந்த மாந்தரால்
இன்நிறம் பசலையுற்று இருந்த மாதரின்
தன்நிறம் பயப்பய நீங்கித் தள்ளரும்
பொன்நிறம் பொருந்தின பூகத் தாறெலாம். 569

பயின்றுஉடல் குளிர்ப்பவும் பழனம் நீத்துஅவண்
இயன்றன இளவெயில் எமுது மெய்யின
வயின்தொறும் வயின்தொறும் மடித்த வாயின
துயின்றன இடங்கர்மாத் தடங்கள் தோறுமே. 570

கொஞ்சுறும் கிளிநெடுங் குதலை கூடின
அஞ்சிறை அறுபதத்து அளக ஓதிய
எஞ்சல்இல் குழையன இடை நுடங்கிய
வஞ்சிகள் பொலிந்தன மகளிர் மானவே. 571

அளித்தன முத்தினம் தோற்ப மான்அனுர்
இளிக்குஎதிர் விழிக்கலம் என்று வெள்கியே
ஒளித்தன வாம்என ஒடுங்கு கண்ணன
குளித்தன மண்ணிடைக் கூனல் நந்தெலாம். 572

நாடியபோதும் - தேடுவதற்குப் போவோம். 566-ம் பாட்டு: கணக்காயர் - கணக்காயர் (வாத்தியார்) களிடம் படிக்கும். 568-ம் பாட்டு: (இதன் பொருள்) நதிகளாகிய மனைவியரின் நீராகிய ஆடையைக் கடல் கணவன் திரைத்துச் சுருட்டி, அந்த ''மனைவிய''ரைத் தன்னோடு இணைத்துக் கொண்டது போல இருந்தது. கணவனை அடைந்து மனைவியர் சிரித்ததுபோல அங்கே முத்துக்கள் விளங்கின. (நதிகளில் நீர் குறையும்போது, கடல் நீர் நதிகளில் புகுவது இயல்பு). 569-ம் பாட்டு: கேள்வியின் தொடர்ந்து-கல்வி கற்பதற்காகப் பிரிந்து சென்ற. 570-ம் பாட்டு: அவண்-தடங்கள்

மழைபடப் பொதுளிய மருதத் தாமரை
தழைபடப் பேரிலைப் புரையில் தங்குவ
இழைபடு பெடையொடும் எள்இல் நள்ளிகள்
புழைஇடத்து ஒதுங்கின வச்சை மாக்கள்போல். 573

10. கிஷ்கிந்தைப் படலம்

[கிஷ்கிந்தை நகரில் நிகழ்ந்தவற்றைக் கூறும் பகுதி]

அன்ன காலம்அ கலும்அ ளவினில்
முன்னை வீரன்இ ளவலை மொய்ம்பினேய்
சொன்ன எல்லையின் ஊங்கும்அத் தூங்கிய
மன்னன் வந்திலன் என்செய்த வாறரோ. 574

பெறல்அ ருந்திருப் பெற்றுஉத விப்பெருந்
திறம்நி னைந்திலன் சீர்மையின் தீர்ந்தனன்
அறம்ம றந்தனன் அன்புகி டக்கநம்
மறம்நி னைந்திலன் வாழ்வின் மயங்கினன். 575

நன்றி கொன்றரு நட்பினை நார்அறுத்து
ஒன்றும் மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளாற்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய். 576

வெம்பு கண்டகர் விண்புக வேர்அறுத்து
இம்பர் நல்லறம் செய்ய எடுத்தவில்
கொம்பும் உண்டுஅருங் கூற்றமும் உண்டுஎங்கள்
அம்பும் உண்டென்று சொல்லுநம் ஆணையே. 577

நஞ்சம் அன்னவ ரைநலிந் தால்அது
வஞ்சம் அன்று மனுவழக்கு ஆதலால்
அஞ்சி லம்பதில் ஒன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய். 578

ஊரும் ஆளும் அரசும்நும் சுற்றமும்
நீரும் ஆளுதி ரேஎனில்நேர்ந்த நாள்
வாரும் வாரலிரே எனில் வானரப்
பேரும் மாளும் எனும்பொருள் பேசுவாய். 579

இன்னம் நாடுதும் இங்கிவர்க் கும்வலி
துன்னி னுரை எனத்துணிந் தார்எனில்
உன்னை வெல்ல உலகொரு மூன்றினும்
நின்அ லால்பிறர் இன்மை நிகழ்த்துவாய். 580

(கரைகள்) தோறும். 574-ம் பாட்டு: அன்னகாலம் - சரத்காலம். எல்லை - தவணை. மன்னன் - சுக்கிரீவன். 578-ம் பாட்டு: அஞ்சிலம்பதில் - ஐந்து வயதிலும் ஐம்பது வயதிலும்: சிறு பிராயத்திலும், வளர்ந்த பிராயத்திலும். இதற்கு வேறு பல விதமாகப் பொருள் கூறிப் பிரமிக்கச் செய்வதும் உண்டு.

நீதி யாதி நிகழ்த்துதி நின்றுஅது
வேதி யாத பொழுது வெகுண்டிடல்
சாதி யாதுஅவர் சொல்தரத் தக்கனே
போதி யாதிஎன் முன்புகழ்ப் பூணினன். 581

கிஷ்கிந்தை நகரை நோக்கி இலக்குவன் செல்லுதல்

ஆணை சூடி அடிதொழுது ஆண்டுஇறை
பாணி யாது படர்வெரின் பாழ்படாத்
தூணி பூட்டித் தொடுசிலை தொட்டுஅருஞ்
சேணின் நீங்கினன் சிந்தையின் நீங்கலான். 582

மாறு சென்ற மரனும் மலைகளும்
நீறு சென்று நெடுநெறி நீங்கிட
வேறு சென்றனன் மெய்ம்மையின் ஓங்கிடும்
ஆறு சென்றவன் ஆணையின் ஏகுவான். 583

விண்ணு றத்தொடர் மேருவின் சீர்வரை
மண்ணு றப்புக்கு அழுந்தின மாதிரம்
கண்ணு றத்தெரி வுற்றது கட்செவி
ஒண்ணி றக்கழல் சேவடி ஊன்றலால். 584

வெம்பு கானிடைப் போகின்ற வேகத்தால்
உம்பர் தோயும் மராமரத்து ஊடுசெல்
அம்பு போன்றனன் அன்றுஅடல் வாலிதன்
தம்பி மேல்செலும் மானவன் தம்பியே. 585

மாடு வென்றிஓர் மாதிர யானையின்
சேடு சென்று கெடில்ஒரு திக்கின்மா
நாடு கின்றது நண்ணிய கால்பிடித்து
ஓடுகி ன்றதும் ஒத்துளன் ஆயினன். 586

உருக்கொள் ஒண்கிரி ஒன்றினின்று ஒன்றினைப்
பொருக்க எய்தினன் பொன்ஒளிர் மேனியான்
அருக்கன் மாஉத யத்தினின்று அத்தமாம்
பருப்ப தத்தினை எய்திய பண்புபோல். 587

தன்து ணைத்தமை யன்தனி வாளியின்
சென்று சேணுயர் கிட்கிந்தை சேர்ந்தவன்
குன்றி னின்றொரு குன்றினில் குப்புறும்
பொன்து ளங்குஉளைச் சியமும் போன்றனன். 588

583-ம் பாட்டு: மாறு சென்ற - (இலக்குவனின் நடைவேகத்தால்) எதிர்த்திசையில் ஓடின. வேறு சென்றனன் - பிரிந்து சென்றனன். 584-ம் பாட்டு: மேருவின் சீர்வரை-மேருமலையினது உயரத்தின் அளவுக்கு. கட்செவி - பூமியைத் தாங்கும் ஆதிசேஷன் என்ற பாம்பு. 586-ம் பாட்டு: கால்-அடிச்சுவடு. 587-ம் பாட்டு: கிரி ஒன்றினின்று ஒன்றினை - இருசியமூக மலையிலிருந்து, கிஷ்கிந்த மலையை. உதயத்தினின்று - உதயமலையிலிருந்து. அத்தமாம் பருப்பதத்தினை

கண்ட வானரம் காலனைக் கண்டபோல்
மண்டி ஓடின வாலி மகற்கு ஐயா
கொண்ட சீற்றத்து இளையோன் குறுகினன்
ச்ண்ட வேகத்தி னன்என்று சாற்றலும் 589

அன்ன தோன்றலும் ஆண்தொழி லான்வரவு
இன்ன தென்றறி வான்மருங்கு எய்தினன்
மன்னன் மைந்தன் மனக்கருத்து உட்கொளாப்
பொன்னின் வார்கழல் தாதைஇல் போயினன். 590

சுக்கிரீவன் இருந்த நிலை

நளன்இ யற்றிய நாயகக் கோயிலுள்
தளம லர்த்தகைப் பள்ளியில் தாழ்குழல்
இளமு லைச்சியர் ஏந்துஅடி தைவர
விளைது யிற்கு விழுந்து விரும்புவான். 591

தெள்ளி யோர்உத வப்பெருஞ் செல்வமாம்
கள்ளி னல்அதி கம்களித் தான்கதிர்ப்
புள்ளி மாநெடும் பொன்வரை புக்கதோர்
வெள்ளி மால்வரை என்ன விளங்குவான். 592

சிந்து வாரம் திருநறை தேக்குஅகில்
சந்தம் மாமயில் சாயலர் தாழ்குழல்
கந்த மாமலர்க் காடுகள் தாவிய
மந்த மாருதம் வந்துற வைகுவான். 593

தித்தி யாநின்ற செங்கிடை வாய்ச்சியர்
முத்த வாள்நகை முள்எயிறு ஊறுதேன்
பித்தும் மாலும் மதமும் பெருக்கலால்
மத்த வாரணம் என்ன மயங்கினன். 594

மகர குண்டல மேமுக மண்டலத்து
உகுநெ டுஞ்சுடர்க் கற்றை உலாவலால்
பகல வன்சுடர் பாய்பனி மால்வரை
தகம லர்ந்து பொலிந்து தயங்குவான். 595

கிடந்த னன்கிடந் தானைக் கிடைத்துஇரு
தடங்கை கூப்பினன் தாரைமுன் னள்தந்த
மடங்கல் வீரன்நன் மாற்றம் விளம்புவான்
தொடங்கி னன்அவ னைத்துயில் நீக்குவான். 596

அஸ்தமனகிரியை. 590-ம் பாட்டு: தோன்றலும் - அங்கதனும். ஆண் தொழிலான் - இலக்குவன். மன்னன் மைந்தன் - தசரத புத்திரனான இலக்குவன். தாதை - சிற்றப்பனாகிய சுக்கிரீவன். 591-ம் பாட்டு: நளன் - தெய்வத் தச்சனான விஸ்வகர்மாவின் புதல்வனான ஒரு வானரன்.

எந்தை கேள்அவ் இராமற்கு இளையவன்
சிந்தை யுள்நெடுஞ் சீற்றம் திருமுகம்
தந்த ளிப்பத் தடுப்பரும் வேகத்தன்
வந்த னன்உன் மனக்கருத்து யாதென்றான். 597

இனைய மாற்றம் இசைத்தனன் என்பதோர்
நினைவி லான்நெடுஞ் செல்வம் நெருக்கவும்
நனைந றுந்துளி நஞ்சு மயக்கவும்
தனைஉ ணர்ந்திலன் மெல்லணை தங்கினான். 598

ஆதலோடும் அரசிளங் கோளரி
யாதும் முன்நின்று இயற்றுவ தின்மையால்
கோதில் சிந்தை அனுமனைக் கூவுவான்
போதல் மேயினன் போதக மேஅனான். 599

மந்தி ரத்தனி மாருதி தன்னொடும்
வெந்தி றல்படை வீரர் விராய்வர
அந்த ரத்தின்வந்து அன்னைதன் கோயிலை
இந்தி ரற்கு மகன்மகன் எய்தினான். 600

எய்தி மேல்செயத் தக்கதுஎன் என்றலும்
செய்திர் செய்தற்கு அருநெடுந் தீயன
நொய்தில் அன்னவை நீக்கவும் நோக்குதிர்
உய்திர் போலும் உதவிகொன் றீர்என. 601

மீட்டும் ஒன்று விளம்புகின் றாள்படை
கூட்டும் என்றுமைக் கொற்றவன் கூறிய
நாள்தி றம்பின்உம் நாள்திறம் பும்எனக்
கேட்டி லிர்இனிக் காண்டிர் கிடைத்திரால். 602

வாலி ஆருயிர் காலனும் வாங்கவில்
கோலி வாலிய செல்வம் கொடுத்தவர்
போலு மால்உம் புறத்திருப் பார்இது
சாலு மால்உம் தகைமைபி னோர்க்கெலாம். 603

தேவி நீங்கஅத் தேவரின் சீரியன்
ஆவி நீங்கினன் போல்அயர் வான்அது
பாவி யாது பருகுதிர் போலும்நும்
காவி நாள்மலர்க் கண்ணியர் காதல்நீர். 604

திறம்பி நீதி சிதைத்திர் உதவியை
நிறம்பொ லீர்உங்கள் தீவினை நேர்ந்ததால்
மறம்செய் வான்உறின் மாளுதிர் மற்றினிப்
புறம்செய்து ஆவதுஎன் என்கின்ற போதின்வாய். 605

கோள்உ றுத்தற்கு அரிய குரக்கினம்
நீள்எ ழுத்தொட ரும்நெடு வாயிலைத்
தாள்உ றுத்தித் தடவரை தந்தன
மூள்உ றுத்தி அடுக்கின மொய்ம்பினால். 606

600-ம் பாட்டு: அன்னை - வாலியின் மனைவியும், அங்கதனின் தாயுமாகிய தாரை.

சிக்கு றக்கடை சேமித்த செய்கைய
தொக்கு றுத்த மரத்த துவன்றின
புக்கு றுத்துப் புடைத்தும் எனப்புறம்
மிக்கி றுத்தன வெற்பும் இறுத்தன. 607

இலக்குவன் சீற்றம்

காக்க வோகருத் தென்று கதத்தினுல்
பூக்கும் மூரல் புரவலர் புங்கவன்
தாக்க ணங்குறை தாமரைத் தாளினுல்
நூக்கி ஞன்அக் கதவினே நொய்தினில். 608

காவல் மாமதி லும்கத வும்கடி
மேவும் வாயில் அடுக்கிய வெற்பொடும்
தேவு சேவடி தீண்டலும் தீண்டரும்
பாவ மாம்எனப் பற்றழிந்து இற்றவால். 609

நொய்தின் நோன்கத வும்நொடி வாயிலும்
செய்த கல்மதி லும்திசை யோசனே
ஐயி ரண்டின் அளவுஅடி அற்றுஉக
வெய்தின் நின்ற குரக்கும் வெருக்கொளா. 610

பரிய மாமதி லும்படர் வாயிலும்
சரிய வீழ்ந்த தடித்தின் முடித்தலே
நெரிய நெஞ்சு பிளப்ப நெடுந்திசை
இரியல் உற்றன இற்றில இன்னுயிர். 611

பகர வேயும் அரிது பரித்தெழு
புகர்இல் வானரம் அஞ்சிய பூசலால்
சிகர மால்வரை சென்று திரிந்துழி
மகர வேலேயை ஒத்தது மாநகர். 612

வான ரங்கள் வெருவி மலேஒரீஇக்
கான்ஒ ருங்கு படரஅக் கார்வரை
மீன்நெ ருங்கிய வானகம் மீன்எலாம்
போன பின்பொலி வற்றது போன்றதே. 613

அன்ன காலேயின் ஆண்தகை யாளியும்
பொன்னின் நன்னகர் வீதியில் புக்கனன்
சொன்ன தாரையைச் சுற்றினர் நின்றவர்
என்ன செய்குவது எய்தினன் என்றனர். 614

அனேயன் உள்ளமும் ஆய்வளே யாய்அலர்
மனேயின் வாயில் வழியினே மாற்றினுல்
நினேயும் வீரன்அந் நீள்நெறி நோக்கலன்
வினேயம் ஈதென்று அனுமன் விளம்பினுன். 615

612-ம் பாட்டு: சிகரமால்வரை - மந்தரமலே. மகரவேலே - பாற் கடல். 615-ம் பாட்டு: அனேயன் -இலக்குவன். ஆய்வளேயாய் - தாரையே! அலர் - மலர்போன்றது. மனேயின் - சுக்கிரீவனுடைய

நீர்ஏ லாம்அயல் நீங்குமின் நேர்ந்துயான்
வீரன் உள்ளம் வினவுவன் என்றலும்
பேர நின்றனர் யாவரும் பேர்கிலாத்
தாரை சென்றனள் தார்குழ லாரொடும். 616

உரைசெய் வானர வீரர் உவந்துறை
அரச வீதி கடந்தகன் கோயிலைப்
புரைசை யானைஅ ணுன்புக லோடும்அவ்
விரைசெய் வார்குழல் தாரை விலக்கினுள். 617

விலங்கு மெல்லியல் வெண்ணகை வெள்வளை
இலங்கு நுண்ணிடை ஏந்திள மென்முலை
குலம்கொள் தோகை மகளிர் குழாத்திஞல்
வலம்கொள் வீதி நெடுவழி மாற்றினுள். 618

வில்லும் வாளும் மணிதொறும் மின்னிட
மெல்அ ரிக்குரல் மேகலை ஆர்த்தெழப்
பல்வ கைப்புரு வக்கொடி பம்பிட
வல்லி ஆயம் வலத்தினில் வந்ததே. 619

வேறு

தாரையைக் கண்ட இலக்குவன் நிலை

ஆர்க்கும்நூ புரங்கள் பேரி அல்குலாம் தடந்தேர் ஒத்த
வேற்கண்வெம் புருவம் போர்வில் மெல்லியர் வளைந்த போது
பேர்க்கரும் சீற்றம் பேர முகம்பெயர்ந்து ஒதுங்கிற் றல்லால்
பார்க்கவும் அஞ்சி ஞன்அப் பணியினும் பெரிய தோளான். 620

தாமரை வதனம் சாய்த்துத் தனுநெடுந் தரையில் ஊன்றி
மாமியர் குழுவின் வந்தா ளும்என மைந்தன் நிற்பப்
பூமியில் அணங்க ஞர்தம் பொலிவிடைப் புகுந்து பொற்ருேள்
தூமன நெடுங்கண் தாரை நடுங்குவாள் இனைய சொன்ஞள். 621

அந்தம்இல் காலம் நோற்ற ஆற்றல்உண் டாயின் அன்றி
இந்திரன் முதலி ஞேர்க்கும் எய்தலாம் இயல்பிற் றன்றே
மைந்தநின் பாதம் கொண்டெம் மனைவரப் பெற்று வாழ்ந்தேம்
உய்ந்தனம் வினையும் தீர்ந்தேம் உறுதிவே றிதனின் உண்டோ. 622

வெய்தின்நீ வருதல் நோக்கி வெருவுறும் சேனை வீர
செய்திதான் உணர்கி லாது திருவுளம் தெரித்தி என்ருள்
ஐயநீ ஆழி வேந்தன் அடியிணை பிரிகி லாதாய்
எய்தியது என்னை என்ருள் இசையினும் இனிய சொல்லாள். 623

அரண்மனையின். மாற்றினுல் - நீ தடுத்து நின்ருல். அந்நிள் நெறி-சுக்கிரீவனது அரண்மனை வாசலை. 618-ம் பாட்டு: குலம்கொள் - விலங்கு மெல்லியல், வெண்ணகை, வெள்வளை, இலங்கு நுண் ணிடை, ஏந்திள மென்முலை, குலம் ஆகியவற்றைக் கொண்ட.

ஆர்கொலோ உரைசெய் தார்என்று அருள்வரச் சீற்றம் அஃகாப்
பார்குலாம் முழுவெண் திங்கள் பகல்வந்த படிவம் போலும்
ஏர்குலாம் முகத்தி னுளை இறைமுகம் எடுத்து நோக்கித்
தார்குலாம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான். 624

மங்கல அணியை நீக்கி மணியணி துறந்து வாசக்
கொங்கலர் கோதை மாற்றிக் குங்குமம் சாந்தம் கொட்டாப்
பொங்குவெம் முலைகள் பூகக் கழுத்தொடு மறையப் போர்த்த
நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பனிப்ப நின்றான். 625

இனையராம் என்னை ஈன்ற இருவரும் என்ன வந்த
நினைவினன் அயர்வு சென்ற நெஞ்சினன் நெடிது நின்றான்
வினவினுட்கு எதிர்ஓர் மாற்றம் விளம்பவும் வேண்டும் என்றுஅப்
புனைகுழ லாட்கு வந்த காரியம் புகல்வ தானான். 626

சேனையும் யானும் தேடித் தேவியைத் தருவேன் என்று
மானவற்கு உரைத்த மாற்றம் மறந்தனன் அருக்கன் மைந்தன்
ஆனவன் அமைதி வல்லை அறிஎன அருளின் வந்தேன்
மேல்நிலை அனையான் செய்கை விளைந்தவா விளம்பு கென்றான். 627

சீறுவாய் அல்லை ஐய சிறியவர் தீமை செய்தால்
ஆறுவாய் நீஅ லால்மற்று ஆருளர் அயர்த்தான் அல்லன்
வேறுவே றுலகம் எங்கும் தூதரை விடுத்துஅவ் எல்லை
ஊறுமா நோக்கித் தாழ்ந்தான் உதவிமாறு உதவி உண்டோ. 628

ஆயிர கோடி தூதர் அரிக்கணம் அழைப்ப ஆணை
போயினர் புகுது நாளும் புகுந்தது புகல்புக் கோர்க்குத்
தாயினும் இனிய நீரே தணிதிரால் தருமம் அஃதால்
தீயன செய்யா ராயின் யாவரோ சிறியர் ஆவார். 629

அடைந்தவர்க்கு அபயம் நீவிர் அருளிய அளவில் செல்வம்
தொடர்ந்துநும் பணியின் தீர்ந்தால் அதுவும்நும் தொழிலே யன்றோ
மடந்தைதன் பொருட்டால் வந்த வாள்அமர்க் களத்து மாண்டு
கிடந்திலர் என்னில் பின்னும் நிற்குமோ கேண்மை அம்மா. 630

செம்மைசேர் உள்ளத் தீர்கள் செய்தபே ருதவி தீரா
வெம்மைசேர் பகையும் மாற்றி அரசுவீற் றிருக்க விட்டீர்
உம்மையே இகழ்வர் என்னின் எளிமையாய் ஒழிவ தொன்றோ
இம்மையே வறுமை எய்தி இருமையும் இழப்பர் அன்றே. 631

624-ம் பாட்டு: தாயரை - கோசலை, சுமித்திரை ஆகியோரை. 628-ம் பாட்டு: தூதரை விடுத்து - படை திரட்டுவதற்குத் தூதரை விடுத்து. எல்லை ஊறுமா - (படைகள் வந்து சேரும்) காலம் வருவதை. உதவிமாறு உதவி - நீங்கள் செய்த உதவிக்கு மாறு உதவி. 629-ம் பாட்டு: அரிக்கணம் - வானரக் கூட்டத்தை. ஆணை போயினர் - சுக்கிரீவனின் கட்டளைப்படி போயினர். புகுது நாளும்-வந்துசேரும் நாளும். 630-ம் பாட்டு: அடைந்தவர்க்கு...... தொழிலே யன்றோ - (இராம இலக்குவர்களாகிய) நீங்கள் கொடுத்த

ஆண்டுபோர் வாலி ஆற்றல் மாற்றியது அம்பொன் ருயின்
வேண்டுமோ துணையும் நும்பால் வில்லினும் மிக்க துண்டோ
தேண்டுவார்த் தேடு கின்றீர் தேவியை அதனைச் செவ்வே
பூண்டுநின்று உய்தற் பாலார் நும்கழல் புகுந்து ளோரும். 632

இலக்குவனிடம் அனுமான் வருதல்

என்றவள் உரைத்த மாற்றம் யாவையும் இனிது கேட்டு
நன்றுணர் கேள்வி யாளன் அருள்வர நாண்உட் கொண்டான்
நின்றனன் நிற்ற லோடும் நீத்தனன் முனிவுஎன்று உன்னு
வன்துணை வயிரத் திண்தோள் மாருதி மருங்கில் வந்தான். 633

வந்தடி வணங்கி நின்ற மாருதி வதனம் நோக்கி
அந்தம்இல் கேள்வி நீயும் அயர்த்தனை யாகும் அன்றே
முந்திய செய்கை என்ருன் முனிவினும் முளைக்கும் அன்பால்
எந்தைகேட்டு அருளு கென்னு இயம்பினன் இயம்ப வல்லான். 634

சிதைவிலாக் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவிஅந் தணரை ஆவைப் பாலரைப் பாவை மாரை
வதைபுரி குநர்க்கும் உண்டாம் மாற்றல்ஆம் ஆற்றல் மாயா
உதவிகொன் ருர்க்கொன் றேனும் ஒழிக்கலாம் உபாயம் உண்டோ.

ஐயனும் மோடும் எங்கள் அரிக்குலத்து அரச னேடும்
மெய்யுறு கேண்மை யாக மேலைநாள் விளைவ தாய
செய்கைஎன் செய்கை அன்ருே அன்னது சிதையு மாயின்
உய்வகை எனக்கும் உண்டோ உணர்வுமா சுண்டது அன்ருே. 636

தேவரும் தவமும் செய்யும் நல்லறத் திறமும் மற்றும்
யாவரும் நீரே என்பது என்வயின் கிடந்தது எந்தாய்
ஆவது நிற்க சேரும் அரண்உண்டோ அருளுண் டன்றே
மூவகை உலகும் காக்கும் மொய்ம்பினீர் முனிவுண் டானல். 637

மறந்திலன் கவியின் வேந்தன் வயப்படை வருவிப் பாரைத்
திறம்திறம் மேவி அன்னர் சேர்வது பார்த்துத் தாழ்ந்தான்
அறம்துணை நுமக்குற்று ஆன்ற வாய்மையை அழிக்கு மாயின்
பிறந்திலன் அன்றே நன்ருே நரகமும் பிழைப்ப தன்ருல். 638

உதவாமல் ஒருவன் செய்த உதவிக்குக் கைம்மா ருக
மதயானை அனைய மைந்த மற்றும்உண் டாக வற்ருே
சிதையாத செருவில் அன்னுன் முன்சென்று செருநர் மார்பில்
உதையானேல் உதையுண்டு ஆவி உலையானேல் உலகில் மன்னே. 639

ஈண்டுநீ நிற்றல் என்பது இனியதோர் இயல்பிற் றன்ருல்
வேண்டலர் அறிவ ரேனும் கேண்மைதீர் வினையிற் ருமால்
ஆண்தகை யாளி மொய்ம்பின் ஐயநீர் அளித்த செல்வம்
காண்டியால் உன்முன் வந்த கவிக்குலக் கோனெடு என்ருன். 640

செல்வத்தினுல் செருக்குற்று, உங்களுக்குச் செய்யவேண்டிய பணியைச் செய்யத் தவறினுல், அதற்கும் நீங்கள்தானே காரணம்? 635-ம் பாட்டு : மாற்றல் ஆம் ஆற்றல் - பாவத்துக்குப் பரிகாரம் தேடக்கூடிய வழிவகை அல்லது உபாயம்.

மாருதி மாற்றம் கேட்ட மலையுரை வயிரத் தோளான்
தீர்வினை சென்று நின்ற சீற்றத்தான் சிந்தை செய்தான்
ஆரியன் அருளின் தீர்ந்தா னல்லன்வந்து அடுத்த செல்வம்
பேர்வகை யாகச் செய்த சிறுமையான் என்னும் பெற்றி. 641

அனையது கருதிப் பின்னர் அரிக்குலத் தவனை நோக்கி
நினைஒரு மாற்றம் இன்னே நிகழ்த்துவ துளது நின்பால்
இனையன உரைத்தற்கு ஏற்ற எண்ணுதி இவைநீ என்ன
வனைகழல் வயிரத் திண்தோள் மன்இளங் குமரன் சொல்வான். 642

தேவியைக் குறித்துச் சென்ற சீற்றமும் மானத் தீயும்
ஆவியைக் குறித்து நின்ற ஐயனை அதனைக் கண்டேன்
கோவியல் தருமம் நீங்கக் கொடுமையோடு உறவு கூடிப்
பாவியர்க்கு ஏற்ற செய்கை கருதுவன் பழியும் பாரேன். 643

ஆயினும் என்னை யானே ஆற்றிநின்று ஆவி உற்று
நாயகன் தனையும் தேற்ற நாள்பல கழிந்த அன்றேல்
தீயும்இவ் உலகம் மூன்றும் தேவரும் வீவர் ஒன்றோ
வீயும்நல் அறமும் போகா விதியையார் விலக்கற் பாலார். 644

உன்னைக்கண்டு உம்கோன் தன்னை உற்றிடத்து உதவும் பெற்றி
என்னைக்கண் டனன்போல் கண்டிந் நாளிடை நெடிது வைகித்
தன்னைக்கொண் டிருந்தே தாழ்த்தான் அன்றெனில் தனுவொன் றாலே
மின்னைக்கண் டனையாள் தன்னை நாடுதல் விலக்கற் பாற்றோ. 645

ஒன்றுமோ வானம் அன்றி உலகமும் பதினா லுள்ள
வென்றிமாக் கடலும் ஏழேழ் மலையுள்ள என்ன வேயாய்
நின்றதோர் அண்டத் துள்ளே எனின்அது நெடிய தொன்றோ
அன்றுநீர் சொன்ன மாற்றம் தாழ்வித்தல் தருமம் அன்றால். 646

தாழ்வித்தீர் அல்லீர் பன்னாள் தருக்கிய அரக்கர் தம்மை
வாழ்வித்தீர் இமையோர்க்கு இன்னல் வருவித்தீர் மரபின்தீராக்
கேள்வித்தீ யாளர் துன்பம் கிளர்வித்தீர் பாவம் தன்னை
மூள்வித்தீர் முனியா தானை முனிவித்தீர் முடிவின் என்றான். 647

தோன்றல்அஃது உரைத்த லோடும் மாருதி தொழுது தொல்லை
ஆன்றநூல் அறிஞ போய பொருள்மனத்து அடைப்பாய் அல்லை
ஏன்றது முடியேம் என்னின் இறத்தும்இத் திறத்துக் கெல்லாம்
சான்றினி அறனே போந்துஉன் தம்முனைச் சார்தி என்றான். 648

சுக்கிரீவனிடம் அனுமான் செல்லுதல்

முன்னும்நீ சொல்லிற் றன்றோ முயன்றது முற்றும் காலை
இன்னும்நீ இசைத்த செய்வான் இயைந்தனம் என்று கூறி
அன்னதோர் அமைதி யான்தன் அருள்சிறிது அறிய நோக்கி
பொன்னின்வார் சிலையி னானும் மாருதி யோடும் போனான். 649

641-ம் பாட்டு: ஆரியன் - இராமன். 647-ம் பாட்டு: முனியா தானை - இராமனை.

அயில்விழிக் குமுதச் செவ்வாய்ச் சிலைநுதல் அன்னப் போக்கின்
மயிலியல் கொடித்தேர் அல்குல் மணிநகைத் திணிவேய் மென்தோள்
குயில்மொழிக் கலசக் கொங்கை மின்னிடைக் குமிழ்ஏர் மூக்கின்
புயலியல் கூந்தல் மாதர் குழாத்தொடும் தாரை போனாள். 650

வல்லமந் திரிய ரோடு வாலிகா தலனும் மைந்தன்
அல்லிஅம் கமலம் அன்ன அடிபணிந்து அச்சம் தீர்ந்தான்
வில்லியும் அவனை நோக்கி விரைவின்என் வரவு வீர
சொல்லுதி நுந்தைக்கு என்றான் நன்றெனத் தொழுது போனான்.

போனபின் தாதை கோயில் புக்குஅவன் பொலங்கொள் பாதம்
தான்உறப் பற்றி முற்றும் தைவந்து தடக்கை வீரன்
மானவற்கு இளையோன் வந்துன் வாயிலின் புறத்தான் சீற்றம்
மீனுயர் வேலை மேலும் பெரிதிது விளைந்த தென்றான். 652

அறிவுற்று மகளிர் வெள்ளம் அலமரும் அமலை நோக்கிப்
பிரிவுற்ற மயக்கத் தான்முற்றி உற்றதோர் பெற்றி ஓரான்
செறிபொற்றார் அலங்கல் வீர செய்திலம் குற்றம் நம்மைக்
கறுவுற்ற பொருளுக்கு என்னோ காரணம் கண்ட தென்றான். 653

இயைந்தநாள் எந்தை நீசென்று எய்தலை செல்வம் எய்தி
வியந்தனை உதவி கொன்றாய் மெய்இலை என்ன வீங்கி
உயர்ந்தது சீற்றம் மற்றது உற்றது செய்ய முற்றும்
நயம்தெரி அனுமன் வேண்ட நல்கினன் நம்மை இன்னும். 654

வருகின்ற வேகம் நோக்கி வானர வீரர் வானைப்
பொருகின்ற நகர வாயில் பொற்கத வடைத்துக் கற்குன்று
அருகொன்றும் இல்லா வண்ணம் வாங்கினர் அடுக்கி மற்றும்
தெரிகின்ற சினத்தீப் பொங்கச் செருச்செய்வான் அமைந்து நின்றார்.

ஆண்தகை அதனை நோக்கி அம்மலர்க் கமலத் தாளால்
தீண்டினன் தீண்டா முன்னம் தெற்கொடு வடக்குச் செல்ல
நீண்டகல் மதிலும் கொற்ற வாயிலும் நிரைத்த குன்றும்
கீண்டன தகர்ந்து பின்னைப் பொடியொடும் கெழீஇய அன்றே. 656

அந்நிலை கண்ட திண்தோள் அரிக்குலத்து அனிகம் அம்மா
எந்நிலை உற்றது என்கேன் யாண்டுபுக்கு ஒளித்த தென்கேன்
இந்நிலை கண்ட அன்னை ஏந்திழை ஆயத் தோடும்
மின்னிலை வேலி னானை வழிஎதிர் விலக்கி நின்றாள். 657

மங்கையர் மேனி நோக்கான் மைந்தனும் மனத்து வந்து
பொங்கிய சீற்றம் பற்றிப் புகல்கிலன் பொருமி நின்றான்
நங்கையும் இனிது கூறி நாயக நடந்த தென்னோ
எங்கள்பால் என்னச் சொன்னாள் அண்ணலும் இனைய சொன்னான்.

அதுபெரி தறிந்த அன்னை அன்னவன் சீற்றம் ஆற்றி
விதிமுறை மறந்தான் அல்லன் வெஞ்சினச் சேனை வெள்ளம்
கதும்எனக் கொணரும் தூது கல்லதர் செல்ல ஏவி
எதிர்முறை இருந்தான் என்றாள் இதுஇங்குப் புகுந்த தென்றான். 659

651-ம் பாட்டு: மைந்தன் - இலக்குவன்.

சொற்றலும் அருக்கன் தோன்றல் சொல்லுவான் மண்ணில் விண்ணில்
நிற்குரி யார்கள் யாவர் அனையவர் சினத்தின் நேர்ந்தால்
விற்குரி யார்இத் தன்மை வெகுளியின் விரைவின் எய்த
எற்குரை யாது நீர்ஈது இயற்றியது என்கொல் என்ருன். 660

உணர்த்தினேன் முன்னர் நீஅஃது உணர்ந்திலை உணர்வின் தீர்ந்தாய்
புணர்ப்பதொன் றின்மை நோக்கி மாருதிக்கு உரைப்பான் போனேன்
இணர்த்தொகை ஈன்ற பொற்ருர் எறுழ்வலித் தடந்தோள் எந்தாய்
கணத்திடை அவனை நீயும் காணுதல் கருமம் என்ருன். 661

சுக்கிரீவன் தான் மது மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்ததைக் கூறுதல்

உறவுண்ட சிந்தை யானும் உரைசெய்வான் ஒருவர்க்கு இன்னம்
பெறலுண்டோ அவரால் ஈண்டு பெற்றபே ருதவி உற்றது
இறல்உண்டோ என்னின் தீர்வான் இருந்தபே ரிடரை யெல்லாம்
நறவுண்டு மறந்தேன் காண நாணுவன் மைந்த என்ருன். 662

ஏயின நறவ லால்மற்று ஏழைமைப் பாலது என்னே
தாய்இவள் மனைவி என்னும் தெளிவின்றேல் தருமம் என்னும்
தீவினை ஐந்தின் ஒன்ரும் அன்றியும் திருக்கு நீங்கா
மாயையில் மயங்கு கின்ரும் மயக்கின்மேல் மயக்கும் வைத்தாம். 663

தெளிந்துதீ வினையைத் தீர்ந்தோர் பிறவியின் தீர்வர் என்ன
விளிந்திலா உணர்வி னேரும் வேதமும் விளம்ப வேயும்
நெளிந்துறை புழுவை நீக்கி நறவுண்டு நிறைகின் றேனல்
அளிந்துஅகத் தெரியும் தீயை நெய்யினல் அவிக்கின் ருமால். 664

தன்னைத்தான் உணரத் தீரும் தகையறு பிறவி என்பது
என்னத்தான் மறையும் மற்றைத் துறைகளும் இசைத்த எல்லாம்
முன்னைத்தான் தன்னை ஓரா முழுப்பிணி அழுக்கின் மேலே
பின்னைத்தான் பெறுவ தம்மா நறவுண்டு திகைக்கும் பித்தோ. 665

அளித்தவர் அஞ்சும் நெஞ்சின் அடைத்தவர் அறிவு மூழ்கிக்
குளித்தவர் இன்ப துன்பம்குறைத்தவர் அன்றி வேரி
ஒளித்தவர் உண்டு மீண்டுஇவ் உலகெலாம் உணர ஓடிக்
களித்தவர் எய்தி நின்ற கதிஒன்று கண்ட துண்டோ. 666

செற்றதும் பகைஞர் நட்டார் செய்தபே ருதவி தானும்
கற்றதும் கண்கூ டாகக் கண்டதும் கலைவ லாளர்
சொற்றதும் மானம் வந்து தொடர்ந்ததும் படர்ந்த துன்பம்
உற்றதும் உணர்வா ராயின் உறுதிவேறு இதனின் உண்டோ. 667

660-ம் பாட்டு: நிற்குரியார் - நிற்கத்தக்கவர்கள். விற்குரியார் - வில்லுக்கு உரிய இலக்குவன். எற்குரையாது - எனக்கு உரையாமல். 662-ம் பாட்டு: என்னின் தீர்வான் இருந்த பேரிடரை - என்னைக் கொண்டு ஒழித்துவிடலாம் என்று நினைத்த துன்பத்தை. 665-ம் பாட்டு: அழுக்கு - அழுக்கு உடம்பு. 666-ம் பாட்டு: அஞ்சும் நெஞ்சின் அடைத்தவர் - ஐம்புலன் உணர்ச்சிகளை மனத்தில் அடக்கியவர்கள். கதி - நல்ல கதி.

வஞ்சமும் களவும் பொய்யும் மயக்கமும் மரபில் கொட்பும்
தஞ்சம்என் றுரை நீக்கும் தன்மையும் களிப்பும் தாக்கும்
கஞ்சமெல் அணங்கும் தீரும் கள்ளினுல் அருந்தி ஞுரை
நஞ்சமும் கொல்வ தல்லால் நரகினை நல்கா தன்றே. 668

கேட்டனன் நறவால் கேடு வரும்எனக் கிடைத்த அச்சொல்
காட்டியது அனுமன் நீதிக் கல்வியால் கடந்த தல்லால்
மீட்டினி உரைப்ப தென்னே விரைவின்வந்து அடைந்த வீரன்
மூட்டிய வெகுளி யால்நான் முடிவதற்கு ஐயம் உண்டோ. 669

ஐயநான் அஞ்சி னேன்இந் நறவினின் அரிய கேடு
கையினுல் அன்றியேயும் கருதுதல் கருமம் அன்றுல்
வெய்யதாம் மதுவை இன்னும் விரும்பினேன் என்னில் வீரன்
செய்யதா மரைகள் அன்ன சேவடி சிதைக்க என்ருன். 670

என்றுகொண்டு இயம்பி அண்ணற்கு எதிர்கொளற்கு இயைந்த எல்லாம்
நன்றுகொண்டு இன்னும் நீயே நணுகென அவனை ஏவித்
தன்துணைத் தேவி மாரும் தமரொடும் தழுவத் தானும்
நின்றனன் நெடிய கோயில் கடைத்தலை நிறைந்த சீரான். 671

உரைத்தசெஞ் சாந்தும் பூவும் சுண்ணமும் புகையும் ஊழின்
நிரைத்தபொற் குடமும் தீப மாலையும் நிகரில் முத்தும்
குரைத்தெழு விதானத் தோடு தொங்கலும் கொடியும் சங்கும்
இரைத்துமிழ் முரசும் முற்றும் இயங்கின வீதி யெல்லாம். 672

தூயதிண் பளிங்கின் செய்த சுவர்களின் தலத்தில் சுற்றில்
நாயக மணியின் செய்த நனிநெடுந் தூணின் நாப்பண்
சாயைபுக்கு உறலால் கண்டோர் அயர்வுறக் கைவி லோடும்
ஆயிர மைந்தர் வந்தார் உளர்எனப் பொலிந்த தவ்வூர். 673

அங்கதன் பெயர்த்தும் வந்துஆண்டு அடிஇணை தொழுதான் ஐய
எங்கிருந் தான்உம் கோமான் என்றலும் எதிர்கோள் எண்ணி
மங்குல்தோய் கோயில் கொற்றக் கடைத்தலை மருங்கு நின்ருன்
சிங்கஏறு அனைய வீர செய்தவச் செல்வன் என்ருன். 674

சுண்ணமும் தூசும் வீசிச் சூடகத் தொடிக்கை மாதர்
கண்ணகன் கவரிக் கற்றைக் கால்உறக் கலைவெண் திங்கள்
விண்ணுற வளர்ந்த தென்ன வெண்குடை விளங்க வீர
வண்ணவில் கரத்தான் முன்னர்க் கவிக்குலத் தரசன் வந்தான். 675

அருக்கியம் முதல ஆய அருச்சனைக்கு அமைந்த யாவும்
முருக்கிதழ் மகளிர் ஏந்த முரசினம் முகிலின் ஆர்ப்ப
இருக்கினம் முனிவர் ஓத இசைதிசை அளப்ப யாணர்த்
திருக்கிளர் செல்வம் நோக்கித் தேவரும் மருளச் சென்ருன். 676

668-ம் பாட்டு: கள்ளினுல் - கள்ளை: (வேற்றுமை மயக்கம்). 673-ம் பாட்டு: சாயை - இலக்குவனுடைய பிரதிபிம்பம். ஆயிர மைந்தர் - ஆயிரம் இலக்குவர்கள்.

வெம்முலை மகளிர் வெள்ளம் மின்என விளங்க விண்ணில்
சும்மைவால் மதியம் குன்றில் தோன்றிய தெனவும் தோன்றிச்
செம்மலை எதிர்கோள் எண்ணித் திருவொடு மலர்ந்த செல்வன்
அம்மலை உதயம் செய்த தாதையும் அனையன் ஆனான். 677

வேறு

சுக்கிரீவனை இலக்குவன் காணுதல்

தோற்றிய அரிக்குலத் தரசைத் தோன்றலும்
ஏற்றெதிர் நோக்கினன் எழுந்தது அவ்வழி
சீற்றம்அங்கு அதுதனைத் தெளிந்த சிந்தையால்
ஆற்றினன் தருமத்தின் அமைதி உன்னுவான். 678

எழுவினும் மலையினும் எழுந்த தோள்களால்
தழுவினர் இருவரும் தழுவித் தையலார்
குழுவொடும் வீரர்தம் குழாத்தி னோடும்புக்கு
ஒழிலாப் பொற்குழாத்து உறையுள் எய்தினர். 679

அரியணை அமைந்தது காட்டி ஐயஈண்டு
இருஎனக் கவிக்குலத் தரசன் ஏவலும்
திருமகள் தலைமகன் புல்லில் சேரஎற்கு
உரியதோ ஈதென மனத்தின் உன்னுவான். 680

கல்அணை மனத்தினை உடைக்கை கேசியால்
எல்அணை மணிமுடி துறந்த எம்பிரான்
புல்அணை வைகயான் பொன்செய் பூத்தொடர்
மெல்அணை வைகலும் வேண்டுமோஎன்றான். 681

என்றவன் உரைத்தலும் இரவி காதலன்
நின்றனன் விம்மினன் மலர்க்கண் நீர்உகக்
குன்றென உயர்ந்தஅக் கோயில் குட்டிம
வன்தலத் திருந்தனன் மனுவின் கோமகன். 682

மைந்தரும் முதியரும் மகளிர் வெள்ளமும்
அந்தம்இல் நோக்கினர் அழுத கண்ணினர்
இந்தியம் அவித்தவர் எனஇ ருந்தனர்
நொந்தனர் தளர்ந்தனர் நுவல்வது ஓர்கிலர். 683

மஞ்சன விதிமுறை மரபின் ஆடியே
எஞ்சல்இல் இன்அமுது அருந்தின் யாமெலாம்
உய்ஞ்சனம் இனிஎன அரசு ரைத்தலும்
அஞ்சன வண்ணனுக்கு அனுசன் கூறுமால். 684

677-ம் பாட்டு: சும்மைவால் மதியம் - நிறைந்த வெண்ணிலா; பூரண சந்திரன். அம்மலை - உதயகிரி. தாதை - சுக்கிரீவனின் தந்தையான சூரியன். 680-ம் பாட்டு: திருமகள் தலைமகன் - இராமன்.

வருத்தமும் பழியுமே வயிறு மீக்கொள
இருத்தும்என் றுல்எமக்கு இனியது யாவதோ
அருத்திஉண் டாயினும் அவலம் தான்தழீஇக்
கருத்துவே றுற்றபின் அமிழ்தும் கைக்குமால். 685

மூட்டிய பழிஎனும் முருங்கு தீஅவித்து
ஆட்டினை கங்கைநீர் அரசன் தேவியைக்
காட்டினை எனின்எமைக் கடலின் ஆரமிழ்து
ஊட்டினை யால்பிறிது உயவும் இல்லையால். 686

பச்சிலை கிழங்குகாய் பரமன் நுங்கிய
மிச்சிலே நுகர்வது அன்றி வேறென்று
நச்சிலேன் நச்சினேன் ஆயின் நாய்உண்ட
எச்சிலே அதுஇதற்கு ஐயம் இல்லையால். 687

அன்றியும் ஒன்றுளது ஐய யான்இனிச்
சென்றனன் கொணர்ந்துஅடை திருத்தி னல்அது
நுன்துணைக் கோமகன் நுகர்வ தாதலால்
இன்றுஇறை தாழ்த்தலும் இனிதன் றும்என்றான். 688

வானர வேந்தனும் இனிதின் வைகுதல்
மானவர் தலைமகன் இடரின் வைகவே
ஆனது குரக்கினத்து எமர்கட்கு ஆம்என
மேல்நிலை அழிந்துயிர் விம்மி னன்அரோ. 689

எழுந்தனன் பொருக்என இரவி கால்முளை
விழுந்தகண் ணீரினன் வெறுத்த வாழ்வினன்
அழிந்தயர் சிந்தையன் அனுமற்கு ஆண்டொன்று
மொழிந்தனன் வரன்உழைப் போதல் முன்னுவான். 690

போயின தூதரின் புகுதும் சேனையை
நீஉடன் கொணருதி நெறிவ லோய்என
ஏயினன் அனுமனை இருத்தி ஈண்டென
நாயகன் இருந்துழிக் கடிது நண்ணுவான். 691

இராமனிடம் சுக்கிரீவன் செல்லுதல்

அங்கதன் உடன்செல அரிகள் முன்செல
மங்கையர் உள்ளமும் வழியும் பின்செலச்
சங்கைஇல் இலக்குவற் றழுவித் தம்முனின்
செங்கதி ரோன்மகன் கடிது சென்றனன். 692

ஒன்பதி னுயிர கோடி யூகம்தன்
முன்செலப் பின்செல மருங்கு மொய்ப்புற
மன்பெருங் கிளைஞரும் மருங்கு சுற்றுற
மின்பொரு பூணினன் செல்லும் வேலையில் 693

686-ம் பாட்டு: அரசன் தேவியை - இராமனின் மனைவியை. 690, 691, 692-ம் பாட்டுக்கள்: வரன், நாயகன், தம்முன் - இராமன். சுக்கிரீவனுக்கு இராமன் தம்முன் (தமையன்) என்று இங்கே குறிப்பிடப்படுகிறான்.

கொடிவனம் மிடைந்தன குமுறு பேரியின்
இடிவனம் மிடைந்தன பணிலம் ஏங்கின
தடிவனம் மிடைந்தெனத் தயங்கு பூண்ஒளி
பொடிவனம் எழுந்தன வானம் போர்த்தவே. 694

பொன்னினில் முத்தினில் புனைமென் தூசினில்
மின்னின மணியினில் பளிங்கில் வெள்ளியில்
பின்னின விசும்பினும் பெரிய பெட்புறத்
துன்னின சிவிகைவெண் கவிகை சுற்றின. 695

வீரனுக்கு இளையவன் விளங்கு சேவடி
பாரினில் சேறலில் பரிதி மைந்தனும்
தாரினில் பொலங்கழல் தழங்கத் தாரணித்
தேரினில் சென்றனன் சிவிகை பின்செல. 696

எய்தினன் மானவன் இருந்த மால்வரை
நொய்தினில் சேனைபின்பு ஒழிய நோன்கழல்
ஐயன்வில் குமரனும் தானும் அங்கதன்
கைதொடர்ந்து அயல்செலக் காதல் முன்செல. 697

கண்ணிய கணிப்பரும் செல்வக் காதல்விட்டு
அண்ணலை அடிதொழ அணையும் அன்பினால்
நண்ணிய கவிக்குலத் தரசன் நாள்தொறும்
புண்ணியர் தொழுகழல் பரதன் போன்றனன். 698

பிரிவரும் தம்பியும் பிரியப் பேருலகு
இறுதியின் தான்என இருந்த ஏந்தலை
அறைமணித் தாரினோடு ஆரம் பார்தொடச்
செறிமலர்ச் சேவடி முடியின் தீண்டினான். 699

தீண்டலும் மார்பிடைத் திருவும் நோவுற
நீண்டபொற் றடக்கையான் நெடிது புல்லினான்
மூண்டெழு வெகுளிபோய் ஒளிப்ப முன்புபோல்
ஈண்டிய கருணைதந்து இருக்கை ஏவியே. 700

அயல்இனிது இருத்திநின் அரசும் ஆணையும்
இயல்பினின் இயைந்தவே இனிது வைகுமே
புயல்பொரு தடக்கைநீ புரக்கும் பல்லுயிர்
வெயில்இல வேகுடை எனவி னவினான். 701

பொருளுடை அவ்வுரை கேட்ட போழ்துவான்
உருளுடைத் தேரினோன் புதல்வன் ஊழியின்
இருளுடை உலகினுக்கு இரவி அன்னநின்
அருளுடை யேற்குஅவை அரிய வோஎன்றான். 702

701-ம் பாட்டு: இயைந்தவே - அமைந்துள்ளனவா? வைகுமே - நடைபெற்று வருகின்றனவா? வெயில் இலவே - துன்பம் இல்லாமல் இருக்கின்றனவா?

பின்னரும் விளம்புவான் பெருமை போய்நினது
இன்அருள் உதவிய செல்வம் எய்தியே
மன்னவ நின்பணி மறுத்து வைகினென்
புன்நிலைக் குரக்கியல் புதுக்கி னேன்என்ருன். 703

பெருந்திசை அனைத்தையும் பிசைந்து தேடிநிற்-
றரும்தகை அமைந்தும்அத் தன்மை செய்திலேன்
திருந்திழை திறத்தினுல் தெளிந்த சிந்தைநீ
வருந்தினை இருக்கயான் வாழ்வின் வைகினேன். 704

இனையன யானுடை இயல்பும் எண்ணமும்
நினைவும்என் ருல்இனி நின்று யான்செயும்
வினையும்நல் லாண்மையும் விளம்ப வேண்டுமோ
வனைகழல் வார்சிலை வள்ளி யோய்என்ருன். 705

திருவுறை மார்பனும் தீர்ந்த தேயும்வந்து
ஒருவரும் காலம்உன் உரிமை ஓர்உரை
தருவினைத் தாகையின் தாழ்விற் ருகுமோ
பரதன்நீ இனையன பகரற் பாலையோ. 706

ஆரியன் பின்னரும் அமைந்து நன்குணர்
மாருதி எவ்வழி மருவி னுன்எனச்
சூரியன் கான்முளை தோன்று மால்வரை
நேர்வரும் பரவையின் நெடிய சேனையான். 707

கோடிநூ ருயிரம் குறித்த தூதுவர்
ஓடினர் நெடும்படை கொணரல் உற்றதால்
நாள்தரக் குறித்ததும் இன்று நாளைஅவ்
ஆடல்அம் தானையோடு அவனும் எய்துமால். 708

ஒன்பதி னுயிர கோடி உற்றது
நின்பெருஞ் சேனைஅந் நெடிய சேனைக்கு
நன்குறும் அவதிநாள் நாளை நண்ணிய
பின்செயத் தக்கது பேசற் பாற்றென்ருன். 70

விரும்பிய இராமனும் வீர நிற்குஅதோர்
அரும்பொரு ளாகுமோ அமைதி நன்றெனுப்
பெரும்பகல் இறந்தது பெயர்தி நின்படை
பொருந்துழி வாஎனத் தொழுது போயினுன். 710

அங்கதற்கு இனியன அருளி ஐயபோய்த்
தங்குதி உந்தையோடு என்று தாமரைச்
செங்கணுன் தம்பியும் தானும் சிந்தையின்
மங்கையும் அவ்வழி அன்று வைகினுன். 711

704-ம் பாட்டு: நிற் றரும் - உனக்குத் தரும். திருந்திழை - சீதை. 706-ம் பாட்டு: தீர்ந்ததேயும் - தீர்ந்ததாகவும். பரதன் நீ - பரதனைப் போன்ற நீ 709-ம் பாட்டு: நின்பெருஞ்சேனை - தனது சேனையை இராமனுடைய சேனை என்று உரிமை பாராட்டிச் சுக்கிரீவன் கூறுகிருன்.

சேய்உயர் சீர்த்தியான் கதிரின் செம்மல்பால்
போயதும் அவ்வயின் புகுந்த யாவையும்
ஒய்வுறுது உணர்த்தென உணர்த்தி ஞன்அரோ
வாய்மையால் உணர்வுறு வலிய மொய்ம்பிஞன். 712

அன்றவன் இறுத்தனன் அலரி கீழ்த்திசைப்
பொன்திணி நெடுவரை பொலிவு ருதமுன்
வன்திறல் தூதுவர் கூவ வானரக்
குன்றுறழ் நெடும்படை அடைந்த கூறுவாம். 713

11. தானை காண் படலம்

[சுக்கிரீவன் திரட்டிய படையை இராமனும் இலக்குவனும் கண்ட செய்தியைக் கூறும் பகுதி]

ஆனை ஆயிரம் ஆயிரத்து எறுழ்வலி அமைந்த
வான ராதிபர் ஆயிரர் உடன்வர வகுத்த
கூனல் மாக்குரங்கு ஐயிரண் டாயிர கோடித்
தானை யோடும்அச் சதவலி என்பவன் சார்ந்தான். 714

ஊன்றி மேருவை எடுக்குறும் மிடுக்கினுக்கு உரிய
தேன்தெ ரிந்துண்டு தெளிவுறும் வானரச் சேனை
ஆன்ற பத்துநூ ருயிர கோடியோடு அமையத்
தோன்றி ஞன்வந்து சுசேடணன் என்னும்அத் தோன்றல். 715

ஈறில் வேலையை இமைப்புறும் அளவினில் கலக்கிச்
சேறு காண்குறும் திறல்கெழு வானரச் சேனை
ஆறெ ணுயிர கோடியது உடன்வர அமுதம்
மாறி லாமொழி உருமையைப் பயந்தவன் வந்தான். 716

ஐம்ப தாயநூ ருயிர கோடிஎண் அமைந்த
மொய்ம்பு மால்வரை நேர்நெடு வானரம் மொய்ப்ப
இம்பர் ஞாலத்தும் வானத்தும் எழுதிய சீர்த்தி
நம்ப னைத்தந்த கேசரி கடலென நடந்தான். 717

முனியு மாம்எனில் அருக்கனை முடிவுற முனியும்
தனிமை தாங்கிய உலகையும் சலம்வரில் குமைக்கும்
இனிய மாக்குரங்கு ஈரிரண் டாயிர கோடி
அனிகம் முன்வர ஆன்பெயர்க் கண்ணன்வந் தடைந்தான். 718

மண்கொள் வாள்எயிற்று ஏனத்தின் வலியன வயிரத்
திண்கொள் மால்வரை மயிர்ப்புறத் தனஎனத் திரண்ட
கண்கொள் ஆயிர கோடியின் இரட்டியில் கணித்த
எண்கின் ஈட்டம்கொண்டு எறுழ்வலித் தூமிரன் இறுத்தான். 719

716-ம் பாட்டு: உருமை-சுக்கிரீவனின் மனைவி. இவளுடைய தந்தையின் பெயர் தாரன். அவன் தேவர்களுக்குக் குருவான பிரகஸ்பதியின் மகன். 717-ம் பாட்டு: நம்பனை - அனுமானை. கேசரி - அனுமானின் தகப்பன். 718-ம் பாட்டு: ஆன் பெயர்க் கண்ணன் - கவாட்சன் என்ற வானரத் தலைவன். 719-ம் பாட்டு: ஏனத்தின் -

தனிவ ரும்தடங் கிரிஎனப் பெரியவன் சலத்தால்
நினையும் நெஞ்சிற உரும்என உறுக்குறு நிலையன்
பனசன் என்பவன் பன்னிரண் டாயிர கோடிப்
புனித வெஞ்சின வானரப் படைகொடு புகுந்தான். 720

இடியும் மாகடல் முழக்கமும் வெருக்கொள இசைக்கும்
முடிவில் போர்முழக்கு உடையன விசையன முரண
கொடிய கூற்றையும் ஒப்பன பதிற்றைந்து கோடி
நெடிய வானரப் படைகொண்டு புகுந்தனன் நீலன். 721

மாக ரத்தன உரத்தன வலியன நிலைய
வேக ரத்தவெங் கனல்உமிழ் வெயிலன மலையின்
ஆக ரத்தினும் பெரியன ஆறைந்து கோடி
சாக ரத்தொடும் தர்முகன் என்பவன் சார்ந்தான். 722

இளைத்து வேறொரு மாநிலம் வேண்டும்என்று இரங்க
முளைத்த முப்பதி னாயிர கோடியின் முற்றும்
விளைத்த வெஞ்சினத்து அரியினம் வெருவுற விழிக்கும்
அளக்க ரோடும்அக் கயன்எனும் பெயரன்வந்து அடைந்தான். 723

ஆயி ரத்தறு நூறுகோ டியின்கடை அமைந்த
பாயி ரப்பெரும் படைகொண்டு பரவையின் திரையில்
தாய் உருத்துட னேவரத் தடநெடு வரையை
ஏய்உ ருப்புயச் சாம்பன்என் பவனும்வந் திறுத்தான். 724

வகுத்த தாமரை மலர்அயன் நிசிசரர் வாழ்நாள்
உகுத்தி நீஎனப் பொருவரும் பெருவலி உடையான்
பகுத்த பத்துநா றுயிரப் பத்தியின் இரட்டி
தொகுத்த கோடிவெம் படைகொண்டு துன்முகன் தொடர்ந்தான்.

கோடி கோடிநா றுயிரம் எண்எனக் குவிந்த
நீடு வெஞ்சினத்து அரியினம் இருபுடை நெருங்க
மூடும் உம்பரும் இம்பரும் பூழியின் மூழ்கத்
தோடுஅ லர்ந்ததார்க் கிரிபுரை துமிந்தனும் தொடர்ந்தான். 726

இயைந்த பத்துநா றுயிரப் பத்தெனும் கோடி
உயர்ந்த வெஞ்சின வானரப் படையொடும் ஒருங்கே
சயம்த னக்கொரு வடிவெனத் திறல்கொடு தழைத்த
மயிந்தன் மல்கச கோமுகன் தன்னெடும் வந்தான். 727

திருமாலின் வராக அவதாரத்தைவிட. மால்வரை மயிர்ப்புறத்தன என - பெரிய மலைக்கு உரோமம் முளைத்தது போல. தூமிரன் -சாம்பவானின் சோதரன். 721-ம் பாட்டு: நீலன் - வானரப்படையின் பிரதம தளபதி. இவனுடைய தகப்பன் அக்கினி. 723-ம் பாட்டு: வேறொரு மாநிலம்வேண்டும் - இந்த உலகில் இருப்பதற்கு இடம் பற்றாமையினால், வேறொரு உலகம் வேண்டும். 724-ம் பாட்டு: - சாம்பன்-சாம்பவான். இவன் கரடிகளுக்கு அரசன்; பிரமனுடைய கொட்டாவியில் பிறந்தவன். 727-ம் பாட்டு: மயிந்தன்,

கறங்கு போல்வன காற்றினும் கூற்றினும் கடிய
பிறங்கு தெண்திரைக் கடல்புடை பெயர்ந்தெனப் பெயர்வ
மறம்கொள் வானரம் ஒன்பது கோடிஎண் வகுத்த
திறம்கொள் வெஞ்சினப் படைகொடு குமுதனும் சேர்ந்தான். 728

ஏழின் ஏழுநா ருயிர கோடிஎன்று இசைந்த
பாழி நன்னெடும் தோள்கிளர் படைகொண்டு பரவை
ஊழி பேரினும் உலேவிலன் உலகினில் உயர்ந்த
பூழி விண்புகப் பதுமுகன் என்பவன் புகுந்தான். 729

ஏழும் ஏழும்என்று உரைக்கின்ற உலகங்கள் எவையும்
தாழும் காலத்தும் தாழ்விலாத் தடவரைக் குலங்கள்
சூழும் தோற்றத்த வலிகொள்தொள் ளாயிர கோடிப்
பாழி வெம்புயத்து அரியொடும் இடபனும் படர்ந்தான். 730

தீர்க்க பாதனும் வினதனும் சரபனும் திரைக்கும்
மாற்க ருங்கடற்கு உயர்ந்துள மைம்முகத்து அனிகம்
ஆர்க்கும் எண்ணரும் கோடிகொண்டு அண்டமும் புறமும்
போர்க்கும் பூழியின் மறைதர முறையினில் புகுந்தார். 731

கைஅம் சாசரம் உடையஅக் கடவுளைக் கண்டு
மெய்அஞ் சாதவன் மாதிரம் சிறிதென விரிந்த
வையம் சாய்வரத் திரிதரும் வானர சேனை
ஐயஞ் சாயிர கோடிகொண்டு அனுமன்வந் தடைந்தான். 732

நொய்தின் கூடிய சேனைநூ ருயிர கோடி
எய்தத் தேவரும் என்கொலோ முடிவென்ப தெண்ண
மையல் சிந்தையால் அந்தகன் மறுக்குற்று மயங்கத்
தெய்வத் தச்சன்மெய்த் திருநெடுங் காதலன் சேர்ந்தான். 733

கும்ப னும்குலச் சங்கனும் முதலினர் குரங்கின்
தம்பெ ரும்படைத் தலைவர்கள் தரவந்த தானை
இம்பர் நின்றவர்க்கு எண்ணரிது இராகவன் ஆவத்து
அம்பெ னும்துணைக்கு உரியமற்று உரைப்புஅரிது அளவே. 734

தோயின் ஆழிஓர் ஏழும்நீர் சுவறிவெண் துகள்ஆம்
சாயின் அண்டமும் மேருவும் ஒருங்குடன் சாயும்
ஏயின் மண்டலம் எள்ளிட இடமின்றி இரியும்
காயின் வெங்கனற் கடவுளும் இரவியும் காயும். 735

மல்கசகோமுகன்-வானர வீரர்கள் மயிந்தன், மல்கசன், கோமுகன் என்ற மூவரைக் குறிப்பதாகவும் கூறுவர். 732-ம் பாட்டு: கைஅம்......கடவுளை - அழகிய ஆயிரம் கிரணங்களை உடைய சூரியனை. 733-ம் பாட்டு: தெய்வத் தச்சன் மெய்த் திரு நெடுங் காதலன் - தெய்வச் சிற்பியான விசுவகர்மாவின் மகனுன நளன் என்ற வானர வீரன்.

எண்ணில் நான்முகர் எழுபதி னுயிரர்க்கு இயலா
உண்ணின் அண்டங்கள் ஓர்பிடி உண்ணவும் உதவா
கண்ணின் நோக்கிடில் கண்ணுத லானையும் கடக்கும்
மண்ணின் மேல்வந்த வானரச் சேனையின் வரம்பே. 736

ஒடிக்கு மேல்வட மேருவை வேரொடும் ஒடிக்கும்
இடிக்கு மேல்நெடு வானக முகட்டையும் இடிக்கும்
பிடிக்கு மேல்பெருங் காற்றையும் கூற்றையும் பிடிக்கும்
குடிக்கு மேல்கடல் ஏழையும் குடங்கையில் குடிக்கும். 737

ஆறு பத்தெழு கோடியர் வானரர்க்கு அதிபர்
கூறு திக்கினுக்கு அப்புறம் குப்புறற்கு உரியார்
மாறில் கொற்றவன் நினைத்தன முடிக்குறும் வலியார்
ஊறும் இப்பெருஞ் சேனைகொண்டு எளிதின்வந் துற்றார். 738

வானரப் படைத் தலைவர்கள் சுக்கிரீவனை வணங்குதல்

ஏழு மாகடல் பரப்பினும் பரப்பென இசைப்பச்
சூழும் வானரப் படையொடுஅவ் வீரரும் துவன்றி
ஆழி மாப்பெருந் தேரவன் காதலன் அடியில்
வாழி வாழிஎன்று உரைத்துஅலர் தூவினர் வணங்கி. 739

அனைய தாகிய சேனைவந் திறுத்தலும் அருக்கன்
தனயன் நொய்தினில் தயரதன் புதல்வனைச் சார்ந்தான்
நினையும் முன்னம்வந் தடைந்தது நின்பெருஞ் சேனை
வினையின் கூற்றுவ கண்டருள் நீஎன விளம்பும். 740

ஐய னும்உவந்து அகம்என முகம்மலர்ந்து அருளி
தைய லாள்வரக் கண்டன னும்எனத் தளிர்ப்பான்
எய்தி னான்அங்கோர் நெடுவரைச் சிகரத்தின் இருக்கை
வெய்ய வன்மகன் பெயர்த்தும்அச் சேனையின் மீண்டான். 741

அஞ்சொடு ஐயிரண்டு யோசனை அகலத்த தாகிச்
செஞ்செ வேவட திசைநின்று தென்திசை செல்ல
எஞ்சல் இல்பெருஞ் சேனையை எழுகென ஏவி
வெஞ்சி னப்படை வீரரை உடன்கொண்டு விட்டான். 742

மீண்டுஇ ராமனை அடைந்திகல் வென்றிவேல் வீர
காண்டி நீஎன வரன்முறை தெரிவுறக் காட்டி
ஆண்டி ருந்தனன் ஆதரத்து உவகையின் நாடி
ஈண்டு சேனைபால் எறிகடல் நெறிபடர்ந் தென்ன. 743

எட்டுத் திக்கையும் இருநிலப் பரப்பையும் இமையோர்
வட்ட விண்ணையும் மறிகடல் அனைத்தையும் மறையத்
தொட்டு மேல்எழுந் தோங்கிய தூளியின் பூழி
இட்டுச் செம்மிய நிறைகுடம் ஒத்ததுஇவ் அண்டம். 744

736-ம் பாட்டு: கண்ணுதலானையும் கடக்கும் - சிவனையும் ஜெயிக்கும்.
740-ம் பாட்டு: வினையின் கூற்றுவ - தீவினைகளுக்கு எமனான இராமனே.

அத்தி ஒப்பெனின் அன்னவை உணர்ந்தவர் உளரால்
வித்த கர்க்குஇனி உரைக்கலம் உவமைவேறு யாதோ
பத்தி ரட்டிநன் பகல்இரவு ஒருவலர் பார்ப்பார்
எத்தி றத்தினும் நடுவுகண் டிலர்முடிவு எவனே. 745

விண்ணில் தீம்புனல் உலகத்தில் நாகரில் வெற்றி
எண்ணில் தான்அலது ஒப்பிலன் எனநின்ற இராமன்
கண்ணில் சிந்தையில் கல்வியில் ஞானத்தில் கருதி
அண்ணல் தம்பியை நோக்கினன் உரைசெய்வ தானன். 746

வானரப் படையைக் கண்ட இராமனின் வார்த்தைகள்

அடல்கொண்டு ஓங்கிய சேனைக்கு நாமும்நம் அறிவால்
உடல்கண் டோம்இனி முடிவுள காணுமா றுளதோ
மடல்கொண் டோங்கிய அலங்கலாய் மண்ணிடை மாக்கள்
கடல்கண் டோம்என்பர் யாவரே முடிவுறக் கண்டார். 747

ஈசன் மேனியை ஈரைந்து திசைகளை ஈண்டுஇவ்
ஆசில் சேனையை ஐம்பெரும் பூதத்தை அறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறும் பிணக்கை
வாச மாலையாய் யாவரே முடிவெண்ண வல்லார். 748

இன்ன சேனையை முடிவுற இருந்திவண் நோக்கிப்
பின்னர்க் காரியம் புரிதுமேல் நாள்பல பெயரும்
உன்னிச் செய்கைமேல் ஒருப்படல் உறுவதே உறுதி
என்ன வீரனைக் கைதொழுது இளையவன் இயம்பும். 749

யாவது எவ்வுல கத்தினின் ஈங்கிவர்க்கு இயற்றல்
ஆவது ஆகுவது அரியதொன்று உளதெனல் ஆமோ
தேவ தேவியைத் தேடுவ தென்பது சிறிதால்
பாவம் தோற்றது தருமமே வென்றதுஇப் படையால். 750

தரங்க நீர்எழும் தாமரை நான்முகன் தந்த
வரம்கொள் பேருல கத்தினில் மன்னுயிர் எல்லாம்
உரம்கொள் மால்வரை உயிர்படைத்து எழுந்தன ஒக்கும்
குரங்கின் மாப்படைக்கு உறைஇடப் படைத்தனன் கொல்லாம். 751

ஈண்டு தாழ்க்கின்றது என்இனி எண்திசை மருங்கும்
தேண்டு வார்களை வல்லையின் செலுத்துவ தல்லால்
நீண்ட நூல்வலாய் என்றனன் இளையவன் நெடியோன்
பூண்ட தேரவன் காதலற்கு ஒருமொழி புகலும். 752

751-ம் பாட்டு: உறைஇட -அரும்பதஉரை பார்க்க.

12. நாடவிட்ட படலம்

[சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு வானர வீரர்களை எல்லாத் திசைகளிலும் அனுப்பியதைப்பற்றிக் கூறும் பகுதி]

வகையும் மானமும் மாறெதிர்ந்து ஆற்றுறு
பகையும் இன்றி நிரைந்து பரந்தெழு
தகைவில் சேனைக்கு அவதி சமைந்ததோர்
தொகையும் உண்டுகொ லோஎனச் சொல்லினான். 753

ஏற்ற வெள்ளம் எழுபதுஎன் றேமறை
ஆற்ற லாளர் அறிவின் அறைந்ததோர்
மாற்றம் உண்டுஅது வல்லது மற்றும்ஓர்
தோற்றம் என்றிதற்கு எண்ணும்முன் சொல்லுமோ. 754

ஆறு பத்தெழு கோடி அனீகம்ஒத்து
ஏறு கொற்றத் தலைவர் இவர்க்குமுன்
கூறு சேனைப் பதிகொடுங் கூற்றையும்
நீறு செய்திடும் நீலன்என் றோதினான். 755

என்று ரைத்த எரிகதிர் மைந்தனை
வென்றி விற்கை இராமன் விருப்பினால்
நின்றி னிப்பல பேசின்என் னேநெறி
சென்றி ழைப்பன சிந்தனை செய்கென்றான். 756

அவனும் அண்ணல் அனுமனை ஐயநீ
புவனம் மூன்றும்நின் தாதையின் புக்குஉழல்
தவன வேகத்தை ஓர்கிலை தாழ்த்தனை
கவன மாக்குரங் கின்செயல் காண்டியோ. 757

அனுமன் முதலியோரைச் சுக்கிரீவன் தென்திசைக்கு அனுப்புதல்

ஏகி ஏந்திழை தன்னை இருந்துழி
நாகம் நாடுக நானிலம் நாடுக
போக பூமி பொருந்திட வல்லநின்
வேகம் ஈண்டு வெளிப்பட வேண்டுமால். 758

தென்தி சைகண் இராவணன் சேண்நகர்
என்றி சைக்கின்றது என்அறிவு இன்னணம்
வன்தி சைக்கினி மாருதி நீஅலால்
வென்றி சைக்குரி யார்பிறர் வேண்டுமோ. 759

754-ம் பாட்டு: (இதன் பொருள்) வானரசேனை மொத்தம் எழுபது வெள்ளம் என்று அறிவாளிகள் சொல்லியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டுவிட வேண்டியதுதான். மற்றப்படி இந்தச் சேனையின் அளவை எண்ணிக் கணக்கிட்டுக் கூற முடியுமா? 757-ம் பாட்டு: (இதன் பொருள்) சுக்கிரீவன், அனுமனைப் பார்த்து, ''மூன்று உலகங்

வள்ளல் தேவியை வஞ்சித்து வவ்விய
கள்ள வாள்அரக் கன்செலக் கண்டது
தெள்ளி யோய்அது தென்திசை என்பதோர்
உள்ள மும்எனக்கு உண்டென உன்னுவாய். 760

தாரை மைந்தனும் சாம்பனும் தாம்முதல்
வீரர் யாவரும் மேம்படு மேன்மையால்
சேர்க நின்னெடும் திண்திறல் சேனைகள்
பேர்க வெள்ளம் இரண்டொடும் பெற்றியால். 761

குடதி சைக்கண் இடபன் குபேரன்வாழ்
வடதி சைக்கண் சதவலி வாசவன்
இடதி சைக்கண் வினதன் விறல்தரு
படையொ டுற்றுப் படர்கெனப் பன்னினன். 762

வெற்றி வானர வெள்ளம் இரண்டொடும்
சுற்றி ஒடித் துருவி ஒருமதி
முற்று ருதமுன் மீளுதிர் முந்தியே
கொற்ற வாகையி னீர்எனக் கூறினன். 763

தென்திசையில் சீதையைத் தேட வேண்டிய இடங்களைச் சுக்கிரீவன் கூறுதல்

ஈண்டு நின்றெழுந்து ஈரைந்து நூறெழில்
தூண்டு சோதிக் கொடுமுடி தோன்றலால்
நீண்ட நேமிகொ லாம்என நேர்தொழ
வேண்டும் விந்த மலையினை மேவுவீர். 764

தேடி அம்மலை தீர்ந்தபின் தேவரும்
ஆடு கின்றது அறுபதம் ஐந்திணை
பாடு கின்றது பன்மணி யால்இருள்
ஓடு கின்ற நருமதை உன்னுவீர். 765

வாம மேகலை வானவர் மங்கையர்
காம ஊசல் களிஇசைக் கள்ளினல்
தூம மேனி அசுணம் துயில்வுறும்
ஏம கூடம் எனும்மலை எய்துவீர். 766

களிலும் உன் தந்தையான வாயுபகவானைப் போல நீ அதிவேக மாகச் சஞ்சரிக்கும் ஆற்றல் உடையவன். அந்த ஆற்றலை நீ அறியா மல், காலதாமதம் செய்துகொண்டு சும்மா இருக்கிறாயா? அல்லது வேகமாகச் செல்லும் மற்றக் குரங்குகளின் செயலைப் பார்க்கலாம் என்று இருக்கிறாயா?'' என்று கேட்கிறான். குறிப்பு: அனுமனுக்குத் தன் பலம் தெரியாது. 762—ம் பாட்டு: வாசவன் இடதிசை - இந்திரனுடைய இடமான கிழக்குத் திசை. 764-ம் பாட்டு: ஈரைந்து......கொடுமுடி - ஆயிரம் அழகிய பிரகாசமான சிகரங்கள். நேமி கொலாம் என- (ஆயிரம் முடிகளை உடைய) திருமாலோ என்று. விந்தமலை - பாரதநாட்டின் மத்தியில் இருப்பது.. இமயமலைக்குத்

நொய்தின் அம்மலை நீங்கி நுமரொடும்
பொய்கை யின்கரை பின்படப் போதிரால்
செய்ய பெண்ணைக் கரியபெண் ணைச்சில
வைகல் தேடிக் கடிது வழிக்கொள்வீர். 767

தாங்கு வார்அகில் தருவளர் சந்தனம்
வீங்கு வேலி விதர்ப்பமும் மெல்லென
நீங்கி நாடு நெடியன பிற்படத்
தேங்கு வார்புனல் தண்டகம் சேர்திரால். 768

பண்டுஅ கத்தியன் வைகிய தாம்பகர்
தண்ட கத்துஉயர் தாபதர் தம்மைஉட்
கண்டுஅ கத்துயர் தீர்வது காண்டிரால்
முண்ட கத்துறை என்றொரு மொய்ம்பொழில். 769

ஞாலம் நுங்குறு நல்லறத் தோர்பொருள்
போல நின்று பொலிவது பூம்பொழில்
சில மங்கையர் வாய்எனத் திங்கனி
காலம் இன்றிக் கனிவது கண்டிரால். 770

நயனம் நன்கிமை யார்துயி லார் நனி
அயனம் இல்லை அருக்கனுக்கு அவ்வழி
சயன மாதர் கலவித் தலைதரும்
பயனும் இன்பமும் நீரும் பயக்குமால். 771

ஆண்டி றந்துபின் அந்தரத்து இந்துவைத்
தீண்டு கின்றது செங்கதிர்ச் செல்வனும்
ஈண்டு றைந்தலது ஏகலன் எண்ணரும்
பாண்டு வின்மலை என்னும் பருப்பதம். 772

வேறு

முத்தீர்த்துப் பொன்ஈர்த்து மணிஈர்த்து முதுநீர்த்த முன்றில் ஆயர்
மத்தீர்த்து மரம்ஈர்த்து மலைஈர்த்து மலர்ஈர்த்து வருவது யார்க்கும்
புத்தீர்த்துக் கதிகொடுத்துப் புலவர்நா டுதவுவது புனித மான
அத்தீர்த்தம் அகன்கோதா விரிஎன்பர் அம்மலையின் அருகிற்று அம்மா.

அவ்ஆறு கடந்தப்பால் அறத்தாறே எனத்தெளிந்த அருளி னுறும்
வெவ்வாறும் எனக்குளிர்ந்து வெயில்இயங்கா வகைஇலங்கும் விரிபூஞ் சோலை
எவ்வாறும் உறத்துவன்றி இருள்ஓட மணிஇமைப்பது இமையோர் வேண்டத்
தெவ்வாறு முகத்தொருவன் தனிக்கிடந்த சுவணந்தைச் சேர்திர் மாதோ. 774

தெற்கே உள்ள யாவும் தென்திசையைச் சேர்ந்தனவாகவே கருதப் படுமாதலால், விந்திய மலையும் இங்கே தென்திசையிலுள்ள மலையாகக் கருதப்படுகிறது. 767—ம் பாட்டு: செய்ய பெண்ணைக் கரிய பெண்ணை - மேன்மைக் குணம் பொருந்திய மங்கையான சீதையை, கருநிறமான நீர் ஓடும் பெண்ணை நதி தீரத்தில். 774—ம் பாட்டு: அருளினுறும் - 'அருளின் நாறும்' என்று பிரித்து 'அருளினால் விளங்குகின்ற' என்று பொருள் கூறுவர். வெவ்வாறு - 'வெம் ஆறு' எனப் பிரித்து, 'விரும்பத்தக்க வழி' என்று பொருள் கூறுவர்.

சுவணத்தைக் கடந்தப்பால் சூரியகாந்
 தம்எனவே தோன்றி மாதர்
கவண்உமிழ்கல் வெயில்இயங்கும் கனவரையும்
 சந்திரகாந் தமும்முன் காண்பீர்
அவண்அவைநீத்து ஏகியபின் அகல்நாடு
 பலகடந்தால் அனந்தன் என்பான்
உவணபதிக்கு ஒளித்துறையும் கொங்கணமும்
 குலிந்தமும்சென்று உறுதிர் மாதோ. 775

அரன்அதிகன் உலகளந்த அரிஅதிகன்
 என்றுரைக்கும் அறிவி லோர்க்குப்
பரகதிசென் றடைவரிய பரிசேபோல்
 புகலரிய பண்பிற் ருமால்
சுரநதியின் அயலதுவான் தோய்குடுமிச்
 சுடர்த்தொகைய தொழுதோர்க் கெல்லாம்
வரன்அதிகம் தருந்தகைய அருந்ததியாம்
 நெடுமலையை வணங்கி அப்பால் 776

அஞ்சிவரும் வெம்சுரனும் ஆறும்அகன்
 பெருஞ்சுனையும் அகில்ஓங்கு ஆர
மஞ்சிவரும் நெடுங்கிரியும் வளநாடும்
 பிற்படப்போய் வழிமேல் சென்ருல்
நஞ்சிவரும் மிடற்றுஅரவுக்கு அமிழ்துநனி
 கொடுத்துஆயைக் கலுழன் நண்ணும்
எஞ்சில்மர கதப்பொருப்பை இறைஞ்சிஅதன்
 புறம்சார ஏகிர் மாதோ. 777

வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்ருய்
 நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்
 நல்லறத்துக்கு ஈருய் வேறு
புடைசுற்றும் துணையின்றிப் புகழ்பொதிந்த
 மெய்யேபோல் பூத்து நின்ற
அடைசுற்றும் தண்சாரல் ஓங்கியவேங்
 கடத்தில்சென்று அடைதிர் மாதோ. 778

வெம்மை - விரும்புதல். 'எனத் தெளிந்த அருளிறும் வெவ்வாறும்' என்பதற்கு 'அது தெரிந்த அருளினும் வெவ்வேரும்' என்ற பாடமும் உண்டு. தெவ்வாறு முகத்தொருவன் - தேவ ஆறுமுகத் தொருவன்: ஷண்முகக் கடவுள். சுவணம் - சரவணம் என்பதன் சிதைவாக இருக்கலாம் என்று கருதுவர். இப்பாட்டுக்கு நிச்சய மான பொருள் கூறுவது அரிது. 775-ம் பாட்டு: 'சுவணத்தை' என்பதற்கு 'சுவணநதி' என்ற பாடமும் உண்டு. 777-ம் பாட்டு: அஞ்சிவரும்-பயந்துவரும், பயமாக இருக்கும். மஞ்சிவரும் - மஞ்சு இவரும்: மேகங்கள் ஏறும். நஞ்சிவரும் - நஞ்சு இவரும்: விஷம்

இருவினையும் இடைவிடா எவ்வினையும்
இயற்றுதே இமையோர் எய்தும்
திருவினையும் இடுபதம்தேர் சிறுமையையும்
முறைஒப்பத் தெளிந்து நோக்கிக்
கருவினைஅது இப்பிறவிக்கு என்றுணர்ந்துஅங்கு
அதுகளையும் கடைஇல் ஞானத்து
அருவினையின் பெரும்பகைஞர் ஆண்டுஉளர்ஈண்டு
இருந்தும்அடி வணங்கற் பாலார். 779

சூதகற்றும் திருமறையோர் துறைஆடும்
நிறைஆறும் சுருதித் தொல்நூல்
மாதவத்தோர் உறைவிடமும் மழைஉறங்கும்
மணித்தடமும் வான மாதர்
கீதம்ஒத்த கின்னரங்கள் இன்நரம்பு
வருடுதொறும் கிளக்கும் ஓதை
போதகத்தின் மழக்கன்றும் புலிப்பறழும்
உறங்கிடமும் பொருந்திற் றம்மா. 780

பொங்கும். அரவு - காசிப முனிவனின் மனைவி கத்துருவின் வயிற்றில் பிறந்த பாம்புகள். ஆயை - (கருடனுடைய தாயான) வினதையை. எஞ்சில் - எஞ்சு இல்: குறைவில்லாத. அரவுக்கு அமிழ்து நனி கொடுத்து ஆயைக் கலுழன் நண்ணும் - பாம்புகளுக்கு தேவாமிர்தத்தைக் கொடுத்துத் தனது தாயான வினதையின் அடிமைத்தனத்தைப் போக்கி அவளைக் கருடன் அடைகின்ற. கருடனுடைய தாயான வினதையும், பாம்புகளுக்குத் தாயான கத்துருவும் காசிப முனிவனின் மனைவிமார் ஆவர். ஒரு சமயம் இவ்விருவருக்குள் நடந்த ஒரு பந்தயத்தில் தோற்ற வினதை, சக்களத்தியான கத்துருவுக்கு அடிமையானுள். இந்த அடிமைத்தனத்தை நீக்கத் தேவலோகத்திலிருந்து கருடன் அமிர்தம் கொண்டு வந்தது; பாம்புகளைச் சாப்பிடக்கூடிய வரத்தையும் இந்திரனிடம் பெற்றது. அங்கிருந்து கொண்டு வந்த அமிர்தத்தைப் பாம்புகளின் முன் தர்ப்பைப் புல்லின்மேல் கருடன் வைத்தது. அதைப் பருகுவதற்கு முன்பு பாம்புகள் குளிக்கச் சென்றன. அப்போது இந்திரன் வந்து அமிர்தத்தை எடுத்துக் கொண்டு போய்விட்டான். குளித்துவிட்டுத் திரும்பிய பாம்புகள், அமிர்தத்தைக் காணுமல், தருப்பையை ஆசையோடு நக்கவே, தருப்பைகள் அறுத்து அவற்றின் நாக்குகள் இரண்டாகிக் கீறிப் பிளவுபட்டு விட்டன. 779-ம் பாட்டு : இருவினை - நல்வினை, தீவினை. இடுபதம் தேர் சிறுமை - (பிச்சையாக) இடும் சோற்றை விரும்பும் சிறுமை. கரு வினை அது இப்பிறவிக்கு- இந்தப் பிறப்புக்கு கருவாக இருப்பவை அந்த நல்வினையும் தீவினையும். அது-அந்த வினைகளை. அருவினையின் பகைஞர்-நல்வினை தீவினைகளுக்கு விரோதிகளாக, அவற்றிற்கு அப்பால்பட்டு இருக்கும் ஞானிகள்.

கோடுறுமால் வரைஅதனைக் குறுகுதிரேல்
உம்நெடிய கொடுமை நீங்கி
வீடுறுவீர் ஆதலினால் அப்புறமும்
இப்புறமும் மேவித் தொண்டை
நாடுறுதிர் உற்றக்கால் நகர்உறுதிர்
உற்றதன்பின் நளிநீர்ப் பொன்னிச்
சேடுறுதண் புனல்தெய்வத் திருநதியின்
இருகரையும் சேர்திர் மாதோ. 781

துறக்கம்உற்றார் மனம்என்னத் துறைகெழுநீர்ச்
சோணாடு கடந்தால் தொல்லை
அறக்கண்உற்றார் அதன்அயலே மறைந்துறைவர்
அவ்வழியே அல்லல் போக
உறக்கம்முற்றாது இன்பம்உற்றார் என்றுஇவர்கள்
பெறும்உணர்வி னோடும் ஓங்கல்
பிறக்கம்உற்ற மலைநாடு நாடிஅகன்
தமிழ்நாட்டில் பெயர்திர் மாதோ. 782

தென்தமிழ்நாட்டு அகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்றும்அவன் உறைவிடமாம் ஆதலினால்
அம்மலையை வலத்திட் டேகிப்
பொன்திணிந்த புனல்பெருகும் பொருநைஎனும்
திருநதிபின் பொழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மகேந்திரமாம்
நெடுவரையும் கடலும் காண்டிர். 783

ஆண்டுகடந்து அப்புறத்தும் எப்புறத்தும்
ஒருதிங்கள் அவதி யாகத்
தேண்டிஇவண் வந்தடைதிர் விடைகோடிர்
கடிதென்னச் செப்பும் வேலை
நீண்டவனும் மாருதியை நிறை அருளால்
உறநோக்கி நீதி வல்லோய்
காண்டிஎனில் குறிகேட்டி எனவேறு
கொண்டிருந்து கழறல் உற்றான். 784

781-ம் பாட்டு: நகர் - காஞ்சிபுரம். 782-ம் பாட்டு: அறக்கண் உற்றார்-தருமத்தினிடம் சேர்ந்தோர். உறக்கம்முற்றாது இன்பம் உற்றார் - தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்ற ஞானிகள். தமிழ்நாடு - பாண்டிய நாடு. 783-ம் பாட்டு: பொதியில் - பொதிகை மலையில். திருமுனிவன் - அகத்தியன். என்றும் அவன் உறைவிடமாம் - (தமிழைக் கேட்டுப் பரவசமாகி) எப்போதும் அந்த மலையிலேயே நீங்கள் இருந்துவிடுவீர்கள். வலத்திட்டேகி - வலம் சுற்றிவிட்டுப் போய். 784-ம் பாட்டு: நீண்டவனும் - நெடுமாலாகிய இராமனும். காண்டி எனில் - (சீதையைப்) பார்ப்பாயானால். குறிகேட்டி - சீதை

வேறு

சீதையின் அவயவங்களை அனுமனிடம் இராமன் வர்ணித்துக் கூறுதல்

பாற்கடல் பிறந்த செய்ய பவளத்தைப் பஞ்சி ஊட்டி
மேற்பட மதியம் சூட்டி விளங்குற நிரைத்த மெய்ய
கால்தகை விரல்கள் ஐய கமலமும் பிறவும் எல்லாம்
ஏற்பில என்ப தன்றி இணையடிக்கு உவமை உண்டோ. 785

நீமெயாய் உணர்தி ஐய நிரைவளை மகளிர்க் கெல்லாம்
வாய்மையால் உவமையாக மதியறி புலவர் வைத்தது
ஆமையாம் என்றபோதும் அல்லன சொல்லி ஞலும்
யாமயாழ் மழலை யாள்தன் புறவடிக்கு இழுக்கம் மன்னே. 786

வினைவரால் அரியகோதை பேதைமென் கணைக்கால் வெய்ய
நினைவரால் அரியஇன்ன நேர்படப் புலவர் போற்றும்
சினைவரால் பகழி ஆவம் நெற்சினை என்னும் செப்பம்
எனைவரால் பகரும் மீட்டு யான்உரைத்து இன்பம் என்னே. 787

அரம்பைஎன்று அளக மாதர் குறங்கினுக்கு அமைத்த ஒப்பின்
வரம்பையும் கடந்த போது மற்றுரை வகுக்க லாமோ
நரம்பையும் அமிழ்தம் நாறும் நறவையும் நன்னீர்ப் பண்ணைக்
கரும்பையும் கடந்த சொல்லாள் கவாற்குஇது கருதுகண்டாய். 788

வார்ஆழிக் கலசக் கொங்கை வஞ்சிபோல் மருங்கு லாள்தன்
தார்ஆழிக் கலைசார் அல்குல் தடங்கடற்கு உவமை தக்கோய்
பார்ஆழி பிடரில் தங்கும் பாந்தளும் பனிவென்று ஓங்கும்
ஓர்ஆழித் தேரும் கண்ட உனக்குநான் உரைப்ப தென்னே. 789

சட்டகம் தன்னை நோக்கி யாரையும் சமைக்கத் தக்காள்
இட்டிடை இருக்கும் தன்மை இயம்பக்கேட் டுணர்தி என்னில்
கட்டுரைத்து உவமை காட்டக் கண்பொறி கதுவா கையின்
தொட்டஎற்கு உணரல் ஆம்மற்று உண்டெனும் சொல்லும் இல்லை.

ஆலிலை படிவம் தீட்டும் ஐயநுண் பலகை நொய்ய
பால்நிறத் தட்டம் வட்டக் கண்ணடி பலவும் இன்ன
போலும்என்று உரைத்த போதும் புனைந்துரை பொதுமை பார்க்கின்
ஏலும்என்று இசைக்கின் ஏலா இதுவயிற் றியற்கை இன்னும் 791

யின் அடையாளங்களை(ச் சொல்லுகிறேன்) கேள். வேறு கொண்டிருந்து - தனியே அழைத்துச் சென்று. 785-ம் பாட்டு : பவளம் சீதையின் கால் விரல்களுக்கும், சந்திரர்கள் (மதியம்) நகங்களுக்கும் உவமை. மெய்ய - வடிவம் உடையவை. 788-ம் பாட்டு : நரம்பை - வீணையின் நரம்பு (களிலிருந்து பிறக்கும் இசையை).

சிங்கல்இல் சிறுகூ தாளி நந்தியின் திரள்பூச் சேர்ந்த
பொங்குபொற் றுளைஎன் றாலும் புல்லிய உவமைத் தாமால்
அங்கவள் உந்தி ஒக்கும் சுழிஎனக் கணித்த துண்டால்
கங்கையை நோக்கிச் சேறி கடலினும் நெடிது கற்றோய் 792

மயிர்ஒழுக் கெனஒன் றுண்டால் வல்லிசேர் வயிற்றின் மற்றென்
உயிர்ஒழுக்கு அதற்கு வேண்டும் உவமைஒன்று உரைக்க வேண்டில்
செயிர்இல்சிற் றிடையாய் உற்ற சிறுகொடி நுடக்கம் தீரக்
குயில்வுறுத்து அமைய வைத்த கொள்கொம்பென் றுணர்ந்து கோடி.

அல்லிஊன் றிடும்என் றஞ்சி அரவிந்தம் துறந்தாட்கு அம்பொன்
வல்லிமூன்று உளவால் கோல வயிற்றின்மற்று அவையும் மார
வில்லிமூன் றுலகின் வாழும் மாதரும் தோற்ற மெய்ம்மை
சொல்லிஊன் றியவாம் வெற்றி வரைஎனத் தோன்றும் அன்றே. 794

செப்பென்பென் கலசம் என்பென் செவ்விள நீரும் தேர்வென்
துப்பொன்று திரள்சூ தென்பென் சொல்லுவென் தும்பிக் கொம்பைத்
தப்பின்றிப் பகலின் வந்த சக்கர வாகம் என்பென்
ஒப்பொன்றும் முலைக்குக் காணேன் பலநினைந்து உலைவென் இன்னும்.

கரும்புகண் டாலும் மாலைக் காம்புகண் டாலும் ஆவி
அரும்புகண் தாரை சோர அழுங்குவேன் அறிவ துண்டோ
சுரும்புகண்டு ஆலும் கோதை தோள்இணைக்கு உவமை சொல்ல
இரும்புகண் டனைய நெஞ்சம் எனக்கிலை இசைப்ப தென்னே. 796

முன்கையே ஒப்ப தொன்றும் உண்டுமூ வுலகத் துள்ளும்
என்கையே இழுக்கம் அன்றே இயம்பினும் காந்தள் என்றல்
வன்கையாழ் மணிக்கை என்றல் மற்றொன்றை உணர்த்தல் அன்றி
நன்கையாள் தடக்கை ஆமோ நலத்தின்மேல் நலம்உண் டாமோ. 797

ஏலக்கோடு ஈன்ற பிண்டி இளந்தளிர் கிடக்க யாணர்க்
காலைக்கற் பகத்தின் காமர் குழைபடும் கமல மென்பூ
நூலொக்கும் மருங்கு லாள்தன் நூபுரம் புலம்பும் கோலக்
காலுக்குத் தொலையும் என்றால் கையொப்பின் வைக்க லாமோ. 798

வெள்ளிய முறுவல் செவ்வாய் விளங்கிழை இளம்பொற் கொம்பில்
வள்உகிர்க்கு உவமை நம்மால் மயர்வற வகுக்கல் ஆமோ
எள்ளுதிர் நீரே மூக்கை என்றுகொண்டு இவறி என்றும்
கிள்ளைகள் முருக்கின் பூவைக் கிழிக்குமே உரைக்க லாமோ. 799

792-ம் பாட்டு: பொற்றுளை - அழகிய துளை. 794-ம் பாட்டு: பொன்வல்லி மூன்று - பொற்கொடியின் வடிவத்தில் மூன்று மடிப்புக்கள். 798-ம் பாட்டு: காலைக் கற்பகத்தின் காமர் குழைபடும்- காலை நேரத்தில் கற்பகமரத்தில் செழித்துத் தோன்றும் அழகிய தளிர்கள் தோற்று வாடிவிடும். கமலமென்பூ நூலொக்கும் - தாமரை நூல் போன்று மெல்லிய.

அங்கையும் அடியும் கண்டால் அரவிந்தம் நினையு மாபோல்
செங்கதிர் சிதறி நீலம் செருக்கிய தெய்வ வாட்கண்
மங்கைதன் கழுத்தை நோக்கி வளர்இளங் கமுகும் வாரிச்
சங்கமும் நினைதி யாயின் அதுஎன்று துணிதி தக்கோய். 800

பவளமும் கிடையும் கொவ்வைப் பழமும்பைங் குமுதப் பூவும்
துவள்வில இலவம் கோபம் முருக்கென்றித் தொடக்கம் சாலத்
தவளம்என் றுரைக்கும் வண்ணம் சிவந்துதேன் ததும்பு மாயின்
குவளையங் கண்ணி வண்ண வாய்அது குறியும் அஃதே. 801

சிவந்ததோர் அமிழ்தம் இல்லை தேன்இல்லை உளஎன் றாலும்
கவர்ந்தபோ தன்றி உள்ளம் நினைப்பஓர் களிப்பு நல்கா
பவர்ந்தவாள் நுதலி னாள்தன் பவளவாய்க்கு உவமை பாவித்து
உவந்தபோது உவந்த வண்ணம் உரைத்தபோது உரைத்த தாமோ.

முல்லையும் முருந்தும் முத்தும் முறுவல்என்று உரைத்த போது
சொல்லையும் அமிழ்தும் பாலும் தேனும்என்று உரைக்கத் தோன்றும்
அல்லதொன்று ஆவ தில்லை அமிழ்திற்கும் உவமை உண்டோ
வல்லையேல் அறிந்து கோடி மாறிலா வாறு சான்றோய். 803

ஓதியும் எள்ளும் தொள்ளைக் குமிழும்மூக்கு ஒக்கும் என்றால்
சோதிசெய் பொன்னும் மின்னும் மணியும்போல் துளங்கித் தோன்று
ஏதுவும் இல்லை வல்லார் எழுதுவார்க்கு எழுத ஒண்ணு
நீதியை நோக்கி நீயே நினைதியால் நெடிது காண்பாய். 804

வள்ளைகத் தரிகை வாம மயிர்வினைக் கருவி என்னப்
பிள்ளைகள் உரைத்த ஒப்பைப் பெரியவர் உரைக்கில் பித்தாம்
வெள்ளிவெண் தோடு செய்த விழுத்தவம் விளைந்த தென்றே
உள்ளுதி உலகுக் கெல்லாம் உவமைக்கும் உவமை உண்டோ. 805

பெரியவாய்ப் பரவை ஒவ்வா பிறிதொன்று நினைந்து பேச
உரியவாய் ஒருவர் உள்ளத்து ஒடுங்குவ அல்ல உண்மை
தெரியஆ யிரக்கால் நோக்கின் தேவர்க்கும் தேவன் என்னக்
கரியவாய் வெளிய ஆகும் வாள்தடங் கண்கள் அம்மா. 806

கேள்ஒக்கின் அன்றி ஒன்று கிளத்தினல் கீழ்மைத் தாமே
கோள்ஒக்கும் என்னின் அல்லால் குறிஒப்பக் கூறிற் றன்றால்
வாள்ஒக்கும் வடிக்க ணாள்தன் புருவத்துக் குவமை வைக்கில்
தாள்ஒக்க வளைந்து நிற்ப இரண்டில்லை அனங்க சாபம். 807

800-ம் பாட்டு : அது - சீதையின் கழுத்துத்தான் அது. 802-ம் பாட்டு: உவந்தபோது.........உரைத்ததாமோ - மகிழ்ந்த போது, மகிழ்ந்தவிதமாகக் கூறினால், அது சரியாகக் கூறிவிட்டதாக ஆகுமோ. 805-ம் பாட்டு: உவமைக்கும் உவமை உண்டோ - அழகிய காதுகளுக்கு உவமையாகச் சொல்லப்படும் சீதையின் காதுகளுக்கு வேறு உவமை உண்டோ. உவமைக்கு உவமை கூறுவது இலக்கணப்படி ஒரு குற்றம் என்பதும் இங்கே கவனிக்கத் தக்கது. 806-ம் பாட்டு: தேவன் - திருமால். கரியவாய் வெளிய ஆகும் - சீதையினுடைய கண்ணின் கருவிழி திருமாலுக்கும், வெள்ளைவிழி

நன்னுளின் நளினம் தானும் நளிர்அடி நுதலை நாடிப்
பன்னுளும் பன்னி ஆற்று மதியெனும் பண்ப தாகி
முன்னுளில் முளைவெண் திங்கள் முழுநாளும் குறைவே யாகி
எந்நாளும் வளரா தென்னின் இறைஒக்கும் இயல்பிற் றுமே. 808

வனைபவர் இல்லை யன்றே வனத்துள்நாம் வந்த பின்னை
அனையன எனினும் தாம்தம் அழகுக்கோர் அழிவுண் டாகா
வினைசெயக் குழன்ற அல்ல விதிசெய விளைந்த நீலப்
புனைமணி அளகம் என்றும் புதுமையாம் உவமை பூணு. 809

கொண்டலின் குழவி ஆம்பல் குனிசிலை வள்ளை கொற்றக்
கெண்டைஒண் தரளம் என்றுஇக் கேண்மைய கிடந்த திங்கள்
மண்டலம் வதனம் என்று வைத்தனன் விதியோன் நீஅப்
புண்டரி கத்தை உற்ற பொழுதுஅது பொருந்தித் தேர்வாய். 810

காரினைக் கழித்துக் கட்டிக் கள்ளினேடு ஆவி ஊட்டி
பேரிருள் பிழம்பு தோய்த்து நெறிஉறீஇப் பிறங்கு கற்றைச்
சோர்குழல் தொகுதி என்று சும்மைசெய் தனைய தம்மா
நேர்மையைப் பருமை செய்த நிறைநறுங் கூந்தல் நீத்தம். 811

புல்லிதழ் கமலத் தெய்வப் பூவிற்கும் உண்டு பொற்பின்
எல்லையில் மதிக்கும் உண்டாம் களங்கம்என்று உரைக்கும் ஏதம்
அல்லவும் சிறிது குற்றம் அகன்றில அன்னம் அன்ன
நல்லிய லாளுக் கெல்லாம் நலன்அன்றிப் பிறிதுண் டன்றுல். 812

மங்கையர்க்கு ஓதி வைத்த இலக்கணம் அன்ன வாசப்
பங்கயத் தாட்கும் ஐயா நிரம்பல பற்றி நோக்கின்
செங்கயல் கருங்கண் செவ்வாய்த் தேவரும் வணங்கும் தெய்வக்
கொங்கையக் குயிலுக்கு ஒன்றும் குறைவிலை குறியும் அஃதே. 813

குழல்படைத்து யாழைச் செய்து குயிலொடு கிளியும் கூட்டி
மழலையும் பிறவும் தந்து வடித்தகை மலரின் மேலான்
இழைபொரு முலையி னுள்தன் இன்சொற்கள் இயையச் செய்தான்
பிழைஇலது உவமை காட்டப் பெற்றிலன் பெறுங்கொல் இன்னும்.

அவன் பள்ளி கொள்ளும் பாற்கடலுக்கும் உவமை. 808-ம் பாட்டு: நளிர் அடி-குளிர்ச்சி பொருந்திய பாதங்கள் (உடைய சீதையின்). 809-ம் பாட்டு: வனைபவர் - கூந்தலை வாரி அலங்கரிப்பவர். அனை யன - அப்படி வாரப்படாமல் இருந்த போதிலும். வினை செய - அலங்காரமாக வாரிவிட. குழன்ற அல்ல - நெளிவும் சுருளும் உண் டானவை அல்ல. விதிசெய விளைந்த - பிரமனின் படைப்பிலேயே நெளிவும் சுருளும் உண்டாகியிருக்கின்றன. 810-ம் பாட்டு: கொண் டலின் குழவி, கூந்தலுக்கும் - ஆம்பல் மலர், வாய்க்கும் - குனிசிலை, புருவங்களுக்கும் - வள்ளை, காதுக்கும் - கெண்டை, கண்களுக்கும் - தரளம், பற்களுக்கும் உவமை. 811-ம் பாட்டு: நேர்மையை...... நீத்தம்-நுண்ணியதாக இருப்பவற்றைப் பருமனுகச் செய்த நிறைந்த கூந்தல் தொகுதி. பல நுண்ணிய மயிர்கள் ஒன்று சேரும்போது, அங்கே நுண்மை மறைந்து பருமன் தோன்றும். 812-ம் பாட்டு:

வான்நின்ற உலகம் மூன்றும் வரம்பின்றி வளர்ந்த வேனும்
நாநின்ற சுவைமற் றென்றே அமிழ்தன்றி நல்ல தில்லை.
மீன்நின்ற கண்ணி னாள்தன் மென்மொழிக்கு உவமை வேண்டின்
தேன்ஒன்றே அமிழ்தம் ஒன்றே அவைசெவிக்கு இன்பம் செய்யா.

பூவரு மழலை அன்னம் புனைமடப் பிடிஎன் றின்ன
தேவரும் மருளத் தக்க செலவின எனினும் தேறேன்
பாவரும் கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்த பத்தி
நாவரும் கிளவிச் செவ்வி நடைவரும் நடையள் நல்லோய். 816

எந்நிறம் உரைக்கேன் மாவின் இளந்தளிர் முதிரும் மற்றைப்
பொன்னிறம் கருகும் என்றால் மணிநிறம் உவமை போதா
மின்நிறம் நாணிஎங்கும் வெளிப்படா ஒளிக்கும் வேண்டின்
தன்நிறம் தானே ஒக்கும் மலர்நிறம் சமழ்க்கும் அன்றே. 817

மங்கையர் அவளை ஒப்பார் மற்றுளர் இல்லர் என்னும்
சங்கைஇல் உள்ளம் தானே சான்றெனக் கொண்டு சான்றோய்
அங்கவள் நிலைமை எல்லாம் அளந்தறிந்து அருகு சார்ந்து
திங்கள்வாள் முகத்தி னாட்குச் செப்பெனப் பின்னும் செப்பும். 818

வேறு

இராமன் கூறிய அடையாளங்கள்

முன்னை நாள் முனியொடும் முதியநீர் மிதிலைவாய்ச்
சென்னிநீள் மாலையான் வேள்விகா ணியசெல
அன்னம்ஆ டும்துறைக்கு அருகுநின் றாள்தனைக்
கன்னிமா டத்திடைக் கண்டதும் கழறுவாய். 819

வரைசெய்தாள் வில்இறுத் தவன்அம்மா முனியொடும்
விரசினான் அல்லனேல் விடுவன்யான் உயிர்எனாக்
கரைசெயா வேலையின் பெரியகற் பினள்தெரிந்து
உரைசெய்தாள் அஃதெலாம் உணரநீ உரைசெய்வாய். 820

சூழிமால் யானையின் துணைமருப்பு இணைஎனக்
கேழ்இலா வனமுலைக் கிரிசுமந்து இடைவதோர்
வாழிவான் மின்இளங் கொடியின்வந் தாளைஅன்று
ஆழியான் அரசவைக் கண்டதும் அறைகுவாய். 821

அல்லவும் சிறிது குற்றம் அகன்றில-தாமரையும் சந்திரனும் அல்லாத மற்ற அழகுப்பொருள்களிலும் குற்றம் நீங்கிய பாடில்லை. 815-ம் பாட்டு: வான் நின்ற உலகம் மூன்றும்-சுவர்க்கம் முதலான (பூலோகம், பாதாளம் ஆகியவை உள்ளிட்ட) மூன்று உலகங்களும். 819-ம் பாட்டு: முனி - விசுவாமித்திரன். மாலையான் - சனகன். அருகுநின்றாள் - சீதை. 820-ம் பாட்டு: வில் இறுத்தவன் அம்மாமுனியொடும் விரசினான் அல்லனேல் - சிவதனுசை ஒடித்தவன், அந்த விசுவாமித்திர முனிவனோடு வந்தவனல்லாவிட்டால். 821-ம் பாட்டு: ஆழியான்-ஆக்ஞா சக்கரம் கொண்ட சனகன்.

முன்புநான் அறிகிலா முளிநெடுங் கானிலே
என்பினே போதுவான் நினைதியோ ஏழைநீ
இன்பமாய் ஆருயிர்க்கு இனியைஆ யினை இனித்
துன்பமாய் முடிதியோ என்றதும் சொல்லுவாய். 822

ஆனபோர் அரசிழந்து அடவிசேர் வாய்உனக்கு
யான்அலா தனஎலாம் இனியவோ இனிஎனு
மீன்உலாம் நெடுமலர்க் கண்ணினீர் விழவிழுந்து
ஊன்இலா உயிரின்வெந்து அயர்வதும் உரைசெய்வாய். 823

மல்லல்மா நகர்துறந்து ஏகும்நாள் மதிதொடும்
கல்லின்மா மதில்மணிக் கடைகடந் திடுதல்முன்
எல்லைதீர் வரியவெங் கானம்யா தோஎனச்
சொல்லினுள் அஃதெலாம் உணரநீ சொல்லுவாய். 824

அனுமன் புறப்படுதல்

இனையவாறு உரைசெயா இனிதின்ஏ குதிஎனு
வனையுமா மணிநன்மோ திரம்அளித்து அறிஞநின்
வினையெலாம் முடிகெனு விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினுன் அருளொடும் போயினுன். 825

அங்கதக் குரிசிலோடு அடுசினத்து உளவராம்
வெங்கதத் தலைவரும் விரிகடற் படையொடும்
பொங்குவில் தலைவரைத் தொழுதுமுன் போயினுர்
செங்கதிர்ச் செல்வனைப் பணிவுறும் சென்னியார். 826

13. பிலம்புக்கு நீங்கு படலம்

[சீதையைத் தேடிப் புறப்பட்ட வானர வீரர்கள் ஒரு குகைக்குள் புகுந்து மீண்ட செய்தியைக் கூறும் பகுதி]

போயினுர் போனபின் புறநெடுந் திசைகள்தோறு
ஏயினுன் இரவிகா தலனும்ஏ யினபொருட்கு
ஆயினுர் அவரும்அங்கு அன்னநாள் அவதியில்
தாயினுர் உலகினைத் தகைநெடுந் தானையார். 827

குன்றிசைத் தனஎனக் குலவுதோள் வலியினுர்
மின்திசைத் திடும்இடைக் கொடியைநா டினர்விராய்
வன்திசைப் படருமாறு ஒழியவண் தமிழுடைத்
தென்திசைச் சென்றுளார் திறன்எடுத் துரைசெய்வாம். 828

825-ம் பாட்டு: உரைசெயா - (இராமன்) கூறி. கழலினுன் - அனுமான். 826-ம் பாட்டு: செங்கதிர்ச் செல்வன் - சூரியனுடைய மகனுன சுக்கிரீவன். 827-ம் பாட்டு: ஏயினபொருட்கு - ஏவப்பட்ட காரியத்துக்கு, சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு. அன்ன நாள் அவதி - ஒரு மாதத் தவணை.

சிந்துரா கத்தொடும் திரள்மணிச் சுடர்செறிந்து
அந்திவா னத்தினின்று அவிர்தலான் அரவினேடு
இந்துயாறு எய்தலால் இறைவனேடு ஒத்திடும்
விந்தநா கத்தின்மாடு எய்தினர் வெய்தினல். 829

அந்நெடுங் குன்றமோடு அவிர்மணிச் சிகரமும்
பொன்நெடுங் கொடுமுடிப் புரைகளும் புடைகளும்
நன்னெடுந் தாழ்வரை நாடினர் நவையிலார்
பன்னெடுங் காலமாம் என்னஓர் பகலிடை. 830

மல்லல்மா ஞாலம்ஓர் மறுவுரு வகையின்அச்
சில்லல்ஓ தியைஇருந் துறைவிடம் தேடுவார்
புல்லினர் உலகினைப் பொதுவிலா வகையினல்
எல்லைமா கடல்களே ஆகுமாறு எய்தினர். 831

விண்டுபோய் இழிவர்மேல் நிமிர்வர்விண் படரவேர்
உண்டமா மரனின்அம் மலையின்வாய் உறையும்நீர்
மண்டுபார் அதனின்வாழ் உயிர்கள்அம் மதியினர்
கண்டிலா தனஅயன் கண்டிலா தனகொலாம். 832

வேறு

ஏகினர் யோசனை ஏழொடு ஏழுபார்
சேகறத் தென்திசை கடிது செல்கின்றூர்
மேகமா லையினெடும் விரவி மேதியின்
நாகுசேர் நருமதை யாறு நண்ணினர். 833

அன்னம்ஆடு இடங்களும் அமரர் நாடியர்
துன்னியாடு இடங்களும் துறக்கம் மேயவர்
முன்னிஆடு இடங்களும் சுரும்பு மூசுதேன்
பன்னிஆடு இடங்களும் பரந்து சுற்றினர். 834

பெறல்அருந் தெரிவையை நாடும் பெற்றியார்
அறல்நறும் கூந்தலும் அளக வண்டுசூழ்
நிறைநறுந் தாமரை முகமும் நித்தில
முறுவலும் காண்பரால் முழுதும் காண்கிலார். 835

செருமத யாக்கையர் திருக்கில் சிந்தையர்
தருமத யாஇவை தழுவும் தன்மையர்
பொருமத யானையும் பிடியும் புக்குஉழல்
நருமதை யாம்எனும் நதியை நீங்கினர். 836

தாமகூ டத்திரைத் திர்த்த சங்கமும்
நாமகூ டப்பெருந் திசையை நல்கிய
வாமகூ டச்சுடர் மணிவ யங்குறும்
ஏமகூ டத்தடங் கிரியை எய்தினர். 837

831-ம் பாட்டு: ஓதியை இருந்துறைவிடம் - சீதை இருந்து தங்கியுள்ள இடம். 832-ம் பாட்டு: அயன் கண்டிலாதன - பிரமன் படைக்காதவை. 837-ம் பாட்டு: நாமகூடப் பெருந்திசையை

மாடுறு கிரிகளும் மரனும் மற்றவும்
சூடுறு பொன்னெனப் பொலிந்து தோன்றுறப்
பாடுறு சுடரொளி பரப்பு கின்றது
வீடுறும் உலகினும் விளங்கும் மெய்யது. 838

பறவையும் பல்வகை விலங்கும் பாடுஅமைந்து
உறைவன கனகநுண் தூளி போர்த்தலால்
நிறைநெடு மேருவைச் சேர்ந்த நீரவாய்ப்
பொறைநெடும் பொன்னொளி மிளிரும் பொற்பது. 839

பரவிய பராகநுண் கனகம் பாடுற
எரிசுடர்ச் செம்மணி ஈட்டத் தோடும்வீழ்
அருவியந் திரள்களும் அலங்கு தீயிடை
உருகுபொன் பாய்வபோன்று ஒழுகு கின்றது. 840

விஞ்சையர் பாடலும் விசும்பின் வெள்வளைப்
பஞ்சின்மெல் அடியினர் ஆடற் பாணியும்
குஞ்சர முழக்கமும் குமுறு பேரியின்
மஞ்சினம் முரற்றலும் மயங்கும் மாண்பது. 841

அனையது நோக்கினர் ஆம்இது தாம்அயில்
இனையவேல் இராவணன் இருக்கும் வெற்பெனும்
நினைவினர் உவந்துயர்ந்து ஓங்கு நெஞ்சினர்
சினம் மிகக் கனற்பொறி சிந்து செங்கணர். 842

இம்மலை காணுதும் ஏழை மானைஅச்
செம்மலை நீக்குதும் சிந்தைத் தீதென
விம்மல்உற்று உவகையின் விளங்கும் உள்ளத்தர்
அம்மலை ஏறினர் அச்சம் நீங்கினர். 843

இரிந்தன கரிகளும் யாளி ஈட்டமும்
விரிந்தகோ ளரிகளும் வெருவி நீங்கின
திரிந்தனர் எங்கணும் திருவைக் காண்கிலார்
பிரிந்தனர் பிறிதெனப் பெயரும் பெற்றியார். 844

ஐம்பதிற் றிரட்டிகா வதத்தி னுல்அகன்று
உம்பரைத் தொடுவதொத்து உயர்வின் ஓங்கிய
செம்பொன்நற் கிரியைஓர் பகலின் தேடினர்
கொம்பினைக் கண்டிலர் குப்புற் றேகினர். 845

வெள்ளம்ஓர் இரண்டென விரிந்த சேனையைத்
தெள்ளுநீர் உலகெலாம் திரிந்து தேடிநீர்
எள்ளரும் மகேந்திரத்து எம்மின் கூடும்என்று
உள்ளினர் உயர்நெடும் ஓங்கல் நீங்கினர். 846

நல்கிய-நாமம் கூடு அப் பெருந்திசை: புகழ் கூடிய அந்தப் பெரிய திசையைக் காக்கின்ற. "நாமம் கூடு" என்பது "நாம கூடு" என்று ஆயிற்று என்பர். 844-ம் பாட்டு: பிறிதென - (இது இராவணன் இருக்கும் மலையல்ல,) வேறொரு மலை என்று.

மாருதி முதலிய வயிரத் தோள்வயப்
போர்கெழு வீரரே குழுமிப் போகின்றார்
நீர்எனும் பெயரும்ஒன் றின்றி நீள்நெடும்
சூரியன் வெருவும்ஓர் சுரத்தை நண்ணினர். 847

பாலைவன வர்ணனை

புள்அடை யாவிலங்கு அரிது புல்லொடும்
கள்ளுடை மரன்இல கல்லும் தீய்ந்துகும்
உள்ளிடை யாவும்நுண் பொடியொடு ஓடிய
வெள்ளிடை அல்லதுஒன்று அரிதுஅவ் வெஞ்சுரம். 848

நன்புலம் நடுக்குற உணர்வு நைந்துஅறப்
பொன்பொலி யாக்கைகள் புழுங்கிப் பொங்குவார்
தென்புலத் தினில்எரி நரகில் ஒந்திய
என்பில்பல் உயிரென வெம்மை எய்தினர். 849

நீட்டிய நாவினர் நிலத்தில் தீண்டுதோறு
ஊட்டிய வெம்மையால் உலையும் காலினர்
காட்டினும் காய்ந்துதம் காயம் தீய்தலால்
சூட்டுஅகல் மேல்எழு பொரியின் துள்ளினர். 850

ஒதுங்கலாம் நிழல்இறை காண்கி லாதுஉயிர்
பிதுங்கல்ஆம் உடலினர் முடிவில் பீழையர்
பதங்கள்தீப் பருகிடப் பதைக்கின் றார்பல
விதங்களால் நெடும்பில வாயில் மேவினர். 851

வானர வீரர்கள் குகையினுள் செல்லுதல்

மீச்செல அரிதுஇனி விளியின் அல்லது
தீச்செலவு ஒழியவும் தடுக்கும் திண்பில
வாய்ச்செலல் நன்றென மனத்தின் எண்ணினர்
போய்ச்செலவு அறிதும்என்று அதனில் போயினர். 852

அக்கணத்து அப்பிலத்து அகணி எய்தினர்
திக்கினோடு உலகுறச் செறிந்த தேங்கிருள்
எக்கிய கதிரவற்கு அஞ்சி ஏமுறப்
புக்கதே அனையதோர் புரைபுக் கெய்தினர். 853

எழுகிலர் கால்எடுத்து ஏகும் எண்இலர்
வழியுள தாம்எனும் உணர்வு மாறினர்
இழுகிய நெய்யெனும் இருட் பிழம்பினுள்
முழுகிய மெய்யராய் உயிர்ப்பு முட்டினர். 854

நின்றனர் செய்வதோர் நிலைமை ஓர்கிலர்
பொன்றின ராம்எனப் பொருமு புந்தியர்
வன்திறல் மாருதி வல்லை யோஎமை
இன்றிது காக்என்று இரந்து கூறினர். 855

848-ம் பாட்டு: கள்ளுடை மரன் - (வறண்ட நிலத்திலும் வாடாது நிற்கும்) பனைமரம்.

உய்வுறுத் துவென்மனம் உலேயல் ஊழின்வால்
மெய்யுறப் பற்றுமின் விடுகி லீர்என
ஐயன்அக் கணத்தினில் அகலும் நீள்நெறி
கையினில் தடவிவெங் காலின் ஏகினன். 856

பன்னிரண்டு ஓசனே படர்ந்த மெய்யினன்
மின்இரண் டனேயகுண் டலங்கள் வில்இடத்
துன்இருள் தொலேந்திடத் துரிதத்து ஏகினன்
பொன்நெடுங் கிரிகள்போல் பொலிந்த தோளினன். 857

கண்டனர் கடிநகர் கமலத்து ஒண்கதிர்
மண்டலம் மறைந்துறைந் தனேய மாண்பது
விண்தலம் நாணுற விளங்கு கின்றது
புண்டரி கத்தவள் வதனம் போன்றது. 858

கற்பகக் கானது கமலக் காடது
பொற்பெருங் கோபுரப் புரிசை புக்கது
அற்புதம் அமரரும் எய்தல் ஆவது
சிற்பியாம் மயன்மனம் வருந்திச் செய்தது. 859

இந்திர நகரமும் இணேஇ லாதது
மந்திர மணியினில் பொன்னில் மண்ணினில்
அந்தரத்து எழுசுடர் அவைஇன் றுயினும்
உந்தரும் இருள்துரந்து ஒளிர நிற்பது. 860

புவிபுகழ் சென்னிபே ரமலன் தோள்புகழ்
கவிகள்தம் மனேஎனக் கனக ராசியும்
சவியுடைத் தூசும்மென் சாந்தும் மாலேயும்
அவிர்இழைக் குப்பையும் அளவி லாதது. 861

பயில்குரல் கிண்கிணிப் பாதப் பாவையர்
இயல்புடை மைந்தர்கள் இயக்கு இலாமையால்
துயில்வுறு நாட்டமும் துடிப்ப தொன்றிலா
உயிரிலா ஓவியம் என்ன ஒப்பது. 862

அமிழ்துலே அயினியை அடுத்த உண்டியும்
தமிழ்நிகர் நறவமும் தனித்தண் தேறலும்
இமிழ்கனிப் பிறக்கமும் பிறவும் இன்னன
கமழ்வுறத் தோன்றிய கணக்கில் கொட்பது. 863

861-ம் பாட்டு : சென்னி - சோழ மன்னர்களுக்குரிய பெயர்களில் ஒன்று; அமலன் என்பதும் ஒரு பெயராகும். இது கம்பரின் காலத்தை ஆராய்ந்தவர்களால் கவனிக்கப்பட்ட ஒரு பாட்டு என்பதற்காக, ''சென்னி பேரமலன்'' என்பதற்குப் பதிலாகக் காணப்படும் பிற பாடங்களேயும் இங்கே கொடுக்கிறேம் : சென்னி போரமலன், சென்னியோனமலன், சென்னிபேரபயன், சென்னியாதித்தன், சென்னியோர்ப் புகழும்.

வேறு

கன்னிநெடு மாநகரம் அன்னதெதிர் கண்டார்
இந்நகர மாம்இகல் இராவணனது ஊர்என்று
உன்னிஉரை யாடினர் உவந்தனர் வியந்தார்
பொன்னின்நெடு வாயிலதன் ஊடினிது புக்கார். 864

புக்கநக ரத்தினிது நாடுதல் புரிந்தார்
மக்கள்கடை தேவர்தலை வானுலகில் வையத்து
ஒக்கஉறை வோர்உருவ ஓவியம் அலால்மற்று
எக்குறியின் உள்ளவும் எதிர்ந்திலர் திரிந்தார். 865

வாவியுள பொய்கையுள வாசமணம் நாறும்
காவும்உள காவிவிழி யார்கள்மொழி என்னக்
கூவும்இள மென்குயில்கள் பூவைகிளி கோலத்
தூவிமட அன்னம்உள தோகையர்கள் இல்லை. 866

ஆயநக ரத்தின்இயல்பு உள்ளுற அறிந்தார்
மாயைகொல் எனக்கருதி மற்றுநினை வுற்றார்
தீயபில னுள்பிறவி சென்றதென நின்றார்
தூயது துறக்கம்என நெஞ்சுதுணி வுற்றார். 867

இறந்திலம் இதற்குரியது எண்ணியிலம் ஏதும்
மறந்திலம் அயிர்ப்பினொடு இமைப்புள மயக்கம்
பிறந்தவர் செயற்குரிய செய்தல்பிழை அன்றோ
திறம்தெரிவது என்என இசைத்தனர் திகைத்தார். 868

சாம்பன்அவன் ஒன்றுரைசெய் வான்எழு சலத்தால்
காம்பனைய தோளியை ஒளித்தபடு கள்வன்
நாம்புக அமைத்தபொறி நன்றுமுடி வின்றால்
ஏம்பல்இனி மேலைவிதி யால்முடியும் என்றான். 869

இன்றுபிலன் ஈதுஇடையின் ஏறரிதெ னில்பார்
தின்றுசக ரர்க்கதிக மாகிநனி சேறும்
அன்றதெனில் வஞ்சனை அரக்கரை அடங்கக்
கொன்றெழுதும் அஞ்சல்என மாருதி கொதித்தான். 870

868-ம் பாட்டு : இறந்திலம்......இமைப்புள - (இது சுவர்க்கம் என்றால், சுவர்க்கத்துக்கு வருமுன் வழக்கம்போல நாம்) இறக்கவில்லையே! இங்கு வரவேண்டுமென்று நினைக்கக்கூட இல்லையே! பழைய செய்திகள் எவற்றையும் மறக்கவில்லையே! மனத்தில் சந்தேக உணர்ச்சி இருக்கிறதே! கண் இமைக்கிறதே! 869-ம் பாட்டு : சாம்பன் - சாம்பவான். தோளி - சீதை. கள்வன் - இராவணன். 870-ம் பாட்டு : பார் தின்று சகரர்க்கு அதிகமாகி நனிசேறும் - சமுத்திரம் தோண்டிய சகரர்களைவிட அதிகமாக பூமியைத் தோண்டி, அப்பால் போய்விடுவோம்.

வானரவீரர்கள் சுயம்பிரபையைக் காணுதல்

மற்றவரும் மற்றது மனக்கொள வலித்தார்
உற்றனர் புரத்திடைஅவ் ஒண்சுடரி னுள்ஓர்
நற்றவம் அனைத்தும்உரு நண்ணிஒளி பெற்ற
கற்றைவிரி பொற்சடையி ளுளைஎதிர் கண்டார். 871

மருங்கலச வற்கலை வரிந்துவரி வாளம்
பொரும்கலசம் ஒக்குமுலை மாசுபுடை பூசிப்
பெருங்கலை மதித்திரு முகத்தள்பிறழ் செங்கேழ்க்
கருங்கயல்க ளின்பிறழ்கண் மூக்கின்நுதி காண 872

தேர்அனைய அல்குல்செறி திண்கதலி செப்பும்
ஊருவினெடு ஒப்புற ஒடுக்கியுற ஒல்கும்
நேர்இடை சலிப்பற நிறுத்திநிமிர் கொங்கைப்
பாரமுள் ஒடுக்குற உயிர்ப்பிடை பரிப்ப 873

தாமரை மலர்க்குவமை சால்புறு தளிர்க்கைப்
பூமருவு பொற்செறி குறங்கிடை பொருந்தக்
காமம்முதல் உற்றபகை கால்தளர ஆசை
நாமம்அழி யப்புலனும் நல்லறிவு புல்க 874

நெறிந்துநிமிர் கற்றைநிறை ஒதிநெடு நீலம்
செறிந்துசடை உற்றது தலத்தின் நெறிசெல்ல
பறிந்துவினை பற்றற மனப்பெரிய பாசம்
பிரிந்துபெய ரக்கருணை கண்வழி பிறக்க 875

இருந்தனள் இருந்தவளை எய்தினர் இறைஞ்சா
அருந்ததி எனத்தகைய சீதைஅவ ளாகப்
பரிந்தனர் புகழ்ந்தனர் பணித்தகுறி பண்பின்
தெரிந்துணர்தி மற்றிவள்கொல் தேவிஎன லோடும் 876

எக்குறியொடு எக்குணம் எடுத்துஇவண் உரைக்கேன்
இக்குறி யுடைக்கொடி இராமன்மனை யாளோ
அக்குவடம் மூத்தமணி ஆரமதன் நேர்நின்று
ஒக்கும்எனின் ஒக்கும்என மாருதி உரைத்தான். 877

871-ம் பாட்டு: பொற்சடையினுளை - சுயம்பிரபை என்பவளை. 872-ம் பாட்டு: கண் மூக்குநுதி காண-(தவம் செய்வதால்) கண்கள் மூக்கின் நுனியைப் பார்த்துக்கொண்டிருக்க. 873-ம் பாட்டு: தேர் - தேர்த்தட்டு. கதலி செப்பும் - கதலி வாழையைப்போன்ற. உயிர்ப்பிடை பரிப்ப - சுவாசத்தை உள்ளேயே தாங்க. இந்தப் பாட்டு பிராணுயாமம் என்ற யோகத்தின் உறுப்பைக் குறிக்கிறது என்பர். 875-ம் பாட்டு: தலத்தின் நெறி செல்ல - தரையில் புரள. 877- பாட்டு: அக்குவடம்......ஒக்கும் எனின் - சங்கு மணி மாலையானது முத்துமாலையோடு ஒத்திருக்கும் என்றால்.

அன்னபொழு தின்கண்அவ் அணங்கும்அறி வுற்ருள்
முன்அனேயர் சேறல்முறை அன்றென முனிந்தாள்
துன்னரிய பொன்னகரி யின்உறைவிர் அல்லீர்
என்னவரவு யாவர்உரை செய்கென இசைத்தாள். 878

வேதனே அரக்கர்ஒரு மாயைவினே வித்தார்
சீதையை ஒளித்தனர் மறைத்தபுரை தேர்வுற்று
ஏதம்இல் அறத்துறை நிறுத்திய இராமன்
தூதர்உல கில்திரிதும் என்னும்உரை சொன்னூர். 879

என்றலும் இருந்தவள் எழுந்தனள் இரங்கிக்
குன்றனேய தாயஒரு பேருவகை கொண்டாள்
நன்றுவர வாகநட னம்புரிவன் என்ஞ
நின்றனள் நெடுங்கண்இணே நீர்கலுழி கொண்டாள். 880

எவ்வுழை இருந்தனன் இராமன்என யாணர்ச்
செவ்உழை நெடுங்கண்அவள் செப்பிடுத லோடும்
அவ்வுழை நிகழ்ந்ததனே ஆதியிஞெ டந்தம்
வெவ்விழைவில் சிந்தைநெடு மாருதி விரித்தான். 881

கேட்டவளும் என்னுடைய கேடில்தவம் இன்னே
காட்டியது வீடென விரும்பிநனி கான்நீர்
ஆட்டிஅமிழ் தன்னசுவை யின்அடிசில் அன்போடு
ஊட்டிமனன் உள்குளிர இன்னுரை உரைத்தாள். 882

மாருதியும் மற்றவள் மலர்ச்சரண் வணங்கி
யார்இந்நக ருக்கிறைவர் யாதுநின் இயற்பேர்
பார்புகழ் தவத்தினே பணித்தருளு கென்ருன்
சோர்குழலும் மற்றவஞெ டுற்றபடி சொன்னுள். 883

சுயம்பிரபை தனது வரலாற்றைக் கூறுதல்

நூல்முகம் நுனித்தநெறி நூறுவர நொய்தாய்
மேல்முகம் நிமிர்த்துவெயில் காலொடு விழுங்கா
மான்முக நலத்தவன் மயன்செய்த தவத்தால்
நான்முகன் அளித்துளதிம் மாநகரம் நல்லோய். 884

அன்னதிது தானவன் அரம்பையருள் ஆங்கோர்
நன்னுதலி ஞள்முலே நயந்தனன்அந் நல்லாள்
என்உயிர் அஞள்அவளே யான்அவன் இரப்பப்
பொன்னுலகி னின்றுஇயல் பிலத்திடை புணர்த்தேன். 885

884-ம் பாட்டு : (இதன் பொருள்) சாஸ்திரங்களிஸ் நுட்பமாகக் கூறியுள்ள பல வழிகளிலும், மேலே பார்த்தவண்ணம் வெயிலேயும் காற்றையும் உணவாக உட்கொண்டு, மானின் முகத்தையுடைய மயன் என்ற அசுரச்சிற்பி தவம்செய்ததன் பலஞக, பிரமன் இந்தப் பெரிய நகரத்தை அளித்தான். 885-ம் பாட்டு: தானவன் - மயன். நன்னுதலிஞள் - ஹேமை என்ற தேவமாது.

புணர்ந்தவளும் அன்னவனும் அன்றில்விழை போகத்து
உணர்ந்திலர் நெடும்பகல்இம் மாநகர் உறைந்தார்
கணங்குழையி ளுளொடுயர் காதல்ஒரு வாதுற்று
இணங்கிவரு பாசம்உடை யேன்உடன் இருந்தேன். 886

இருந்துபல நாள்கழியும் எல்லையினில் வல்லோய்
திருந்திழையை நாடிவரு தேவர்இறை சீறிப்
பெருந்திறலி ஞனைஉயிர் உண்டு பிழைஎன்றுஅம்
முருந்துநிகர் மூரல்நகை யாளையும் முனிந்தான். 887

முனிந்துஅவளை உற்றசெயல் முற்றும்மொழி கென்னக்
கனிந்ததுவர் வாயவளும் என்னைஇவள் கண்ணுய்
வனைந்துமுடி வுற்றதென மன்னனும்இ தெல்லாம்
நினைந்திவண் இருத்திநகர் காவல்நின தென்றான். 888

என்றலும் வணங்கிஇருள் ஏகும்நெறி எந்நாள்
ஒன்றுரை எனக்குமுடி வென்றுரை செயாமுன்
வன்திறலின் வானரம் இராமன்அருள் வந்தால்
அன்றுமுடி வாகும்இடர் என்றுஅவன் அகன்றான். 889

உண்ணஉள பூசஉள சூடஉள ஒன்றோ
வண்ணமணி ஆடைஉள மற்றும்உள பெற்றேன்
அண்ணல்அவை விட்டுஉமை அடைந்திடுதல் வேண்டி
எண்ணரிய பல்பகல் இருந்தவம் இழைத்தேன். 890

ஐயிருபது ஓசனை அமைந்தபிலம் ஐயா
மெய்யுளது மேலுலகம் ஏறும்நெறி காணேன்
உய்யும்நெறி உண்டுஉதவி னீர்எனின் உபாயம்
செய்யும்வகை சிந்தையில் நினைத்திர்சிறி தென்றாள். 891

அன்னது சுயம்பிரபை கூறஅனு மானும்
மன்னுபுலன் வென்றுவரு மாதவள் மலர்த்தாள்
சென்னியின் வணங்கிநனி வானவர்கள் சேரும்
பொன்னுலகம் ஈகுவன் நினக்கெனல் புகன்றான். 892

முழைத்தலை இருட்கடலின் மூழ்கிமுடி வேமைப்
பிழைத்துயிர் உயிர்க்கஅருள் செய்தபெரி யோனே
இழைத்திசெய லாயவினை என்றனர் இரந்தார்
வழுத்தரிய மாருதியும் அன்னது வலிப்பான். 893

887-ம் பாட்டு: தேவர் இறை - தேவேந்திரன். திறலினை - மயனை. 888-ம் பாட்டு: என்னை இவள் கண்ணுய் வனைந்து முடிவுற்றதென- "(ஆயிரம்) கண்களுடையவனே! இவள் செய்து முடித்த காரியம் இது" என்று என்னைக் குறிப்பிட்டுச் சொல்லவும். 889-ம் பாட்டு: இருள் ஏகும் நெறி எந்நாள் - இந்தக் கஷ்ட நிலை நீங்குவது எப்போது? 893-ம் பாட்டு: என்றனர் - என்று கூறினர் வானரர்கள்.

நடுங்கல்மின் எனும்சொலே நவின்று நகைநாற
மடங்கலின் எழுந்துமழை ஏறரிய வானத்து
ஒடுங்கல்இல் பெருந்தவன் உயர்ந்தவர் உகப்ப
நெடுங்கைகள் பெயர்த்துநெடு வானுற நிமிர்ந்தான். 894

எருத்துயர் சுடர்ப்புயம் இரண்டும் எயிறென்ன
மருத்துமகன் அப்படி இடந்துற வளர்ந்தான்
கருத்துநிமிர் கண்ணின்எதிர் கண்டவர் கலங்க
உருத்துலகு எடுத்தகரு மாவினையும் ஒத்தான். 895

மாவடிவு டைக்கமல நான்முகன் வகுக்கும்
தூவடிவு டைச்சுடர்கொள் விண்தலே தொளேக்கும்
மூவடி குறித்துமுறை ஈரடி முடித்தான்
பூவடி வுடைப்பொருவில் சேவடி புரைந்தான். 896

ஏழிருப தோசனே இடந்துபடி யின்மேல்
ஊழ்உற எழுந்துஅதனே உம்பரும் ஒடுங்கப்
பாழிநெடு வன்பிலனுள் நின்றுபடர் மேல்பால்
ஆழியின் எறிந்தனுமன் மேகம்என ஆர்த்தான். 897

அனைவரும் குகையிலிருந்து வெளியே வருதல்

இன்றும்உள மேல்கடல் இயக்கில்பில தீவாய்
நின்றுநிலே பெற்றுளது நீள்நுதலி யோடும்
குன்றுபுரை தோளவர் எழுந்துநெறி கொண்டார்
பொன்திணி விசும்பினிடை நன்னுதலி போனுள். 898

மேருவரை மாமுலேயள் மென்சொலினள் விஞ்சு
மாருதி யினைப்பல உவந்துமகிழ் வுற்றே
ஏர்உறு சுயம்பிரபை ஏமைநெறி எய்தத்
தாருவளர் பொற்றல னிடைக்கடிது சார்ந்தாள். 899

895-ம் பாட்டு: அப்படி இடந்துற வளர்ந்தான் - குகையின் மேல் பரப்பிலுள்ள பூமியைப் பிளந்துகொண்டு மேலே வளர்ந்தான். கருமா - கரிய மிருகமான பன்றி: வராக அவதாரம். 896-ம் பாட்டு: மூவடி.........புரைந்தான் - மாவலியிடம் மூன்று அடி மண் கேட்டு, இரண்டு அடியால் பூமியையும் விண்ணேயும் அளந்து முடித்த திருமாலின் (வாமனுவதாரத்தின்) மலர்போன்ற பாதத்தைப்போல அனுமான் ஆகாயத்தைத் தொட்டு வளர்ந்து நின்றுன். 897-ம் பாட்டு: அதனே - குகையினுள் இருந்த நகரத்தை. 898-ம் பாட்டு: இயக்கில் - ''இலக்கில்'' என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது. நீள்நுதலி, நன்னுதலி - சுயம்பிரபை. 899-ம் பாட்டு: மாமுலேயள் - சுயம்பிரபை. ஏமை - மயனின் மனேவியும், சுயம்பிரபையின் தோழியுமான ஹேமை. தாரு - கற்பக மரம்.

மாருதி வலித்தகைமை பேசிமற வோரும்
பாரிடை நடந்துபகல் எல்லைபட ரப்போய்
நீருடைய பொய்கையினின் நீள்கரை அடைந்தார்
தேருடை நெடுந்தகையும் மேலைமலை சென்றான். 900

14. ஆறுசெல் படலம்

[வானர வீரர்கள் வழி நடந்துசென்ற செய்தியைக் கூறும் பகுதி]

கண்டார் பொய்கைக் கண்ணகல் நன்னீர் கையார
உண்டார் தேனும் ஒண்கனி காயும் ஒருசூழல்
கொண்டார் அன்றே இன்துயில் கொண்ட குறிஉன்னித்
தண்டா வென்றித் தானவன் வந்தான் தகவில்லான். 901

துமிரன் என்ற அசுரனின் வர்ணனை

மலையே போல்வான் மாகடல் ஒப்பான் மறமுற்றக்
கொலையே போல்வான் கூற்றைநிகர்ப்பான் கொடுமைக்கோர்
நிலையே போல்வான் நீர்மைஇ லாதான் நிமிர்திங்கட்
கலையே போலும் காலஎயிற்றான் கனல்கண்ணான். 902

வேறு

கருவி மாமழை கைகள் தாவிமீது
உருவ மேனிசென்று உலவி ஒற்றலால்
பொருவில் மாரிமேல் ஒழுகு பொற்பினால்
சுருவி பாய்தரும் குன்ற மேஅனான். 903

வான வர்க்கும்மற் றவர்வ லிக்குநேர்
தான வர்க்குமே உரிய தன்மையான்
ஆன அக்கலன் அவனொடு ஆடவேறு
ஏன வர்க்கும்ஒன் றெண்ண ஒண்ணுமோ. 904

பிறங்கு பங்கியான் பெயரும் பெட்பினில்
கறங்கு போன்றுளான் பிசையும் கையினான்
அறங்கொள் சிந்தையார் நெறிசெல் ஆய்வினால்
உறங்கு வாரைவந்து ஒல்லை எய்தினான். 905

பொய்கை என்னதென் றுணர்ந்தும் புல்லியோர்
எய்தி னார்கள்யார் இதுஎ னாஎனா
ஐயன் அங்கதன் அலங்கல் மார்பினில்
கையில் மோதினான் கால னேஅனான். 906

900-ம் பாட்டு: தேருடை நெடுந்தகை - சூரியன். 901-ம் பாட்டு: தானவன் - துமிரன் என்ற அசுரன். 904-ம் பாட்டு: ஆட - போராட.

மற்ற மைந்தனும் உறக்கம் மாறினன்
இற்றுஇ வன்கொலாம் இலங்கை வேந்தென
எற்றி னனேநேர் எற்றி னன்அவன்
முற்றி னன்இகற்கு ஆதி மூர்த்தியான். 907

இடியுண்டு ஆங்கண்ஓர் ஓங்கல் இற்றதொத்து
அடியுண் டான்தளர்ந்து அலறி வீழ்தலும்
தொடியின் தோள்விசைத் தெழுந்து சுற்றினர்
பிடியுண் டார்எனத் துயிலும் பெற்றியார். 908

யார்கொ லாம்இவன் இழைத்த தென்எனத்
தாரை சேயினைத் தனிவி னவினன்
மாரு தேயன்மற் றவனும் வாய்மைசால்
ஆரி யாதெரிந் தறிகி லேன்என்றான். 909

யான்இ வன்தனைத் தெரிய எண்ணினேன்
தூநி வந்தவேல் துமிரன் என்னும்பேர்
ஆன வன்புனற் பொய்கை ஆளும்ஓர்
தான வன்எனச் சாம்பன் சாற்றினன். 910

வேறும் எய்துவார் உளர்கொ லாம்எனத்
தேறி இன்துயில் செய்தல் தீர்ந்துளார்
வீறு செஞ்சுடர்க் கடவுள் வேலைவாய்
நாற நாள்மலர்ப் பெண்ணை நாடுவார். 911

வானர வீரர்கள் பெண்ணை நதியை அடைதல்

புள்ளை வெம்முலைப் புளினம் ஏய்தடத்து
உண்ண ஆம்பலின் அமுதம் ஊறுவாய்
வண்ண வெண்ணகைத் தரள வாள்முகப்
பெண்ணை நண்ணினர் பெண்ணை நாடுவார். 912

துறையும் தோகைநின் றாடு சூழலும்
குறையும் சோலையும் குளிர்ந்த சாரல்நீர்ச்
சிறையும் தெள்ளுபூந் தடமும் தெண்பளிக்கு
அறையும் தேடினர் அறிவின் கோடியார். 913

அணிகொ ழித்துவந்து எவரும் ஆடினர்
பிணிகொ ழித்தவெம் பிறவி வேரின்வன்
துணிகொ ழித்தரும் சுழிகள் தோறும்நன்
மணிகொ ழித்ததென் கரையின் வைகினர். 914

907-ம் பாட்டு: இகற்கு ஆதி மூர்த்தியான் - சண்டைக்கு மூல காரணமானவன்: துமிரன். 912-ம் பாட்டு : புள்ளை வெம்முலை- (வடிவத்தில் இணையாகாமல் தோற்று) சக்கரவாகப் பறவைகள் நையும்படி அமைந்துள்ள ஸ்தனங்கள். தடத்து - நீர்நிலையில். பெண்ணை நண்ணினர் - வடபெண்ணை நதியை அடைந்தார்கள். பெண்ணை நாடுவார் - சீதையைத் தேடுகிறவர்கள்.

ஆடு பெண்ணைநீர் ஆறும் ஏறினர்
காடு நண்ணினர் மலைக டந்துளார்
வீடு நண்ணின ரென்ன வீசுநீர்
நாடு நண்ணினர் நாடு நண்ணினர். 915

தசந வப்பெயர்ச் சரள சண்பகத்
தசந வப்புலத் தகணி நாடொரீஇ
உசந வப்பெயர்க் கவிஉ தித்தபேர்
இசைவி தர்ப்பநாடு எளிதின் எய்தினர். 916

வைத ருப்பநா டதனுள் வந்துபுக்கு
எய்துஅ ருப்பம்அத் தனையும் எய்தினர்
பெய்த ருப்பைநூல் பிறழும் மேனியார்
செய்த வத்துளார் வடிவில் தேடினர். 917

அன்ன தன்மையார் அறிஞர் நாடிய
செந்நெல் வேலிசூழ் சிந்து நாடொரீஇத்
தன்னை எண்ணும்அத் தகைபு குந்துளார்
துன்னு தண்டகம் கடிது துன்னினர். 918

உண்டுஅ கத்துளாய் உழலும் ஐம்பொறிக்
கண்ட கர்த்தெறும் காலன் ஆயினர்
தண்ட கத்தையும் தடவி ஏகினர்
முண்ட கத்துறை கடிது முற்றினர். 919

915-ம் பாட்டு: நாடு நண்ணினர் நாடு நண்ணினர்-தசநவ நாட்டை அடைந்தார்கள் (சீதையைத்) தேடுவதை மேற்கொண்டவர்கள். 916-ம் பாட்டு : தசநவப் பெயர்......நாடொரீஇ - (த ச ந வ ப் பெயர்ச் சரளசண்பகத்து, அசந அப்புலத்து அகணி நாடுஒரீஇ) தசார்ணம் என்ற பெயருடையதும், சண்பக மரங்கள் நிறைந்ததும், உணவுப்பொருளை உற்பத்தி செய்யும் வயல்களை உடைய மருத நிலங்கள் மிகுந்ததுமான நாட்டைவிட்டு. உசநவப் பெயர்......எய்தினர்-உசநவன், கவி என்னும் பெயர்களை உடைய சுக்கிரன் பிறந்த பெரும் புகழ் நாடான விதர்ப்ப நாட்டுக்கு எளிதில் போய்ச்சேர்ந்தார்கள். 917-ம் பாட்டு : செய்தவத்துளார் வடிவில் - முனிவர் வடிவம் கொண்டு. 918-ம் பாட்டு : தன்னை எண்ணும் அத்தகை புகுந்துளார் - ஆத்மசிந்தனையில் ஈடுபடும் தன்மைகொண்ட முனிவர்கள். 919-ம் பாட்டு : உண்டு......ஆயினர் - உடம்பையும் உணர்வையும் தின்றுகொண்டு, உள்ளுக்குள்ளேயே திரியும் ஐம்புலன்களான துஷ்டர்களைக் கொல்லும் எமனைப்போன்ற முனிவர்கள் (வசிக்கும்). குறிப்பு : இந்தப் பாட்டில் முண்டகத்துறை என்னும் பெயர் கொண்ட ஓரிடம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன் பாட்டில் ''நெல் வேலி,'' ''சிந்து'' என்று வருகிறது. இப்போது திருநெல்வேலியில் ''சிந்து பூந்துறை'' என்ற இடமும் ''முண்டந்துறை'' என்ற இடமும் உள்ளன. இது ஆராய்ச்சியாளர்களின் கவனத்துக்குரிய விஷயமாகக்கூடும்.

அள்ளல் நீர்எலாம் அமரர் மாதரார்
கொள்ளை மாமுலைக் கலவை கோதையின்
கள்ளும் நாறலின் கமல வேலிவாழ்
புள்ளும் மீன்உணு புலவு தீர்தலால். 920

குஞ்ச ரம்குடைந்து ஒழுகு கொட்பதால்
விஞ்சை மன்னர்பால் விரக மங்கைமார்
நஞ்சு வீணையின் நடத்து பாடலால்
அஞ்சு வார்கண்நீர் அருவி ஆறரோ. 921

கமுக மாநெடுங் கனக ஊசலில்
குமுத வாயினர் குயிலை ஏசுவார்
சமுக வாளியும் தனுவும் வாழ்முகத்து
அமுத பாடலார் அருவி ஆடுவார். 922

இனைய வாயஒண் துறையை எய்தினர்
நினையும் வேலைவாய் நெடிது தேடுவார்
வினைய வார்குழல் திருவை மேவலார்
புனையும் நோயினர் கடிது போயினர். 923

நீண்ட மேனியான் நெடிய தாளினின்று
ஈண்டு கங்கைவந்து இழிவ தென்னலாம்
பாண்டு அம்மலை படர்வி சும்பினைத்
தீண்டு கின்றதண் சிகரம் எய்தினர். 924

இருள் உறுத்துமீது எழுந்த தெள்நிலா
மருள் உறுத்துவண் சுடர்வ ழங்கலால்
அருள்உ றுத்திலா அடல்அ ரக்கன்மேல்
உருள் உறுத்ததிண் கயிலை ஒத்ததால். 925

920-ம் பாட்டு : கமலவேலி - முண்டகத்துறை. 921-ம் பாட்டு : நஞ்சு - நைந்து. 922-ம் பாட்டு : சமுகவாளியும், தனுவும் வாழ் முகத்து - சேர்ந்திருக்கும் அம்புகளும் (கண்களும்), விற்களும் (புருவங்களும்) உள்ள முகத்தை உடைய. 923-ம் பாட்டு : நினையும் வேலைவாய் - எண்ணும் வேளையில்; மனோ வேகத்தில். திருவை மேவலார் - சீதையைக் காணப் பெருதவர்களாகி. 924-ம் பாட்டு: நீண்ட மேனியான்......கங்கை - திருமாலின் பாதத்திலிருந்து உற்பத்தியாகிப் பெருகும் கங்கை. திருமால் உலகளந்தபோது, அவனுடைய பாதம் பிரமலோகத்திற்குச் சென்றது. பிரமன் தனது கமண்டல நீரினல், திருமாலின் பாதத்தைக் கழுவினன். அவ்வாறு கழுவப்பட்ட நீரே கங்கை நதியாக ஆயிற்று. பாண்டு அம்மலை - பாண்டு மலை என்ற அழகிய மலை. 925-ம் பாட்டு : அடல் அரக்கன் - இராவணன். உருள்உறுத்த - உருளும்படி செய்து நசுக்கிய. ஒரு சமயம் இராவணன் கயிலாசமலையைப் பெயர்த்தெடுக்க முயன்றன். இதை அறிந்த சிவன், காலினல் மலையை அழுத்தவே, இராவணன் கீழே அகப்பட்டுக்கொண்டு கதறினன்.

வேறு

விண்ணுற நிவந்த சோதி வெள்ளிய குன்றம் மேவிக்
கண்ணுற நோக்க லுற்ருர் களியுறக் கனிந்த காமர்ப்
பண்ணுறு கிளவிச் செவ்வாய் படையுறு நோக்கி ஞளை
எண்ணுறு திறத்தும் காணுர் இடருறு மனத்தர் எய்த்தார். 926

ஊதைபோல் விசையின் வெங்கண் உழுவைபோல் வயவர் ஓங்கல்
ஆதியை அகன்று செல்வார் அரக்கனுல் வஞ்சிப் புண்ட
சீதைபோ கின்ருள் கூந்தல் வழிஇவந்து புவனம் சேர்ந்த
கோதைபோல் கிடந்த கோதா விரியினைக் குறுகிச் சென்ருர். 927

எழுகின்ற திரையிற் ருகி இழிகின்ற மணிநீர் யாறு
தொழுகின்ற சனகன் வேள்வி தொடங்கிய சுருதிச் சொல்லால்
உழுகின்ற பொழுதின் ஈன்ற ஒருமகட்கு இரங்கி ஞாலம்
அழுகின்ற கலுழி மாரியாம்எனப் பொலிந்த தன்றே. 928

ஆசில்பே ருலகு காண்போர் அளவைநூல் எனலும் ஆகிக்
காசொடு கனகம் தூவிக் கவினுறக் கிடந்த கான்யாறு
ஏசுபோர் அரக்கன் மார்பி னிடைபறித்து எருவை வேந்தன்
வீசிய வடக மீக்கோள் ஈதென விளங்கிற் றன்றே. 929

அந்நதி முழுதும் நாடி ஆய்வளை மயிலை யாண்டும்
சந்நிதி உற்றி லாதார் நெடிதுபின் தவிரச் சென்ருர்
இன்னதீது இலாதது ஈதுஎன்று யாவையும் எண்ணும் கோளார்
சொன்னதீ வினைகள் தீர்க்கும் சுவணகத் துறையில் புக்கார். 930

சுரும்பொடு தேனும் வண்டும் அன்னமும் துவன்றிப் புள்ளும்
கரும்பொடு செந்நெற் காடும் கமலவா விகளும் மல்கிப்
பெரும்புனல் மருதம் சூழ்ந்த கிடக்கைபின் கிடக்கச் சென்ருர்
குரும்பைநீர் அமுதச் சோலைக் குலிந்தமும் புறத்துக் கொண்டார்.

கொங்கணம் ஏழும் நீங்கிக் குடகடல் தரளக் குப்பைச்
சங்கணி பானல் நெய்தல் தண்புனல் தவிர ஏகித்
திங்களின் கொழுந்து சுற்றும் சிமயநீள் கோட்டுத் தேவர்
அங்கைகள் கூப்ப நின்ற அருந்ததிக்கு அருகர் ஆனுர். 932

வானர வீரர்கள் திருவேங்கட மலையை அடைதல்

அருந்ததிக்கு அருகு சென்றுஆண்டு அழகினுக்கு அழகு செய்தால்
இருந்ததிக்கு உணர்ந்தி லாதார் ஏகினுர் இடையர் மாதர்
பெருந்ததிக்கு அருந்தேன் மாறும் மரகதப் பெருங் குன்றெய்தி
இருந்துஅதின் தீர்ந்து சென்ருர் வேங்கடத்து இறுத்த எல்லை. 933

928-ம் பாட்டு : ஒரு மகட்கு - சீதைக்கு. சீதை பூமியின் உழு படைச்சாலில் பிறந்தவளாதலால், பூமி அவளுக்குத் தாய் ஆயிற்று.

929-ம் பாட்டு : ஆசில் பேருலகு காண்போர் - குற்றமற்ற பெரிய உலகத்தின் எல்லையைக் கண்டறிய முற்படுவோர். எருவை வேந்தன் - சடாயு. வடக மீக்கோள் - வடம் என்ற பெயருடன் உடம்பின் மேல் பாகத்தில் (மார்பில்) அணியப்படுவது.

முனிவரும் மறைவல் லோரும் முந்தைநாள் சிந்தை மூண்ட
வினைவரு நெறியை மாற்றும் மெய்யுணர் வோரும் விண்ணோர்
எனைவரும் அமரர் மாதர் யாவரும் சித்தர் என்போர்
அனைவரும் அருவி நன்னீர் நாளும்வந் தாடு கின்றார். 934

வேறு

பெய்த ஐம்பொறி யும்பெருங் காமமும்
வைத வெஞ்சொலும் மங்கையர் வாட்கணால்
எய்த வஞ்சக வாளியும் வென்றுநல்
செய்த வம்பல செய்குநர் தேவரால். 935

வலம்கொள் நேமி மழைநிற வானவன்
அலங்கு தாளிணை தாங்கிய அம்மலை
விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்
புலன்கொள் வார்கட்கு அனையது பொய்க்குமோ. 936

ஆய குன்றினை எய்தி அருந்தவம்
மேய செல்வரை மேவினர் மெய்ந்நெறி
நாய கன்தனை நாளும் வணங்கிய
தூய நற்றவர் பாதங்கள் சூடினார். 937

சூடி ஆண்டுஅச் சுரிகுழல் தோகையைத்
தேடி வார்புனல் தெண்டிரைத் தொண்டைநல்
நாடு நண்ணுகின் றார்மறை நாவலர்
வேடம் மேயினர் வேண்டுரு மேவுவார். 938

குன்று சூழ்ந்த கடத்தொடும் கோவலர்
முன்றில் சூழ்ந்த படப்பையும் மொய்புனல்
சென்று சூழ்ந்த கிடக்கையும் தெண்டிரை
மன்று சூழ்ந்த பரப்பும் மருங்கெலாம். 939

சூல்அ டிப்பல வின்சுளை தூங்குதேன்
கோல்அ டிப்பவெ ரீஇக்குல மள்ளர்ஏர்ச்
சால்அ டித்தரும் சாலியின் வெண்முளை
தோல்அ டிக்கிளை அன்னம் துவைப்பன. 940

செருகு றும்கணின் தேங்குவ ளைக்குலம்
மருகு றங்கும் வயல்மருங்கு ஆய்ச்சியர்
இருகு றங்கு பிறங்கிய வாழையில்
குருகு றங்கும் குயிலும் துயிலுமால். 941

934-ம் பாட்டு: முந்தைநாள் சிந்தை மூண்ட வினை - முற்பிறப்பில் மனப்பூர்வமாகச் செய்த வினை. 939-ம் பாட்டு: கடம், படப்பை, கிடக்கை, பரப்பு ஆகியவை முறையே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலங்களையும் குறிக்கின்றன. குறிப்பு: தொண்டை நாட்டில் ''படப்பை'' என்ற ஒரு ஊர் இன்றும் இருக்கிறது. 940-ம் பாட்டு: சூல் அடிப்பலவின்-அடியில் (வேரில்) சூல் கொள்ளும் பலாமரத்தின். கோல் - தார்க்கம்பு. தரும் - முளைக்கும். தோல்அடி - தோலால் இணைக்கப்பட்ட விரல்களை உடைய பாதம்.

தெருவின் ஆர்ப்புறும் பல்லியம் தேர்மயில்
கருவி மாமழை என்று களிப்புறு
பொருநர் தண்ணுமைக்கு அன்னமும் போகல
மருவி ஞர்க்கு மயக்கம்உண் டாம்கொலோ. 942

சீர்ஐ வன்தலைத் தெங்கின்வண் பாளையை
நாரை என்றுஇளங் கெண்டை நடுங்குவ
தாரை வன்தலைத் தண்ணிள ஆம்பலைச்
சேரை என்று புலம்புவ தேரையே. 943

நள்ளி வாங்கு கடைஇள நவ்வியர்
வெள்ளி வால்வளை வீசிய வெண்மணி
புள்ளி நாரை சினைபொரி யாதஎன்று
உள்ளி ஆமை முதுகில் உடைப்பரால். 944

சேட்டி ளம்கடு வன்சிறு புன்கையில்
கோட்ட தேம்பல வின்கனிக் கூன்சுளை
தோட்ட மைந்த பொதும்பரில் தூங்குதேன்
ஈட்டம் என்னச்சென்று ஈயினம் மொய்ப்பன. 945

செல்வர் என்றும் வடகலை தென்தமிழ்ச்
சொல்வ ரம்பினர் என்றும் சுமடரைக்
கொல்வர் என்றும் கொடுப்பனர் என்றும்பேர்
இல்வ ரம்பினர்க்கு ஈதேனும் ஈட்டதே. 946

அன்ன தொண்டைநன் ஞடு கடந்துஅகன்
பொன்னி நாடு பொருவிலர் எய்தினர்
செந்நெ லும்கரும் பும்கமு கும்செறிந்து
இன்னல் செய்யும் நெறிஅரிது ஏகுவார். 947

கொடிறு தாங்கிய வாய்க்குழு நாரைவாழ்
தடறு தாங்கிய கூன்இளம் தாழையின்
மிடறு தாங்கும் விருப்புடைத் தீங்கனி
இடறு வார்நறுந் தேனின் இழுக்குவார். 948

942-ம் பாட்டு: (இதன் பொருள்) தெருவில் மேக முழக்கம் போல முழங்கும்பலவகை வாத்தியங்களின் ஒலியைக் கேட்டு, (சுபாவமாக மேக முழக்கத்தைக் கேட்டுக் களிப்படையும்) மயில்கள் களிப் படைய வில்லை. கூத்தாடிகள் அடிக்கும் மத்தள ஓசை மேகங்கள் குமுறுவதுபோல இருந்தும், (சுபாவமாக மேகக் குமுறலைக் கேட்டுப் பயப்படும்) அன்னங்கள் (பயந்து) அப்பால் ஓடவில்லை. நெருங்கிப் பழகியவர்கள் உண்மையை அறிந்திருப்பார்களாதலால், அவர்கள் ஒன்றை மற்றொன்ருகத் தவருகக் கருத (மயங்க) மாட்டார்கள் அல்லவா? 946-ம் பாட்டு: ஈதேனும் ஈட்டதே-கேட்டதை எல்லாம் கொடுக்கும் காமதேனுவும் ஈடாகுமோ.

குழுவு மீன்வளர் குட்டம் எனக்கொளா
எழுவு பாடல் இமிழ்கருப் பேந்திரத்து
ஒழுகு சாறுஅகன் கூனையின் ஊழ்முறை
முழுகி நீர்க்கருங் காக்கை முளைக்குமே. 949

பூநெ ருங்கிய புள்ளுறு சோலைகள்
தேன்ஒ ருங்கு சொரிதலில் தேர்வில
மீன்நெ ருங்குறும் வெள்ளம் வெரீஇப்பல
வான ரங்கள் மரங்களின் வைகுமால். 950

தாறு நாறுவ தாழைகள் தாழையின்
சோறு நாறுவ தூங்குறு மாங்கனி
நாறு நாறுவ நாறு வளர்க்குறும்
சேறு நாறுவ செங்கழு நீர்அரோ. 951

அனைய பொன்னி அகன்புனல் நாடொரீஇ
மனையின் மாட்சி குலாம்மலை மண்டலம்
வினையின் நீங்கிய பண்பினர் மேயினர்
இனிய தென்தமிழ் நாடுசென் றெய்தினர். 952

பாண்டிய நாட்டின் சிறப்பு

அத்தி ருத்தகு நாட்டினை அண்டர்நாடு
ஒத்தி ருக்கும்என் றுல்உரை ஒக்குமோ
எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்
முத்தும் முத்தமி ழும்தந்து முற்றலால். 953

என்ற தென்தமிழ் நாட்டினை எங்கணும்
சென்று நாடித் திரிந்து திருந்தினர்
பொன்று வாரின் பொருந்தினர் போயினர்
துன்றுஅல் ஓதியைக் கண்டிலர் துன்பினர். 954

950-ம் பாட்டு : தேர்வில - உண்மையைக் கண்டறியாதவையாகி. வெள்ளம் வெரீஇ - தேன் வெள்ளத்தைக் கண்டு பயந்து. மீன் நெருங்குறும் - தேன் வெள்ளத்தை நீர்வெள்ளம் என்று கருதி மீன்கள் நெருங்கும். மரங்களிலிருந்து மழைத் தண்ணீர் தாரையாகக் கொட்டும்போது மீன்கள் அத் தாரையின் வழியாக மேலே ஏறுவது உண்டு. இங்கே மரங்களிலிருந்து தேன் ஒழுகுகிறது; அதை நீர்த்தாரை என்று எண்ணி மீன்கள் மேலே ஏறுகின்றன. 951-ம் பாட்டு: (இதன் பொருள்) தாழை மரங்களில் மலர்க்கொத்துகள் விளங்குகின்றன. தாழை மலர்களின் சுண்ணம் படிந்து பக்கத்திலுள்ள மாமரங்களில் தொங்கும் கனிகள் மணம் வீசுகின்றன. வயல்களில் நெற்பயிரின் நாற்று விளங்குகிறது. நாற்றை வளர்க்கும் சேற்றில், செங்கழுநீர் மலர்களின் மணம் வீசுகிறது. 952-ம் பாட்டு: மலைமண்டலம் - மலைநாடாகிய சேரநாடு அல்லது கேரளம். தென் தமிழ்நாடு - தென் பாண்டி நாடு அல்லது திருநெல்வேலிப் பிரதேசம். 954-ம் பாட்டு; திருந்தினர்-திருந்திய

வன்தி சைக்களிறு அன்ன மகேந்திரக்
குன்றுஇ சைத்தது வல்லேயின் கூடினர்
தென்தி சைக்கடற் சீகர மாருதம்
நின்றுஇ சைக்கும் நெடுநெறி நீங்கினர். 955

15. சம்பாதிப் படலம்

[சடாயுவின் தமையனை சம்பாதி, மகேந்திர மலேயில் வானர வீரர்களேச் சந்தித்து, சீதையின் இருப்பிடத்தைத் தெரிவித்ததைப் பற்றிக் கூறும் பகுதி]

மழைத்தவிண் ணகம்என முழங்கி வார்கடல்
இழைத்தவெண் திரைக்கரம் எடுத்துஇ லங்கையாள்
உழைத்தடங் கண்ணிஎன் உழைஎன்று ஓடிவந்து
அழைப்பதே கடுக்கும்மால் ஆழி நோக்கினர். 956

விரிந்துநீர் எண்திசை மேவி மேன்மையால்
பொருந்துதிர் மகேந்திரத்து என்று போக்கிய
அருந்துணைக் கவிகளாம் அலகு சேனையும்
பெருந்திரைக் கடல்எனப் பெயர்த்தும் கூடிற்றே. 957

யாவரும் அவ்வயின் எளிதின் எய்தினர்
பூவரும் புரிகுழல் பொருவில் கற்புடைத்
தேவியைக் காண்கிலார் செய்வ தோர்கிலார்
நாவியல் குழறிட நவில்கின் றுரரரோ. 958

அற்றது நாள்வரை அவதி ஆட்சியும்
உற்றிலம் இராகவன் உயிரும் பொன்றுமால்
கொற்றவன் ஆணையும் குறித்து நின்றனம்
இற்றது நம்செயல் இனிஎன் றெண்ணினர். 959

அருந்தவம் புரிதுமோ அன்னது அன்றெனின்
மருந்தரு நெடுங்கடு உண்டு மாய்துமோ
திருந்தியது யாதுஅது செய்து தீர்தும்என்று
இருந்தனர் தம்உயிர்க்கு இறுதி எண்ணுவார். 960

அல்லது நேர்மையான குணம் படைத்த வானர வீரர்கள். துன்று அல்ஓதியை-நெருங்கிய இருள் போன்ற கூந்தலே உடைய சீதையை. 955-ம் பாட்டு : இசைத்தது - போற்றிப் புகழப்பட்ட மகேந்திர மலேயை. இசைக்கும் - வீசும். 956-ம் பாட்டு: இலங்கையாள்- இலங்காபுரி என்ற நங்கை. உழைத்தடங் கண்ணி என் உழைஎன்று- மான் போன்ற விசாலமான கண் படைத்த சீதை என்னிடம் இருக்கிறுள் என்று. 957-ம் பாட்டு: போக்கிய அருந்துணைக் கவிகளாம் அலகு சேனையும் - ஏமகூடமலேயில் பிரித்து அனுப்பிய மற்ருெரு வானரப் படையும். 959-ம் பாட்டு: அற்றது நாள்வரை அவதி - ஒரு மாதத் தவணை வீணுக முடிந்துவிட்டது. ஆட்சி - காரியம் கைகூடுதல். கொற்றவன் - சுக்கிரீவன்.

சரைபொரு கடல்அயல் கனக மால்வரை
நிரைதுவன் றியஎன நெடிதி ருந்தவர்க்கு
உரைசெயும் பொருள்உளது எனஉ ணர்த்தினன்
அரசிளங் கோளரி அயரும் சிந்தையான். 961

நாடிநாம் கொணருதும் நளினத் தாளைவான்
மூடிய உலகினை முற்றும் முட்டிஎன்று
ஆடவர் திலகனுக்கு அன்பி னர்எனப்
பாடவம் விளம்பினம் பழியின் மூழ்குவான். 962

செய்தும்என் றமைந்தது செய்து தீர்ந்திலம்
நொய்துசென்று உற்றது நுவல கிற்றிலம்
எய்தும்வந்து என்பதோர் இறையும் கண்டிலம்
உய்தும்என் றால்இதோர் உரிமைத் தாகுமோ. 963

எந்தையும் முனியும்எம் இறைஇ ராமனும்
சிந்தனை வருந்தும்அச் செய்கை காண்குறேன்
நுந்துவென் உயிரினை நுணங்கு கேள்வியீர்
புந்தியின் அன்னது புகல்வி ராம்என்றான். 964

விழுமியது உரைத்தனை விசயம் வீற்றிருந்து
எழுவொடும் மலையொடும் இகலும் தோளினாய்
அழுதுமோ இருந்துநம் அன்பு பாழ்படத்
தொழுதுமோ சென்றெனச் சாம்பன் சொல்லினான். 965

மீண்டினி ஒன்றுநாம் விளம்ப மிக்கதென்
மாண்டுறு வதுநலம் என வலித்தனம்
ஆண்தகை அரசிளங் குமர அன்னது
வேண்டலின் நின்னுயிர்க்கு உறுதி வேண்டுமால். 966

என்றவன் உரைத்தலும் இருந்த வாலிசேய்
குன்றுறழ்ந் தெனவளர் குவவுத் தோளினீர்
பொன்றிநீர் மடியயான் போவ னேல்அது
நன்றதோ உலகமும் நயக்கற் பாலதோ. 967

சான்றவர் பழியுரைக்கு அஞ்சித் தன்னுயிர்
போன்றவர் மடிதரப் போந்து ளான்என
ஆன்றபே ருலகுளோர் அறைதல் முன்னம்யான்
வான்தொடர் குவென்என மறித்தும் கூறுவான். 968

961-ம் பாட்டு: கனகமால்வரை - மேருமலை. அரசிளங் கோளரி - அங்கதன். 962-ம் பாட்டு: ஆடவர் திலகனுக்கு - இராமனுக்கு. பாடவம் விளம்பினம் - (வீண்) பெருமை பேசினோம். மூழ்குவான் - மூழ்குவதற்கு. 966-ம் பாட்டு: அன்னது வேண்டலின் - மரணத்தை நாங்கள் விரும்புவதால்.

வேறு

எல்லைநம் இறுதி யாய்க்கும் எந்தைக்கும் யாவ ரேனும்
சொல்லவும் கூடும் கேட்டால் துஞ்சவும் அடுக்கும் கண்ட
வில்லியும் இளைய கோவும் வீவது திண்ணம் அச்சொல்
மல்லல்நீர் அயோத்தி புக்கால் வாழ்வரோ பரதன் மற்றோர். 969

பரதனும் பின்னு ளோனும் பயந்தெடுத் தவரும் ஊரும்
சரதமே முடிவர் கெட்டேன் சனகிஎன்று உலகம் சாற்றும்
விரதமா தவத்தின் மிக்க விளக்கினால் உலகத்து யார்க்கும்
கரைதெரி விலாத துன்பம் விளைந்தவா எனக்க லுழ்ந்தான். 970

பொருப்புறழ் வயிரத் திண்தோள் பொருசினத் தாளி போல்வான்
தரிப்பிலாது உரைத்த மாற்றம் தடுப்பரும் தகைத்த தாய
நெருப்பையே விளைத்த போல நெஞ்சமும் மறுகக்கேட்டு
விருப்பினால் அவனை நோக்கி விளம்பினன் எண்கின் வேந்தன். 971

வேறு

நீயும்நின் தாதையும் நீங்க நின்குலத்
தாயம்வந் தவர்க்கொரு தனயர் இல்லையால்
ஆயது கருதினம் அன்னது அன்றெனில்
நாயகர் இறுதியும் நவிலற் பாலதோ. 972

ஏகுநீ அவ்வழி எய்தி இவ்வழித்
தோகையைக் கண்டிலா வகையும் சொல்லிஎம்
சாகையும் உணர்த்துதி தவிர்தி சோகம்போர்
வாகையாய் என்றனன் வரம்பில் ஆற்றலான். 973

அவன்அவை உரைத்தபின் அனுமன் சொல்லுவான்
புவனம்மூன் றினும்ஒரு புடையில் புக்கிலம்
கவனம்மாண் டவர்எனக் கருத்தி லார்எனத்
தவனவே கத்தினீர் சலித்தி ரோஎன்றான். 974

பின்னரும் கூறுவான் பிலத்தில் வானத்தில்
பொன்வரைக் குடுமியில் புறத்து ளண்டத்தில்
நன்னுதல் தேவியைக் காண்டும் நாம்எனில்
சொன்னநாள் அவதியை இறைவன் சொல்லுமோ. 975

நாடுத லேநலம் இன்னும் நாடிஅத்
தோடலர் குழலிதன் துயரின் தோன்றமர்
வீடிய சடாயுவைப் போல வீடுதல்
பாடவம் அல்லது பழியிற் றாம்என்றான். 976

969-ம் பாட்டு : எல்லைநம் இறுதி - நமது வாழ்நாளின் முடிவெல்லையான மரணத்தை. யாய்க்கும் எந்தைக்கும் - தாயாகிய தாரைக்கும், (சிறிய) தந்தையாகிய சுக்கிரீவனுக்கும். 972-ம் பாட்டு: அன்னது அன்றெனில்-அப்படியல்லா விட்டாலும். நாயகர் - (உன்னைப் போன்ற) ராஜகுமாரர்களின். 976-ம் பாட்டு: துயரின் தோன்றமர்-

வானர வீரர்களிடம் சப்பாதி வருதல்

என்றலும் கேட்டனன் எருவை வேந்தன்தன்
பின்துணை யாகிய பிழைப்பில் வாய்மையான்
பொன்றினன் என்றசொல் புலம்பு நெஞ்சினன்
குன்றென நடந்துஅவர்க் குறுகல் மேயினான். 977

முறையுடை எம்பியார் முடிந்த வாஎனாப்
பறையிடும் நெஞ்சினன் பதைக்கும் மேனியன்
இறையுடைக் குலிசவேல் எய்த லால்முனம்
சிறையறு மலைஎனச் செல்லும் செய்கையான். 978

மிடல்உடை எம்பியை வீட்டும் வெஞ்சினப்
படையுளர் ஆயினார் பாரில் யார்எனா
உடலினை இழிந்துபோய் உவரி நீர்உகக்
கடலினைப் புரையுறும் அருவிக் கண்ணினான். 979

உழும்கதிர் மணியணி உமிழும் மின்னினான்
மழுங்கிய நெடுங்கணின் வழங்கு மாரியான்
புழுங்குவான் அழுங்கினான் புவனி மீதினில்
முழங்கிவந்து இழிவதோர் முகிலும் போல்கின்றான். 980

வள்ளியும் மரங்களும் மலையும் மண்ணுறத்
தெள்ளுநுண் பொடிபடக் கடிது செல்கின்றான்
தள்ளுவன் கால்பொரத் தரணி யில்தவழ்
வெள்ளியம் பெருமலை பொருவு மேனியான். 981

எய்தினன் இருந்தவர் இரியல் போயினார்
ஐயன்அம் மாருதிஅழலும் கண்ணினான்
கைதவ நிசாசரர் கள்ள வேடம்கொண்டு
உய்திகொல் இனிஎனா உருத்து முன்நின்றான். 982

வெங்கதம் வீசிய மனத்தன் விம்மலன்
பொங்கிய சோரிநீர் பொழியும் கண்ணினன்
சங்கையில் சழக்கிலன் என்னும் தன்மையை
இங்கித வகையினால் எய்த நோக்கினான். 983

நோக்கினன் நின்றனன் நுணங்கு கேள்வியான்
வாக்கினால் ஒருமொழி வழங்கு றாதமுன்
தாக்கரும் சடாயுவைத் தருக்கி னால்உயிர்
நீக்கினர் யார்அது நிரப்பு வீர்என்றான். 984

துயரத்தின் காரணமாக உண்டாகும் போர். 977-ம் பாட்டு: எருவை வேந்தன் - சம்பாதி. பின்துணை - தம்பியாகிய சடாயு. 978-ம் பாட்டு: முடிந்தவாஎனா - இறந்தவிதம் என்னே என்று. இறையுடைக் குலிசவேல்......மலைஎன - இந்திரன் தனது வச்சிராயு தத்தை எறிந்ததன் காரணமாக சிறகுகள் அறுபட்ட மலைபோல. ஒரு காலத்தில் மலைகளுக்குச் சிறகுகள் இருந்தன. அவை பறந்து சென்று மக்களை அழித்துவந்தன. அதனால், இந்திரன் அவற்றின் சிறகுகளை அறுத்துவிட்டான்.

உன்னைநீ உள்ளவாறு உரைப்பின் உற்றதைப்
பின்னையான் நிரப்புதல் பிழைப்பின் றுகுமால்
என்னமா ருதிஎதிர் எருவை வேந்தனும்
தன்னைஆம் தன்மையைச் சாற்றல் மேயினன். 985

மின்பிறந் தாலென விளங் கெயிற்றினய்
என்புஇறந் தார்க்கிடை எய்த லாதஎன்
பின்பிறந் தான்துணை பிரிந்த பேதையேன்
முன்பிறந் தேன்என முடியக் கூறினன். 986

கூறிய வாசகம் கேட்டுக் கோதிலான்
ஊறிய துன்பத்தின் உவரி உள்புகா
ஏறினன் உணர்த்தினன் இகல்இ ராவணன்
வீறிய வாளிடை விளிந்த தாம்என்றான். 987

அவ்வுரை கேட்டலும் அசனி ஏற்றினல்
தவ்விய கிரிஎனத் தரையில் வீழ்ந்தனன்
வெவ்வுயி ராஉயிர் பதைப்ப விம்மினன்
இவ்வுரை இவ்வுரை எடுத்தி யம்பினன். 988

வேறு

சடாயுவின் மரணத்துக்காகச் சம்பாதி புலம்புதல்

இளையா நீள்சிறகு இன்றி வெந்துகத்
தளையா னேன்உயிர் போதல் தக்கதால்
வளையா நேமியன் வன்மை சால்வலிக்கு
இளையா னேஇது என்ன மாயமோ. 989

மலரோன் இன்றுளன் மண்ணும் விண்ணும்உண்டு
உலையா நீடுஅறம் இன்னும் உண்டரோ
நிலையார் கற்பமும் நின்ற தின்றுநீ
இலைஆ னய்இது என்ன தன்மையோ. 990

உடனே அண்டம் இரண்டும் முந்துஉயிர்த்
திடநாள் வந்துஇரு வேமும் எய்தியான்
விடநீ ஓர்தனிச் சென்ற வீரமும்
கடனே வெங்கலு ழற்கு மேன்மையோய். 991

ஒன்று மூன்றுல கத்து ளோரையும்
வென்றான் என்னினும் வீர நிற்குநேர்
நின்று னேஅவ் அரக்கன் நின்னையும்
கொன்று னேஇஃது என்ன கொள்கையோ. 992

985-ம் பாட்டு: தன்னை ஆம் தன்மை - தன்னைப்பற்றிய செய்தி. 986-ம் பாட்டு: என்பு இறந்தார்க்கிடை......பின் பிறந்தான் - உடம்பு செத்தவர்களிடையே ஒருவனகச் சேராத என் தம்பி சடாயு. (பூதஉடம்பு அழிந்தாலும் புகழுடம்பு அழியாத சடாயு.) 989-ம் பாட்டு: வளையா நேமியன் - சூரியன். 991-ம் பாட்டு:உடனே......

என்றென்று ஏங்கி இரங்கி இன்னலால்
பொன்றும் தன்மை புரிந்த போதுஅவற்கு
ஒன்றும் சொற்கொடு உணர்ச்சி நல்கினான்
வன்திண் தோள்வரை அன்ன மாருதி. 993

தேற்றத் தேறி இருந்த செங்கணான்
கூற்றெப் பான்கொலை வாள் அரக்கனோடு
ஏற்றுப் போர்செய்தது என் நிமித்தெனக்
காற்றின் சேய்இது கட்டு ரைக்குமால். 994

எங்கோ மான்அவ் இராமன் இல்லுளாள்
செங்கோ லான்மகள் சீதை செவ்வியாள்
வெங்கோல் வஞ்சன் விளைத்த மாயையால்
தங்கோனைப்பிரி வுற்ற தன்மையாள். 995

கொண்டே கும்கொலை வாள் அரக்கனைக்
கண்டான் உம்பி அறம் கடக்கிலான்
வண்டார் கோதையை வைத்து நீங்கெனத்
திண்தே ரான்எதிர் சிந்தை சீறினான். 996

சீறித் தியவன் ஏறு தோரையும்
கீறித் தோள்கள் கிழித்த ழித்தபின்
தேறித் தேவர்கள் தேவன் வாளினால்
வீறப் பொன்றினன் மெய்ம்மை யோன்என்றான். 997

விளித்தான் அன்னது கேட்டு மெய்ம்மையோய்
தெளித்துஆ டத்தகு தீர்த்தன் மாட்டுஉயிர்
அளித்தா னேஅது நன்று நன்றெனாக்
களித்தான் வாரி கலுழ்ந்த கண்ணினான். 998

பைந்தார் எங்கள் இராமன் பத்தினி
செந்தாள் வஞ்சி திறத்து இறந்தவன்
மைந்தா எம்பி வரம்பில் சீர்த்தியோடு
உய்ந்தா னல்லது உலந்த துண்மையோ. 999

அறம்அன் னானுடன் எம்பி அன்பினோடு
உறவுன் னாஉயிர் ஒன்ற ஒவினான்
பெறலொண் ணாததொர் பெற்றி பெற்றவற்கு
இறவென் னும்இதின் இன்பம் யாவதோ. 1000

எய்தி - முன்னாளில் ஒரு சமயம் இரண்டு முட்டைகள் உண்டாக, அந்நாளில் நாம் இருவரும் பிறந்து வளர்ந்து. யான்விட-உன்னைத் தனியாக நான் விட்டுவிட. சூரியனுடைய சாரதியான அருணனுக்கும் அரம்பைக்கும் பிறந்தவர்கள் சம்பாதியும், சடாயுவும். இவர்கள் இரண்டு முட்டைகளிலிருந்தே பிறந்தார்கள். 997-ம் பாட்டு: தேவர்கள் தேவன் வாளினால் - சிவன் கொடுத்த சந்திரஹாஸம் என்ற வாளினால். 998-ம் பாட்டு: தெளித்து......அளித்தானே - தெளிந்து தோய்வதற்குரிய புனிதனை இராமனுக்காக (இராவணனோடு போரிட்டு சடாயு) உயிர் கொடுத்தானே.

என்றென் றேங்கி இரங்கி இன்புனல்
சென்றங்கு ஆடுதல் செய்து தீர்ந்தபின்
வன்திண் தோள்வலி மாறி லாதவன்
துன்றும் தாரவர்க்கு இன்ன சொல்லினன். 1001

வாழ்வித் தீர்எனை மைந்தர் வந்துநீர்
ஆழ்வித் திரலிர் துன்ப ஆழிவாய்
கேள்வித் தீவினை கீறி னீர்இருள்
போழ்வித் தீர்உரை பொய்யின் நீங்கினீர். 1002

எல்லீ ரும்அவ் இராம நாமமே
சொல்லீர் சொல்ல எனக்கொர் சோர்விலா
நல்ஈ ரப்பயன் நண்ணும் நல்லசொல்
வல்லீர் வாய்மை வளர்க்கும் மாண்பினீர். 1003

என்றான் அன்னது காண்டும் யாம்என
நின்றார் நின்றுழி நீல மேனியான்
நன்றாம் நாமம் நவின்று நல்கினர்
வன்தோ ளான்சிறை வானம் தாயவே. 1004

சிறைபெற் றான்திகழ் கின்ற மேனியான்
முறைபெற் றான்உல கெங்கும் மூடினான்
நிறைபெற் றாவி நெருப்பு யிர்க்கும்வாள்
உறைபெற் றாலென லாம்உ றுப்பினான். 1005

தெருண்டான் மெய்ப்பெயர் செப்ப லோடும்வந்து
உருண்டான் உற்ற பயத்தை உன்னினர்
மருண்டார் வானவர் கோனை வாழ்த்தினர்
வெருண்டார் சிந்தை வியந்து முந்துவார். 1006

அன்னா னைக்கடிது அஞ்ச வித்துநீ
முன்னாள் உற்றது முற்றும் ஓதெனச்
சொன்னார் சொற்றது சிந்தைதோய்வுறத்
தன்னால் உற்றது தான்வி ளம்புவான். 1007

வேறு

சம்பாதி தனது வரலாற்றைக் கூறுதல்

தாய்எனத் தகைய நண்பீர் சம்பாதி சடாயு என்பேம்
சேயொளிச் சிறைய வேகக் கழுகினுக் கரசு செய்வேம்
பாய்திரைப் பரவை ஞாலம் படர்இருள் அகற்றும் பண்பின்
ஆய்கதிர்க் கடவுள் தேர்ஊர் அருணனுக் கமைந்த மைந்தர். 1008

1001-ம் பாட்டு : துன்றும் தாரவர்க்கு - வானர வீரர்களுக்கு.
1005-ம் பாட்டு : முறைபெற்றான் - இருக்கவேண்டிய நிலையை (சிறகுகளோடு இருத்தலை) அடைந்தான். 1006-ம் பாட்டு : தெருண்டான் மெய்ப்பெயர் - இராமநாமம். உருண்டான் - சிறகில்லாததால் உருண்டு வந்தவனான சம்பாதி. உற்ற பயத்தை - அடைந்த பலனை. வானவர் கோனை - இராமனை.

ஆஉயர் உம்பர் நாடு காண்டும்என்று அறிவு தள்ளி
மீஉயர் விசும்பின் ஊடு மேக்குறச் செல்லும் வேலே
காய்கதிர்க் கடவுள் தேரைக் கண்ணுற்றும் கண்ணு ருமுன்
தியையும் தீக்கும் தெய்வச் செங்கதிர்ச் செல்வன் சீறி 1009

முந்திய எம்பி மேனி முருங்கழல் முடுகும் வேலே
எந்தைநீ காத்தி என்ருன் யான்இரு சிறையும் ஏந்தி
வந்தனென் மறைத்த லோடும் மற்றவன் மறையப் போனன்
வெந்துமெய் இறகு தீந்து விழுந்தனென் விளிகி லாதேன். 1010

மண்ணிடை விழுந்த என்னே வானிடை வயங்கு வள்ளல்
கண்ணிடை நோக்கி உற்ற கருணையன் சனகன் காதற்
பெண்இடை யீட்டின் வந்த வானரர் இராமன் பேரை
எண்ணிடை உற்ற காலத்து இறகுபெற் றெழுதி என்ருன். 1011

தாழ்ந்தமா தவத்து லோக சாரங்கன் உறையும் சாரல்
விழ்ந்தனென் சிறைகள் திய வெவ்வுயிர்த்து உளமும் மெய்யும்
போழ்ந்தன துன்பம் ஊன்ற உயிர்ப்பொறை போற்ற கில்லாது
ஆழ்ந்தனென் ஆழ்ந்த என்னே அருந்தவன் எதிர்ந்து தேற்றி 1012

கற்றிலர் போல உள்ளக் களிப்பினுல் அமரர் காப்பூடு
உற்றிடக் கருதி மீப்போய் ஆதபத்து உனது மேனி
முற்றழல் முருங்க மண்ணே முயங்கினே இனிஎன் சின்னுள்
மற்றுநின் உயிரை ஓம்பாது இகழ்வது மாலேத் தன்ருல். 1013

களித்தவர் கெடுதல் திண்ணம் சனகியைக் கபடன் வெளவி
ஒளித்தவாய் துருவி உற்ற வானரர் இராம நாமம்
விளித்திடச் சிறைவந் தோங்கும் வெவ்வுயிர்த்து அயரல் என்றன்று
அளித்தனன் அதனுல் ஆவி ஆற்றினேன் ஆற்றல் மொய்ம்பீர். 1014

அன்றியும் மலருள் வைகும் அயனேநேர் முனிவன் வாய்மை
நன்றிகொள் ஈசற் காண்பான் நணுகலும் வினேயேன் உற்றது
ஒன்றுஒழி வுருமல் கேட்டதி யோகத்தின் உணர்ச்சி பேணிப்
பொன்றுதல் ஒழிமின் யானே புகல்வது கேண்மின் என்ருன், 1015

தசரத ராமன் தேவர் தவத்திஞல் தாய்சொல் தாங்கிக்
கசரத துரகம் இன்றிக் கானிடை இறுத்த காலே
வசைதரும் இலங்கை வேந்தன் வெளவிய திருவை நாடித்
திசைதிரி கவிகள் உற்ருல் சிறகுபெற் றெழுதி என்ன 1016

1010-ம் பாட்டு : எந்தை - தமையனுன சம்பாதியை 'எந்தை' என்று சடாயு அழைத்தான். 1011-ம் பாட்டு : பெண் இடையீட்டின் வந்த - சீதையின் பிரிவால், (அவளேத் தேட) வந்த. 1012-ம் பாட்டு : தாழ்ந்த மாதவத்து லோக சாரங்கன் - பக்தி மிகுந்த தவத்தை உடைய உலோக சாரங்கன் என்ற முனிவன். 1012, 1013, 1014, 1015, 1016 ஆகிய ஐந்து பாட்டுக்களும் அநேக பிரதிகளில் இல்லே.

எம்பியும் இடரின் வீழ்வான் ஏயது மறுக்க அஞ்சி
அம்பரத்து இயங்குப் யாணர்க் கழுகினுக்கரசன் ஆனுன்
நம்பிமீர் ஈதுஎம் தன்மை நீர்இவண் அடைந்த வாற்றை
உம்பரும் உவக்கத் தக்கீர் உணர்த்துமின் உணர என்ருன். 1017

என்றலும் இராமன் தன்னை ஏத்தினர் இறைஞ்சி எந்தாய்
புன்தொழில் அரக்கன் மற்றைத் தேவியைக் கொண்டு போந்தான்
தென்திசை என்ன உன்னித் தேடியே வருதும் என்ருர்
நன்றுநீர் வருந்தல் வேண்டா நான்அது நவில்வன் என்ருன். 1018

சீதையை இராவணன் இலங்கையில் சிறைவைத்திருக்கும் செய்தியைச் சம்பாதி கூறுதல்

பாகொன்று குதலை யாளைப் பாதக அரக்கன் பற்றிப்
போகின்ற பொழுது கண்டேன் புக்கனன் இலங்கை புக்கு
வேகின்ற உள்ளத் தாளை வெஞ்சிறை யகத்து வைத்தான்
ஏகுமின் காண்டிர் ஆங்கே இருந்தனள் இறைவி இன்னும். 1019

ஓசனை ஒருநூ றுண்டால் ஒலிகடல் இலங்கை அவ்வூர்
பாசவெங் கரத்துக் கூற்றும் கட்புலன் பரப்ப அஞ்சும்
நீசன்அவ் அரக்கன் சீற்ற நெருப்புக்கு நெருப்பு நீங்கள்
ஏசறும் குணத்தீர் சேறல் எப்பரிசு இயைவது என்ருன். 1020

நான்முகத் தொருவன் மற்றை நாரியோர் பாகன் நிற்க
பால்முகப் பரவைப் பள்ளிப் பாம்பணைப் பரன்என் ருலும்
காலனுக் கேயும் சேறல் அரிதிது கடலின் தன்மை
மேல்உமக் குறுவ தெண்ணிச் செல்லுமின் விளிவில் நாளீர். 1021

எல்லீரும் சேறல் என்பது எளிதன்றுஅவ் இலங்கை மூதூர்
வல்லீரேல் ஒருவர் ஏகி மறைந்துஅவண் ஒழுகி வாய்மை
சொல்லீரே துயரை நீக்கித் தோகையைத் தெருட்டி மீடிர்
அல்லீரேல் என்சொல் தேறி உணர்த்துமின் அழகற்கு அம்மா. 1022

1020-ம் பாட்டு: ஓசனை ஒரு நூறு - மகேந்திரமலையிலிருந்து அல்லது இந்தியாவின் கரையிலிருந்து இலங்கை 100 யோசனை தூரம் என்று இங்கே கூறப்படுகிறது. வால்மீகி ராமாயணத்திலும் இவ்வாறே கூறப்பட்டிருக்கிறது. நூறு யோசனை என்பது சுமார் 4000 மைல். உண்மையில் 200 மைல்களுக்கும் குறைவான தூரமே இருக்கிறது. மகேந்திரமலை, திருநெல்வேலி ஜில்லாவில் பணகுடி என்ற ஊருக்கு மேற்கே உள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் கோடியில் உள்ள சிகரம் அது தான். ''ஓசனை ஒரு நூறு'' என்பதற்கு, ''ஓசனை எழுநூறு'' என்ற பாடமும் உண்டு. ''இலங்கை எழுநூற்றுக் காதவழி'' என்று பொது ஜனங்களிடையே வழங்கி வரும் ஒரு வாசகமும் இங்கே கவனத்துக்குரியது. காதம் என்பது சுமார் 10 மைல்; யோசனை சுமார் 40 மைல். 1022-ம் பாட்டு: உணர்த்துமின் அழகற்கு - சீதை இலங்கையில் இருக்கிருள் என்று இராமனுக்குத் தெரிவியுங்கள்.

காக்குநர் இன்மை யால்அக் கழுகினம் முழுதும் கன்றிச்
சேக்கைவிட்டு இரியல் போகித் திரிதரும் அதனைத் தீர்ப்பான்
போக்குஎனக்கு அடுத்த தையா நல்லது புரிமின் என்று
மேக்குற விசையில் சென்றான் சிறையினால் விசும்பு போர்ப்பான்.

16. மகேந்திரப் படலம்

[மகேந்திர மலையில் வானர வீரர்கள் செய்த ஆலோசனையையும், அனுமான் கடலைத் தாண்டத் தீர்மானித்ததையும் பற்றிக் கூறும் பகுதி]

பொய்யுரை செய்யான் புள்ளரசு இன்னே புகலுற்றான்
கையுறை நெல்லித் தன்மையின் எல்லாம் கரைகண்டான்
மெய்யுரை பெற்றோம் நல்லவை எல்லாம் மிகஎண்ணிச்
செய்யுமின் ஒன்றோ செய்வகை நொய்தின் செயவல்லீர். 1024

சூரியன் வெற்றிக் காதல னோடும் சுடர்விற்கை
ஆரிய னைச்சென் றேதொழு துற்றது அறைகிற்பின்
சீர்நிலை முற்றும் தேருதவ் கொற்றச் செயல்அம்மா
வாரிக டப்பார் யாவர் எனத்தம் வலிசொல்வார். 1025

மாள வலித்தேம் என்றும்இம் மாளா வசையோடு
மீளவும் உற்றேம் அன்னவை தீரும் வெளிபெற்றேம்
காள நிறத்தோ டொப்பவர் மாயக் கடல்தாவுற்று
ஆளும் நலத்தீர் ஆளுமின் எம்ஆ ருயிர்அம்மா. 1026

நீலன் முதல்பேர் போர்கெழு கொற்ற நெடுவீரர்
சால உரைத்தார் வாரி கடக்கும் தகவின்மை
வேலை கடப்பன் மீள மிடுக்கின் றெனவிட்டான்
வாலி அளிக்கும் வீர வயப்போர் வசையில்லான். 1027

வேதம் அனைத்தும் தேர்தர ஒட்டா ஒருமெய்யன்
பூதல முற்றும் ஓர்அடி வைத்துப் பொலிபோழ்தின்
மாதிரம் எட்டும் சூழ்பறை வைத்தே வரமேரு
மோத இளைத்தே தாள்உலை வுற்றேன் விறல்மொய்ம்பீர். 1028

ஆதலின் இப்பேர் ஆர்கலி குப்புற்று அகழ்இஞ்சி
மீது கடத்தித் தீயவர் உட்கும் வினையோடும்
சீதை தனைத்தே ராவர முற்றும் திறனின்றென்று
ஓதி இருத்தான் நாலு முகத்தான் உதவுற்றான். 1029

1028-ம் பாட்டு: தாள்உலை வுற்றேன்-கால் ஊனமானேன். திருமால் ஓரடியால் உலகை அளந்தபோது, திருமாலின் பாதத்தோடு சாம்புவன் இந்த உலகைப் பலமுறை சுற்றி, பறையடித்துக்கொண்டே திருமாலின் வெற்றியை அறிவித்துவந்தான். அப்போது மேருமலை அவன் காலில் படவே அவனது கால் ஊனம் அடைந்தது. 1029-ம் பாட்டு: நாலுமுகத்தான் உதவுற்றான்-பிரமன் பெற்ற சாம்புவன்

யாம்இனி இப்போது ஆர்இடர் துய்த்திங்கு இனியாரைப்
போம்என வைப்போம் என்பது புன்மைப் புகழன்றே
கோமுதல் வர்க்கேறு ஆகிய கொற்றக் குமராநம்
நாமம் நிறுத்திப் பேரிசை தைக்கும் நவைஇல்லோன். 1030

ஆரியன் முன்னர்ப் போதுற உற்ற அதனுனும்
காரியம் எண்ணிச் சோர்வற முற்றும் கடனுனும்
மாருதி ஒப்பார் வேறிலை என்னு அயன்மைந்தன்
சீரியன் மல்தோள் ஆண்மை தெரிப்பான் இவைசெப்பும். 1031

அனுமானைச் சாம்புவன் புகழ்தல்

மேலை விரிஞ்சன் வீயினும் வீயா மிகைநாளீர்
நூலை நயந்து நுண்ணி துணர்ந்தீர் நுவல்தக்கீர்
காலனும் அஞ்சும் காய்சின மொய்ம்பீர் கடன்நின்றீர்
ஆலம் நுகர்ந்தா னும்என வெம்போர் அடர்கிற்பீர். 1032

வெப்புறு செந்தீ நீர்வளி யாலும் விளியாதீர்
செப்புறு தெய்வப் பல்படை யாலும் சிதையாதீர்
ஒப்புறின் ஒப்பார் நும்மலது இல்லீர் ஒருகாலே
குப்புறின் அண்டத்து அப்புற மேயும் குதிகொள்வீர். 1033

நல்லவும் அன்றேர் தீயவும் நாடி நவைதீரச்
சொல்லவும் வல்லீர் காரியம் நீரே துணிகிற்பீர்
வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மிடல்உண்டேல்
கொல்லவும் வல்லீர் தோள்வலி என்றும் குறையாதீர். 1034

மேரு கிரிக்கு மீதுற நிற்கும் பெருமெய்யீர்
மாரி துளிக்கும் தாரை இடுக்கும் வரவல்லீர்.
பாரை எடுக்கும் நோன்மை வலத்தீர் பழியற்றீர்
சூரிய னைச்சென்று ஒண்கை அகத்தும் தொடவல்லீர். 1035

அறிந்து திறத்தாறு எண்ணி அறத்தாறு அழியாரை
மறிந்துரு ளப்போர் வாலியை வெல்லும் மதிவல்லீர்
பொறிந்திமை யாக்கோன் வச்சிர பாணம் புகழூழ்க
எறிந்துழி இற்றேர் புன்மயி ரேனும் இழவாதீர். 1036

போர்முன் எதிர்ந்தால் மூவுல கேனும் பொருளாகா
ஓர்வில் வலம்கொண்டு ஒல்கல்இல் வீரத்து உயர்தோளீர்
பாருல கெங்கும் பேரிருள் சிக்கும் பகலோன்முன்
தேர்முன் நடந்தே ஆரிய நூலும் தெரிவுற்றீர். 1037

நீதியின் நின்றீர் வாய்மை அமைந்தீர் நினைவாலும்
மாதர் நலம்பே ணுது வளர்ந்தீர் மறையெல்லாம்
ஓதி உணர்ந்தீர் ஊழி கடந்தீர் உலகீனும்
ஆதி அயன்தா னேஎன யாரும் அறைகின்றீர். 1038

1036-ம் பாட்டு : பொறிந்திமையாக்கோன் - தீப்பொறிகள் பறக்க விழித்து, இந்திரன். 1038-ம் பாட்டு: மாதர் நலம் பேணுது வளர்ந்தீர்-பெண்ணின்பத்தைக் கருதாமல் பிரம்மச்சாரியாகவே

அண்ணல்அம் மைந்தற்கு அன்பு சிறந்தீர் அதனுலே
கண்ணி உணர்ந்தீர் கருமம் நுமக்கே கடன்என்னத்
திண்ணிது அமைந்தீர் செய்து முடிப்பீர் சிதையாதீர்
புண்ணியம் ஒன்றே என்றும் நிலேக்கும் பொருள்கொண்டீர். 1039

அடங்கவும் வல்லீர் காலம்அது அன்றேல் அமர்வந்தால்
மடங்கல் முனிந்தா லன்ன வலத்தீர் மதிநாடித்
தொடங்கிய தொன்ருே முற்றும் முடிக்கும் தொழிலல்லால்
இடம்கெட வெவ்வாய் ஊறு கிடைத்தால் இடையாதீர். 1040

ஈண்டிய கொற்றத்து இந்திரன் என்பான் முதல்யாரும்
பூண்டு நடக்கும் நன்னெறி யாலும் பொறையாலும்
பாண்டிதர் நீரே பார்த்தினிது உய்க்கும் படிவல்லீர்
வேண்டிய போதே வேண்டுவ எய்தும் வினேவல்லீர். 1041

ஏகுமின் ஏகி எம்உயிர் நல்கி இசைகொள்ளீர்
ஓகை கொணர்ந்தெம் அன்னேயும் இன்னற் குறையில்லாச்
சாகரம் முற்றும் தாவிடும் நீர்இக் கடல்தாவும்
வேகம் அமைந்தீர் என்று விரிஞ்சன் மகன்விட்டான். 1042

சாம்பன் இயம்பத் தாழ்வத னத்தா மரைநாப்பண்
ஆம்பல் விரிந்தா லன்ன சிரிப்பான் அறிவாளன்
கூம்ப லொடும்சேர் கைக்கம லத்தன் குலம்எல்லாம்
ஏம்பல் வரத்தன் சிந்தை தெரிப்பான் இவைசொன்னுன். 1043

வேறு

நீயிரே நினேவின் முன்னம் நெடுந்திரைப் பரவை ஏழும்
தாய்உல கனேத்தும் வென்று தையலேத் தருதற் கொத்தீர்
போய்இது புரிதி என்று புலமைதீர் புன்மை காண்டற்கு
ஏயினிர் என்னில் என்னின் பிறந்தவர் யாவர் இன்னும். 1044

வளர்ந்தீர். ஊழிகடந்சீர்-சிரஞ்சீவி ஆனீர். ஆதி அயன்...அறைகின்றீர்-பிரமன் என்று அனேவராலும் கூறப்படுகிறீர். பிற்காலத்தில் அனுமான் பிரம்ம பட்டத்தைப் பெற்ருன் என்பது குறிப்பிடத்தக்கது. 1039-ம் பாட்டு: அண்ணல் அம் மைந்தற்கு-இராமனுக்கு. 1041-ம் பாட்டு: பாண்டிதர்-பண்டிதர் என்பதன் நீட்டல் விகாரம். 1042-ம் பாட்டு: அன்னேயும்......தாவிடும் - சீதையும் துன்பக் கடல் முழுவதையும் தாண்டுவாள். 1043-ம் பாட்டு: அறிவாளன்-அனுமான். 1044-ம் பாட்டு: புலமைதீர்......இன்னும்-என்னுடைய அறிவற்ற அற்ப ஆற்றலேக் காணவேண்டுமென்று என்னே இலங்கைக்குப் போகுமாறு ஏவினீர்கள். நீங்கள் ஏவியதனுல், என்னேவிட அதிர்ஷ்டசாலியாகப் பிறந்தவர்கள் யார் இருக்கிருர்கள்? (இது அனுமான் அவையடக்கமாகச் சொன்ன வாசகம்.)

இலங்கையை இடந்து வேரோடு இவ்வயின் தருகென் ருலும்
விலங்கினர் தம்மை எல்லாம் வேரொடும் விளிய நூறிப்
பொலங்குழை மயிலைக் கொண்டு போதெனப் புகன்றிட் டாலும்
கலங்கலிர் உரைத்த மாற்றம் முடிக்குவன் கடிதில் காண்பீர். 1045

ஓசனை ஒன்று நூறும் உள்ளடி உள்ள தாக
ஈசன்மண் அளந்தது ஏய்ப்ப இருங்கடல் இனிது தாவி
வாசவன் முதலோர் வந்து மலையினும் இலங்கை வாழும்
நீசரை எல்லாம் நூறி நினைத்தது முடிப்பன் பின்னும் 1046

முற்றும்நீர் உலகம் முற்றும் விழுங்குவான் முழங்கி முந்நீர்
உற்றதே எனினும் அண்டம் உடைந்துபோய் உயர்ந்த தேனும்
இற்றைநும் அருளும் எங்கோன் ஏவலும் இரண்டு பாலும்
கற்றைவார் சிறைக ளாகக் கலுழனில் கடப்பல் காண்மீர். 1047

ஈண்டினிது உறைமின் யானே எறிகடல் இலங்கை எய்தி
மீண்டிவண் வருதல் காறும் விடைதம்மின் விரைவின் என்ளு
ஆண்டுஅவர் உவந்து வாழ்த்த அலர்மழை அமரர் தூவச்
சேண்தொடர் சிமயத் தெய்வ மகேந்திரத் தும்பர் சென்ருன். 1048

பொருவரு வேலை தாவும் புந்தியான் புவனம் தாய
பெருவடி வுயர்ந்த மாயோன் மேக்குறப் பெயர்த்த தாள்போல்
உருவறி வடிவில் உம்பர் ஓங்கினன் உவமை யாலும்
திருவடி என்னும் தன்மை யாவர்க்கும் தெரிய நின்ருன். 1049

அனுமான் கடலைத் தாண்டுவதற்காக நிற்றல்

பார்நிழல் பரப்பும் பொற்றேர் வெயிற்கதிர்ப் பரிதி மைந்தன்
போர்நிழல் பரப்பும் மேலோர் புகழென உலகம் புக்குத்
தார்நிழல் பரப்பும் தோளான் தடங்கடல் தாவா முன்னம்
நீர்நிழல் உவரி தாவி இலங்கைமேல் செல்ல நின்ருன். 1050

பகுவாய மடங்கல் வைகும் படர்வரை முழுதும் மூழ்க
உகுவாய விடம்கொள் நாகத்து ஒத்தவால் சுற்றி ஊழின்
நெகுவாய சிகர கோடி நெரிவன தெரிய நின்ருன்
மகஆமை முதுகில் தோன்றும் மந்தரம் எனலும் ஆனுன். 1051

1045-ம் பாட்டு: போதென - போது என: வா என்று. 1047-ம் பாட்டு: உயர்ந்ததேனும்-மேலே பறந்தாலும். 1048-ம் பாட்டு: தம்மின்-கொடுங்கள். 1049-ம் பாட்டு: உவமையாலும் திருவடி- திருமாலுக்கு வாகனமாக இருப்பதால் அனுமானுக்குச் சிறிய திருவடி என்ற ஒரு பெயர் உண்டு; (பெரிய திருவடி, கருடன்.) இப்போது இலங்கைக்குச் செல்லக் கடலைத் தாண்டுவதற்கு விண்ணுக்கும் மண்ணுக்குமாக வளர்ந்து, உலகளந்த காலத்தில் திருமாலின் பாதம் வளர்ந்ததுபோலப் பிரம்மாண்டமாகக் காட்சியளித்ததால், உவமையாலும் அனுமான் திருவடியாக இருந்தான். 1050-ம் பாட்டு : பரிதி மைந்தன் - சூரியன் என்ற பலசாலி. தார் நிழல்பரப்பும்தோளான் - அனுமான். தடங்கடல்தாவாமுன்னம் -

மின்நெடுங் கொண்டல் தாளின் வீக்கிய கழலின் ஆர்ப்பத்
தன்நெடுந் தோற்றம் வானோர் கட்புலத் தெல்லே தாவ
வல்நெடுஞ் சிகர கோடி மகேந்திரம் அண்டம் தாங்கும்
பொன்நெடுந் தூணின் பாத சிலேஎனப் பொலிந்து நின்ருன். 1052

கிஷ்கிந்தா காண்டம் முற்றுப்பெற்றது

மேற்குக் கடலேத் தாண்டி அஸ்தமிப்பதற்குமுன். ''சூரியன் அஸ்தமிப்பதற்குமுன்பாக அனுமான் இலங்கையை அடைவதற்கு மகேந்திரமலேயின் உச்சியில் ஏறி நின்ருன்'' என்ற விஷயத்தைத் தெரிவிக்கவந்த இந்தப் பாட்டு, தக்கவாறு அமையவில்லே எனத் தோன்றுகிறது. முதல் அடியிலுள்ள ''பரிதிமைந்தன்'' என்பது இராமனேக் குறிப்பதாக வைத்துக்கொண்டு வேறு ஒரு விதமாகப் பொருள் கூறுவதும் சாத்தியமே. 1051-ம் பாட்டு : ஊழின் நெகுவாய - ஊழிக் காலத்தில் மட்டுமே அழியக்கூடிய. மகஆமை - திருமாலின் கூர்மாவதாரம். பாற்கடல் கடைந்தபோது, திருமால் ஆமைவடிவம் எடுத்து, மத்தாக இருந்த மந்தர மலேக்குக் கீழே ஆதாரமாக இருந்து தாங்கினுன். 1052-ம் பாட்டு : மகேந்திரம்... சிலே என - உலகத்தைத் தாங்கும் பெரிய தங்கத் தூண்போல் அனுமான் விளங்க, அத்தூணின் அடியில் இட்ட கல்லேப்போல மகேந்திர மலே விளங்கியது.

கிஷ்கிந்தா காண்டம்

பாட்டு முதற் குறிப்பு அகராதி

(எண்–பாட்டின் எண்)

அரும்பத உரை அகராதி

அ

அஃகல்-குறைதல்
அஃகுதல்-குறைதல்
அகடு-நடுப்பாகம், வயிறு
அகணி-மருத நிலம், நெல் வயல், உள் இடம்
அகத்துறை-அகப்பொருள் இலக்கணத்துறை
அகப்படுத்தல்-உள்ளடக்குதல்
அகம்-இருள், இடம், பாவம்
அகலம்-மார்பு
அகல்-சட்டி
அகழ்தல்-தோண்டுதல்
அகறி-அகல்கிறுய்; நீங்கிப் போகிறுய்
அகன்றில்-ஆண் அன்றில்
அகிலம்-உலகத்தில் உள்ள சகல சராசரங்கள்
அக்குவடம்-சங்குமணிமாலை; எலும்பு மாலை என்றும் பொருள் உண்டு
அங்கண்மாஞாலம் - இடம்பரந்த பெரிய உலகம்
அங்கம்-யோகத்தின் எட்டு அங்கங்களில் ஒன்று, உறுப்பு
அங்கி-அக்கினி
அசனம்-உணவு
அசும்பு-ஊற்று, சேறு
அசைதல்-கட்டுதல்
அச்சு-இருசு
அஞ்சனம்-மை
அட-கொல்ல
அடர்த்தல்-கொல்லுதல், போரிடுதல்
அடர்ந்து-நெருங்கி
அடல்-வலிமை
அடவி-காடு
அடி நாள்-முன்னுள்
அடிய-ஆதியான
அடுக்கல்-மலை
அடுதல்-கொல்லுதல், அழித்தல்
அடுத்தது - தகுதியானது, சேர்ந்தது
அடை-இலை, கீரை, தேன் கூடு
அடைப்பை-வெற்றிலைப்பை
அடைய-ஒருசேர, மறைய
அடையீர்-பக்கத்தில் வரமாட்டீர்
அடைவு-முறை, காரணம்
அட்டம்-எட்டு
அணங்கு-தேவ மாது, அழகி, வருந்து
அணவு-கிட்டுதல், ஆதரவு
அணி-அலங்காரம், அழகு, ஆபரணம்
அணை-பஞ்சணை
அண்டகோளம்-உலக உருண்டை
அண்டசம்-முட்டையிலிருந்து பிறப்பது
அண்டம்-உலகம், முட்டை
அண்டராதியர்-தேவர்கள் முதலானேர்
அண்டர்-இடையர், தேவர்
அண்ணல்-தலைவன்
அதர்-வழி
அதவம்-அத்திக்கட்டையினல் செய்த அகப்பை
அதனினும்-அதனுலும்
அதிசயம்-புதுமை, நியதிக்கு மாறுன காரியம்
அதிகன்-பெரியவன்
அதுக்குதல்-கடித்தல்
அத்தன்-அப்பன்
அத்தி-கடல்
அத்துணை-அம்மட்டு அவ்வளவு, அந்தச் சமயம்
அந்தகன்-எமன், குருடன்
அந்தணன்-பிராமணன், பிரமன்
அந்தம்-முடிவு, அழகு
அந்தரம்-ஆகாயம், ஆகாய மார்க்கம், வெளியே, துன்பம், தீமை
அந்தியாள்-மாலை நேரம் என்ற பெண்
அப்பு-தண்ணீர், அம்பு
அமரும்-குறுகிக் கிடக்கும்
அமர்-போர்

அமர்த்தலே-போரினிடத்து
அமலன்-குற்றமற்றவன்
அமலே-மிகுந்த ஆரவாரம்
அமைதி-சமயம், காரணம்,
சம்மதித்தல், பொருத்தம்
அம்பரம்-ஆகாயம், தேவலோகம்
அம்மனே-அம்மா
அம்மான்-தகப்பன், தாய்மாமன்
அம்மை-அப்பிறப்பு, அடுத்த
பிறப்பு
அயர்தல்-செய்தல்
அயர்த்தல்-மறத்தல்
அயர்வு-சோர்வு, வருத்தம்
அயல்-பக்கம்
அயனம்-மார்க்கம்
அயா-மனவருத்தம்
அயா உயிர்த்தல்-நீண்ட
மூச்சு விடுதல்
அயினி-சோறு
அயிராது-சந்தேகம் கொள்ளாது
அயிர்-நுண்மணல், சந்தேகம்
அயிர்த்தல்-சந்தேகித்தல்
அயிர்ப்பு-மயக்கம்
அயிலும்-உண்ணும்
அயில்-கூர்மை; வேலாயுதம்
அரங்கு-சபை
அரசன்னம்-ராஜ அன்னம், சிறந்த
ஜாதி அன்னம்
அரணி-நெருப்புக்கடையும் கோல்
அரண் - பாதுகாவல், கோட்டை
அரத்தம்-ரத்தம்
அரந்தை-துன்பம்
அரமகள்-தேவலோகத்துப் பெண்
அரம்பை-வாழை
அரவம்-பாம்பு, சப்தம்
அரவிந்தம்-தாமரை
அரவிந்தராகம்-பதுமராகம்: ஒரு
வகைச் சிவப்பு ரத்தினம்
அரற்றுதல்-கதறுதல், கூக்குர
லிடுதல்
அராகம்-சிவப்பு
அராவணே-பாம்பணே, சேஷ
சயனம்
அராவுதல்-அரத்தினுல் ராவுதல்
அரி-திருமால், சிங்கம், குதிரை,
குரங்கு, சிவப்பு, கண்ணின்
செவ்வரி, வண்டு, கால் சிலம்பி
னுள் கிடந்து ஒலிக்கும் பருக்
கைக்கற்கள்.
அரிந்தம-(பகைவர்களே) அழிப்ப
வனே
அரிமா-சிங்கம்
அருகுறு-அருகில் பொருந்திய
அருக்கன்-சூரியன்
அருங்கடி-அரிய பாதுகாவல்
அருணன்-சூரியனுடைய தேரைச்
செலுத்தும் சாரதி, சூரியன்
அருத்தி-ஆசை, ஆவல்
அருந்ததி-ஒரு மலே
அருப்பம்-அரண், காவல், தடுத்
தல், அற்பம், ஊர்
அருமந்து-அரிய மருந்து
அருமை-அரியது
அரும்புதல்-துளித்தல்
அருள்-கருணே
அரோ-அசை; இதற்குப் பொருள்
இல்லே. பாட்டின் ஓசையை
நிரப்புவது ஒன்றே இதன் காரி
யம்,
அலகை-பேய்
அலகிடல்-அளவிடல்
அலகு-ஆயுதம், விரிவு, அளவு
அலக்கண்-துன்பம்
அலங்குதல்-அசைதல், விளங்கு
தல்
அலங்கு-பொருந்து, விளங்கு,
அசை
அலச-அலேய, வருந்த
அலந்த-துன்பம் அடைந்த
அலமந்தனள்-மனம் கலங்கினள்
அலமரல்-நிலே கலங்குதல், வருந்
தல், தடுமாறல்
அலம்-துன்பம், அசைகிற
அலம்புறுதல்-அலேதல்
அலரி-சூரியன்
அலர்-மலர்

அலேதல்-வருந்தல்
அலேத்தல்-வருத்துதல்
அலேயர்-துன்பப்படமாட்டார்
 பயப்படமாட்டார்
அலேயோ-அல்லவா?
அல் -இரவு, இருள்
அல்குதல்-சுருங்குதல், அழிதல்
அல்லி-பூவின் உட்புற இதழ்
அவசம்-தன்னே மறந்த நிலே
அவதி-அளவு, எல்லே, தவணே,
 முடிவு
அவம்-வீண், அழிவு
அவலம்-துன்பம்
அவி-அவியும், அழியும், ஒடுங்கும்,
 அமையும், தேவர் உணவு
அவிந்த-(பேச்சு) ஒழிந்த
அவியுறு-அவிந்த
அவிர்-பிரகாசிக்கும், விளங்கும்
அவிழ்ந்தன-அவிழ்ந்தது போன்ற
அழலுதல்-கோபித்தல்
அழல்-நெருப்பு
அழுங்குதல்-வருந்துதல், கெடுதல்
அழுவம்-கடல், ஆழம், குழி,
 மிகுதி
அளகம்-பெண்களின் கூந்தல்,
 முன்நெற்றி மயிர்
அளகவண்டு-கூந்தலேப் போன்ற
 கருவண்டு
அளாவி-தழுவி, சேர்ந்து, கலந்து
அளி-கருணே, வண்டு, இனிமை,
 கொடு, காப்பாற்று
அளிந்து-கனிந்து, கலந்து
அளும்-அள்ளும், பற்றும் இரும்பும்
அளேந்து-துழாவி, குழைத்து
அள்-பற்றும் இரும்பு
அள்ளல்-சகதி, சேறு
அறம்தலே-தருமநெறி,
 தருமத்தினிடம்
அறல்-கருமணல்
அறிதலாகும்-தெரியவரும்
அறுதி-முடிவு
அறுபதம்-ஆறுகால்கள் கொண்ட
 வண்டு
அறை கூவுதல்-அழைத்தல்
அற்பு-அன்பு
அற்றது-அப்படிப்பட்டது,
 இல்லாமல் போனது
அற்றம்-சமயம், ஆபத்து
அற்ருன்-அப்படிப்பட்டவன்
அற்று-அவ்வார்த்தைகளே,
 அவ்வாருனவற்றை
அன-அன்ன; போல, போன்ற
அனகன்-குற்றமற்றவன்
அனங்கசாபம்-மன்மதனுடைய
 வில்
அனந்தம்-முடிவற்ற, அளவற்ற
அனந்தன்-ஆதிசேஷன்
அனுன்-போன்றவன்
அனுங்க-வருந்த
அனுசன்-தம்பி
அன்றே-தெளிவு என்பதைப் புலப்
 படுத்தும் சொல். பொருள் இல்
 லாத அசையாகவும் வருவ
 துண்டு.
அன்ன-அப்படிப்பட்டவை, போல
அன்ன ஊர்தி-அன்னவாகனனுன
 பிரமன்
அன்னு-அப்படிப்பட்ட
அன்னே-ஐயோ

ஆ

ஆஉயர்-அந்த உயர்ந்த,
 மிக உயர்ந்த
ஆகம்-மார்பு, நெஞ்சம்
ஆகரம்-உருவம்
ஆகும்-இது அசையாகவும் வரும்.
 அப்போது இதற்குப் பொருள்
 கிடையாது
ஆக்கை-உடம்பு
ஆங்கு-அங்கு, இது ஓர் அசையும்
 ஆகும்.
ஆசடை-(ஆசு+அடை) குற்றம்
 பொருந்திய
ஆசறுதல்-முடிதல்
ஆசில- (ஆசு+இல) குற்றமில்லா
 தவை
ஆசு-குற்றம், பற்றுக்கோடு

ஆசை-திசை
ஆடகம்-தங்கம்
ஆடல்-வெற்றி, போர்
ஆடுதல்-குதித்தல், நடனம் ஆடுதல், குளித்தல், விளையாடுதல்
ஆணி-அச்சாணி, உரையாணி; தங்கத்தின் மாற்றைக்கண்டு பிடிக்க உரைக்கப்படும் தங்க ஆணி
ஆணிப்பொன்-உயர்ந்த மாற்றுள்ள பொன்னின் உரையாணி, தங்கத்தின் மாற்றைச் சோதித்து அறிய, உரையாணியை உரசி, அதனோடு ஒப்பிட்டுப் பார்ப்பார்கள்.
ஆணை ஆழி-ஆக்ஞா சக்கரம்
ஆண்டான்-ஆண்டவன்
ஆண்டிறந்து-அவ்விடத்தை நீங்கி
ஆண்டு-அங்கு
ஆண்டையான்-அந்நிலையில் உள்ளவன், எசமானன்
ஆதபம்-வெயில்
ஆதரம்-ஆசை, அன்பு
ஆதரித்தல்-விரும்புதல்
ஆதன்-மூடன்
ஆதும்-ஆவோம்
ஆத்தல்-யாத்தல்: கட்டுதல்
ஆமிடம்-நுகரத்தக்க வஸ்து
ஆம்-ஆகும், தகும், பொருந்தும்
ஆம்பி-காளான்
ஆயம்-பெண்கள் கூட்டம், கூட்டம்
ஆயிடை-அவ்விடத்தில், அந்தச் சமயத்தில்
ஆயிரக்கால்-ஆயிரம் தடவை
ஆயிரம் கண்ணவன்-இந்திரன்
ஆயிழை-தெரிந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்
ஆயு-ஆயுள், வாழ்நாள்
ஆயும்-ஆராயும்
ஆய்-ஆக, ஆகி
ஆய்ச்சி-முல்லைநிலத்துப் பெண், இடைப் பெண்
ஆய்மை-ஆராய்ச்சி
ஆய்வினால்-ஆயாசத்தினால், களைப்பினால்
ஆரணம்-வேதம்
ஆரியம்-சமஸ்கிருதம்
ஆரியன்-ஆரிய சாதியினன், சிறந்தவன்
ஆர்-அரிய, நிறைந்த, பொருந்தும், ஆரக்கால், ஒளி
ஆர்கலி-கடல், வெள்ளம், பேரொலி செய்கின்ற
ஆர்கலி நஞ்சு-பாற்கடலில்தோன்றிய விஷம்
ஆர்த்தல்-ஆரவாரம் செய்தல்
ஆர்வத்தோர்-அன்பர்
ஆலம்-நஞ்சு, ஆலமரம்
ஆலி-நீர், நீர்த்துளி, துளி
ஆலும்-ஒலி செய்யும், ஆடும்
ஆல்-ஆதலால்; பாட்டின் ஓசையை நிரப்பும் அசையாக வரும் போது இதற்குப் பொருள் கிடையாது
ஆவது-அந்த அது; அது
ஆவம்-அம்பறாத் தூணி, அம்புகள் வைக்கும் கூடு
ஆவி-புகை, உயிர், வாவி, பொய்கை. தண்ணீர் நிறைந்த பொய்கையை ''நீராவி'' என்று கிராமத்து மக்கள் கூறுவது கவனிக்கத் தக்கது
ஆழி-கடல், சக்கரம், வட்டம்
ஆழித் தீ-கடலில் தோன்றும் வடவாமுகாக்கினி
ஆழியான்-பாற்கடலில்வாழ்வோனாகிய திருமால், அல்லது சக்கராயுதம் தரித்த திருமால்
ஆளி-யாளி: துதிக்கையுடையதும், யானையைக் கொல்லுவதும், சிங்கத்தைப் போன்றதுமான ஒரு கற்பனை மிருகம், சிங்கம்
ஆளுதல்-பாதுகாத்தல், வீரம்

காட்டுதல்
ஆள்-குடிகள்
ஆறு-தணியும், வழி, வகை, விதம்
ஆறும் ஆறும்-அவ்வாருன
ஆற்ற-மிகுந்த, செய்ய
ஆற்ருன்-முடியாதவன்
ஆற்றுதல்-பொறுத்தல்
ஆற்றினை-செய்து கொண்டாய், வல்லமை பெற்ருய்
ஆனவன்-வேண்டியவன்
ஆனு-நீங்காத, கெட்டுப்போகாத
ஆன்-பசு
ஆன்ற-சிறந்த,மிகுந்த,நிறைந்த, அமைந்த

இ

இகந்து-கடந்து
இங்கிதம்-குறிப்பு, சைகை
இசை-கானம், இசை, ஆரவாரம், கீர்த்தி, கூட்டம்
இசைக்கும்-பொருந்தும்
இசைத்தல்-சொல்லுதல்
இசையன-இசைந்து இருப்பன
இஞ்சிரும்-இஞ்சு இரும்: இங்கே இருப்பீராக
இடங்கர்மா-முதலை
இடந்தாய்-குத்தி எடுத்தவனே
இடந்து-பெயர்த்து, பிளந்து
இடம்-சமயம்
இடம் கெட-சீர்குலைய, தக்க சந்தர்ப்பம் கெட, வலிமை அழிய
இடுங்குதல்-நெருங்குதல், ஒடுங்குதல்
இடை-இடம், சமயம், வித்தியாசம்
இடைதல்-பின்வாங்குதல், தளருதல்
இடைந்து-தோற்று, பலம்கெட்டு
இட்டிடை-சிறிய இடை
இணங்கர்-இணக்கம், சம்மதம், சகாயமாக உதவுவோர்
இணர்-பூ, பூங்கொத்து,மகரந்தப் பொடி
இணை-ஜோடி
இதண்-பரண்
இதம்-நன்மை
இந்தனம்-விறகு
இந்தியம்-இந்திரியம்: புலனுணர்ச்சி
இந்திரி-இந்திரன் திசை: கிழக்கு
இந்து-சந்திரன்
இந்துகாந்தம் - சந்திர காந்தக் கல்
இபம்-யானை
இமிழ்-தழைத்த; பருத்த (இனிய ?)
இமைத்தல் - கண் இமைத்தல், ஒளி வீசுதல்
இமைப்பில் காலை - கண் இமைக்கும் நேரத்துக்குள்ளாகவே
இம்பர்-இவ்வுலகம்; மண்ணுலகம்
இம்மை—இப் பிறப்பு
இயக்கர்-யக்ஷர் : 18 வகையான தேவசாதிகளுள் ஒரு சாதியினர் ; இவர்களுக்கு அரசன் குபேரன்
இயக்கில்-போக்கில், போக்கு இல்லாத
இயக்கு-இயக்கம், சஞ்சாரம்
இயலி-இயல்பு உடையவள்
இயல்-இயற்கை, பொருந்தும்
இயாக்கை-யாக்கை: உடம்பு
இரக்கம்-பரிதாபம், துன்பம்
இரங்க-வருந்த
இரதம்-ரசம், சுவை
இரலை-கலைமான்
இரலையின் குன்றம்-மான்மலை: இருசியமூக மலை
இரவலர்-யாசகர்
இரிதல்-ஓடுதல், நிலை கெடுதல், அழிதல்
இரியல்-பயத்தால் நிலைகெடுதல், ஓடுதல், அழுகை
இரு-பெரிய, இரண்டு
இருக்கு-வேதம்

இருக்கை-ஆசனம், இருப்பிடம்
இருங்கலை-மிகுந்த கலை
இருது-ருது, பருவம்; 2 மாதங்கள் கொண்டது
இருத்தவம்-பெருந்தவம்
இருந்தை-கரி
இருமை-இரண்டு பக்கங்கள்
இருவி-அறுக்கப்பட்ட தினைப்பயிரின் தாள்
இரைத்தல் - ஒலிசெய்தல், கதறுதல், வீங்குதல், மூச்சு வாங்குதல்
இலக்கணம்-லக்ஷணம்
இலக்கம்-இலக்கு : குறி
இலை ஆனாய்-இல்லாதவனாகப் போய்விட்டாய்
இல் இயல்பு-இல்லற இயல்பு
இல்வரம்பினர்-இல்லறத்தில் நிற்பவர்
இவர்தல்-ஏறுதல், விரிதல்
இவறி-முன்னும் பின்னுமாகச் சென்று மோதி
இவ்வோ-இவையோ
இழிதல்-இறங்குதல்
இழிவு-குறைவு
இழிய-இழிவடைந்த, தோற்ற
இழுக்கு-வழுக்கல்
இழுது-நெய்
இழுதை-பேய், பொய், அறிவின்மை, பேதைமை
இழை-ஆபரணம்
இழைத்தல்-செய்தல், சிந்தித்தல், ஆராய்தல்
இழைபடு – இழைகின்ற, ஒன்று சேர்கின்ற
இழைப்பல்-செய்வேன்
இளவல்-தம்பி
இளி-ஏழு சுரங்களில் ஐந்தாவதான பஞ்சமம், வீணையின் ஒரு நரம்பு, பரிகாசச் சிரிப்பு
இளை-இளையவன்
இளையா-இளையவனே, இளைக்காத
இறக்கம்—நிலை தவறுதல்
இறக்கை-இறத்தல்
இறத்தல்-நிலை கடத்தல், இழத்தல்
இறந்தான்-கழிந்தான்
இறல்-அழிதல்
இறவு-ஆள் நீங்கிய சமயம்
இறுக்கும்-கொடுக்கும்
இறுதி-முடிவு, ஊழிக்காலம்
இறுத்த-வரையறுக்கப்பட்ட
இறுத்தல்-முறித்தல், அழித்தல், சொல்லுதல், தங்குதல், தைத்தல், வந்துசேருதல், முடித்தல், உடைத்தல், வடித்தல்
இறை-இறைவன், தலைவன், அரசன், மேன்மை, சிறிது, ஊழித்தீ
இறைஞ்சுதல்-வேண்டுதல், வணங்குதல்
இற்றவன்-அழிந்தவன்
இற்று-இவ்வாறானவை, இப்படிப்பட்டது, இன்று, இப்பொழுது, பலம் இழந்து, இத்தன்மை உடையது
இனதன-இன்னாதன: தீயவை
இன்-இனிய
இன்று-இல்லை
இன்னணம்-இவ்வாறு
இன்னவா-இன்னவாறு
இன்னா-தீமை, துன்பம், இனிமையற்றது. பிடிக்காதது
இன்னே-இவ்வாறு

ஈ

ஈகலான்-கொடுக்காதவன்
ஈடழிவு-பெருமையின் அழிவு
ஈடு-வலிமை, இணை, பெருமை, மனவருத்தம், குழைவு
ஈட்டது-தன்மையை உடையது
ஈட்டதே-ஈடு ஆகுமோ
ஈட்டம்-கூட்டம்
ஈட்டுதல்-சேர்த்தல்
ஈண்டார் - விருத்தியடைய மாட்டார், இவ்விடத்தில் உள்ளார், இங்கு யார்

ஈண்டு-இங்கு
ஈண்டுதல்-பொருந்துதல், திரளுதல், கூடுதல், நெருங்குதல்
ஈமம்-பிணத்தை எரிப்பதற்காகச் சுடுகாட்டில் அடுக்கப்படும் விறகு அடுக்கு
ஈரம்-கருணை
ஈர்-அறுக்கும், ஈரம்
ஈர்தல்-அறுத்தல், பிளத்தல், அராவுதல்
ஈர்த்தல்-கவர்தல், இழுத்தல்
ஈறிடல்-முடிவு காணுதல்
ஈறு-முடிவு

உ

உகள்வன-உருண்டு செல்வன
உகிர்-நகம்
உகீர்-உகிர் என்பதன் போலி: நகம்
உகுதல்-சிந்துதல், சிதறுதல், சொரிதல்
உக்க-நீங்கிய
உங்கை-உம் தங்கை
உசநவன்-சுக்கிரன்
உச்ச-உயர்ந்த
உஞ்சால்-உய்ந்தால் என்பதன் போலி : பிழைத்தால்
உஞ்சு-உய்ந்து என்பதன் போலி: தப்பிப் பிழைத்து
உடலம்-உடல்
உடலினர்-போரிட்டனர்
உடற்படும்-உடலில்படும், உடன்படும்
உடற்றல்-போரிடல்
உடற்றுதல்-வருத்துதல்
உடனே-கூடவே
உடுபதி-சந்திரன்
உடைதல்-நிலைகுலைதல்
உடைந்தார் - உறுதி கெட்டனர், தோற்று ஓடினர்
உட்கி-பயந்து
உணங்குதல்-வருந்துதல், வாடுதல்
உணர்ச்சி-அறிவு
உணர்வத்தினன்-அறிவை உடையவன்
உணர்வு-அறிவு
உண்டாட்டம்-விளையாட்டு
உண்மை-மெம், உள்ளது
உந்தி-செலுத்தி
உந்துதல்-தள்ளுதல்
உப்பு-பருக்கும், பொங்கும்
உமர்-உம்மைச் சேர்ந்தவர்
உமிழும்-ஒலிக்கும்
உம்பர்-ஆகாயம், மேல் உலகம், தேவர்கள், அப்பால்
உயங்குதல்-மயங்குதல், வருந்துதல், சோர்தல்
உயவு-துன்பம்
உயிர்காண்பென்-இறப்பேன்
உயிர்த்தல்-சுவாசித்தல், பிழைத்தல், பெறுதல், தோன்றுதல், வெளியே விடுதல்
உயிர்நிலை-உயிர் இருக்கும் இடம், மர்மஸ்தானம்
உய்ஞ்சனம்-உய்ந்தனம் : வாழ்வடைந்தோம்
உய்த்தல் - கொண்டு சேர்த்தல், செலுத்தல்
உய்த்து வாழ்தர - வைத்துக் கொண்டு வாழ
உய்ப்பல்-கொண்டு சேர்ப்பேன்
உய்வுறுத்துவென்-பிழைக்க வழி செய்வேன்
உரப்பி-அதட்டி
உரகர்-நாகர், பாதாளலோகத்தினர்
உரம்-மார்பு, வலிமை
உரவிலோய்-பலமான வில்லை உடையவனே
உரறல்-முழங்குதல்
உரற்றுதல்-பேரொலி செய்தல்
உரன்-திறமை, மார்பு
உராவரும்-உராயும், (உராவு+அரும் என்று பிரித்தால்) தாங்குதற்கு அரிய

உரிஞ்சி-உராய்ந்து
உரிஞ்சுறு-உராயப்படும், கழலும்
உரித்தோ-உரியதோ
உரிமை-கடமை
உரிமைத்தாமோ-தகுதியாமோ
உருக்கிய-அழித்த, கரைத்த
உருக்கு-இரும்பு
உருங்க-உண்ண
உருத்தல்-கோபித்தல், உருவம் காட்டுதல்
உருத்தனை-உருவம் தன்னை
உருத்திரன்-சிவன்
உருமு-இடி
உரும் ஏறு-ஆண் இடி; பெரிய இடி
உருள்-சக்கரம்
உரை ஒக்குமோ-சொல் பொருந்துமோ
உரைத்தல்-தேய்த்தல்
உலக்குவித்து-சிதைத்து
உலந்து-ஒழிந்து, அழிந்து, இறந்து
உலப்பு-தனித்தனியாகப் பிரிந்து ஒழிதல், அழிதல், அளவிடுதல்
உலவா-முடியாத
உலவை-பட்டமரம்
உலாம்-உலாவும்
உலைந்த கண்-பார்வை மழுங்கிய கண்
உலைய-வருத்தம் உண்டாக, வருந்த
உலையல்-வருந்தவேண்டாம்
உலைவு-அழிவு
உலோவினர்-கஞ்சத்தனம் பண்ணியவர்
உவணபதி-கருடன்
உவரி-உப்புக்கடல், கடல்
உவா-அமாவாசை
உவாமதி-பூரண சந்திரன்
உழக்கும்-வருந்தும்
உழத்தி-மருத நிலத்துப் பெண், குடியானவப் பெண்.
உழவன்-வீரன்
உழி-இடம், பக்கம், அளவில்
உழுந்து பேர்வுழி-உளுந்து புரளும் நேரத்துக்குள்ளாக; மிகக் குறுகிய கால அளவில்
உழும் கதிர்மணி-சாணை பிடித்த பிரகாசமான இரத்தினம்
உழை-இடம், பக்கம், மான், வருந்து
உழைத்த-வருந்திய, வேதனை தருவதான
உழையர்-தூதர், வேலைக்காரர்
உழையள்-பக்கத்தில் இருப்பவள்
உளை-பிடரி மயிர், உள்ளாய்
உளைத்தல்-(கர்ஜனை போன்று) ஒலி செய்தல், ஊளையிடுதல், அழைத்தல்
உளெமோ-இருக்கிறேமோ
உள்குதல்-நினைத்தல், ஆலோசித்தல்
உள்ளிடை-உள்ளிடம்
உற-நெருங்க
உறின்-உற்றால், நெருங்கினால், அடைந்தால்
உறுக்குதல்-பயமுறுத்துதல், அழித்தல்
உறுதல்-அடைதல்
உறுதி-நன்மை, தகுதி, உற்ற காரியம்
உறுத்தல்-முறித்தல், நெருங்குதல், கூடுதல், மிகுதல், சிறுதல், தாக்குதல், உற்றதாகுதல், ஒற்றுதல், அடைவித்தல்
உறுபொருள்-நடந்த காரியம்
உறுவல்-துன்பம்
உறை-இருப்பிடம்
உறை இடல்-உறை போடுதல். பொருள்களை எண்ணியோ, அளந்தோ கணக்கிடும்போது பெரியதொரு தொகைக்கு அடையாளமாக ஒன்றை வைத்தல். உதாரணமாக, ஆயிரம் தேங்காய்களுக்கு ஒரு தேங்காய் வீதம் எடுத்துவைத்துக் கணக்கிடலாம். அப்படி எடுத்துவைக்

கப்பட்ட தேங்காய்கள் 10 இருந்தால், குவியலில் பதினுயிரம் தேங்காய்கள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.
உறைதல்-தங்கி இருத்தல், வசித்தல்
உறையுள்-இருப்பிடம்
உற்கு-உனக்கு
உற்பலம்-மருத நிலத்துக்குரிய செங்கழு நீர்க்கொடி, சிவப்புக் குவளை
உற்றதொத்துழியும்-உற்றது போல ஆகவும்
உன்னுதல்-நினைத்தல், சேருதல்

ஊ

ஊக்கி-வலிமை கொண்டு, உற்சாகம் கொண்டு
ஊக்கும்-செலுத்தும்
ஊங்கு-அவ்விடம்
ஊங்கும்-அப்பாலும்
ஊசல்-தடுமாற்றம்
ஊடாடும்-நடமாடும், கலக்கும்
ஊதியம்-லாபம்
ஊதை-காற்று
ஊரு-துடை
ஊர்-சூரிய, சந்திரர்களைச் சுற்றியுள்ள ஒளி வட்டம்; பரிவேடம், ஊர்ந்து செல்லும்
ஊர் இயன்ற-ஒளிவட்டம் சூழ்ந்த
ஊழியான்-யுக முடிவிலும் அழியாதவன்
ஊழி-முறை, முறைமை
ஊறு-ஸ்பரிசம், இடையூறு, துன்பம், சேதம், காயம்
ஊறுமா-வந்து சேருமாறு, சேருவதை
ஊற்றம்-பலம்
ஊன்றுதல்-தைத்தல், உறுத்துதல், நிலைநிறுத்தல்

எ

எஃகம்-சூலம்
எக்கிய-பசியினுல் வயிறு ஒட்டிய
எங்கை-என் தங்கை
எஞ்ச-குறைய
எஞ்சல்-அழிதல், இறத்தல், மிஞ்சல்
எண்-எண்ணம், கணக்கிடுகை, ஆலோசனை, அறிவு, வரையறை, கணக்கு
எண்பால்-எட்டுத் திசை
எண்மை-தாழ்மை, சுலபம், எண்ணிக்கை
எண்மைஆர்-எண்ணிக்கை நிறைந்த, பற்பல
எதிர்கோள்-எதிர்கொள்ளல், வரவேற்றல்
எதிர்ந்தார்-சந்தித்தார்
எத்தனையும்-எவ்வளவாவது
எந்தாயோ-என் தந்தையே
எந்திரம்-சக்கரம்
எமர்-எம்மைச் சேர்ந்தவர்
எம்பி-என் தம்பி
எம்மனோர்-எம்போன்றவர்
எம்மோய்-எங்கள் தாய்
எயில்-மதில்
எய்துழி-அடைந்த சமயம்
எய்வு-மெலிவு
எரி-தீ
எருத்து-பிடரி
எருவை-கழுகு
எல்-ஒளி, சூரியன்
எல்லி-இருள்
எல்லை-அளவில். கூவும் எல்லை-கூவும் அளவில் கூவும் மாத்திரத்தில்
எல்லீரும்-நீங்கள் எல்லோரும்
எவனோ-ஏன்? எப்படியோ?
எவன்-எது
எவ்வம்-குறை, துன்பம்
எவ்வியது-எய்தது, செலுத்தியது
எழிலாட்டி-அழகி
எழிலி-மேகம்
எழு-தூண், கதவை அடைத்து உட்புறம் போடும் குறுக்குக்

கட்டை, உழலைக் கட்டை, ஒரு வகை ஆயுதம், வளைதடி
எழுவுறு-மேல் எழுகின்ற
எளிமை-இழிவு
எள்-எள்ளுதல்: பழித்தல்
எள்கல்-இகழ்தல்
எறிதல்-வீசி எறிதல், வெட்டுதல், அழித்தல், வீசுதல்
எறுப்பு-எறும்பு என்பதன் வலித்தல்
எறும்-பலம், வலிமை
எற்கு-எனக்கு
எற்றுதல்-அடித்தல், மோதுதல், கொல்லுதல், காலால் எற்றுதல், நீக்குதல்
எற்றே-எது
என-என்ன: போல, என்னுடைய
எனக்கிற்பது-என்று சொல்லத் தக்கது
எனு-என்ன, என்று, என்று கூறி
எனை-எத்தனையோ, அநேகம்
எனைத்து-எவ்வளவு
எனைப்பல-எத்தனையோ பல
எனையர்-எப்படிப்பட்டவர்
என்-என்ன, ஏன் ,எது, என்று, என்ற, என்னும்
என்கண்-என்னிடம்
என்கை-என்று சொல்லுதல்
என்கோ-என்பேனோ
என்பில்-என்பு இல்: எலும்பு இல்லாத
என்பு-எலும்பு, உடம்பு, சம்பந்தம்
என்றி-என்றாய்
என்னில்-என்னிடத்தில்
என்னையர்-என் தாய்மார்
என்னையே-என்ன ஆச்சரியம்!

ஏ

'ஏ' எனும் அளவில்-விரைவில்; 'இம்' என்பதற்குமுன் என்பது போல
ஏசில்-பழிப்பற்ற
ஏசு-குற்றம், பழிப்பு
ஏண்-எல்லை, உயர்வு, கர்வம்
ஏதம்-தீங்கு, கெடுதி, குற்றம், குறை
ஏதிலார்-சம்பந்தமில்லாதவர்கள்
ஏது-ஹேது: காரணம்
ஏத்தினள்-புகழ் சூடியவள், புகழ்ந்தாள்
ஏத்து-துதி
ஏந்தல்-உயர்ந்தவன், பெருமையில் சிறந்தவன், உயர்ச்சி
ஏந்திழை-ஆபரணம் தரித்த பெண்
ஏந்தும்-தாங்கும்
ஏமம்-இன்பம்
ஏமுறல்-மகிழ்தல், இன்புறுதல், மயங்குதல், காவலாக அமைதல்
ஏம்பல்-மகிழ்ச்சி, ஆரவாரம், வருத்தம்
ஏய-(வசித்து) இருந்த
ஏயவன்-ஏகியவன்
ஏயன-ஏற்ற காரியங்கள், ஏவியவை
ஏயா-உடன்பட்டு
ஏயின-ஏவியவை, கட்டளையிட்டவை, நேர்ந்த
ஏயும்-போலும், பொருந்தும்
ஏய்-பொருந்திய
ஏர்-அழகு
ஏல-மிகுதியாக
ஏலும்-இயலும், பொருந்தும்
ஏவம்-குற்றம்
ஏவரும்-யாவரும்
ஏவர்-யாவர், குற்றம் உடையவர்
ஏழை-பெண், பேதைமைக்குணம் உடைய பெண், அறிவிலி, அறியாமை
ஏறிய-மிகுந்த
ஏறு-ஆண் மிருகம், ஆண் இடி
ஏற்கும்-இயலும்
ஏற்பில-(உவமை கூற) ஏற்றவை அல்ல:

ஏற்ற-எதிரே வந்த, உணர்த்த
ஏற்றம்-மேலானது, அதிகம்
ஏற்றினம்-எருதுக் கூட்டம்
ஏனகை-ஏல்நகை: சிரிப்பு அமைந்த. மேனகைதான் மோனைக்காக ஏனகை ஆயிற்று என்று கூறுவாரும் உளர்.
ஏனம்-பன்றி, திருமாலின் வராக அவதாரம்.
ஏனவர்-எப்படிப்பட்டவர்
ஏன்ற-பொருந்திய, எதிர்த்த
ஏன்று-பொருந்தி, அமைந்து, இணங்கி

ஐ

ஐது-அற்பம், (கிடைக்காத) அருமை
ஐந்திணை-ஐவகை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவை; பஞ்சமம் என்ற பண்
ஐம்பதின்மர்-ஐம்பது பேர்
ஐம்பால் - ஐந்து பகுப்புக்களை உடைய கூந்தல்; ஐந்து பகுப்புக்களாவன: உச்சியில் முடிக்கும் முடி, பக்கத்தில் முடிக்கும் கொண்டை, பின்னல் செருகும் சுருள், சுருட்டிமுடிக்கும் குழல், பின்னிவிடும் பனிச்சை. ஐந்து தன்மைகளாவன: மணம், மது, மென்மை, நெய்ப்பு, கருமை.
ஐம்முகன் - ஐந்து முகங்களை உடைய சிவன். ஐந்து முகங்களின் பெயர்களாவன: சத்யோஜாதம், அகோரம், வாமதேவம், தத்புருஷம், ஈசானம்.
ஐய-வியப்பான, அழகிய
ஐயுறவு-சந்தேகம்

ஒ

ஒசித்த-ஒடித்த
ஒட்டை-ஒட்டகம்
ஒப்பழிய-(ஒப்ப+அழிய) ஒருங்கே அழிய, அல்லது (ஒப்பு+அழிய) சம்மதம் அழிய
ஒப்பழிவு-ஒப்பு அழிவு: ஈடு இல்லை
ஒப்பு-உவமை
ஒப்புமை-உவமை; சமானம்
ஒப்புற-சமானமாக, ஒன்றாக
ஒரீஇ-நீங்கி
ஒருங்கும்-முற்றிலும்
ஒருநிலை-ஒரு இடம், ஒரு காரியம்
ஒருமை-ஒரு பக்கம்
ஒருவரும் - ஒருவு அரும்: நீங்குதற்கு அரிய, நீங்குதல் இல்லாத
ஒருவி-நீக்கி
ஒருவா-தனிப்பெருமை உடையவனே
ஒல்-ஒலிக்குறிப்பு, விரைவு
ஒல்குதல்-துவளுதல், தளர்தல்
ஒல்லுதல்-உடன்படுதல்
ஒல்லை-விரைவில்
ஒல்லொலி-'ஒல்' என்னும் ஒலி
ஒல்வயிறு-அடிவயிறு
ஒழிந்த-எஞ்சிய
ஒழிவற-இடைவெளி இல்லாமல்
ஒழுக்கம்-போக்கு, ஓட்டம்
ஒழுக்கு-ஒழுக்கம், நடத்தை, நீர் ஒழுக்கு, ஒழுங்கு
ஒளித்தல்-வஞ்சித்தல், மறைத்தல்
ஒளிப்படாது-வெளியே தெரியாமல்
ஒளிறு-பிரகாசம்
ஒள்ளிது - பிரகாசமானது, புத்திசாலித்தனமானது
ஒறுத்து- தண்டித்து
ஒன்பான்-ஒன்பது
ஒன்றுனும்-ஒன்றையும், ஒன்றினும்
ஒன்றுதல் - சேர்தல், பொருந்துதல், கூடுதல்
ஒன்றும்-பொருந்தும்

ஓ

ஓகை-உவகை

ஒங்கல்-மலே
ஓங்கல் ஆதி-மலேயின் அடிவாரம்
ஓங்கறம்-சிறந்த தர்மம்
ஓசனே-யோசனே : 30 நாழிகை அல்லது 40 மைல் தூரம்
ஓடை- நெற்றிப்பட்டம் என்னும் ஆபரணம், யானேயின் நெற்றிப் பட்டம்
ஓட்டந்தாள்-ஓட்டம் தந்தாள் : ஓடிவந்தாள்
ஓட்டாய்-ஓட விடு
ஓட்டு-தூரத்தில் தள்ளு
ஓட்டுதல்—துரத்துதல்
ஓதநீர்-கடல்நீர்
ஓதம்-குளிர்ச்சி, கடல்
ஓதி-ஓந்தி, ஓணுன் : இது மூக்குக்கு உவமையாகச் சொல்லப் படும்
ஓதிமம்-அன்னம்
ஓதியை-கூந்தலே உடையவள்
ஓர்தல்-அறிதல், ஆராய்ந்து அறிதல்
ஓர்வரிது-அறிவது அரிது
ஓவலேயோ-நீங்கமாட்டாயோ
ஓவில்-ஓய்வில்லாமல்; இடை விடாமல்
ஒளி-வரிசை

க

கங்கபத்திரம்-அம்பு : கழுகின் இறகுபோன்ற இறகு உடையது
கங்கம்-கழுகு
கங்கு-இருள்
கங்குல்-இரவு
கச்சு-கச்சை, மார்க் கச்சு, இடுப்பில் கட்டும் கச்சை
கஞ்சமெல் அணங்கு-தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி
கஞ்சம்-தாமரை; (தண்ணீரில் பிறப்பது என்று அர்த்தம்)
கஞ்சுகம்-சட்டை
கஞ்சுகி-சட்டை
கடத்தல்-தாண்டுதல், செலுத்தல், குதித்தல் (?)
கடம்-மலேச்சாரல், காடு, யானேயின் கன்னம். இதன் வழியாக மதநீர் ஒழுகும்.
கடல் வலயம்-கடலால் சூழப்பட்ட உலகம்
கடலிடம்-கடலால் சூழப்பட்ட உலகம்
கடவது-கடப்பது, செய்வது
கடவல்-செலுத்தாதே
கடவாய்-கடமை உடையவனுக இருக்கிருய்
கடனே-முறையோ
கடன் கழித்தல் - கடமையைச் செய்துமுடித்தல்
கடாவி-நடத்தி, செலுத்தி
கடி-பாதுகாப்பு, வாசனே
கடிகை-நாழிகை
கடிதடம்-பெண்குறி, இடை
கடிது-வேகம்
கடிந்து-கோபித்து, அறுத்து
கடியான்-வேகம் உடையவன்
கடு-நஞ்சு
கடுகுதல்-விரைந்து செல்லுதல்
கடுக்கும்-ஒக்கும்
கடுக்கை-கொன்றை
கடுத்தல்-கோபித்தல்
கடுத்து-ஒப்பாகி
கடுமை-வேகம்
கடை-கடைசி, முடிவு, வாசல், இடம்
கடைக்கணியா-கடைக் கண்ணுல் பார்த்து
கடைக்கால்-கடைசிக் காலம், ஊழிக்காலம்
கடையிடு-முடிவைக்கொண்ட, எதுவும் மிஞ்சாத
கடையின்-கடைசியில்
கடைவீயாய்-ஊழிக்காலமான கடைசிக் காலத்திலும் இறவாதவனே
கடடதோ-நீங்கியதோ
கட்டம்-கஷ்டம்

கட்டல்-பறித்தல்
கட்டளை-உரைகல்
கட்டு அழல்-கொடிய நெருப்பு, பெருந்தீ
கட்டுரை-உறுதியான உரை
கட்புலக்கு-கண்ணின் புலனுக்கு: காட்சிக்கு
கணக்காயர்-வாத்தியார்
கணங்குழை-கூட்டமான குழைகள்; அநேக காதணிகள்
கணிக்கரும்-கணக்கிடமுடியாத
கணிச்சி-மழு
கணிச்சியான்-மழுவாயுதம் தரித்தவன்
கணிதமாக்கள்-சோதிடர்கள்
கணித்தது-எண்ணியது
கணித்தல்-எண்ணுதல், கருதுதல்
கணிப்பில-கணக்கில்லாதவை, அளவு கடந்தவை
கணை-அம்பு
கண்-இடம்
கண்டகன்-கொடியவன், அசுரன், துன்பம் செய்வோன்
கண்டப்படுத்தல்-துண்டுதுண்டாக வெட்டுதல்
கண்டம்-துண்டம், ஆபத்து, கழுத்து
கண்டர்-கழுத்தை உடையவர்
கண்டிலாதன-செய்யாதவை
கண்ணகல்-இடம் அகன்ற
கண்ணடி-கண்ணுடி
கண்ணன்- கருணை உடையவன், ஆதரவாக இருப்பவன்
கண்ணி-கண்ணை உடையவள்
கண்ணிய-கருதிய, விரும்பிய, நெருங்கிய, உணர்த்திய, வெளியாக்கிக் காட்டிய, விசாலமான
கண்ணுளர்-கூத்தாடிகள்
கண்பனி-கண்ணீர்த் துளி
கதம்-கோபம், உக்கிரம், வேகம், பாவம்
கதழ்வு-உக்கிரம், மிகுதி
கதி-வேகம்
கதித்தல்-கோபித்தல், அதட்டுதல்
கதிர்-ஒளிக்கதிர், ஒளி, சூரியன்
கதிர் மண்டலம்-சூரிய மண்டலம்
கதும்என-விரைவாக
கதுவுதல்-பற்றுதல், கலங்குதல்
கதை-தண்டாயுதம்
கத்தரிகை-கத்தரிக்கோல்; இது காதுக்கு உவமையாகக் கூறப்படும்
கப்பணம்-கைவேலில் ஒருவகை
கமண்டலு-கமண்டலம், தீர்த்த பாத்திரம்
கமித்தல்-க்ஷமித்தல்: மன்னித்தல்
கம்பலை-ஆரவாரம்
கம்பித்தல்-அசைத்தல், அசைதல்
கம்மியன்-உலோக வேலைக்காரன், கம்மாளன்
கயல்-மீன்
கந்தம்-வாசனை, கிழங்கு
கந்தருவம்-குதிரை
கந்தர்ப்பன்-கந்தருவன்; தேவ சாதியினன்
கந்து-தூண்
கந்து அடு கோயில்-யானை கட்டும் தொழு
கரக்க-மறைக்க
கரக்கரும்-மறைப்பதற்கரிய
கரண்டம்-நீர்க்காக்கை
கரத்தல்-ஒளித்தல்
கரந்துற-ஒளிந்திருக்க
கரபத்திரம்-கைவாள்
கரம்-வரி, தீர்வை
கரவல்-ஒளித்தல்
கரி-யானை, சாட்சி
கருதிற்று-கருதியவை
கருப்பு-கரும்பு
கருப்பேந்திரம்-கரும்பு யந்திரம்: கரும்பின் ஆலை
கருமகன்-கருமான், கொல்லன்
கருவி-ஆயுதம், முதல் காரணம்
கருவி மா-சேணம் இட்ட குதிரை
கருவிளை-கருவிளம்பூ

கலங்கல்-கலங்காதே
கலப்பை-சாதனம், உபகரணம்
கலம்-ஆபரணம், மரக்கலம்; கப்பல்
கலன்-துஷ்டன்
கலாபம்-மயில் தோகை
கலாம்-கோபம்
கலி-ஆரவாரம், ஒலி
கலிமா-கடிவாளமிட்ட குதிரை
கலுழன்-கருடன்
கலுழி-நீர்ப்பெருக்கு, கண்ணீர், கலங்கல் நீர்
கலுழ்-பொழிகிற
கலை-மேகலை: எட்டுக்கோவையுள்ளதும் இடையில் அணிவதுமான ஒரு ஆபரணம், உடை, ஆண்மான், சாஸ்திரம், கலைகிற, நிலைகுலைகிற, ஒளி, சந்திரனின் பதினாறு அம்சங்களில் ஒன்று; பதினாறும் சேர்ந்தது பூரண சந்திரன்.
கல்லி-தோண்டி
கல்லென்ற-கல் என்ற சப்தித்த. கல், ஓர் ஒலிக் குறிப்பு
கல்வி-வித்தை
கவடு-பிரிவு, கிளை
கவந்தம்-தலையற்றதும், ஆனால் தொழில் உடையதுமான முண்டம்
கவரி-சாமரை, எருமை
கவல்கின்றேன்-கவலைப்படுகிறேன்
கவற்சி-கவலை
கவற்றுதல்-கவலைக்குள்ளாக்குதல்
கவனம்-வேகமாகச் செல்லுதல்
கவான்-தொடை, (இங்கே) கால்
கவி-சுக்கிரன், குரங்கு
கவிகை-குடை
கவின-அழகு செய்ய
கவினும்-அழகாய் உள்ள
கவுள்-கதுப்பு
கவ்வை-துன்பம்
கழறுதல்-கூறுதல்
கழித்துக் கட்டி-தூக்கி எறிந்து, வெட்டிக் கட்டி
கழிந்த-மிகுந்த
கழிந்து போதல்-இறந்துபோதல்
கழிய-முடிய
கழு-வேல்
கழை-மூங்கில்
கழைக்கண்ணுளர்-கழைக் கூத்தாடிகள்
களன்-வயல், பொய்கை, கழுத்து
களி-குடிகாரன், செருக்கு
களிப்படா-களிப்புப் படாத; களிப்பில்லாத
களிப்பு-செருக்கு
களித்தவர்-செருக்கடைந்தவர்
களிய-களிப்பான
களிறு-ஆண் யானை
களைகண்-பற்றுக்கோடு, ஆதாரம்
களைதல்-ஒழித்தல், நீக்குதல்
கள்வி-வஞ்சகி
கள்ளம்-பொய்
கறங்கு-காற்றாடி, சுழலும்
கறவை-கறப்பவை: பசு
கறி-வியஞ்சனம்
கறித்தல்-கடித்தல்
கறுத்து-கோபித்து
கறுவு-பகைமை
கறுவுற்ற-கோபம்கொண்ட
கறைஅடி-உரல்போன்ற பாதத்தை உடையது: யானை
கற்பம்-கற்பக மரம், கற்பகாலம்; 432 கோடி வருஷங்கள். இது பிரமனுக்கு ஒரு நாளாகும். பிரமன், இந்திரன் முதலிய தேவர்களின் வாழ்நாள் அளவும் கற்பம் எனப்படும்
கற்பு-கல்வித்திறமை
கனம்-மேகம்
கனலி-நெருப்பை உடையவள்
கனற்ற-சுட
கனைகடல்-ஒலிக்கும் கடல்

கன்றி-வருந்தி
கன்றிருள்-மிகுந்த இருள்
கன்றுதல்-மெலிதல், வருந்துதல், வெதும்புதல்
கன்னக்கனியும்-மிகவும் கருப்பாகும்
கன்னம்-கர்ணம் : காது
கன்னல்-நாழிகை
கன்னி-அழிவில்லாமை, இளமை

கா

கா-காப்பாற்று, தடு, காத்துக் கொள், சோலை
காகுத்தன்-ககுத்தன் என்ற சூரிய குல மன்னனின் வம்சத்தில் தோன்றியவன் : இராமன்
காக்குமா-காக்கும் ஆறு : பாது காத்துக்கொள்ளும் வகை
காசடை-(காசு+அடை) முத்துக்கள் இருப்பதை
காசினி-உலகம்
காட்சித்து-தோற்றம் உடையது
காணிய-காண்பதற்கு
காண்டி-பார்
காதலன்-மகன்
காது-அழிக்கும்
காத்தி-காப்பாற்றிக் கொள்ளுவாய்
காத்து-தடுத்து
காந்தம்-சந்திரகாந்தக்கல் : இது நிலவொளி பட்டமாத்திரத்தில் நீர் சுரக்கும்
காந்தர்ப்பம்-கந்தருவம் : காதலர்கள், பிறருடைய உதவியின்றித் தாமாகவே செய்து கொள்ளும் திருமணம்
காந்தல்-சுடுதல்
காந்துதல்-வெதும்புதல், கொதிப் படைதல்
காப்பரு-தடுக்கமுடியாத
காப்பூடு-பாதுகாப்பினிடையே
காமரம்-ஒரு பண்
காமரு-அழகிய
காமர்-அழகு
காமன்-மன்மதன்
காம்பு-மூங்கில்
காயம்-தேகம், ஆகாயம்
காயெரி-எரிகின்ற தீ
காய்தல்-கோபித்தல்
காய்த்திரும்பு-காய்ச்சிய இரும்பு
காய்ப்பு-கொதிப்பு, கோபம்
காரியத்தை-காரியத்தை உடையாய்
காரும்-முதிர்ச்சிபெறும், பழுக்கும். ''காரும்'' என்பதைத் தெலுங்குச் சொல்லாகக் கொண்டால் ''ஒழுகும்'' என்று பொருள்
கார்-கருப்பு, மழை, மேகம்
கார்விடம்-கரிய நஞ்சு
காலக்கனல்-ஊழிக்காலத் தீ
காலபாசம்-உயிர்களைக் கட்டி இழுக்கும் கயிறு: இது எமனிடம் இருப்பதாகும்
காலம்-ஆலகாலம், நஞ்சு
காலவேல்-உயிர்கொல்லும் வேல்
கால்-காற்று
கால்முளை-மகன்
கால்வன-உமிழ்வன, வெளிப் படுத்துவன
காவி-நீலோற்பலம்
காளம்-கருப்பு
காளிமை-கருமை
காற்று-காற்றுவடிவமான பேய்
காற்றினேன்-வாயுதேவன்
கானம்-காடு, கூட்டம்
கான்-வாசனை, மலர், காடு
கான்று-உமிழ்ந்து, கக்கி, வெளிப் படுத்தி

கி

கிச்சு-தீ : (கன்னடச் சொல்)
கிஞ்சுகம்-முருக்க மரம்
கிடக்கை-இடம்
கிடத்தல்-இருந்தபடி இருத்தல்
கிடந்துழி-கிடந்த இடத்தில்
கிடை-சடை
கிடைத்தல்-எதிர்த்தல், கிட்டு

தல், கூடுதல், பொருந்துதல்
கிடைத்திர்-அகப்பட்டுக்கொண்டீர்
கிடைத்து-நெருங்கி, சந்தித்து
கிழமை-உரிமை, தன்மை
கிழவன்-உரியவன்
கிளத்தல்-பேசுதல், சொல்லுதல், ஒலித்தல்
கிளர்-ஒளி
கிளர்ச்சி-எழுச்சி, மிகுதி
கிளர்தல்-எழும்புதல், வளர்தல், தூண்டுதல், உண்டாதல்
கிளர்ந்து-எழும்பி
கிளவி-பேச்சு, ஒலி, சொல்
கிளித்துஅன-கிளியினது நிறம் போன்ற
கிளிப்படா-கிளியிடம் படாத: கிளியினிடம் உண்டாகாத
கிளை-கூட்டம், மூங்கில், கைக்கிளை என்னும் இசை
கிள்ளை-கிளி
கின்னரம்-ஒருவகை நரம்பு வாத்தியமான யாழ்

கீ

கீடம்-புழு
கீண்டது-கிழிந்தது, ஒழிந்தது
கீண்டான்-தோண்டினன், பெயர்த்தான், கிழித்தான்
கீண்டு-பிளந்து
கீழன-கீழே இருப்பவை

கு

குஞ்சி-ஆண்களின் தலைமயிர்
குடதிசை-மேற்குத்திசை
குடிமை-குடிமக்களின் வேலை
குட்டிமம்-கல் பாவின தரை
குதலை-மழலை: குதலை என்பது எழுத்து வடிவம் பெறுததென்றும், மழலை என்பது எழுத்து வடிவம்பெற்றுச் சொல்வடிவம் பெறுததென்றும் சிலர் பொருள் கூறுவர்
குந்தம்-சிறிய ஈட்டி
குப்புறல்-கடத்தல், தீாவிப் பாய்தல்
குமட்டிய-தெவிட்டிய
குமிழ்-குமிழம் பூ: இது மூக்குக்கு உவமையாகச் சொல்லப்படும்
குமுதம்-சிவப்பு ஆம்பல்
குமைத்தல்-இடித்தல், குத்துதல்
குயம்-முலை
குயில்வுறுத்து-பதித்து
குயிற்றிய-பதித்த, அழுத்திய
குரகதம்-குதிரை
குரண்டம்-கொக்கு
குரபதம்-குளம்பு உடைய கால்
குரம்-குதிரை, மான் முதலியவற்றின் குளம்பு
குரம்பை-குடிசை
குரவம்-குராமரம், குருக்கத்தி
குரா-ஒருவகை மரம். மருதோன்றி என்றும் கூறுவர்
குரீஇ-குருவி
குருகு-நாரை
குரும்பை-தென்னையின் இளங்காய்
குருவிந்தம்-ஒருவகைச் சிவப்பு ரத்தினம்
குருளை-குட்டி
குருள்-குருளை என்பதன் விகாரம்: குட்டி
குரை-ஒலிக்கும்
குலம்-கூட்டம், சிறப்பு
குலாம்-குலவும், பொருந்தும்
குலாவு-கொண்டாட்டம்
குலிகம்-சாதிலிங்கம், சிவப்பு
குலிசம்-இந்திரனுடைய வச்சிராயுதம்
குலை-ஈரல்
குலைவுறல்-நடுங்கவேண்டாம்
குவலயம்-குவளை மலர்
குவவு-திரட்சி
குவால்-கூட்டம்
குழல்-கூந்தல்
குழை-காதணி, குண்டலம், தளிர், குழைக்கின்ற

குழைபடும்-குழைந்துவிடும், துவண்டுவிடும்
குளித்தல்-மூழ்குதல்
குளிறுதல்-ஒலித்தல்
குறங்கு-தொடை
குறி-லட்சியம், கவனம்
குறித்தல்-கருதுதல், தீர்மானித்தல்
குறிப்பு-எண்ணம்
குறை-ஆற்றின் நடுவே உள்ள சிறு தீவு; இது ஆற்றிடைக் குறை எனப்படும்
குறைதல்-சிறுமைப்படுதல்
குறைமுடித்தல்-(பாக்கிக்)காரியத்தைச் செய்துமுடித்தல்
குறைய-அழிய
குனித்தல்-வளைத்தல்
குன்றி-குன்றிமணி

கூ

கூ-கூவுதல்
கூசுதல்-பயப்படுதல்
கூடம்-சிகரம், மறைவானது, தொகுதி, கூடியது, சம்மட்டி
கூடாதார்-பகைவர்
கூடு-உடம்பு
கூட்டம்-சேர்க்கை
கூதாளம்-ஒரு செடி: இது தாளி என்றும் கூறப்படும்; கார் காலத்தில் பூக்கும்; உருவத்தில், தாளம்போல் இருக்கும்
கூதாளி-கூதாளம்
கூதிர்-சரத்காலம்: ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்
கூம்பல்-குவிதல்
கூரும்-மிகுதியான
கூர்தல்-மிகுதல்
கூலம்-கரை, கடைத்தெரு
கூவல்-கிணறு
கூவல்செய்-கூப்பிடும்போது வந்துசெய்யும்
கூவும்-கூப்பிடும்
கூழை-தலைமயிர்
கூளி-பூதம்
கூறிடும்-கூறுசெய்யும், துண்டு செய்யும்
கூறு-துண்டு
கூனை-மிடா, பெரிய பாத்திரம்

கெ

கெண்டை-ஒருவகை மீன், அதைப்போல் இருக்கும் கணைக்கால்
கெழு-பொருந்தும், நிறையும், பற்றும்
கெழுமுதல்-நிறைதல், பொருந்துதல்
கெழுந்தகை-பொருந்திய குணம்
கெழுவுதல்-நிறைதல்

கே

கேண்மை-தன்மை
கேவலத்து-சுலபமாக
கேழ்-நிறம்-ஒப்பு
கேள்-உறவு, இனம்

கை

கை-துதிக்கை, பக்கம்
கைகுலைத்து—கைபிசைந்து
கைக்கரி-யானை
கைக்கொடு-கைப்பற்றிக் கொண்டு
கைதவம்-வஞ்சனை, கபடம்
கைதை-தாழை
கைத்த-வெறுத்த, கசந்த
கைத்தொழில்-சிறுவேலை, குற்றேவல்
கைப்பணி-சிறுபணி, குற்றேவல், கைங்கர்யம்
கைம்மலை-தும்பிக்கை உடையதும் மலைபோன்றதுமான யானை
கைம்மிக-அதிகப்பட
கையடை-அடைக்கலம்
கையறவு-துன்பம், செயலறுதல்
கையறு-செயலற்ற, துணையற்ற

கொ

கொங்கு-வாசனை

கொச்சை-இழிவு
கொடிச்சி-குறிஞ்சி நிலப்பெண், குறத்தி
கொடிஞ்சி-கைக்கு உதவியாகத் தேர்த் தட்டின் முன்னே நடப்படும் ஓர் உறுப்பு; (இது தாமரைப் பூ வடிவத்தில் இருக்கும்). தேர் என்ற பொருளும் உண்டு
கொடிறு-கதுப்பு
கொடு-கொண்டு
கொடுமுடி-மிக உயர்ந்த சிகரம்
கொட்பு-தன்மை, பெருமை, கொள்கை
கொணர்கிற்றிலேயோ- கொண்டு வரமாட்டாயோ
கொண்டலின் குழவி-கருமேகத்தின் பிள்ளை: சிறு மேகம்
கொம்பர்-கொடி
கொம்பு-மரக்கொம்பு, கொப்பு, கிளை
கொல்-ஓர் அசை; இதற்குப் பொருள் கிடையாது, கொல்லன்
கொவ்வைப்பழம்-கோவைப் பழம்
கொழித்தல்-மேலே கிளம்புதல், செழித்தல், ஒதுக்குதல், பொழிதல், வாரிச் செல்லுதல். அழித்தல்(?)
கொளீஇ-கொளுத்தி
கொள் கொம்பு-பற்றுக்கோடு
கொள்கை-தன்மை
கொற்றம்-வெற்றி, சிறப்பு

கோ

கோ-அரசன்
கோங்கம்-கோங்கு மரம்
கோங்கு-மந்தாரை, ஒருவகை மரம்
கோடணை-கோஷணம்: முழக்கம்
கோடல்-வெண்காந்தள் பூ: இது கார்த்திகை மாதத்தில் பூக்கும், கொள்ளுதல்
கோடி-கொள்ளுவாயாக
கோடிய-புதிய, கோணலான, வக்ரமான
கோடிர்-கொள்ளுங்கள்
கோடு-சிகரம், உச்சி, மலை, கிளை, சங்கு
கோடும்-கொள்ளுவோம்
கோடுறு-கோடுஉறு: சிகரங்கள் பொருந்திய
கோட்ட-கிளைகளில் உள்ள
கோட்டுதல்-வளைத்தல்
கோணுதல்-மாறுபடுதல்
கோதை புனைதல்-(போருக்கு உரிய தும்பை மலர்) மாலையை அணிதல்
கோபம்-இந்திர கோபம் என்ற செந்நிறப்பூச்சி, தம்பலப் பூச்சி
கோமகன்-ராஜகுமாரன்
கோலி-வளைத்து
கோல்-தடி, செங்கோல், அம்பு, அழகிய
கோவலர்-இடையர்
கோவியல்தருமம்-ராஜதர்மம்
கோளரி-வலிமையுடைய சிங்கம் (அல்லது குரங்கு.)
கோள்-கொலை, இடையூறு, தடை, கிரகம், கொடுமை, வலிமை, கொள்ளுதல்
கோறும்-கொல்லுவோம்

ச

சக்கரவாகம்-சக்கரவாளம்: பகல் நேரத்தில் ஜோடியாகத் திரிந்து, இரவில் பிரிந்து வருந்தும் ஒரு பறவை. இது வடிவத்தில் முலைக்கு உவமை
சங்கம்-சங்கு, கூட்டம், தொகுதி
சங்கரன்-சிவன்
சங்கை-சந்தேகம், எண்ணம்
சசி-இந்திரனின் மனைவி, இந்திராணி
சடிலம்-சடை
சட்டகம்-வடிவம்
சண்டம்-வேகம், உக்கிரம்
சதமகன்-இந்திரன்: (நூறு அசுவமேத யாகங்கள் செய்தவன்

என்று பொருள்.)
சந்தம்-சந்தனம், அழகு
சந்தார்-(சந்து+ஆர்) அழகு பொருந்திய, சந்தனம் பூசிய
சந்தி-காலை, மத்தியானம், மாலை, சந்தியாவந்தனம், காலை நியமம்
சந்திரகாந்தம்-சந்திரனைக் கண்டதும் நீர் கசியும் கல்; அப்படிப் பட்ட கல்லாலான மலை
சந்தின்அடை-சந்தன மரத்தின் இலை
சந்து-சந்தம் என்பதன் விகாரம்: அழகு, சந்தனம்
சந்நிதி—நேரில் காண்பது
சமம்—சமரம்: போர்
சமழ்க்கும்—தாழும், நாணும், வருந்தும்
சமிரணன்—காற்று, வாயு
சமுகவாளி—சேர்ந்துள்ள பாணங்கள்
சமைதல்—பொருந்தல், அமைதல்
சமைத்தல்—செய்தல், அமைத்தல்
சமைந்தது—பலித்தது, கைகூடியது
சமைந்தேன்—சித்தமாக இருக்கிறேன்
சயந்தனம்-தேர்
சரத—சரச: ரசத்தோடு கூடிய
சரதம்—நிச்சயம், உண்மை
சரதாரை—அம்பு மழை
சரம்-அம்பு
சரளம்—ஒழுங்கு, நேராக இருக்கும் தன்மை, சுலபம்
சராசரம்-அசையும் பொருளும், அசையாப் பொருளும்
சலஞ்சலம்-ஒருவகைச் சங்கு: வலம்புரி ஆயிரம் சூழ்ந்தது
சலம்—கோபம், வஞ்சனை, கபடம்
சலித்தல்—வருத்துதல், வருந்தல்
சவி—ஒளி, அழகு
சவை—சபை
சழக்கு-குற்றம், தீமை
சனகி—சானகி, சீதை
சன்னவீரம்—வெற்றி மாலை

சா

சாகை—கிளை, வேதத்தின் பிரிவு, மரணம்
சாசரம்—ஆயிரம்
சாபம்—வில்
சாமரை—சாமரம் என்ற மானின் வால் மயிரால் செய்யப்பட்ட ஒரு அரசசின்னம் (அல்லது விசிறி)
சாம்புதல்—சோர்தல்
சாய்-நிலைசாய்ந்து, விழுந்து
சார-சேர, சேருக
சாரல்-பக்கம், அடைதல், சேருவாயாக
சாரி—வட்டமாய் ஓடுதல்
சாரிகை—வலசாரி, இடசாரி
சார்-வந்து சேர்
சார்கிலிரோ—(இங்கே வந்து) சேரமாட்டீர்களோ
சார்த்துதல்—சாரச் செய்தல், சேர்த்தல், இணைத்தல்
சார்பு—புகலிடம்
சார்வு—ஆதாரம்
சாலம்—சாலமரம், ஒருவகை ஆச்சாமரம், கூட்டம்
சாலி—நெல்
சாலை—பர்ணசாலை, ஆசிரமம்
சால்பு—உயர்குணம்
சான்ற—அமைந்த, மிகுதி ஆன
சான்றவன்—சாட்சி
சான்று—சாட்சி, எங்கும் இருக்கும் திருமால்

சி

சிகை-நுனி, ஒளி, தீக்கொழுந்து
சிக்கு—சந்தேகம்
சிக்குற—இறுகும்படி, அகப்படும்படி, உறுதியாக
சிங்கல்—கெடுதல்
சிங்காமை—அழியாமை, அழியாதபடி

சிசிரம்-பின்பனிக்காலம்: இக் காலத்துக்குரியவை, மாசி பங்குனி மாதங்கள்
சிச்சி-சீசீ
சிச்சிரம்—சித்திரம் என்பதன் போலி: விநோதம்
சிஞ்சுபம்—ஒருவகை மரம்
சித்தர்—தேவசாதியாருள் ஒரு பிரிவினர்
சிந்த—அழிய
சிந்தாகுலம் — சிந்தை ஆகுலம்: மனக்கவலை
சிந்தாவினை—சிந்தை வினை: நினைக்கும் செயல், நினைத்த மாத்திரத்தில் செய்து முடித்தல். குறைவற்ற வேலை என்றும் பொருள் கூறுவர்.
சிந்து—கடல், நதி, நீர், பண்
சிந்து நாடு-நீர்வளம் பொருந்திய நாடு
சிந்துபு—சிந்தும்படி
சிந்துரம்-சிந்தூரப்பொடி,யானை, செந்நிறத் திலகம்
சிந்துராகம்-சிந்தூரச் செம்பொடி
சிந்துவாரம்-நறுமணம் வீசும் ஒருவகை மரம்
சிமயம்—மலை, இமயமலை, பொதிகை மலை
சிரத்தை-ஊக்கம், அக்கறை
சிரம்—தலை
சிலதர்—ஏவலாளர்
சிலம்புதல்—ஒலி செய்தல்
சிலைமறை—தனுர்வேதம்; வில் வித்தை
சில்-சில, சிறிய
சில்அல்-சில அல்லாத, பல
சில் அறம்-அற்ப ஒழுக்கம்
சில்லல் ஓதியை-சில் அல் ஓதியை: மெல்லிய கருநிறம் கொண்ட கூந்தலை உடையவள்
சிவண-பொருந்த, ஒத்திருக்க
சிவல்-கவுதாரி
சிவிகை-தண்டிகை, பல்லக்கு
சிறார்-சிறுவர்
சிறை-சிறகு, பக்கம்
சிற்பம்-சிறுமை
சிற்றவை-சிறிய தாயார்
சினவு-கோபிக்கும்
சினை-முட்டை, அரும்பு, கிளை
சினைவரால்-கருக்கொண்ட வரால் மீன்: இது கணைக்காலுக்கு உவமையாகக் கூறப்படும்
சின்னம்-முறிவு
சின்னீர்-சில்நீர்: சிறிது நீர்

சீ

சீகரம்-துளி
சீக்கும்-ஒழிக்கும்
சீதளம்-குளிர்ச்சி
சீப்ப-ஒழிக்க, நீக்க
சீயம்-சிங்கம்
சீராள்-தன்மையை உடையவள்
சீரியன்-நல்லவன், சிறந்தவன்
சீர்-தன்மை
சீர்ப்பு-சிறப்பு
சீர்மை-தன்மை
சீர்மைத்து-அழகுடையது, சிறந்த தன்மை உடையது
சீலம்-தன்மை

சு

சுடர்-சூரிய சந்திரர், ஒளி, ஒளி செய்யும்
சுமடர்-துஷ்டர்
சும்மை-சுமை, மிகுதி
சுரதம்-சிற்றின்பப் புணர்ச்சி
சுரநதி - தேவநதி, தேவகங்கை எனப்படும் மந்தாகினி
சுரம்-பாலைவனம்
சுரிகுழல்-சுருண்ட கூந்தல்
சுரும்பு-வண்டு
சுருள்-பெண்ணின் கூந்தல்
சுவணகம்-ஒரு நதி
சுவணம்-ஸ்வர்ணம்: தங்கம்
சுவல்-பிடர், முதுகு, தோள், குதிரையின் கழுத்து மயிர்
சுவறி-வற்றி

சுழி-நீர்ச்சுழி
சுளி-கோபம்
சுறவம்-சுறு மீன்
சுறுக்கொள-தீய்ந்துபோக, சிலிர்க்க

சூ

சூடகம்-ஒருவகைக் கைவளையல்
சூடு-நெல் அரியின் கட்டு, குடுமி, உச்சிப்பாகம்
சூது-சொக்கட்டான் காய்
சூரியகாந்தம்-சூரியனைக் கண்டதும் நெருப்பை உமிழும் கல்; அப்படிப்பட்ட கல்லாலான மலை
சூர்-தேவர்கள், பயம், சூரபத்மன்
சூர்அரமகளிர் - தெய்வப்பெண்கள்
சூலி-சூலாயுதம் கொண்ட சிவன்
சூழல்-இடம், சுற்றிடம்
சூழ்வது-ஆலோசிப்பது
சூளுறவு-சபதம்
சூள்-சித்தாந்தம்

செ

செகுக்கும்-மாறுகொள்ளும், ஒழிக்கும்
செங்கணன்-திருமால்
செங்கிடை-ஒருவகைச் செடி
செச்சை-சந்தனக் குழம்பு
செஞ்செவிய-செக்கச் சிவந்த
செப்பம்-சிறந்த பண்பு
செப்பல்-சொல்லுதல்
செப்பு—சிமிழ்
செம்—செம்மையான, சிவப்பான
செம்பால்—ரத்தம்
செம்பு அராகம்-தாமிரத்தின் சிவப்பு நிறம்
செம்பு காட்டிய - தாமிரத்தின் செந்நிறத்தைக் காட்டிய
செம்புருக்கு-உருக்கிய தாமிரம்
செம்மல்-சிறந்தவன், புத்திரன்
செம்மிய-நிரப்பிய
செயகிற்றி-செய்வாய்
செயிர்-தீமை, துன்பம், குற்றம்
செயிர்த்து-கோபித்து
செய்கை அன்னம்-கையால் அன்னம் போலச் செய்யப்பட்ட பொம்மை
செய்யது-நல்லது
செருக்கிய — செழித்த, மிகுந்த, களித்த
செலவின-போக்கை உடையவை
செலவு - செல்லுதல், நடை, போக்கு, பொந்து, குகை, நீண்டிருக்கும் அளவு
செல்-மேகம்
செல்லாம்-செல்லமாட்டோம்
செவ்—செவ்விய, அழகான
செவ்வழி — செம்மையான வழி, நல்வழி
செவ்வி—அழகு, சிறப்பு
செவ்வே—நன்றாக
செறித்தல்—அழுந்தச் செய்தல்
செறுத்தல்-கோபித்தல்
செறுநர்—பகைவர்
செற்றம்—கோபம்
செற்றி—பதிக்கப்பட்டு
செற்றும்—கொன்றும்
செற்றோர்—சீற்றம் கொண்டோர்
சென்னி—தலை

சே

சே—காளை மாடு
சேகற - இடையீடு இல்லாமல், குறை இல்லாமல்
சேகு-குற்றம்
சேக்கை—இருப்பிடம்
சேடர்-நாகர்; பாதாளத்தார்
சேடு—கன்று, இளமை, அழகு
சேடுறு-சேடு உறு: சிறப்புற்ற
சேட்டிளம்-மிகவும் இளமையான
சேண்-ஆகாயம், உயரம், தூரம், நீளம்
சேதனம்—அறிவு, உணர்ச்சி
சேதித்து—இம்சித்து
சேமம்-பாதுகாப்பு
சேமித்த—பாதுகாத்த

சேயிதழ்-சிவந்த இதழ்
சேயொளி—சிவந்தஒளி, அழகிய ஒளி
சேய்—சிவப்பு
சேரை—சாரைப் பாம்பு
சேவகன்—வீரன்
சேவல்—ஆண் பறவை
சேறி—அறிவாய்
சேற்ற-சேற்றில் உள்ள
சேனைப்பதி-சேனுபதி

சை

சையம்-மலை, கல்

சொ

சொல்—புகழ்
சொற்கலை—சொற்களால் சிருஷ்டிக்கப்படும் கலை, சாஸ்திரம்
சொற்ற-சொன்ன, சொன்னவை

சோ

சோம்பு-சோம்பல், தினவு
சோரி-ரத்தம்
சோர்தல்—தளர்தல், மெலிதல், சொரிதல், பொழிதல்
சோறு-தாழை மடலின் உள்ளீடு அல்லது சுண்ணம்

ஞா

ஞாங்கர்—பக்கம்
ஞாலம்-உலகம்
ஞாளி-நாய்

ஞி

ஞிமிறு—வண்டு

த

தகவு-தகுதி, குணம், நடுவு நிலை, அறிவு
தகளி—அகல்
தகுகிலது—தகாதது
தகை-தகுதி, வலிமை
தகைதல்—தடுத்தல்
தகைமை—தன்மை
தகைவில்—தகையமுடியாத; அழிக்கமுடியாத
தகைவு—தடை
தக்கிணை-தக்ஷிணை, காணிக்கை
தக்கிலள்—தகுதியான குணம் இல்லாதவள், வசப்படாதவள்
தசும்பு—கலசம், குடம்
தச்சு-தைத்து என்பதன் போலி
தஞ்சம்-துணை செய்தல்
தஞ்சு-தஞ்சம், அடைக்கலப் பொருள், ஆதாரம், தன் குஞ்சு என்பதன் விகாரம் என்றும் கூறுவார்கள்.
தடம்—குளம், கரை, மலையடிவாரம், மேடு, இடம், வெளியிடம், வழி, விசாலமான, பெரிய
தடறு—நீர்க்கரை? மட்டை?
தடி—மின்னல், மாமிசம், அளவு கோல்
தடிதல்—துண்டித்தல், அழித்தல்
தடித்தின்—இடியின்
தடித்து—இடி
தட்டம்—தட்டு
தணத்தல்—நீங்குதல்
தணித்தல்—குறைத்தல், வெட்டுதல், உயிரை நீக்குதல்
தண்டகம்—தண்டகாரண்யம்: தென் இந்தியாவில் முனிவர்கள் வசித்துவந்த ஒரு வனம், தொண்டை நாடு
தண்டம்—தண்டனை, தண்டாயுதம்
தண்டல்—கெடுதல்
தண்டா—நீங்காத
தண்டு—தண்டாயுதம், கோல்
தண்ணுமை-மத்தளம்
ததி—தயிர்
தத்துவ நிலை—உண்மை நிலை
தத்துறு—தடுமாறு
தந்த—பெற்ற
தபு—நீங்கிய, கெட்டொழிந்த, இறந்த
தமர்—தம்முடையவர், தமக்கு உற்றார்
தமாலம்—இலை, பச்சிலை, (மரம்)
தமிழ்த்தென்றல்-இனியதென்றல்

தமிழ்நாடு—பாண்டியநாடு
தம்பல்—தாம்பூலத்தின் சாரம்
தம்முன்-தமையன்
தயங்குதல்—விளங்குதல், அசைதல், திகைத்தல்
தயமுகன்—தசமுகன்: பத்துத் தலைகள் கொண்ட இராவணன்
தயாவிலி—தயவில்லாதவன்
தயாவு—தயவு
தரங்கம்-அலை
தராவலயம்— பூமண்டலம், பூமி வட்டம்
தரித்தல்-பொறுத்தல்,தாங்குதல்
தரிப்பு—பொறுத்தல்
தருகுதல்-தருதல், நிலைத்தல்
தருக்கு-செருக்கு, களிப்பு
தருணம்-இளமை
தரும தயா-தருமமும், தயவும்
தருமன்-தருமத்துக்குரிய கடவுள்
தரை-உலகம்
தலம்-தரை
தலை-இடம்
தலைக்கலம்-மண்டையோடு
தலைப்படுதல்-சந்தித்தல், நெருங்கிச் செல்லுதல், தொடங்குதல்
தலைமயக்குறுதல்-கலத்தல்
தவர்-முனிவர்
தவளம்-வெண்மை
தவன வேகம்-சூரியனைப் போன்ற உக்கிரம், உக்கிரமான வேகம்
தவா-அழியாத, நீங்காத
தவ்வாது-குவியாது
தவ்விட-நீங்க
தவ்விய-அழிந்த
தழங்குதல்-ஒலித்தல்
தழீஇ-தழுவி
தழை-இலை, மயிலின் பீலியால் செய்யப்பட்ட குடை
தழைபட-தழைக்க
தளத்தகு-தள்ளத்தகு: விட்டுத் தள்ளத்தக்க
தளம்-பூவின் இதழ், சந்தனம்
தளை-கட்டு, விலங்கு
தளையானேன் - விலங்கிடப்பட்டவன்போல் ஆனேன்
தள்ளுதல்-விலக்குதல்
தறி-தூண்
தறுகண்-அஞ்சாமை, கொடுமை, தாட்சணியம் காட்டாத கொடுந்தன்மை
தறை-ஆணி
தனி-ஒப்பற்ற
தனிமை-தனித்தன்மை, ஒப்பற்ற தன்மை (உடைய மோட்சம்)
தன்மயம்-தன் வடிவம்

தா

தா-கொடு, தாவு, கேடு, பகை, குற்றம், அழிவு
தாக்கணங்கு-இலக்குமி
தாக்கும்-வருத்தும்
தாங்குதல்-காத்தல்
தாது-மகரந்தம்
தாபதர்-தவசிகள்
தாபம்-தவிப்பு
தாமம்-ஒளி, பூமாலை, ஒழுங்கு, வரிசை, அஞ்சத்தக்கது
தாமரையோன்-பிரமன்
தாமரை வளையம்-தாமரைப் பூவின் சுருள்
தாயம்-உரிமை
தாயவன்-கைப்பற்றிக் கொண்டவன்
தாயவே-தாவினவே, தாவி வளர்ந்தனவே
தாரணித்தல்-தரித்தல், நிலை பெறுதல்
தாரு-தரு: மரம்
தாரை—நீரின் தாரை, மழை, ஒழுங்கு, கூர்மை, ஆயுதத்தின் இலைப்பாகம், எக்காளம், கண், கண்ணின் மணி
தார்-மாலை, சேனை, கொடிப்படை
தாலபலம்-பனம்பழம்
தாவம்-துன்பம்
தாவரும்-அழிவற்ற
தாவியாது தீதெனது - (உள்

ளத்தை ஒரு நிலையில்) ஸ்தாபிக்காமலும் (நிலைநிறுத்தாமலும்), தீது என்று கருதாமலும். மற்றொரு பொருள்: (தா+யாது+தீது+எனது) எது கேடு எது தீது என்று கருதாமல்
தாழி-பானை
தாழில்—தாமதித்தால்
தாழும்-குறையும்
தாழை-தென்னை
தாழ்-வணங்கு
தாழ்வரை-மலையின் அடிவாரம்
தாள்-கால், பாதம், அடிப்பாகம், தண்டு, முயற்சி
தாறு-குலை, கொத்து
தானவர்-அரக்கர்கள். காசிப முனிவனின் மனைவியருள் ஒருத்தியான தனுவின் வயிற்றில் தோன்றியவர்களாதலால் இப்பெயர் பெற்றார்கள்.
தானை-படை

தி

திகிரி-சக்கரம்
திக்கயம்-திசையானை
திங்கள்-சந்திரன், மாதம்
திசைத்தல்-திகைத்தல்
திடல்-மேடு, மலை
திணி-திண்ணிய, பலமான, செறிந்த, அடர்ந்த, வனைந்த
திண்மையார்-பலசாலிகள்
தியம்பகம்-திரியம்பகம்: மூன்று கண்களை உடைய சிவனது வில்.
திரண்டன்ன-திரண்டதுபோல
திரிதல்-மாறுபடுதல்
திரிந்தகோல்-திரிக்கப்பட்ட தடி: திரிதண்டம்
திரித்தல்-சுழற்றுதல்
திரிந்துழி-சுழன்றபோது
திரிவுறும்-சுழலும்
திருகுதல்-முறுக்குதல், மாறுபடுதல்
திருகுற-சுற்றுதல் உற
திருக்கு-மாறுபாடு, வஞ்சனை
திருத்துதல்-அழைத்தல், சீர்ப்படுத்துதல்
திருத்துவம்-திருத்தமாகச் செய்வோம்
திருந்தினர்—தீய வழியிலிருந்து திருந்தினோர், நேர்மையானவர்கள்
திருமங்கை-இலக்குமி
திரை—தோலின் சுருக்கம், அலை
திவசம்—தினந்தோறும்
திவள-துவள, அசைய
திறத்திறன்-மேலான குணம்
திறத்துழி—வலிமையினால்
திறம்-தன்மை, இடம், வகை, பெருமை
திறம்புதல்-தவறுதல்
திறல்—வலிமை, தைரியம், போர், பகைமை

தீ

திக்கும்-தீய்க்கும்
தீண்டகிற்பது—தீண்டுவது, தொடுவது
தீண்டால்—தொடாதே
தீத்த-தீய்த்த: சுட்ட
தீந்து—தீய்ந்து
தீபமாலை—விளக்கு வரிசை
தீய—ஒழிய
தீரிய-தீர்க்க
தீரும்-தவிரும்
தீர்கெனும்-(தீர்க+எனும்) அப்புறப்படுத்துக என்பான்
தீர்தி-விட்டுவிடுவாய்
தீர்த்தன்-பரிசுத்தமானவன்
தீர்த்து-கழற்றி
தீர்ந்து—விட்டுவிட்டு
தீர்வரும்-நீக்கமுடியாத
தீர்வு-ஒழிவு
தீவிய-இனிய

து

துகில்-துணி
துங்கம்-பெருமை
துஞ்சுதல்-இறத்தல், வருந்துதல்

துடி-உடுக்கை
துன்எனும்-துணுக்குறும், திடுக்கிடும்
துண்டமதி-பிறைச்சந்திரன்
துண்டம்-பறவையின மூக்கு
துணி-துண்டிக்கும், தீர்மானிக்கும், துண்டு
துணிந்த-தெளிந்த
துணிந்தன-அறுபட்டன, துண்டுபட்டன
துணிவு-உறுதிச் சொல், நிச்சயமான கருத்து
துணுக்கம்-பயம்
துணுக்கெனும்-திடுக்கிடும்
துணை-இரட்டை
துணைக்கரம்-இரண்டு கைகள்
துதியறு-புகழற்ற
துப்பழி-துப்புஅழி: பவளமும் ஒப்பாகாமல் அழியும்
துப்பு-பவளம், சிவப்பு, வலிமை, தூய்மை
துமித்தல்-வெட்டுதல், அறுத்தல், சிதறுதல், நீக்குதல்
துமிலம்-ஆரவாரம்
தும்பி-வண்டு, யானை
தும்பிக்கொம்பு-யானைத்தந்தம்
துயக்கு-சோர்வு, தளர்வு
துயில்வாய்-தூக்கத்தில்
துய்அடி-பஞ்சுமூட்டை
துரக்க-செலுத்த, தொடர
துரந்த-செலுத்திய, வெளியே தள்ளிய, துரத்திய
துவசம்-கொடி
துவர்-சிவப்பு, பவளம்
துவர்த்த-பவளத்தின் தன்மை கொண்ட
துவன்றிய-நெருங்கிய
துவைத்தல்—ஒலித்தல்
துழனி-ஓசை
துளக்கம்-நடுக்கம்
துளங்குதல்-அசைதல், நிலை கெடுதல், விளங்குதல்
துள்ளி-துளி
துறக்கம்-சுவர்க்கம்
துறு—நெருங்கும், நிறைந்த, பருத்த
துறை-நீர்த்துறை, இலக்கணத் துறை
துற்றிய-உண்ண
துனி—அச்சம், கோபம், வேகம்
துனை-வேகம்
துனையும்-விரைந்து செல்லும்
துன்-நெருங்கும்
துன்னரும்—நெருங்குதற்கு அரிய
துன்னலன்-பகைவன்
துன்னார்—பகைவர்
துன்னுதல்-நெருங்குதல் செறிதல், பொருந்துதல்

தூ

தூ—மாமிசம்
தூக்குதல்—ஆராய்ச்சி செய்தல், மனத்தில் கொள்ளுதல்
தூங்கல்-மெதுவாக நடத்தல், சோர்வு
தூங்கும்-தொங்கும், அசையும், தாமதிக்கும்
தூசு-சேலை
தூணி—அம்புகள் வைக்கும் கூடு அல்லது புட்டில்
தூமருவு-வெண்ணிறம் பொருந்தும்
தூம்பு-மதகு
தூய்-தூவி
தூரியம்-வாத்தியம், முரசு
தூரும்-மறையும்
தூளி-பொடி, தூள்
தூறு—புதர்

தெ

தெங்கு-தென்னை
தெட்ட-தெளிவான
தெண்டிரை-தெள்திரை: தெளிவான அலை
தெரி-பொறுக்கி எடுத்த, தெரிந்த
தெரிந்தான்-தேர்ந்தெடுத்தான்
தெரிப்பது-தெரிவிப்பது

தெரிவிலாள்-அறிய முடியாத வள்
தெருட்டி-தெளிந்து, தெளிவித்து
தெருமரல்-துன்பம்
தெருமருகின்றது-வருந்துவது
தெவ்-பகை
தெழித்தல்-ஆரவாரம் செய்தல், முழக்குதல், ஒலித்தல், அதட்டுதல்
தெள்ளிய-தெளிந்த'
தெள்ளியோர்-தெளிந்த அறிவினர்
தெறுதல்-அழித்தல்
தெறுத்து-அழித்து
தெற்றுதல்-பல்லைக்கடித்தல், சேர்த்துக் கட்டுதல்
தென்புலம்-தென்திசை, தென் திசையிலுள்ள எமலோகம்: இங்கு செல்லுகிறவர்கள் மீண்டும் பூமியில் பிறப்பார்கள். ஆனால், இங்கே செல்லாமல், மோட்சத்துக்குச் சென்றவர்கள் திரும்பவும் பிறக்க மாட்டார்கள்.

தே

தேசு-தேஜஸ்,பிரகாசம்,
தேட்டம்-விருப்பம்
தேண்டி-தேடி
தேமரம்-மணம்தரும் மரம்
தேமறை-சாமகானம்
தேம்புதல்-மெலிதல், வாடுதல்
தேய்விட—(தேய்வு+இட) தேய்வு கொள்ள
தேர-அறிய
தேர்தல்—தெளிதல்
தேவு-தெய்வம்,தெய்வத்தன்மை உடையவன்
தேறல்-கள்
தேறினள்-நம்பியவள்
தேறும்-தெளியும்
தேனு-பசு
தேன்-வண்டு

தை

தைப்பு உறு-நன்கு தைத்துள்ள (அல்லது பதிந்துள்ள)
தைவர-தடவ

தொ

தொகை-தொகுப்பு, மறைவு
தொக்கு-தொகுதியாகி, சேர்ந்து
தொங்கல்-குஞ்சம், வரிசை
தொடக்க-மாட்டிக் கொள்ள
தொடக்கம்-முதலியவை
தொடக்கு-பற்று
தொடர்பு-உறவு
தொடி-ஒருவகை வளையல்
தொடை-தொடுத்தது, தொடர்ச்சி
தொண்டை-கோவைப்பழம்
தொலைக்குமா-தொலைக்குமாறு, தொலைக்கும்படியாக
தொலைவு-வருந்துதல், அழிவு
தொல்நூல்-பழைய சாஸ்திரம்
தொல்லையோன்-பழமையானவன்
தொள்கு-வலை
தொள்ளை-தொளை

தோ

தோடு-பூவின் இதழ்
தோட்ட-துளைத்த, தோண்டிய
தோட்டமைந்த-இதழ்கள் அமைந்த
தோட்டார்-(தோடு+ஆர்) இதழ்கள் நிறைந்த
தோட்டி-அங்குசம்
தோமரம்—தண்டாயுதம், வேலாயுதம்
தோம்-குற்றம்
தோயம்-நீர்,
தோய்ந்து-கலந்து
தோளி-தோளை உடையவள்
தோற்றும்-தோற்போம்
தோன்றலை-நீ தோன்றவில்லை
தோன்றல்-மகன், தலைவன்

ந

நகுதல்—சிரித்தல், விளங்குதல், தாழ்த்துதல்
நக்க-சிரித்த, ஒளி வீசிய
நக்கரம்—முதலை
நங்கள்-நம்முடைய
நசை-ஆசை
நச்சுதல்-விரும்புதல்
நஞ்சம்-நஞ்சு
நடத்தல்-நீங்கிச் செல்லுதல், தாண்டிச் செல்லுதல்
நடந்தது-வந்தது
நடலை—வஞ்சனை
நடு-இடை, இடுப்பு
நடுக்கரு-அசைக்க முடியாத
நடுவண்—நடுவே
நணுகினுன்—நெருங்கினுன்
நண்ணல்-நெருங்குதல்
நதம்-மேற்கு நோக்கிச் செல்லும் நதி
நந்தல்-குறைதல், மழுங்குதல், மங்குதல்
நந்தி—நந்தியாவட்டைச் செடி
நந்து-சங்கு, நத்தை: இந்த இரண்டிலும் முத்துக்கள் உற்பத்தியாகும் என்பது நூல் மரபு
நமன்-எமன்
நம்பன்—அனைவரும் விரும்பக் கூடிய குணம் படைத்தவன், சிறந்தவன், கடவுள்
நம்பி—ஆடவர்களில் சிறந்தவன்
நயத்தல்-விரும்புதல்
நயந்தான்-மதித்தான், கொடுத்தான்
நரகினர்-நரகத்தில் இருப்போர்
நரந்தம்—ஒருவகை மரம்; நாரத்தை என்றும் கூறுவர்.
நரன்-மனிதன்
நலம்-இன்பம், அழகு, நன்மை
நலிதல்-தண்டித்தல்
நல்—நல்ல, பெரிய
நல்குதல்—அருளுதல், காப்பாற்றுதல்
நவம்-புதுமை, உறவு, ஒன்பது
நவமை-புதுமை, உலக பந்தங்கள் என்ற குற்றங்கள்
நவை—குற்றம், இகழ்ச்சி, கேவலம், துன்பம்
நவையில் ஆ நவை-குற்றத்தினுல் உண்டான கேவலம்
நவ்வி-பெண் மான்
நளி-பெரிய
நள்ளா-நேசிக்காமல்
நள்ளி-நண்டு
நறவம்-தேன், கள்
நறவு-தேன், கள்
நறை-தேன், கள், நறுமணம் வீசும் ஒருவகைக் கொடி
நனம்-அகலம்
நனி-நன்ருக, மிகவும்
நனை-கள், தேன், அரும்பு

நா

நா-நாக்கு
நாகக்கன்று-யானைக்குட்டி
நாகம்-சுரபுன்னை மரம், ஆகாயம், மலை
நாகரிகம்-தாட்சணியம்
நாகர்-பாதாளத்தில் வாழும் பாம்பு ஜாதியார், தேவர்கள்
நாகு-கன்று. மேதியின் நாகு என்பது எருமைக் கன்று அல்லது பெண் எருமை
நாடுறுவான் - நாடுவான், தேடுவான்
நாட்டல்-குறித்தல்
நாட்டும்-நிலைநிறுத்தும்
நாணிலி-வெட்கம் இல்லாதவள்
நாண்-நாணம், அவமானம்
நாந்தக உழவர்-வாள் வீரர்
நாந்தகம்—வாள்
நாப்பண்-நடுவே
நாமம்-பெயர், புகழ், பயம், பயம் தருவது
நாயகமணி-சிறந்த ரத்தினம்
நாயகம்-தலைமை

நாரம்—தண்ணீர், அன்பு
நாரி-பெண்
நாரிபாகத்தன்-சிவன்
நால்-நான்கு
நாவி-கஸ்தூரி (மான்)
நாவியல்-நாவின் இயல்: பேச்சு
நாழி-முகந்து அளக்கும் கருவி
நாள்-வாழ்நாள், நட்சத்திரம்
நாள்கொள்ளுதல் - ஒரு காரியத்தைச் செய்ய நினைத்து, குறிப்பிட்ட ஒரு முகூர்த்தத்தில் அந்தக்காரியத்தின் ஒரு பகுதியைச் செய்தல், நல்ல நாள் பார்த்து ஆரம்பித்து வைத்தல்
நாறுதல்-வெளிப்படுதல், வீசுதல், மணம் வீசுதல், விளங்குதல்
நானம்-கஸ்தூரி, நெய்
நானு-பலவித

நி

நிசிசரர்-இரவில் சஞ்சரிப்போர், அரக்கர்கள்
நிணம்-மாமிசம்,கொழுப்பு
நிந்தனை-பழிப்பு
நிமித்து-காரணம்
நிமிர்தல்-ஏறுதல், வளர்தல், ஓங்குதல், அதிகமாகுதல்
நிரப்புதல்-சொல்லுதல்
நிருதன்-அரக்கன்
நிருதி-அரக்கி
நிரை-வரிசை, கூட்டம்
நிலைய-நிலைபெறுதலை உடைய
நிலையம்-இருப்பிடம்
நிவந்த-மேலே எழும்பிய, உயர்ந்த, வளர்ந்த
நிழல்-ஒளி, சாயை
நிழற்ற-நிழல் தர
நிறம்-குணம், தன்மை, மார்பு
நிறை—நிறைகிற,அசையாதுநிறுத்தல், உறுதி நிலை
நிறைஅடி-கனமான அடிப் பாகம்
நிற்கண்டேன்-உன்னிடத்தில் பார்த்தேன்
நிற்றி-நிற்பாயாக
நிற்றிரும்-நின்றால் தீரும்
நினைவர்-கற்பனாசக்திஉடையோர்

நீ

நீடு-நீண்ட
நீத்தநீர்-வெள்ளநீர்
நீயிர்-நீங்கள்
நீர-தன்மை உடைய, தன்மை உடையவை
நீரர்-தன்மையர்
நீர்-நீர்மை, தன்மை
நீர்ச்சிறை-நீர்நிலை
நீர்மை-முறைமை, தன்மை
நீவா-நீங்காத
நீவி-இடுப்பில் கட்டும் ஆடையின் முடி, அல்லது அந்த ஆடை
நீளம்-நீடம்: பறவைக் கூடு
நீள்உறும்-நீண்டிருக்கும்
நீறு-பொடி, தூள்

நு

நுகர்ந்த-அனுபவித்த
நுங்கு-பனை நுங்கு
நுங்குதல்-விழுங்குதல், அனுபவித்தல்
நுடங்கல்-துவளுதல், தளர்தல்
நுணங்கு—நுட்பமான
நுதல்-நெற்றி, புருவம்
நுந்துதல்-வெளியே தள்ளுதல்
நும்மலது- உம்மையல்லாமல் வேறொன்று
நுவலா-சொல்லி
நுவல்தக்க-சொல்லத்தகுந்த
நுளைச்சியர்-நெய்தல் நிலப்பெண், செம்படவப் பெண்
நுறுங்க-பொடியாக
நுனித்தல்-நுட்பமாக அறிதல்

நூ

நூக்கல்-நீக்கல், தள்ளுதல்
நூல்-நூலில் கோத்த ஆரம்
நூல்முகம்—நூலினிடத்து, சாஸ்திரத்தில்
நூறி—அழித்து

நெ

நெகுதல்-கரைதல், கெடுதல், பொடியாகுதல்
நெக்கன-நெகிழ்ந்தன
நெட்டிலைச்சரம்—நீண்ட இலை வடிவமான அம்பு
நெருக்க-வருத்த
நெருநல்-நேற்று
நெறி-கூந்தலின் சுருள், நெளிவு
நெறித்தாரை—ஒழுக்கத்தின் வழி
நெறிஉறீஇ-சுருள் அடைந்து
நெற்சினை—வெளியே வருவதற்கு முன் உள்ளே கருக்கொண்டு இருக்கும் புடைத்து உருண்ட தண்டு உடைய நெல் பயிர்

நே

நேசம்-நாட்பட்ட நட்பு
நேடினும்—தேடினேம், தேடி அடைந்தோம்
நேமி-சக்கரம், சக்கராயுதம் தரித்த திருமால், கால நேமி என்ற அசுரன், சக்கரவாளமலை: இது உலகத்தைச் சூழ்ந்துள்ள கடல்களைச் சுற்றி இருப்பது.
நேமிவாளம்-சக்கரவாள பறவை: இதன் வடிவம் கொங்கைமாதிரி இருப்பதாகக் கூறப்படும். இது ஆணும் பெண்ணுமாகப் பகல் முழுவதும் கூடியிருந்து, இரவு வந்ததும் பிரிந்து வருந்தும்.
நேரா-செய்து
நேராத—அடைவதற்கு அரிய, அடைய முடியாத
நேரும்-எதிர்ப்படும்
நேரிழை-தக்க ஆபரணங்கள் அணிந்த பெண்
நேருநர்-எதிர்ப்பவர்
நேர்-ஒப்பு
நேர்தல்—பதில் சொல்லல், எதிர்த்தல், சேர்தல்
நேர்தி—தொடர்பு கொள்ளுவாயாக
நேர்ந்தேன்-உடன்பட்டேன்
நேர்மை-நுண்மை, சன்னமாக இருத்தல்

நை

நைதல்-துன்புறுதல், வருந்தல்

நொ

நொடிதி-சொல்லுவாயாக
நொடித்தல்-சொல்லுதல்
நொடிவரும்-(நொடிவு+அரும்) சொல்லுதற்கு அரிய
நொடிவாயில் - பழமையான (?) அல்லது பலமான (?) வாசல்
நொய்ய-மென்மையான, அற்பமான
நொய்தின்-எளிதாக, விரைவாக
நொய்து-அற்பமானது, கேவலமானது
நொறில்—விரைவு

நோ

நோவு-வருத்தம்
நோற்றல்—தவம்செய்தல், விரதம் காத்தல்
நோனர்-தவம் செய்யார்
நோன்-வலிமை
நோன்பினர்—தவத்தினர்
நோன்மை-வலிமை

ப

பஃறலை—பலதலை
பகலவன்-சூரியன்
பகல்-ஊழிக்காலம், நாள்
பகழி-அம்பு
பகு-பிளக்கும்
பகுவாய்-திறந்த வாய்
பக்கம்-பட்சம்: பட்சபாதம், தன்மை
பங்கம்-அழிவு, சேறு
பங்கயம்-தாமரை (சேற்றில் பிறப்பது என்று அர்த்தம்)
பங்கி-தலைமயிர்
பசலை - பிரிவின் காரணமாகப் பெண்களின் உடம்பில் தோன்றும் புதுநிறம்: இது பொன் நிற

மாக இருக்கும்.
பசுமை—குளிர்ச்சி
பசும்பரி-பச்சைச் குதிரை
பஞ்ச—ஐந்து
பஞ்சி-செம்பஞ்சு, பஞ்சு
படப்பை-பசுவின்தொழு, பக்கத்திலுள்ள இடம், மருத நிலத்தில் உள்ள ஊர்
படம்—திரை
படர்-படர்ந்துள்ள, நிறைந்துள்ள, விசாலமான, துன்பம்
படர்தல்—செல்லுதல்
படலை-படலம், கூட்டம், படல், தட்டி
படாது-அழியாது
படி-பூமி, ஒப்பு
படிகாரன்-வாசல்காப்போன்
படித்தல்-பாடுதல்
படியுறு-படிகிற
படிவம்-வடிவம், உடம்பு, சித்திரம்
படுக்குவென்-கொல்லுவேன்
படுத்தல்-அழித்தல்
படை-ஆயுதம்
பட்டது-நடந்தது
பட்டனர்-இறந்தனர், அடைந்தனர்
பணம்-பாம்பின் படம்
பணாமணி-பாம்பின் படத்தில் உள்ள ரத்தினம்
பணி-படத்தை உடைய பாம்பு
பணிக்கண்—பாம்பினிடம்
பணை—பருமை, கிளை, முரசு, மத்தளம். பணையினும் பெரிய தோள் — மத்தளத்தைவிடப் பருமையானதோள்
பண்-இராகம். (பண்ணை என்பதன் விகாரமாகக்கொண்டால்) நீர் நிலை
பண்டாரம்-பொக்கிஷம்
பண்டு-முன்பு
பண்ணவன்-பெருமை உடையவன்
பண்ணை-கூட்டம்,சேணம்,கப்பல், வயல், பறை, விளையாட்டு
பதம்-இடம், சொல், கால்,பதவி, நிலை, பரமபதம், மோட்சம், சுவர்க்கம்
பதாகை-கொடி
பதி-ஊர், தலைவன், அரசன்
பதிற்றின்—பத்து மடங்கு
பதிற்றைந்து-ஐம்பது
பதுமம்—தாமரை
பதும ராகம்-ஒருவகைச் சிவப்பு ரத்தினம்
பதையா-அவசரப்பட்டு
பத்தி-பக்தி, வரிசை
பத்திரம்—இறகு, அம்பு
பந்தம்-கூட்டம், ஒருவகை ஆயுதம், பாசம், தீவட்டி
பம்புதல்—பரவுதல்
பயத்தது-பயன் தந்தது, பயன் தருவது
பயப்பய-பையப்பைய, மெள்ள மெள்ள
பயம்-பயன்
பயிராயோ-அழைக்க மாட்டாயோ
பயில்-நெருக்கம்
பரக்கழி-பெரும்பழி
பரணி-பாத்திரம்
பரதர்-பரதவர், செம்படவர்
பரமன்-மேம்பட்டவன்
பரமுகம்-பராமுகம்: அலட்சியம், அசட்டை
பரமேட்டி-எல்லா உலகங்களையும் விடச் சிறந்த பரமபதத்தில் வீற்றிருக்கும் திருமால்
பரம்-நிறைவு, மிகுதி, பாரம், சரீரம், மேன்மை
பரம்பரம்-முழுமுதல் கடவுள்
பரம்பரன்-பழமையான கடவுள், முதற் கடவுள்,மிகச்சிறந்தவன்
பரல்—பருக்கைக் கல்
பரவல்-புகழ்தல்

பரவை-கடல்
பராகம்-மகரந்தம்
பராவரும்-பாராட்டுதற்கு அரிய
பராவினில்-துதித்தலில்
பரிசு-தன்மை, குணம், விதம்
புரிதல்-வருந்துதல்
பரிதி-சூரியன்
பரித்தல்-சுமத்தல், தாங்குதல்
பரித்து-பயந்து, துன்பப்பட்டு, ஓடி
பரிந்தார்—இரங்கினுர்கள், அன்பு கொண்டார்கள்
பரிய-பருமையான, பருமை யானவை
பரியான்-பரிவு கொள்ள மாட்டான், இரக்கம் கொள்ள மாட்டான்
பரிவு-துன்பம், இரக்கம்
பரிவுறும்-நீங்கும்
பருணிதர்-புலவர்
பருப்பதம்-பர்வதம்: மலே
பருவம்—பிராயம், காலம்
பருவரல்-துன்பம்
பலி-தேவர்களுக்காவது செத்தவர்களுக்காவது படைக்கும் உணவு
பலி பூண்டன—பலியிடப்பட்டன, கொல்லப்பட்டன.
பல்வியம்-பலவகை வாத்தியங்கள்
பவம்-பாவம், பிறப்பு
பவர்-அடர்த்தி, செறிவு
பவனம்-காற்று
பழுவம்-ஆசிரமம், சோலே, மிகுதி
பளிக்கறை—பளிங்கினுல் கட்டப்பட்ட அறை, பளிங்குப் பாறை
பறைதல்—சொல்லுதல்
பற்கு—பல்லுக்கு
பற்றுண்ண-பற்றப்பட, பிடிபட
பனசம்-பலா
பனி—குளிர்ச்சி, பயம்
பனித்தல்-நீர்துளித்தல்
பன்னகம்-பல்நகம்: பாம்பு
பன்னரும்—சொல்லுதற்கு அரிய
பன்னி—சொல்லி

பா

பாகன்-தேர்ச்சாரதி
பாங்கர்-பக்கம்
பாசடை-பச்சை இலே
பாசம்-கயிறு
பாசிலே—பச்சைஇலே
பாசிழை-பசும்பொன் ஆபரணம்
பாடகம்-காலில் அணியப்படும் ஓர் ஆபரணம்
பாடம்-பிரகாசம்
பாடலம்-பாதிரி மரம், அதன் பூ: இது சித்திரை மாதத்தில் பூக்கும்
பாடவம்-சாமர்த்தியம், திறமை, பெருமை
பாடு-பெருமை, பக்கம், கஷ்டம்
பாடுறுவாள்-பாடுஉறுவாள்: பக்கத்தில் நெருங்கப் பெறுவாள், கஷ்டத்தை அடையப்போகிறவள்
பாணி-பாட்டு, நடனம், தாளம், கை, அழகு, நீர்
பாணித்தண் பளிங்கு-நீரின் குளிர்ச்சி பொருந்திய ஸ்படிகம்
பாணியாது-காலத்தை நீட்டாமல்
பாதம்-நான்கில் ஒரு பாகமாகிய கால் பாகம்
பாதுகம்-மிதியடி, செருப்பு
பாந்தள்-பாம்பு
பாயிரம்-விருது
பாரம்-கரை
பாரிடம்-பூதம்
பார்-உலகம், பருத்த, பார்ப்பாயாக
பார்ப்பு-குஞ்சு
பாலகில்லர்-கடவுளின் மயிரிலிருந்து தோன்றியவர்கள்; பெருவிரலின் அளவில் உடம்பு படைத்தவர்கள்
பாலதோ-உரியதோ
பாலமை-குழந்தைத் தன்மை

பாலம்-மழு
பால்-பக்கம்
பாவகன்-அக்கினி ஊழித் தீ
பாவித்தல்-நினைத்தல்
பாழி-பலம், பெருமை, பெரிய
பாறு-பருந்து
பாற்றினம்-பருந்துக் கூட்டம்
பாற்று-குணம் உடையது

பி

பிடவம்-ஒருவகை மரம், மரத்தின் கொம்பு
பிடி-பெண் யானை
பிணக்கு-பகைமை, மனப் பேதம், மாறுபாடு
பிணித்தல்-கட்டுதல், வருத்துதல்
பிணை-பெண் மான்
பிண்டி-அசோகு
பிதிர்த்தல்-சிதறுதல், உதிர்த்தல்
பித்திகை-கரை, கூந்தல்
பித்து-பைத்தியம்
பிரகரம்-அடித்தல்
பிரசம்-தேன்கூடு
பிரிவு செய்து-வகைப்படுத்தி
பிலம்-குகை, பாதாள உலகம், பாதாள வழி
பிலன்-பிலம்
பிழம்பு-திரட்சி, தொகுதி
பிழை-குற்றம். குறைவு
பிழைக்கல்-தவறுதல், நீங்கியிருத்தல்
பிழைத்தல் - நீங்குதல், தப்பித்தல், தவறு செய்தல், தவறுதல்
பிழையாத-தவருத
பிறக்கம்-பிறங்கும் தன்மை: விளங்கும் அல்லது சிறக்கும் தன்மை
பிறங்கு-பிரகாசிக்கும், விளங்கும்
பினை-பின்னை, பிறகு
பின்றுதல்-பின்னிடுதல், பின்வாங்குதல்
பின்னமாய்-வேருகி
பின்னுதல்-செய்தல்
பின்னை-தங்கை

பீ

பீழை-துன்பம்

பு

புகர்-குற்றம், ஒளி, நிறம்
புகல்-இடம், இருப்பிடம்
புகறல்-புகலுதல்
புகறி-புகல்வாயாக
புக்க-புகுந்த, புகுந்தவை, நடந்தவை
புக்க தேயம் புக்கு-போன இடத்துக்கெல்லாம் போய்
புக்கிடம்-புகுந்த இடம்
புங்கவன்-சிறந்தவன், நந்திவாகனம் உடையவன்
புஞ்சம்—தொகுதி, கூட்டம், திரள்
புடை-பக்கம், புடைப்பு, திரட்சி, பொந்து
புடைத்தல்-அடித்தல்
புட்டில்-அம்புகள் வைக்கும் கூடு
புணரி—கடல்
புணர்த்தல்-பொருந்தச்செய்தல், நிகழ்த்துதல், செய்தல்
புணர்த்தியேல்-முயன்ருல், தந்திரம் செய்தால்
புணை-மிதப்புக் கட்டை, படகு
புண்டரம்-கழுகு
புண்டரீகம்-தாமரை
புத்திர்த்து-புத் என்னும் நரகத்தை ஒழித்து. புத்திர பாக்கியம் இல்லாதவர்கள் அடையும் நரகம் புத் எனப்படும்
புத்தேளிர்-தேவர்கள்
புந்தி-மனம், அறிவு
புயல்-மேகம்
புரந்தரன்-இந்திரன்
புரம்-ஊர், நகரம்
புரவலன்-காத்தலில் வல்லவன்: மன்னன்
புரி—சுருள்
புரிவல்-புரிவேன், செய்வேன்
புரை-குற்றம், தன்மை, பொந்து, குகை, இடம், இருப்பிடம்,

வீடு, குடிசை, இடை
புரைந்தான்-ஒத்தான்
புலத்தல்-பிணங்குதல்
புலமை-ஞானம், அறிவு
புலம்-விளைநிலம், அறிவு
புலர்தல்-உலர்தல், வருந்தல்
புலவர்-தேவர்
புலவர்நாடு-தேவலோகம்
புலவி-ஊடல்
புலவு-புலால் நாற்றம்
புலன்-அறிவு
புலிப்பறழ்-புலிக்குட்டி
புலையாடல்-இழிவான காரியத்தைச் செய்தல்
புல்-புல், கம்பு என்னும் தானியம், அற்பமான, இழிவான
புல்கி-தழுவி, சேர்ந்து
புல்லல்-பொறுத்தல், அமைதல், பொறுப்பாயாக
புல்லிதழ்-புற இதழ்
புல்லிய-அற்பமானவை
புல்லியும்-நெருங்கியும், தழுவியும்
புல்லியோன்-அற்பன்
புல்லுதல்-சேர்தல்
புல்லுவ-சாரக் கூடியவை
புல்வாய்-மான்
புழுகு-புனுகு
புழுங்குதல்-வருந்துதல், மனம் வேகுதல், கோபித்தல்
புழை-வளை, பொந்து, புடை, துவாரம்
புளைதல்-அலங்கரிக்கப்படுதல்
புள்-பறவை
புள்ளி-பெரிய தொகை
புறத்திருப்பார்—வெளியே காத்திருப்பார்
புறம்-வெளியே, சமீபம், உடம்பு
புறம் காத்தல்-பாதுகாத்தல்
புறம் செய்து-மேற்கொண்டு செய்து
புறவம்-காடு (ம் காடு சார்ந்த இடமும் உடைய முல்லை நிலம்)
புனம்-கொல்லை, காடு
புனல்-நீர்
புனல் உற்று உருவு செப்பு-காலத்தை அறிய உதவும் நாழிகை வட்டில்: கடிகாரம். தாமிர வட்டிலில் சிறிய துவாரமிட்டு, அதைத் தண்ணீரில் போட்டு வைத்து, துளை வழியாக வட்டிலில் நீர் ஏறும் அளவைக் கொண்டு காலத்தைக் கணக்கிட்டு அறிவது அக்காலத்திய வழக்கம்
புனல்நாடு-சோழநாடு
புனிற்றுஆ-கன்றை உடைய பசு
புனை-புனையும், அலங்கரிக்கும், அழகிய
புன்—அற்பமான
புன்கண்—தரித்திரம், துன்பம்
புன்மை—அற்பத்தனம், சிறுமை

பூ

பூ-அழகு
பூகம்-கமுகு; பாக்குமரம்
பூங்குலை-மலர்க்கொத்து
பூசல்-மிகுந்த ஒலி, கூப்பாடு, சண்டை, பொல்லாங்கு
பூட்கை-யானை, வலிமை, கொள்கை, ஒரு காரியத்தைச் செய்வதற்கு மேற்கொள்ளும் மன உறுதி
பூண்-ஆபரணம்
பூதரம்—பூமி
பூரியர்-கீழ்மக்கள், அற்பர்கள்
பூவிலோன்-பிரமன்
பூவை—பெண், மைனா
பூவைப்பூ—காயாம்பூ
பூழி-புழுதி
பூளை - ஒரு செடி. இதன் பூ பஞ்சு மாதிரி இருக்கும்; காற்றில் பறக்கும். தலையணையில் பஞ்சுக்குப் பதில் பூளைப் பூக்களைத் திணிப்பதும் உண்டு. 'பூளை'யைக் 'கண்ணிப் பிள்ளை' என்றும் கிராமங்களில் கூறுவார்கள்.

பெ

பெட்பு—பெருமை, மிகுதி, பருமை
பெயர்த்தல்-நீக்குதல், தீர்த்தல்
பெயர்வில்—பெயர்தல் இல்லாத
பெரும் பருவம்-ருது
பெறுவிப்பான் — தோன்றுதற்குக் காரணமாக இருப்பவன்
பெற்றி—தன்மை, நிலைமை, பேறு

பே

பேணுதல்—விரும்புதல்
பேதியாது-வேறுபடாமல்
பேது-பேதம்:வேறுபாடு
பேதுறும்—கலங்கும்
பேதை-அறிவில்லாதவன்
பேர-பெயர்ந்து
பேரரும்-பெயர்தற்கு அரிய
பேராளன்-பெருமை உடையவன், பெரியவன், கீர்த்திமான்
பேரும்-பெயர்ந்து செல்லும், நீங்கும், மாறும்
பேருயிர்-மகாத்மா
பேர்-பெரிய
பேர்ச்சி—மாறுதல்
பேர்வினை-பெரிய காரியம்
பேழ்வாய்-பெரிய வாய், திறந்த வாய்

பை

பைங்குமுதப் பூ—புதிதாக மலர்ந்த அல்லி மலர்
பையணை-படம் கொண்ட
பையுள்-துன்பம்

பொ

பொகுட்டு-கொட்டை
பொங்குதல்-கோபித்தல்
பொசி-ஊனீர், ரத்த நீர்
பொடிப்ப-தோன்றி எழ, பொடி செய்ய
பொதி-மொட்டு, கட்டு
பொதிர்வு-நடுக்கம், மிகுதி
பொதுமை-பொதுவாக
பொதும்பர்—மரக் கூட்டம், சோலை, உட்புறம்
பொதுளுதல்-செழித்தல், நிறைதல்
பொத்தல்-மூடுதல், நிறைதல், துளைத்தல்
பொம்-'பொம்' என்ற ஒலி
பொய்அடை-பொய் சேர்ந்தது
பொய்கை-மனிதரால் உண்டாக்கப்படாத நீர்நிலை
பொய்தல்-பெண்களின் விளையாட்டு
பொய்தார்-விளையாடினர்
பொருக்க-விரைவாக
பொருக்கென-திடீரென
பொருண்மை-பொருளின் தன்மை
பொருநர்-கூத்தர், போர் வீரர்
பொருநை-தாம்பிரபருணிநதி
பொருப்பு-மலை
பொருமுதல்-பூரித்தல், விம்முதல்
பொருவலாது-ஒப்பாகாது
பொருவில்-ஒப்பற்ற
பொலீர்-பொல்லாதீர்
பொழில்-சோலை
பொறி-அறிவு, ஐம்புலன்கள், முத்திரை, புள்ளி, அடையாளம், யந்திரம், பாக்கியம்
பொறை - பொறுக்கப்படுவது, பொறுமை, பாரம்
பொற்கிழி-பொன் முடிப்பு
பொற்பு-அழகு
பொற்றலன்-பொன் தலன்; பொன் மயமான சுவர்க்கம்.
பொற்றிரி-பொன்திரி
பொன்-தங்கம், இலக்குமி, அழகு
பொன்றுதல்-இறத்தல், அழிதல்
பொன்னுடை-பீதாம்பரம்

போ

போகபூமி-சுவர்க்கம்
போகலை-நீ போகவில்லை
போக்கிலா-அழிவில்லாத
போச்சு-போயிற்று

போடுஅகல-தூரப்போடு, விட்டு விடு
போதகம்-ஆண் யானை, யானைக் கன்று
போதர்-வருக
போதா-நாரை
போதி-போவாயாக
போது-அரும்பு, மலர், வருக
போதும்-போகும், மலரும்
போய்த்து-போனது
போலி-போல இருப்பவன்
போலியர்-போன்றவர்
போவல்-போவேன்
போழ்தல்-பிளத்தல், அழித்தல்
போற்றலர்க்கு-பேணுதவர்களுக்கு, இழந்தவர்களுக்கு
போற்றுதல்-ஏற்றுக் கொள்ளுதல்
போன்ம்-போலும்

ம

மகம்-வேள்வி, யாகம்
மகரம்-மீன், முதலை
மங்கலஅணி-திருமங்கிலியம்
மங்கலம்-சுபம்
மங்கு-கொடிய, கேடு
மங்குல்-மேகம்
மஞ்ஞை-மயில்
மஞ்சனம்-ஸ்நானம்
மஞ்சு-மேகம்
மடங்கல்-சிங்கம்
மடம்-இளமை
மடல்-பூவின் இதழ்
மடவாள்-பேதைமை உடைய பெண்
மடுத்தல்-சேர்த்தல், (கூர்மை யான ஆயுதத்தால்) குத்துதல்
மட்குதல்-ஒளி மழுங்குதல்
மட்படி-மண்ணுலகம்
மணி-அழகிய, முத்து
மண்-உலகம்
மண்டலம்-வட்டம், உலகம்
மண்டுதல்-நெருங்குதல்
மண்பாலவர்-மண்ணுலகத்தவர், மனிதர்
மதம்-மடமை
மதன்-செருக்கு, மன்மதன், வலிமை
மதி-அறிவு, புத்தி, சந்திரன்
மதியம்-சந்திரன், மாதம்
மதியா-மதித்து, எண்ணி
மதுகை-வலிமை
மத்தவாரணம்-மதயானை
மந்தமாருதம்-இளங்காற்று
மந்தரம்-மந்தரமலை
மந்திரம்-ஆலோசனை, மாளிகை
மம்மர்-துக்கம்
மயக்குறுத்து-மயங்கச் செய்து
மயங்குதல்-ஒன்றோடு ஒன்று கலத்தல்
மயம்-வடிவம்
மயர்-மயங்கும்
மயர்வு-சந்தேகம், சோர்வு
மயல்-மயக்கம்
மயிடம்-எருமைக் கடா
மயிர் பொடித்தல்-மயிர் சிலிர்த்தல்
மயிர்வினைக் கருவி-க்ஷவரக் கத்தி: இது காதுக்கு உவமை.
மரகதம்-பச்சை ரத்தினம்
மரபுளி-குலமரபின்படி, முறைமையின்படி, முறைமையை எண்ணி
மரவம்-குங்கும மரம்
மரன்-மரம்
மராமரம்-சாலமரம்; ஒருவகை ஆச்சாமரம்
மரு-நறுமணம்
மருகன்-மருமகன்
மருகி-மருமகள்
மருங்கலச-மருங்கு அலச: இடை நோகும்படி
மருங்கு-பக்கம், இடை
மருத்துமகன்-வாயு குமாரனாகிய அனுமான்
மருந்தரு-மாற்று மருந்தில் லாத
மருந்து—அமிர்தம்

மருப்பு—கொம்பு, தந்தம்
மருள்-மருட்சி, மிரளுதல், மயக்கம்
மரை—தாமரை, மான்
மலயம்—பொதிய மலை
மலைக்க-போரிட, மாறுபட
மலைதல்-போர் செய்தல்
மலையமாருதம்-பொதிய மலைக் காற்று; தென்றல்
மல்லல்-செழிப்பு, வளம்
மழக்கன்று-இளங்கன்று
மழுவலாளன்-சிவன்
மழை-மேகம்
மழைத்த-மேகத்தை உடைய
மள்கல்-குறைதல்
மள்ளர்-உழவர், வீரர்
மறத்திறன்-பாவகுணம்
மறம்-கொடுமை
மறம் செய்வான்-போர் செய்வதற்கு
மறலி-எமன்
மறவோர்-வீரர்
மறி-ஆடு
மறித்தும்-மீண்டும்
மறிந்த-தடுத்த, திரும்பி வந்த
மறிந்தது-விழுந்தது
மறிந்தான்-தலைகிழாகச் சுழன்று விழுந்தான்
மறு-மாசு, மச்சம்
மறுகாத-அழியாத
மறுகி-மனம் கலங்கி
மறுக்கம்-கலக்கம், தடுமாற்றம்
மறுக்குறும்-சுழலும்
மறுமார்பன்-ஸ்ரீ வத்ஸம் என்னும் மச்சம் உள்ள மார்பை உடையவன்: திருமால்
மறைதர-மறைய
மற்கு-மல்லுக்கு:மல்யுத்தத்துக்கு
மனன்-மனம்
மன்-மன்னும்: சிறப்புள்ள
மன் அறம்-ராஜதர்மம்
மன்றல்-நறுமணம்
மன்று-மன்றம், நியாயஸ்தலம், சபை, வெளி, மந்தை
மன்னோ-பாட்டின் ஓசையை நிரப்பும் அசை: இதற்குப் பொருள் கிடையாது

மா

மா-மிருகம், பன்றி, வராக மூர்த்தி, குதிரை, யானை, வண்டு, பெரிய, கரிய, சிறந்த
மாகம்-ஆகாயம், திசை
மாக்கள்-மனிதர்கள், விலங்குகள்
மாசுணம்-பாம்பு, மலைப்பாம்பு
மாச்சிச்சிரம்-(மாச்சித்திரம்) மிகவும் விநோதமான முறையில். ''மாச்சு + இச்சிரம்'' எனப் பிரித்து இந்தத் தலையை மாய்த்து (வருத்தி) என்றும் பொருள் கூறுவர்.
மாடு-பக்கம், இடம், அருகே
மாணி-பிரம்மச்சாரி
மாண்ட-மாட்சிமை பொருந்திய
மாதங்கம்-யானை
மாதர்-அழகு
மாதிரம்-திசை
மாதுலன்-தாய்மாமன்
மாதோ-பாட்டின் ஓசையை நிரப்பும் அசை: இதற்குப் பொருள் கிடையாது.
மாத்திரை-மாத்திரத்தில்
மாந்துதல்-வருந்துதல், உண்ணுதல்
மாரவில்லி-வில்லை உடைய மன்மதன்
மாரன்—மன்மதன்
மாருதம்-காற்று
மாருதி—அனுமான்
மாருதேயன்-அனுமான்
மாலை-முறை
மால்-மயக்கம், ஆசை, பெரிய
மால்வரை: பெரிய மலை, திருமால் இருக்கும் திருப்பதி மலை
மாழ்கி-வருந்தி
மாறு-கைம்மாறு
மாறோர்-பகைவர்

மாற்றம்-வார்த்தை, மாறுபட்ட நிலை
மாற்றலர்-பகைவர்
மான-போல
மானம்-வெட்கம், அபிமானம், அகங்காரம், அவமானம், விமானம், சமானம்
மானவள்-மானம் உடையவள், மான் போன்றவள், மனு வம்சத்தில் தோன்றியவள்
மாறு-பரஸ்பரம் ஒன்றோடு ஒன்று ஒத்து இராத
மானிடர்-மனிதர். காசிப முனிவனின் மனைவியருள் மனு என்பவள் வயிற்றில் தோன்றியவர்களாதலால் இப் பெயர் பெற்றனர்
மான்-குதிரை, மனிதன், பெரியோன்

மி

மிக்கான்-உயர்ந்தான்
மிச்சில்-மிஞ்சியது, மீதி
மிடல்-வலிமை
மிடறு-கழுத்து
மிடுக்கு-வலிமை, சாமர்த்தியம்
மிதுனம்-மிதுனராசி: இது ஆண்-பெண் வடிவத்துடன் இணைந்திருக்கும்
மிலைச்சுதல்-சூட்டுதல்
மிலைதல்-சூடுதல்

மீ

மீ-மேலே, மிகுந்த
மீக்கொள-அதிகமாக
மீக்கோள்-மேலே கொள்ளப்படுவது
மீச்செல-மேலே செல்ல, அப்பால் போக
மீடிர்-மீளுங்கள்
மீடும்-மீளுவோம்
மீதுற-மேலே ஏற
மீமிசை-மிகவும் மேலே
மீளி-பேய், வலிமை, தலைவன், இளைஞன், வீரன்
மீளுதல்-திரும்பி வருதல்
மீனது-மீனை உடையது
மீனத்தன-நட்சத்திர மண்டலத்தைச் சேர்ந்தவை
மீன்-நட்சத்திரம்,(மின் என்பதன் நீட்டல்விகாரமாகக் கொண்டால்) மின்னல்

மு

முகக்கும்-மொள்ளும்
முக்கால்-மூன்றும் காலம், மூன்றும் முறை
முசலம்-உலக்கை
முசுண்டி-ஒருவகை ஆயுதம்; சிறுவாள் என்றும் கூறுவார்கள்
முச்சிகை-முத்தலை, மூன்று நுனிகள் உள்ள
முடித்தல்-முற்றுவித்தல், நிறைவேற்றுதல்
முடிவு-எல்லை
முடுகுதல்-விரைந்து செல்லுதல், நெருங்கி வருதல்
முடை-துர்நாற்றம்
முடைத்த-துர்நாற்றம் உடைய
முட்டு-கடிவாளம்
முட்டை-அண்டம்
முண்டகம்-தாமரை
முண்டகத்துறை-தாமரைகள் பூத்த நீர்நிலை உள்ள ஒரு சோலை
முண்டர்-மொட்டைத் தலையர்
முதல்-வேர்
முத்தம்-முத்து
முந்திய-முந்திக்கொண்டு சென்ற
முந்து-முன்னம்
முந்துறுதல்-முன்னே செல்லுதல்
முந்தை-முன்னால்
முந்நீர்-கடல்
முப்பகைத் தளை-காமம், வெகுளி, மயக்கம் என்றும், மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்றும் கூறுவர்
மும்மடி-மூன்று மடங்கு
மும்மை-மூன்று வகை

மும்மையோர்-பிரமன், திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகள்
முயங்கு சேறு-ஒன்றாகக் குழைக்கப்பட்ட சேறு
முயல்வு-முயற்சி
முயற்சி-காரியம்
முரஞ்சு-பாறை
முரண்-வலிமையான, மாறுபட்ட
முரண்டன-மாறுபாடு கொண்டன, எதிர்த்தன
முரம்பு-மேட்டு வெளி
முரளி-புல்லாங்குழல், மூக்கால் வாசிக்கும் குழல்
முரற்றல்-இடியோசை
முரிதல்-ஒடிதல், கெடுதல், சிதறுதல்
முருகச் செவ்வி-இளமையழகு
முருங்குதல்-அடங்கி எரிதல், அழிதல், முறிதல்
முருடு-ஒருவகைப் பறவை, விறகு
முருந்து-மயில் இறகின் அடிப் பாகம்
முழவு-மத்தளம், குடம்
முழீஇ-மூழ்கடித்து
முழை-குகை
முழைஞ்சு-குகை
முளி-காய்ந்த, வறண்ட
முளை-மூங்கில், தண்டாயுதம்
முளைக்குமே-வெளியே வருமே
முள்கிடும்-மூழ்கும்
முறுவல்-புன்னகை, பற்கள்
முறைசெய்தல்-முறையிடுதல்
முற்றல்-முழுமை என்ற பெருமை அடைதல், நிறைவேற்றல், செய்து முடித்தல், முதிர்தல்
முனிதல்-கோபித்தல், வெறுத்தல்
முனியல்-கோபம் கொள்ளாதே
முனிவு-கோபம்
முனையில்-போர்முனையில்,போரில்
முனைவன்-முதல்வன், முனிவன்
முன்பவன்-மூத்தவன்
முன்றில்-முற்றம், முன் இடம்
முன்னினன்-சந்தித்தான், எண்ணினான்

மூ

மூசு- நெருங்கும், மொய்க்கும், கலக்கும், கூட்டம்
மூத்தம்- முகூர்த்தம்: இரண்டு நாழிகைப் பொழுது: 48 நிமிஷ நேரம்
மூரல்-புன்சிரிப்பு, பற்கள்
மூரி-வலிமை, பழமை
மூலநாசம்-அடியோடு அழிதல்
மூலமந்திரம்-தலைமையான மந்திரம்
மூலம்-வேர், காரணம்
மூவா-முதுமை அடையாத, கெடாத, (ஆகவே) வளர்ந்து கொண்டிருக்கிற
மூவேம்-நாம் மூவரும்
மூழை-அகப்பை, (முழை என்பதன் நீட்டலாகக் கொண்டால்) குகை
மூளும்-நேரும், வளரும்
மூள்-மூளும், தொடங்கும், கூடும்
மூள் உறுத்தி-சேர்த்து

மெ

மெலியும்-குறையும்
மெலிவு-இழிந்த செயல்

மே

மேக்கு-மேலே
மேயவள்-மேவியவள்: வந்திருப்பவள், தொடங்கியவள்
மேல-மேலே இருப்பவை
மேலை-முன்னுளைய
மேல்-உடம்பு
மேவலர்-பகைவர்
மேவாதவர்-பகைவர்
மேவினர்-நண்பர்

மை

மை-குற்றம், கறை
மைந்தன்-இளைஞன், வீரன்
மையல்-மயக்கம்

மொ

மொக்குள்-குமிழி

மொய்-ப்லம், பலம் பொருந்திய, மொய்க்கிற, கூடுகிற, கூட்டம், நெருக்கம், போர், பகை
மொய்ம்பு-தோள்

மோ

மோகனே-மயக்கும் மந்திரம், மோகன மந்திரம், மயக்கும் செயல்
மோடு-உயர்ச்சி
மோனர்-மௌன விரதம் கொண்டோர்

மௌ

மௌலி-மோலி: கிரீடம், முடி.

ய

யக்கன்-யக்ஷன்: தேவர்களில் ஒரு பிரிவைச் சேர்ந்தவன்

யா

யாணர்-புதிய
யாமம்-ஜாமம்: இரவு
யாய்-தாய்
யாளி-சிங்கம் போலவும், துதிக்கையோடும் உள்ள ஒரு மிருகம்
யாறு-நதி

யூ

யூகம்-கருங்குரங்கு

ல

லக்கம்-லட்சம்

வ

வகிர்தல்-பிளத்தல், வெட்டுதல்
வங்கம்-கப்பல்
வசை-பழி
வச்சை-வசை: பழிப்பு
வச்சை மாக்கள்-உலோபிகள்
வஞ்சம்-வஞ்சனேயான செயல், கொடுமை, கபடம்
வஞ்சி-ஒருவகைக் கொடி
வஞ்சியா-வஞ்சித்து, அபகரிக்காத
வடகலே-சமஸ்கிருத நூல்
வடம்-ஆலமரம்
வடி-கூர்மை

வடிக்கணே-கூரிய கூம்பு
வடித்தல்-திருத்தமாகச் செய்தல், கூர்மையாக்குதல், வசமாக்குதல்
வடிம்பு—விளிம்பு, கூர்மை
வடுக்கண்-மாவடுவின் பிளவைப் போன்ற கண்
வணங்குதல்-துவளுதல், வளேதல்
வண்-வளமான
வண்டுளர்-வண்டுகள் சுற்றும், வண்டுகள் கிண்டும்
வண்தமிழ்-வளமான தமிழ்
வம்—வம்மின்: வாருங்கள்
வம்பிழை—(வம்பு+இழை) மார்க்கச்சு அணிந்த
வயம்-பலம், வேகம்
வயவர்-வெற்றி வீரர்
வயிநதேயன்-கருடன்
வயிரம்—பகைமை
வயிரப்படை—வச்சிராயுதம்: இந்திரனுக்கு உரியது
வயிர்ப்பு—பகைமை, (மரத்தின்) வைரம், (மன) வைரம், உறுதி
வயிறலேத்து-வயிற்றில் அடித்து, அல்லது வயிற்றைப் பிசைந்து
வயிறு தருதல், வயிறு வாய்த்தல்-கர்ப்பம் ஆதல், பெறுதல்
வயின்தொறும்-இடங்கள் தோறும்
வரதன்-வரங்கள் கொடுப்பவன்
வரம்-மேன்மை
வரம்பிலான்-வரம்பு இல்லாதவன், முறை கெட்டவன்
வரன்-சிறந்தவன், வரம்
வரால்-ஒருவகை மீன்
வரி-அழகு, புள்ளி, கோடு, பாட்டு
வரிக்கல்-கட்டுதல்
வரிசிலே-கட்டமைந்த வில்
வரிந்து-கட்டி
வருத்தத்த-வருத்தம் உடையவை
வருத்து—வருத்தம்
வருந்தல்-வருந்தாதே
வரை-மலே, எழுது, கோடு

வரைஅளித்த-(சித்திரம்) எழுதப் பெற்ற
வலம்-பலம்
வலயம்-வளை, வளையம், வட்டம், உலகம்
வலி-பலம், வல்லமை
வலி ஆடுதல்-பலத்தைக்கொண்டு தாக்கித் துன்புறுத்தல்
வலித்தல்—இழுத்தல், வலியச் செய்தல், வளைத்தல், துணிதல்
வலித்தார்-உறுதிகொண்டார்
வலித்தொழில்—வல்லமைச் செயல், கொடுஞ் செயல்
வலியும்—வருத்தும்
வலையம்—வளையம் என்ற ஆயுதம். சக்கராயுதம், ஒருவகை ஈட்டி
வலோன்-வல்லவன்
வல்லன்-வல்லவன், கெட்டிக் காரன்
வல்லி—கொடி
வல்லை-விரைவில், வல்லவனே, வல்லவனாகிய நீ
வவ்வுதி—அபகரி
வழி—சந்ததி, இடம்
வழிஇவந்து—வழுவி வந்து, தவறி வந்து
வழுத்தல்-வாழ்த்தல், போற்றிக் கூறுதல்
வழுவிய-நீங்கிய, தவறிய
வழை-சுரபுன்னை
வளவி—தழுவி
வளாகம்-உலகம், சூழப்பட்ட இடம்
வளை-சங்கு, சங்குப் பூச்சி
வள்-கூர்மை
வள்ளி—கொடி
வள்ளியோன்—வள்ளல்
வள்வார்-உறுதியான தோல் வார்
வள்ளை—ஒருவகைக் கொடி. இதன் தண்டை அல்லது இலையைக் காதுக்கு உவமானமாகச் சொல்லுவார்கள்
வறக்க-வற்ற
வற்கலை-மரப்பட்டையால் ஆன ஆடை
வற்றே-வல்லதே, வல்லதோ
வற்றோ-வல்லதோ
வனம்—தொகுதி, கூட்டம், அழகு
வனைதல்-அழகு செய்தல்
வன்மை—கொடுமை

வா

வாகை—வெற்றி, வெற்றி பெற்றதற்கு அடையாளமாகத் தரிக்கும் வாகை மலர் மாலை
வாங்கி—எடுத்து, வளைத்து
வாசவன்-இந்திரன்
வாடை-காற்று
வாட்கை—வாளைத் தாங்கிய கை
வாமம்-அழகு
வாம்-வாவும்: தாவும், தாண்டும்
வாய—வாயை உடையன
வாய்—இடம்
வாய்அம்பு-கூர்மையான அம்பு
வாய்தல்-வாசல்
வாய்மை-வாய்ச்சொல்
வாய்மொழி—வாய்வார்த்தை, உண்மையான வார்த்தை
வாரம்-பாகம், பங்கு, பகுதி, உரிமை, வரி
வாரலிரே எனில்—நீங்கள் வர வில்லை என்றால்
வாரல்—வருதல்
வாரி—கடல், நீர்ப் பெருக்கு
வார்—மார்க்கச்சு, மிகுந்த, நீண்ட
வாலிய—பிரகாசமான
வால்-வெண்மை, தூய்மை
வாழி-வாழ்க. 'வாழி' என்பது பொருளற்ற அசையும் ஆகும்.
வாளம்-சக்கரவாளப்பறவை. இது முலைக்கு உவமையாகக் கூறப் படும். இந்தப் பறவையின் ஆணும் பெண்ணும் இரவிலே பிரிந்து பகலிலே ஒன்றுசேரும்
வாளரி—கொடிய சிங்கம்
வாளா—வீணாக
வாளி-அம்பு

வாளை—ஒருவகை மீன்
வாள்-ஒளி, கொடுமை
வானரர்-குரங்குகள்:ஏறக்குறைய மனிதர்களைப் போன்றவர்கள் என்று அர்த்தம்
வான்—மேகம், ஆகாயம்

வி

விகற்பம்—மாறுபாடு, வேறு
விசயம்-வெற்றி
விசித்த—வீசிய
விசும்பு-ஆகாயம்
விசை—வேகம்
விசைத்து—தூக்கி, எடுத்து
விசைய-வேகம் உள்ளவை
விஞ்சு—மிஞ்சு, மேம்படு, மிகும்
விஞ்சை-வித்தை, கல்வி, காம சாஸ்திரம், மந்திரம், மாய வித்தை
விஞ்சையர்—வித்தியாதரர்
விடர்-வெடிப்பு
விடன்-காமுகன்
விடிவு—விமோசனம்
விடு-தொங்கும்
விடைத்தல்—கோபித்தல்
விண்ட-வேறுபட்ட, நீங்கிய
விண்டனர்—பகைத்தனர்
விண்டு-விஷ்ணு
விண்டுபோய்—விட்டுச் சென்று
விதிப்ப-படைக்க
விதிர்த்தல்—நடுங்குதல்
விந்தநாகம்—விந்திய மலை
விமலன்—குற்றமில்லாதவன்
விம்மல்—கலக்கம், மகிழ்ச்சி
விம்மி—விளங்கி
வியம்—சிறப்பு, பெருமை
வியல்—விசாலம்
விரகு—கபடம்
விரசுக—பொருந்துக, வேகமாய்ச் செல்க
விரதியர்—விரதத்தை மேற் கொண்டவர்கள்
விரவார்—விரோதிகள்
விரவோர்-பகைவர்
விரா—விரவிய, பொருந்திய
விராவரும்-கலத்தற்கரிய, சேர் தற்கரிய
விரிஞ்சன்-பிரமன்
விருந்தினர்-புதியவர்
விருந்து-புதுமை
விருப்பிற்று—விருப்பம் உள்ளது
விரை—வாசனை
விலகும்—(விலக்கும் என்பதன் விகாரமாகும்போது) தடுக்கும், பரவும்
விலக்குதல்—தடுத்தல்
விலங்கல்—விலகுதல், பெயர்தல், மலை
விலங்கு—விளங்குகின்ற, மலை
விலங்குதல்-குறுக்கே கிடத்தல் அல்லது நிற்றல், தவறுதல்
விலங்குருவும்-விலங்க உருவும்: இடம் பெயர்ந்து செல்லும்படி உருவும், குறுக்கே உருவும்
வில்-ஒளி
வில்லி-வில்லை உடையவன்
விழுத்தவம்-விழுமிய (சிறந்த) தவம்
விழுப்பம்-உயர்குணம்
விழுமம்-சிறப்பு
விழுமிது-சிறந்தது
விழைவு-விரும்பத்தக்கவை
விளக்கிய-விளங்கச் செய்த, எடுத்துக்காட்டிய
விளக்கு-ஒருசெடி; காக்கணஞ் செடி என்று கூறுவதுண்டாம்
விளிதல்-சாதல்
விளித்தல்-அழைத்தல், சொல்லுதல், கூவுதல்
விளிவு-சாவு, அழிவு
விளைத்தான்-உண்டாக்கினன்
விள்ளாது-வேறுபடாது, பிரிவு படாது, நீங்காது
விறல்-வலிமை, வல்லமை
விற்கால்-வில்லின் தண்டம்
வினை-ஊழ்வினை
வினையம்-செயல், தந்திரம்

வினைவர்-சித்திரக்காரர்கள்

வீ

வீ-பூ
வீகிலேன்—சாகாமல் இருக்கிறேன்
வீங்குதல்-மிகுதியாதல்
வீசுதல்-தூர எறிதல், கொடுத்தல்
வீடு-விடுதலை, மோட்சம்
வீடுதல்-இறத்தல்
வீட்டுதல்-அழித்தல்
வீதல்-சாதல்
வீரதை-வீரம்
வீழி-ஒருவகைச் செடி. இதன் பழம் சிவப்பாக இருக்கும்
வீழ்-விரும்புல், வீழ்ச்சி அடையும்
வீறிய-அடித்த, வெட்டிய
வீறுதல்-வெட்டுதல்

வெ

வெஃகல்-அபகரித்தல், விரும்புதல்
வெங்கண்—கொடிய தன்மை
வெங்கால்-கொடுங்காற்று
வெஞ்சமம்-கடும்போர்
வெதிர்-மூங்கில்
வெம்பு-கோபம் கொள், வாடு
வெம்மை-சூடு, விருப்பம்
வெயில்-வெம்மை
வெய்தினுல்-வேகத்தினுல்
வெய்தின்-துன்பத்தில், துன்பத்தோடு
வெய்து-தீயது, கொடியது
வெய்ய-சூடான, கொடிய
வெய்யவன்-சூரியன்,கொடியவன்
வெரிந்-முதுகு
வெருவுதல்-பயப்படுதல்
வெவ்வாய்-கொடிய
வெவ்விழைவு—கொடிய ஆசைகள்
வெவ்வுயிரா—வெப்பமான பெருமூச்சுவிட்டு
வெளி-ஒளி
வெள்குதல்-வெட்கப்படுதல்
வெள்ளிடை—வெளி இடம், வெற்றிடம்
வெறி-வீராவேசம், மூர்க்கத்தனம், வாசனை
வெறித்தல்—ஆவேசம் கொள்ளுதல், திகைத்தல்
வெறிப்பு—நடுக்கம்
வெற்றிவரை-வெற்றிக்கு அடையாளமான கோடு
வென்றி-வெற்றி

வே

வேகம்—உக்கிரம்
வேகரம்—உக்கிரம்
வேங்கை-புலி,குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்த ஒரு மரம்
வேட்டம்—வேட்டை
வேண்டலர்—பகைவர்
வேண்டிகிற்பின்-வேண்டினுல்
வேண்டுதல்-விரும்புதல்
வேதபாரகர்—வேதங்களின் கரையைக் கண்டவர்கள்
வேதிகை-மேடை, யாக மேடை
வேதியாத—(தாழ்ந்ததை உயர்ந்ததாக) மாற்ருத
வேது—சூடான ஒத்தடம்
வேத்திரம்—பிரம்பு
வேம்-வேகும்
வேய்-மூங்கில், ஒற்றர்
வேய்தல்-அலங்கரித்தல், மூடுதல்
வேய்ந்தன-சூடியவை
வேர—வேர்களை உடையவை
வேரி-வாசனை, தேன், கள்
வேலை-கடல், சமயம்
வேறும்-வெல்லுவோம்.
வேனிலான்-மன்மதன்

வை

வை-கூர்மை
வைகல்-பகல், நாள், தங்குதல்
வைதேகி-விதேக மன்னனின் குலத்தில் பிறந்த சீதை. ஜனகனின் முன்னோன் விதேகன்.

இந்த நூல்......

தமிழ் இலக்கிய உலகத்திலே மிக உன்னதமான நூல்.

இந்த மகா காவியம் மலிவான விலையிலே இப்பொழுது கிடைக்கிறது.

மூலம் — அரும் பொருள் உரை — வசனத்தில் கதைச் சுருக்கம் — விளக்கம் இத்தனையும் இதில் அடக்கம்.

Wrapper Printed at Neo Art Press, Madras-2